# தாய்வீடு

THAIVEEDU MAY 2021 மே www.thaiveedu.com



முள்ளிவாய்க்கால் நினைவுகூரலும்
நம் முன்னாலுள்ள வரலாற்றுப் பொறுப்பும்



மறைந்த சாட்சி;
மறையாத சாட்சியங்கள்



பன்மொழி அறிஞர்
அருட்கலாநிதி மரிய சேவியர் அடிகளார்

இன்னும்...

- கர்நாடக சங்கீதமும் தமிழிசையும்
- சிறுவனின் தேடல், ஓர்மம், நம்பிக்கை!
- கொடியன்குளத்தில் தெரிவது முள்ளிவாய்க்கால்
- ‘குமுதினி’யும் நெடுந்தீவும் – 44 ஆண்டு கடந்து...
- பேரா. வித்தியானந்தனின் ‘தமிழர் சால்பு’ – ஓர் ஆய்வு
- ஓவியத்தின் மூலம் காலக்கண்ணாடியை நமக்கு விட்டுச்சென்ற யான் பிராண்டஸ்
- இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலையும்

தாய்வீடு

**Publisher & Editor**
PJ. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
பிருந்தாயினி(இலங்கை),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் - செல்வன்(இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஐயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

**Tel :** 416-646-3422, 416-857-6406
**Fax :** 416-849-0594
**Web :** www.thaiveedu.com
**E-mail :** info@thaiveedu.com

# கொல்லத்தூண்டும் கோரத்தனிமை

அண்மைக் காலமாகப் பெருகிவரும் தற்கொலைகள் புலம்பெயர் தமிழர் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தி வருகின்றன.

எதிர்பார்ப்புகளோடும் கற்பனைகளோடும் புலம்பெயர்ந்த எமக்கு அவை பொய்த்துப்போகும்போது எம்முள் வெறுப்பும் ஏமாற்றமும் குடிகொள்ள ஆரம்பிக்கின்றன.

இவற்றுடன், வீட்டுக்குள்ளேயே அடைந்திருக்கும் இக்காலம் பெருமளவிலானோருக்குப் பாரிய உளத்தாக்கத்தை உண்டாக்குகின்றது.

காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்ற மனநிலையும், எதையும் பேசாது விட்டால் பிரச்சினை தானாகவே காணாமல் போய்விடும் என்ற எண்ணமும் எம் சமூகத்தில் இருந்துவருகின்றன. இந்த அணுகுமுறை, எம் அன்புக்குரியவர்களின் மன அவலத்தைப் புரிந்துகொள்ளவிடாமலும் அதற்கான மாற்றைத் தேடவிடாமலும் தடுத்து விடுகிறது.

தற்கொலை செய்பவர்களில் 90% ஆனவர்கள் ஏதாவதோர் உளநோய் சார்ந்த அறிகுறிகளைக் காண்பித்திருக்கிறார்கள் என்று இறந்தவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள், அவர்களின் மருத்துவர்கள் மூலம் தெரியவந்திருக்கிறது.

சாதாரணமாகவே, உளநோய்களால் பாதிக்கப்படுபவர்களில் பாதிக்கும் குறைந்தோரே துறைசார் உதவி பெறுகிறார்கள். உடல் நோய் சார்ந்த சிகிச்சைகள் போல உளநோய் சார்ந்த சிகிச்சைகள் இலகுவில் கிடைப்பதுமில்லை.

அதைவிட, எம் சமூகத்தில், மொழி சார்ந்த துறைசார் உதவியும் பரந்த அளவில் கிடைப்பதில்லை.

எல்லாவற்றையும் கவனத்தில் கொள்ளும்போது, எம் சமூகத்தில் தற்போது நடந்துகொண்டிருக்கும் தற்கொலைகளின் காரணிகளைக் கண்டுகொள்ள முடிகிறது.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு தற்கொலையை முழுக்க முழுக்கத் தடுத்து விடமுடியாமல் போகலாம். ஆனால், ஒருவர் எடுக்கும் முடிவை மாற்றுவதற்கு மற்றவர்களால் உதவமுடியும். ஒருவர் தன் கவலையைப் பகிர்ந்துகொள்ளும்போது அதைக் காது கொடுத்துக் கேட்பதும், அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதும் அவர்கள் எடுக்கும் முடிவை மாற்ற உதவலாம். தற்கொலை பற்றிப் பேசினால், தற்கொலைக்கு நாமே தூண்டிவிடுவோம் என்ற கருத்துக்கு எந்தவோர் ஆதாரமும் இல்லை. மாறாக, மனம்விட்டுப் பேசுவதன் மூலம் அந்த எண்ணங்களிலிருந்து அவர்களை வெளிக்கொணரும் போது, பாதிப்புக்கு உள்ளானவர் மறுசிந்தனை செய்ய உதவும்.

ஒருவர் மன அழுத்தத்தில் வெளிப்படுத்தும் இயலாமையை, துன்பத்தைத் தட்டிக்கழிப்பது அல்லது அவதூறு செய்வது, சம்பந்தப்பட்டவரை இன்னும் கீழே தள்ளிவிடும்.

தற்கொலை என்பதனை எல்லோரும் காரசாரமாக விமர்சிக்கிறோம். தற்கொலை செய்வோரைக் கோழைகளென்கிறோம். வாழத்தெரியாதவர்கள் என்கிறோம். தனிமையிலிருப்பவர்களை ஒருதரமாவது அன்புடன் நாம் அணுகுகிறோமா? அவர்கள் அழைப்பதைப் பார்த்தும், கதைப்பதனைத் தவிர்த்து விடுகிறோம். ஒருவர் மற்றவரை அணுகுவதும் ஆறுதல் தேட நினைப்பதும் சமூக உறவில் முக்கியமானவை.

சிலர் வீட்டுக்கு வருவார்கள், என்ன விடயமெனக்கேட்டால் சும்மா வந்ததாகச் சொல்வார்கள். சிலவற்றைக் கேட்கப் பயம், சொல்லப் பயம். பலருக்கும் தமது சொந்த விடயங்கள் வதந்தியாக மாறிவிடக்கூடாது என்ற எச்சரிக்கை மேலோங்கி நிற்கும்.

மனஅழுத்தம் எல்லோருக்கும் இருப்பது தானே என்று சாதாரணமாகச் சொல்லி விடுகிறோம். அது ஏற்படுத்தும் தனிமனித அவலத்தினை இன்னமும் நாம் விளங்கிக் கொள்ளாதவர்களாக இருக்கிறோம். மனஅழுத்தம் ஏற்பட்ட ஒருவர் மற்றவர்கள் சொல்வதையோ அளவளாவுவதையோ கூர்ந்து அவதானிப்பதில்லை, தனியான உலகத்துக்குச் சென்றுவிடுகிறார்கள். ஒரு சிலர் சுயவிமர்சனத்தின் மூலம் மன உளைச்சலிலிருந்து வெளியில் வந்து விடுகிறார்கள். பலருக்கு அது முடியாததாகவுள்ளது. இத்தகைய மன அழுத்தத்தை, கேலிக்குரியதாகப் பார்க்கும் மனப்பான்மையே நம்மிடையே காணப்படுகிறது.

அத்தகையோருடன் சிறிது நேரத்தையாவது செலவிடுங்கள். சுயவிமர்சனத்துக்கான வாய்ப்பினை வழங்குங்கள். விமர்சனங்களின்றி அவர்கள் சொல்வதைக் கவனியுங்கள். அவர்களின் சிக்கல்களுக்கு நீங்கள் தீர்வு கண்டுபிடிக்கத் தேவையில்லை, அதை அவர்கள் வேண்டுவதுமில்லை. அவர்கள் வேண்டுவதெல்லாம் தங்கள் மனச்சுமையை அக்கறையுடன் கேட்க ஓர் இதயம். மனச்சுமையை அவர்கள் உங்களோடு பகிர்வதால், நீங்கள் அவர்களை இழக்கவோ திட்டவோ மாட்டீர்கள் என்ற நம்பிக்கை.

உங்களின் சொற்ப நேரத்தையாவது அவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.**
**ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.**

# இம்மாதத் தாய்வீட்டில்...


கொல்லத்தூண்டும் கோரத்தனிமை 3

இருபதாவது திருத்தமே கடைசித் தீர்வாகப் பயன்படுத்தவேண்டி வரும் 5
அ. கணபதிப்பிள்ளை

1971 ஏப்பிரல் 5 கிளர்ச்சி - 50 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் கற்றுக்கொள்ளாத வரலாற்றுப் பாடம் 7
- லயனல் பொபகே
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

கைச் சுத்திகரிப்பான் பயன்பாடு அழிவா, ஆரோக்கியமா? 12
சுப்ரமணியம் ஜெயசீலன்

நடைப்பயிற்சியும் உடல்நலமும் 14
கந்தசாமி கங்காதரன்

அழியும் கோலங்கள் 17
குகன் சங்கரப்பிள்ளை

மெய்ப்பாடம் - பூனைப் பயிற்சி 23
பாதுசா ஆனந்தநடராசா

மௌனம் என்பது வெற்றிக்கான வழி 27
சி. நற்குணலிங்கம்

வீட்டு விலையும் விற்பனை முகவரும் 29
வேலா சுப்ரமணியம்

கருநீலக் கல் 31
குமார் புனிதவேல்

மனிதப்பருவத்தின் மூளைகள் 34
மாத்தளை சோமு

வேற்றுக்கிரகத்தில் பறந்த முதலாவது உலங்கு வானூர்தி 36
குரு அரவிந்தன்

ஏப்பிரல் 23 - ஆங்கில மொழியும் சேக்ஸ்பியரும்... 39
எம்.ஆர். றிப்அத் முகம்மது

சரியாகத் தமிழறிவோம் - எது சரி ஏன் சரி? 42
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

முள்ளிவாய்க்கால் நினைவுகூரலும் நம் முன்னாலுள்ள வரலாற்றுப் பொறுப்பும் 46

நந்திக்கடல் பேசுகிறது தொகுப்பை முன்வைத்து... 48
அருண்மொழிவர்மன்

குமுதினிப் படுகொலை நினைவறா நாள் மே 15 50
மா. சித்திவினாயகம்

‘குமுதினி’யும் நெடுந்தீவும் - 44 ஆண்டு கடந்து... 51
அ. ரொனிராஜன்

மறைந்த சாட்சி; மறையாத சாட்சியங்கள் 54
போல் ஜோசேப்

அரங்கொன்று திரையை மூடிக்கொண்டது 57
சேகர் தம்பிராஜா

பன்மொழி அறிஞர் அருட்கலாநிதி மரிய சேவியர் அடிகளார் 59
தெளிவத்தை ஜோசப்

பேரா. வித்தியானந்தனின் ‘தமிழர் சால்பு’ ஓர் ஆய்வு 62
செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தமிழகத்தின் ‘சின்னக் கலைவாணர்’ 69
நெல்லை ஜெயசிங்

ஈழத்தமிழ்ச் சிறுவர் சஞ்சிகையின் முன்னோடி மு.க. சுப்பிரமணியம் 71
வே. விவேகானந்தன்

இசைநாடக மேதை நாடகக் கவிமணி எம்.வி. கிருஷ்ணாழ்வார் 74
த.சிவபாலு

மக்கள் அரங்காளன் பாலசிங்கம் 78
ப. ஸ்ரீஸ்கந்தன்

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி 81
மல்லியப்புசந்தி திலகர்

தோட்டியின் மகனும் உளவியலும் 83
சண்முகம் வெற்றிவேல்

மறைக்கப்பட்ட நேசங்களும் மாறுபட்ட மனிதர்களும் 86
நிலாந்தி சசிகுமார்

இலக்கை எட்டியது றொறன்ரோ தமிழ் இருக்கை முயற்சி 89

படைப்பாளிகளின் அகவுலக சஞ்சாரங்களின் எளிய வடிவம் 90
தி. செல்வமனோகரன்

ஜீவநதி - 14வது ஆண்டு மலரும் அடுத்த இதழும் 92
தெளிவத்தை ஜோசப்

கண்டிய நிலமானியம் - ஓர் அறிமுகம் 95
க. சண்முகலிங்கம்

‘தமிழும் நிலமும் பேரழகே’ இசைத்தொகுப்பு காலத்தின் தேவை 99

கர்நாடக சங்கீதமும் தமிழிசையும் 101
மைதிலி தயாநிதி

இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலையும் 104
கௌசல்யா சுப்பிரமணியன்

who harnessed the wind
சிறுவனின் தேடல், ஓர்மம், நம்பிக்கை! 108
ரூபன் சிவராஜா

கொடியன்குளத்தில் தெரிவது முள்ளிவாய்க்கால் 111
ந. இரவீந்திரன்

Indian Kitchen
சமையற்சுமை பற்றிய படமல்ல! 114
கவிதா லட்சுமி

ஓவியத்தின் மூலம் காலக்கண்ணாடியை நமக்கு விட்டுச்சென்ற யான் பிராண்டஸ் 118
என். சரவணன்

நாங்கள் அவர்கள் 122
க. பத்திநாதன்

வெள்ளாண்மை அன்றும் இன்றும் 124
பால. சிவகடாட்சம்

இலெமூரியா அல்லது குமரிக் கண்டம் 129
அ. கணபதிப்பிள்ளை

பத்தினித் தெய்வத்தின் வரலாறு உரைப்பதே சிலப்பதிகாரத்தின் பிரதான நோக்கம் 132
அஷ்வினி வையந்தி

வேளிர்! - கபிலரும் விச்சிக்கோவும் 136
செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 140
நா. சுப்பிரமணியன்

மலையகத்தில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு 146
P. விக்னேஸ்வரன்

மாண்புமிகு முன்னாள் அமைச்சரின் மரணம் 152
- நவால் எல். சாதவி
அரபியிலிருந்து ஆங்கிலத்திற்கு: அமீரா நொவெய்றா
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

வரலாற்றைப் புதைக்கும் வரலாறு 155
நெடுந்தீவு மகேஷ்

பனிவிழும் பனைவனம் 157
செல்வம் அருளானந்தம்

காலுங் காதலும் 160
வல்லிபுரம் சுகந்தன்

கண்ணைக் கவர்ந்த கல்லறைப் புதையல் 162
நிமால் நாகராஜா

# இருபதாவது திருத்தமே

## கடைசித் தீர்வாகப் பயன்படுத்தவேண்டி வரும்

- அ. கணபதிப்பிள்ளை

இலங்கையில் அதிகரித்துவரும் ஆட்சிக்கெதிரான எதிர்ப்பலையொன்று அரசாங்கத்தை உலுப்பியிருக்கிறதா என்ற கேள்வி பலரையும் கேட்க வைத்துக்கொண்டுதானிருக்கிறது. பௌத்த தேரர்கள் மட்டத்திலும் பாராளுமன்ற மட்டத்திலும் ஆரம்பித்திருக்கும் இவ்வகை எதிர்ப்புப் போராட்மானது மக்களைச் சென்றடைய முடியாமல் இன்னமும் தவழ்ந்து கெண்டிருக்கிறது.

செய்திகள் மக்களைச் சென்றடைவதற்கான ஊடகங்கள் மலிந்திருந்தாலும் அவற்றையெல்லாம் மக்கள் எந்த அளவுக்க நம்புகிறார்கள் என்பதிலேயே ஆட்சியாளர்களின் ஆட்சிக்காலம் தங்கியிருக்கும். மக்களுக்கு ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர் மீதான நம்பிக்கை இல்லாமற்போகும் பொழுது அவரை அணுகி மக்களாகவே பதவி விலகும்படி கேட்டுக்கொள்வது ஒருவித ஜன நாயகம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் மக்களது விருப்பத்துக்கும் ஆணைக்கும் எதிராகச் செயற்படும் பொழுது மக்களது வேண்டுதலின் பெயரில் கட்சித் தலைமைகள் அவர்களது பாராளுமன்றப் பதவிகளைத் துறக்கச்செய்து பிறிதொருவரை நியமிக்க முடியும் என்பது பிறிதொரு முறை ஜனநாயகம். பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியதும் கட்சித்தலைவர் தெரிவான அங்கத்தவர்களது பதவிதுறப்புக்கான விருப்பக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளுவது வேறொருவகை ஜனநாயகம்.

> இலங்கையில் பௌத்த சீனர்களின் நாடு ஒன்று உருவாகுவதுடன், நாலாவது இனமான சீன இனத்துக்கும் சேர்த்துச் சிங்கள சீனப் பௌத்த நாட்டுக்கான புதிய அரசியலமைப்பினை உருவாக்க வேண்டிய நிலைகூட ஏற்படலாம். இதேநிலை தொடருமாயின் இந்தியாவும் சிலபகுதிகளை வாங்கலாம், அமெரிக்காவும்கூட வாங்கலாம்.

இலங்கையில், மக்களைக் கேட்காமலே கட்சி தாவுவதும் தலை வருக்குத் தெரியாமலே பாராளுமன்றத்தில் வாக்களிப்பதும் சாதாரணமாகிவிட்டது. சனாதிபதிக்கு மேலதிக அதிகாரத்தை வழங்கிய 20வது சீர்திருத்தத்துக்கு ஆதரவு வழங்கிய தமிழ் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற அங்கத்கவர்கள் மக்களைக் கேட்கவில்லை, கட்சித்தலைமைகளைக் கேட்கவில்லை என்ற குறைபாடு இன்னமும் இருந்து வருகிறது. இந்த 20ன் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரமே, 'அரசியற் சிறுபான்மையினரை அடக்கப் போகும் நாள் வெகு தூரத்திலில்லை' என்ற நிலை உருவாகி வருகிறது.

அதேபோல இப்பொழுது அரசாங்கத்தின் முக்கியமான மசோதாக்களுக்குப் பெரும்பான்மை பலத்துடனான அங்கீகாரம் தேவைப்படுகிறது. அரசியல் பழிவாங்குதலுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கான சட்டமூலம் கொழும்புத் துறைமுக நகர நீதிமன்ற விசாரணைகள் முடிவடைந்த நிலையில் துறைமுக நகரச் சட்டமூலம் போன்றவற்றுக்கு மூன்றில் இரண்டு அங்கத்தவர்களது ஆதரவு தேவைப்படலாம். அதற்காகவே அரசாங்கம் தனது ஆதரவுப் பாராளுமன்ற அங்கத்தவர்களைச் சிதறவிடாமற் பாதுகாக்க வேண்டிய நிலையில் உள்ளது.

உயிர்ப்பயம், குறித்த நேரத்தில் சலுகை வழங்கப்படுதல், முன்னரே வழங்கப்பட்ட சலுகைக்கு விசுவாசமாகவிருத்தல், கௌரவத்தினைக் காப்பாற்றவேண்டுமென்ற அகங்கார உணர்வு, இனஐக்கியத்துக்குப் பாடுபடுதல் என்றதனையும், இனவாதியில்லை என்பதனையும் காட்டும் போக்கு, மீண்டும் மக்களிடம் போய் வாக்குப் பெறவேண்டிய தேவை, பதவி மீதான ஆசை, குடும்பம் உறவு சார்ந்தவர்களுக்கான சலுகைகளைப் பெறுதல் போன்ற இன்னோரன்ன காரணிகளால் எஜமானருக்கு விசுவாசமான நல்ல சேவகனாகவே இருக்கப் பலர் விரும்புகிறார்கள். இலங்கை அரசியலில் நீண்டகாலமாக இத்தகைய போக்கு அவதானிக்கப்படுகிறது. எலும்புத்துண்டுக்காக இனத்தை விற்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு தேர்தல் காலங்களில் எதிரணிகளால் மாறிமாறிச் சொல்லப்பட்டாலும் அதனை மக்கள் விளங்கிக்கொள்ள அதிகநாள் தேவைப்படுகிறது.

குடிமக்கள்சார் சமூக செயற்பாட்டுத் தலைவர்கள் (Leadership from civil society) இலங்கையில் உள்ள சமூகங்களிடையே காணப்படுவது அரிதாகவே உள்ளது. இலங்கையில் படித்த மற்றும் தெளிவான சிந்தைனயாளர்கள் ஏதோ ஒருவிதத்தில் அரசியலுள் இணைக்கப்பட்டு விடுகிறார்கள். பொதுமக்கள் சமூக செயற்பாட்டாளர்கள் தலைவர்களாக இருந்து மக்களை வழிநடத்த வேண்டியவர்கள். இத்தகைய சமூகத் தலைவர்களின் உருவாக்க

மானது சமூகரீதியில் மட்டுமன்றி அரசியல்மட்டத்திலும் தடுக்கப்படுகிறார்கள். சமூகம் அத்தகைய தலைவர்களைச் சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறது. இவருக்குப் பின்னால் ஏனிந்த மக்கள் திரண்டு கொண்டிருக்கிறார்கள் இவர் அரசியலுக்குவர ஆயத்தம் செய்கிறாரா என்ற சந்தேகம் மக்களால் முன்வைக்கப்படுகிறது. இத்தகைய தலைவர்கள் மக்களின் வழிகாட்டியாக மாறுகின்ற பொழுது அரசசார் படைத்துறைப் பயமுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இந்தநிலை எப்பொழுது மாறுமென்பது தெரியாது.

மக்களுக்காக முன்வந்து பேசும் கல்விமான்கள் இனத் தலைமைகளால் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். அரசியலில் சிலரது ஆதிக்கமே இடம்பெறவேண்டும் என்ற நிலை தவிர்க்கமுடியாததாக மாறி வருகிறது. தவிரவும், மதங்களின் பின்னால் சமூகத்தலைமைகள் உருவாகவேண்டியநிலை உருவாகியிருக்கிறது. கிறீஸ்துவராகவிருந்தால் வத்திக்கான் காப்பாற்றும் பௌத்தராகவிருந்தால் மகாசங்கங்கள் காப்பாற்றும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. முஸ்லிம் மதத்தலைவராகவிருந்தால் அரபுநாடுகள் காப்பாற்றும் இந்து மடாலய தலைவர்களாயின் ஒருவேளை இந்தியாவாவது காப்பாற்றும் என்ற ஐயங்கலந்த ஆசை நம்மிடையே இருக்கத்தான் செய்கிறது.

இலங்கை அரசாங்கம் பௌத்தமதத் தலைவர்களை அரவணைக்கும் அதேவேளை மற்றைய மதத்தலைவர்களை மக்களது தலைவர்களாக மதித்து ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்று இரண்டாண்டுகள் முடிவடைந்த நிலையிலும் கிறீஸ்தவ மதத்தவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் நீதி கிடைக்கவில்லை என்பது மல்க்கம் ரஞ்சித் ஆண்டகையின் வேண்டுகோளாக இருக்கிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணை திசைமாற்றப்பட்டு விட்டது என்ற கருத்து மேலோங்கிவரும் நிலையில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் பங்காளிகள் புதிய விசாரணை தொடர்பாக விசனம் தெரிவித்து வருகிறார்கள்.

முஸ்லிம் மதத்தலைவர்கள் அடிப்படைவாதிகளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். ஒருவருடத்துக்குள் அடிப்படைவாதத்தை எவ்வாறு ஆட்சியாளர்களால் அடையாளங்காண முடிந்ததோ அதேபோல இன்று சிறுபான்மையினங்களுக்கிடையில் இருந்து பயங்கரவாதம் என்ற ஒன்றினை வெளியே கொண்டுவர அரசாங்கம் முயற்சி செய்கிறது.

பயங்கரவாதத்தடைச் சட்டம் எந்த அரசாங்கத்தாலும் மீளப் பெறப்படவில்லை. தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகள் பயன்பாடு தொடர்பான விவாதத்தின் பொழுது பாராளுமன்ற அங்கத்தவர் சி. சிறீதரன் பாராளுமன்றத்தில் பேசியபொழுது பட்டியலிட்டுக்காட்டிய பல தமிழ் முஸ்லிம் இளைஞர் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் அண்மையில் கைது செய்யப்பட்டுச் சிறையில் வாடுகிறார்கள் என்றும், பலர் எங்கிருக்கிறார்கள் எனத் தெரியாது எனவும், நாளாந்தம் ஊடகத்துறையினர், சிறுபான்மையின இளைஞர்களெனப் பலர் கைது செய்யப்பட்டுப் புலன்விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்களென்றும், சிலர் விசாரணையின் பொழுது தாக்கப்படுகிறார்களெனவும் குறிப்பிட்டிருந்தார்.

தடைசெய்யப்பட்ட இயக்கங்கள் தடைசெய்யப்பட்ட தனிநபர்களென பட்டியலிருக்கும் பொழுது கணினித் தொழில்நுட்பம் தெரியாத இளைஞர்களும் முதியவர்களும் பாதிக்கப்படுவது அதுவும் சிறுபான்மையினருக்கு எதிரானதாக மட்டும் இத்தகைய நிலை காணப்படுவது சிங்கள மக்களது ஆதரவைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள எடுக்கப்பட்ட உபாயமா என்ற சந்தேகமே மேலோங்கக் காரணமாயிருக்கிறது.

அரசாங்கத்தின் போக்குக்கு எதிராக எதிர்க்கட்சியினரின் பேச்சுக்கள் நியாயத்துக்கான குரல் போலவே தோற்றமளிக்கின்றன. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மிருசுவில் படுகொலையில் மரணதண்டனை வழங்கித் தண்டிக்கப்பட்ட இராணுவவீரருக்கு மன்னிப்பு வழங்கிய இந்த அரசாங்கத்தின் செயலைப் பாராளுமன்றத்தில் கண்டித்திருந்தார். முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்தின கொழும்பு துறைமுகநகரம் தொடர்பாகப் பேசுகையில் 2000 வருடங்களுக்கு மேலாக எங்களுடன் வாழும் தமிழர்களுக்கு தீர்வு கொடுக்கவில்லை என்பதனைத் தெரிவித்திருந்தார்.

சமஸ்டி மூலமான தீர்வுத்திட்டத்துக்கும் எதிர்க்கட்சிகளின் ஆதரவு இருக்கிறது. மொட்டுக்கட்சி உள்ளூராட்சி மன்றங்களை இலக்கு வைத்து ஆட்சியினைப் பிடிக்குமளவு உயர்ந்தது போல், இப்பொழுது எதிர்க்கட்சிகள் மாகாணசபைகளை இலக்கு வைத்துள்ளன. அதற்கு இந்த அரசாங்கம் துணைபோகுமா, அல்லது 13வது திருத்தத்தை அமுலாக்கும்படி கட்டாயப்படுத்தும் இந்தியாவைப் புறக்கணித்துச் செயற்படுமா என்பது, சீனச் சிக்கலிலிருந்து விடுபடுவதிலிருந்து மட்டும் தீர்மானிக்கப்படலாம்.

துறைமுகநகரம் தொடர்பான பெரிய சிக்கலில், அரசாங்கம் எதிர்கட்சியினரின் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. சீனாவின் தலையிடியாக இருக்கும் ஹொங்கொங் எவ்வாறு பிரித்தானியாவிடம் இருந்ததோ, அதே குத்தகை முறையில் கொழும்புத் துறைமுக நகரை இலங்கையிடமிருந்து பெறச் சீனா முயற்சி செய்கிறது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தினை கடன் அடைக்கவென 99 வருடங்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்த நல்லாட்சி அரசுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தி ஆட்சிக்கு வந்த மகிந்த சகோதரர்கள் நேரடியாகச் சீனாவிடம் வேண்டுதல் விடுத்தும் இந்திய உதவியுடன் கடனை மீளச் செலுத்த முயன்றும் அத்துறைமுகத்தை மீட்க முடியவில்லை என்ற யதார்த்தம் இந்த அரசாங்கத்துக்கிருக்கிறது. மீண்டும் சீனாவின் பொறிக்குள் விழுவோமென அடம்பிடிக்கும் இந்த அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கையை முழு உலகமும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது.

இலங்கை தொடர்ந்தும் சீனக் கடனுக்காக இலங்கையை பிரித்துப்பிரித்து விற்கும் நிலை ஏற்படுமாயின் இலங்கை கடன் பொறியுள் மட்டுமல்ல கலாச்சாரப் பொறியுள் சிக்கவேண்டிய நிலையுமிருக்கும் என்பதனைத் துணிந்து கூறமுடியும். இலங்கையில் பௌத்த சீனர்களின் நாடு ஒன்று உருவாகுவதுடன், நாலாவது இனமான சீன இனத்துக்கும் சேர்த்துச் சிங்கள சீனப் பௌத்த நாட்டுக்கான புதிய அரசியலமைப்பினை உருவாக்க வேண்டிய நிலைகூட ஏற்படலாம். இதேநிலை தொடருமாயின் இந்தியாவும் சிலபகுதிகளை வாங்கலாம், அமெரிக்காவும்கூட வாங்கலாம். இதன்மூலமாக சர்வதேசத் தெருச்சந்தை நாடாக இலங்கை மாறிவிடுமோ என்ற ஐயப்பாடு எழுந்த வண்ணமுள்ளது.

இலங்கையில் தேசப்பற்றாளர்கள் என்ற குழுமம் தமிழருக்கு எதிரான இனவாத ஒற்றுமையின்பாற்பட்டுச் செயற்படுவது சிங்களவருக்கான பொது எதிரி தமிழர் என்ற மாயத் தோற்றத்தைச் சிங்களமக்களிடையே ஏற்படுத்தியிருந்தது. இத்தகைய செயற்பாடுதான் தமிழர் பிரதேசமெங்கும் இராணுவத்தைக் குவித்துத் தமிழரை அடக்கவேண்டும் என்ற சிந்தனைக்கு ஏதுவாகவும் அமைந்தது. காலம் மாறுகிறது. இராணுவத்தின் மூலமாகத்தான் தென்னிலங்கைக் கிளர்ச்சிகளை அடக்கவேண்டிய நிலை உருவாகினாலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஆட்சி கவிழ்ந்தாலும், ஜனாதிபதி தனது சர்வவல்லமை என்ற கடைசி ஆயுதத்துடன் களம் காணுமாறு, சிங்களமக்களின் ஆணை இன்னமும் ஜனாதிபதி கோத்தபாயாவுக்கிருக்கிறது.



kanapathipillai.a@thaiveedu.com

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

# 1971 ஏப்பிரல் 5 கிளர்ச்சி - 50 ஆண்டுகளுக்குப் பிறகு

# இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் கற்றுக்கொள்ளாத வரலாற்றுப் பாடம்



- லயனல் பொபகே
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

இன்று உலக நாடுகள் பலவற்றில் குடியாட்சி என்னும் பெயரில் எதேச்சாதிகாரமானது போலிக் குடியாட்சி புரிந்து, மெய்யான குடியாட்சியைக் கருவறுத்து வருகிறது. மக்கள் விருப்பம் என்னும் போர்வையில் மனித உரிமைகளும், குடியாட்சி உரிமைகளும் பறிக்கப்பட்டு வருகின்றன. இலஞ்சமும், ஊழலும், சூழல் அழிப்பும் புற்றீசல் போல் பெருகிவருகின்றன. குடித்துறை நிருவாகம், படைத்துறை நிருவாகமாக மாற்றப்பட்டு வருகிறது.

நிறைவேற்று ஜனாதிபதியின் முடிபுகளுக்கு முத்திரை குத்தும் மன்றமாக இலங்கை நாடாளுமன்றம் 1978ல் மாற்றப்பட்டது. முத்திரை குத்தும் அலுவல்கூட, அண்மையில் நிறைவேற்றப்பட்ட 20வது திருத்தத்துக்குப் பிறகு, தேவைப்படாத ஒன்றாகவே தெரிகிறது.

இந்த இட்டுமுட்டுக்குள் நாம் புகுந்தது எங்ஙனம்? 1971ல் நிகழ்ந்த கிளர்ச்சியை எடுத்துக்காட்டாக வைத்து மேற்படி வினாவுக்கான விடையை இங்கு நாம் சுருக்கி உரைப்போம்:

### பாரபட்சம் காட்டும் அரசியல்:

சுதந்திர இலங்கையின் வரலாறு முழுவதும், எமது பெரிய கட்சிகள் இரண்டும், தேர்தலில் வென்று, நாடாளுமன்றத்தில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் நோக்குடன் பிறருக்கும், பிறரது தனித்துவத்துக்கும் எதிராகப் பாரபட்சம் காட்டும் அரசியலைப் பயன்படுத்தி வந்துள்ளன. பிரித்தானியர் இலங்கையைக் கட்டியாண்ட காலத்தில் சலுகை அனுபவித்த அதே மேட்டிமைக் குழுமங்கள், தாம் அபகரித்த சலுகைகளைக் கட்டிக்காப்பதற்கு, இனவேற்றுமை நன்கு கைகொடுக்கும் என்பதைக் கண்டுகொண்டன.

தாழ்ந்த சமூக பொருளாதார பின்னணி கொண்ட சிங்கள, தமிழ் இளைஞர்கள் தமது கையறுநிலைக்கு எதிராக மூன்று தடவைகள் கிளர்ச்சி செய்துள்ளனர். முரண்பாடுகளுக்கு இட்டுச்சென்ற சமூக, பொருளாதார அரசியல், பண்பாட்டுக் காரணங்களை எல்லா அரசாங்கங்களும் ஒன்றில் தட்டிக்கழித்து வந்துள்ளன அல்லது கவனத்தில் கொள்ளத் தவறியுள்ளன. பெரும்பாலும் எல்லா அரசாங்கங்களுமே பெரிதும் அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தியே நாட்டை ஆண்டு வந்துள்ளன.

அரசாங்கங்கள் கடைப்பிடித்த பாரபட்சமான கொள்கைகளே மோதல்களுக்கு இட்டுச்சென்ற முக்கிய காரணங்கள். அக்கொள்கைகளின் தாக்கம் அத்தகையது. தமது திறமைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லாமை, அல்லது அத்தகைய வாய்ப்புகளை ஆட்சியாளர் உண்டாக்கத் தவறியமை சிங்கள, தமிழ் இளைஞர்களை மோதலுக்கு இட்டுச் சென்றது. அவ்வாறு மோதிய இளைஞர்கள் அடக்கி ஒடுக்கப்படவே அவர்கள் மேன்மேலும் மோதலுக்குத் தள்ளப்பட்டார்கள்.

### யாழ் இளைஞர் பேரவை:

பிரித்தானியர் இலங்கையைக் கட்டியாண்ட காலத்தில், யாழ் இளைஞர் பேரவை சுதந்திரத்துக்காகப் போராடுவதை விடுத்து, அரசியல்யாப்புச் சீர்திருத்தங்களுக்கான ஆர்ப்பாட்டங்களை ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கோரிக்கைகளாக சுதந்திரத்துக் கான கோரிக்கைகளாக மாற்றும் முயற்சியை முன்னெடுத்தது. பேரவையினர் வடக்கில் ஒரு திட்பமான சக்தியாக விளங்கும்வரை தமிழின தேசிய எழுச்சியை அவர்களால் பின்தள்ளவும், தாமதப்படுத்தவும் முடிந்தது. எனினும், சிங்கள, தமிழ் தேசிய பேரலை ஓங்கவே பேரவையினர் பின்னடைய நேர்ந்தது.

### சோல்பரி அரசியல்யாப்பு:

அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய நிருவாகம் நடந்துவந்த இலங்கையில் 1947ம் ஆண்டு சோல்பரி அரசியல்யாப்பின்படி ஓர் ஒற்றையாட்சி அரச கட்டுக்கோப்பு புகுத்தப்பட்டது. அது ஒரு மேல்நாட்டு அரசியல்யாப்புக் கட்டமைப்பாகும். பிறகு அதே சோல்பரி அரசியல்யாப்பினைப் பயன்படுத்தியே சிறுபான்மையோரின் குடியாட்சி உரிமைகள் நசுக்கப்பட்டன.

### மலையகத் தமிழர்:

1948ல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின்படி 10 இலட்சம் மலையக தமிழ்த் தொழிலாளரின் குடியியல் உரிமைகள் ஒழிக்கப்பட்டன. 1949ல் இயற்றப்பட்ட நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின்படி அவர்களது குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. அத்துடன் துவங்கியதே, தமிழ் மக்களின் சட்டபூர்வமான உரிமைகளைப் பறிக்கும் படிமுறை.

1930ல் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை சமசமாசக் கட்சியின் தொழிற் சங்கத்தில் இணைந்திருந்தனர். தமிழ்த் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை சிங்கள பெரும்பான்மை அரசு பறித்துவிடும் என்று தமிழ் மக்கள் அஞ்சினர். அதன் பிறகு இனவாரியாக அமைக்கப்பட்ட தொழிற் சங்கங்களில் அவர்கள் உள்வாங்கப்பட்டனர். அவ்வாறுதான் இடதுசாரிகளுடன் அவர்கள் பூண்டிருந்த உறவு தகர்ந்தது. அப்பொழுது தமிழர் பெரும்பான்மையோராக வாழ்ந்த புலங்களில் சிங்களவரைக் குடியேற்றும் அலுவல் துவங்கியது. அதுமுதல் இனவாத அரசியல் உறுதிபட மேலோங்கி வந்துள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் வேளாண்மைப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சி அடைந்தன. குடித்தொகை பெருகியது. நலன்புரி அரச கட்டமைப்பு விரிவடைந்தது. அத்தகைய சூழ்நிலையில் மக்களின் வேட்கைகளை நிறைவேற்றுவதற்கான தீர்வுகளை அரசாங்கத்தால் முன்வைக்க முடியவில்லை. ஆதலால் மக்களிடையே அரசாங்கத்துக்கு எதிர்ப்பு வலுத்தது. அது இடதுசாரிகளுக்கு சாதகமான அரசியற் சூழ்நிலையை உருவாக்கியது.

### பண்டாரநாயக்கா:

அப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிப் பிணக்கினால், அதிலிருந்து வெளியேறிய பண்டாரநாயக்கா, இலங்கைச் சுதந்திரக் கட்சியை அமைத்தார். பெரும்பான்மைச்

சிங்களவரின் ஆதரவை ஈட்டுமுகமாக, ஐந்து சமூகத் தரப்புகள் அடங்கிய வன்படை ஒன்றை உருவாக்கி, சிங்கள மக்களின் உள்ளக்குறைகளை மாத்திரம் தீர்க்க அவர் வாக்குறுதி அளித்தார்:

- சங்கம் (பிக்குகள்).
- வெத (நாட்டு வைத்தியர்கள்).
- குரு (ஆசிரியர்கள்).
- கொவி (கமக்காரர்).
- கம்கறு (தொழிலாளர்).

## தனிச் சிங்களச் சட்டம்:

1956ல் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு அரசாங்க சேவையில் சிங்களம் தெரியாதவர்களுக்கு பதவி உயர்வு மறுக்கப்பட்டது. கொழும்பு காலிமுகத்திடலில் தமிழ்த் தலைவர்கள் அமைதிவழியில் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தின் மீது காடையர்களைக் கொண்டு தாக்குதல் தொடுக்கப்பட்டது.

தமிழருக்கு எதிரான முதலாவது கலவரத்தில் ஏறத்தாழ 150 பேர் கொல்லப்பட்டனர். 1958 கலவரத்தில் ஏறக்குறைய 300 பேர், பெரும்பாலும் தமிழர் கொல்லப்பட்டனர். பிரச்சினையைத் தீர்க்கவென 1958ல் செய்யப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம், சிங்கள தீவிரவாதிகளின் நெருக்குதலினால் ஒருதலைப்பட்சமாக கிழித்தெறியப்பட்டது.

அது தமிழ் மக்கள் ஓர் இணைப்பாட்சி அரச கட்டுக்கோப்பினைக் கோரும் நிலைக்கு இட்டுச்சென்றது. தனிச் சிங்களச் சட்டம் இலங்கையின் அரசியல்யாப்புக்கு அமைவுடையதா என்பதைக் குறித்து பிரித்தானிய கோமறை மன்றுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை 1962ல் அகற்றப்பட்டது. நீதியை நிலைநிறுத்துவதற்கான ஒரேயொரு சட்டவாக்கப் பொறிமுறையாகக் கொள்ளப்பட்ட மூதவை 1971ல் ஒழிக்கப்பட்டது.

சோல்பரி யாப்பில் சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு வழங்கிய 29ம் உறுப்புரை 1972ல் இயற்றப்பட்ட யாப்பினால் ஒழிக்கப்பட்டது. புதிய யாப்பில் அடிப்படை உரிமைகள் பொறிக்கப்பட்டன. எனினும் அடிப்படை உரிமைகளை மீறும் வண்ணம் ஆட்சிமொழி, அரச மத ஏற்பாடுகள் நிலைகொண்டன.

அரசியலையும், வதந்திகளையும் அடிப்படையாகக் கொண்டு 1963ல் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறை தொடர்ந்தது. பிரச்சினையைத் தீர்க்கவென 1965ல் செய்யப்பட்ட டட்லி-செல்வா ஒப்பந்தம், மீண்டும் சிங்கள தீவிரவாதிகளின் நெருக்குதலினால் ஒருதலைப்பட்சமாக கிழித்தெறியப்பட்டது. அதனால் தமிழ் மக்கள் பெரிதும் விசனமடைந்தனர். அது பிரிவினை இயக்கத்துக்கு வித்திட்டது.

## பிரிவினை:

1975ல் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற செல்வநாயகம் தனியரசு கோரவே, தமிழரின் போராட்டத்தில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. 1976ல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி வட்டுக்கோட்டையில் வைத்து தனியரசு கோரி விடுத்த தீர்மானம் தேசிய அரசியலில் தீவிர மாற்றத்தை ஏற்படுத்தியது.

## இனப் படுகொலைகள்:

1974ம், 1978ம், 1981ம், 1983ம் ஆண்டுகளில் தமிழ் மக்கள் இடைவிடாது கொடிய சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். 1983 ஆடிப் படுகொலையை இங்கு சுட்டியுரைக்க வேண்டியுள்ளது. கொழும்பில் தமிழர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் பின்னர் மற்றப் பகுதிகளுக்குப் பரவின. அப்படிமுறையில் அரசாங்கம் சம்பந்தப்பட்டிருந்தது.

ஆடிப் படுகொலையின் விளைவாக ஆயிரக் கணக்கானோர் மாண்டனர். ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடிழந்தனர். ஆயிரக் கணக்கான வீடுகளும், கடைகளும் கொழுத்தப்பட்டன. இக்கொடிய படுகொலையினால் விளைந்த சேதம் 30 கோடி ரூபா என்று அறிவிக்கப்பட்டது. தமது தாயகமான வடக்கு-கிழக்கிலேயே தமிழர் பலரும் அகதிகள் ஆயினர். எனவே, தமிழ் மக்கள் வாக்கை விடுத்து துவக்கை நாடியதில் வியப்பில்லை.

## பிளவு:

துறைபோன தமிழர் பலரும் வெளிநாடு சென்றனர். நாட்டில் அதுவரை ஒரு குறுணி இயக்கமாய் இருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் ஆயிரக் கணக்கானோர் இணைந்து கொண்டார்கள். ஆடிப் படுகொலையை அடுத்து தமிழ் இயக்கங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நீடித்த போர் மூண்டது.

அதுவரை ஐக்கியப்பட்டிருந்த இலங்கைத் தேசிய சங்கங்கள் இப்பொழுது தமிழ், சிங்கள சங்கங்களாகப் பிளவுண்டன. அதற்கான காரணங்கள்:

- ஆடிப் படுகொலையின் ஊடாகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை மேற்படி ஐக்கிய சங்கங்களின் அங்கத்தவர்கள் சிலர் புரிந்துணர்ந்து கொள்ளவில்லை.
- வெளிநாட்டு இராசதந்திரத் தலையீடுகள்
- சில தரப்புகளின் அரசியற் பக்கச்சாய்வு.

## புலிகள்:

ஒற்றையாட்சி அரசை ஆதரிக்காத உறுப்பினர்களை வெளியேற்றும் சட்டம் நிறைவேற்றப்பட்டு, நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டது. தமது குடியாட்சி உரிமை பறிக்கப்பட்ட பிறகு தமிழ் மக்கள், தமிழ் இயக்கங்களுடன் மேலும் நெருக்கமாயினர். புலிகள் இயக்கம் பெரிதும் வன்முறையில் ஈடுபட்டு 1980களின் இறுதியில் வடக்கு-கிழக்கில் பிரதான இயக்கமாய் மாறியது. மற்ற இயக்கங்கள் புலிகளுடனோ, அரச படைகளுடனோ ஒட்டிக்கொண்டன. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழர் பலரும் புலிகள்மீது பற்றுறுதி கொண்டனர். புலிகளை பலவீனப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் ஈற்றில் புலிகளே வலுவடைந்தனர்.

பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கொலையுண்டு போவதற்கு உள்நாட்டுப் போர் வழிவகுத்தது. சில ஊர்கள் அறவே அழித்தொழிக்கப்பட்டன. பல்லாயிரக் கணக்கானோர் அகதிகள் ஆயினர். வடக்கிலும் தெற்கிலும் ஆயிரக் கணக்கான விதவைகளும், அநாதைகளும், உடலும் உள்ளமும் புண்பட்ட இலட்சக் கணக்கான மாற்றுத் திறனாளர்களும் இற்றைவரை வாய்ப்பிறப்பின்றி வாழ்ந்து வருகிறார்கள்.

2009ல் போர் முடிவடைந்த பொழுது இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை பற்றி இற்றைவரை விவாதிக்கப்பட்டு வருகிறது. 1948 முதல் சரிநிகர் உரிமைகளுக்காக, 1960களில் இணைப்பாட்சிக்காக, 1970களில் தனியரசுக்காகப் போராடிய தமிழ் மக்களின் கோரிக்கைகளையும், குமுறல்களையும் அடக்கி ஒடுக்குவதற்காகவே இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டது. எனினும், அவர்களின் அரசியற் கோரிக்கைகளை ஒடுக்குவதில் இற்றைவரை அரசாங்கம் தோல்வியே கண்டுள்ளது.

(1) தமிழ் மக்களுக்கும் புலிகளுக்கும் எதிராக ஆட்சியாளரும், அரசாங்கத்துக்கும் போட்டி இயக்கங்களுக்கும் எதிராகப் புலிகளும் கொடிய வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டமை. (2) அரசாங்கமும், புலிகளும் அடிப்படை உரிமைகளை மீறியமை. (3) வேலைநிறுத்தங்களையும் அமைதி ஆர்ப்பாட்டங்களையும் அடக்கியமை. (4) கொடூரமான முறையில் மக்கள் கொல்லப்பட்டதையும், காணாமல் போக்கடிக்கப்பட்டதையும் சரிவரப் புலன்விசாரிக்கத் தவறியமை. (5) நியாயமான கோரிக்கைகளை ஒடுக்குவதற்கு சட்டங்களைக் கருவறுத்தமை பற்றியெல்லாம் இங்கு விளக்கியுரைக்கப் போதிய அவகாசம் இல்லை.

## மக்கள் விடுதலை முன்னணி:

நாளை (ஏப்பிரல் 05, 2021) 1971 ஏப்பிரில் கிளர்ச்சியின் 50வது ஆண்டு நாள். மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) பல்கலைக்கழக மாணவர்களையும், பாடசாலை மாணவர்களையும், வேலைவாய்ப்பற்ற சிங்கள பௌத்த இளைஞர்களையும் கொண்டிருந்தது. 1970களில் சீர்குலைந்த சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைவரத்தை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் அந்த நிலைவரத்தினால் தாக்குண்டவர்கள். 1971, 1988, 1989ம் ஆண்டுகளில் நிகழ்ந்த கிளர்ச்சிகள் பற்றி பெருவாரியாக எழுதப்பட்டுள்ளதால், அவை இங்கு சுருக்கி உரைக்கப்பட்டுள்ளன.

1970ல் சுதந்திரக் கட்சியின் தலைமையில் அமைந்த கூட்டமைப்பு தேர்தலில் வென்று ஆட்சி அமைக்க ஜே.வி.பி. ஆதரவு கொடுத்தது. எனினும் இளைஞர்கள் நாடிய சமூக மாற்றங்களை கூட்டர சாங்கம் புகுத்தப் போவதில்லை என்பது அதன் முதலாவது வரவு-செலவுத் திட்டத்திலிருந்தே தெரியவந்தது. ஆதலால், நாம் எதிர்பார்த்த மாற்றத்தைக் கொணர்வதற்கே நாம் தலையிட்டோம். அப்படிமுறையே 1971 ஏப்பிரில் கிளர்ச்சியாய் ஓங்கியது. அதில் குறைகளும் தவறுகளும் இழைக்கப்பட்டதுண்டு. எனினும், எமது போராட்டத்தை அடிப்படையில் உந்தியவை: (1) சர்வதேய நிலைவரம், (2) அக்காலகட்டத்தில் நாம் அடக்கி ஒடுக்கப்பட்ட விதம் ஆகிய இரண்டுமே.

## தென்னிலங்கை இளந் தலைமுறை:

இலங்கையின் பொருளாதாரமும் சமூகக் கட்டமைப்பும் நிலப்பிரபுத்துவத்தின் எச்சமிச்சங்களுடன் கூடிய முதலாளித்துவ முறையில் அமைந்தது. 1948ன் பின்னர் வாக்களிக்கும் வயது வரம்பு குறைக்கப்பட்டது. ஏற்கெனவே கன்னங்கராவினால் இலவசக் கல்வி புகுத்தப்பட்டிருந்தது. மத்திய கல்லூரிகள் அமைக்கப்பட்டன. அப்புறம் சிங்களம் ஆட்சிமொழி ஆக்கப்பட்டது. கிராமத்து இளைஞர்கள் கல்வி கற்கும் வாய்ப்புகள் பெருகின. அதேவேளை மேட்டுக் குடியினர்க்கே ஆங்கிலக் கல்வி கற்க வாய்ப்புக் கிட்டியது.

தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வேண்டிய ஆங்



கில அறிவை கீழ்க் குடியினரால் ஈட்டிக்கொள்ள முடியவில்லை. 1960களின் இறுதியில் கலைப் பட்டதாரிகள் மட்டுமல்ல, மருத்துவப் பட்டதாரிகளும் வேலையில்லா நிலைவரத்தை எதிர்கொண்டனர். ஏற்ற தகைமைகள் அல்லது வேண்டிய அரசியல் தொடர்புகள் இல்லாமையால் வேலைகள் பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டன. ஏற்ற தகைமகள் இல்லாமல் வெளிநாடுகளுக்கும் போக வாய்ப்பில்லை.

இந்த இளந் தலைமுறையை ஆட்சியதிகாரத்தின் நெம்புகோல்களிலிருந்து விலக்கி வைத்திருப்பதும், அரசியல் முடிபுகள் எடுப்பதில் பங்குபற்றாவாறு ஒதுக்கி வைப்பதும் அக்காலகட்டத்தின் தன்மைகளாய் இருந்தன. சில பட்டதாரிகளின் பெற்றோர் தமது ஒரேயொரு வீட்டை ஈடுவைத்து தமது பிள்ளைகளை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பியிருந்தனர்.

வேலைவாய்ப்பின்மை, காணித் தட்டுப்பாடு, தண்ணீர்ப் பற்றாக்குறை, மொழிவாரியான பாரபட்சம், வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைகளால் முதிய தலைமுறை வருந்தியதுண்டு. ஆனால், தமது அவலத்துக்கான காரணங்களைப் புரிந்துகொள்ளும் திறனை, அவர்களது மரபுநிலைப்பாடும், இன - மத - மொழி சார்ந்த பக்கச்சார்புகளும் மழுங்கடித்துவிட்டன. எனினும் அவர்களது பிள்ளைகள் தமது அவலத்தை தணிப்பதில் நாட்டம் கொண்டு, தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் துணிவு கொண்டனர்.

1956ல் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்முறையின் தவிர்க்கவியலாத விளைவு எனும்படியாக, கிராமவாசிகளுள் மாபெருந்



தொகையினர் சிங்கள, பாளி, வடமொழி, கலைத் துறைகளை மாத்திரமே பயில வேண்டியிருந்தது.

அக்காலகட்டத்தில் நிலவிய தேசிய, சர்வதேசிய சூழ்நிலையில் மாற்று இடதுசாரிக் குழுமங்கள் அனைத்தும் ஆயுதப் போராட்டத்திலேயே மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தன. 1960ல் ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய, வட அமெரிக்க, மத்திய அமெரிக்க, தென் அமெரிக்க நாடுகள் 51ல் அமெரிக்க சார்பு சர்வாதிகார ஆட்சிகள் நிலைநிறுத்தப்பட்டிருந்ததை நாம் கவனிக்க வேண்டும். அத்தகைய சர்வாதிகாரத்தின் கொலைவெறி இந்தோனேசியாவில் தெட்டத் தெளிவாகப் புலப்பட்டது.

இலங்கையில் 1971 ஏப்பிரில் கிளர்ச்சியின் விளைவாக 63 படையினரும், 41 குடியினரும் கொல்லப்பட்டதாகவும், 305 பேர் காயப்பட்டதாகவும், 21 இலட்சம் ரூபா சேதம் ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. ஜே.வி.பி.யைச் சேர்ந்த ஏறத்தாழ 5,400 பேரும், 10,000 முதல் 12,000 வரையான பொதுமக்களும் தமது உயிரைத் தியாகம் செய்ய நேர்ந்தது.

பெருந் தொகையானோர் மோதலில் கொல்லப்படவில்லை. கைது செய்யப்பட்ட பின்னர் சித்திரவதை செய்யப்பட்டே அவர்கள் கொல்லப்பட்டார்கள். பெரிதும் தோழியர் அனைவருமே வன்புணர்வுக்கும், பாலியல் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டார்கள். அந்தக் காலப்பகுதியில்தான் போர்விதி மீறலும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களும் இடம்பெறத் துவங்கின.

## ஐக்கிய தேசியக் கட்சியின் சதி:

1983 ஆடிப் படுகொலை என்பது ஜே.வி.பி.யை அழிக்க மேற்கொள்ளப்பட்ட சதியின் ஓர் அங்கமாகும். பொதுவுடைமைக் கட்சியும், நவ சமசமாசக் கட்சியும், ஜே.வி.பி.யும் இனக்கலவரத்தின் மூலம் பலவந்தமாக ஆட்சியைக் கைப்பற்றச் சதிசெய்ததாக, இனக்கலவரத்தை நிகழ்த்திய அதே ஐக்கிய தேசியக் கட்சி அரசே போலிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியது.

நான் உட்பட 21 பேர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கொஞ்சக்காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். அரசாங்கம் சுமத்திய அபத்தமான குற்றச்சாட்டுகள் குறித்து மெய்விவரங்களின் அடிப்படையில் வினாத் தொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, தோழி சித்திரா முன்வைத்த ஆட்கொணர்வு மனுவை அடுத்து தடுத்து வைக்கப்பட்ட அனைவரும் குற்றச்சாட்டுகள் எவையுமின்றி விடுதலை செய்யப்பட்டோம்.

ஜே.வி.பி. தடைசெய்யப்பட முன்னர் தோழர் ரோகண விஜேவீரா உட்பட்ட தலைவர்கள் பெரும்பாலானோர் தலைமறைவாகி, தமது அரசியலை ஒளிவுமறைவாக நடத்தினர். ஜே.வி.பி.க்கும் ஆடிப் படுகொலைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. தோழர் ரோகண உட்பட, தலைமறைந்து ஆயுத அரசியலில் ஈடுபட்ட தலைவர்களுள் பெரும்பாலும் அனைவருமே 1989 கார்த்திகை மாத இறுதிக்குள் கொல்லப்பட்டுவிட்டார்கள். அந்த மோதலின்போது மாத்திரம் ஆட்சியாளரால் பருமட்டாக 60,000 பேர் கொல்லப்பட்டார்கள்.

## முஸ்லீங்கள்:

முஸ்லீங்களுக்கு எதிரான பாரபட்சம் கடந்த தசாப்தத்தில் துவங்கியதாக நினைக்கிறேன். அவர்களது வீடுகள், கடைகள், மசூதி

கள் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலத்தில் பரவலாக இடம் பெற்றுள்ளன. நாடு முழுவதும் அவர்களுக்கு எதிரான உணர்வு களை ஊடகங்கள் சில ஊட்டி வருகின்றன. இஸ்லாமிய பழமை நெறிவாதிகள் சிலர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் சம்பந் தப்பட்டமை தெளிவாகத் தெரிகிறது. எனினும், அவர்களை வழி நடத்தியது யார் என்பது இதுவரை தெரிய வரவில்லை. பயங்கர வாத தடுப்புச் சட்டத்தின்படி ஹெஜஸ் ஹெஸ்பொல்லா போன்ற சட்டவாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனாலும் அது ஓர் அரசியல் பழிவாங்கல் என்றே பலரும் நம்புகிறார்கள்.

அறிவியல் அடிப்படை எதுவுமின்றி, முஸ்லீம் சமூகத்துடன் கலந்துசாவாமல், கொள்ளைநோயினால் மாண்டவர்கள் என்று ஐயுறப்படுவோரின் உடல்களை எரியூட்டும்படி பணித்ததையிட்டு, அச்சமூகம் மிகவும் விசனம் அடைந்துள்ளது. எரியூட்டுவதற்கு வேண்டிய ஆவணங்களில் ஒப்பமிடாமல் தமது எதிர்ப்பை வெளி யிட்டோர் பலர் இருக்கிறார்கள். அவர்களது மறுப்புகளையும், மருத்துவ சான்றினையும் செவிமடுக்காமலேயே, அவர்கள் முன் வைத்த அடிப்படை உரிமை விண்ணப்பங்கள் அனைத்தையும் உச்ச நீதிமன்று நிராகரித்துள்ளது. இதை முஸ்லீங்களுக்கு எதி ரான பாரபட்சமாகவே குடியியற் சமூகம் நோக்குகிறது.

## தமிழர்:

ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தில் வடபுல மக்கள் அடைந்த வேதனையைப் புலப்படுத்தும் நினைவுச் சின்னத்தை, மோதல் முடிவடைந்து 11 ஆண்டுகளுக்குப் பிறகு தகர்க்க வேண்டிய தேவை இல்லை. நெடுங்கால அடிப்படையில் முற்றுமுழுதான அதிகாரத்தை ஈட்டிக்கொள்ளும் நோக்குடன் இனத்துவ பக்கச் சாய்வையும், பேரினவாதத்தையும் பயன்படுத்தும் முயற்சியையே அத்தகைய நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன. தாம் இழந்தவர் களை நினைவுகூரும் உரிமை வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஏன் இருக்கக் கூடாது?

1948 முதல் நந்திக்கடல் வரை எமது நாட்டில் மோதல்களும், கல வரங்களும், படுகொலைகளும், உள்நாட்டுப் போரும் இடம்பெற் றுள்ளன. மக்களின் உரிமைகளை நிராகரிக்கையில், சமூக அமைதி குலைந்து, மோதல்கள் ஓங்குகின்றன. ஆர்ப்பாட்டங் களை தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தாக நோக்கி அடக்கி ஒடுக்குவது, எதிர்காலத்தில் மோதல்கள் எழ வழிவகுக்கும் என் பதை வரலாறு சுட்டிக்காட்டியுள்ளது. மக்களின் சமூக, பொருளா தார, பண்பாட்டு உரிமைகளை உறுதிப்படுத்துவதன் மூலமே அமைதியை நிலைநாட்ட முடியும் என்பதை வரலாறு திரும்பத் திரும்ப, தெட்டத்தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

## மக்கள்:

மக்களுடன் கலந்துசாவி எடுக்கும் முடிபுகளின்படி அவர்களது பிரச்சினைகளைக் குறித்து நடவடிக்கை எடுப்பதன் மூலம், குடிமக் கள் என்ற வகையில் தமது கடமைகளை ஆற்ற அவர்களை அனுமதிக்கலாம் அல்லவா?

குடியாட்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசாங்கத்துக்கு, இனத்துவ சார்பையோ அரசியற் சார்பையோ பொருட்படுத்தாமல், எல்லாச் சமூகங்களுக்குமாக நாட்டை ஆளும் பொறுப்புண்டு. இதுவரை என்றுமே கற்கப்படாத பாடங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய மிகமுக்கிய பாடம் இதுவே: சிங்கள, தமிழ், முஸ்லீம், சுதேச, மற்றும் பிற இனக்குழுமங்கள் எதிர்நோக்கும் திட்டவட்டமான பிரச்சனைகளைக் கண்டறிந்து, அவர்களது மனித உரிமைகளையும், குடியாட்சி உரிமைகளையும், பேணிக் கட்டிக் காத்துச் செயற்பட வேண்டும்.

**நன்றி:**
Lionel Bopage, 50 Years To April 71 Uprising, Colombo Telegraph, 2021-04-05, translated by Mani Velupillai, 2021-04-09).

https://www.colombotelegraph.com/index.php/50-years-to-april-71-uprising-historical-lesson-sri-lanka-never-learnt-since-its-independence

manivelupillai@thaiveedu.com




Mullivaikkal Remembrance Day
முள்ளிவாய்க்கால் நினைவு நாள்
Let us honour the countless lives lost
Standing in solidarity
With the Tamil community
இழந்த எண்ணற்ற உயிர்களை மதிப்போம்
ஒற்றுமையுடன் இணைந்து நிற்போம்
தமிழ் சமூகத்துடன்
Member of Parliament
Scarborough North
SHAUN CHEN
4386 Sheppard Avenue East, Unit C
Scarborough, Ontario M1S 1T8
416-321-CHEN (2436)
info@shaunchen.com
ShaunChenMP
shaunchenmp
Shaun_Chen
www.shaunchen.com

# கைச் சுத்திகரிப்பான் பயன்பாடு அழிவா, ஆரோக்கியமா?

- சுப்ரமணியம் ஜெயசீலன்

முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு கோவிட் பெருந்தொற்று அனைத்து நாடுகளையும் மிக மோசமாகத் தாக்கி வரும் நிலையில், நோய்த் தொற்று தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள பல்வேறு வழி-முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வெளியே செல்லும் அனைவரும் கைச் சுத்திகரிப்பானை (hand sanitizer) எடுத்துச் செல்லும் ஒரு நிலைமை இயல்பானதாகவே தற்பொழுது தென்படுகின்றது. நோய்த்தொற்று பரவுகையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் இன்று அநேகர் கை சுத்தி-கரிப்பினை பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறு கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்தி கைகளைச் சுத்த மாகப் பேணிப் பாதுகாப்பது ஆரோக்கியமான பழக்க வழக்கங்க ளில் முதன்மையானது என மருத்துவ நிபுணர்கள் நித்தமும் ஆலோசனை வழங்கி வரும் நிலையில்; மறுபுறத்தில் இந்த கைச் சுத்திகரிப்பானை அதிகம் பயன்படுத்துவதே நமக்குக் கேடுகளை விளைவிக்குமா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின், நுண் ணுயிரியல் பேராசிரியர் முனைவர் பிரெட் ஃபின்லே (Dr. B. Brett Finlay), கிருமிகள் நம்மைச் சூழ்ந்திருப்பது நன்மையானது என வும் மக்கள் இதனைப் புரிந்துகொள்ளவேண்டும் எனவும் கூறுகின் றார்.

நாம் நல்ல சுகதேகியாக இருக்க வேண்டுமாயின் பல்வகைமையு டைய நுண்ணுயிரிகளுடன் வாழ வேண்டியது இன்றியமையாதது என பேராசிரியர் ஃபின்லே தெரிவிக்கின்றார்.

எனினும், கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக அனைத்து வகை யான நுண்ணுயிரிகளையும் நாம் அழிக்க வேண்டுமென்ற நிலைமை மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது. குறிப்பாக, கைச் சுத்திகரிப்பான், தொற்றுநீக்கிகள் என்பனவற்றின் பயன்பாடு முன் னொருபோதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

இவ்வாறு அனைத்து வகையான நுண்ணுயிரிகளிலிருந்தும் நாம் விலகியிருப்பதானது நீண்ட காலத்தில் பாரதூரமான ஆரோக்கியக் கேடுகளை எமக்கு உண்டு பண்ணக்கூடிய அபாயம் காணப்படுவ தாக பேராசிரியர் ஃபின்லே தெரிவிக்கின்றார்.

திடீரென நாம் முகக் கவசங்களை அணிந்து கொள்வதுடன், கைத் தொற்றுநீக்கிகளை அதிகம் பயன்படுத்துகின்றோம். எவரை யும், எதனையும் தொடுவதில்லை. எனினும், இந்த நடவடிக்கைக-ளானவை சாதாரண நுண்ணுயிரிகளினால் எமக்குக் கிடைக்கும் நலன்களை முடக்கக்கூடியவை என்பது நம்மில் பலருக்குத் தெரி யாது. ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்வது, வெளியே செல்வது போன்றவற்றின் மூலம் இந்தச் சிக்கலைத் தவிர்த்துக் கொள்ள முடியும் எனப் பேராசிரியர் கூறுகின்றார்.

கடந்த ஒரு தசாப்த காலமாக பேராசிரியர் ஃபின்லே உள்ளிட்ட மருத்துவ ஆய்வாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் மூலம், உடலில் காணப்படும் ஆரோக்கியமான நுண்ணுயிரிச் சம நிலைக்குக் குந்தகம் ஏற்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டுள் ளது. உடற்பருமன், நீரிழிவு, மூச்சுத்தடை நோய் (Asthma) போன் றவற்றோடு, தன்னிச்சையாக நோய் எதிர்ப்புசக்தி கொண்ட நோய் கள் உள்ளிட்ட நாட்பட்ட நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

'பெருந்தொற்றுப் பரவுகையைக்கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமானது என்பதில் மாற்றுக் கருத்துகள் கிடையாது' என பேராசிரியர் ஃபின்லே தெரிவிக்கின்றார். எனினும், கைச் சுத்திகரிப்பான் பயன்படுத்துவதனால் பல்வகைமையுடைய நுண்ணுயிரிகளை மனிதர் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியங்கள் முடக்கப்படுகின்றன. காலப்போக்கில் மேற்குறிப்பிட்ட நோய்க ளைத் தடுக்கக்கூடிய நுண்ணுயிரிகள் மனிதருக்குக் கிடைப்பது தடுக்கப்படுகின்றது. எனவே, நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய நுண்ணுயிரிகளைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் அதிகளவில் வெளிச்சூழலில் நேரத்தைச் செலவிட வேண்டியதுடன் சமனிலை யான, குறிப்பாக நார்ச்சத்துடைய உணவுகளை உட்கொள்ள வேண்டுமென்பதுடன், பதப்படுத்தப்பட்ட உணவுகளை உட்கொள் ளக் கூடாது என்கிறார்.

பேராசிரியர் ஃபின்லேயும் அங்கம் வகிக்கும் விஞ்ஞானிகள் குழு வொன்று, மனிதர்கள் மற்றும் நுண்ணுயிரிகள் தொடர்பில் நடத்திய ஆய்வுகள் தொடர்பில் அண்மையில் அறிக்கையொன்றை வெளி யிட்டுள்ளது. தேசிய விஞ்ஞான அகடமியினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக சமூக ரீதியிலான பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் உருவாகியுள்ளன. நகரமயமாக்கல், சுகாதாரப் பழக்க வழக்கங்கள், பதப்படுத்தப் பட்ட உணவுகளை அதிகம் உட்கொள்வது போன்ற ஏதுக்களி னால் நுண்ணுயிரிகளின் பல்வகைமை இழக்கப்பட்டுள்ளது. மனித ரால் கண்டுபிடிக்கப்பட்ட நுண்ணுயிரிகள் நிரந்தரமாகவே அழிக் கப்பட்டுள்ளன.

கோவிட் பெருந்தொற்றினால் இந்த நுண்ணுயிரிகளுக்கு ஏற்பட் டுள்ள இழப்புகள் இதுவரையில் சரியான முறையில் மதிப்பீடு செய்யப்படவில்லை. எவ்வாறெனினும், கடந்த ஓராண்டு காலமாக ஏற்பட்ட மாற்றங்கள் நுண்ணுயிரி அழிவுக்கு ஏதுவாகியுள்ளன. கடுமையான தொற்று நீக்குதல், உடற்பயிற்சியின்மை, முடக்க நிலைமைகளில் பதப்படுத்தப்பட்ட உணவுகளை அதிகம் உட் கொள்ளல், சமூகத் தொடர்புகள் வரையறுக்கப்பட்டமை, கோவிட் தாக்கத்துக்கான சில மருந்துகள் போன்றனவே இந்த மாற்றத் துக்கான முக்கியமான காரணிகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தல், சிகிச்சை பெற்றுக்கொள் ளக்கூடிய வசதி என்பன நாட்டுக்கு நாடு, அவர்களது வருமானம், வீட்டில் இருப்பவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட பல காரணிக-ளினால் தீர்மானிக்கப்படுகின்றன என இந்த அறிக்கையின் இணை எழுத்தாளரும் பாரிஸில் அமைந்துள்ள பாஸ்டர் ஆய்வு நிறுவகத்தின் (Institut Pasteur) பணிப்பாளருமான தமாரா கைல்ஸ்-வேர்னிக் (Tamara Giles-Vernick) தெரிவித்துள்ளார்.

பெருந்தொற்றுக் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமைகள், உணவுத் தட்டுப்பாடு காரணமாக வசதி குறைந்த மக்கள், வழங்கப்படும் நிவாரண உணவுப்பொருட்களில் தங்கியுள்ளனர். எனவே அவர்களது வழமையான உணவுப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு, கிடைப்பதை உட்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சூழ்நிலையினால் அவ்வாறான மக்களின் நுண்ணுயிரிக் கட்டமைப்பு குறுகிய காலத்தில் மாற்றமடையக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என முனைவர் தமாரா கைல்ஸ்-வேர்னிக் தெரிவிக்கின்றார்.

வயது முதிர்ந்தவர்கள் மற்றும் சிறுவர்களுக்கு இந்த நுண்ணுயிரி மாற்றத்தின் மூலமாக அதிகளவு பாதிப்புகள் ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டு என பேராசிரியர் ஃபின்லே தெரிவிக்கின்றார்.

**கோவிட் பெருந்தொற்று காணப்படும் நிலையிலும் பெரும் எண்ணிக்கையிலான நுண்ணுயிரிகள் மனிதருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியவை அல்ல. குறிப்பாக அவை மனித உடல் ஆரோக்கியத்தில் சாதகமான தாக்கத்தைச் செலுத்திவருகின்றது என்பதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டிய காலத்தின் தேவை தற்பொழுது உருவாகியுள்ளது.**

சிறுவர்கள் வளரும் போது நுண்ணுயிரிகளுடன் தொடர்புபடுவது மிகவும் அவசியமாகின்றது. கோவிட் பெருந்தொற்றுத் தாக்கத்துக்கு முன்னதாக சிறுவர் சிறுமியருக்குக் கிடைத்த நுண்ணுயிரிகள் தற்பொழுது கிடைப்பதில்லை எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஆரோக்கியமான முதுமைப் பருவத்திற்கு இந்த நுண்ணுயிரிகளின் பங்களிப்பு முக்கியமானது என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. 65 வயதுக்கும் மேல் நுண்ணுயிரிகள் உடலில் அழற்சியை ஏற்படுத்தும். குறிப்பாக, குடலின் தொழிற்பாடுகளில் நுண்ணுயிரிகளின் பங்களிப்பு முக்கியமானதாகும். இது உடல் திசுக்களின் பாதிப்புக்கும் வயது மூப்புக்கும் ஏதுவாகின்றது.

வழமையான நுண்ணுயிரிகள் மனிதருக்குப் போதியளவு கிடைக்கப்பெறாமல் போனால் இவ்வாறான பாதிப்புக்கள் அதிகரிக்கும்.

மேலும், அதிகளவில் நுண்ணுயிரி கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதனால் ‘சூப்பர் பக்’ (Super bug) எனப்படும் மருந்துகளை எதிர்த்துச் செயற்படக்கூடிய கிருமிகள் உருவாகும் ஆபத்து காணப்படுவதாக கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தின் தொற்று நோயியல் பேராசிரியர் ஸ்ரெஃபனி ஸ்ட்ராட்டி சுட்டிக் காட்டுகின்றார். கோவிட் பெருந்தொற்று காரணமாக இவ்வாறான ஒரு நிலைமை உருவாகின்றது என அவர் குறிப்பிடுகின்றார்.

‘சூப்பர் பக்’ தொடர்பான நிபுணர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் தற்பொழுது கோவிட் நோய்த் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே இந்த வளங்கள் இல்லாத காரணத்தினால் ‘சூப்பர் பக்’ ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் அதிகமாகும் எனத் தெரிவிக்கின்றார்.

கோவிட் நோயாளிகளுக்கு ஏற்படக்கூடிய இரண்டாம் நிலை பக்ரீரியா தொற்றுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மருத்துவர்கள் மித மிஞ்சிய அளவில் நுண்ணுயிர் கொல்லி மருந்து வகைகளைப் பரிந்துரை செய்து வருவதாகக் குறிப்பிடுகின்றார்.

2050ம் ஆண்டளவில் உலகளாவிய ரீதியில் ‘சூப்பர் பக்’ பத்து மில்லியன் மரணங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்கள் உண்டு எனத் தெரிவிக்கின்றார்.

மிதமிஞ்சிய அளவில் நுண்ணுயிர் கொல்லிகளைப் பயன்படுத்துவதையும், தொற்று நீக்கிகளை பயன்படுத்துவதனையும் தவிர்த்து ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள், சீரான உணவு உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் மனிதர் கவனம் செலுத்தவேண்டியது அவசியமானது.

கோவிட் பெருந்தொற்று காணப்படும் நிலையிலும் பெரும் எண்ணிக்கையிலான நுண்ணுயிரிகள் மனிதருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியவை அல்ல. குறிப்பாக அவை மனித உடல் ஆரோக்கியத்தில் சாதகமான தாக்கத்தைச் செலுத்தி வருகின்றது என்பதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டிய காலத்தின் தேவை தற்பொழுது உருவாகியுள்ளது.

கைச் சுத்திகரிப்பான், தொற்று நீக்குதல் போன்ற நடவடிக்கைகளினால், எம் கண்களுக்குத் தெரியாமலேயே இயற்கையாகவே எம்மோடு இரண்டறக் கலந்து பல்வேறு வழிகளில் எம் ஆரோக்கியத்தை உறுதி செய்து வரும் நுண்ணுயிரிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதுடன் இது நேரடியாகவே எமது உடல் நலனில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற கசப்பான உண்மையைப் பதிவு
செய்யவேண்டியுள்ளது.



jeyaseelan.s@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2020)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

# நடைப் பயிற்சியும் உடல்நலமும்

- கந்தசாமி கங்காதரன்

எத்தனை செல்வச் செழிப்பு மிக்கோராயினும் நோய் நொடியற்ற வாழ்க்கையே மானுடர்வாழ்வின் குறை வற்ற செல்வமாகக் கருதப்படுகின்றது. பெரும்பா லான மனிதர்களும் தங்களது உடல் நலத்தினைப் பேணிப் பாது காத்துக்கொள்வதில் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்கின்றனர். காலையிலும் மாலையிலும் பூங்காக்களிலும் தெருவோரத்து நடை-பாதைகளிலும் பலர் நடக்கிறார்கள், ஓடுகிறார்கள். அவ்வாறு ஓட்டப்பயிற்சியிலும் நடைப்பயிற்சியிலும் ஈடுபடுவதன் மூலம் நம் உடல் நலத்தில் ஏற்படக்கூடிய நலன்கள் பற்றியே நாம் இந்தக் கட்டுரையில் பார்க்கவுள்ளோம்.

எழுந்துநின்று நிமிர்ந்து ஒரு காலை முன்வைத்து அதன் பின்னர் மற்றைய காலை முன்வைத்து நடக்கும் ஒரே உயிரினம் இந்த உலகில் மனிதர் மட்டுமே. 6 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பி ருந்தே நடப்பதற்காக இரண்டு கால்களை மனிதர் பயன்படுத்தி யுள்ளனர். நிமிர்ந்து நடக்கக்கூடிய ஆற்றலானது, மனிதர் நடப்ப தற்கும் ஓடுவதற்கும் மாறுபட்ட காலநிலைகள், சுற்றுச்சூழலுக்குத் தாக்குப்பிடித்து வாழ்வதற்கும் உதவுகின்றது.

எனினும், நடப்பதனைப் போக்குவரத்துக்காக மட்டுமான விடயமா கக் கருதிவிடமுடியாது. நடத்தல் உடல் நலத்துக்கும் மிகவும் சிறந்ததாக அமைகின்றது. உங்களது கால்களை அசைப்பதானது எண்ணில் அடங்கா நன்மைகளை உடலுக்குத் தருவதுடன் ஆயுளை நீடித்துக்கொள்ள வழியமைக்கின்றது எனப் பல விஞ் ஞான ஆய்வுகளின் மூலம் நிருபணமாகியுள்ளது. உண்மையில் நடைப்பயிற்சியை மிகவும் சீரான முறையில் நேர்த்தியாக மேற் கொண்டால் வேறு ஓர் உடற் பயிற்சியும் அவசியப்படாது என்றால் அது மிகையாகாது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக மக்கள் தங்களது சுற்றம் மற்றும் இயற்கையான சுற்றுச்சூழலில் உலவிவருகின்றனர். இவ்வாறு உலவுவதனைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பது உடல் நலத்துக்குச் சிறந்ததாகவே அமையும் என சிட்னி பல்கலைக்கழகத்தின் வாழ்க்கைமுறைமை மற்றும் சனத்தொகைச் சுகாதாரத்துறைப் பேராசிரியர் இமானுவெல் ஸ்டாமாடாகிஸ் (Emmanuel Stamatakis) தெரிவிக்கின்றார்.

எரோபிக் உடற்பயிற்சியின் (aerobic exercise) மூலம் கிடைக்கப் பெறக்கூடிய நலன்களான இருதய நலன், உடலில் குளுக்கோசின் அளவினைக் கட்டுப்படுத்தல், இரத்த அழுத்தத்தைக் குறைத்தல், மன அழுத்தங்களைக் குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு நலன்க ளைக் கிரமமான முறையில் நடைப்பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் அடையமுடியும் என பேராசிரியர் ஸ்டாமாடாகிஸ் கூறுகின் றார்.

நடைப்பயிற்சியின் மிகவும் சிறப்பான விடயம் யாதெனில் அது இலவசமானது என்பதுடன் அதற்காக எந்தவொரு கருவியையும் நாம் பயன்படுத்த வேண்டியதுமில்லை, மேலும் எந்த இடத்திலி ருந்தும் நடைப்பயிற்சினை மேற்கொள்ளமுடியும். அநேகமானவர் கள் தங்களது வாழ்நாள் முழுவதுவும் நடைபயிற்சியினை மேற் கொள்ளமுடியும். தசைகளை இயக்குவதற்கும் இருதயத்தைச் சீரா கப் பேணுவதற்கும் நடைப்பயிற்சியின் மூலம் கிடைக்கும் நலன் கள் பற்றி அதிகம் பேசப்படுவதில்லை.

உண்மையிலேயே நாள் ஒன்றுக்குப் பத்தாயிரம் காலடிகள் நடக்க வேண்டுமா?

பொதுவாக நடைப்பயிற்சியானது மிகவும் சிறந்த ஒன்றேயாகும். ஏனெனில், நடக்கும் போது எங்களுடைய அனைத்துப் பெரிய தசைகளும் இயங்குவதுடன் எமது உடல் இயக்கத்தில் சாதக நிலைமையை உருவாக்குகின்றது என்கிறார் பேராசிரியர் ஸ்டா மாடாகில்.

எனினும், வினைத்திறனான நடைப்பயிற்சியை மேற்கொள்ளவேண் டுமாயின் எவ்வளவு எட்டுக்களை ஒருவர் நடக்கவேண்டும் என்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டு, அதன் முடிவுகள் வெளியிடப்பட் டுள்ளன. இதன்படி, நாள் ஒன்றுக்குப் பத்தாயிரம் காலடிகள் நடப்பது எமது உடல் நலத்துக்கு வலுச் சேர்க்கும் என பொதுச் சுகாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும் பொதுவாக மக்களின் கருதுகோள்களுக்கு முரண்பட்ட விதத்தில் விஞ்ஞானம் வேறும் ஓர் விடயத்தையே வெளிப்படுத்துகின்றது. 1960களில் ஜப் பானிய விளம்பர நிறுவனமொன்று பீடோமீற்றர் (Pedometer) எனப் படும் நடக்கும் காலடிகளை அளவிடும் கருவியொன்றை அறிமு கம் செய்திருந்தது. இந்தக் கருவியில் அண்ணளவான பெறுதிகள் வெளியிடப்படுவதுடன் அவற்றை நினைவு வைத்துக்கொள்வது சுலபமானது. அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களது சுகாதாரப் பரிந்துரைகளில் நடைப்பயிற்சி தொடர்பிலான விடயங்களை உள் ளடக்கத் தொடங்கியது. இன்றைய நாட்களில் திறன்பேசிகள் (Smartphones) மற்றும் பிட்னஸ் ட்ரக்கர்ஸ் (Fitness trackers) மூலம் நடக்கும் எட்டுகள் அளவிடப்படுகின்றன.

1960கள் முதல் பத்தாயிரம் காலடிகளை ஒருவர் நாள் ஒன்றில் நடக்கவேண்டுமென நிர்ணயம் செய்யப்பட்டபோதிலும் இதில் மாறு பட்ட பிரதிபலன்கள் கிடைக்கப்பெற்றன. நாள் ஒன்றுக்குப் பத்தா யிரம் காலடிகளை நடப்பது என்பது ஆரோக்கியமானதும் பெறும தியானதுமான ஓர் இலக்கு என்பதில் மாற்றுக் கருத்துக் கிடை யாது. எவ்வாறெனினும் இந்தப் பத்தாயிரம் காலடிகள் என்பது அனைவருக்கும் ஒரே விதமானதாக அமையாது.

பத்தாயிரத்திற்கும் குறைந்த காலடிகளை நடப்போருக்கும் மிகச் சிறந்த உடல் ஆரோக்கிய நலன்கள் கிடைக்கப்பெறுகின்றன என் பது பல ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளதாக பேராசிரியர் ஸ்டாமாடாகிஸ் கூறுகின்றார்.

உதாரணமாக, அண்மையில் ஹாவார்ட் பல்கலைக்கழகம் 16,000 வயோதிபப் பெண்களிடம் ஆய்வு நடத்தியிருந்தது, இந்த ஆய் வின் போது 4400 காலடிகளை நாள் ஒன்றுக்கு நடக்கும் பழக்க முடைய வயோதிபப் பெண்களின் ஆயுட்காலம் இவ்வாறு பயிற்சி



களில் ஈடுபடாத பெண்களைவிடவும் அதிகமானது என்பது தெரிய வந்துள்ளது. 7500 காலடிகளை நாள் தோறும் நடப்பவர்களுக்கும் சிறந்த உடல் ஆரோக்கிய பலன்கள் கிடைக்கப் பெறுவதாகவும், 7500 காலடிகள் என்ற இலக்கு பத்தாயிரம் காலடிகள் என்ற இலக்கிற்கு நிகரான பலன்களை தரக்கூடியது எனவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

நோய்த் தடுப்பு மற்றும் நோய் கட்டுப்பாட்டு நிறுவனங்களினால் பரிந்துரை செய்யப்படும் உடற் பயிற்சிப் பரிந்துரைகளுக்கு நிகரான பலன்கள் 7500 காலடிகளை நடப்பவர்களுக்கும் கிடைக்கப் பெறுகின்றன எனப் பேராசிரியர் ஸ்டாமாடாகிஸ் தெரிவிக்கின்றார்.

எவ்வாறெனினும், நடப்பதற்கான வேகத்தை தெரிந்துகொள்வது மிகவும் சிறந்த பயனைத் தரும் என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்வது அவசியமானது. நடைப்பயிற்சி மூலம் ஒருவருக்குக் கிடைக்கப்பெறும் நலன்கள் மூன்று காரணிகளின் அடிப்படையில் தங்கியுள்ளது. அடிக்கடி நடத்தல், வேகமாக நடத்தல் மற்றும் நீண்ட தூரம் நடத்தல் ஆகிய மூன்று காரணிகளின் அடிப்படையிலேயே நடைப்பயிற்சியின் நலன்கள் தங்கியிருக்கின்றன. குறுகிய தூரம் என்றாலும் வேகமாக நடப்பது மூலம் உங்களது இருதயத் துடிப்பின் வேகத்தைச் சீராக்கிக்கொள்ள முடிகின்றது.

எந்தவொரு வேகமும் சரியானதே எனினும் வேகமாக நடப்பது சிறந்த பயனைத் தரக்கூடியதாகும் என பேராசிரியர் ஸ்டாமாடாகிஸ் கூறுகின்றார். 3000 முதல் 3500 வரையிலான காலடிகளைத் துரித கதியில் நடப்பது நல்ல பலனைத் தரக்கூடியதாகும்.

## வேகமாக நடப்பதன் மூலம் நீண்ட ஆயுளைப் பெறமுடியும்:

அண்மையில் ஏறத்தாழ ஐம்பதாயிரம் நடைப்பயிற்சியாளர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வு மூலம் பல்வேறு விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாக வேகமாக நடைப்பயிற்சியில் ஈடுபடுவோர் புற்றுநோய் தவிர்ந்த ஏனைய பல்வேறு நோய்களிலிருந்து தங்களை பாதுகாத்துகொள்வதுடன் நீண்ட ஆயுளைப் பெற்றுக்கொள்வதாகப் பேராசிரியர் கூறுகின்றார். எவ்வளவு தூரம் நடக்கின்றீர்கள் என்பதனை விடவும் எவ்வளவு வேகமாக நடக்கின்றீர்கள் என்பது மிகவும் முக்கியமானது என ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. ஏனைய சில ஆய்வுகளின் மூலம் நீண்ட ஆயுளுக்கான காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன. Mayo Clinic Proceedings எனும் அமெரிக்க மருத்துவ சஞ்சிகையினால் செய்யப்பட்ட ஆய்வுகளின்போது இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது. சுமார் 475,000 ஆண்கள் மற்றும் பெண்களிடம் ஆய்வு நடத்தப்பட்டிருந்தது. மெதுவாகவும் சுறுசுறுப்பாகவும் நடக்கும் பழக்கமுடையவர்களின் ஆயுட்காலம் தொடர்பில் ஆய்வு நடத்தப்பட்டிருந்தது. மணிக்கு 3 கிலோமீற்றர் வேகத்தில் நடக்கும் பழக்கமுடையவர்கள், மெதுவாக நடக்கும் பழக்கமுடையவர்களை விடவும் அண்ணளவாக 15 முதல் 20 ஆண்டுகள் வரையில் நீண்ட ஆயுட்காலத்தைக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சுறுசுறுப்பான நடைப் பயிற்சியை மேற்கொள்ளும் ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 87 ஆண்டுகளாகவும், பெண்களின் சராசரி ஆயுட்காலம் 88 ஆண்டுகளாகவும் காணப்படுகின்றது என ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அனைத்து எடைகளை உடைய நபர்களினதும் ஆயுட் காலத்தில் ஓர் விருத்தி நிலையை அவதானிக்கமுடிகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

நடையின் வேகமானது அவரவர் உடற் தகுதியை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டாலும் மணிக்கு 4 முதல் 8 கிலோமீற்றர் வேகத்தைக் கொண்டிருக்கவேண்டுமெனக் கருதப்படுகின்றது. ஒரு நிமிடத்திற்கு 100 காலடிகள் என்ற அடிப்படையிலான வேகம் பொதுவாக சிறந்த வேகமாக கருதப்படுகின்றது.

நடைப்பயிற்சியானது உடலின் ஆரோக்கியத்திற்குச் சிறந்தது என்பதனைப் போன்றே நடைப்பயிற்சியானது மூளையின் தொழிற்பாட்டிலும் தாக்கத்தைச் செலுத்துகின்றது. குறிப்பாக வயது மூப்பின் போது ஏற்படக்கூடிய நினைவாற்றற்குறைவினைக் கட்டுப்படுத்துகின்றது.

ஆறு மாதகால நடைப்பயிற்சியானது வயது முதிர்ந்தவர்களின் நினைவாற்றலை அதிகரிப்பதுடன் திட்டமிடல், ஒழுங்குபடுத்தல் ஆகிய கருமங்களைச் செவ்வனே மேற்கொள்ள உந்துவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நடை மற்றும் ஏனைய பயிற்சிகள் நினைவாற்றல் மற்றும் கற்றுக் கொள்வதில் சாதகநிலைமையை உருவாக்கும் எனப் பல்வேறு ஆய்வுகளின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

சுறுசுறுப்பாக நடத்தல் உள்ளிட்ட உடற் பயிற்சிகளின் ஊடாக மூளையின் செயற்திறன் உயர்வடையும் எனவும் புதிய நரம்புகள் வளரும் எனவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

## நடைப்பயிற்சியின் மூலம் உடல் எடையைக் குறைக்கமுடியுமா?

நடைப்பயிற்சி நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் தரும் என்றால் அது உங்களது எடையைக் குறைக்கவும் உதவவேண்டும் அல்லவா? உண்மையில் அவ்வாறு கிடையாது. உடற்பயிற்சி செய்வதன் மூலம் மட்டும் உடல் எடையைக் குறைத்துக் கொள்ள முடியும் என்ற பிழையான கருதுகோள் நிலவுகின்றது. ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களே உடல் எடையைக் குறைப்பதில் பிரதான இடத்தை வகிக்கின்றது.

நாள்தோறும் நடைப்பயிற்சியில் ஈடுபடுவது உடல், உடை முகாமைத்துவத்தில் சில மாற்றங்களை உருவாக்கும் என்பது உண்மையானது. கல்லூரியில் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் உடல் எடை அதிகரிப்பு பொதுவானதொரு விடயமாகவே காணப்படுகின்றது. நாள் தோறும் அதிகளவில் நடக்கும் மாணவ மாணவியரின் உடல் எடையிலும் பாரிய எவு வித்தியாசத்தை அவதானிக்கமுடியவில்லை என ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.



gangatharan.k@thaiveedu.com



# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address
10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You



# அழியும் கோலங்கள்

- குகன் சங்கரப்பிள்ளை

சாந்தகுமாரை 20 வருடங்களுக்கு பின்னர் ஒரு திருமணவீட்டில் எதிர்பார்க்காமல் சந்தித்தது ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவம். இருந்தாலும் அவனது அம்மா பார்வதி டீச்சர் இப்போது வயோதிபர்களை பராமரிக்கும் nursing homeல் வருத்தமாக இருக்கின்றார் என்கின்ற செய்தியை அவன் கூறியபோது மனத்துக்கு சங்கடமாக இருந்தது.

'இப்போது டீச்சர்க்கு என்ன வயது?'

'85ஐ தாண்டிவிட்டது மச்சான், வயது பிரச்சினையில்லை. அம்மாக்கு இப்ப எல்லாம் மாறாட்டம் - Dementia என்று முதலில் கூறினார்கள் இப்பொது Alzheimer's என்கின்றனர்'.

'டீச்சருக்கா?'

எனக்கு நம்பமுடியாமல் இருந்தது. பார்வதி டீச்சர்க்கு எப்படி மறதியோ, dementiaவோ வரக்கூடும்? அவர் எதையும் மறப்பது இல்லையே? பார்வதி டீச்சர் எமது ஊர் பாடசாலையில் பாலர் வகுப்பு ஆசிரியை. நீண்ட நாட்களாக இதே பாடசாலையில் ஆசிரியராக கடமை புரிந்தவர். எமது ஊர்தான் அவருக்கு சொந்த ஊர். அவரது மகன் சாந்தனும் எம்முடன் ஒன்றாக அதே பாடசாலையில் படித்தவன். அவன் மட்டுமல்ல ஊரில் இருந்த எனது வயதை அண்டியவர்கள் எல்லோரும் அதே பாடசாலையில்தான் படித்தவர்கள். 25-30 வருடங்கள் கழிந்தபின்னரும் பார்வதி டீச்சருக்கு அவரிடம் படித்த எல்லா மாணவர்களின் பெயர்களும், அவர்கள் முதல் வகுப்பில் செய்த குறும்புகள், அழுகைகள், சண்டைகள் முழுவதும் விபரமாக நினைவில் இருக்கும். நாம் வளர்ந்த பின் காணும் இடங்களில் எல்லாம் - 25 வருடங்கள் கழிந்த பின்னரும், பெயர் சொல்லி அழைத்து நலம் கேட்பார். எமது வகுப்பில் படித்த சக மாணவர்கள் பற்றியும் விசாரிப்பார். அவர் விசாரிக்கும் எம்மோடு படித்த பல மாணவர்களை நாமே மறந்திருப்போம். அவ்வளவு ஞாபகசக்தி அவருக்கு. 90களின் பிற்பகுதியில் அவர் மகனுடன் கனடாவுக்கு குடிபெயர்ந்த பின்னரும் அவரது ஞாபக சக்தி அப்படியே மாறாமல் இருந்தது.

1995ம் ஆண்டு மார்கழி 21ம் நாள் ஜெர்மனியில் உள்ள ஆய்வாளர்கள் பல நாட்களாக தேடப்பட்டு வந்த கோப்பு ஒன்றை கண்டெடுத்தனர். இவை 95 வருடங்களாக எங்கோ மறைந்திருந்தன. இந்த கோப்பில் ஒரு நோயாளிக்கும் மருத்துவருக்குமான உரையாடலின் குறிப்புகள் அடங்கியிருந்தது. இந்த கோப்பில் குறிப்பிட்ட நோயாளியின் பெயர் Auguste Deter, வயது 55. இந்த கோப்பிலிருந்த கையெழுத்தினாலான குறிப்பு ஒன்று பின்வருமாறு நோயாளிக்கும் மருத்துவருக்கும் இடையேயான உரையாடலை விபரிக்கின்றது. இந்த உரையாடல் ஜேர்மன் ஆய்வாளர்களால் 1997ம் ஆண்டு பிரபல மருத்துவ இதழான The Lancet பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

திகதி: நவம்பர் 26, 1901

அவள் கட்டிலில் எந்தவிதமான உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தாத வெறுமையான முகத்துடன் உட்காந்திருக்கின்றாள்.

உங்கள் பெயர் என்ன?

'அகுஸ்'.

குடும்ப பெயர்?

'அகுஸ்'.

உங்கள் கணவரின் பெயர் என்ன?

'அகுஸ் - அப்படித்தான் இருக்குமென்று நான் நினைக்கின்றேன்'.

உங்கள் கணவர்?

'ஆ... எனது கணவர்!' அவளுக்கு விளங்காத ஒரு கேள்வியை நான் கேட்டது போல அவளுக்குபட்டது.

நீங்கள் திருமணமானவரா?

'அகுஸ்சுடன்'.

D உடன்?

'ஆம்... ஆம்... D அகுஸ்சுடன்'.

நீங்கள் இங்கு எவ்வளவு நேரமாக இருக்கின்றீர்கள்?

சில வினாடிகள் யோசித்துவிட்டு '3 வாரங்களாக'.

இது என்ன? ஒரு பென்சிலை காட்டி நான் கேட்டேன்.

'பேனா'.

பேர்ஸ், சாவி, சுருட்டு, டயறி இவை யாவற்றையும் நோயாளி ஒழுங்காக அடையாளம் கண்டுகொண்டார்.

மதிய உணவாக பன்றி இறைச்சியுடன் காலிஃபிளவர் (Cauliflower)ஐ நோயாளி சாப்பிட்டு கொண்டிருந்தார். நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்று வினாவியபோது, 'கீரை' என்று பதில் வந்தது.




நிமிடங்களின் பின்னர், என்ன பொருட்களை இப்பொது பார்த்தீர்கள் என்று நான் வினாவியபோது...
'எனக்கு தெரியாது... எனக்கு தெரியாது...'

கடினமாக இருக்கிறது இல்லையா?

'எல்லாம் குழப்பமாக இருக்கிறது... குழப்பமாக...'

நான் எனது மூன்று விரல்களை காட்டி எத்தனை விரல்களை பார்க்கிறீர்கள் என்று வினாவினேன்.

'மூன்று விரல்கள்'.

இப்பவும் குழப்பமாக இருக்கின்றதா?

'ஆம்'.

எத்தனை விரல்களை நான் உங்களுக்கு காண்பித்தேன்?

'ம்... இது Frankfurt Almain...'

நோயாளி அகுஸ் 1906ம் ஆண்டு சித்திரை எட்டாம் திகதி இறந்து விட்டார். அப்போது அவரை முதலில் பரிசோதித்து குறிப்பெழு-திய மருத்துவர் Frankfurtல் இருந்து Munichல் உள்ள Royal Psy-chiatric Clinicக்கு மாற்றலாகி போய்விட்டார். அகுஸ் இறந்த பின்னர் அவரது மூளை, பரிசோதனைக்காக அவரை முதலில் பார்த்த மருத்துவர் Alois Alzheimerக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சதா புகைத்துக்கொண்டிருக்கும் அவர் வாயிலிருந்த சுருட்டை ஒருபுறம் வைத்துவிட்டு, Dr. Alzheimer நுண்ணோக்கியின் (microscope) ஊடாக அதன் இரண்டு சிறிய கண்ணாடி தட்டுகளுக்கு மத்தியில் இருந்த அகுஸ்ன் மூளையின் ஒரு மெல்லிய தசைஇழையை அவதானித்தார். 100 மடங்கு பெரிதாக காட்டும் Zeiss நுண்ணோக்கி அகுஸ்ன் நோய்க்கான அறிகுறியினை தெளிவாக Dr. Alzheimerக்கு காட்டியது. கோடைகாலம் முடிந்து இலையுதிர் காலம் தொடங்கியது, கார்த்திகை 4ம் திகதி நடைபெற்ற German South West Psychiatric மாநாட்டில் அகுஸ்ன் மூளையில் இருந்த கலங்கள் பற்றிய தனது அவதானங்களை Dr. Alzheimer விபரிக்கின்றார். அகுஸ்க்கு மனநல குறைபாடு அதிகரிக்கின்றது (progressive cognitive impairment). மேலும் அவரது மூளையின் மேற்பகுதியில் உள்ள கலங்கள் வழக்கத்தைவிட மாறுபட்டு விசித்திரமாக தென்படுகின்றன. அடுத்த வருடம் Dr. Alzheimer தனது அவதானங்களை A characteristic serious disease of the cerebral cortex என்ற தலைப்பில் பிரசுரிக்கின்றார். இந்த பிரசுரத்தில் மூளையின் கலங்களில் (neurone) ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் இந்த கலங்களுக்கு இடையில் வழக்கத்துக்கு மாறாக தென்பட்ட புரதங்கள் தொடர்பாக விபரமாக விபரிக்கின்றார். இது ஒரு புதுவிதமான மறதிநோய் (new kind of dementia) என்று அகுஸ்ன் நோய் தொடர்பாக கூறுகின்றார். 1910ம் ஆண்டு Dr. Alzheimer வேலை செய்த மனநலகாப்பக மருத்துவமனை - Royal Psychiatric Clinicன் தலைமை மருத்துவர் இந்த நோயினை 'அல்ஸைமர்ஸ் நோய்' என்று பெயரிட்டார். மேலும் அவர் இந்த நோய் தொடர்பாக 'இந்த நோயின் மருத்துவ அறிகுறிகள் (Clinical symptoms) இன்னும் தெளிவாக தெரியவில்லை, ஆனால் உடற்கூறியல் (anatomical) சான்றுகள் எமக்கு ஒன்றை தெளிவாக கூறுகின்றன. நாம் ஒரு சிக்கலான மனநோயினை இங்கு காண்கின்றோம். துரதிஷ்டவசமாக சில நோயாளிகள் மிக இளம் வயதிலே - நாற்பதுகளின் பிற்பகுதியில் - இந்த நோய்க்கு ஆளாவதினை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது' என்று குறிப்பிடுகின்றார். இன்று, அகுஸ் அவர் நோய் தொடர்பாக ஒரு மருத்துவரை நாடியிருந்தால் அகுஸ்க்கு 'அல்ஸைமர்ஸ் நோய்' இருக்கின்றது என்று வைத்தியர்கள் அடையாளம் கண்டிருப்பார்கள்.

அல்ஸைமர்ஸ் உயிருடன் இருக்கும்போதே நோயாளிகளின் ஆத்மாவை அவர்களிடமிருந்து மெதுவாக கசக்கி பிழிந்து உறிஞ்சி எடுத்துக்கொள்கின்றது. இந்த நோய் தொடர்பாக PBS தொலைக்காட்சி தொடரில் வந்த The Forgetting என்ற ஆவணப்படத்தில் Harvard பல்கலைக்கழக பேராசிரியர் Rudolph Tanzi இவ்வாறு விபரிக்கின்றார் - யாரால்தான் எதிர்கொள்ள முடியும், அவர்கள் வாழ்நாள் முழுவதும் சேகரித்து வைத்திருந்த நினைவுகள், வாழ்

இறைச்சியை வாயில் வைத்து கடித்து சப்பிக்கொண்டிருந்தார். இப்பொது என்ன சாப்பிடுகின்றீர்கள்?

'உருளை கிழங்கு'.

சில பொருட்களை காட்டி சில நிமிடங்களின் பின்னர் என்ன பொருட்களை முதலில் பார்த்தீர்கள் என்று வினாவியபோது, அவருக்கு ஒன்றும் ஞாபகத்தில் வரவில்லை.

இடையிடை இரட்டையர்களைப்பற்றி நோயாளி பேசிக்கொண்டார்.

மூன்று நாட்களின் பின்னர் மருத்துவரின் குறிப்பு மேலும் தொடர்கின்றது.

எந்த வீதியில் நீங்கள் இருக்கின்றீர்கள்?

'சற்று பொறுங்கள் சொல்கின்றேன்... என்னால் சொல்ல முடியும்'

இப்பொது நான் என்ன கேள்வி கேட்டேன்?

'நல்லது... இது Frankfurt Almain'

எந்த வீதியில் நீங்கள் இருக்குகின்றீர்கள்?

'Waldemar Street... இல்... இல்லை'.

எப்போது திருமணம் முடித்தீர்கள்?

'எனக்கு இப்ப தெரியாது... அந்த பெண் ஒரே மாடியில்தான் (same floor) வசிக்கின்றாள்'.

எந்த பெண்?

'அந்த பெண்... எம்முடன் இருக்கும் அந்த பெண்'.

நோயாளி இப்பொது யாரோ ஒருவரை கூப்பிடுவிக்கின்றார்... 'மிஸஸ் G... மிஸஸ் G இங்கு ஒருதரம் வாருங்கள்'.

நான் நோயாளிக்கு ஒரு பென்சில், சாவி, புத்தகம் முதலியவற்றை காட்டிய பொழுது அவற்றை அடையாளம் கண்டுகொண்டார். சில

வின் உன்னதமான விழுமியங்கள் தொடர்பான எண்ணங்கள், அலைந்து திரிந்து மகிழ்ந்த இடங்கள், அணைத்துக்கொண்ட குடும்பங்கள், கொண்டாடிய உறவுகள், அன்புகொண்ட நட்புகள், கட்டியெழுப்பிய கனவுகள் இவை யாவற்றையும் தினம் தினம் பறித்து, தொடர்புகளை அறுத்தெறிந்து நோயாளிகளை தம்மை தாம் யாரென்று தெரியாமல் நிர்மூலமாக்கும் ஒரு கொடிய நோய் அல்ஸைமர்ஸ். இந்த நோயாளிகளை பராமரிக்கும் அன்பு கொண்ட உறவுகள் யாரிடமாவது நீங்கள் பேசியிருப்பீர்களாயின் கூறுவார்கள் 'அவர்கள் அவர்களாகவே இல்லையென்று'. கண் முன்னேயே உருக்குலைந்து, கலைந்து காணாமல் போகும் அவர்கள் (நோயாளிகள்), அல்ஸைமர்ஸ் தொடர்பாக மருத்துவத்தில் 'கரைந்து கொண்டு போகும் நான் என்ற சுயஉணர்வு' (Steady erosion of Selfhood), முழுமையாக தன்னை இழத்தல் (Complete loss of Self) என்று விபரிக்கின்றது. இந்த மருத்துவ வரையறையை சமூக அறிவியலாளர்கள்(social scientists) முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அல்ஸைமர்ஸ் சுயஉணர்வினையே அரித்து எடுக்கின்றதாயின் எதுவரை இது அரித்துச்செல்கின்றது. இந்த நோயாளிகள் பல் தீட்டுவதற்கோ, உடை அணிவதற்கோ தேவையான ஆற்றலையும், அன்பு கொண்டவர்களின் முகம்ங்களையோ குரல்களையோ நினைவில் வைத்திருப்பதற்கான வல்லமையையும் இழந்து விடுவார்களாயினும் அவர்களது புலன்களை இழக்கவில்லை. அவர்கள் எந்தவிதமான உதவியும் இல்லாமல் சுயமாக கை கால்கள் போன்ற உறுப்புகளை உபயோகிக்கின்றனர். அப்படி இருக்கையில் இந்த நோயாளிகளை எப்படி முழுமையாக தன்னை இழந்தவர்கள் என்று கூறமுடியும்? என்று சமூக அறிவியலாளர்கள் கேட்க்கின்றனர். இந்த கேள்விக்கு பின்னாலிருக்கும் புதிர் என்னவெனில் காலகாலமாக மனிதரின் மனதில் குடியிருக்கும் கேள்வியாகிய ஆத்மா அல்லது 'நான் என்ற சுயஉணர்வை' (self) எவ்வாறு வரையறுப்பது என்பதுதான். இதற்கு தத்துவம், சமயம், சமூகஅறிவியல், அரசியல், மருத்துவம் என பலதுறைகளை அடக்கி எமது பார்வையை விசாலப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

சிலர் 'நான் என்ற சுயஉணர்வே' எம்மால் எம்மை பற்றி கட்டமைக்கப்படும் ஒரு கதை (narrative) என வாதிடுகின்றனர். நான் என்ற என்னுணர்வுக்கு ஒரு கதை அவசியமாகின்றது. அதாவது நாம் எமக்கு உள்ளும் புறமும் எம்மைப்பற்றி ஒருங்கமைந்த ஒரு கதையினை அல்லது பல கதைகளை உருவாக்குகின்றோம். இந்த கதைகளுக்கு கற்பனை திறனும், நினைவுகளும் எமக்கு தேவைப்படுகின்றன. வாழ்க்கையில் எமக்கும் மற்றவர்களுக்கும் கிடைத்த அனுபவங்களினூடாக நாம் எமக்காகவும், மற்றவர்களுக்காகவும் உருவாக்கப்படும் எம்மைப்பற்றிய கதைகளே 'நான் யார்?', 'எனது அடையாளம்தான் என்ன?' போன்ற அடிப்படை கேள்விகளுக்கு பதிலை தருகின்றன. இந்த பதில்தான் 'நான் என்ற சுய உணர்வுக்கு' அத்திவாரமாகின்றது. 'நான் என்ற சுய உணர்வுக்கு' என்னைப்பற்றிய நான் சொல்லும் கதைகளும் ஒரு பங்கினை அளிக்கின்றன என்பதனை புரிந்து கொள்ளலாம். ஆனால் 'நான் என்ற சுய உணர்வு' (self) இந்த கதைகளில் மட்டும்தான் தங்கி இருக்கின்றதா? அல்லது நாம் எம்மைப்பற்றிய கதைகளை புனைவதற்கு முன்னரே 'நான் என்ற சுய உணர்வு' எமக்குள் தோன்றிவிட்டதா?. சில தத்துவஞானிகள், நம்மால் இந்த கதைகளை உருவாக்க முடியாமல் போகும் போது 'நான் என்ற சுய உணர்வை' முழுவதுமாக இழந்துவிடுகின்றோம், எல்லாமே போய்விடும் என வாதிடுகின்றனர். இவர்களுக்கு நான் என்ற சுய உணர்வு என்பது, ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து ஒரு வலை பின்னல் போல எம்மால் உருவாக்கப்படும் கதைகளும் மற்றவர்கள் எம்மை பற்றிச் சொல்லும் கதைகளும் (narratives) மட்டும் தான். அல்ஸைமர்ஸ் நோயாளிகள், இந்த கருத்தியலுக்கு மிகுந்த சவாலாக அமைகின்றனர்.

இந்த விந்தையை எப்படி விபரிப்பது? எது மையப்புள்ளி? எங்கே எல்லை இருக்கின்றது? என்று ஒன்றுமே தெரியாத பிரபஞ்சம் இங்கு கொட்டிக்கிடக்கும் நட்சத்திரமண்டல குவியல். இந்த குவியலுக்குள் ஒரு நட்சத்திரம். இந்த நட்சத்திரத்தின் ஈர்ப்பு பிடியில் சிக்கி சுழலும் பல கிரகங்களில் ஒரே ஒரு கிரகத்தில் மட்டும் வாழ்வெனும் நாட்டியம். இந்த நாட்டியத்தில் பங்கேற்கும் எத்தனையோ கோடி உயிரினங்களின் மத்தியில், ஒருவகை உயிரினம் மட்டும், ஒரு குறிப்பிட்ட உடலமைப்பின் கட்டுக்குள் அடங்கி இருந்து 'நான்' என்று கூவி அழைக்கின்றது. இந்த ஒரு கணத்தில், எதோ ஒரு இடத்தில், இதோ நான்!... உண்மையில் நான் யார்? Who am I?

நான் பார்வதி டீச்சரை வைத்தியசாலையில் பார்த்தபோது அவர் அடையாளம் தெரியாத அளவு முழுவதுமாக மாறியிருந்தார். அவருக்கு என்னை மட்டுமல்ல சாந்தனைக்கூட அடையாளம் காணமுடியவில்லை. அவர் கட்டிலில் படுத்திருந்தார் சாந்தன் பல தடவைகள் அம்மா என்று கூப்பிட்ட போதும் ஒரு பதிலும் இல்லை ஒரு கட்டத்தில் 'ம்' என்ற பதில் கூறினா. சாந்தன் டீச்சரின் மறதி-நோய் எவ்வாறு சிறிது சிறிதாக அதிகரித்ததை விபரமாக கூறினான். முதலில் சிறு சிறு விடயங்களை டீச்சர் மறக்க தொடங்கினார் உதாரணமாக சாந்தன் ஏன் இன்று வேலைக்கு போகவில்லை என்று ஞாயிற்று கிழமைகளில் கேட்பார்? சாந்தன் அவருக்கு அன்று ஞாயிறு என்று நினைவுபடுத்துவான். ஓம்.. நான் மறந்துபோனேன் என்று கூறி வேறு காரியத்தில் தன்னை மறந்திருப்பார். அரைமணித்தியாலத்தில் மீண்டும் இந்த கேள்வி சாந்தனிடமோ அல்லது அவன் மனைவியிடமோ கேட்கப்படும். முதலில் அண்மைக்கால நிகழ்வுகளை மறக்க தொடங்கினார். அண்மைக் காலங்களில் இறந்தவர்களை அவர்கள் இப்போதும் உயிருடன் இருக்கின்றனர் என எண்ணி பேசுவார். பேரப்பிள்ளைகளை மறந்தார், மருமக்களை மறந்தார், கனடாவில் வாழ்ந்த மகனையும் மகளையும் மறந்தார், ஆனால் அவர்கள் இலங்கையில் எடுத்த சிறு-வயது படங்களில் அவர்களை அடையாளம் கண்டுகொண்டார். இப்படி அவர் மறக்கும் விடயங்கள் உடலில் பரவும் புற்று நோய் போல அதிகரித்து கொண்டது ஒருதடவை பல மாடி கொண்ட பல்பொருள் விற்பனை கடையில் உள்ள underground car parkingல் டீச்சர் வழிதடுமாறி போய்விட்டார். சாந்தன் அவரைத்தேடி பிடிப்பதற்கு சில மணித்தியாலங்கள் ஆகிவிட்டது. அன்று சாந்தன் டீச்சரை காரில் வைத்து திட்டியதை தான் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறு என தான் இப்பொழுது உணர்வதாக கூறினான். இதை கூறும் போது அவன் கண்கள் கலங்கி இருந்தன. அவன் உணர்ச்சிவசப்பட்டு தொடர்ந்து கேட்டான் அம்மா அப்படி என்ன பாவம் செய்தா? இப்படி அவஸ்தைப்படுவதற்கு! அவன் கேட்டது உண்மைதான், டீச்சர் ஊரில் பிறந்த ஒரு சந்ததியினருக்கு எழுத்தறிவித்தவர். வடமராட்சி போரின் போது இடம் பெயர்ந்து வந்த பல குடும்பங்களுக்கு தனது வீட்டு கதவை திறந்துவிட்டவர், யாருடனும் நொந்து பேசாதவர், அவருக்கே இந்த கதியா? டீச்சர் இருந்த அறையில் ஒரு பழைய cassette recorder/player இருந்தது. இதைப்பற்றி நான் சாந்தனிடம் கேட்டேன். அதற்கு சாந்தன் 'மனிசி ஒருவாசகத்தை மறந்தாலும் திருவாசகத்தை மறக்காது' என்று கூறினான். முன்னர் டீச்சர், தன்னை மெய் மறந்து திருவாசகம் பாடிக்கொண்டிருக்கும்போது சாந்தன் அதனை பதிவு செய்திருந்தான். இப்பொது cassetteஐ போடும் போதும் சில வேளைகளில் டீச்சர் முணுமுணுப்பதனை பார்க்கலாம் என்றான். மாணிக்கவாசகர் 'சித்தம் சிவனொடும் ஆட... ஆட' என்று பாடினார். இங்கு சித்தமே சிதைந்து கொண்டிருக்கும்போது சிவன் யாருடன் ஆடப்போகின்றார்? என்று தெரியவில்லை.

மனிதர்களின் மனத்தில் 'நினைவு' என்பது ஒரு விசித்திரமான தகவல் சேகரிப்பு பொறிமுறை. போனவாரம் புதன்கிழமை காலையில் என்ன சாப்பிட்டீர்கள் என்று யாராவது என்னை கேட்டால் எனக்கு நினைவில் இருக்காது. எனக்கு மட்டுமல்ல பெரும்பாலானவர்களுக்கும் ஞாபகத்தில் இருக்கப்போவதில்லை. ஆனால், 30 வருடங்களுக்கு முன் காதலனோ காதலியோ எதிர்பாராமல் இதழில் பதித்த முதல் முத்தம் இன்றும் ஈரம் காயாமல் உதட்டில் இருப்பது போல நினைவில் பசுமையாக இருக்கும். இதை எப்படி விளங்கிக்கொள்வது! ஆச்சரியப்படும் விடயம் என்னவெனில் 'நினைவுகள்' மனித மூளையில் எங்கு சேகரிக்கப்படுகின்றன? ஏன் தேர்ந்தெடுத்த சம்பவங்களை மட்டும் மூளை நினைவில் வைத்திருக்கின்றது? 'நினைவுகள்' எத்தனை வகைப்பட்டவை? போன்ற பல கேள்விகளுக்கான பதில்களை, மருத்துவ உலகம் முதல் முதலில் கற்றுக்கொண்டது, இருபத்தியேழு வயதுக்கு பின்னர் நடப்புகள் யாவற்றையும் உடனுக்குடன் மறந்துவிடும் H.M. என்ற நோயாளியிடம் இருந்துதான். நோயாளி H.Mன் முழுப்பெயர் Henry Gustav Molaison. இவர் 1926ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள Connecticut மாநிலத்தில் பிறந்தார். சிறு வயதில் ஏற்பட்ட ஒரு சைக்கிள் விபத்தின் போது தலை லேசாக அடிபட்டிருந்தது. இதன் பின்னர் இவருக்கு வலிப்பு நோய் (காக்கை வலிப்பு) வரத்தொடங்கியது. H.M. வளர வளர அவருக்கு வலிப்பு நோய் அடிக்கடி வரத்தொடங்கியது. இந்த வலிப்புகளை கட்டுப்படுத்தும்




மருந்துகள் ஒன்றுக்கும் அவருக்கு ஏற்படும் வலிப்பு அடங்குவதாக இல்லை. இதனால் இவர் வேலை செய்த தட்டச்சு இயந்திரங்களை (typewriter) உற்பத்தி செய்யும் தொழில்சாலையில் இருந்து விலகவேண்டி இருந்தது. இறுதியாக நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவர் வில்லியம் ஸ்கோபிஎல்ட் (William Scofield) மூளையின் இரண்டு மண்டலங்களுக்கும் இடையே நடுவில் இருக்கும் சிறு பகுதியினை அகற்றும் lobotomy எனும் அறுவை சிகிச்சைமுறையின் மூலமாக H.Mன் வலிப்பு நோயினை குணப்படுத்த தீர்மானித்தார். H.Mன் சத்திரசிகிச்சையின் போது டாக்டர் ஸ்கோபிஎல்ட், H.Mன் தலையில் இரண்டு துளைகள் இட்டு இந்த துளைகளினூடாக மூளையின் மத்திய பகுதியில் இருந்த இரு முக்கியமான பகுதிகளை வெட்டியெடுத்தார். குறிப்பாக ஹிப்போகாம்பஸ் (Hippocampus) மற்றும் அமிக்டிலா (amygdala) என அழைக்கப்படும் பாகங்களில் இருந்து பெரும் பகுதிகள் அகற்றப்பட்டன.

சத்திரசிகிச்சையின் பின்னர் H.Mன் வலிப்புநோய் முழுவதுமாக குறையாத போதும், வலிப்பு அடிக்கடி வருவதென்பது இல்லாமல் போய்விட்டது. சிகிச்சைக்கு முன்னர் வாரத்தில் ஒருமுறை ஏற்படும் வலிப்பு நோய் சிகிச்சைக்கு பின்னர் வருடத்துக்கு ஒருமுறை வரும் நோயாக மாறி இருந்தது. இந்த வகையில் நோக்கினால் இது ஒரு வெற்றிகரமான சத்திரசிகிச்சை என்றே கூறவேண்டும். ஆனால், சிகிச்சையின் பின்னர் H.Mன் ஞாபகசக்தியில் ஏற்பட்ட மாற்றங்கள்தான் மூளை தொடர்பாக அறிவியலில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடக்கி வைத்தது எனலாம். சத்திரசிகிச்சையின் பின்னர் H.M நடப்பன யாவற்றையும் உடனுக்குடன் மறந்துவிடுவார். வைத்தியசாலையில் அவரை நன்கு பராமரித்த தாதிமார்களை, வைத்தியர்களை முழுவதுமாக மறந்துபோனார். வைத்தியசாலையில் அவரை பார்க்கவரும் வைத்தியர்கள், தாதிமார்கள் யாவரையும் ஒவ்வொரு தடவையும் அப்போதுதான் முதல்முதலில் பார்ப்பது போல வரவேற்பார். வைத்தியசாலையில் தங்கி இருந்த அறை, கழிவறைக்கு செல்லும் பாதையென ஒன்றுமே அவருக்கு நினைவில் இருப்பதில்லை. மொன்றியால் McGill பல்கலைகழக பேராசிரியரும், புகழ்பெற்ற உளவியல் மருத்துவருமான Dr. Brenda Milner அவர்கள் H.Mஐ அவரது சிகிச்சைக்கு பின்னர் நீண்டகாலம் அவதானித்து வந்திருந்தார். இவரும், Dr. ஸ்கோபிஎல்ட்உம் சேர்ந்து H.Mன் ஞாபக சக்தி தொடர்பாக 1957ம் ஆண்டு ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார்கள் அதில் H.Mஐ பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். 'H.Mஉடனான உரையாடல் 1955ம் ஆண்டு சித்திரை மாதம் 26ம் நாளன்று நடைபெற்றது. அவரின் (H.Mமின்) நினைவில் எதுவுமே இருப்பதில்லை என்பது உடனடியாகவே தெரிய ஆரம்பித்துவிட்டது. அவரிடம் இன்று என்ன நாள் என்று கேட்டபோது இன்று பங்குனி 1953ம் ஆண்டு என்று பதிலளித்தார். அவரது வயது 27என்றும் கூறினார். சத்திர சிகிச்சைக்கு முன்னர் அவரை பரிசோதித்த வைத்தியருடனான உரையாடல் அன்று என்ன நடந்தன போன்ற சகல விடயங்களையும் மறந்திருந்தார். அவர் மீண்டும் மீண்டும் அவரது இளமைக் கால அனுபவங்களை பேசிக்கொண்டார். அவருக்கு தலையில் சத்திரசிகிச்சை நடைபெற்ற விடயத்தையே மறந்துவிடுவார்.' உடனுக்குடன் நடைபெறுவனவற்றை மறப்பதினை தவிர மற்றும்படி H.Mன் வாழ்கை மற்றவர்களின் வாழ்க்கையை போல மிக சாதாரணமாகவே இருந்தது. H.Mன் மறதி நோயினை ஆங்கிலத்தில் Anterograde amnesia என்பார்கள். இதற்கு கூகிளின் தமிழ் மொழிபெயர்ப்பு 'முன்நிகழ்வுகளின் நினைவிழப்பு' என்று கூறுகின்றது.

Dr. Brenda Milnerஉம் அவரது மாணவி Susan Corkinஉம் H.Mஐ நீண்டகாலம் அவதானித்து வந்தனர். 1984ம் ஆண்டு வெளியிட்ட ஆய்வறிக்கையில் Corkin, H.Mன் மறதிநோய் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார் 'சத்திர சிகிச்சைக்கு பின்னர் கடந்த 31 வருடங்களாக H.Mன் மறதிநோயில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை. அவர் இன்றும் முன் நிகழ்வுகளை உடனடியாகவே மறந்துவிடுபவராகவே இருக்கின்றார். அவர் எங்கு இருக்கின்றார், அவரை யார் பராமரிக்கின்றார்கள், கடைசியாக என்ன உணவை உண்டார், போன்ற சகல விடயங்களையும் நினைவில் வைத்திருக்க முடியாத ஒரு நோயாளியாகத்தான் இப்போதும் இருக்கின்றார். அவரிடம் இப்போது என்ன வருடம் என்று கேட்டால் குறைந்தது 43 வருடங்களுக்கு முன்னால் உள்ள ஒரு வருடத்தை குறிப்பிடுவார். 1982ம் ஆண்டு அவரது 40வயதில் எடுத்த அவரது சொந்த பிறந்தநாள் படத்தை, அவரால் அடையாளம் காட்ட முடியவில்லை. இருப்பினும், சில சில விடயங்கள் அவரது ஞாபகத்தில் இருக்கின்றன. உதாரணமாக கென்னடி என்று ஒரு முக்கியமான அரசியல் பிரமுகர் கொல்லப்பட்டது, Rock N Roll என்பது புதுவிதமான ஒரு இசை, விண்வெளி வீரர் என்பவர் விண்வெளியில் பயணிப்பவர் போன்ற பல விடயங்கள் அவர் ஞாபகத்தில் இருந்தன'.

நினைவுகளை அறிவியலில் பல வகையாக பிரித்து அணுகுகின்றனர்.

முதலாவதாக தற்காலிக நினைவுகள் (short term memory). இந்த வகையான நினைவுகள் அன்றாட வாழ்வுக்கு அவசியமானவை. மனனம் செய்யாமல் 7ல் இருந்து 10 வரையானவற்றை 20 அல்லது 30 செக்கண்டு வரை நினைவில் வைத்துக்கொள்வது தற்காலிக நினைவு.

இரண்டாவதாக பொருள்-தொடர்பு நினைவு (semantic memory). இது எமது அறிவை உபயோகித்து விடயங்களை நினைவில் வைத்துக்கொள்வது. உதாரணமாக நாலு சில்லுகள் இருந்தால் அது ஒரு வாகனம் என்று முடிவெடுக்கின்றோம் அதாவது சில்லுகளை பார்த்து வாகனத்தை நினைப்பது.

மூன்றாவதாக நிகழ்வு நினைவுகள் (Episodic memory). இவை வாழ்க்கையில் எமது உணர்வுகளை தட்டியெழுப்பிய சம்பவங்களின் நினைவுகள். உதாரணமாக ஆமிக்காரனிடம் அடிவாங்கியது, சகடையின் குண்டுவீச்சில் இருந்து தப்பியது, காதலனினதோ அல்லது காதலியினதோ முதல் முத்தம் போன்றவை.

இந்த நிகழ்வுகளின் நினைவுகள் மற்றும் பொருள் தொடர்பான நினைவுகள் (episodic & semantic) இரண்டுமாக சேர்ந்து நீண்ட கால நினைவுகளாக எமது மனதில் பதிகின்றன. இதனை வெளிப்படையான நினைவு அல்லது விளக்கமான நினைவு என்கின்றனர் (explicit or declarative memory). இந்தவகையான நினைவுகளுக்கு எமது மூளை உணர்வுபூர்வமாக தொடர்ந்து தகவல்களை சேகரிக்கவேண்டி இருக்கின்றது.

இறுதியாக செய்முறை நினைவு (procedural memory) ஒரு விடயத்தை திரும்பத்திரும்ப செய்வதனால் எமக்கு கை பழகிவிடும். நாம் எதோ ஒரு சிந்தனையில் இருந்துகொண்டே எடுத்த காரியத்தை செய்து முடிக்கலாம். உதாரணமாக நாம் சைக்கிள் ஓடுவதனை குறிப்பிடலாம். முன்னால போற பெண் சிலுக்கோ அல்லது ஸ்ரீதேவியோ (சைக்கிள் ஓடுற காலத்து பட்டபெயர்கள்)

***தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.***
***விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594  Tel: 416-646-3422***

என்று எமது மனம் தீவிர ஆராச்சியில் இருக்கும். ஆனால், சைக்கிள் திரும்பவேண்டிய இடத்தில் திரும்பி, ஓட வேண்டிய இடத்தில் ஓடி, சேரவேண்டிய இடத்திற்கு போய்ச்சேரும். எவ்வாறு ஓடவேண்டும் என்ற கட்டளைகள் எமது மூளையில் இருந்து கை கால்களில் உள்ள தசை நார்களுக்கு மூளை சேர்த்துவைத்த நினைவுகளில் இருந்து கடத்துகின்றன. எமது கவனம் (conscious) இந்த நினைவுகளில் நேரடியாக இல்லாமல் இருப்பதால் இந்த நினைவுகளை மறைமுக நினைவு (implicit memory) என்று கூறு வார்கள்.

H.Mக்கு தற்காலிக நினைவுகள் (short term memory) அவ்வளவு பாதிக்கப்படவில்லை. அவர் 10 வரையிலான பொருட்களை குறைந்தது சில செக்கண்ட் வரை நினைவில் வைத்திருக்கின்றார். பொருள் தொடர்பு நினைவு (semantic memory) என்பது H.Mக்கு இருக்கின்றது. ஆனால், இந்த நினைவு அவரது சத்திரசிகிச் சைக்கு முன்னர் இருந்தவை மட்டுமே தற்போது அவருக்கு இருக் கின்றது. அவரது நிகழ்வு நினைவுகள் (Episodic memory) முழுவ துமாக அவரிடம் இல்லாமல் இருந்தது. சுருக்கமாக சொன்னால் H.Mமிடம் விளக்கமான நினைவு என்பது சத்திர சிகிச்சைக்கு பின்னர் அறவே இல்லாமல் போய்விட்டது. அதேவேளை செய் முறை நினைவு (procedural memory) சத்திர சிகிச்சைக்கு பின்னர் பாதிக்கப்படவில்லை. H.M ஒரு படத்தை கண்ணாடியில் பார்த்து வரைவதனை தொடர்ந்து சில நாட்களாக நாளாந்த கடைமைக-ளில் ஒன்றாக ஏற்படுத்தினர். மூன்று நாட்களில் இந்த படத்தை H.M இலகுவாகவும் அசல் போலவும் வரைய ஆரம்பித்துவிட்டார். இது H.Mஇன் செய்முறை நினைவு (procedural memory) பாதிக் கப்படவில்லை என்பதற்கு நிரூபணம் ஆகின்றது. அதிசயம் என்ன வெனில் அவருக்கு நேற்று இதேபடத்தை தானேதான் வரைந்தவர் என்பது நினைவில் இருப்பதில்லை.

நினைவுகள் பலவகை பட்டது போல அவற்றை மூளையில் சேக-ரிக்கும் இடங்களும் வேறுபடுகின்றன என்பது நோயாளி H.Mமி டம் இருந்து அறிவு உலகம் கற்றுக்கொண்டது. 20ம் நூற்றாண் டின் பின்பகுதியில் மூளை தொடர்பான அறிவு மிகப் பரந்து வளர்ந்திருந்தது. மூளையின் சகல பகுதிகளையும் வெளியில் இருந்தே படம் எடுப்பதில் புதிய தொழில்நுட்பங்களும் வர ஆரம் பித்தன. Dr. ஸ்கோபில்ட் H.Mன் மூளையின் எந்த பகுதிகளை உண்மையில் அகற்றி இருக்கின்றார் என்பதனை அறிவுலகம் முழுமையாக அறிய விரும்பியது. H.Mன் தலை மீண்டும் CT scan போன்ற உபகரணங்கள் மூலம் படம் பிடிக்கப்பட்டன. இந்த படங்கள் தெளிவாக இல்லை, ஆதலினால் Dr. ஸ்கோபில்ட் எழு திய குறிப்புகளுடன் படங்களும் பொருந்துகின்றன என்றே ஆய் வாளர்கள் அப்போது கருதினார்கள். 2008ம் ஆண்டு மார்கழி 2ம் நாள் H.M இறந்து போனார். அவரது குடும்பத்தினரின் சம்மதத் தோடு H.Mன் மூளையை நரம்பியல் நிபுணர்கள் 9 மணித்தியா லங்களாக நவீன கருவிகள் மூலம் மீண்டும் மீண்டும் படம் எடுத் திருந்தார்கள். இந்த படங்கள் மூலம் H.Mஇன் மூளை முப்பரி-மாணமாக கணினியில் உருவாக்கப்பட்டது. இந்த முப்பரிமாண டிஜிட்டல் மூளை மிகுந்த ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த ஆய்வுகள் மூலம் Dr. ஸ்கோபில்ட் நினைத்தது போல ஹிப் போகாம்பஸ் என்ற பகுதி முழுவதுமாக H.Mன் மூளையில் இருந்து அகற்றப்படவிலை என்பது தெளிவாகியது. மாறாக மூளையில் இருந்த இன்னுமோர் பகுதி EC என்றழைக்கப்படும் பாகம் (entorhinal cortex) அகற்றப்பட்டிருந்தது. அல்ஸைமர்ஸ் நோய், முதலில் entorhinal cortex என்ற பகுதியில் ஏற்படும் சிதை வில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது, பின்னர் மூளையின் மற்ற பகுதிகளுக்கு பரவுகின்றது.

பார்வதி டீச்சர் இறந்தபோது நான் ரோறன்ரோவில் இல்லை. 2 வாரங்கள் கழித்து சாந்தன் வீட்டுக்கு சென்றிருந்தேன். அங்கு டீச்சரின் படமும் ஒரு குத்துவிளக்கும் ஒரு சிறுமேசையில் வைக் கப்பட்டிருந்தது. அந்த படம் டீச்சர் கனடாவுக்கு வந்த புதிதில் எடுக்கப்பட்டதாக இருக்கவேண்டும். மலர்ந்த முகத்துடன் எமது சிறு வயது கூத்துக்களை சொல்ல அவர் தயாராக இருப்பது போல அந்த படத்தில் இருந்தார். சாந்தனும் மிக தெளிந்த முகத் துடன் இருந்தான். நாம் ஊரில் வாழ்ந்த பழைய நினைவுகளை இரண்டு மணித்தியாலங்களுக்குமேல் பேசிக்கொண்டிருந்தோம். டீச்சரின் மறதிநோய் பற்றி ஒன்றுமே பேசவில்லை. யாவற்றையும் நினைவில் வைத்திருக்கும் டீச்சர், அந்த டீச்சரின் வாழ்வின் நினைவுகள் மட்டும் எம்முடன் தங்கி இருக்கட்டும்.

இன்று கனடாவில் கிட்டதட்ட ஏழரை லட்சம் மக்கள்வரை அல் ஸைமர்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். உலகளாவி யரீதியாக 44 மில்லியன் வரையிலான மக்கள் அல்ஸைமர்ஸ் நோயினால் அவதிப்படுகின்றார்கள். இந்த எண்ணிக்கை இன்னும் 10 வருடங்களில் 2 மடங்காக அதிகரிக்கலாம் என ஆய்வாளர்கள் அச்சப்படுகின்றனர். 100 வருடங்களுக்கு முன்னர் Dr. Alois Alzheimer இந்த நோய்க்கான காரணங்களை அடையாளம் கண்டுகொண்டார். அவரின் பின்னர் இந்த நோய் தொடர்பாக ஆயிரக்கணக்கான ஆய்வறிக்கைகள் வெளிவந்துவிட்டன. ஆனால் இந்த நோய் இன்றும் நோயாளிகளின் ஆத்மாவை உயிருடன் திருடிச்செல்கின்றது. மருத்துவ உலகம் இதற்கு எப்பொழுது முடிவுகட்டப் போகின்றது?

பின் குறிப்பு: H.M. உயிருடன் இருக்கும் வரையிலும் அவரது முழுப்பெயர், அவர் எங்கு வாழ்கின்றார் போன்ற சகல தகவல்க ளும் மிக ரகசியமாகவே காக்கப்பட்டன. அவரை நேரடியாக தெரி யாவிட்டாலும் அவர் அறிவுஉலகின் கவனத்தை ஈர்த்த பெருமக னாகவே (celebrity) பார்க்கப்பட்டார். அவர் இறந்தபோது அறிவு லகம் தமது சக தோழனை இழந்தது போல கவலைபட்டது.

Dr. Brenda Milner: கனடா, உலகத்திற்கு வழங்கிய அறிவுப் பரிசுகளில் Dr. Brenda Milnerஉம் ஒருவர், பெண்கள் அறிவுத்து றைகளில் காலடி வைக்கமுதல் இவர் தனது அறிவுலக பய ணத்தை ஆரம்பித்தவர். இவர் அறிவுலகில் ஆற்றிய பணிக்காக பல பரிசுகள் இவருக்கு வழங்கப்பட்டன இதில் கிடைத்த மில்லி யன் டொலர்கள் பெறுமதியான பணத்தை அவர் வேலை செய்த நிறுவனத்திற்கே (Montreal Neurological Institute-Hospital - நியூரோ) நன்கொடையாக வழங்கியிருந்தார். பெண்களும் அறிவுத் துறையில் பங்களிப்பதற்கு அயராது உழைத்தவர். அவரை கொண்டாடும் முகமாக அவரது பெயரை McGill பல்கலைக்கழ கம் நரம்பியல் அறிவுத்துறை வளாகத்தின் ஒரு கட்டடத்திற்கு சூட்டியிருக்கின்றது.

**உசாத்துணை:**


- In Search of Memory: The Emergence of a New Science of Mind - By Eric R Kandel.
- https://www.nature.com/articles/ncomms4122.pdf
- https://www.abc.net.au/radionational/programs/allinthemind/the-remarkable-story-of-hm-remembering-the-man/3034150
- Man who Wan't There - Anil Ananthasamy



kugan.s@thaiveedu.com






Mega Financial Group
WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION
SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET
OUR PRODUCTS AND SERVICES
Life Insurance products
Critical Illness Insurance
Disability Insurance
Dental & Drug Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Mortgage Insurance
RRSP's Investments
RESP-Education Saving Plan
Final Expense Products
(Through Funeral Homes)
INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
OBF
La Capitale
Assumption Life
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial
www.megafinancial.ca
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca
Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

# மெய்ப்பாடம் - பூனைப் பயிற்சி

- பாதுசா
ஆனந்தநடராசா

மெய் என்பது உடல் எனவும், அதன் அசைவுகளை பாடங்கள் என்றும் குறிப்பிடுவர். உடல் தசைகளுக்கும், மூட்டுகளுக்கும், அதன் அசைவுகளுக்குமான பயிற்சியே மெய்ப் பாடங்கள் ஆகும். மெய்ப் பாடங்கள் பொதுவாக தசைகளை வலிமைப்படுத்தி, மூட்டுக்களின் அசைவுகளை இலகுவாக்கி, அதன் செயல்திற னையும் அதிகரிக்கக்கூடிய பயிற்சிகள் ஆகும். இப்பயிற்சியானது யோகாச னங்களை இலகுவாகச் செய்வதற்கும், ஆசனத்தின் பயன்களை அதிகரிப்பதற்கும் சிறந்ததொரு பயிற்சியாகும். மெய்ப் பாடத்திற்கான சில பயிற்சி முறைகளும், ஒழுங்குகளும் உண்டு. அவை பயிற்சிகளை செய்யும் வரிசை, பயிற்சியின் நோக்கம், எண்ணிக்கை, பயிற்சி செய்யும் நேரம், நாள் தவறாது பயிற்சிகளைச் செய்வது - இவையாவும் நாம் மெய்ப் பாடங்களை செய்யும் பொழுது கருத்தில் கொண்டு கடைபிடிக்க வேண்டிய விடயங்களாகும். அத்துடன் மெய்ப்பாடங்கள் உடலின் ஒழுங்கான வளர்ச்சியையும், உடலின் உறுதித்தன்மையையும் அதிகரிப்பதற்காகச் செய்யப்படும் பயிற்சியாகும். அத்தகைய பயிற்சிகளைச் செய்யும் பொழுது நாம் எமது உணவுப் பழக்க வழக்கங்களையும், உடலின் சூட்டைத் தணிக்கும் வகையில் நீராடுதல், வாரந்தோறும் எண்ணெய்க் குளியல் / எண்ணை தேய்த்து குளித்தல், ஒழுங்கான ஓய்வு மற்றும் உறக்கம் ஆகியவற்றையும் ஒழுங்குபடுத்தி வைத்திருக்க வேண்டும். அத்துடன் பயிற்சிக்கு முன்னும், பின்னும் எவ்வளவு நேரம் கழித்து உணவு உட்கொள்ள வேண்டும், நீர் அருந்த வேண்டும் என்பதிலும் கவனத்தைச் செலுத்த வேண்டும். நம் முன்னோர்கள் இந்த ஒழுங்குகளை வகுத்து, பின் பற்றி மெய்ப் பாடங்கள் மூலம் உடலைத் தம் கட்டுக்குள் கொண்டு வருவந்து, மூச்சைக்கையாண்டு, அதன் வழி மனத்தை ஓர் நிலைப்படுத்தி, அசையா நிலையில், தியானத்தில் அமர்ந்து தன்னை உணர்தல் மூலம் முக்திக்கும் வழிகாட்டி உள்ளனர்.

மெய்ப் பாடங்கள் தமிழர்களுடைய வாழ்வியலோடு ஒன்றாகி இருந்து வந்துள்ள காலத்தில் நோய்கள் அரிதாகவும், உடல் பற்றிய அறிவும், நோய்களை உணவு மற்றும் பயிற்சி மாற்றங்களினால் தீர்வு காணும் திறனும் இருந்தது. வர்மம் பற்றிய அறிவும், அவற்றை அன்றாட வாழ்க்கையில் மிகஇயல்பாகவே பிரயோகித்தும் உள்ளனர். உதாரணமாக புரக்கேறினால் உச்சியில் தட்டுதல் (கொண்டை கொல்லி வர்மம்), அதிர்ச்சியில் வாயடைத்து நின்றால் முதுகில் தட்டுதல், கண்ணூறு பட்டால், பார்வை பார்த்தல் (நோக்கு வர்மம்) போன்றவை பழக்கத்தில் இருந்தன. உடல் பற்றிய ஆழ்ந்த அறிவு, வர்மச்சிகிச்சைகள் என்பன சித்தர்கள், சித்த வைத்தியர்கள், தற்காப்பு கலை ஆசான்கள் வழி இன்றும் பயன்பாட்டில் இருக்கின்றன.

பெரும்பாலும் யோகப் பயிற்சிகளும் பிற கலைகளில் இடம்பெறும் பயிற்சிகளும், மிருகங்களைக் கூர்ந்து கவனித்து, அவற்றின் சிறப்புத் தன்மையையும் அசைவுகளையும் அடிப்படையாகக் கொண்டே பயிற்சிகளை கட்டமைத்தும், அந்த மிருகங்களின் பெயரிலேயே பயிற்சிகளையும் பெயரிட்டு - அழைத்து வந்துள்ளனர். மெய்ப்பாடப் பயிற்சிகளில் ஒன்றான பூனைப் பயிற்சியை கீழே விளக்கியுள்ளோம்.

## பயிற்சிக்குத் தயார்படுத்தல்:

பூனைப் பயிற்சிக்கு; வீர ஆசனப் பயிற்சி நிலையில் இருந்து மலை ஆசனப் பயிற்சிக்குச் சென்று, மலை ஆசனப் பயிற்சி நிலையில் இருந்து இப்பயிற்சியைச் செய்தல் வேண்டும்.

## வீராசனப் பயிற்சி:

முழங்கால்களை மடித்து முழங்கால்களில் இருந்து வலது புட்டத்தை வலது குதிக் காலிலும், இடது புட்டத்தை இடது குதிக் காலிலும் வைத்து இருந்த நிலையில், உள்ளங்கைகளை இரு தொடைப் பகுதிகளுக்கும் மேலே வைக்கவும். தலை முன்னோக்கி நேராகவும், முதுகு, தோள்ப் பகுதியை நேரான நிலையிலும் ஆறுதலாகவும் வைத்திருக்கவும். இந்த ஆசன நிலையில் இருந்து மலை ஆசனப் பயிற்சிற்குச்செல்லவும்.

## மலைஆசனப் பயிற்சி:

வீரஆசனப் பயிற்சி நிலையில் இருந்து நெஞ்சுப் பகுதியை முன்னோக்கி நீட்டி, முழங்கைகளும் முழங்கால்களும் தொட்ட நிலையில் வைத்திருக்க வேண்டும். இரண்டு கை பெருவிரல்களும் ஒன்றை ஒன்று தொட்டவாறு விரல்களை பரப்பி வைக்கவும். உள்ளங்கைகளை நிலத்தில் வைத்து ஒரு சாண் அளந்து முன்னோக்கி விரல்களைப் பரப்பிய நிலையில் விரித்து வைத்திருக்கவும். இவ்வாறு கைவிரல்களை பதித்து வைத்திருக்கும் நிலையில் இரு கட்டை விரல்களாலும் இரு சின்ன விரல்களையும் உள்பக்கமாகத் தொட்டு இந்த அளவில் நிலத்தில் விரல்களை வெளிப்பக்கமாக பரப்பி அகட்டி வைக்கவும். இவ்வாறு கைவிரல்களை அழுத்திய நிலையில் இடுப்புப் பகுதியை நன்கு மேல்நோக்கி உயர்த்த வேண்டும். கைகளையும், கால்ப் பாதங்களையும் நிலத்தில் அழுத்தி வைத்த நிலையில் தலையை முன்னோக்கித் தொங்க விட்டு வயிற்றுப்பகுதியைப் பார்த்தவாறு இருக்கவேண்டும். முழங்கால்களும், முழங்கைகளும் நீட்டப்பட்டு இடுப்புப்பகுதி மேல் நோக்கி நன்கு உயர்த்தப்பட்டு இருக்கும். இதுவே மலை ஆசனப் பயிற்சி நிலை. இந்நிலையில் இரண்டு கால்களும் இரண்டு கைகளும் நிலத்தில் நன்கு அழுத்தி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

## பூனைப் பயிற்சியின் செய் முறை:

பூனை பயிற்சியை மலைஆசன நிலையிலிருந்து செய்யத் தொடங்க வேண்டும். மலை ஆசன நிலையில் இருக்கும் பொழுது உள்ளங்கைகளையும், பாதங்களையும் நன்றாக நிலத்திலே அழுத்தி வைத்திருக்க வேண்டும்.

- மூச்சை உள்ளே இழுத்தவாறு வலது காலைத் தூக்கி முன்னால் கொண்டு வந்து வலது கணுக்கைக்கு வெளிப்பக்கமாக வைத்து, தலையையும் நெஞ்சையும் மேலே தூக்கி மேலே பார்க்கவும்.
- பின்னர் மூச்சை வெளியே விட்டவாறு முழங்கைகளை மடித்து நெஞ்சை நிலத்தை நோக்கி கொண்டு வந்து, தலையை வலது பக்கமாகத் திருப்பிப் பார்க்கவும்.
- மூச்சை உள்ளே இழுத்தவாறு தலையையும் நெஞ்சையும் மேலே உயர்த்தி, முதுகை பின்னால் வளைக்கவும். (வலது கால் வைத்த இடத்திலேயே கைக்கு அருகாமையிலேயே இருக்க வேண்டும்)
- மூச்சை வெளியே விட்டவாறு இடுப்பை மேலே உயர்த்தி, வலது கால்ப் பாதத்தை பின்னால் கொண்டு வந்து, இடது

கால்ப் பாதத்திற்கு அருகாமையில் வைத்து, தலையை இரண்டு கைகளுக்கும் நடுவில் கொண்டு வந்து வயிற்றைப் பார்க்கவும்.

- இதேபோன்று இடது கால்ப்பாதத்தைத் தூக்கி முன்னால் கொண்டு வந்து, இடது கணுக்கைக்கு அருகாமையில் வெளிப் புறமாக வைத்து, முதுகை வளைத்து தலையையும், நெஞ்சை யும் மேலே தூக்கியவாறு வைத்து மேலே பார்க்கவும். இடது பாதம் இடது பக்கமாக பார்த்த வண்ணம் இருக்க வேண்டும். மூச்சை வெளிவிட்டவாறு முழங்கைகளை மடித்து நெஞ்சை நிலத்தை நோக்கிக் கொண்டு வந்து தலையை இடது பக்கமா கத் திரும்பிப் பார்க்கவும். மூச்சை உள்ளே இழுத்தவாறு முதுகை வளைத்து தலையையும், நெஞ்சையும் மேலேதூக்கி மேலே பார்க்கவும். மூச்சை வெளியே விட்டவாறு இடுப்பை மேலே உயர்த்தி, இடது பாதத்தை பின்னால் கொண்டு வந்து வலது பாதத்திற்கு அருகாமையில் வைத்து, கைகளுக்கு நடு வில் தலையைக் கொண்டு வந்து வயிற்றைப் பார்த்து மலை ஆசன நிலைக்கு வரவும். இது ஒரு சுழற்சி.

## பயிற்சியில் கவனத்தில் கொள்ள வேண்டிய நிலைகள்:

இப்பயிற்சியில் மூன்று நிலைகளை கவனத்தில் கொள்ள வேண் டும்.

- மலை ஆசனப்பயிற்சி நிலை (தொடக்கநிலை),
- உடலை நிலத்துக்கு அருகாமையில் நீட்டியவாறு இருக்கும் நிலை,
- முதுகை வளைத்து மேல்நோக்கிப் பார்த்த நிலை.

இந்த மூன்று நிலைகளையும் தொடர்ச்சியாக சரியான மூச்சோடு கவனித்து செய்தல் பூனைப் பயிற்சியாகும்.

- மலை ஆசனப்பயிற்சி நிலையில் இரண்டு கால்களும், இரண்டு கைகளும் நிலத்தில் உறுதியாக நன்கு அழுத்தி வைக்கப்பட்டி ருக்க வேண்டும். இதுவே முதல் நிலை.
- இரண்டாவது நிலையில் வலது காலை முன்னால் கொண்டு வரும் பொழுது பின்னால் நீட்டி இருக்கும் இடது கால் நன்கு நீட்டப்பட்டு இருக்க வேண்டும். இடதுகால் நுனிப்பகுதி விரல் கள் நிலத்தில் நன்கு அழுத்தப்பட்டு இருக்கும். இடது முழங் கால் நிலத்தில் வைக்காது இருக்கவேண்டும். இவ்வாறு செய்ய முடியாத நிலையில் உள்ளவர்கள் முழங்காலை நிலத்தில் வைத்திருக்கலாம்.
- மூன்றாவது நிலையில் உள்ளங்கைகள் நிலத்தில் நன்கு அழுத் தப்பட்டு, முழங்கைகள் நீட்டபட்டும் இருக்கும். நெஞ்சுப் பகுதி நன்கு உயர்த்தப்பட்டு வயிறும் இடுப்புப் பகுதியும் மேலே தூக்கி உயர்த்தப்பட்டு இருக்கும். தொடைப் பகுதியும் சிறிது உயர்த்தப்பட்டு இருக்கும். முதுகுப்பகுதி வளைக்கப்பட்டு இருக்கும்.

ஒவ்வொரு நிலையிலும் பின்பற்ற வேண்டிய மூச்சோடு தொடர்ச்சி யாக பயிற்சியைச் செய்ய வேண்டும். உடலின் ஒரு பக்கமாக செய்து முடித்த பின்பு மறுபக்கம் ஆகவும் செய்தல் அவசியம். வலது மற்றும் இடது பக்கமாக பயிற்சியைச் செய்வதன் மூலம் உடலின் சமநிலைத் தன்மையைப் பேணுவதற்கு முடியும். பயிற் சியை செய்து முடித்தபின், வீராசனப் பயிற்சியில் ஓய்வெடுத்தல் வேண்டும். இந்த நிலையில் மூச்சானது சீரான நிலையிலும், உட லானது ஆறுதலான நிலையிலும் இருக்கும்.

## பயிற்சியின் சுழற்சி எண்ணிக்கை:

இப்பயிற்சியைப் பொறுத்தவரையில். மூன்று முதல் ஆறு சுழற் சிகள் வரை செய்யலாம். ஆரம்பநிலைப் பயிற்சியாளர்கள் ஆறு முறை பயிற்சியை முடித்தபின், கடைசி முறை செய்யும் பொழுது முதுகை வளைத்து மேலே பார்த்த நிலையில் ஆசனத்தில் நிலை கொள்ளலாம். இந்த நிலையில் பத்து வினாடிகள் நிலை கொள்ள லாம். பின்னர், மலை ஆசன நிலையிலும் பத்து வினாடிகள் நிலை கொள்ளலாம். வழமையான பயிற்சியாளர்கள் சுழற்சியின்













எண்ணிக்கையையும், கடைசியில் நிலைகொள்ளும் கால அளவை யும் அதிகரித்துக்கொள்ளலாம்.

## மூச்சின் தன்மை:

பயிற்சியின் பொழுது மூச்சைச் சீர்படுத்தி வைத்துக்கொள்வது நல்லது. ஒரு பக்கமாக பயிற்சியை செய்வதற்கு இரண்டு முறை மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடவேண்டும்.

- மூச்சை உள்ளே எடுக்கையில் கால்களை முன்னால் கொண்டு வந்து உடம்பை வளைத்த நிலை.
- மூச்சை வெளியே விட்டவாறு, நிலத்துக்கு அருகாமையில் நெஞ்சை கொண்டுவந்து இருக்கும் நிலை.
- மூச்சை உள்ளே எடுத்தவாறு உடலை மேலே உயர்த்தி பின் னால் வளைந்த நிலை.
- மூச்சை வெளியே விட்டவாறு மலை ஆசன நிலைக்குச் செல் லும் நிலை.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள மூச்சின் செயல்பாட்டோடு நன்கு கவ னித்து பயிற்சியைச் செய்ய வேண்டும். பயிற்சியைச் செய்ய தொடங்கியதிலிருந்து முடிக்கும்வரை தசைகளின் அசைவுகளைச் சீராகவும் தொடர்ச்சியாகவும் வைத்திருக்க வேண்டும்.

## பயிற்சியில் பொதுவான தவறுகள்:

- மலையாசன நிலையில் முழங்கால்களையோ முழங்கைக ளையோ மடித்து வைத்திருக்கக் கூடாது.
- முன்னால் தூக்கி வைக்கும் காலை கைகளுக்கு உள்ப்பக்க மாக, அரைவாசி முன்னால் கொண்டுவந்த நிலையிலோ வைத்து பயிற்சியைச் செய்யக் கூடாது.
- முன்னால் கொண்டு வந்த கால், கைகளை விட்டு தூரமாக விலகி இருக்கக் கூடாது.
- தலையையும், நெஞ்சையும் மேலே தூக்கியவாறு இருக்கையில் இடுப்பை மேல்நோக்கித் தூக்கி வைத்திருக்கக் கூடாது.
- நெஞ்சை கீழே கொண்டு வருகையில், முழங்கைகள் உடலை விட்டு விலகி இருக்கக் கூடாது.
- கை விரல்கள் உள்நோக்கியவாறு ஒன்றையொன்று பார்த்தபடி இருக்கக் கூடாது.
- மூட்டுக்களில் உடலின் பாரத்தை மேலதிகமானச் செலுத்தி பயிற்சியைச் செய்யக் கூடாது.
- பின்னால் நிறுத்தியிருக்கும் கால் தசைகளை தளர்ச்சியாகவோ, முழங்கால்மடித்த நிலையிலோ வைத்திருக்கக் கூடாது.

## பயிற்சியின் பயன்கள்:

நாள்தோறும் செய்யக்கூடிய பயிற்சிகளில் பூனைப் பயிற்சியை ஒரு முழுமையான உடல் முழுவதற்குமான தனிப் பயிற்சியாக செய்து பயன் அடையலாம். இந்தப் பயிற்சியில் பலதரப்பட்ட தசைகளும் ஒரே நேரத்தில் செயற்படுத்தப்படுகின்றன.

- முழு உடம்புக்குமான ஒரு பயிற்சியாக இது விளங்குவதால், உடம்பின் செயல்பாட்டுத் திறனையும் உடலின் முக்கியமான தசைகளின் வலிமையையும் அதிகரிக்க உதவுகின்றது.
- உடல் தசைகள் மற்றும் மூட்டுக்களில் இறுக்கத்தைத் தளர்த்த இப்பயிற்சி பேருதவியாக இருக்கின்றது. உடலில் ஏற்படும் பிடிப்புக்களைப் போக்க உதவுகின்றது.
- இருதயத்தின் செயல்திறனை அதிகரித்து, இரத்த ஓட்டத்தை அதிகரிக்க உதவுகின்றது.
- உடலின் உறுதியை அதிகரிப்பதுடன் தசைகளின் நிலைத் தன்மையை அதிகரிக்கின்றது.
- மூட்டுக்களின் செயற்பாட்டைச் சீர்படுத்த உதவுகின்றது.
- இப்பயிற்சியானது முக்கியமாக தோள்களை வலுப்படுத்துவது டன், தோளில் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தவிர்க்க உதவு கின்றது.
- இடுப்புப்பகுதியில் நெகிழ்வுத் தன்மை அதிகரித்து, இடுப்புப் பிடிப்பு, இடுப்பு வலி, இடுப்பு தசைகளில் இறுக்கம் போன்ற பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கின்றது.
- முதுகுப் பகுதி நன்கு இழுத்து நீட்டப்படுவதன் மூலம் முதுகுத் தசைகளை வலுப்படுத்தவும், கீழ் முதுகுப் பகுதியில் ஏற்படக் கூடிய தாக்கங்களைப் போக்கவும் உதவுகின்றது.
- நீண்ட நேரம் குனிந்து வேலை செய்வதால் மேல் முதுகுப் பகு தியில் ஏற்படக்கூடிய தாக்கத்தையும், இறுக்கத்தையும் போக்க இப்பயிற்சி உதவியாக இருக்கின்றது.
- இப்பயிற்சியைச் செய்வதை நமது பழக்கத்தில் வைத்துக் கொண்டால் வயோதிகத்தில் ஏற்படக்கூடிய மூட்டுப் பிரச்சினை- களைத் தவிர்க்கலாம்.
- நெஞ்சை விரிவடைய வைக்கவும், விலா எலும்புகளுக்கு நடு வில் இருக்கும் தசைகளின் இயக்கத்தை அதிகரிக்கவும், நுரை யீரலில் செயல் திறனை அதிகரிக்கவும் இப்பயிற்சி வழிவகை செய்கின்றது. மூச்சை ஆழப்படுத்தவும், மூச்சை எமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரவும் இப்பயிற்சி உதவுகின்றது.
- வயிற்றுத் தசைகளை நீட்டித்து உறுதிப்படுத்தும் தன்மையை இப்பயிற்சி அதிகரிக்கின்றது.
- அசீரணக் கோளாறுகள், மலச்சிக்கல் பிரச்சினைகள், வயிற்றில் கொழுப்புச் சேருதல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கிறது.
- உடலின் தோற்றத்தை மேம்படுத்த உதவுகின்றது.
- உடல் வளர்ச்சியை இப்பயிற்சி தூண்டுகின்றது. முக்கியமாக தசைகளின் வளர்ச்சியைப் பூனைப் பயிற்சி தூண்டுகின்றது.
- உயிர் சக்தியின் ஓட்டத்தை உடலில் அதிகரிப்பதுடன், உயிர்ச் சக்தியை பெருக்கவும் உதவுகின்றது.

மெய்ப்பாடப் பயிற்சிகளில் முக்கியமான பயிற்சியான பூனைப் பயிற்சியானது உடல் முழுவதற்கும் பயனைத் தரக்கூடிய பயிற்சி யாக இருந்தாலும், பொதுவாக உடற்பயிற்சிகள் பலவற்றைச் சேர்த்துச் செய்வது ஒரு வழக்கமாகும். வேறு பயிற்சிகளுடன் பூனைப் பயிற்சியையும் சேர்த்துப் பயிற்சி செய்வது உடல் நலத் தைப் பேண உதவியாக இருக்கும்.

மெய்ப் பாடங்கள் உடலின் ஒவ்வொரு மூட்டுகளுக்கும், தசைக- ளின் கூட்டமைப்புக்கும் தனித்தனியேயும் அல்லது பல தசைக் கூட்டங்களை ஒன்றாகப் பயிற்சிக்கு உள்ளாக்கும் வகையிலும் எமது கலாச்சாரத்தில் அமைக்கப்பெற்றுள்ளன. இம்மெய்ப் பாடங் கள் யோகத்துக்கு உடலைத் தயார்ப் படுத்துவதற்கு மட்டுமன்றி சிலம்பம், நாட்டியம், குத்துச்சண்டை போன்ற பல தமிழரின் கலைப் பிரிவுகளிலும் காணமுடிகின்றது. பெரும்பாலும் இம் மெய்ப் பாடங்கள் இக்காலகட்டத்தில் உயிர்ப்புடன் பொதுவாக காணப்படாவிட்டாலும் பல ஆசிரியர்களின் முயற்சியின் மூலமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சிகளை எல்லோருக்கும் பயன்படக்கூடியவாறு நம் சமூகத்தில் வெளிக்கொண்டுவர வேண் டியது எம் எல்லோரதும் முக்கிய கடமையாகும். இது போன்ற பயிற்சிகள் கற்பதற்கும், பயிற்சி செய்வதற்கும், எளிமையானதா கவும், பெரிய பொருட்செலவு இல்லாததாகவும் விளங்கக் கூடி யவை.

pathusha@thaiveedu.com

■ ■ ■




1ST
MORTGAGE SPECIALS
5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details
2ND
MORTGAGE SPECIALS
Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%
-digi Media Creations-
BonaFide
Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
TD Canada Trust
Scotiabank
STREET CAPITAL
FIRST NATIONAL
FINANCIAL LP
MCAP
ICICI Bank
MERIX
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

# மௌனம் என்பது வெற்றிக்கான வழி

- சி. நற்குணலிங்கம்

அறிவியலும் ஆன்மீகமும் உளவியலும் ஒன்று சேரும் இடம் மௌனம். வாழ்வியலுக்கான அத்திபாரம் மௌனம். வாழ்வில் மௌனம் சங்கமிக்கும் போது வாழ்வில் ஓர் ஒளிக்கீற்று தென்படும். அதுதான் வெற்றிக்கான வழி.

குடும்பங்கள் குலையாது இருப்பதற்கு மௌனம் வாழ்வியலோடு இணைய வேண்டும். உண்மைக்கு மட்டும் வாயை திற. மௌனம் சிக்கனமான மொழி. இலை சலசலக்கிறது, மலையோ திடகாத்திர மாய் உள்ளது. வலிமையுள்ளது எது?. கடலின் கரை ஓசையிடுகி றது, உட்பகுதியோ ஓசையின்றிக் கிடக்கிறது. ஆழம் மிக்கது எது?. சருகு சத்தமிடுகிறது, மலரோ மௌனம் காக்கிறது. இனிமை யானது எது?. சில்லறை சிணுங்குகிறது, நோட்டு மௌனம் சாதிக் கிறது. மதிப்பு மிக்கது எது?. வலிமை, ஆழம், இனிமை, மதிப்பு இவற்றின் மறு வடிவமே மௌனம். உலகில் மிகப் பெரிய குற்றம் நம்பிக்கைத் துரோகம். மிகச் சிறந்த தண்டனை மௌனம். மௌனம் பேச்சற்ற நிலை. உறைந்த மனம். இது மிக உயர்ந்த மனித நேயம். அறிவுடமையின் சிறந்த அடையாளம். மெய்யான மௌனம் எதையும் வாய் திறந்து சொல்லாதிருப்பதல்ல. எவரிட மும் எதுவும் சொல்ல வேண்டிய தேவையற்றிருப்பது. மௌனம் காப்பது பலவீனம் என தப்பாக கருதக்கூடாது. அது சாந்த குணம், அமைதியின் வெளிப்பாடு. 'உரையாடலில் மௌனமாய் இருப்பதும் ஒரு கலையாகும்' என ஜாஸ்லிட் கூறியுள்ளார்.

சூரியன் ஓசையின்றி உதயமாகிறான். உயிர் மௌனமாய் உலாவு கின்றது. பயிர் ஓசையின்றி துளிர்கின்றது. ஊற்றுக்கள் ஒலியின்றி உற்பத்தியாகின்றது. அதற்காக மௌனம் பேச்சற்றதன் அடை யாளம் எனக் கூறலாமா? இல்லை அது உயர்ந்த நோக்கங்களின் வெளிப்பாடு. உலகரீதியாக, மௌனம் என்பது வெற்றிக்கான வழி என்பது நிலைநிறுத்தப்பட்ட சித்தாந்தம். மௌன நிலைகள் பற்றி பல ஆராட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன. ஒரு பிரச்சினை தொடர்பான விவாதத்தில் எதிராளியை கிறுக்குப் பிடிக்கும் நிலைக்கு தள்ள வேண்டுமாயின், அதற்கு சுலபமான வழி, அவர் சொல்லால் தாக்கும்போது மற்றவர் ஒவ்வொரு முறையும் நான்கு வினாடிகள் பதிலளிக்கக் கூடாது. போலாந்து நாட்டில் நடந்த ஆய்வின்படி, ஒரு மனித மூளை நான்கு வினாடிகள் ஒருவர் மௌனமாக இருந்தால் அவரது கூற்றை நிராகரிப்பதாக பதிவு செய்து கொள்கிறது. எதிராளிக்கு எரிச்சல் கொப்பளிக்கும் என்கி றது. இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக்கொள்ள வேண்டிய குணங்களுள் மௌனம் காத்தலும் முக்கியமானதாகும். மௌனம் காத்தல் என்பது மனவலிமை மட்டுமல்ல, மன அடக்கமும்கூட. மௌனம் கசப்பானது. ஆனால், அதன் பயன் இனிப்பானது. மௌனத்தின் மூலமும் பதில் அளிக்க முடியும். அவசரப்பட்டு வார்த்தைகளை கொட்டிவிட்டேன் என்பது, நாம் மௌனமாக இருக் கும்போதுதான் புரிகிறது. சொற்கள் மிக வலிமையானவை. சரியா கப் பேசத் தெரியாதவர்கள் அவஸ்தைப்படுகிறார்கள். அவர்கள் மௌனம் காப்பதே மேல்.

சீனாவில், மௌனத்தில் நூறு வகை உண்டு. ஒவ்வொன்றும் ஒரு வகை. ஜென்பிரிவு மௌனத்தின் அபாரமான வலிமையையும், அதன் ஆழத்தையும் பலவிதமாக விளக்குகிறது. அறிவியல் ஆராய்வின்படி, ஒருவர் மௌன நிலையில் 15 நிமிடம் இருந் தாலே அதிகம்தான். காகிதம் மௌனமாய் இருக்கிறது. காகிதத் தில் சித்திரம் வரைந்தால், சித்திரம் மௌனத்தால் பேசுகிறது. பத் திரிகையும் அவ்வாறே. முட்டாள் மௌனமாய் இருக்கிறான். ஆனால் சிந்தனையாளன் மௌனத்தால் பேசுகிறான். நான்கு முட் டாள்கள் மத்தியில் அறிவாளி எதுவும் பேசா மௌனியாகின்றான். சில நேரங்களில் பேசி ஜெயிக்கலாம். பல நேரங்களில் பேசாமல் ஜெயிக்கலாம். பேச வேண்டிய இடத்தில் பேசாமல் மௌனமாய் இருப்பதும், பேசாமல் இருக்க வேண்டிய இடத்தில் பேசுவதும் பிரச்சினைதான். அளவறிந்து பேசவேண்டும். வார்த்தைகள் வெறும் ஒலிதானே என நினைத்து உங்கள் எண்ணத்துக்கு ஏற்றபடி பேசக்கூடாது. 'யாகாவாராயினும் நாகாக்க' என்கிறார் வள்ளுவர். நிறையப் பேசுபவர்கள் செயல்படுவதில் தாமதமாகக் காணப்படு வர். மௌனம் கடைப்பிடிப்பவர்கள் நிறைய செயல்படுவார்கள்.

மௌனமென்பது சிக்கலான மொழி. மௌனம் சம்மதத்தின் அடை யாளம் என்பார்கள். அதேவேளை தொடர்பே இல்லை என்பதற் கும் அதுவே அடையாளம். தாயும் தந்தையும் சண்டை போடுகி-றார்கள், பிள்ளைகள் மௌனம் காக்கிறார்கள். பிள்ளைகள் கல் நெஞ்சக்காரர்கள் என்று கூறலாமா? அவர்கள் கவலைப்படுகி-றார்கள் என்பதையே அது காட்டுகிறது. மௌனநிலையில் பல ஆழ்நிலைகள் உண்டு. பால்குட்மேன் எழுதிய 'நைன் கைண்ட்ஸ் ஒஃப் சைலன்ஸ்' என்ற நூலில் அவர், 'செழிப்பான மௌனம் ஆன்மாவுக்கான சிறந்த மேய்ச்சல் நிலம்' என்கிறார். மேலும், 'மௌனத்தை நாம் கேட்டால், அது எமது அனுபவங்களை ஆழ மாக்கும்' என்கிறார் கவிஞர் பில்லிகாலின்ஸ். மௌனத்தின் சப்தங் கள் பலருக்கு கேட்பதில்லை. அதன் அர்த்தங்களும் பலருக்குப் புரிவதில்லை. மௌனங்களுக்கு பொருள்காண முடிந்தவரே பெரி யவர் ஆகின்றார். கவனக்குறைவான வார்த்தைகள் சர்ச்சையில் முடியும், கடுமையான வார்த்தைகள் வாழ்க்கையை முறிக்கும், கசப்பான வார்த்தைகள் வெறுப்பை வளர்க்கும், ஆனால் மௌனம் எதையும் முறிக்காது. சொற்கள் தேனீக்கள் போன்றவை. அவைகளில் தேனும் உண்டு. கொடுக்கும் உண்டு. எனவே பேச் சில் அவதானம் வேண்டும். அதற்கு மௌனிக்க வேண்டிய இடத் தில் தரித்து நிற்க வேண்டும். சிலருக்கு வாயைத் திறக்க ஒரு வாய்ப்பு கிடைத்தால் போதும், அடுத்தவனுக்கு தேவையில்லாத விடயமாயினும் சும்மா அலட்டிக் கொள்வார்கள், அகலமாட்டார் கள். அவர்களிடம் பேசுவதற்கு சம்மதிக்காது ஒதுங்க வேண்டும். அல்லது மௌனமாக இருக்க வேண்டும்.

ஒருவர் நியாயமான கேள்விகளைக் கேட்கிறார் எனில் அவருக்கு நின்று நிதானித்து பதில் சொல்ல வேண்டும். ஒருவர் முட்டாள்த் தனமான கேள்விகளைக் கேட்கிறார் எனில் அங்கே பதிலுக்கு இடம் அளிக்காமல் மௌனத்துக்கு இடமளிக்க வேண்டும். இங்கு உங்கள் மௌனத்துக்கு ஆழமான பொருள் உண்டு. மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி, நீ மௌனம் என் னும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழாமல் இருக்க வேண் டும். மனிதர் தான் செய்த தவறுக்கு வக்கீலாகவும், பிறர் செய்த தவறுக்கு நீதிபதியாகவும் செயல்படுகிறார். இங்கு மௌனம் தூர விலகி உள்ளது. அலட்சியப்படுத்தினால் விலகி நில், அன்பு செய்தால் நன்றி சொல், கோபமாகப் பேசினால் குணத்தை இழப் பாய், எனவே கோபத்துக்கு மௌனத்தைக் கொடு. பிரபல சிந்த னையாளர் தோரோ, 'நான் இரவின் மௌனத்தைக் கேட்க விரும்பு கிறேன். ஏனெனில், அந்த மௌனம் நேர்மறையானது. கேட்க வேண்டிய ஒன்று' என்கிறார். பகவான் ரமண மகரிஷி மௌனமாக சும்மாவே இருக்கிறாரே என்று சிலர் கூறியபோது, 'நான் மௌன நிலையில் சும்மா இருக்கிறேன் என்பது எப்படி உங்களுக்குத்

தெரியும்? என்று கூறி நிறுத்திவிட்டார். மௌன நிலையில் இயற்கை சக்திகளைப் பயன்படுத்தி ஏராளமான அரும் செயல் களைச் செய்ய முடியும். இதை அரவிந்தரும் வலியுறுத்தியுள்ளார்.

உங்களுக்கு மதிப்பில்லை என்று நீங்கள் உணரும் இடங்களில் மௌனமாக இருக்கப் பழக வேண்டும். காலப் போக்கில் மௌனம் உங்களுக்கான மதிப்பை அங்கே ஈட்டித்தரும். நீ சொல்லப்போகும் வார்த்தை மௌனத்தைவிடச் சிறந்ததென்று திடமாகத் தெரியும்வரை வாயைத் திறப்பது நல்லதல்ல. மௌனம் சாதிக்க முடியாதவர்களின் மனம் ஒரு கற்பாறைக்குச் சமனான-தாக மாறிவிடுகிறது. பேச்சுக்களை சிக்கனம் ஆக்குகிறவர் தனது நேரத்தை மீதப்படுத்துகிறார் என்பது அர்த்தம். பேச்சுக்களை வீண் செலவு செய்பவர் தனது பொன்னான நேரத்தையும் இழ்ந்துவிடுகிறார். எனவே தேவையற்ற பேச்சை வெளிப்படுத்தி காலத்தையும் விரயமாக்காதீர்கள். பேசிப் பயனில்லை எனும்போது மௌனம் சிறந்தது. மௌனம் மொழியற்றதல்ல, எண்ணங்களற்றது. மௌனம் உள்நோக்குவது. வார்த்தைகளின் மதிப்பு தெரிந்தவர்களுடன் வாதம் செய். வார்த்தைகளால் வதம் செய்பவருடன் மௌனம் செய். வலிகள் மனதில் பதியும் போ-தெல்லாம் மௌனமாகின்றது மனசு. ஒருவரின் கோபம் குறைய இன்னொருவரின் மௌனம் அவசியமாகிறது. சொல் மட்டுமல்ல, மௌனம்கூட வாள் போன் றது. 'உன்னை ஒருவர் தாழ்த்திப் பேசும்போது மௌனயாய் இரு, உயர்த்திப் பேசும்போது கேளாத-வராய் இரு, வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய்' இது வி-வேகானந்தர் கூற்று.

உனக்கு தெரிந்ததைப்பற்றி சிறிதளவு பேசு. உனக்குத் தெரியா ததுபற்றி எதுவும் பேசாது மௌனம் காத்திடு. மௌனம் ஒருவ ருக்கு வாழ்வில் அமைதியையும், சாந்தத்தையும், மகிழ்ச்சியை யும், உயர்வையும், திருப்தியையும், உறுதியையும் அளிக்கிறது. மௌனமாய் இருப்பது முடத்தனமன்று. வாய் திறந்து பேசி மூடரா கக் காட்டிக்கொள்ளாது இருப்பதே மேலானது. மௌனம் கொள் ளாமை துர்க்குணமாகும். 'மௌனமாய் இருப்பவர் முட்டாள் என்று எண்ணிவிடாதே. பேசுபவரைவிட மௌனமாய் கேட்பவரே புத்தி சாலி' என்கிறார் புத்தர். இந்த உலகம் ஜெயிச்சிடுவேன் என்று சொன்னால் கேட்காது. ஆனால் ஜெயிச்சவர் சொன்னால் கேட்கும். எனவே ஜெயிக்கும்வரை மௌனமாய் இரு. ஜெயிச்சபின் பேசு. மௌனம் வலிமையை வெல்வதற்கான ஆயுதம். மௌனம் என்ற ஆயுதம் உங்கள் எதிரியை வீழ்த்துவதற்கு போதுமானது. வாழ்க் கையை எதிர்கொள்வதற்கு மௌனம் வேண்டும். இல்லையேல் அது வாழ்க்கையை கடினமாக்கி, வாழ்வை சிதைத்துவிடும். மௌனம் என்பது பேசாநிலை. ஒருவர் மௌனமாக இருக்க, இருக்க பலசாலியாகின்றார். இருவர் சண்டையிடும்போது ஒருவர் சத்தத்தைக் கூட்டினால் அவரிடம் விடயம் குறைந்துவிட்டது என் பது கருத்து. மௌனம்தான் உயிர். பேச்சு அதிகமாக, அதிகமாக அவரது பலம் குறைகிறது. சத்தத்தில் இருக்கும்போது அகங்கா ரம் உடையவர்களாக இருப்பார்கள். குறைவான சத்தம் வாற வீடு அமைதியான வீடு. மகிழ்ச்சியான வீடு.

'ஒருவருக்கு துரோகம் இழைக்காத உண்மை நண்பர் மௌனமே'. இது, கன்ஃப்யூஷியஸ் கூற்று. மௌனம் காத்தலுக்கான செலவு அதிகம் இல்லை. ஆனாலும், அது சாதிப்பது அதிகம். மௌ-னித்து உறவாட கிடைக்கும் சந்தர்ப்பங்களை உதறித் தள்ளி விட்டு தீராத பகையை வளர்ப்போர் அதிகம். மௌனத்தை தேவைப்படும்போதெல்லாம் கேடயமாகப் பயன்படுத்த வேண்டும். உங்களிடம் நீங்களே தனிமையில் பேசுங்கள். நீ சாதிக்கப் பிறந் தவர் என. தன்னம்பிக்கை தானே வரும், நிச்சயம் வளரும். மௌ-னமே ஞான வரம்பு. அதாவது, அடக்கநிலை. 'மனிதர் தன் பெரும்பாலான துன்பங்களை தன் பேச்சின் மூலம்தான் தேடிக் கொள்கிறார்கள்' இது ரேபியாவின் பொன்மொழி. 'புத்தகங்கள் நம்மிடம் மௌனமாகப் பேசுகிறது. அகத்தில் காட்சிகளை விரிக் கிறது' தாகூரின் பொன்மொழி. பொதுவாக மௌனம் கொள்ளும் குணம் அதிகமாக உள்ளவர்கள் வாழ்க்கையை எல்லாச் சூழ்நி லையிலும் எளிதாகக் கடந்துவிடுகின்றனர்.



natkunalingam@thaiveedu.com



# வீட்டு விலையும் விற்பனை முகவரும்

- வேலா சுப்ரமணியம்

ஒருவர் ஒரு வீட்டைக் கொள்வனவு செய்வது என்பது அவர்களது வாழ்நாளில் அவர்கள் செய்யும் பெரிய முதலீடாகவே அமைகின்றது. அதேபோன்று இருக்கும் வீட்டை விற்பது என்பதுகூட வாழ்நாளில் ஒருவர் செய்யக் கூடிய ஒரு பெரிய பணக்கொடுக்கல் வாங்கலாகவே காணப்படுகின்றது. எனவே இத்தகைய வீடு வாங்கும் அல்லது விற்கும் நடவடிக்கையை மேற்கொள்கின்ற போது ஒரு சரியான திறமையுள்ள வீடுவிற்பனை முகவரைத் தெரிந்தெடுப்பதிலேயே அவர்களது வெற்றி தங்கியிருக்கின்றது.

கடந்த சில ஆண்டுகளில் வீட்டுச் சந்தையில் ஏற்பட்ட யாருமே எதிர்பார்த்திராத விலையேற்றம், அதன் பக்கம் எல்லாரது கவனத்தையும் திசை திருப்பிவிட்டது. அந்த வகையில்தான் திரும்பிப் பார்க்கும் இடம் எல்லாம் வீடுவிற்பனை முகவர்கள். இந்த நிலை எவ்வாறு உருவானது? சுருக்கமாகக் கூறுவதானால் வீட்டுச் சந்தையில் ஏற்பட்ட அதீத வீலையேற்றமும், வீடு விற்பனை முகவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஊதியமும் பலரையும் ஈர்த்துவிட்டது என்பதுதான் உண்மை. ஆனால் வீடு விற்பனை முகவர்களாக இருப்பவர்களில் எத்தனை பேர் துறைசார் அனுபவம் கொண்டவர்கள் என்பது கேள்விக்குறி?

வீடுவிற்பனை முகவர்கள் மலிந்து கிடக்கும் நிலையில் ஒரு சரியான வீடு விற்பனை முகவரைத் தெரிவு செய்வது என்பது மிகச் சவாலான நிலையாக உள்ளது. ஒரு நண்பனைத் தெரிவு செய்வதா? அல்லது குடும்பத்தில் உள்ள ஒருவரைத் தெரிவு செய்வதா? அல்லது கூடவே வேலை செய்யும் ஒருவரைத் தெரிவு செய்வதா? அல்லது நானே படித்து எனது வீட்டை வாங்குவதா? அல்லது விற்பதா? இத்தகைய இக்கட்டான சூழ்நிலைக்கு எல்லோருமே தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒருவர் எடுக்கக்கூடிய முடிவு அவர்களுக்கு பல லட்சம் டொலர்களைக் கொடுக்கக்கூடியது என்பதும் அல்லது பல லட்சம் டொலர்களை இழப்பதற்கு வழிவகுக்கும் என்பதும் அவர்கள் தமது வீடு விற்பனை முகவர்களைத் தெரிவு செய்யும் போது உணர்ந்து கொள்வதில்லை. காலம் கடந்த பின் உணர்ந்து கொள்ளலாம். ஆனால் இழந்தது இழந்தது தான். எஞ்சி இருக்கப்போவது கவலையும் மன உளைச்சலும் தான்.

கனடாவில் தற்போது இருக்கும் வீட்டுச் சந்தை நிலையை வைத்துக்கொண்டு யாரும் எந்த முடிவும் எடுத்துவிட முடியாது. அதாவது இக்காலப்பகுதியில் எப்படியான முகவர்? என்ன தரத்தில் உள்ள வீட்டைப் போட்டாலும் அதை கேட்டவிலையைவிட அதிக விலைக்கு விற்றிருக்க முடியும். அதுபோல உரிய பெறுமதிக்கு மேலாகவே ஒரு வீட்டை வாங்கி இருக்க முடியும். தற்போது இருப்பது ஒரு போலியான சந்தை நிலை. அது எப்போது மாறுபட்டு ஒரு ஆரோக்கியமான வீட்டுச் சந்தை நிலை உருவாகும் எனபது கேள்வியாகவே இருக்கின்றது.

அத்தகைய ஓர் ஆரோக்கியமான சந்தை நிலையில் ஒருவர் உச்ச பலனை அடைவதற்கு அவர்கள் ஆற அமர யோசித்து ஒரு சரியான வீடு விற்பனை முகவரை தெரிவு செய்வதிலேயெ அவர்களது வெற்றி தங்கி இருக்கின்றது. அந்த வகையில் பலருக்கும் பயன்பெறும் பொருட்டு பல விதமான உத்திகளை அல்லது வரைமுறைகளை இக்கட்டுரையின் வாயிலாக அடையாளப்படுத்த விளைகிறேன். இதில் நான் இத்துறையில் பெற்ற அனுபவங்களும் நேரிற்கண்ட உண்மைகளும் கலந்து இருக்கும்.

## நம்பிக்கை, நேர்மை:

நம்பிக்கை, நேர்மை உள்ள முகவர்களைக் கண்டு பிடிக்க வேண்டியது முதற்படி. ஒரு வீடுவிற்பனை முகவர் மிக நம்பிக்கையான-வராக இருக்க வேண்டியது மிக அவசியம். பல லட்சம் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை செய்ய முற்படுகின்றபோது, முகவர் நம்பிக்கைக்குரியவராக இல்லாது விட்டால் ஒருவர் முடிவு-களை எடுப்பதில் பல இடர்ப்பாடுகளைச் சந்திக்க வேண்டிவரும். மாறாக நம்பிக்கை உள்ள முகவரைத் தேர்ந்து எடுத்துவிட்டால் எந்த விதமான அழுத்தங்களும் இன்றி மிக இலகுவாக வீட்டை விற்கவோ அல்லது வாங்கவோ ஏதுவாக இருக்கும். நம்பிக்கைக் குரிய முகவர் ஒருவர் தனது வாடிக்கையாளர்களது பொறுப்புக்களை தானே எடுத்துக் கொண்டு செயற்படுவதால் வாடிக்கையா-ளரின் விற்கும் அல்லது வாங்கும் செயற்பாடு முழுவதும் மகிழ்ச்சிகரமாக அமைந்துவிடும் வாய்ப்பு உள்ளது.

நேர்மையுள்ள முகவர்களை தேர்ந்து எடுப்பதும் மிக அவசியமானது. தனது நலனுக்காகவோ, அல்லது தனது ஊதியத்திற்காகவோ நேர்மையற்ற பல முகவர்கள் பலவித முறையற்ற செயல்களில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அனுபவம் இல்லாத வாடிக்கையாளர்களுக்கு உண்மைத்தகவல்களை மறைத்தல் அல்லது ஏமாற்றுதல் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது. உதாரணமாக ஒரு வீட்டைக் கொள்வனவு செய்யும்போது அதே இடத்தில் அதே மாதிரியான வீடு அண்மைக்காலத்தில் என்னவிலைக்கு விற்கப்பட்டிருக்கின்றது என்பதை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்ந்து அதன் அடிப்படையில் வாங்கப்போகும் வீட்டின் விலையை தீர்மானிக்க உதவி செய்ய வேண்டியது மிக அவசியம். ஆனால் கொள்வனவு முடிந்தால் போதும் என் ஊதியம் வந்து விடும் என்று, பணம் கொடுத்து வாங்கப் போகும் கொள்வனவாளர்களின் நலனில் அக்கறை கொள்ளாத முகவர்கள் நாட்டில் அதிகம் இருக்கிறார்கள்.

கொள்வனவாளர்களின் சக்திக்கு மேலான வீடுகளின் மீது ஆசை காட்டி அவர்களை தங்கள் வலையில் வீழத்தி அவர்களுக்கு முதலாவது அடமானக் கடனுக்கு மேலாக இரண்டாம், மூன்றாம் அடமானக் கடன்களை எடுத்துக் கொடுத்து இறுதியில் அவர்களை நடுத்தெருவில் கொண்டுவந்து விடுவதிலும், தங்கள் வங்கிக் கணக்குகளை நிரப்புவதிலும் பல முகவர்கள் குறியாக இருக்கிறார்கள். நடுத்தெருவுக்கு வந்த பின்னர் முகவர்களைத் திட்டித் தீர்ப்பதில் பலனில்லை. எனவே முன் எச்சரிக்கையாக நம்பிக்கை, நாணயம், நேர்மையுள்ள உங்களுக்கு இசைவாக ஒத்துப்போகக் கூடிய முகவர்களைத் தேர்ந்தெடுத்து வாழ்வில் வளம்பெற முயற்சி செய்யுங்கள்.



## துறைசார் அனுபவம்:

பதிவுசெய்யப்பட்ட வீடு விற்பனை முகவர்கள் எல்லாம் அத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் அல்ல. வீடு பற்றிய எந்த வித அடிப்படை அறிவோ, அல்லது அனுபவமோ இல்லாத பல முகவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு சிறந்த சேவையை தமது வாடிக்கையாளருக்கு வழங்குவது மிகச் சிரமம். ஒரு துறைசார் அனுபவம் உள்ள முகவர் ஒரு வீட்டைப் பார்த்த மாத்திரத்தே அதனது பெறுமதியைக் கணித்து உடன் முடிவு எடுக்கச் சிபார்சு செய்யலாம். இதனால் நல்ல சந்தர்ப்பம் தவறிப்போகாது அது மட்டுமல்ல பல லட்சம் டொலர்கள் இலாபம் கூட வரலாம், ஏமாற்றங்களைத் தவிர்க்கலாம்

முகவர்கள் வீடு வாங்குபவர்களுக்கு வீடுகளைக் காட்டும் போது கதவுகளைத் திறந்து விட்டு தாம் தொலைபேசியில் ஒன்றித்துப் போய் இருப்பதையும் கொள்வனவாளர்கள் தாங்களாகப் பார்த்து விட்டு வெளியேவர அடுத்த வீட்டுக்கு அவர்களை அழைத்துப் போகும் பலரை நான் நேரில் பார்த்திருக்கிறேன். வீட்டைப் பார்ப்பதும் முடிவு எடுப்பதும் வாங்குபவர்களின் கடமை என்று தாம் ஈடுபாடின்றி தாமரை இலையில் உள்ள தண்ணீர்போல இருக்கும் முகவர்களினால் என்ன பலன் என்பதை நீங்களே யோசித்து முடிவு எடுக்க வேண்டும்.

## வசிக்கும் அல்லது வசிக்கப்போகும் இடத்தைச் சார்ந்த முகவர்களைத் தேர்ந்தெடுத்தல்:

என்ன தான் தொழில்நுட்பம் வளர்ந்தாலும், இருந்த இடத்தில் இருந்தபடியே பல விடயங்களை ஆராய்ந்து அறியக் கூடிய நிலை இருந்தாலும் உரிய இடத்தைச் சேர்ந்த அல்லது உரிய இடத்தில் பரீட்சயமான முகவர்களிடம் இருந்து அதிக பலனைப் பெறும் வாய்ப்பு உள்ளது. உதாரணமாக ஒரு பரீட்சயமற்ற புதிய இடத்தில் ஒரு வீட்டைக் கொள்வனவு செய்ய முற்படும் போது விலை பற்றி ஒப்பிட்டு அறியவோ, சுற்றாடலில் உள்ள வசதி பற்றி அறியவோ, புதிய தொழில்நுட்பங்கள் உதவி செய்யும். ஆனால் அங்கு இருக்கக்கூடிய சமூக கலாச்சார மற்றும் உள்ளக நிலைகளை உறுதி செய்ய அந்தப்பிரதேசத்தில் இருப்பவரை நம்புவதே மேலானது. அதுபோல ஒரு புதிய இடத்திற்கு வந்து வீடுகளை விற்க முற்படும் முகவர்கள் பெறுமதிக்கும் குறைந்த விலைக்கு வீடுகளைச் சந்தைப்படுத்தியதையும் அதே வேளை பெறுமதிக்கு மேலான விலையைக் குறித்து சந்தைப்படுத்த முயன்று அல்லற் பட்டதையும் எனது அனுபவத்தில் பலதடவை பார்த்திருக்கிறேன். அத்தகைய சூழ்நிலையை நான் எனது வாடிக்கையாளருக்கு சாதகமாகப் பயன்படுத்திய சந்தர்ப்பங்களும் உண்டு.

எனவே அப்பிரதேசத்தைச் சேர்ந்த முகவர்களினூடாக அதிக பலனை அடைய வாய்ப்பு உள்ளது என்பது உறுதியான விடயம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## இலகுவான தொடர்பாடல் (Two way Communication is the Key):

ஒரு வீட்டை விற்பதற்கோ அல்லது வாங்குவதற்கோ சம்பந்தப்பட்ட முகவருடன் தொடர்பு கொள்வது மிக இலகுவானதாக இருக்க வேண்டும். இத்தகைய செயற்பாடுகளின் போது இரட்டை வழி கருத்துப் பரிமாறல் உடனுக்குடன் செய்யவேண்டிய நிலை இருக்க வேண்டும். எல்லா முகவர்களிடமும் பொதுவாகக் கைத்தொலைபேசி இருக்கும். ஆனால் அழைத்தால் அதில் 10% மானோருக்கு குறைவானவர்களே பதில் அளிக்கக்கூடிய நிலையில் இருப்பார்கள். அரைவாசிக்கு மேற்பட்ட அழைப்புகளுக்கு பதிவு செய்யப்பட்ட செய்திகளே அவர்களது Voice Mailல் இருந்து கிடைக்கும். சிலரது Voice Mail செய்திவிடக்கூடிய அளவுக்குத் தயார் நிலையில் இருக்காது. அல்லது Voice Mail நிறைந்து இருக்கும்.

மூன்று வருடங்களுக்கு முன் ஒரு கைத்தொலைபேசி கூட இல்லாத ஒரு விற்பனை முகவருக்கு ஒரு வீட்டை விற்றுப் பின்னர் அவருடன் தொடர்புகொள்ள நான் பட்ட அவஸ்தை இன்னும் கசப்பான அனுபமாக எனது நினைவில் இருக்கிறது.

வீடு விற்கும்போது அல்லது வாங்கும்போது அச்செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கையில் பலவித கேள்விகள் அடிக்கடி வரச் சந்தர்ப்பம் இருக்கிறது. அதற்கான பதில் உடன் கிடைக்கா விட்டால் அத்தகைய பதில்களில் பலன் இல்லாமல் இருக்கும் அல்லது பல லட்சம் நட்டம் அடைய வாய்ப்பு இருக்கும்.

நான் அனுபவத்தில் சந்தித்த பல முகவர்களுடன் தொடர்புகொள்வதில் பல இடர்களைச் சந்தித்திருக்கிறேன். தொடர்புக்கு ஒன்றில் Text செய்தி மட்டும் அல்லது Email மட்டும்தான். பதிலுக்கு பல மணிநேரம் அல்லது சில நாட்கள் பொறுத்திருக்க வேண்டி இருக்கும். இத்தகைய சூழ்நிலையில், எப்படி தரமான சேவையை வாடிக்கையாளருக்குக் கொடுக்க முடியும்.

எனவே ஒரு முகவரைத் தெரிவு செய்யும் போது உடனுக்குடன் இரட்டைவழி தொடர்பாடல் ஏற்படுத்தும் நிலையில் முகவர் இருக்கிறாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியது மிக அவசியம்.

(தொடரும்...)

(தொடரும்...)



velasubramaniam@thaiveedu.com

# கருநீலக் கல்

- குமார் புனிதவேல்

அன்று காலை கோட்டை புகையிரத நிலையத்தில் யாழ்தேவி புகைவண்டியில் நெருக்கடி மிகக் குறைவாக இருந்தது. காரணம், புதன்கிழமை. வாரநடுவில் பயணம் செய்பவர்கள் மிகவும் குறைவு அல்லவா? ஆனால், சுந்தரமோ பழக்கதோசம் காரணமாக புகைவண்டி நிலையத்திற்கு வரும்போதே ஒடிச்சென்று பாய்ந்து ஏறி யன்னல் அருகில் ஓர் இடமும் பிடித்துவிட்டான். ஆனால், புகை வண்டி பாதிகூட நிறையவில்லை, பல ஆசனங்கள் வெறுமையாக காட்சி தந்தன.

சுந்தரத்தின் எதிர் இருக்கையில் தாய், பிள்ளை, பாட்டியார் என மூவர் அமர்ந்திருந்தனர். நடுவில் அமர்ந்திருந்த ஆறு அல்லது ஏழு வயதுப் பையன், சுந்தரம் உட்பட அனைவரது கவனத்தை யும் கவர்ந்த வண்ணமிருந்தான். பாவம் அவனுக்குப் பொழுது போவது பெரும் சிரமமாய் இருந்தது. ஏதாவது சிறுசிறு குறும்பு செய்து விட்டு தாயிடம் திட்டு வாங்கிய வண்ணமே இருந்தான். சிறிது நேரம் சுந்தரத்திற்கும் பாட்டியாருக்கும் இடையில் நின்று யன்னல் வழியாக வெளியே பார்த்தபடி நின்றான்.

அதனைத் தொடர்ந்து தாய்க்கும் பாட்டியாருக்கு இடையில் அமர்ந்து கையில் எதையே உருட்டிக் கொண்டிருந்தான். அருகில் அமர்ந்திருந்த பாட்டியார், ‘இது தாத்தாவுடைய கல் அல்லவா? எங்கு எடுத்தாய்? தொலைத்தாய் என்றால் தாத்தாவுக்குக் கோபம் வரும்’ என்றார். அவன் தாயார், ‘டேய் தம்பி அதை இங்கே கொடு’ என்று கூறியபடி அதனை அவனிடமிருந்து எடுக்க முயன் றார். அவன் நழுவி புகைவண்டியில் உள்ள நடைபாதையால் அடுத்த பகுதிக்கு ஓடினான். தாயோ விடாமல் அவனைக் கலைத்து அந்தக் கல்லைப் பிடுங்க முயற்சித்தவேளை அதை வாய்க்குள் போட்டுவிட்டான்.

தாய் அவனை இழுத்துக்கொண்டு இருக்கைக்கு வந்து அதை வெளியே எடுக்கச் சொன்னார். அவனோ சிரித்துக்கொண்டு எல்லா ருடைய கவனத்தையும் தன்பக்கம் ஈர்ப்பதில் திருப்தியாய் இருந் தான். தாயாரும் பாட்டியாருமாக தங்கள் விரல்களை விட்டு வெளியே எடுக்க முயற்சிக்கையில் அவன் வாயைத் திறந்து காட்டி தான் விழுங்கி விட்டதாகச் சொன்னான். உடனே சுற்றி இருந்தவர்கள் எல்லாருமே பையன் மீது கவனத்தைத் திருப்பினர். ஒருவர் ‘அடுத்த நிலையத்தில் இறக்கி உடனே வைத்தியசா லைக்கு கொண்டு செல்லுங்கள்’ என்றார். அதற்கு அவன் தாய் நாங்கள் அடுத்து வருகிற பொல்காவலை புகையிரத நிலையத் தில்தான் இறங்க வேண்டும்’ என்றார். இன்னொருவர் ‘அது சின் னக்கல்லுதானே நாளை காலை மலத்துடன் வந்து விடும்’ என்றார். இதற்கிடையில் மூன்றாமவர் ‘நாளை வரை இருக்க வேண்டாம், சென்றவுடன் வயிற்றோட்டத்திற்கு ஏதாவது வாங்கிக் கொடுங்கள்’ என்றார். இன்னும் சிலர் கதிரைகளுக்கு கீழ் விழுந்திருக்கிறதா எனக் குனிந்து பார்த்தார்கள். இவ்வளவிற்கும் அந்தப் பையனோ எல்லார் கவனமும் தன் பக்கம் திரும்பியதில் பரமதிருப்தியுடன் சிரித்துக் கொண்டிருந்தான். தாய் சிடுசிடுப்புடன் ‘வா! இப்போ வீட்டை போனவுடன் அப்பாவிடம் வாங்கும் அடியுடன் கல் வெளியே வந்துவிடும்’ என்றார்.

புகைவண்டி பொல்காவலை புகையிரதநிலையத்திற்கு வந்து சேரவே அந்த மூவரும் இறங்குவதற்கு தயாரானார்கள். புகையிர தம் நின்றவுடன் அனைவரும் அமளிதுமளிப்பட்டு இறங்கத் தயா ராகையில் அந்தப்பையன் அவசர அவசரமாக சுந்தரத்தின் கையில் எதனையோ வைத்துப் பொத்தினான். தாய் ‘அங்கே என்ன செய்கிறாய் விரைவாக வா’ என்றவுடன், சுந்தரத்தைப் பார்த்து ஒரு நமுட்டுச் சிரிப்பை உதிர்த்து விட்டு ‘டடா’ காட்டிய படி விரைந்து வெளியேறினான்,

புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்பட்டவுடன் சுந்தரம், மற்ற வர்களுக்கு தெரியாமல் அந்தப் பையன் கையில் வைத்த பொருளை அவதானித்தான். அது ஒரு கருநீலக்கல். உள்ளங்கை யில் வசதியாக ஒளிக்கலாம், என்ன கல்லாக இருக்கும் என்று எண்ணியபடி காற்சட்டைப்பைக்குள் பத்திரமாக வைத்துக் கொண் டான். அவன் இறங்க வேண்டிய குருநாகல் புகையிரத நிலையம் விரைவாகவே வந்தது.

புகையிரத நிலையத்திலிருந்து பேருந்தில் வீடு செல்லும் வழி யில் பல தடவைகள் அந்தக் கருநீலக் கல்லை தடவிப் பார்த்துக் கொண்டான் சுந்தரம். வீட்டை அடைந்தவுடன், முதல்வேலையாக தான் வணங்கும் சுவாமிப் படத்திற்குப் பின்னால், யார் கண்ணி லும் படாத வண்ணம் அதனை வைத்த பின்பு தான் சற்று ஆறுத லாய் இருந்தது.

அடுத்த இரு நாளும் வேலைக்கு புறப்படும் முன்னும் வேலை யால் திரும்பியவுடனும் அந்த கருநீலக் கல்லை எடுத்து தடவிக் கொடுத்து, மீண்டும் எடுத்த இடத்தில் பத்திரமாக வைத்து விடு வான் சுந்தரம்.

அன்று சனிக்கிழமை, ஒய்வுநாள் என்பதனால் காலையிலேயே வெளிக்கிட்டு அந்த கருநீலக் கல்லையும் எடுத்துக் கொண்டு குருநாகல் நகரத்து பிரதான வீதிக்கு சென்றான் சுந்தரம். அந்த வீதியில் பழைய பொருட்கள் வாங்கி விற்கும் கடை ஒன்று இருந் தது. அந்தக் கடையில் அப்படியான கல் ஒன்று எவ்வளவு பெறும் என்று கேட்டறிவது சுந்தரத்தின் எண்ணம்.

கடையில் அதிகம் சனம் இருக்கவில்லை. அங்கு வியாபாரத்திற்கு நின்ற பையனிடம் அந்தக் கருநீலக் கல்லைக்காட்டி, அதன் பெறு மதி எவ்வளவு இருக்கும் என்று கேட்டான் சுந்தரம். பையனோ திருப்பிக் கேட்டான், ‘சார், இதை விற்கப் போகிறீர்களா?’ என்று அதற்கு சுந்தரம் ‘எனக்குத்தெரியாது தம்பி. முதலில் அதன் பெறு மதியை தெரிந்தால்தானே என்ன செய்வது எனத் தீர்மானிக்க லாம்’ என்று பதில் சொன்னான் சுந்தரம். அந்தப் பையனோ பொறுமை இழந்தவனாக ‘ஐயா! ஒரு பொருளின் விலை அதன் தேவையைப் பொறுத்தே! நீங்களும் உங்கள் நீலக்கல்லும், தயவு செய்து விடியவேளை வியாபாரத்தை குழப்பாதீர்கள்’ என்றான்.

இவர்கள் இருவருக்குமிடையில் அந்த நீலக்கல்லைப் பற்றி நடந்த உரையாடலை கவனித்துக் கொண்டிருந்த ஒரு முதியவர், ‘தம்பி அந்தக் கல்லை காட்டுவீரா? அதை நான் பார்க்க விருப்ப மாயிருக்கிறது’ என்றார். அதற்கு சுந்தரம் ‘ஐயா வாருங்கள் கடைக்கு வெளியே காட்டுகிறேன்’ என்றான்.

வெளியில் வந்ததும் அந்த நீலக்கல்லை பெற்று கவனமாகப் பார்த்தார் அந்த முதியவர், ‘தம்பி இந்த கருநீலக்கல் விலை



ஏதும் சொல்ல முடியாத முக்கியம் வாய்ந்தது. கவனமாக வீட்டில் கொண்டு போய் வையும்' என்றார்.

அவருடைய கூற்று சுந்தரத்தின் ஆர்வத்தைத் தூண்டி விடவே 'ஐயா, அப்படி இந்தக்கல் என்ன சிறப்பு உடையது என அறிய ஆவலாயுள்ளேன். தயவு செய்து கூறவும்' என்றான்.

முதியவர், 'தம்பி, நீர் தம்புள்ள குகைக்கு சென்றுள்ளீரா?' என்று கேட்டார். சுந்தரமும் சுருக்கமாக 'ஆம்' என்று பதில் சொன்னான்.

'அந்த குகை வலகம்பாகு மன்னனால் கட்டப்பட்ட ஐந்து குகைத் தொடர்களால் ஆனது. ஆனால் அதை விட அந்த குகைகளுக்கு வலதுபுறமாக ஒற்றையடிப் பாதையில் சென்றால் இன்னுமொரு குகை உண்டு. இப்போதெல்லாம் ஒருவருமே அந்தக் குகைக்குச் செல்லுவதில்லை என்றபடியால் அந்த ஒற்றையடிப்பாதையில் புதர் வளர்ந்துள்ளது. அது ஒரு ஆபத்து நிறைந்த பாதை. அந்த குகையில் ஒரு பெரிய தட்சணாமூர்த்தியின் விக்கிரகம் உள்ளது. அந்த பெரும் விக்கிரகத்தின் நெற்றிக்கண்ணின் மணிதான் இந்தக் கல். இதற்கு விலை மதிக்க முடியாது. கவனமாக வைத்திரும்' என்று கூறி முடித்தார்.

வீட்டிற்குத் திரும்பிய சுந்தரத்திற்கு இருப்புக் கொள்ளவில்லை. கொஞ்ச நேரத்திற்கு ஒருமுறை அந்த கருநீலக்கல்லை எடுத்து பார்த்தவண்ணமிருந்தான்.

அடுத்தநாள் காலையிலேயே பேருந்துவில் தம்புள்ளைக்குச் சென்று மலையில் ஏறினான். தம்புள்ளை குகைகளில் பல சுற்று லாப்பயணிகளும் சில புத்ததுறவிகளும் இருந்தார்கள். சுந்தரம் அந்த ஐந்து குகைகள் உடைய புத்தகோவிலை பார்த்துவிட்டு வெளியே வருகையில் அந்த முதியவர் கூறியது போல் ஏதாவது நடைபாதை உள்ளதா என அவதானித்தான். அங்கு ஒரே ஒரு இடத்தில்தான் ஒற்றையடிப்பாதை போல் தோன்றியது. ஆனால் அதில் எவராவது செல்வதாக தெரியவில்லை. ஒரே பற்றைக் காடாயிருந்தது.

போட்டிருந்த செருப்பை கையில் எடுத்துக் கொண்டு அந்த நடை-பாதையில் மிக்க அவதானமாக ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து சுந்தரம் நடந்தான். இருபது நிமிடங்களில் சற்று வெளி யான இடத்தில் ஒரு குகை தெரிந்தது. ஒரு ஆள் நடமாட்டமும் இல்லை. கையில் இருந்த செருப்பை வாசலில் போட்டுவிட்டு உள்ளே சென்றான் சுந்தரம்.

உள்ளே ஒரு பெரிய சிவன் சிலை தட்சணாமூர்த்திக் கோலத்தில் நீலநிறத்தில் காட்சி தந்தார். அந்த சொரூபத்தில் நெற்றிக்கண் உள்ள இடத்தில் ஒரு சிறு குழி விழுந்திருப்பதை அவதானித்தான் சுந்தரம். சுற்றிப் பார்த்தவேளை அந்தக் குகைக்கு யாரும் வருவதாய் தெரியவில்லை. மெதுவாக அந்த சிலை இருந்த பீடத்தில் ஏறினான் சுந்தரம். அந்த சிலையோ குறைந்தது ஏழு அடி உயரமிருக்கும். மெதுவாக எட்டி அந்தக் கருநீலக் கல்லை நெற்றிக் கண்ணில் இருந்த குழியில் வைத்துப் பார்த்தான். கல் அந்தக்குழிக்குச் சரியாக பொருந்துவதாக இருந்தது.

கல்லை இருந்த இடத்தில் அப்படியே இருக்கவிட்டு கிழே குதித்து தன் கையில் உள்ள கைத்தொலைபேசியால் ஒரு படம் எடுத்தான். அதனைத் தொடர்ந்து மீண்டும் ஏறி கல்லை திருப்பி எடுக்க முனைந்தான் சுந்தரம். அது கழருவதாய் இல்லை. விரலால் தட்டிப்பார்த்தான். ஆனால் கருநீலக்கல் அந்த இடத்தில் ஒட்டிக் கொண்டது. இவன் அவசரப்பட்டு கல்லை எடுக்க முயற் சிக்கையில் ஒருவரும் வராத அந்தக் குகைக்கு யாரோ வரும் சப்தம் கேட்கவே உடனே கீழே குதித்து, அவர்களைப்போல் தானும் ஒரு சுற்றுலாப் பயணி போல் படம் எடுத்தான்.

வந்தவர்கள் ஆறுதலாக அங்கே அமர்ந்து சாப்பாட்டுப் பொதி-களைத்திறந்து சாப்பிடத் தொடங்கினார்கள். எவ்வளவு நேரம் சுந்தரம் தனியாக நிற்பது பேசாமல் வீடு திரும்பி விட்டான்.

அடுத்தவாரம் கையில் அந்த கல்லைப் பிடுங்கி எடுக்க ஒரு திருப்புளியையும் எடுத்துக் கொண்டு தம்புள்ளைக் குகைக்குச் சென்றான். ஆழ்மனதில் அச்சம் இருந்தாலும் அந்தக் கல்லை திருப்பி எடுக்க வேண்டும் என முயன்றான். முடியவில்லை. அங்கு யாரோ வரும் சத்தம் கேட்கவே உடனே குதித்திறங்கி ஒன்றும் நடக்காதது போல் வெறுங்கையோடு வீடு திரும்பினான் சுந்தரம்.

அடுத்தநாள் கடை வீதியில் அந்த முதியவர் அகப்படுவாரா என்று பார்க்கச் சென்றான். அவனது அதிர்ஷ்டம் பிரதானவீதியை அடையும் முதலே அந்த முதியவர் முன்னோக்கி வந்து கொண்டி ருந்தார்.

சுந்தரம் அவரிடம் தன்னை அறிமுகம் செய்ய முற்பட்ட வேளை அவராகவே 'தம்பி நீர்தானே சில தினங்களுக்கு முன் கருநீல கல்லை கொண்டு வந்தவர்? அதைப்பத்திரமாக வைத்திருக்கி றீரா? தவற விட்டு விடாதையும். வீட்டுக்கு வந்த சிறீதேவியை அவவுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையுடன் வைத்திருக்க வேண்டும்' என்றார்.

உடனே சுந்தரம் தனக்கு ஏற்பட்ட சோக அனுபவத்தைச் சொல்லி முடிக்கமுன்..., 'தம்பி ஒரு பொருள் சேர வேண்டிய இடத்தில் சேர்ந்து விட்டால் அது அப்படியே இருக்கும். அந்தக் கரு நீலக்கல்லைச் சேர வேண்டிய இடத்தில் சேர்த்த புண்ணியம் உமக்கும் உமது வழித்தோன்றல்களுக்கும் நன்மை தரும். நீர் அதிர்ஷ்டக்காரன், ஆயிரம் யாகங்கள் செய்து பெறும் புண்ணி யத்திலும் அதிகம் பெற்றுள்ளீர் வாழ்க வளமுடன்' என்று கூறி விடைபெற்றார்.

நீங்கள் யாராவது தம்புள்ள சென்றால்
கட்டாயம் கண்டதைச் சொல்லுங்கள்.
எல்லாம் எப்போ முடிந்த காரியம்?
ஒரு பொல் லாப்புமில்லை.

kumar.punithavel@thaiveedu.com




BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

# மனிதப்பருவத்தின் முளைகள்

- மாத்தளை சோமு

குழந்தைகளை விவசாயமொழியில் சொல்வதானால் அவர்கள் மனிதப்பருவத்தின் நாற்றுக்கள். நெல் நாற்றுகளைக் காப்பாற்றி, வளர்த்து, வயலில் நடுகிற அனுபவமும் அறிவும் விவசாயிகளுக்கு உரியது. குழந்தைகளை மனித நாற்றுக்களாய் மதித்துக் காப்பாற்றி வளர்க்கிற பொறுப்பு பெற்றோர்களுக்கே உரியது. ஒரு மனிதரின் பருவங்களில் முதல் ஏழு வயது அடங்கிய பருவம் மிக முக்கியமானது. ஆகவே, ஏழு வயது வரைதான் குழந்தை வயது எனக் கணிக்கப்படுகின்றது. ஓர் அறிஞர் 'உன் குழந்தையை ஏழு வருடத்திற்கு என்னிடம் கொடு. அதன் பிறகு நீ என்ன விரும்பினாயோ அதனை அந்தக் குழந்தை மூலம் செய்யலாம்' என்கிறார். இதனையே தமிழில் விவேகமாக 'ஏழு வயது வரை இளப்பம் கொடுக்காதே' என்றும் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா' என்ற பழமொழியிலும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த ஏழு வருடங்களில் ஒரு குழந்தை கற்கிற, அறிகிற, புரிகிற மொழி, பழக்கவழக்கம், பண்பாடு என்பன ஆழப்பதிந்து இறுதி வரை நிற்கும். எனவே இந்த வயதிற்குள் தாய்மொழி, பண்பாடு, பழக்கவழக்கம் என்பனவற்றை குழந்தை தெரிந்து கொள்ள வேண்டும். இதில் கோட்டை விட்டால் மனிதக்கோட்டையே சரிந்து போகும். இளமையில் கல்வி சிலை எழுத்துக்கு ஒப்பாகும். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் தொடரும். இவையெல்லாம் பழமொழிகள் மட்டுமன்று, தமிழ் முன்னோர்களின் குழந்தைகள் பற்றிய தெளிவான அறிவியல் பார்வையாகும். ஆகவே தான் குழந்தை தொட்டிலில் பழகிற பழக்கத்தில் கவனமாய் இருந்தார்கள் அவர்கள்.

தொட்டிலிலிருந்து குழந்தை வெளியே வந்த பிறகுதான் உலகமே அதற்குத் தெரிகிறது. அப்போது பார்க்கிற எல்லோரோடும் நேசமாக இருக்கிறது அது. குழந்தைப்பருவம் என்பது மனித வாழ்க்கையின் தொடக்கமாகும். ஆகவே நமது முன்னோர்கள் அவர்களின் உலகத்தைச் சிதைக்கவில்லை. ஆனால் இன்று குழந்தைகள் உலகம் முற்றும் முழுதாகப் பெற்றவர்களின் விருப்பமாக மாற்றப்படுகின்றது. ஓடி விளையாட வேண்டிய வயதிலேயே கல்வி என்ற பெயரால், சிறகடிக்க முடியாதவாறு ஒரு அறைக்குள் சிறைப்படுத்தப்படுகிறது. ஓடி விளையாடி, விழுந்து, எழுந்து, திடமாக இருக்க வேண்டிய குழந்தை பெற்றோர் விரிக்கும் கல்வி வலைக்குள் சிக்கி முடமாகிறது.

மேலைநாடுகளில் ஆறு, ஏழு வயதில்தான் பள்ளிக்கூட அனுமதி. அதற்கு முன் விளையாட்டுப் பள்ளியே (Play School). அங்கு குழந்தைகளுக்கு விளையாடிக்கொண்டே படிக்கிற படிப்பு. ஆனால் இன்று தமிழர்கள் மத்தியில் தம் குழந்தை, பக்கத்து வீட்டுக் குழந்தையை விட அதிக புள்ளிகள் எடுக்க வேண்டும் என்பதற்காகப் படிக்க வைக்கப்படுகிறது. மேலும் ஆங்கிலம் பேச வேண்டும் என்பதற்காகத் தமிழ் படிக்காமல் ஆங்கிலம் படிக்க வைக்கப்படுகிறார்கள். குழந்தை 'அம்மா' என அழைக்காமல் 'மம்மி' என அழைக்கிறது. அப்படி அழைப்பதை சில பெற்றோரும் விரும்புவதோடு 'பிறவிப்பயன் அடைந்ததாக' எண்ணுகின்றனர். சின்ன வயதிலேயே தாய்மொழி, பண்பாடு, மரபு என்பனவற்றை கற்றுக் கொடுத்து விட்டால் குழந்தை உங்கள் குழந்தையாக இருக்கும். அதை விடுத்து அந்நியமொழி, அந்நியப் பண்பாட்டைக் குழந்தை கற்குமானால் குழந்தை உங்களுக்கு மட்டுமல்ல, அது பிறந்த நாட்டிற்கும் அதன் தாய்மொழிக்கும் அந்நியமாகிவிடும். பிறகு பெற்றோர்களும் அந்நியமாகிப் போவார்கள்.

குழந்தைகள் அந்நியமாகாது தடுக்க தாய்மொழியால் மட்டுமே முடியும். பத்து மாதம் தாயின் கருவறையில் இருந்த போது அறிந்த மொழி. ஆகவே உங்கள் குழந்தைகள் தாய்மொழிக் கற்றலைத் தடுக்காதீர்கள்.

ஒரு குழந்தை தாய்மொழி கற்காதது மிகப்பெரிய தவறாகும். குழந்தைகள் தாய்மொழி படிக்க மாட்டேன் என்று சொல்வதில்லை. மாறாக, குழந்தைகள் எந்த மொழி கற்க வேண்டும் என்பதைத் தாய், தந்தையர் தீர்மானிக்கின்றனர். அவர்களின் விருப்பமே குழந்தையின் விருப்பமாகத் திணிக்கப்படுகிறது. இது இனச் சீரழிவுக்கு வழியமைக்கும். ஆய்வாளர்களின் கருத்தின்படி ஒரு குழந்தை ஒரே நேரத்தில் ஏழுமொழிகளைக் கற்க முடியும். பல மொழிகள் கற்பது வாழ்க்கைக்கு பலம் சேர்ப்பது. குழந்தை தாய்மொழியும் படித்து மற்ற மொழிகளும் படிக்கட்டும். அது அறிவுபூர்வமான, சுதந்திரத்துடன் வாழ வேண்டும்.

குழந்தையை கண்டிப்பதை அறிவியல் தன்மையோடு செய்ய வேண்டும். குழந்தைகளை அணைக்க வேண்டியதற்கு அணைத்து கண்டிக்க வேண்டியதற்கு கண்டிக்க வேண்டும். ஆனால் பலர் குழந்தைகளுக்கு அளவு கடந்து செல்லம் கொடுத்து வளர்க்கிறார்கள். கொடுக்கிற செல்லம், கூடுகிற செல்வத்தைக் கெடுக்கும். சிறுவயதில் காட்டுகிற அதீதசெல்லம் வளர்ந்த பிறகு குறைந்தால் வன்முறைக்கு வழிகாட்டும்.

இன்றைய குழந்தைகளே நாளைய குடிமக்கள். குழந்தைகள் சிறிது காலத்திற்கு குழந்தைகளாகவே இருக்கவிட வேண்டும். குழந்தைகளை உயர்த்துவதாக எண்ணிக்கொண்டு அவர்களைக் கெடுத்து விடக்கூடாது.

குழந்தையைப் படிக்க வைப்பது ஒரு கலை. குழந்தை வளர்ப்புக்குப் பெற்றோர்களிடம் அறிவியல் பார்வை இருந்தால்த்தான் குழந்தைகளின் உலகத்தை அடையாளம் காண முடியும். நவீன உலகில் வளர்ந்துவரும் விஞ்ஞானத் தொழில்நுட்பங்களுக்கு அடிமையாகாமல் குழந்தைகளை வளர்ப்பதே பெற்றோர்களின் மிகப்பெரிய கடமையாக இருக்கிறது.

இன்றைய ஞானிகள், விஞ்ஞானிகள், தலைவர்கள் யாவரும் நேற்றைய குழந்தைகள். நல்லவர்களும் கெட்டவர்களும் குழந்தையாய் இருந்தவர்களே. நல்லவர், கெட்டவர் என்பனவற்றுக்கு அடித்தளம் குழந்தைப்பருவத்திலேயே போடப்படுகிறது. இதைத் தமிழில் 'விளையும் பயிர், முளையில் தெரியும்' என்றார்கள். நீங்கள் விளைவிக்கும் குழந்தைப் பயிர் விளைவிக்கப் போவது என்ன என்பதை அறிவியல் பார்வையினால் உணரலாம்.

### முளைக்கும் பருவமே இளமை

மனிதரின் இளையபருவத்தை முன்பருவம், பின்பருவம் எனப்

பிரித்துப் பார்க்கலாம். இவற்றில் முன்பருவம் கல்வி கற்கிற பருவம். பின்பருவம் கல்வியை முடித்து வேலை அல்லது தொழில் தேடுகிற பருவம். இவ்விரண்டையும் ஒரு நேர்க்கோட்டில் சொல்வதானால் மாணவப்பருவம் எனச் சொல்லலாம்.

ஒரு மனிதரின் மாணவப்பருவம் கோளாறானால் வாழ்க்கையே பாதிக்கப்படும். மாணவப்பருவத்தில் கற்கிற கல்விதான் மயானம் வரைக்கும் துணையாய் நிற்கும். மாணவப்பருவம் தான் எவ்வித விதைகளையும் புரியாமல் ஏற்கிற காலம். ஆகவே அக்காலத்தில் சரியான, முறையான விதைகளைத் தூவவேண்டும்.

ஒரு கவிஞர் சொன்னது போல், மாணவப்பருவம் மனித நந்தவனத்தின் பூக்காலம். அக்காலம் பெற்றோரின் கண்காணிப்பில் இருக்க வேண்டிய காலம். மாணவர்கள் என்றால் கற்று வருபவர்கள் மட்டுமல்ல, அவர்கள் சமூகத்தின் மனிதர்கள் ஆவார்கள். அவர்களில் இருந்துதான் தலைவர்கள், கவிஞர்கள், விஞ்ஞானிகள், வைத்தியர்கள், விவசாயிகள், தொழில்நுட்ப வல்லுனர்கள் ஆகியோர் உருவாக வேண்டும்.

சின்ன விதைக்குள் சிறைப்பட்டிருக்கும் ஆலமரம் மந்திரத்தால் மரமாகவில்லை. துளித்துளிகள் சேரும்போதுதான் நதியாகிறது. ஓரடி, ஈரடியாய் ஓடித்தான் ஒலிம்பிக்கில் தங்கம் கிடைக்கிறது. ஒன்று, இரண்டு என எண்ணத் தொடங்கினால்தான் கோடி எண்ணலாம். முட்டையை உடைத்து வருகிற பறவைதானே வான் முகட்டில் பறக்கிறது. ஒவ்வொரு கற்களாக அடுக்கினால் தான் மாளிகை எழும். கற்றலும் அப்படித்தான்.

இன்று உங்களது பிள்ளைகள் தகுதியான மாணவர்களாய் இருந்தால்தான் நாளை சிறந்த மனிதர்களாவார்கள். அவர்கள் காலத்திற்கு ஏற்றபடி வாழ பெற்றோர் உதவ வேண்டும். அவர்கள் இக்காலத்து பெரியதிரை, சின்னதிரை, மாய அரசியல், மதவெறி, சாதிவெறி ஆகியவற்றில் தொங்காமல் பார்ப்பதும் பெற்றோர் கடமையாகும்.

பெரியதிரை, சின்னத்திரை போன்றவற்றின் நிழல்களை எந்த மாணவரும் நிஜமென நம்பிவிட்டால் அவர் வாழ்க்கை நிழலுக்குள் ஒடுங்கிப் போகும். ஆனால் அறிவியல் மேம்பட்டிருக்கிற இந்தக் காலத்திலும் நிழல்களை நம்புவதே எதிர்காலம் என எண்ணுகிற இளைய கூட்டம் உருவாகி வருகிறது. பெரியதிரை நாயகர்களை வாழ்க்கை நாயகர்களாகக் கொள்வதில் இளைஞர்கள் முனைந்திருக்கிறார்கள். அவர்கள் பெயரில் மன்றங்கள் அமைப்பதை மகிழ்வோடு செய்கிறார்கள். அறிஞர்களின் முகமோ முகவரியோ அறியாத இவர்கள், இன்றைய திரைநாயகர்களை தங்களின் இலட்சிய நாயகனாக வரித்துக் கொள்கிறார்கள். நடிகர்களின் பெரிய உருவங்களை வைத்துப் பாலாபிஷேகம் செய்கின்றார்கள்.

ஒரு சினிமா நடிகனுக்கும் மாணவன் அல்லது இளைஞனுக்கும் என்ன உறவு? சினிமா உலகம் கோடி கோடியாய் பணம் புரளும் மாயா வினோத உலகம். இல்லாததை இருப்பதாக ஒளிவித்தை காட்டும் நிழல் உலகம். அதனை ரசிக்கலாம், ஆனால் நம்பக்கூடாது. ஆகவே உங்கள் பிள்ளைகளுக்குத் திரைநிழலை சரியாக அறிமுகம் செய்யுங்கள். உங்களின் அறிமுகத்தில் தான் நெல் எது 'களை' எது என அவர்கள் அடையாளம் காண்பார்கள். நெல் நிமிர களை அடையாளம் கண்டு பிடுங்கி எறியப்பட வேண்டும். அவ்வாறே வாழ்க்கையில் பல்வேறு வடிவங்களில் ஒட்ட வருகிற 'களை'களைப் பிடுங்கி எறியவேண்டும்.

கல்வியில் அறிவியலும் கேள்வியும் சேர்ந்தால் நிழல்களை நிஜங்களாக கற்பவர்கள் நம்பமாட்டார்கள். இல்லையெனில் திரைகள் விரிக்கும் போதையில் இளைய பருவத்தினர் மூழ்கிப் போவார்கள். திரை கொடுக்கும் போதையில் மூழ்கியவர் வாழ்க்கைக்கரையில் மீள்வது கடினம்.

உள்மனது அறிவியலோடு இருந்தால் எந்த 'நிழலும்' வெற்றி பெறாது. அறிவியல் என்பது எப்பொருளாயினும் எவர் வாயில் கேட்டாலும் அதில் மெய்ப்பொருள் காண்பதாகும். இது மிகப்பெரிய மந்திரம். இந்த மந்திரத்தை இளைய பருவத்தினர் அறிந்து கொண்டால் அவர்களின் வாழ்வு மகத்துவமாகும்.



somu@thaiveedu.com



# வேற்றுக்கிரகத்தில் பறந்த முதலாவது உலங்கு வானூர்தி

- குரு அரவிந்தன்

வேற்றுக் கிரகத்தில் பறந்த முதலாவது ஹெலிகொப்டர் என்ற பெயரை ஏப்ரல் மாதம் 19ம் திகதி 2021 ஆண்டு 'இன்ஜெனுட்டி' (Ingenuity) என்ற அமெரிக்க நாசாவின் ஹெலிகொப்டர் தட்டிக்கொண்டது. அதிகாலை 3:30 மணியளவில் செவ்வாய்க்கிரகத்தில் நடந்த இந்த வெற்றிகரமான சாதனைக்குப் பல மனிதர்களின், மாதக்கணக்கான உழைப்பு மட்டுமல்ல, தொழில்நுட்ப வளர்ச்சியும் முக்கிய காரணமாக இருந்தது. பலவிதமான அறைகூவலுக்கு மத்தியில் பூமியில் இருந்தே இந்த சாதனையைச் செய்துகாட்டி இருக்கிறார்கள். வேற்றுக் கிரகங்களில் இனிவருங்காலங்களில் விமானங்களால் பறக்க முடியும் என்ற நம்பிக்கையை இந்தப் பறப்பு ஏற்படுத்தி இருக்கின்றது. இதுவரை வெவ்வேறு தினங்களில், வெவ்வேறு வகையான மூன்று பறப்புக்களை மேற்கொண்டதன் மூலம் வேற்றுக் கிரகங்களில் மனிதரால் பறக்க முடியும் என்பதை இந்த ஹெலி நிருபித்திருக்கின்றது. 1903ம் ஆண்டு இந்த உலகத்தில் முதன்முதலாக ரைட் சகோதரர்கள் பறந்த முதலாவது விமானப் பறப்பு இந்த நிகழ்வின்போது நினைவுகூரப்பட்டது.

இந்த வெற்றிகரமான சாதனை பற்றிக் குறிப்பிடுமுன், இந்தக் ஹெலிக்கொப்டரை எப்படித் தயார்படுத்தினார்கள் என்பதைப் பார்ப்போம்.

செவ்வாய்க் கிரகத்தில் ஏற்கனவே தரை இறங்கி இருக்கும் பெசேவரன்ஸ் (Perseverance) ரோவரைப் பற்றி, 'தாய் இல்லாமல் ஹெலி இல்லை' என்பதால் முதலில் தாய்க்கலன் பற்றிப் பார்ப்போம். 2020 யூலை மாதம் 30ம் திகதி அமெரிக்காவில் இருந்து செவ்வாய் கிரகம் நோக்கி இந்த ரோவர் புறப்பட்டது. அமெரிக்காவின் நாசா நிறுவனம் இந்தத் திட்டத்திற்குப் பொறுப்பாக இருக்கின்றது. இந்த ரோவர் சென்ற பெப்ரவரி மாதம் 18ம் திகதி 2021 ஆண்டு செவ்வாய்க் கிரகத்தில் தரை இறங்கியது. அதன்பின் அதனுடைய பாகங்கள் எல்லாம் தொழிற்படுகின்றனவா என்பதை இதுவரை நாட்களும் பூமியில் இருந்தபடியே ஒவ்வொன்றாகப் பரிட்சித்துப் பார்த்தார்கள். முக்கியமாக சூரிய சக்தியில் இயங்கும் இந்த ரோவரின் சக்திக்கலங்கள் சூரிய சக்தியின் உதவியுடன் முதலில் நிரப்பப்பட்டன. அதன் பின் ஒவ்வொரு தொழிற்கருவிகளும் தகுந்த முறையில் இயங்குகின்றனவா என்று பரிட்சித்துப் பார்க்கப்பட்டன. செவ்வாயில் உள்ள ஜெஸீரோ பள்ளத்தாக்கில் தரை இறக்கப்பட்ட இந்த பெசேவரன்ஸ் ரோவர் சென்ற மார்ச் மாதம் 4ம் திகதி தனது பரிட்சார்த்த முதல் பயணத்தைச் செவ்வாய்க் கிரகத்தரையில் ஆரம்பித்தது.

செவ்வாய் கிரகத்தின் தரையில் சுமார் 6.5 மீட்டர் தூரத்தை அது பயணித்தது. இதற்குச் சுமார் 33 நிமிடங்கள் எடுத்தன. அதன் ஆறு சில்லுகளும் திறம்படச் செயற்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். கரடுமுரடான செவ்வாய்த்தரையில் நகர்வதற்கு அதன் சில்லுகளின் செயற்பாடு முக்கியமானதாகும். ரோவர் தனது ஆய்வுக்கான நீண்ட பயணத்தைத் தொடர இருந்தாலும், இதற்கிடையே தன்னுடன் சுமந்து கொண்டு சென்ற ஹெலிகொப்டரையும் செவ்வாய் வானத்தில் ஒருநாள் பறக்கவிட்டுப் பார்க்க இருந்தது. செவ்வாய்க்கிரகத்தில் அது பறக்குமானால் தொழில் நுட்பத்தில் பெரிய தொரு மாற்றத்தை மாற்றுக் கிரகங்களில் கொண்டு வரும் என்பதில் சந்தேகமே இல்லை. ரோவர்களுக்குப் பதிலாக, மாற்றுக் கிரகங்களுக்கு முதலில் சிறிய ஹெலிகளோ அல்லது ரோன்களோ நேரடியாக விண்கலங்களில் இருந்து கிரகங்களின் தரை நோக்கிச் சென்று, மிக அருகே படங்களை எடுத்துக் கொண்டு திரும்பக் கூடிய தொழில்நுட்பம் எமக்குக் கிடைக்கலாம். அதேபோல மாற்றுக் கிரகங்களில் இருந்து மாதிரி மண், கற்துகள்களையும் எடுத்துக் கொண்டு வரலாம். எதிர் காலத்தில் வேற்றுக் கிரகங்களில் மனிதர்கள் விமானத்தில் பறப்பதற்கும் இந்த ஹெலிக்கொப்டர் பறப்பு வழிவகுக்கலாம்.

பெசேவரன்ஸ் ரோவர், தன்னோடு எடுத்துச் சென்ற ஹெலிக் கொப்டரைப் பற்றிப் பார்ப்போம். இதற்கு 'இன்ஜெனுட்டி' (Ingenuity) என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள். பள்ளி மாணவர்கள் அனுப்பிய பெயர்களில் இருந்து இந்தப் பெயரைத் தெரிந்தெடுத்தார்கள். பெசேவரன்ஸ் ரோவர் பூமியில் இருந்து புறப்படும் போது, தன்னுடைய அடி வயிற்றிலே குட்டியைத் தாய் பாதுகாப்பது போல, இந்தக் ஹெலிக்கொப்டரைக் கவனமாகப் பாதுகாத்து வைத்திருந்தது. இதற்குச் சில காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம் அதிக வேகம் காரணமாகவும், செவ்வாயில் தரை இறங்கும் போது ஏற்படும் அதிக சூடு காரணமாகவும் ஹெலிகொப்டர் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். இரண்டாவது செவ்வாய்க் கிரகத்தில் வீசும் தூசுப்புயல் காற்றால் பழுதடையாமல் இருக்க வேண்டும். மூன்றாவது செவ்வாய்கிரகத்தில் இரவு நேரத்தில் ஏற்படும் உறையும் குளிரில் இருந்து தப்ப வேண்டும். எனவேதான் கங்காருக்குட்டி தாயின் பையுக்குள் பாதுகாப்பாய் இருப்பது போல இந்த ஹொலிகொப்டரும் பாதுகாப்பாய் இருந்து கொண்டது. பெசேவரன்ஸ் ரோவர் ஒரு மோட்டார் வண்டியளவு உருவம் கொண்டது. அதனால் தன்னுடன் நாலு இறாத்தல் நிறையுள்ள ஒரு சிறிய ஹெலிக்கொப்டரைத்தான் எடுத்துச் செல்ல முடிந்தது. இந்த ஹெலிகொப்படர் செவ்வாயத் தரையில் ஆய்வுகள் எதையும் மேற்கொள்ளப் போவதில்லை. ஆனால் செவ்வாயில் பறக்க முடியுமா என்பதை மட்டும் பரிட்சித்துப் பார்ப்பதற்காக இதை அனுப்பி இருந்தார்கள்.

தாய்க்கலமான பெசேவரன்ஸ் ரோவரில் இருந்து இந்த ஹொலிகொப்டர் வெளியே வந்த காட்சியைப் பார்த்த போது, பசு ஒன்று கன்று ஈனுவது போன்ற பிரசவக்காட்சி போல இருந்தது. பூமியில் இருந்து இயக்கப்பட்டதால், ஒவ்வொரு நிகழ்வும் மிகவும் மெதுவாக ஆனால் நிதானமாக நடந்தேறின. முதலில் இந்தச் சிறிய ஹெலிக்கொப்டரை மார்ச் மாதம் 29ம் திகதி பெசேவரன்ஸின் வயிற்றுப் பகுதியில் இருந்து வெளியே கொண்டு வருவதற்கான முயற்சிகள் ஆரம்பமாகின. ஏப்ரல் 3ம் திகதி படுத்த வாக்கில் மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தது ஹெலி. அதைத் தொடர்ந்து அதன் இரண்டு கால்கள் மெதுவாக வெளியே நீட்டிக் கொண்டன. அதன் பின் அதன் நிலை செங்குத்தாக மாற்றப்பட்டதும் ஏனைய இரண்டு கால்களும் வெளியே நீட்டிக் கொண்டன. இப்போது நாலு கால்களும் வெளியே வந்திருந்தன, ஆனாலும் தரையைத் தொடவில்லை, காரணம் தொப்புள் கொடி தொடர்பும் அதற்கு இருந்தது. சூரிய சக்தியைப் பெற்று இந்தக் ஹெலிக் கொப்டர் தானாக இயங்கும் வரை அதற்குத் தேவையான சக்தியைத் தாய்க்கலமான பெசேவரன்ஸ்தான் கொடுக்க வேண்டும்.

ரோவராக இருந்தாலும், தாய் பிள்ளை பாசம் போல, இருவரையும் பிரிந்து போகாமல் சில நாட்கள் கட்டிப் போட்டிருந்தது.

ஹெலிகொப்டருக்கு சூரியசக்தி கிடைத்ததும் தாய்க்கலமான பெசேவரன்ஸில் இருந்து பிரிக்கப்பட்டது. இரவு செவ்வாய்க் கிரகத்தின் கடும் குளிரில் இருந்து தன்னைக் காப்பாற்றவும், பறந்து பார்ப்பதற்கும் அதற்குச் சூரிய சக்தி தேவைப்பட்டது. ஹெலி-கொப்டர் தனிமைப் படுத்தப்பட்டதும், ரோவர் சற்றுத் தூரம் பயணித்து, அதாவது 215 அடி தூரம் விலகி நின்று ஹெலிகொப்டருக்குப் பறப்பதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது. அது மட்டுமல்ல, உடனடியாக செவ்வாய்க் கிரகத்தின் காலநிலையையும் பதிவு செய்து பூமிக்கு அனுப்பி இருந்தது. காரணம் தூசிப் புயல் அடிக்குமானால் ஹெலியால் பறக்க முடியாமல் போகலாம் என்பதால், அங்குள்ள காலநிலை பற்றிய விபரம் பூமியில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்திற்குத் தேவைப்பட்டது. செவ்வாய்கிரகத்தில் ஏற்கனவே 2012ம் ஆண்டு சுமார் 2500 மைல்களுக்கு அப்பால் தரை இறங்கி இருக்கும் கியூறியோசிட்டி ரோவரும் தனது பகுதியில் உள்ள காலநிலை பற்றிப் பூமிக்குத் தகவல் அனுப்பி இருந்தது. அப்பகுதியில் ( Pascal range) காற்றழுத்த அலகு 705-735 க்கும் இடைப்பட்டிருப்பதாகவும் கணிக்கப்பட்டிருந்தது.

பெசேவரன்சை விட்டுப் பாதுகாப்பாக வெளியே வந்த ஹெலிக்கொப்டரின் சிறகுகள், தேவை கருதிக் கட்டப்பட்ட நிலையிலேயே இதுவரை இருந்தன. ஏப்ரல் 7ம் திகதி பூமியில் இருந்து அனுப்பப்பட்ட கட்டளையின்படி அந்தச் சிறகுகள் விடுவிக்கப்பட்டன. சாதாரணமாகப் பூமியில் உள்ள அழுத்தம் காரணமாக ஒரு ஹொலிகொப்டர் பூமியில் பறப்பதற்கு விசிறி ஒரு நிமிடத்திற்கு 450-500 தடவைகள் சுற்ற வேண்டும். ஆனால் செவ்வாய் கிரகத்தில் அழுத்தம் குறைவாக இருப்பதால் ஹொலிகொப்டர் பறப்பதற்கு ஒரு நிமிடத்திற்குக் குறைந்தது 2400 தடவைகள் சுற்ற வேண்டும். இந்த ஹெலிகொப்டரின் விசிறி 2,537 தடவைகள் சுற்றக் கூடிய வகையில் வடிவமைக்கப் பட்டிருந்தது. பூமியில் ஒரு ஹெலிகொப்டர் பறப்பதற்குத் தேவையான விசிறிகளின் நீள, அகல அளவை விட இதற்கு அதிகமாகத் தேவைப்பட்டது. இந்த விசிறிகளைக் கலிபோர்ணியாவில் உள்ள ஏரோ வைரோமென்ட் (AeroVironment) என்ற நிறுவனம் தயாரித்திருந்தது. ஏப்ரல் மாதம் 9ம் திகதி முதலில் நிமிடத்திற்கு 50 சுற்றுக்களும், அதன் பின் 2400 சுற்றுக்களும் செவ்வாய் தரையில் இருந்தபடியே பரிசீத்துப் பார்க்கப்பட்டன. ஆனால் அதிவேகச் சுற்றில் ஏதோ தவறு இருப்பதாகக் கண்டறிந்ததால், 11ம் திகதி நடக்க இருந்த முதலாவது பறப்பை 14ம் திகதிக்கு மாற்றி இருந்தார்கள். ஆனால் கணினி மென்பொருளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருந்ததால், அந்தத் திகதியையும் பின்தள்ளிப் 19ம் திகதியாக மாற்றி இருந்தார்கள்.

திட்டமிட்டபடி முதல் பறப்பில் ஒரு விநாடிக்கு மூன்று அடிவரை மேலே கிளம்பிப் பறக்க வேண்டும். பத்து அடி வரையிலான உயரத்திற்குச் சென்றதும் 30 விநாடிகள் வரை மேலே தரித்து நின்று, திரும்பவும் மெதுவாகக் கீழே இறங்கித் தரையைத் தொட வேண்டும். சுமார் 40 விநாடிகள் இதற்காக ஒதுக்கி இருந்தார்கள். இப்படித்தான் ஹெலிகொப்டரின் முதல்நாள் பறப்பிற்காகப் பூமித்தரையில் இருந்தபடியே திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் 39.1 விநாடிகளில் திட்டமிட்டபடி எல்லாமே நிறைவேற்றப்பட்டது. பறக்கும் போது விநாடிக்கு 30 படங்கள் எடுக்கக்கூடிய அதிசக்தி வாய்ந்த கமெராவும் இந்த ஹெலியில் இணைக்கப்பட்டிருக்கின்றது. இதைவிட இன்னுமொரு வண்ணப்படங்களைப் பக்கவாட்டில் எடுக்கக்கூடிய கமெராவும் உண்டு. ஹெலி பறப்பில் ஈடுபடும் நிகழ்ச்சியை பெசேவரன்ஸ் தனது வீடியோ கமெராவால் படம் பிடித்து பூமிக்கு அனுப்பி இருந்தது. இதைவிட ஹெலி மேலே இருந்து எடுத்த கறுப்பு வெள்ளைப் படத்தையும் அனுப்பி இருந்தது. ஸ்பெயின் நாட்டில் உள்ள பெரிய அன்ரனா இதை உள்வாங்கி அமெரிக்காவில் உள்ள நாசாவுக்கு அனுப்பியிருந்தது.

இது போன்று வெவ்வேறு தினங்களில் ஐந்து தடவைகள் இந்தக் ஹெலி செவ்வாய்க் கிரகத்தில் பறப்பில் ஈடுபட இருக்கின்றது. முதலாவது பறப்பு வெற்றியடைந்ததால், அடுத்த பறப்பில் ஹெலி 16 அடி உயரத்திற்குச் செல்ல இருக்கின்றது. சில நாட்களின் பின் இந்தப் பறப்பு இடம் பெறும். இதற்குத் 90 விநாடிகள் எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த இரண்டாவது பறப்பில் ஹெலி பக்கவாட்டுக்குச் சென்று திரும்பவும் அந்த இடத்திற்குத் திரும்பி வந்து கிளம்பிய இடத்திலேயே இறங்க இருக்கின்றது. மூன்றாவது பறப்பில் மீண்டும் 90 விநாடிகள் எடுத்தாலும், இம்முறை பக்கவாட்டாக 164 அடி தூரத்திற்கு வேகமாகச் சென்று, திரும்பவும் புறப்பட்ட இடத்தில் வந்து இறங்கும். இந்த ஹெலியால் நான்காம் ஐந்தாம் பறப்புகளில் ஈடுபட முடிந்தால், செவ்வாய்க் கிரகத்தில் இன்னும் உயரத்திற்குச் செல்லவும், தூரத்திற்குச் செல்லவும், செவ்வாய்க்கிரகத்தில் வேகமாக வீசும் புயல் காற்றை எதிர்கொள்ளவும் பயன்படுத்தப்படும். இதன் மூலம் கிடைக்கும் தகவல்களும், அனுபவங்களும் அடுத்த ஹெலிகொப்டரை இன்னும் நன்றாக வடிவமைப்பதற்கு உதவியாக இருக்கும்.



ஹெலி பறக்குமா, பறக்காதா? என்ற கேள்விக்கு இப்போது பதில் கிடைத்துவிட்டது. செவ்வாய்க் கிரகத்தில் பூமியைப் போல் வளிமண்டல அமுக்கமோ, அல்லது ஈர்ப்போ இல்லை. செவ்வாய்க்கிரகத்தின் ஈர்ப்பு, காற்றின் அழுத்தம், இரவில் உறையும் குளிர் (minus 90 degrees Celsius), அவ்வப்போது அங்கு அடிக்கும் துசிப் புயல் போன்ற இயற்கைக் காரணிகள் விஞ்ஞானிகளுக்கு பெரும் சவாலாக இருந்தன. இதைவிட பூமியில் இருந்து செவ்வாய்க்கு ஒரு கட்டளையை அனுப்புவதற்கு 7 நிமிடங்கள் எடுக்கின்றன. சுமார் 173 மில்லியன் மைல்களைக் கடந்து செவ்வாய்க்கிரகத்தோடு தகவல் பரிமாற்றம் செய்வதற்குப் 15 நிமிடங்கள் எடுக்கின்றன. பூமியில் இருந்து அனுப்பப்படும் கட்டளை சென்றடைவதற்கிடையில் பல மாற்றங்கள் அங்கு ஏற்பட்டு விடலாம். இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டுதான், இந்த ஹெலி-கொப்டர் பல மாதங்களாகத் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டது.

1903ம் ஆண்டு ரைட் சகோரர்கள் பறந்த முதல் விமானத்தில் இருந்து எடுக்கப்பட்ட மிகச் சிறிய ஞாபகப் பொருள் ஒன்று இந்த ஹொலிக்கொப்டரில் இணைக்கப்பட்டிருக்கின்றது. இதேபோல அப்பலோ-11 சந்திரமண்டலத்திற்குச் சென்ற போதும் ரைட் சகோதரர்களின் விமானத்தில் இருந்து சிறிய ஞாபகப் பொருள் கொண்டு செல்லப்பட்டது. ரைட் சகோதரர்களின் முதலாவது விமானப்பறப்பு 12 விநாடிகள் மட்டுமே நடைபெற்றது. அன்று ரைட் சகோதரர்களின் பறப்பிற்கு ஒரு சிலரே சாட்சியாக இருந்தார்கள். 117 வருடங்களின் பின் கண்காணாத வேற்றுக் கிரகத்தில் நடந்த இந்த முதலாவது பறப்பை உலகெங்கும் உள்ள மக்கள் பலரும் பார்க்கக்கூடியதாக நவீன தொழில் நுட்பம் இன்று உதவி இருக்கின்றது. விண்வெளிப்பயணத்தில் இனி வரும் காலங்களில் விரைவான மாற்றங்கள் ஏற்பட இந்த ஹெலியின் பறப்பு சாதனை ஒரு மைல் கல்லாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.


**உசாத்துணை:**

- https://mars.nasa.gov/technology/helicopter/#
- https://www.space.com/perserverance-rover-spotted-in-mars-helicopter-photo





kuruaravindan@thaiveedu.com


BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000

# ஏப்பிரல் 23 - ஆங்கில மொழியும் சேக்ஸ்பியரும்...

எம்.ஆர். றிப்அத் முகம்மது

ஆண்டுதோறும் ஏப்பிரல் மாதம் 23ம் திகதி ஆங்கில மொழி தினமாகவும் சேக்ஸ்பியர் தினமாகவும் கொண்டாடப்படுகின்றது. ஆங்கில இலக்கியத்துக்கு மகத்தான தொண்டாற்றிய சேக்ஸ்பியர் இத்தினத்திலேயே பிறந்தார் என்றும், மறைந்தார் என்றும் நம்பப்படுகின்றது. தமிழிலே வள்ளுவர் நாள், பாரதி நாள் என்று நாம் பிரத்தியேகமாக எமது பெருந்தகைகளை நினைவு கூர்வது போன்று, ஆங்கிலம் கூறும் நல்லுலகில் சேக்ஸ்பியர் என்றென்றும் முடிசூடா மன்னனாக இருந்து வருபவர். அவரது இலக்கியத்தின் சிறு துளியையாவது பருகாமல் ஆங்கிலம் கற்பவர்கள் அரிது. எனவே தான் ஆங்கில மொழி தினம் அவரது நினைவு தினமாகவும், அவரது நினைவு தினம் ஆங்கில மொழி தினமாகவும் ஒருங்கே அமைந்துள்ளன.

முதன்முதலாக ஆங்கில மொழி தினம் 2010ம் ஆண்டு ஏப்பிரல் 23ம் திகதி கொண்டாடப்பட்டது. ஆங்கில மொழியின் வரலாறு, பண்பாடு, இலக்கியம், சாதனைகள் போன்றவற்றை எடுத்துச் சொல்லும் நாளாகவே இது அமைகின்றது. தாய்மொழிக்கு அடுத்து உலகெங்கும் கற்கப்படும் முதன்மை மொழியாக ஆங்கிலம் காணப்படுவதாலும் உலக தொடர்பாடல் மொழியாக விளங்குவதாலும் இம்மொழி தற்கால உலகப் பொது மொழியாக (Lingua franca) கொள்ளப்படுகின்றது. உலகெங்குமுள்ள பல் பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட அனைத்து மக்களையும் ஆங்கில மொழியே பெருமளவில் ஒன்றிணைக்கின்றது. எனவே தான், ஐ.நா சபை 2010ல் இத்தினத்தைப் பிரகடனப்படுத்தியது. மேலும் ஆங்கில மொழி எமது வாழ்வில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, ஆகிய நாடுகளிலேயே ஆங்கிலம் முதல் மொழியாக இருக்கின்ற போதிலும் உலகில் 60க்கும் மேற்பட்ட நாடுகளில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் தொடர்பாடல் மொழியாகவும் அமைந்துள்ளதுடன் உலகின் மிக முக்கிய வலையமைப்பாகவும் ஆங்கிலம் மாறியுள்ளது. சீனாவில் வழங்கும் மந்தரின் மொழி, ஸ்பானிய மொழி போன்றவற்றை அடுத்து ஆங்கிலம் உலகின் மூன்றாவது பெரும் பொது வழக்கு மொழியாக உள்ளது. ஐரோப்பாவின் பல நாடுகளிலும் பொதுநலவாய நாடுகள் பலவற்றிலும் ஐ.நா.விலும் உலகின் பல்வேறு அமைப்புகளிலும் ஆங்கிலம் உத்தியோகபூர்வ மொழியாக இருப்பதுடன் இரண்டாம் மொழியாகவும் பரந்தளவில் கற்கப்படுகின்றது.

## ஆங்கில மொழியின் பின்புலம்:

1400 வருட காலம் பழைமை வாய்ந்த மொழியான ஆங்கிலம் அதே கால வரலாற்றைக் கொண்ட காத்திரமான இலக்கியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஜெர்மனிய மொழியிலிருந்தே ஆங்கில மொழி பிறந்ததாக அறியப்படுகின்றது. பிரித்தானிய காலனித்துவம் உலகெங்கும் வேரூன்றும் வரையில் ஆங்கில மொழியின் செல்வாக்கு மிகக் குறைவாகவே இருந்து வந்தது. மேற்கு ஐரோப்பாவின் ஒரு சில தீவுகளிலும் அவற்றின் சிறு சிறு பகுதிகளிலுமே அது செல்வாக்குப் பெற்றிருந்தது. மத்தியகால இங்கிலாந்தில் ஆங்கில மொழியின் தோற்றுவாயாக இருந்தவர்கள் ஏங்கிள் எனப்படும் மேற்கு ஜெர்மனியக் குடிகள். பால்டிக் கடலின் ஒரு பகுதியாகிய ஏங்கிலிய தீபகற்பத்திலிருந்து இங்கிலாந்தை நோக்கிப் புலம் பெயர்ந்தவர்களே இவர்கள். அவர்கள் மூலமே ஆங்கிலம் தோற்றம் பெற்று அதன் இலக்கணம், ஒலியமைப்பு, சொற்கள் போன்றனவும் உருவாகின. மொத்தத்தில் ஆங்கிலம் என்னும் மொழி அதனுடன் தொடர்புபட்ட ஒவ்வொரு மொழியினடியாகவே எழுந்தது.

ஆங்கில மொழி காலனித்துவ மாற்றத்தின் பின்பே உலகத்தின் கல்வி மொழியாகவும் நிருவாக மொழியாகவும் பொருளியல் மொழியாகவும் மருத்துவ மொழியாகவும் மாற்றமுற்றது. மேலைத்தேய மருத்துவம் முதன்மை பெற்றதுடன் ஆங்கிலம் உச்சத்தை எட்டியது. இணைய வலைத்தளங்களின் தோற்றத்துடன் உருவான தொழிநுட்ப முன்னேற்றம், ஆங்கிலத்தின் செல்வாக்கு மேலோங்குவதற்கு மேலும் வலுச்சேர்த்தது.

## சேக்ஸ்பியரின் தொண்டு:

ஆங்கில இலக்கியத்தில் மாபெரும் மேதாவியாகவும் உலகின் மிகப்பெரும் நாடகாசிரியர்களுள் ஒருவராகவும் வில்லியம் சேக்ஸ்பியர் போற்றப்படுகின்றார். ஸ்ராட்போர்டு ஆவன் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்த அவர் 'ஆவனூர் பாணன்' (Bard of Avon) என்று பிரபலமாக அழைக்கப்பட்டார். இவரது பிறந்த தினம் எது என்பது சம்பந்தமாகக் கருத்து வேறுபாடு உண்டு. அவர் 1564ம் ஆண்டு ஏப்பிரல் 26 அன்று திருமுழுக்குப் பெற்றுள்ளதாகவும் ஏப்பிரல் 23ம் நாளில் பிறந்ததாகவும் அவரது இறப்பும் ஏப்பிரல் 23ம் நாளிலேயே நிகழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது. உலகம் முழுவதிலுமுள்ள சேக்ஸ்பியரின் நேசர்களும் ஆர்வலர்களும் இவ்விலக்கிய மேதையைக் கௌரவிக்குமுகமாக ஒவ்வொரு வருடமும் ஏப்பிரல் மாதம் 23ம் திகதியை சேக்ஸ்பியர் தினமாகக் கொண்டாடுகின்றனர்.

மொத்தமாக அவர் முப்பத்தாறு நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றுள் ஹம்லெற் (Hamlet), மக்பெத் (Macbeth), ரோமியோ யூலியற் (Romeo and Juliet), ஒதெல்லோ (Othello), யூலியஸ் சீசர் (Julius Caesar) போன்றவை மிகவும் பிரசித்தி வாய்ந்தன. யூலியஸ் சீசர் நாடகத்தில் வரும் 'Et tu, Brute? - நீயுமா புருட்டஸ்!' அல்லது 'புருட்டஸ்! நீயுமா?' என்ற ஏக்கம் உலகம் முழுவதிலுமுள்ள அனைவரும் அறிந்த ஒன்று. துரோகிகளைக் குறிப்பதற்கு அனைவராலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கவிதைத் துறையிலும் சேக்ஸ்பியர் கைதேர்ந்த வல்லாளர். அவரது கவிதைகளுள் 'வீனஸும் அடொனிஸும்' (Venus and Adonis) என்ற கவிதை மிகவும் பிரசித்தி வாய்ந்தது. செய்யுள் இலக்கியத்திலும் சேக்ஸ்பியர் தடம்பதித்துள்ளார். அவரின் 154 செய்யுட்களைக் கொண்ட ஏடு ஒன்று 1609ல் வெளியிடப்பட்டது.

சேக்ஸ்பியர் ஆங்கில மொழிக்கு சுமார் 3000 சொற்களை அறிமு

கம் செய்துள்ளார். அவரது சொற்கையாட்சியை மதிப்பிடுகையில் 17,000 முதல் 29,000 வரை கணிக்க முடியும். 3000 சொற்களை ஆங்கில மொழிக்கு அறிமுகம் செய்துள்ளமை குறித்து ஒக்ஸ் போர்டு அகராதி அவரை ஏற்றிப்போற்றியுள்ளது.

சேக்ஸ்பியரின் நாடகங்களில் 13 தடவைகள் தற்கொலை இடம் பெறுகின்றது. 13 என்பது அவப்பேறுடைய இலக்கமாகக் கொள் ளப்படுகின்றது. அவரின் நாடகங்களில் தற்கொலையுண்டோரின் எண்ணிக்கையும் பதின்மூன்று. அதிலே ரோமியோ யூலியற் எல் லோராலும் அறியப்பட்டவர்கள்.

சேக்ஸ்பியரின் மிகக் குறுகிய நாடகம் 'கொமடி ஒவ் எரர்ஸ் (The Comedy of Errors)'. இது 1787 வரிகளையும் 14,369 சொற்களையும் கொண்டது. அவரின் மிக நீண்ட நாடகம் 'ஹம்லெற் (Hamlet)'. இது 4,042 வரிகளையும் 29,551 சொற்களையும் கொண்டது.

1613ஆம் ஆண்டளவில், 49ம் வயதில் தனது ஊரான ஸ்ராட்போர் டுக்குத் திரும்பிய சேக்ஸ்பியர் தனது பணிகளிலிருந்து இளைப்பா றினார். அங்கு மூன்று வருடங்கள் வாழ்ந்து 1616 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23ம் திகதி தனது 52வது வயதில் காலமானார். சேக்ஸ்பியரின் தனிப்பட்ட வாழ்வு குறித்த பதிவுகள் மிகக் குறை வாகவே உள்ளன.

சேக்ஸ்பியரின் கல்லறையில் ஒரு சாபம் பொறிக்கப்பட்டுள்ளது. அது அவரின் பூதவுடலை அப்புறப்படுத்துவோருக்கு ஒரு எச்ச ரிக்கை விடுக்கின்றது. அது குறிப்பிடுவது யாதெனில்,

'அருமை நண்பரே! யேசுவுக்காகப் பொறுத்தருள்வீர்! இங்கு புதையுண்டிருக்கும் உடலை அகற்றாதீர் இக்கல்லறையை விட்டு வைப்போர் அருள் படைத்தோர் ஆகுக! என் உடலை நகர்த்து வோர் சபிக்கப்படுவோர் ஆகுக!' ('Good friend for Jesus' sake forbear, To dig the dust enclosed here: Blest be the man that spares these stones, And curst be he that moves my bones!').

## ஆங்கில மொழி கற்றலும் மொழிபெயர்ப்பும்:

இன்று உலகில் அதிகளவிலான மக்கள் கற்கும் மொழியாக ஆங்கிலம் உள்ளது. அதிலும் இரண்டாம் மொழியாக ஆங்கிலத் தைக் கற்பவர்களே உலகெங்கும் உள்ளனர். இரண்டாம் மொழி யாக ஆங்கிலம் கற்பித்தல் (Teaching English as a Second Lang uage), வேற்று மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (Teaching English as a Foreign Language) என்று தனிப்பெரும் துறைகளே நிறுவப்பட்டும் உள்ளன. இதற்கென்று தனிக் கற்கைகளும் பட்டப் படிப்புகளும் கூட வழங்கப்படுகின்றன. இதற்கான பிரதான கார ணம் இன்றைய நவீன கல்விக்கு ஆங்கில மொழி மூலமொழியாக உள்ளமையே. சிறுபராயத்தில் தாய் மொழியில் ஆரம்பக் கல்வி யைப் பயின்றாலும் உயர் கல்வியை ஆங்கில வழிக் கல்வியா கவே பெற வேண்டிய சூழலும் எதிர்கால தொழில் வாய்ப்புகளை ஆங்கில மொழியைக் கொண்டே அடையவேண்டிய நிலைமையும் இன்று உள்ளது. அதற்காக சிறுபராயம் முதற்கொண்டே ஆங்கில மொழியறிவை மாணவர்களுக்கு இலகு முறையில் ஊட்ட வேண் டும். ஆங்கிலம் கற்பிக்கும் ஆசான்கள் அம்மொழியைத் தேடிய றிந்து கற்கும் ஆர்வம் கொண்டவர்களாக மாணவர்களை உரு வாக்க வேண்டும்.

இன்று அறிவியல் சார்ந்த கருத்துகளும், நூல்களும், செய்திக ளும், தகவல்களும் ஆங்கில மொழியிலேயே சொரிந்து கிடக்கின் றன. அன்றாடம் உலகில் நடைபெறும் நிகழ்வுகள், செய்திகள் போன்றவை உடனுக்குடன் இணைய வழியாக ஆங்கிலத்திலேயே நம்மை வந்தடைகின்றன. அவற்றை எல்லா மக்களும் அறியும் வண்ணம் கொண்டு சேர்ப்பது மொழிபெயர்ப்பு ஆகும். அத்த கைய பயனுள்ள விடயங்களைத் தேடியறிந்து எளிய நடையில் மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டியது ஆங்கிலத்தை அறிந்தவர் கள் ஆற்றவேண்டிய தொண்டாகும். மிக முக்கியமாக கல்வி கற் போர் பயன் பெறத்தக்க நல்ல நூல்களையும் சமூக விழிப்புணர் வைத் தூண்டி மக்களை நல்வழிப்படுத்தும் அறக்கருத்துகளையும் நன்னெறிகளையும் மொழிபெயர்ப்புச் செய்வது மிகுந்த நன்மை பயக்கும் விடயமாகும்.



## ஆங்கில மொழி தினத்தை எவ்வாறு கொண்டாடலாம்:

ஆங்கில மொழி தினத்தைக் கொண்டாடுவது உலகில் பல்வேறு விதமாக நடைபெறுகின்றது. நூல் வாசிப்பு, கவிதை மன்றுகள், பாடசாலைப் போட்டிகள் என்றவாறெல்லாம் உலகெங்கும் ஒரு விழிப்புணர்வுக்காக நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அதே நேரம் சிலருக்கு இந்த நாள் அவர்களது இலக்கியப் பங்களிப்புகள் மூலம் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த நாளிலேயே உலக நூல் தினமும் பதிப்புரிமை தினமும் ஒருங்கே அமைந்திருப்பது மேலும் நயக்கத்தக்கது.

இருப்பினும், ஆங்கில மொழியின் தன்மையில் அது இயல்பா கவே கொண்டுள்ள சிக்கல்கள் பலரை அம்மொழியை அறிவதிலி ருந்து தூரமாக்கியுள்ளன என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதாவது ஆங்கிலத்தில் உச்சரிப்பில் ஒன்றித்து இருக் கும் பல சொற்கள் பொருளில் வேறுபடும். 'Their', 'There', 'They're' போன்ற சொற்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். ஒருமை, பன்மைச் சொற்களிலும் வேறுபட்ட தன்மை உண்டு. பல பெயர்ச் சொற்களுக்கு இறுதியில் 'S' என்ற எழுத்து வந்தால் பன்மை வடிவம் பெறப்படுகின்ற போதிலும் சில சொற்கள் வேறு பட்டு நிற்கின்றன. 'Goose' என்ற சொல்லின் பன்மை வடிவம் 'Geese' என்று வழங்கப்படுவதையும் 'Moose' என்ற சொல் பன்மை யிலும் 'Moose' என்றே வழங்கப்படுவதையும் காணலாம். இவ்வா றான பேதங்கள் பல உள்ளன, ஆனால் முறையாக ஆங்கிலத் தைக் கற்பதுடன் வாசிப்பிலும் செவிமடுப்பிலும் தொடர்ந்து ஈடு பட்டு வந்தால் அத்தகைய பேதங்களை இலகுவில் நுண்மையாக அறிந்து மொழியைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். ஆங்கிலம் இலகுவாகக் கற்றறியக்கூடிய ஒரு மொழி. எல்லாவற்றுக்கும் மேலாக, ஆங்கிலத்தை இரசனையுடன் கற்பவர்கள் அம்மொழி யின் இயல்புக்கு இசைவடைந்து அதனை ஒரு இன்பமாகவே அனுபவிப்பர். காலப்போக்கில் ஆங்கிலத்தின் செல்வாக்கு அவர் களுக்குள் மேலோங்கி, எந்த விடயத்தையும் குறித்து இலகுவான முறையில் ஆங்கிலத்தில் தொடர்பாடலாம் என்னும் மனோநி லைக்கு அவர்களை அது மாற்றிவிடுகின்றது. அத்தகையதொரு ஈர்ப்பை அம்மொழி தன்னகத்தே கொண்டுள்ளது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. ஆங்கில மொழி தினம் அம்மொழியின் வர லாற்றையும் அம்மொழியின் வாழ்வையும் அம்மொழியின் தனித்து வமான தன்மையையுமே பறைசாற்றி நிற்கின்றது.

ஆங்கில மொழி தினத்தில் அதன் பல்வகைமையையும் அறிந்து கொள்வோம். ஆங்கில மொழியில் கூட வழக்கொழிந்த சொற்கள் என்றும் பிரயோகங்கள் என்றும் பல உள்ளன. அவற்றைப் பழைய ஆங்கில இலக்கியங்களில் காணலாம். அதே போல ஆங்கில மொழியிலும் கிளை மொழி வேறுபாடுண்டு. கனடிய ஆங்கிலம் என்றும் ஐக்கிய இராச்சிய ஆங்கிலம் என்றும் அமெ ரிக்க ஆங்கிலம் என்றும் ஸ்கொட் ஆங்கிலம் என்றும் அவற்றுக் கிடையே நுண்ணிய வழக்கு வேறுபாடுகள் உண்டு, உபயோக வேறுபாடுகளும் உண்டு. அவற்றை இன்று பல்லூடகங்கள் வழியாக நாம் காணலாம்.

ஆங்கில மொழியின் புதியன ஏற்றல் கொள்கையும் புதிய சொற் களை அறிமுகப்படுத்தும் அல்லது தழுவும் தன்மையும் வேறெந்த மொழியும் கொண்டிராத விசேட அம்சமாகும். இதுவே இன்று ஆங்கில மொழி பரந்து விரிந்து உலகெங்கும் நிலை கொள்ளக் காரணமாகவும் அமைந்துள்ளது. கொவிட்-19 கொள்ளை நோய் பரவியதை அடுத்து ஒக்ஸ்போர்டு அகராதி 110ற்கும் மேற்பட்ட புதிய சொற்களைப் புதிதாகப் புகுத்தியுள்ளமையை இதற்குத் தக்க சான்றாகக் கொள்ளலாம். வாழும் மொழி ஒன்று என்னென்ன அம்சங்களைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு இன்று மிகுந்த முன்னுதாரணமாகத் திகழும் முதன்மை மொழி ஆங்கில மொழியே.

ஆங்கில மொழி இனிமேலும் தனது சுய அடையாளத்தில் நின்று நிலைக்காது என்று தர்க்கிப்போர், அம்மொழி எல்லா மொழிக ளையும் தழுவக் கூடியது என்பதையும், அம்மொழியை எல்லா மொழிகளும் தழுவும் என்பதையும் இன்று ஆங்கிலம் தன்னகத்தே கொண்டுள்ள தொடர்புகளை வைத்து ஒரு கணம் ஏற்றுத்தான் ஆகவேண்டியுள்ளது.

'நாம் சில சந்தர்ப்பங்களில் வெறுமனே (ஆங்கில மொழியில்) சொற்களை இரவல்பெறுவதில்லை. ஆங்கிலம் ஏனைய மொழி களை இடைவிடாது அடியொற்றிச் சென்று அம்மொழிகளையே திணறடித்து புதிய சொல்வளத்தை அபகரித்து எமக்குக் கொடுத் துள்ளது'. ('We don't just borrow words; on occasion, English has pursued other languages down alleyways to beat them unconscious and rifle their pockets for new vocabulary'.)
- James Nicoll



rifath.m@thaiveedu.com



# சரியாகத் தமிழறிவோம்!

# எது சரி? ஏன் சரி? 3

- மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

கடந்த இரண்டு மாதங்களில் வெளிவந்த தாய்வீடு இதழில் 'சரியாகத் தமிழறிவோம் - எது சரி ஏன்சரி' என்ற தலைப்பிலான எனது கட்டுரையின் இரண்டு பகுதிகள் இடம் பெற்றிருந்தன. பகுதி 1ல் ஐகாரம், ஔகாரம் ஆகிய எழுத்துகளின் சரியான பயன்பாடுகள் பற்றியும், குறிப்பிட்ட சில எழுத்துகளின் சரியான ஒலிப்பு முறைகள் பற்றியும், பிறமொழிச் சொற்கள் தமிழில் எப்படிச் சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் எழுதியிருந்தேன். இரண்டாவது பகுதியில் தமிழில் உள்ள சில மயங்கொலிச் சொற்களால் எழுத்திலும் பேச்சிலும் பொதுவாக ஏற்படக்கூடிய சில தவறுகளையும், 'கள்' என்னும் பன்மை விகுதியின் சரியான பயன்பாட்டையும் எடுத்துக் காட்டியிருந்தேன். மூன்றாவது பகுதி யான இந்தக் கட்டுரைத் தொடரில் சந்திப் பிழையில்லாமல் தமி ழைச் சரியாக எழுதுவதற்கு முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டிய வல்லினம் மிகுதல் என்பது பற்றிய விளக்கத்தை அறியத் தருகிறேன்.

> **சொற்கள் வல்லொற்று மிகுந்து வரும்போது ஒரு பொருளையும் மிகாது இருக்கும்போது வேறொரு பொருளையும் தருவதால் வல்லொற்று மிகும் இடங்கள் எவை, மிகா இடங்கள் எவை என்பதை நன்கறிந்து சொற்களைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.**

## சந்தி அல்லது புணர்ச்சி:

சந்தி எனப்படும் வடமொழிச் சொல்லுக்குத் தமிழில் புணர்ச்சி என் பர். புணர்ச்சி என்றால் சேர்க்கை எனப் பொருள்படும். சொற்க ளின் புணர்ச்சியென்பது தமிழ் மொழிக்குரிய சிறப்புகளில் ஒன்றா கும். சொற்கள் சரியாகப் புணர்ந்து வரும்போது சொல்லமைப்பின் கட்டுப்பாடுகள் பேணப்படுகின்றன. பொருள் மயக்கம் தவிர்க்கப்ப டுகின்றது. மொழியின் இயல்பு காக்கப்படுகின்றது. இனிய ஓசை பெறப்படுகிறது. ஆகவே சொற்களின் புணர்ச்சி சரியாகப் பேணப் படுவது அவசியமாகிறது.

ஒரு சொல்லில் அல்லது சொற்றொடரில் நிலைமொழியும் வரு மொழியும் சரியாகப் பொருந்தி நிற்பதைத்தான் புணர்ச்சி என அழைக்கிறோம். நிலைமொழி என்பது இரண்டு சொற்களில் முத லில் வரும் சொல். வருமொழி என்பது நிலைமொழியை அடுத்து வரும் சொல். நிலைமொழியின் ஈற்றிலுள்ள எழுத்தும் வருமொழி யின் முதலிலுள்ள எழுத்தும் ஒன்றோடொன்று சரியாகப் பொருந்தி நிற்பதே புணர்ச்சியாகும். புணர்ச்சியென்பது இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சியென இருவகைப்படும். நிலைமொழியும் வரு மொழியும் சேரும்போது எந்த மாறுபாடும் அடையாமல் இயல்பா கச் சேர்வதே இயல்புப் புணர்ச்சி எனப்படும். நிலைமொழி ஈற்றுக் கும் வருமொழி முதலுக்குமிடையே மாற்றம் ஏற்படுவது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடு தல் என மூன்று வகைப்படும். நிலைமொழி ஈற்றுக்கும் வருமொழி முதலுக்குமிடையே புதிதாக எழுத்தொன்று மிகுந்து வருவது தோன்றல் விகாரப் புணர்ச்சியாகும். திரிதல் விகாரப் புணர்ச்சியில் நிலைமொழி ஈற்றில் உள்ள எழுத்தோ அல்லது நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் உள்ள எழுத்தோ வேறோரெழுத் தாக மாற்றமடையும். சொற்கள் புணரும்போது நிலைமொழி ஈற் றில் உள்ள எழுத்து இல்லாமல் மறைந்து போவது கெடுதல் விகாரப் புணர்ச்சி எனப்படும். இதன் அடிப்படையிலே தமிழ்இலக் கணத்தில் கொடுக்கப்பட்டுள்ள புணர்ச்சி விதிகளில் ஒன்றான வல்லினம் மிகுமிடங்கள், மிகாதிருக்குமிடங்கள் என்பன பற்றியே இக்கட்டுரையில் பார்க்க இருக்கின்றோம்.

## வல்லினம் மிகுதல்:

தமிழ் இலக்கணத்தில் தோன்றல் விகாரப் புணர்ச்சியின் ஒரு பகு தியாக வல்லினம் மிகுதல் கூறப்படுகிறது. வல்லினம் மிகுதல் என் றால் என்ன? 'க், ச், ட், த், ப், ற்' ஆகிய ஆறு எழுத்துகளும் வல்லின மெய்யெழுத்துகளாகும். மெய்யெழுத்து ஒற்றெழுத்து எனவும் அழைக்கப்படும். இவை உயிரெழுத்துகளோடு சேரும் போது பிறக்கும் 'க, ச, ட, த, ப, ற' முதலான 72 எழுத்துகளும் வல்லின உயிர்மெய் எழுத்துகளாகும். இவற்றுள் 'ட, ற' ஆகிய இரு வல்லின எழுத்துகளும் தமிழில் ஒரு சொல்லின் முதலில் வருவதில்லை. 'க, ச, த, ப' ஆகிய நான்கு எழுத்துகள் மட்டுமே ஒரு சொல்லின் முதலில் வரும். எனவே இரண்டு சொற்கள் புண ரும்போது வருமொழி முதலில் இந்த நான்கு வல்லின எழுத்து வகைகளில் ஏதாவது ஒன்று வருமானால் அவற்றின் இனமான க், ச், த், ப் ஆகிய மெய்யெழுத்து மிகுந்து வரும். இவ்வாறு வல்லின மெய்யெழுத்து மிகுந்து வருவதை வல்லினம் மிகுதல், வலி மிகுதல் அல்லது வல்லொற்று மிகுதல் எனக் கூறுவர். எனி னும் எல்லா இடங்களிலும் இப்படி வல்லினம் மிகுந்து வராது.

வல்லினம் மிகுந்து வரவேண்டிய இடங்களில் வல்லினம் மிகாமல் எழுதுவதும், வல்லினம் மிகாது இருக்கவேண்டிய இடங்களில் மிகுத்து எழுதுவதுமான தவறு பொதுவாகவே காணப்படுகிறது. பல எழுத்தாளர்களும், பேச்சாளர்களும், தமிழாசிரியர்களும் கூட இவ்வாறு தவறிழைப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. வல்

லினம் மிக வேண்டிய இடத்தில் மிகாதிருப்பதும், மிகாதிருக்க வேண்டிய இடத்தில் மிகுந்து வருவதும் சொற்களின் சரியான கருத்தையும், மொழியின் இயல்பையும், இனிமையையும் சிதைத்து விடும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

மருந்து கடை, மருந்துக் கடை ஆகிய இரு சொற்றொடர்களிலும் மருந்து கடை என வல்வொற்று மிகாமல் வரும்போது அது மருந்தைக் கடை எனக் கட்டளையிடுவதாகப் பொருள்படுகிறது. வல்லொற்று மிகுந்து மருந்துக் கடை எனவரும்போது மருந்து விற்கப்படும் கடை எனப் பொருள்படுகிறது. வேலை தேடினான், வேலைத் தேடினான் ஆகிய இரு சொற்றொடர்களையும் எடுத் துக்கொண்டால் வேலை தேடினான் என்பது செய்வதற்கு ஒரு வேலையைத் தேடினான் எனவும், வேலைத் தேடினான் என்பது தொலைந்த வேலைத் தேடினான் எனவும் பொருள்படும். ஒரே யொரு வல்லின மெய்யெழுத்து மிகுந்து வருவதும், மிகாதிருப்ப தும் வெவ்வேறு பொருளைப் பிறப்பிக்கின்றன என்பதை இங்கே நாம் உணரக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறாகப் பல சொற்கள் வல்லொற்று மிகுந்து வரும்போது ஒரு பொருளையும் மிகாது இருக்கும்போது வேறொரு பொரு ளையும் தருவதால் வல்லொற்று மிகும் இடங்கள் எவை, மிகா இடங்கள் எவை என்பதை நன்கறிந்து சொற்களைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

## வல்லொற்று மிகும் இடங்கள்:

வல்லொற்று மிகுதல் தோன்றல் விகாரப் புணர்ச்சி வகையில் அடங்கும். சொற்கள் புணரும்போது வருமொழியின் முதலில் 'க, ச, த, ப' ஆகிய 4 வல்லெழுத்துகள் வருமிடங்களில் மட்டுமே அதன் இனமான வல்லொற்று மிகும் என்பதை நாம் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். ஆனாலும் அவை வரும் எல்லா இடங்களிலும் மிகுந்து வரும் என்பதும் இல்லை. வல்லினம் மிகும், மிகா இடங்களுக்கான பொது இலக்கண விதிகள் உள் ளன. அவை பற்றி அறிந்து கொள்வது மிகவும் இன்றியமை யாதது. முதலில் வல்லினம் மிகும் இடங்கள் பற்றிய விதிகளை அறிந்து கொள்வோம்.

வருமொழி முதலில் 'க, ச, த, ப' இருக்கப் பின்வருமிடங்களில் வல்லினம் மிகும்.

▶ 'அ, இ' என்னும் சுட்டெழுத்துகளின் பின் வல்லினம் மிகும்.

அ - சட்டை - அச்சட்டை
இ - பக்கம் - இப்பக்கம்

▶ 'அந்த, இந்த' என்னும் சுட்டுச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

அந்த - பையன் - அந்தப்பையன்
இந்த - புத்தகம் - இந்தப்புத்தகம்

▶ 'எ' என்னும் வினாவெழுத்தின் பின் வல்லினம் மிகும்.

எ - பக்கம் - எப்பக்கம்
எ - திசை - எத்திசை

▶ 'எந்த' என்னும் வினாச்சொல்லின் பின் வல்லினம் மிகும்.

எந்த - திசை - எந்தத்திசை

▶ 'அப்படி, இப்படி, எப்படி' என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

அப்படி - கேட்டான் - அப்படிக் கேட்டான்
எப்படி - போவது - எப்படிப் போவது
இப்படி - செய்தான் - இப்படிச் செய்தான்

▶ 'அதற்கு, இதற்கு, எதற்கு' என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

அதற்கு - சொன்னேன் - அதற்குச் சொன்னேன்
இதற்கு - கொடு - இதற்குக் கொடு
எதற்கு - கேட்டாய் - எதற்குக் கேட்டாய்

▶ 'இனி, தனி' ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும்.

இனி - காண்போம் - இனிக் காண்போம்
தனி - சிறப்பு - தனிச் சிறப்பு

▶ 'மிக' என்னும் சொல்லின் பின் வல்லினம் மிகும்.

மிக - பெரியவர் - மிகப் பெரியவர்

▶ 'என, ஆக' போன்ற சொல் உருபுகளின் பின் வல்லினம் மிகும்

எதுவென - கேட்டார் - எதுவெனக் கேட்டார்
வருவதாக - சொன்னார் - வருவதாகச் சொன்னார்

▶ உயிரீற்றுச் சொற்களின் பின், அதாவது உயிரெழுத்துகளின் ஓசையோடு முடியும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

பலா - சுளை - பலாச் சுளை
வழி - தடம் - வழித் தடம்

▶ 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை விரியின் பின், வல்லினம் மிகும். வேற்றுமை விரி என்பது வேற்றுமை உருபு வெளிப்பட்டு வருவது.

கதவை - திற - கதவைத் திற
கடிதத்தை - படி - கடிதத்தைப் படி

▶ 'கு' என்னும் நான்காம் வேற்றுமை விரியின் பின் வல்லினம் மிகும்.

ஊருக்கு - சென்றேன் - ஊருக்குச் சென்றேன்
மெட்டுக்கு - பாடு - மெட்டுக்குப் பாடு

▶ 'அது' என்னும் ஆறாம் வேற்றுமைத் தொகையில், வல்லினம் மிகும். வேற்றுமைத் தொகை என்பது வேற்றுமை உருபு வெளிப்படாமல் மறைந்து வருவது.

புலியது தோல் என்பதில் 'அது' என்னும் வேற்றுமை உருபு மறைந்து புலி என வரும்.
புலி - தோல் - புலித்தோல்

▶ வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும். ஒரு சொல் வல்லின மெய்யெழுத்துகளைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளில் ஏதாவது ஒரு எழுத்தில் முடியுமானால் அது வன்தொடர்க் குற்றியலுகரம் என அழைக் கப்படும்.

பட்டு - பூச்சி - பட்டுப் பூச்சி
கேட்டு - கொண்டான் - கேட்டுக் கொண்டான்

▶ 'சால, தவ, தட' ஆகிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால - சிறந்தது - சாலச் சிறந்தது
தட - தோள் - தடத் தோள்

▶ உவமைத் தொகையின் பின் வல்லினம் மிகும். 'போன்ற, அன்ன, ஒப்ப' முதலிய உவமை உருபுகள் மறைந்து வரும் இடங்கள் உவமைத் தொகை எனப்படும்.

மலர் - பாதம் - மலர்ப்பாதம்
குவளை - கண் - குவளைக்கண்

▶ இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும். இரு பெயரொட்டுப் பண்புத் தொகை என்பது 'ஆகிய' என்னும் சொல் மறைந்து ஒரு பொருளையுடைய சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும் சேர்ந்து வரும் சொல்லாகும்.

சாரை - பாம்பு - சாரைப்பாம்பு
மார்கழி - திங்கள் - மார்கழித் திங்கள்

▶ எண்ணுப்பெயர்களில் எட்டுக்கும் பத்துக்கும் பின் வல்லினம் மிகும்.

எட்டு - தொகை - எட்டுத்தொகை
பத்து - பாட்டு - பத்துப் பாட்டு

▶ ஓரெழுத்து ஒருமொழியின் பின் வல்லினம் மிகும். ஓரெழுத்து ஒருமொழி என்பது ஓரெழுத்து ஏதாவது ஒரு பொருள் தரும் வகையில் அமைந்திருப்பது.

தை - திங்கள் - தைத்திங்கள்
தீ - பிடித்தது - தீப்பிடித்தது

▶ ஐகார ஓரெழுத்துச் சொற்கள் தவிர ஓரெழுத்து ஒருமொழியுடன் 'கள்' விகுதி இணையும் இடங்களின் பின் வல்லினம் மிகும். பை, கை போன்ற ஐகார ஓரெழுத்துச் சொற்கள் இணையும் இடங்களில் வல்லெழுத்து மிகுவதில்லை.

பூ - கள் - பூக்கள்
ஈ - கள் - ஈக்கள்

▶ தனிக் குறில் எழுத்தை அடுத்து வரும் ஆகார எழுத்தின் பின் வல்லினம் மிகும்.

நிலா - சோறு - நிலாச் சோறு
கனா - கண்டேன் - கனாக் கண்டேன்

▶ திசைப் பெயர்களின் பின் வல்லொற்று மிகும்.

வடக்கு - பக்கம் - வடக்குப் பக்கம்
கிழக்கு - பகுதி - கிழக்குப் பகுதி

▶ 'அகர, இகர' ஈற்று வினையெச்சத்தின் பின் வல்லினம் மிகும். வினையெச்சம் என்பது முற்றுப்பெறாத ஒரு வினைச் சொல். அது இன்னொரு வினைச் சொல்லுடன் சேர்ந்து முற்றுப் பெறும்.

ஆட - சொன்னான் - ஆடச் சொன்னான்
தேடி - பார்த்தான் - தேடிப் பார்த்தான்

▶ ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும். ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பது ஈற்றெழுத்து மறைந்து எதிர்மறைப் பொருள் தரும் வினைச்சொல். அது பெயர்ச் சொல்லுடன் சேர்ந்து அதற்கு விளக்கம் தருவதாக இருக்கும். எடுத்துக்காட்டாக 'எழுதாத' என்னும் பெயரெச் சத்தில் ஈற்றெழுத்தான 'த' மறைந்து 'எழுதா' என வருவது.

எழுதா - கவி - எழுதாக் கவி
கூவா - குயில் - கூவாக்குயில்

▶ சில உருவகச் சொற்களின் பின் வல்லினம் மிகும். உருவகம் என்பது உவமையாக உள்ள பொருளுக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் வேறுபாடு தோன்றாமல் இரண்டும் ஒன்று என்ற உணர்வு தோன்ற இரண்டையும் ஒன்றாகக் கூறுவது. இதில் 'போல, ஒப்ப' போன்ற உவம உருபு தோன்றாது இருக்கும்.

விழி - சுடர் - விழிச் சுடர்
வாழ்க்கை - படகு - வாழ்க்கைப் படகு

மேற்கண்டவாறு வல்லினம் மிகும் இடங்களை இனங்கண்டு பயன் படுத்தத் தொடங்கினாலே எழுத்திலும் பேச்சிலும் இழைக்கப்படும் பல தவறுகளைத் தவிர்த்து விடலாம். சொற்களை ஒலித்துப் பார்த் தாலே வல்லினம் மிகும் இடத்தையும் மிகா இடத்தையும் எளிதா கவே அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். அடுத்து வரும் இதழில் வல்லொற்று மிகா இடங்கள் பற்றிய விளக்கத்துடன், பேச்சு வழக்கிலும், கவிதைகளிலும், உரை நடைகளிலும் வல் லொற்று மிகுத்தும், மிகாமலும் இழைக்கப்படுகின்ற பொதுவான பல தவறுகளையும் எடுத்துக்காட்டிச் சரியாகத் தமிழறியும் வழிமு றைகளை விளக்கவுள்ளேன்.



(இன்னும் வளரும்)

shanmugarajah@thaiveedu.com



# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO **75%** REFINANCE

## MONTHLY SAVING

$2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



# முள்ளிவாய்க்கால் நினைவுகூரலும் நம் முன்னாலுள்ள வரலாற்றுப் பொறுப்பும்

பன்னிரண்டாவது முள்ளிவாய்க்கால் நினைவு கூரல் இந்த மாதம் நினைவுகூரப்பட இருக்கின்றது. தற்போது வரை பொதுப்பரப்பில் நிகழ்வு தொடர்பான உரையாடல்களும் திட்டமிடல்களும் பெரிதளவு இடம்பெறவில்லை. இதற்கு புதிய அரசு உருவாக்கியிருக்கும் அச்சம் பிரதான காரணம். யாழ். பல்கலைக்கழகத்தில் உடைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் கடந்த மாதம் மீளப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. மிகுந்த நெருக்கடிகளின்பின் மாணவர்களும் சமூகமுமாக வழங்கப்பட்ட அழுத்தங்களினால் நினைவுச் சின்னம் மீள வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது ஒரு அரிதான உதாரணம். மற்ற அரசியல் சின்னங்களின் மீதோ நிகழ்வுகளில் மீதோ இத்தகைய அழுத்தங்களும் ஒருங்கிணைவும் பரந்தளவில் உருவாக வாய்ப்புக் குறைவு. கடந்த பதினோரு ஆண்டுகளாக நினைவு கூரல்களிற்கான பொறிமுறைகளை உருவாக்குதல் தொடர்பில் பல்வேறு கலந்துரையாடல்களும் அமைப்பாக்க முயற்சிகளும் இடம்பெற்ற போதிலும் அவை எவையும் வலிமையான அமைப்பாக்கமாக உருவாகவில்லை.

இதன் விளைவுகளே இத்தகைய அராஜகமான அரசாங்கத்தை எதிர்கொள்ளும் தைரியத்தை மக்களுக்கு வழங்கவில்லை. ஓர் அமைப்பாக மாறியிருந்தால் அதன் வழி நாம் நமக்கான ஒரு திட்டத்தினைக் கொண்டிருக்கலாம். அதற்கான மாறுபடாத பொது நிகழ்ச்சி வரைவொன்றை ஆகியிருக்கலாம். இந்தமுறை இது அரசியல்வாதிகளின் முன்நிலையிலேயே நிகழ்த்தப்பட வேண்டிய தொன்றாக ஆகலாம். அதற்கான ஆபத்தை எதிர்கொள்ள வேண்டியது அவர்களே, அது சரியானதும் தான். ஆனால், மக்களை அரசியல்மயப்படுத்துவதிலிருந்து காலத்தைப் போக்கிக்கொண்டிருக்கும் செயல்பாடே இது. காரணம் இதனை முன்னெடுத்து அறிவியல் பூர்வமானதாக ஆக்கவேண்டிய பொறுப்பு பல்கலைக்கழகத்திடம் இருக்க வேண்டியது. ஆய்வுகளும் பொது உரையாடல்களுமாக இவை வளர்த்துச் செல்லப்பட்டு, அடுத்த தலைமுறைக்கு வரலாற்று உணர்வுடன் கடத்தப்பட வேண்டியது.

நாம் வரலாற்று உணர்வுடன் கூடிய நினைவுகூரலாக முள்ளிவாய்க்கால் நினைவை மாற்றாமல் விட்டால் அடுத்து வரும் சந்ததிகள் அதை ஒரு பொதுச்சடங்காக மட்டுமே விளங்கிக்கொள்ளும், தற்போது அவர்கள் கடந்த கால வரலாற்றை அணுகும் போக்கு இதை வெளிக்காட்டுகிறது. வரலாற்றிலிருந்து ஒரு

துண்டை மட்டும் வெட்டியெடுத்து அவர்கள் முன்வைக்கிறார்கள், அதன் வெளியேயே அவர்களது விடுதலை பற்றிய பார்வை உருவாக்கி வருகிறது, இது நீண்டகால அடிப்படையில் ஆபத்தான போக்கு.

முள்ளிவாய்க்கால் நினைவு குரல் என்பது நீண்டதொரு ஆயுத வழிப் போராட்டத்தின் முடிவு. அதற்கான பாதைகள் பல்வேறு திசைகளிலும் இருந்து வெளிப்பட்டது. பல்வேறு ஆயுதக் குழுக்கள் தமிழ் மக்களின் விடுதலையின் பேரில் களம் கண்டிருக்கிறார்கள். ஏராளமான தவறுகளும் குற்றங்களும் முற்போக்கானவைகளும் நிகழ்ந்த நீண்ட நெடிய விடுதலைப் போராட்டத்தின் உட்சரடுகளை அப்படியே விட்டுவிட்டு ஓர் ஆயுத வழி இயக்கத்தின் வரலாறாகவும், அந்த வரலாறும் பல்வேறு புனைவுகளின் வழியும், கற்பனைகளினதும் சாகசங்களினதும் வழியும் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்பொழுதுள்ள தலைமுறை வரலாற்றை சாகசக் கதையாக மாற்றுவது அதன் மனவடுவுக்கோ அல்லது தாழ்வுச் சிக்கலுக்கோ உடனடி நிவாரணம் போல் தோற்றமளிக்கலாம். ஆனால் விடுதலை தொடர்பில் மக்களின் உரிமைகள் தொடர்பில் அக்கறையும் விழிப்பும் பெற ஒரு வரலாற்று மாணவரின் பார்வையே இன்றைக்குள்ள தலைமுறைக்குத் தேவை. அது நிகழாது விடில் ஒரு சாகசக் கதையின் வாரிசுகளாக மட்டுமே தங்களைச் சுருக்கிக் கொள்வார்கள். மாறாக அவர்கள் வரலாற்று மாணவரின் பாத்திரத்தை எடுத்தால் மாத்திரமே வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட சரி பிழைகளை சுயவிமர்சனத்துடன் அணுகி தமது காலத்திற்கான அரசியற் பார்வையை அவர்களால் உருவாக்கிக் கொள்ள இயலும்.

மக்களை அரசியல்மயப்படுத்துவதென்பது அவர்களின் பிரச்சினைகளை அவர்கள் அறிந்து வைத்திருக்கும் ஒரு செயற்பாடல்ல. அதை அவர்கள் ஏற்கெனவே அறிவார்கள். ஏனெனில் அவர்கள் மீது தான் அந்த ஒடுக்குமுறைகள் நிகழ்கின்றன. அரசியல்மயப்படுத்தலென்பது குறித்த ஒடுக்குமுறைகள் உருவாகி இயங்கும் வழிகளையும் வேர்களையும் மூலக்காரணிகளையும் இனங்காணச் செய்வதும், அந்த மூலக்காரணிகளுக்கு எதிராக அவர்களின் ஜனநாயக வழிப் போராட்டங்களாலும் அறிவூட்டலினாலும் ஒரு வலிமையான எதிர்த்தரப்பை நாட்டில் கட்டியெழுப்புவதும், மேலும் பிற ஜனநாயக சக்திகளுடன் கூட்டுகளை உருவாக்குவதும், அதே போல் நாம் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகளை சக இனங்களுக்கு இன்னும் விரிவாக அறிமுகம் செய்து நம் உரிமை களின் தார்மீகத்தை வலுப்படுத்தவும் வேண்டும். இவை ஒவ்வொன்றும் கடுமையான உழைப்பையும் அர்ப்பணிப்பையும் கோரும் செயல்கள். ஆனால், நீண்ட கால அடிப்படையில், இழப்புகள் குறைந்த, நாம் அடைய நினைக்கும் அரசியல் உரிமைகளைப் பெற அவையே வழிகள்.

இங்குள்ள ஆதரமான பிரச்சினைகளுக்கு, இங்குள்ள தேர்தல் சார்ந்த அரசியல் கட்சிகளின் போக்கும் அமைப்பு முறையும் பாரிய தடையாக இருக்கின்றது. இருக்கின்ற கட்சிகளில் எது ஒப்பீட்டளவில் பரவாயில்லையோ, எந்த நபர் ஒப்பீட்டளவில் திறமையானவர் என்று கருதுகிறார்களோ அவர்களுக்கு வாக்களிப்பதுடன் தமது அரசியல் கடமை முடிந்து விட்டது, மிகுதியை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று கருதுகிறார்கள். ஆயுத வழிப் போராட்டத்தின் போதும் இத்தகைய ஆதரவு அல்லது சார்பு நிலையையே பெரும்பான்மை மக்கள் எடுத்திருந்தனர். மாறான, அறிவுத் தரப்புகளை மக்கள் நிராகரித்திருந்தனர். இது ஒருவர் மீது தமது பொறுப்புகளைச் சுமத்தி விட்டு ஒதுங்கி நிற்கும் போக்காகும். இதுவே குறித்த அமைப்புகளோ அல்லது தனி நபர்களோ அதிகார மையங்களாகத் திரளவும் அவர்கள் சர்வாதிகாரத் தன்மையான நிலைப்பாடுகளை எடுக்க வழியமைத்துக் கொடுப்பதும்.

அரசியலில் எல்லா மக்களும் பங்குதாரர்கள். எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்புள்ள செயற்பாடு அது. மக்கள் அரசியலில் பொறுப்பெடுக்க வேண்டுமென்றோ அதற்கு அவர்கள் எவ்வாறு அரசியலை விளங்கிக் கொள்ள வேண்டுமென்றோ கட்டமைப்பு சார்ந்த பொறிமுறைகளுடன் தொடர்ச்சியாக மக்களுடன் பயணிக்கும் ஒரு கட்சியையாவது தமிழ்ப்பரப்பில் நாம் பார்க்க முடியுமா? இல்லை. அவர்கள் தேர்தல் நேரக் கட்சிகள். அதற்கான வாக்கு வங்கிகள் உள்ள பொதுப்பிரச்சினைகளையே அவர்கள் கையிலெடுப்பார்கள். ஆனால் நமது சமூகமோ வெளியில் உள்ள ஒடுக்குமுறைகளை எதிர்கொள்ளும் அதே நேரம் தனக்குள் நிகழும் ஒடுக்குமுறைகள் மற்றும் பாரபட்சங்கள் குறித்தும் சிந்திக்க வேண்டும். அவை குறித்துப் பேசும் அரசியற் கட்சிகள் நம்மிடையே இருக்கின்றனவா? சாதியவாத, மதவாத, பெண் ஒடுக்குமுறை சார்ந்த, நமது கல்வியமைப்பு மற்றும் எதிர்காலம் சார்ந்த என்ன வகையான அகச் சிக்கல்கள் பற்றி அவை வாய் திறக்கின்றன.

நமது புலம்பெயர் சமூகம் பல்வேறு நிகழ்ச்சி நிரல்களுடன் இயங்கக் கூடியது. வகை வகையான குழுக்கள், அரசியல் கள யதார்த்தங்களுக்கு வெளியே செய்திகளாலும் சமூக வலைத்தளங்களாலும் உண்டாகும் தோற்றத்தை பெரும்பான்மையானவர்கள் நம்புகிறார்கள். அவை நிலத்தின் ஒரு பகுதியை, நீரோட்டத்தை வெளிப்படுத்துபவை. ஆனால், உள் நீரோட்டங்கள் நிலையானவை, சிக்கல்களின் பிரதான மையங்கள் அவை. அவற்றை மாற்றுவதற்கு பெரும்பான்மை புலம்பெயர் சமூகம் தம் அறிவையும் நிதி பலத்தையும் செலவளிப்பதில்லை. சமூக சேவைகள் என்ற வகைக்குள் வருகின்ற செயல்களுக்கு நிதியளிப்பது நல்லது தான். ஆனால் நம் மக்களை அப்படி நிதியளிப்பதன் மூலமே வாழ வைக்கும் அரசியல் அமைப்பில் தலையீடு செய்வதற்கு அவர்களின் பண்பாட்டு அரசியல் நடவடிக்கைகளில் அக்கறையற்றிருப்பது நல்லதல்ல. பண்பாட்டு அரசியல் நடவடிக்கைகளே சமூகத்தின் எதிர்கால வடிவத்தை தீர்மானிக்க வல்லவை.

புலம்பெயர் மக்கள் நிலத்தின் மீதான ஏக்கம் கொண்டவர்கள். அவர்களின் அக்கறையும் நியாமனாதே, ஆனால் நிலத்தில் மட்டுமல்ல புலத்தின் மக்களும் அரசியல்மயப்பட வேண்டியவர்கள் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். பொருளாதார, பண்பாட்டு மற்றும் அகக் கட்டமைப்புகளில் நிலையான மாற்றங்களை உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபாட்டுடன் அவதானம் கொள்ள வேண்டும். முள்ளிவாய்க்கால் நினைவு கூரல் மற்றும் ஏனைய நினைவு கூரல்கள் அரசியல் அர்த்தம் பெறுவதற்கு புலம்பெயர் சமூகம் உணர்ச்சி மற்றும் எழுச்சி அடிப்படையில் சிந்திப்பதைதவிட, நிதானமான அறிவார்ந்த அடிப்படையில் இயங்க வேண்டும். ஏராளமான இழப்புகளை சந்தித்திருக்கும் நமது சமூகம் உணர்ச்சியின் வேகத்தில் செயற்படுவது மீண்டும் இழப்புகளை ஏற்படுத்தக் கூடியது. இன்னும் எதுவும் மாறிவிடவில்லை என்பதை மனதில் இருத்தியே செயற்பட வேண்டும்.

இந்தப் பின்னணிகளுடனே நாம் முள்ளிவாய்க்கால் நினைவு கூரலை ஒன்றுபட்ட சமூக இயக்கமாக நம்மால் உருவாக்க முடியவில்லை. நமக்குள் உள்ள உள்ளக ஒடுக்குமுறைகளைப் பேசாமால், அவற்றை மாற்றாமல் நாம் ஒரு சமூகமாக அரசியல் மயப்படுவதென்பது சாத்தியமில்லை. அது நம் விடுதலையின் பாதையை இன்னும் கடினமானதாக்கும். இம்முறை யார் விளக்கேற்றுவது, என்ன வகையில் நிகழ்ச்சியைத் திட்டமிடுவது என்பதல்ல நம் பிரச்சினை, நினைவுகூரலை ஒரு அரசியல் செயற்பாடாக அதன் முழுதான அர்த்ததில் வெளிப்படுத்துவதே தேவை. எத்தனை புத்தகங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன? எத்தனை ஆவணங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன? எத்தனை ஆவணப் படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன? நமது அரசியற் பிரச்சினை தொடர்பில் உருவாகி வெளிவரும் கலை இலக்கியங்களை நாம் எவ்வளவு தூரம் அறிகிறோம். வாங்குகின்றோம், உரையாடுகின்றோம். நம்மை ஆள்பவர்கள் நமது அறிவை சுருக்கி வைக்கவே எப்போதும் விரும்புவார்கள். நாம் அறிவுள்ள சமூகமாக அரசியல்மயப்படுவதே அதற்கான எதிர் நடவடிக்கை.

இறுதியாக, நினைவு கூரல்கள் என்பவை சடங்குகள் அல்ல. அவை உயிர்ப்பு மிகுந்த வரலாற்றின் கண்ணிகள். அவற்றை கடைப்பிடிப்பது எவ்வளவு முக்கியமோ, நினைவு கூர்வது எவ்வளவு முக்கியமோ அதேயளவு முக்கியம் அவற்றை விடுதலைப் பாதையின் முடிவுறாத கண்ணிகளாக நீடிப்புச் செய்வதும். அதற்கு நாம் அரசியல் கூருணர்வு மிக்க வரலாற்று மாணவர்களாகவும் அரசியல்மயப்பட்ட அமைப்பாகவும் மாற்றம் பெறுவதே நம் முன்னாலுள்ள வரலாற்றுப் பொறுப்பு.

info@thaiveedu.com

# நந்திக்கடல் பேசுகிறது தொகுப்பை முன்வைத்து...

- அருண்மொழிவர்மன்

ஈழப்போராட்டத்தில் முள்ளிவாய்க்கால் அழிவுகள் குறித்தும், தமிழர் மீது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை குறித்தும், பின் போர்க்கால நிலைமைகள் குறித்ததுமான பல்வேறு தொகுப்புகளும் அறிக்கைகளும் பதிவுகளும் வெவ்வேறு தரப்பினரால் வெளியிடப்பட்டுள்ளன என்றாலும், இன்று வரை போரினால் நிகழ்த்தப்பட்ட அழிவுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டு முடியவில்லை என்பதே உண்மை. அதுபோல போர் நிறைவடைந்த பின்னரும் தொடருகின்ற பண்பாட்டு இனப்படுகொலையும் அதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அம்பலப்படுத்தப்படவில்லை. இவை குறித்த செய்திகளும் பதிவுகளும் பெரும்பாலும் தனித்த சம்பவங்களாகவே கடந்து செல்லப்படுகின்றன. இத்தகைய சூழலில் இந்த அழிவுகளை ஆவணப்படுத்துவதில் இருக்கின்ற குறை-களைப் பற்றிய பிரக்ஞையுடன் ஊறுகாய் மற்றும் வொய்ஸ் வெளியீடாக 'நந்திக்கடல் பேசுகிறது: பின்போர்க்கால மும்களப் பதிவுகளும்' என்கிற நூல் ஜெராவைத் தொகுப்பாசியராகக் கொண்டு 2019ல் வெளியாகி இருக்கின்றது. இத்தொகுப்பின் நோக்கம் என்னவென்பது குறித்து நூலுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்,

'போர் நிறைவடைந்து பத்தாண்டுகளுக்குள் தமிழர்களாகிய நாம் ஆவணப்படுத்தி வரலாற்றுப் பாடமாக சந்ததி கடத்த வேண்டிய பல்வேறு விடயங்கள் பேசப்படாமல் இருக்கின்றன. ஆவணப்படுத்தப்படாமல் இருக்கின்றன. வேகமாக அழிந்து வரும், கலப்புக்கு உள்ளாகி வரும் இனம் என்ற வகையில் நம் முன் இருக்கும் முக்கிய பணியை தவறவிட்டு வருவது பரவலாக உணரப்படுகின்றது'

போரின்போதும் போருக்குப் பின்னைய காரணிகளாலும் ஏற்பட்ட 'பின்போர் விளைவுகளையும்' திட்டமிட்ட முறையில் தொடர்ந்து நடத்தப்படும் பண்பாட்டு இனப்படுகொலையையும் பதிவுச்செய்வதாகவும் ஆவணப்படுத்துவதாகவும் இத்தொகுப்பு அமைகின்றது. அதன் அடிப்படையில் தொகுக்கப்பட்ட 41 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. முள்ளிவாய்க்கால் போர் தொடர்பாகவும் போருக்குப் பிந்தைய நிலைமைகள் தொடர்பாகவும் வெளிவந்த பெரும்பாலான அறிக்கைகளும் ஆய்வுகளுடன் தரவுகள், புள்ளிவிபரங்கள் போன்றவற்றை உள்ளடக்கி ஐநா மற்றும் மனித உரிமை அமைப்புகளுக்குச் சமர்ப்பிக்கின்ற நோக்குடன் எழுதப்பட்டவையாகவோ அல்லது ஆய்வுநோக்கில் எழுதப்பட்டவையாகவோதான் அமைந்திருக்கின்றன. மாறாக இந்த நூலில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள காணமற்போனவர் பிரச்சினைகள், நுண்கடன் பிரச்சினைகள், முன்னாள் போராளிகள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் உள்ளிட்டவற்றை பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரில் சென்று உரையாடி அவர்களது வாய்மொழிப்பதிவுகளைத் தொகுத்துக் கட்டுரையாக்கும் போக்கு தனித்துவமாகத் தெரிகின்றது. பாதிக்கப்பட்டவர்களின் குரல்களிலேயே அவை தொகுக்கப்பட்டிருப்பதுடன் அதனால் உருவாகக்கூடிய ஜனநாயகத்துக்கான வெளியும் முக்கியமானதாகும். சமகாலத்தில் நடக்கின்ற அபிவிருத்தி என்ற பெயரால் நிகழ்த்தப்படும் குடியேற்றங்கள், நில ஆக்கிரமிப்பு, நினைவேந்தலின் தேவையும் நினைவுகூரும் உரிமை மறுக்கப்படுதலும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் உருவாக்கம், கடல் அபகரிப்பு, மரபுரிமைகள் அடையாளம் மாற்றப்பட்டல் ஆகிய பிரச்சினைகளைப் பற்றியதாக அமைந்திருக்கின்ற ஏனைய கட்டுரைகளும் கூட எளிமையாகவும் சுருக்கமாகவும் அமைந்திருப்பதும் முக்கியமானதாகும். குறித்த நோக்கத்திற்காக செயற்படுபவர்கள் அந்த விடயம் பற்றிய புரிதலும் விழிப்புணர்வும் பரவலாக மக்களைச் சென்றடையவேண்டும் என்பதில் கவனம் செலுத்துவது முக்கியமானது. இந்த நூலின் உள்ளடக்கமும் வடிவமும் நூல் பரந்துபட்ட மக்களைச் சென்றடையக் கூடியதாக அமைகின்றது.

பின்போர்க்காலத்தின் மோசமான விளைவுகளில் ஒன்றாக நுண்கடன் பிரச்சினைகளைச் குறிப்படலாம். இத்தொகுப்பில் செ. ராஜ-சேகர் எழுதியிருக்கின்ற 'கையேந்தும் கலாச்சாரத்தைத் தந்துவிட்டுப்போன 2009' என்கிற கட்டுரை நுண்கடன்களால் நிகழும் கொடுமைகளைப் பற்றிக் கூறுகின்றது. வங்கிக் கடன்களுக்கான வட்டி 8% ஆகவும், சுயதொழிலுக்கான கடன் வட்டி 14% ஆகவும், அடகு வைக்கும்போதான வட்டி 15 - 21% ஆகவும் இருக்கின்றபோது நுண்கடன் 40% - 220% இருப்பதாகக் கூறும் இக்கட்டுரை நுண்-கடன்களால் பாதிக்கப்பட்டவர்கள் பலரின் கதைகளையும் கூறுகின்றது. நுண்கடன்களை வழங்குபவர்கள் பெண்களைப் பொறுப்பாக வைத்தே நுண்கடன்கள் வழங்கும் நடைமுறையைக் கொண்டுள்ளனர், இது ஒருவிதத்தில் சமூகத்தில் பெண்கள் பற்றி இருக்கக்கூடிய பொதுப்புத்தி சார்ந்த அடையாளத்தைப் பேணுகின்ற போக்கினை வைத்துச் செய்கின்ற சுரண்டலேயாகும். அதிகரித்து வருகின்ற தற்கொலைகள், மன அழுத்தம் / உளவியல் தாக்கம் என்பவற்றுக்கும் நுண்கடன்களுக்கும் இருக்கின்ற தொடர்புகள் குறித்து ஆராய்வதுடன் நுண்கடன்கள் கொடுப்பவர்களுக்கான நிதிமூலங்கள் யாவை, புலம்பெயர் தமிழர்களுக்கும் நுண்கடன்களுக்கும் இருக்கக்கூடிய தொடர்பு என்பன குறித்தும் ஆய்வுகளை நீட்டிப்பது அவசியம் என்றே கருதுகின்றேன்.

இத்தொகுப்பில் பரணி கிருஷ்ணரஜனி எழுதிய 'இன அழிப்புப் பின்புலத்தில் பெண்கள்', 'நந்திக்கடல் கோட்பாடு ஒரு அறிமுகம்' என்கிற இரண்டு கட்டுரைகள் இருக்கின்றன. இன அழிப்புப் பின்புலத்தில் பெண்கள் என்கிற கட்டுரை இனப்படுகொலைகளின் போது பெண்கள் மீது நிகழ்த்தப்படுகின்ற வன்முறைகள் குறித்தும் அவை குறித்த இனத்தவருக்கு ஏற்படுத்தக்கூடிய உளவியல் தாக்கம் குறித்தும் கூறுகின்றது. அவை முக்கியமான விடயங்கள். ஆனால் அவற்றுக்கான தீர்வுகளாக இந்தக் கட்டுரை குடும்ப அமைப்பைப் பேணுவதையும் குழந்தைகளை அதிகம் பெற்றுக் கொள்வதையும் முன்வைக்கின்றது. இந்தக் கட்டுரையில் சொல்லப்படுகின்ற பிரச்சினைகள் இருப்பது உண்மையென்றாலும் அதற்காக முன்வைக்கின்ற தீர்வு மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. பெண்ணுரிமையையும் இனத்தின் பண்பாட்

டையும் ஒரே சமயத்தில் காப்பதில் சிக்கல்கள் இருப்பதாகப் பேசுகின்ற இந்தக் கட்டுரை இனத்தூய்மையையே மறைமுகமாக முன்னிறுத்துவதாகத் தெரிகின்றது. அதற்காகப் பெண்ணுரிமையை விட்டுக்கொடுக்கவேண்டும் என்று மறைமுகமாக அழுத்தம் கொடுக்கின்றது. தேசியவாதத்தை முன்வைத்துச் செயற்படுபவர்கள் அதன் உள்ளடக்கமாக சமுகநீதி இருக்கவேண்டும் என்பதை கட்டாயமான நிபந்தனையாக கவனத்திற்கொள்ளவேண்டும். அப்படி இல்லாமல் இனத்தூய்மையின் அடிப்படையில் தேசியத்தைக் காட்ட வெளிக்கிட்டால் அது பாசிசத்துக்கே அழைத்துச்செல்லும். அதுபோல பரணி கிருஷ்ணரஜனி எழுதியுள்ள மற்றோரு கட்டுரையான ‘நந்திக்கடல் கோட்பாடுகள் ஓர் அறிமுகம் என்ற கட்டுரையும் அதில் அவர் முன்வைக்கின்ற விடயங்களும் கடுமையாக விமர்சிக்கவும் நிராகரிக்கவும்பட வேண்டியன. தற்செயல் நிகழ்வுகளை-யெல்லாம் திட்டமிட்ட தந்திரோபாயங்களாகவும் வியூகங்களாகவும் கட்டமைத்து எழுதிக் குவிக்கும் இப்படியான கட்டுரைகள் மக்களை ஏமாற்றும், வீணாக உணர்ச்சிவசப்பத்தி மந்தைத்தனமாக வைத்திருக்கும் செயல்.

குடியேற்றத் திட்டங்களின் மூலம் செய்யப்படும் நில அபகரிப்பு, அபிவிருத்தித் திட்டம் என்ற பெயர்களில் தொடர்ந்து நடந்துவரும் நில அபகரிப்பு என்பன குறித்த கட்டுரைகள் மகாவலி அபிவிருத்தித் திட்டம், வெலி ஓயா அபிவிருத்தித் திட்டம், வவுனியாவில் நடந்துள்ள குடியேற்றங்கள், பெயர் மாற்றங்கள் என்பற்றைப் பற்றிக் கூறுகின்றன. ஜெனோஜன் எழுதியிருக்கின்ற ‘தமிழர் நீக்கம் செய்யப்படும் தமிழர் தலைநகரம்’ என்ற கட்டுரையில் திருகோணமலையை மையமாக வைத்து நடக்கின்ற

- அபிவிருத்தியின் பெயரிலான நில அபகரிப்பு,
- முஸ்லிம்களாலும் இராணுவத்தினராலும் பழங்குடி மக்களின் நிலம் அபகரிக்கப்படுதல்,
- வனவளத் திணைக்களத்தினூடாக நிலம் அபகரிக்கப்படலும் சேனைப்பயிர்ச்செய்கையைத் தடைசெய்துவருவதால் மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார நெருக்கடிகளும்,
- தொல்பொருள் திணைக்களத்தின் நிலக்கையகப்படுத்தல்கள் (பல்வேறு வரலாற்றுப் பின்னணி கொண்ட இடங்கள் பற்றி வரலாற்றுத் திரிபொன்றை ஏற்படுத்தி மக்கள் குடியேறவோ கடமைகளைச் செய்யவோ முடியாத இடமாகப் பிரகடனம் செய்தல்)
- புத்தர் சிலைகளை நிறுவி அதனூடாப் புனையப்படும் வரலாறு.

ஆகியவற்றைப் பற்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்ட நல்லதோர் கட்டுரை. வரலாற்று ரீதியாக தமிழர்கள் தொடர்ந்து வாழ்கின்ற பல்வேறு பிரதேசங்களிலும் நடக்கின்ற திட்டமிடப்பட்ட அரச ஆக்கிரமிப்புகளை இந்தக் கட்டுரையை சட்டகமாக வைத்து இலகுவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

ஈழத்தமிழருக்கு நடந்த இனப்படுகொலைக்காகப் போராடிவருவதாகச் சொல்கின்ற அமைப்புகள்கூட இனப்படுகொலை என்றால் என்ன என்பது பற்றிய பிரக்ஞையை வெகுஜனமக்களிடம் எடுத்துச் செல்வதற்காகப் போதியளவு வேலை செய்யவில்லை என்றே சொல்லவேண்டும். இனப்படுகொலை என்பது வெகுஜன மக்களிடம் ஒரு ‘சொல்லாகவே’ பதியவைக்கப்பட்டிருக்கின்றதே அன்றி, ஒரு அரசியல் சொல்லாடலாக அது சென்றடையவில்லை. அந்த விதத்தில் பார்க்கின்றபோது சேரனும் ஷெரின் ஐக்கனும் சேர்ந்து எழுதியுள்ள ‘ருவாண்டா மற்றும் இலங்கை’ இரு இனப்படுகொலைகளின் கதை என்கிற கட்டுரை முக்கியமானது. இக்கட்டுரை ருவாண்டாவிலும் இலங்கையிலும் நடந்த இனப்படுகொலைகள் குறித்தும் அவற்றிற்கிடையிலான பொதுத்தன்மைகள் குறித்தும் கூறுகின்றது. ஈழத்தமிழர்கள் தமது உரிமைகளுக்குக் குரலெழுப்பும்போது அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா என்று, பிற நாடுகள் மீதும் தேசிய இனங்கள் மீதும் ஒடுக்குமுறையைச் செய்கின்ற நாடுகளிடமே தமக்கு ஆதரவு கேட்பது வழமை. மாறாக இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட தேசிய இனத்தவர்களுடன் உரையாடுவதும் அவர்களை எமது உணர்வுத்தோழமைகளாக வென்றெடுப்பதுமே ஆக்கபூர்வமானதும் வினைத்திறன் தருவதுமாகும்.




நினைவேந்தல்களின் தேவையும் நினைவுகூர்வதற்கான உரிமைகள் மறுக்கப்படுவதும் பற்றிய கட்டுரைகளில் வண. பிதா அருட்திரு. எழில்ராஜன் எழுதிய பின் - முள்ளிவாய்க்கால் வரலாற்றுத்தளத்தில் நினைவுத்திறம் என்கிற கட்டுரையும் பாசன அபேவர்த்தன எழுதிய ‘பத்தாண்டுகளில் முள்ளிவாய்க்கால் மரபு’ என்ற கட்டுரையும் முக்கியமானவை. இந்தக் கட்டுரைகள் எழுதப்பட்டு இத்தொகுப்பு வெளிவந்தபோது இருந்ததைவிட நினைவுகூர்வதற்குரிய உரிமைகள் மோசமாக மறுக்கப்பட்டிருக்கின்ற சூழலில் இந்தக் கட்டுரைகள் இன்னும் முக்கியத்துவமானவை. இலங்கையின் நீதி என்கிற கட்டுரையும் போருக்குப் பின்னரான பத்தாண்டுகளில் தமிழ் ஊடகத்துறை என்கிற கட்டுரையும் ஊடகத்துறையும் நீதித்துறையும் எப்படி செயலிழந்துபோயுள்ளன என்பதைக் காட்டுவன, குறிப்பாக நீதித்துறை பற்றிய கட்டுரையில் 1996ல் மூதூர் குமாரபுரத்தில் நடைபெற்ற கொலைகளுக்கும் 2006 ஜனவரியில் திருகோணமலை கடற்கரையில் வைத்து 5 மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்குமான நீதிமன்ற விசாரணைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டுகின்றது.

இத்தொகுப்பில் உள்ள விடயங்கள் ஏற்கனவே தெரிந்தவையும் கேள்விப்பட்டவையும் என்று தோன்றக்கூடும். ஆனால் ஒரு தொகுப்பாக அவை நூலுருவில் வெளிவந்திருப்பது முக்கியமானது. அதனூடாக ஒரு உரையாடலையும் அறிவூட்டலையும் ஒருங்கே தொடக்கக்கூடியதாக இருக்கின்றது.



arunmozhivarman@thaiveedu.com

# குமுதினிப் படுகொலை நினைவறா நாள் மே 15

- மா. சித்திவினாயகம்

மே மாதம் தமிழர்களின் இரத்தத்தால் குளிப்பாட்டப் பட்ட மாதம். மே மாதம் தமிழர்களின் கண்ணீரின் மாதம்.

அப்பாவியான தமிழ்ப்பயணிகளை சிறிலங்காப் படையினர் ஆயுத தாரிகளாய் சிதைத்தழித்த கொடூரத்தின் நாள் மே 15. அதே போன்று முள்ளிவாய்க்காலில் லட்சோப லட்சம் தமிழர்களை அழித்தொழித்த மாதமும் மே 18 தான்.

1985ம் ஆண்டின் மே மாதம் 15ம் நாள் காலை ஏழு மணிக்கு ஈழதேசத்தின் முத்தெனத்திகழும் நெடுந்தீவின் மாவிலி துறை முகத்திலிருந்து 64 பயணிகளுடன் புறப்பட்ட குமுதினியெனும் கடல் வழிப் படகு அரை மணி நேர பயணத்தின் பின் சிறிலங்கா கடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டது. இரு சிறிய பிளாஸ்ரிக் படகில் வந்த சிறிலங்கா கடற்படையினர் குமுதினிப் படகை நிறுத்தியபின்னர் அதில் இருந்த 6 கடற்படையினர் முக் கோணக் கூர்க்கத்திகள், கண்டங் கோடாரிகள், இரும்புக்கம்பிகள் சகிதம் குமுதினிப் படகில் ஏறினர். படகின் பின்புறம் இருந்த பயணிகளை படகின் முன்பக்கம் செல்லுமாறு அழைத்துச் சோதனை என்ற பெயரில் ஒவ்வொருவராக உள்ளே அழைக்கப் பட்டு கத்தியால் குத்தியும், வாள்கள் மற்றும் கண்டக் கோடரிக-ளால் வெட்டியும், இரும்புக் கம்பிகளால் தாக்கியும் அந்த படகின் நடுப்பள்ளத்தில் போட்டனர். உயிர்காக்க கடலில் குதித்தவர்களை அந்தக் கொடியவர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்கள்.

கொல்லப்பட்டவர் போக குற்றுயிராய்ப்போனவர்கள் குரல் எழுப்ப முடியாது செத்தவர்கள்போல் கிடந்தனர். சிங்கள இனவெறியர்க ளால் நடத்தப்பட்ட இக்கோரத் தாக்குதலில் 7 மாதக்குழந்தை உட்பட 70 வயது முதியவர் வரை 36 பேர் பதைக்கப் பதைக்கப் படுகொலை செய்யப்பட்டார்கள். ஏனையோர் படுகாயமடைந்தார் கள். இந்த அவலத்தை, அந்தக் கொடிய தாக்குதலில் இருந்து குற்றுயிரும் குலையுயிருமாகத் தப்பித்த உறவுகள் மனித உரிமை சபைகளுக்குச் சாட்சியமாக அளித்தார்கள். மனிதாபிமானம் மிக்க வர்கள் அரசியல் கட்சிகளிடம் அக்கொடுமைகளை எழுதிய மக ஜர்களைக்கையளித்தார்கள். மாபெரும் கண்டனப் பேரணி நிகழ்த் தினார்கள். அக்கண்ணீரைக் கதைகளாய், கவிதைகளாய், கட்டு ரைகளாய், நாடகமாய் ஆக்க இலக்கியக் காரர்கள் அதனைப் பதிவு செய்தார்கள். ஆங்கிலம் உட்பட அகிலத்தின் பல மொழிக ளில் அவற்றை மொழியாக்கம் செய்தார்கள். ஆனால் அதிகார வர்க்கம் அவை எவற்றையும் இற்றைவரை கண்டு கொள்ள வில்லை.

**காலறுபட்டு... கையறுபட்டு...**
**துடிக்கத் துடிக்க...**
**குமுதினி மடியில் உயிர் போன,**
**என்னுயிர்த் தங்கைகளின்**
**அழகான கனவுகள் பற்றி...**

**இன்னமும்... அவர்கள்...**
**வாழ விரும்பிய வாழ்க்கையைப் பற்றி...**
**பலமாதமாய், பவித்திரமாய், உருவாகி**
**கணப்பொழுதில் கருவுடனேயே...**
**சிதையில் எரிந்த என் நண்பனின்,**
**மனைவி பற்றி...**
**பதைக்கப், பதைக்க**
**கொலையுண்டு கிடந்த**
**பச்சை மழலை சுபாஜினி பற்றி...**
**மரணிக்கும் போதும்,**
**எதிரியிடம் மண்டியிடாது**
**உயிர் விட்ட என்னூர் - வீர**
**அன்னைகள் பற்றி...**
**என்னினிய உணர்வில்**
**தமிழைக் கலந்து,**
**தன்னுயிரைக் கூலிப்படைக்கு**
**காவு கொடுத்திட்ட என்**
**தமிழாசிரியர் சதாசிவம் பற்றி...**
**எவரைப்பற்றி...**
**எவரைப்பற்றி...**
**நான் புலம்பி அழ?**

அந்தக் கோரக்கொலைகளின் உளத்தை உருக்கும் சாட்சியமா யும், சத்தியமாயும் மனித உரிமை சபைக்கு சாட்சியமளித்தவர்கள் திருமதி சறோ இராசரத்தினம், அன்புக் குழந்தையை பறிகொ டுத்த அன்னலட்சுமி சிவலிங்கம், கணபதிப்பிள்ளை ஆனந்தகு-மார், குமாரசாமி, கணேசபிள்ளை என்று பலர்.

குமுதினிப் படகினுள் எம்மினிய உடன் பிறப்புகளை கொன்றொ ழித்த கயவர்களை நயினாதீவின் கடற்படை முகாமினுள்ளே இனம் காட்டுவேனென துணிந்து மனித உரிமைச்சபையினுக்கு வாக்கு மூலம் அளித்தவர் தோழர் சாந்தலிங்கம் எனப்படுகின்ற என் பள் ளித்தோழன். அவன் தன் அன்பு மனைவியையும், பிறக்கவிருந்த தன் ஒரே வாரிசையும், உற்றவரையும் ஒரே நாளில் இழந்து, பட்ட மரமாக நிற்கின்றான். ஐரோப்பிய நாடொன்றில் புலம் பெயர்ந்து அகதியாக வாழும் அவனுக்கு அகதியந்தஸ்தைக்கூட அந்த நாடு மறுத்து வருகின்றது.

சிங்கள இனவெறியரசின் கூலிப்படைகளால் கடல்ப்பெருவெளியில் கொன்றொழிக்கப்பட்ட எம் நெடுந்தீவகத்து உடன் பிறப்புகளினை நாம் இழந்து இன்றோடு 36 வருடங்களாகின்றன. இத்தனை சாட் சியமிருந்தும் இனவாதப் பேய்களின் ஒரு மயிரைத் தன்னும் எம் மால் இதுவரை பிடுங்கிவிட முடியவில்லை. இலங்கையரசினால் வேண்டுமென்றே மறக்கடிக்கப்பட்டு, நீதி மறுக்கப்பட்டு, மூன்ற ரைத் தசாப்தங்களாக கிடப்பிலே போடப்பட்டிருக்கும் இக்கோர மரணங்களின் மர்மங்களை, அநீதியை இன்னமும்கூட உலகம் கண்டுகொள்ளவிரும்பவில்லை. இனவாதப் பெரும் பேய்கள் நெடுந்தீவு மாந்தரை நிலைகுலையச் செய்த இக்கொடூரச் செய லைக் கண்டித்து நெடுந்தீவகத் தாயக உறவுகளும், கனடிய மற் றும் பிரித்தானிய நல்லுறவுகளும் வருடாவருடம் நினைவெழுச்சி நிகழ்வுகளையும் அஞ்சலிப் பிரார்த்தனைகளையும் நிகழ்த்தி வரு கின்றார்கள். ஆனால், இவ்வாண்டின் கொடிய நோய்த் தொற்றால் துரதிஸ்டவசமாக நாம் தனிமைப்பட்ட நிலையில் உள்ளோம். துடிக்கத் துடிக்க உயிரோடு அழிக்கப்பட்ட எம் இனிய உறவு-களை நினைவிருத்தி, வீட்டில் இருந்தபடியே மே மாதம் 15ந் திகதி மனதை விட்டகலாத் துயரோடு எம் மண்ணின் மலர்களுக்கு கண்ணீரால் அஞ்சலிப்போம் உறவுகளே

**உள்ளெரியும் எங்கள் உணர்வுகளின்**
**வெந்தணலில்**
**ஏற்றுவோம் தீபம்! எழுந்து நின்று**
**பூச்சொரிவோம்!**



*sithivinayagam@thaiveedu.com*

# ‘குமுதினி’யும் நெடுந்தீவும்

# 44 ஆண்டு கடந்து...

- அ. ரொனிராஜன்

யாழ்ப்பாணத்தில் இருந்து 46 கிலோ மீற்றர் தூரத்தில் வடக்கு தெற்காக 6 Km அகலமும் கிழக்கு மேற்காக 8 Km நீளமும் கொண்டு தனியொரு தீவாக அமைந்துள்ளது நெடுந்தீவு. இது 1963ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து 7 மைல் தூரத்தில் உள்ளது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு தனியொரு தீவாக அமையும் இம்மண், பயணிகள் போக்குவரத்து, பொருட்களை ஏற்றி இறக்குதல் என்பவற்றிக்கு கடல் போக்குவரத்தே ஆதார சுருதியாக இருந்து வருகின்றது. நெடுந்தீவின் கடல் போக்குவரத்தில் வத்தைகள், கட்டுமரங்கள், தனியார் வள்ளங்கள், அரச படகுகள் என்பன தொடர்ச்சியான சேவைகளை வழங்கியுள்ளன. 1933ல் கொண்டுவரப்பட்ட ‘மேதர்’ இயந்திரப் படகு தொடக்கம் இறுதியாக வந்த நெடுந்தாரகை வரை பல படகுகள் வேவையில் ஈடுபட்டுள்ளபோதும் தற்போது வரை ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் என்ற வீதத்தில் சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் ‘குமுதினி’ படகின் வகிபங்கை வரையறுப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நெடுந்தீவின் கடற்போக்குவரத்தில் காலனித்துவ காலத்தில் இருந்தே வத்தைகள் பயன்பாட்டில் இருந்ததாக அறியப்படுகின்றது. J.P.Lewis - (The Journal of the Ceylon Branch Asiatic Society of Grete Britain & Ireland) என்ற பத்திரிகையாளர் 1909ம் ஆண்டு எழுதிய குறிப்பின்படி நெடுந்தீவில் 1905ல் எட்டு தொன் பொருட்களை ஏற்றக்கூடிய நான்கு வத்தைகள், மற்றும் இருபது கட்டு மரங்கள், இங்கு இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். அவற்றில் நெடுந்தீவில் இருந்து போத்தல் அல்லது பானைகளில் அடைக்கப்பட்ட நெய், பாய்கள், கொப்பரை, பினாட்டு, ஊமல், தேங்காய்கள், பருத்தி நூல், கணவாய் ஓடு, கால்நடைகள், மாட்டெரு, கிடுகு, பூவரசம் இலைகள் என்பன இங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக அறியப்படுகின்றது.

1905ல் ஏறக்குறைய 50 கொப்புரா விளக்குகள், 20,000 தேங்காய்கள், 10,000 கிடுகுகள், அத்துடன் ஆறு வத்தை கொப்புரா, நான்கு வத்தை பூவரசம் இலைகள், மற்றும் மாட்டெரு என்பன நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக அவருடைய பதிவிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. 1920ஐ அண்மித்த காலங்களில் நெடுந்தீவில் இருந்து கட்டு மரத்தில் தபால் பொதிகள் கொண்டு செல்லப்பட்டதுடன், தற்போது 11ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. பி. பாபிலு என்பவரும் அவருடைய சகோதரர்களும் அச்சேவையில் ஈடுபட்டு, திரு. பி. பாபிலு ஓய்வு பெறும் காலத்தில் 87.00 ரூபாய் ஓய்வூதியமாக பெற்றுக் கொண்டதாகவும் அறியப்படுகின்றது. தற்போது அவருடைய மூன்றாவது, மற்றும் நான்காவது தலைமுறையினர் நெடுந்தீவில் வாழ்ந்து வருகின்றனர். (ஓய்வூதியம் என்பது காலனித்துவ உரிமையாகும். அது 1900க்கு முன்னர் சட்டமாக்கப்பட்டது. விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய உரிமை 1898ல் சட்டமாக்கப்பட்டுள்ளதுடன் 1934ல் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் கீழ் சட்டமாக்கப்பட்டுள்ளது.)

பிற்பட்ட காலங்களில், திரு. குமரேசன் விதானையார் (மாலை கட்டி), திரு. சு. நாகேந்திரர் விதானையார் (கொடிவேலி), திரு. முருகேசு, திரு. வேலானந்தம், திரு. சந்தியோகு (நெருப்பெட்டி), திரு.சேமன் கணபதி போன்றோரிடம் வத்தைகள் இருந்தன. இவற்றினூடாக இங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கும், இராமேஸ்வரத்திற்கும் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து தேவையான பொருட்கள் கொண்டு வரப்பட்டன.

இதுதவிர, நெடுந்தீவின் போக்குவரத்தில் தனியார் தமக்குச் சொந்தமான வள்ளங்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தியுள்ளனர். 1933ம் ஆண்டில் இருந்து மேதர் இயந்திரப்படகு நெடுந்தீவுக்கும் ஊர் காவற்றுறைக்குமான போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தது. 1934ம் ஆண்டு தீவகப் போக்குவரத்துச் சங்கம் நாகபூசணி 1 என்ற படகினைக் கொள்வனவு செய்து போக்குவரத்தில் ஈடுபடுத்தியது. அதில் நெடுந்தீவைச் சேர்ந்த ஜோசப் எட்வேட் சாரதியாகக் கடமையாற்றினார். பின் ஜோசப் எட்வேட்டும் அவரது சகோதரங்களும் ஜோய்வுல் றோசரி (Joyful Rosary) என்ற இயந்திரப் படகினைக் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்தினர். அதே போன்று நெடுந்தீவைச் சேர்ந்த பத்துப் பேர் இணைந்து ஒரு படகினைக் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்தினர். இது ‘பத்துப்பேர் போட்டு’ என அழைக்கப்பட்டது. இக்காலங்களில் சீகுயின் (Sea Queen) என்ற படகும், கதிரைவேல் கொம்பனியால் M.M.L என்ற படகும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. அத்துடன் இதுவரை பல தனியார் படகுகள் சேவையில் ஈடுபட்டு விலகியுள்ளன.

குமரபுரவி 1, 2: - திரு.சு. குமாரசாமி
அக்குவாட்டி: - திரு. ஆ.கந்தையா
பத்தாயிரம் வோட்: - திரு. அருளப்பு மரியநாயகம்
சாந்தா: - திரு. முருகேசு
ஆவே மரியா: - அருட்தந்தை அமல்ராஜ்
பென்ஸ்சி லோஞ்:- பே.அல்பிரைட்(சின்னமனி)கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்தப் ‘பென்ஸ்சி’ படகு சேவையில் இருந்து விலகிய பின், அதன் சுக்கான் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திரதேவா படகிற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

1964ல் நெடுந்தீவு ‘பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம்’ சமுத்திர தாரகை என்ற படகுச் சேவையை நடத்தியது. 1979ம் ஆண்டு பொதுச்சேவைக் கூட்டுறவுச் சங்கம், ‘நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவு சங்கம்’ என பெயர் மாற்றப்பட்டதன் பின் சமுத்திர தேவி, உதய தாரகை 1, சமுத்திர தேவா, உதய தாரகை 2, போன்ற படகுச் சேவைகளை நடத்தி, தற்போது ‘சமுத்திர தேவா’ என்ற படகு சேவையில் உள்ளது.

இவை தவிர நெடுந்தீவில் பின்வரும் தனியார் படகுகள் தற்போது தேவைக்கேற்ப சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

காளியம்பாள்:- திரு. த. நகுலேஸ்வரன்.
அலையரசி:- நெடுந்தீவு கடற்றொழிலாளர்களின் கடற்றொழில் சங்கம் (சமாசம்).
ஹாரிஹணன்:- (இரண்டு படகுகள்) திரு. அ. கேதீஸ்வரன்.




1937ம் ஆண்டு அரசாங்கம் பொதுவேலைப் பகுதியினரின் பராமரிப்பின் கீழ் சில்வர் ஸ்பிறே (Silver Spray) என்ற 40 பேர் பயணம் செய்யக்கூடிய இயங்திரப் படகு ஒன்றை நெடுந்தீவு ஊர்காவற்றுறை கடற்பாதையில் சேவையில் ஈடுபடுத்தியது. அதன் இறுதிக் காலத்தில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு. இலாசர் என்பவர் நடத்துநராக கடமையாற்றினார். ஆங்கிலேயரால் பணிக்கு அமர்த்தப்பட்ட இப்படகு Bathymetric Survey என்ற நீரியல் ஆய்வின் அடிப்படையில் இரண்டு அலைகளின் இடைத்தூரத்தைக் கணித்து கட்டப்பட்டதாகும். 1950களின் முற்பகுதியில் அகில இலங்கை தமிழ் காங்கிரசைச் சேர்ந்த தீவுப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அல்பிரைட் தம்பியையாவின் முயற்சியினால் அவருடைய மனைவியின் பெயரில் 'இராஜேஸ்வரி' என்ற இயந்திரப் படகு நெடுந்தீவு ஊர்காவற்றுறை கடற்பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

அதன்பின், வீ.கே. கந்தையா, வி.என். நவரத்தினசிங்கம், கா.பொ. இரத்தினம் போன்ற தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் முயற்சியினால் அலையரசி, குமுதினி, வடதாரகை, வலம்புரி, மணிமேகலை போன்ற படகுகள் சேவையில் ஈடுபட்டன. இதில் மணிமேகலை, வலம்புரி ஆகிய இரண்டு படகுகளும் இரும்பு வார்ப்பினால் செய்யப்பட்டதாகும். 1964ல் எலாரா என்ற படகும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இது வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தனிநபரின் படகாகும். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட இப்படகு, கடத்தலில் பிடிபட்ட பின் நெடுந்தீவின் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டது.

2011ம் ஆண்டு மஹிந்த சிந்தனையின் கீழ் 'கமநெகும' திட்டத்தின் அடிப்படையில் அப்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சராக இருந்த டக்லஸ் தேவானந்த அவர்களின் முயற்சியினால் வடதாரகை 2 என்ற கப்பல் நெடுந்தீவு போக்குவரத்திற்காக கொண்டு வரப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது திருத்த வேலைக்காக காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஆறு மாதமாக அங்கு தரித்து நிற்கின்றது.

வடக்கின் வசந்தம் நெல்சிப் திட்டத்தில் நெடுந்தீவு மக்களின் அபிப்பிராயம் கேட்டபோது மக்களின் முதல் விருப்பமாக நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்குமான படகுச் சேவைக்கான தீர்மானம் முன்மொழியப்பட்டது. இதன் அடிப்படையில் நெல்சிப் திட்டதினூடாக உலக வங்கி, அவுஸ்திரேலிய அரசாங்கம் என்பவற்றின் நிதியுதவியுடன் 150 மில்லியன் ரூபா செலவில் வடமாகாண சபையின் அனுசரனையுடன் கட்டப்பட்ட நெடுந்தாரகை 2017ம் ஆண்டு நடைமுறைக்கு வரும் வகையில் தனது பயணத்தை ஆரம்பித்தது. நெடுந்தீவுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளைக் கருத்தில் கொண்டு அப்படகு வழங்கப்பட்டதாக அறியப்படுகின்றது.

நெடுந்தீவின் கடற் பயணத்தில் நாற்பத்து நான்கு ஆண்டுகளைக் கடந்து ஒரு நினைவுச் சின்னமாக அலைந்து திரியும் குமுதினி, திருகோணமலை 'டொக்யாட்டில்' கட்டப்பட்டு ஜேர்மனியின் 'புக்' இயந்திரம் பொருத்தப்பட்டு, தேக்குமரக் கட்டுமானத்துடன், பிரயாணிகளின் கடற் கலங்களுக்குரிய வெள்ளை நிறத் தீந்தைப் பூச்சுடன் உருவாக்கப்பட்டது. சிறிது காலம் திருகோணமலைக்கும் மூதூருக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு, பின் கொழும்பு துறைமுகத்தில் பாரிய கப்பல்களைத் தள்ளிக் கொடுக்கும் 'அலியா' படகாக கடமையாற்றி 1976ம் ஆண்டு பொது வேலை திணைக்களத்தின் கீழ் நெடுந்தீவுக்கு கொண்டுவரப்பட்டு, நெடுந்தீவு குறிகாட்டுவான் கடற்பாதையில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டது. 1986ம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டபோது, இத்திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டு, தற்போது வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கடமையில் ஈடுபட்டு வருகின்றது.

1976ம் ஆண்டு முதல் 1986வரை பின்வருவோர் குமுதினியின் ஓட்டுநர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளனர்.

- திரு. ஐ. கந்தையா (ஊர்காவற்றுறை).
- திரு. வடிவேலு (ஊர்காவற்றுறை).
- திரு. வாசர் (ஊர்காவற்றுறை).
- திரு. அ. அந்தோனிப்பிள்ளை (நெடுந்தீவு).
- திரு. ஞா. தேவசகாயம் (நெடுந்தீவு).
- திரு. ஆ. கந்தையா (நெடுந்தீவு).

1986 தொடக்கம் இன்று வரை குமுதினி ஓட்டுநராக கடமை புரிந்து ஓய்வு பெற்றவர்கள், மற்றும் தற்போது ஓட்டுநர்களாக கடமை புரிவோர்.

- திரு. வி. கந்தசாமி (1986 - 1990).
- திரு. நா. தவமணி (1990 - 2007).
- திரு. ம. ஜெயசீலன் (2007 - 2014).
- திரு. சி. செபநேசன் (2014 முதல் 31.05.2017).
- திரு. யா. ஜெயசீலன், திரு. சி. செபநேசன் (01.06.2017 முதல் 31.08.2019).
- திரு. சி. ஜெபநேசன் (01.09.2019 முதல் இன்றுவரை இவருடன் தற்போது திரு. ம. யூட்குமார், திரு. ப. நியூறின், திரு. அ. அன்பழகன் ஆகியோரும் கடமையாற்றி வருகின்றனர்.

குமுதினிப் படகின் ஆரம்ப பயணக் கட்டணமாக 50 சதம் அறவிடப்பட்டது. பின் 2006ம் ஆண்டு முதல் மஹிந்த சிந்தனையின் கீழ் திருகோணமலை மூதூர் படகுச் சேவையும் நெடுந்தீவு குமுதினி படகுச் சேவையும் கட்டணமற்ற சேவையாக மாற்றியமைக்கப் பட்டது. 2014ம் ஆண்டு ஜேர்மனியின் புக் இயந்திரத்திற்கு பதிலாக புதிய லேடன் இயந்திரமும் (இந்தியா) குமுதினி படகின் மேல் கூடாரமும் மாற்றியமைக்கப்பட்டன.

தற்போது நெடுந்தீவு மாவிலித் துறைமுகம் 'வள்ளக் காடாய்' காட்சியளிக்கின்றபோதும் குமுதினிப் படகே ஒரு நாளைக்கு மூன்று தடவை என்ற வகையில் சேவையில் ஈடுபட்டு வருகின்றது. வடதாரகை திருத்த வேலைக்குச் சென்றுவிட, நெடுந்தாரகை வருமானம் போதாமையால் கிழமைக்கு ஒரு தடவை மாத்திரம் சேவையில் ஈடுபட, இதனால் அனைத்து சுமைகளையும் சேர்த்து சுமக்கின்ற பாலைவன ஒட்டகமாக, குமுதினி மாற்றப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு மூன்று தடவை சேவையில் ஈடுபடுதல் என்பது குமுதினியால் மட்டுமல்ல, அதில் பணியாற்றும் ஊழியர்களையும் உடலளவிலும் மனதளவிலும் பாதிக்கும் செயலாகும். தற்போது கொவிட் 19ன் காரணமாக நெடுந்தீவு மக்கள் தமது பயணங்களை மட்டுப்படுத்தியுள்ள நிலையில், 'நெடுந்தீவை தலைகீழாக மாற்றிக் காட்டுவோம்' என கங்கணம் கட்டிக் கொண்டு வெளியிடங்களில் இருந்து இங்கு 'கடமைக்காக' நாளாந்தம் வந்து செல்லும் அதிகாரிகளுக்காகவும், உத்தியோகத்தர்களுக்காகவும் மேலதிகமாக ஒரு சேவையை வழங்க வேண்டிய நிலை குமுதினிக்கு ஏற்பட்டுள்ளது. குமுதினி தமது சேவையில் நாற்பத்துநான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் எதிர்பார்த்ததை விட அதிகமாக இந்த மண்ணுக்காக, மக்களுக்காக உழைத்துள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, தூர நோக்கில், மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதன் பழுவைக் குறைக்கும் மாற்று வழிகளைக் கண்டறிய உரிய அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் முயற்சிக்க வேண்டும். குமுதினி என்பது வெறுமனே ஒரு கடற்கலமல்ல; அது எமது மக்களின் உணர்வு; எமது சுவாசம்; அது ஒரு நடமாடும் நினைவுச் சின்னம். ஒட்டு மொத்தத்தில் அவள் எமது அனைவருக்கும் தாய்!


**உசாத்துணை:**

- தீவகம் வளமும் வாழ்வும், (1994), கலாநிதி கா.குணபாலன், தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியம்,
- 09.02.2011 அன்று இறக்குமதிகள், ஏற்றுமதிகள், ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் ஆற்றிய உரை.



நன்றி:
செ.இராதாகிருஸ்ணன் - நிறைவேற்றுப் பொறியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை யாழ்ப்பாணம்.





ronyrajan.a@thaiveedu.com







# மறைந்த சாட்சி; மறையாத சாட்சியங்கள்

- போல் ஜோசேப்

'நான் காலடி வைக்கும் தடத்தில் நீங்களும் கவனமாக காலடி எடுத்து வைத்து வாருங்கள்' இது ஏதோ புத்தி சொல்லும் தத்துவமோ அல்லது நீதி போதனையோ அல்ல.

ஒருமுறை யுத்த காலத்தில் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து வெளியேறி வந்த மக்கள், இடம்பெயர்ந்து வந்து ஓர் இடத்தில் தங்கியிருப்பதாகவும், உணவு மற்றும் மருத்துவ வசதிகளின்றி தவிப்பதாகவும் ஆயருக்கு தகவல் வந்து.

அது ஒரு காலை நேரம். இரவு முழுதும் ஓயாது மழை பெய்து சேறும் சகதியுமாக நிலம் கூட ஈரமாக இருந்தது, ஆனால் மக்களின் கண்களோ ஈரமின்றி காய்ந்து போயிருந்தது. அதிகாலை எழுந்த ஆயர் தனது குழுவினரை தயார் செய்து தேவையானவற்றை வாகனத்தில் ஏற்றி, வளைந்து நெளிந்த குண்டும் குழியுமான பாதைகளில் முதுகிலுள்ள அத்தனை முள்ளந்தண்டு எலும்புகளும் தீப்பொறி வராமல் உரசும் அளவுக்கு அந்த வாகனம் நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

சாலையில் வாகனத்தை நிறுத்திவிட்டு ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றால்தான் மக்கள் இருக்கும் இடத்தை அடையலாம். இது ஒரு 'No Man Area' என்ற கண்ணி வெடிகள் புதைக்கப்பட்ட இடம். ஆயருடன் வந்தவர் கண்களின் மரணபீதி. ஒருவரோடு ஒருவர் கண்களால் மட்டும் உரையாடிக்கொண்டிருந்தனர். சாலையிலிருந்து எந்தத் தயக்கமுமின்றி தரையும் சேறுமான மண்ணுக்குள்ளே முதல் காலடி பதித்த ஆயர், அடுத்த அடி எடுத்து வைத்து, பின்னால் வந்தவரிடம் நான் காலடி எடுத்து வைக்கும் தடத்தில் நீங்களும் கவனமாக தடம் வைத்து பின் தொடர்ந்து வாருங்கள் என்றாராம்.

உயிரையும் துச்சமென மதித்து மக்களுக்கான பணியில்... 'நல்ல ஆயன் தன் மந்தைகளுக்காக உயிரையும் கொடுக்க துணிவான்' என்பது பைபிளின் கூற்று. ஆம். யுத்த காலத்தில் தடுப்பு முள்வேலி முகாம்களுக்குள்ளேயும் ஆடை தந்து, பசி தாகம் போக்கி, ஆதரவற்றவர்களாக கூனிக் குறுகி வந்தோரை அரவணைத்து, நோயுற்றோரின் காயமாற்றிய பணிகள் ஏராளம்.

**'முழுமனித விடுதலை யென்பது**
**ஆன்மீக விடுதலையையும் தாண்டி**
**அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின்**
**மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெறுவதே**
**யேசுவைப்போல சாட்டை யெனும்**
**ஆயுதம் கூட எடுக்காமல்**
**சாட்சியங்களால் ஆட்சியாளர்களுக்கும்**
**அதிகாரத்துக்கும் சாட்டையடி கொடுத்தவர்'**

ஆயர் பதவியும் பணியும் திருச்சபையிலும், சமூகத்திலும் அரசிய

லிலும் ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. தனக்கு கிடைத்த அந்தப் பதவியைப் பயன்படுத்தி தன் இனத்திற்காக, குரலற்றவரின் குரலாக, தனக்கு மேலுள்ள மத தலைமைப்பீடங்க ளுக்கும் அஞ்சாமல், அரசியல் மிரட்டல்கள் அழுத்தங்களைக் கண்டு வழுவாது, வளையாது, மனிநேயப் போராளியாக வாழ்ந்து வழிகாட்டியவர்.

மன்னாரில் ஆலயங்களிலும், விடத்தல் தீவிலும் இடம் பெயர்ந்து மக்கள் இருந்த போது, பேரினவாத அரசின் இயந்திரங்கள் விமா னத்தாக்குதல்கள் நடத்தியதில் நூற்றுக்கணக்கான பெண்கள், சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அந்த சம்பவம் நடந்து சில நிமிடங்களியே சம்பவ இடத்திற்கு சென்று, ஆயிரக்கணக் கானவரை மீட்டெடுத்து ஆவன செய்து, சில நாட்களின் பின்பு அந்த சம்பவம் தொடர்பாக அன்றைய ஜனாதிபதி மகிந்தவிடம் முறையிட நேரில் சென்றார்.

ஜனாதிபதி மாளிகையெனும் எதிரியின் குகைக்குள்ளே தனது உதவியாளர் மற்றும் கர்தினார் மல்க்கம் ரஞ்சித் ஆகியோருடன் உள்ளே சென்று பேசிக் கொண்டிருந்த போது, ஜனாதிபதி அவ ரைப் பார்த்து 'நீங்களும் சில குருக்களும் புலிகளுக்கு எப்போ தும் ஆதரவு தருகிறீர்கள்' என்ற தொனியில் பேசிய போது, சற்றுக் கோபம் கொண்ட ஆயர், விமானத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட சிறுவர்கள், குழந்தைகளின் புகைப்பட ஆவணங் கள் அத்தனையும் அவர்கள் முன் காண்பித்து 'இவர்களா புலி கள்' என்று சொல்லிவிட்டு எழுந்து நின்று, "நீங்கள் இருட்டுக்குள் ளிருக்கிறீர்கள், வெளியே வந்து வெளிச்சத்தைப் பாருங்கள்" என்று எச்சரிக்கைத் தொனியோடு கூறி தைரியமாய் வெளியேறி னார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த கர்தினால் மல்க்கம் செய் வதறியாது திகைத்துப் போனாராம்.

**'மக்களுக்காக ஆயர் இல்லக்**
**கதவுகள் திறந்து**
**மறைதாண்டி மறுக்கப்பட்ட**
**இனத்தின் நீதிக்காய்**
**மனித நேயம் செய்கிறீர்கள் என**
**வத்திக்கானுக்கும் சிலர் கத்திக் கத்தி**
**வத்தி வைத்த போதும்**
**சாட்சியமில்லா ஒரு யுத்தம் நடந்ததை**
**உண்மை சாட்சியங்களோடு**
**புத்தி கொண்டே உத்திகளோடு**
**யுக்தியாய் புரியவைத்தவர்'**

LLRC என்ற கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்பு வழங்கிய ஆதாரங்கள் இன்று மாபெரும் சாட்சியமாய், சாட்சியமற்ற போரின் போது திட்டமிட்டு இனப்ப டுகொலை செய்யப்பட்ட, மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 1,46,679 பேர் என்பதை முதலில் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தி னார். இந்த எண்ணிக்கை முள்ளிவாய்க்கால் இறுதிப்போரின் கடைசி எட்டு மாதங்களின் மட்டுமே என்பதை ஆணித்தரமாக எடுத்து வைத்தார்.

தமிழ் அரசியல் வாதிகள் பலர் சொல்ல மறுத்த, சொல்லப் பயந்த வார்த்தைகளான இனப்படுகொலை, போர்க்குற்றம், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர், சித்திரவதை, வன்புணர்வு, வலிந்த சிங்கள குடியேற்றம், நிலங்கள் ஆக்கிரமிப்பு - அபரிப்பு, தேசிய இனம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த்தேசம் போன்றவற்றை உள்டக்கிய ஆதாரங்களுடன் கூடிய ஆவணத்தை நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தார்.

'சலுகைகள் அல்ல நமது தீர்வு, நோட்டும் ரோட்டும் அல்ல நமது நிரந்தர தேவை நல்லிணக்கம் என்பது படுபொய் ஏமாற்று வேலை' என்று நல்லிணக்க ஆணைக்குழுவிடமே எடுத்துக்கூறிய வர். தற்காலிகமான தீர்வுகளுக்காக சர்வதேசமானாலும் மதத் தலைமைகளானாலும் யாரிடமும் வளைந்து போகாத நேர் கொண்ட பார்வையுடையவர்.

நல்லிணக்க ஆணைக்குழுவிடம் (LLRC) அத்துனை சாட்சியங்க ளையும் சமர்ப்பித்த பின்பு, அடுத்த சில நாட்களிலேயே அரசின் தீவிர கண்காணிப்புக்குள்ளான ஆயர் பலமுறை தீவிரவாதத் தடுப்பு போலிசார் மற்றும் உளவுத்துறை உயர் அதிகாரிகளின் விசாரணைகளுக்கும் உட்படுத்தப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவருக்கு 'புலி ஆயர்' என்ற முத்திரையும் அரசினால் குத்தப்பட் டது.

திருச்சபைக்குள்ளேயும் தமிழர் மரபுகள், மாண்புகள், இனத்தின் அடையாளங்களைப் பேணுதல், மொழிப்பற்று, இனப்பற்று போன் றவற்றை வழிபாடுகளிலும், தனது வரைமுறைக்குட்பட்ட கல்வி நிறுவனங்களிலும் பேணுவதில் உறுதியோடு நடந்து கொண்டார்.

மேலும் திருச்சபையின் வரைமுறைகளையும் தாண்டி அவமானங் கள், துரோகங்கள், காயங்கள் கடந்தும் மனிதாபிமான மனித உரி மைப்பணியில் எந்த விட்டுக் கொடுப்புகளுமின்றி தான் சார்ந்த மக்களுக்கான இனத்திற்கான விடுதலைக்கான அறவழி முன்னெ டுப்புக்களின் முக்கியமான மைல்கல்தான் அவர் உருவாக்கிய 'சிவில் சமூக அமைப்பு' என்பது குறிப்பித்தக்கது.

ஜனாதிபதி சந்திரிக்கா ஆட்சிக்காலத்தின்போது விடுதலைப்புலிக ளுக்கும் அரசுக்கும் இடையிலான சமரசப் பணியில் ஈடுபடும் குழுவில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு ஜனாதிபதியால் கேட்டுக் கொள்ளப்பட்டார். அப்போது அரச சார்பு பிரதிநிதிகள், சில தூதுவர்கள், மத அமைப்புகளின் சில தலைவர்கள், தமிழ் அரசி யல் பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொண்ட மாநாட்டில் பேசிய ஆயரின் பேச்சு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அதில் கலந்து கொண்ட திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதுபற்றிக் குறிப்பிடும் போது, அவரின் பேச்சைக் கேட்ட பிரதி நிதிகள் அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். அதில் கலந்து கொண்டு பேசுவதற்காக நானும் எனது சக அரசியல் வாதியும் பல நாட்கள் இரவு பகல் ஆவணங்களைத் திரட்டி தயார் செய்து கொண்டிருந்தோம். என்னோடு தராக்கி சிவராம், தமிழ்மாறன் போன்றோரும் கலந்து கொண்டோம்.

தமிழ் ஆயர்கள் கிங்ஸிலி சுவாம்பிள்ளை, இராயப்பு யோசேப்பு ஆகியோரும் கலந்துகொள்ள வருகிறார்கள். அவர்கள் எந்த அள வுக்கு இறுக்கமாக நமது அரசியலைப் பேசுவார்கள் என்று எதிர் பார்க்க முடியாது. எல்லா விடயங்களையும் எடுத்துச் சொல்லுவது எங்கள் கையில்தான் உள்ளது என்று எங்களுக்குள்ளே உரையா டினோம்.

ஆனால் அந்த கருத்தரங்கில் நடைபெற்றதோ எல்லோருக்கும் வியப்பை அளித்தது. நாங்கள் என்னவெல்லாம் பேச நினைத் தோமோ எல்லாவற்றையும் மன்னார் ஆயர் அவர்களே ஆணித்தர மாக, மிக அழுத்தமாக, எந்தத் தயக்கமுன்றி எடுத்துரைத்தார்.

'Our Solution is not lie in the 13th Amendment but on the Tamil Nation good to be Recognized, We are not mere Minority we are a nation'

'எங்களுக்கான தீர்வு என்பது 13வது திருத்தத்தில் தங்கியிருக்கப் போவதில்லை. ஆனால், தமிழ் தேசத்தை அங்கீகரிப்பதில்தான் உள்ளது. நாங்கள் வெறும் சிறுபான்மை இனமல்ல. ஒரு தேசிய இனம்.' என்று தொடங்கி அத்தனை விடயங்களையும் ஆதாரத்து டன் அடுக்கிக்கொண்டே பேசிக்கொண்டிருந்தார். அதைக்கேட்டு நாங்கள் திகைத்துப் போனோம். ஏனென்றால் பயங்கரவாத தடைச்சட்டம் தீவிரமாக இருந்த காலப்பகுதி அது. இவ்வாறு, திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் ஒரு செவ்வியில் தெரிவித்திருந்தார்.

ஒருமுறை ஊடகவியலாளர் ஒருவர் ஆயரிடம் எப்போதும் ஓய் வின்றி பணி செய்கிறீர்கள், எப்போது தான் ஓய்வெடுப்பீர்கள் என்று கேட்டபோது, 'நான் மக்கள் பணி செய்யத்தான் வந்தேன், போர்த்திப் படுக்கவா ஆயர் பணிக்கு வந்தேன். என்று நகைச் சுவையாக பதில் சொன்னாராம்.

நோர்வே பேச்சு வார்த்தை நடைபெற்ற காலப்பகுதியில் ஒரு நிகழ்ச்சியில் அவர் உரையாற்றும் போது 'நோர்வே மூலம் பேசுகி றார்கள். தீர்வுக்காக அல்ல, இழுத்தடிக்கத்தான் என்று குறிப்பிட்ட அவர், எல்லோரும் சொல்லுறாங்க கொஞ்ச நன்மை, கொஞ்சம் கொஞ்சமாக வாங்கலாம் தானே என்று. உரிமையை, விடுத லையை கொஞ்சம் கொஞ்சமா வாங்க அது என்ன பிச்சையா?

முழுநன்மையும் பெறுவதற்கு ஒரு வழி இருக்குது தானே! அந்த வழியைக் கடைப்பிடிக்க எங்களுக்கு உரிமை இருக்கிறது. கெ-ளரவமான தீர்வு தான் எங்களுக்குத் தேவை' என்று கொழும்பில் நடந்த நிகழ்ச்சியொன்றில் தயங்காது பேசினார்.

படகுத்துறை விமானத்தாக்குதலின் போது அந்த இடத்திற்கு சென்று பார்த்துவிட்டு அடுத்த நிமிடமே ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு நீங்கள் அப்பாவி மக்களை கொன்று மீண்டும் மீண்டும் தவறிழைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கடிந்து கொண்டாராம்.

அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான திரு. நிலாந்தன் ஒரு நேர்காணலில் ஆயரைப்பற்றி குறிப்பிடும் போது திருச்சபையின் கட்டமைப்பிற்குள்ளே பெரும் சர்ச்சைக்குரிய ஆயராக இருந்தார். தமிழினத்தின் அரசியல் சார்பு விடயங்களில் துலக்கமாக, சன்னமாக பேசும் துணிச்சல் கொண்டவராக இருந்தார். அரசியல் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அவரைப்போல குரல் கொடுத்த ஆயர்களை காண்பது அரிது.

மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் முழுச்சமூகமும் அச்சத்தினாலும் தோல்வியினாலும் கூட்டுக் காயங்களினாலும் மனவடுக்களினாலும் அழுந்திப் போயிருந்த ஒரு காலகட்டத்தில் அவர்தான் குரலற்ற மனிதர்களின் குரலாக ஒலித்தவர்.

குறிப்பாக 2009க்கு பின்னான ஒரு பயங்கர அச்சச் சூழலில் முதலில் அச்சமின்றி ஒலித்த ஒரு குரல் ஆயருடையது தான். இன்று பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்களின் எழுச்சிக்கு காரணமான 'சிவில் சமூக அமைப்பு'களின் பாதையை பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி திறந்துவைத்த பெருமை அவருக்குரியது.

2009 படுபயங்கரமான இனப்படுகொலை போர்ச் சூழலில் வலைஞர்மடம் அருகிலுள்ள மாதா கோயிலில் ஒரு சமூக மையம் செயற்பட்டுக் கொண்டிருந்தது. கோயிலின் பங்குத் தந்தையாக அமரர் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் இருந்தார். அந்த வளாகத்தில் பதுங்குகுழிகள் இருந்தன. அதைத்தான் மருத்துவர்கள், அருட்தந்தையர்கள், மருத்துவமனைகளில் பணியாற்றிக் கொண்டிருந்த கன்னியாஸ்திரிகள், மற்ற தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த பணியாளர்கள் பலர் பயன்படுத்தி வந்தார்கள்.

அங்கிருந்த ஒரு தொலைபேசியினை பயன்படுத்தித்தான் சமூக செயற்பாட்டாளர்கள் வெளியுலகத்தோடு தொடர்புகொண்டிருந்தார்கள். அப்போது வன்னியிலிருந்து வரும் தொலைபேசி அழைப்புகளை எப்போதும் ஆர்வத்தோடு செவிமடுத்து வந்தார் ஆயர். அப்போது ஒரு சமூகப் பிரதிநிதியொருவர் ஆயரிடம் தொலைபேசியில் அழைத்து இந்த யுத்தம் ஓர் இனப்படு கொலையில் முடியப் போகிறது. மீன்களைப் பிடிப்பதற்கு கடலை வடிக்கும் உத்தியை இந்த பேரினவாத அரசு கையாண்டு வருகிறது. எனவே கடலைப் பிழியும் போது அது நிச்சயமாக ஒரு பேரழிவாகவே முடியும். அதைத் தடுக்க வேண்டும் என்று ஆயரிடம் கேட்டுக் கொண்டாராம்.

அதை எப்படி தடுப்பது என்று கேட்டார் ஆயர். அப்போழுது நடைமுறையிலிருந்த ஒருதலைப்பட்சமான பாதுகாப்பு வலையத்துக்குப் பதிலாக இருதரப்பு பாதுகாப்பு வலையத்தை உருவாக்க வேண்டும். அதை ஒரு முன்றாவது தரப்பு மேற்பார்வை செய்ய வேண்டும்.

அப்படி ஒரு முத்தரப்பு உடன்படிக்கை உடனடியாக உருவாக்கப்பட்டால் பேரழிவைத் தடுக்கலாம் என்று அந்த செயற்பாட்டாளர் சொன்னார். அப்போதுதான் பாதுகாப்பு வலையங்கள் மரணப் பொறிகளாக மாறிக் கொண்டிருந்தன. எனவே மூன்றாவது தரப்பின் மேற்பார்வையோடு கூடிய ஒரு பாதுகாப்பு வலையத்தை அமைக்குமாறு நீங்கள் கேளுங்கள் என்று ஆயரிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

உடனே ஆயர் பதிலாக நானே நேரடியாக கொழும்பு சென்று தூதரங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசுகிறேன். என்று வாக்குறுதியளித்தபடி அடுத்தநாளே கொழும்பு சென்று தூதரக அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் பலரைச் சந்தித்து பேசினார். ஆனால் அவர் எதிர்பார்த்ததைப் போல ஒரு பாதுகாப்பு வலையத்தை இறுதிக்கட்டப் போர் முடியும் வரை உருவாக்க முடியவில்லை என்ற உணர்வு அவரை எப்போதும் உறுத்திக் கொண்டேயிருந்தது.

இப்படி அருட்தந்தை மைக்கேல் பிரான்சிஸ் தலைமையில் பாதுகாப்பு வலையத்துக்குள்ளே சென்ற பல நூற்றுக் கணக்கான போராளிகளின் நிலையும் சாட்சியங்களற்ற போர் என்று சொல்லப்படும் இன வழிப்பின் என்றுமே அழியாத உண்மையின் சாட்சியங்களாகும். (அருட்தந்தை மைக்கேல் பிரான்சிஸ் அவர்கள் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் அதிபராக இருந்த போது நான் அவரிடம் கல்வி கற்ற மாணவன் என்பதால் அவரின் இழப்பு எனக்குள்ளேயும் ஒரு ஆறாத தாக்கத்தினை ஏற்படுத்தி விட்டது.)

முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் போது காயமடைந்த ஆயிரக்கணக்கான மக்களை உடனடியாக மன்னாருக்கு அழைத்துவர ஏற்பாடுகள் செய்து அங்கு ஒரு மருத்துவமனையை உருவாக்கி காயங்களாற்றும் பணியாற்றியது மட்டுமல்ல பல ஆயிரக்கணக்கான உடல் அவயவங்களை இழந்தவர்களுக்கு பல தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயற்கை அவயங்கள் பொருத்தும் பணியிலும் மும்முரமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

அந்த அவசர காலத்தில் பணியாற்ற நூற்றுக்கணக்கான செவிலியர் பயிற்சி பெற்ற கன்னியாஸ்த்திரிகளை வரவழைத்து அவர்களின் உதவியோடு மருத்துவமனை, முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் மறுவாழ்வுப் பணிகள், மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு இல்லம், மனக்காயங்கள் ஆற்ற ஆற்றுப்படுத்தல் சேவை மையங்கள்... இப்படி இன்றும் அந்தப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஒரு கன்னியாஸ்த்திரி தன் அனுபவங்களைப் பற்றி பகிர்ந்து கொள்ளும் போது, போரின் பின்பு நூற்றுக்கணக்கான பெண்போராளிப் பிள்ளைகளை அழைத்து வந்து அவர்களுக்கு உள மற்றும் உடல் காயங்களை ஆற்றும் பணியின் போது பயங்கரவாதத்தடுப்பு உளவுப் பிரிவினரின் தொல்லைகளை ஆயர் எதிர்கொள்ள நேர்ந்தது. அத்தனை பிள்ளைகளும் தலைமுடியை கட்டையாக வெட்டியிருந்ததால் அவர்கள் போராளிகள் தான் என்பதை அடையாளம் கண்ட உளவுத்துறையினரும் இராணுவத்தினரும் தாங்கள் அவர்களை விசாரணைக்காக அழைத்துச் செல்ல பல முறை முயற்சி செய்தனர். அதன் பின்பு அவர்களை கன்னியர் மடத்தில் பாதுகாப்பாக இருக்க சட்டபூர்வமான ஏற்பாடுகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றார்.

'இனப்படுகொலை செய்தவர்கள் மட்டுமல்ல படுகொலைகள் நடக்கும்போது வாய்மூடி மௌனிகளாக இருந்தவர்களும் போர்க் குற்றவாளிகள்' என்பதையும் அவர் ஒரு நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார். உண்மையைக் கண்டறியும் வரை ஓயாது நாம் குரல் கொடுத்து சர்வதேசத்தின் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டேயிருக்க வேண்டும். எனது உயிர் பிரியும் வரை இதற்காக உழைத்துக் கொண்டேயிருப்பேன் என்பதில் இறுதிவரை உறுதியாக இருந்தார்.

பாலஸ்தீனத்தைப் போல ஒரு அரசியல் அமைப்பை அதாவது 'தமிழ் தேசிய சபை' ஒன்றை உருவாக்கும் முயற்சியில் எல்லா தமிழ் அரசியல் கட்சி தலைமைகளையும் ஆயர் இல்லத்திற்கு பலமுறை அழைத்து பல முன்னெடுப்புகளை மேற்கொண்டார்.

ஒருமுறை, அமெரிக்கா இராஜாங்க செயலாளர் அவர்களை தனிப்பட்ட முறையில் சந்திப்பதற்காக முயற்சிகளில் ஈடுபட்டார். அதற்கான அனுமதியும் கிடைத்தது. இனப்படுகொலை மற்றும் போர் குற்றம் தொடர்பான அத்தனை ஆவணங்களையும் சுமந்து கொண்டு குறித்த நாளுக்கு முன்னதாகவே அவரைச் சந்திக்க ஆவலோடு கொழும்பு செல்லும் வழியில்தான் வவுனியாவில் அவருக்கு பக்கவாத நோய் (Stroke) ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.



*paul.joseph@thaiveedu.com*



# அரங்கொன்று திரையை மூடிக்கொண்டது

- சேகர் தம்பிராஜா

ஒரு கிறிஸ்தவ பாதிரியாருக்கான உடையுடனும் நெற்றியிலே எந்நேரமும் சந்தனப் பொட்டுடனும் ஒருவரை காண்பதென்றால் அது ஒரேயொரு-வராகத்தான் இருக்க முடியும் - அருட் கலாநிதி மரிய சவரி அவர்கள் மட்டுமே அப்படித் தோற்றமளிப்பார். இனம், மதம், சாதி, மொழி கடந்து நாம் ஒரு குடும்பமாக இயங்க வேண்டும் எனத் தன்னை வரித்துக் கொண்டவர். அந்த ஒற்றுமைக்காக உழைத்தவர். அதற்கான ஊடகமாக கலையைப் பயன்படுத்திக் கொண்டவர். கத்தோலிக்க மதகுருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட வராக இருந்தபோதும் சைவ சித்தாந்தத்தை ஆய்வு செய்த கல்விமான். 'திருக்குறள், திருவாசகம், நாலாயிர திவ்யபிரபந்தம், சந்தனம் எல்லாம் எமது சொத்து. அதனை காவித் திரிவதில் நான் பெருமை கொள்கிறேன். நடராஜர் என்பது ஒரு சிலையல்ல அதைக் கலையின் ஊற்றாகவே பார்க்கிறேன். அது என் இனத்தின் அடையாளம். மதங்களுக்கு அப்பால் மெய்யியல் சொல்லும் கோட்பாடுகளை பின்பற்றுபவன் நான்' எனக் கூறிய அந்த அருட் தந்தையினை சில வருடங்களிற்கு முன்னர் சந்தித்துப் பேசும் வாய்ப்பு கிடைத்தது.

எண்பதுகளின் பிற்பகுதி. யாழ்ப்பாண நகரைச்சுற்றி பெரிய, சிறிய, முக்கிய சந்திப்புகளில் அமைந்திருந்த பல சுவர்களில் கண்ணைக் குத்தும் ஒரு சில வர்ணங்களால் மட்டும் எழுதப்பட்ட பெரிய சுவரொட்டிகள் சிறுவர்களாகிய எங்களது கண்களில் பட்டது. அவை என்னவென அறிந்து கொள்ளும் ஆர்வம் இருந்தாலும் வயதும் நாட்டுச் சூழலும் அவற்றைப் போய்ப் பார்க்கும் சந்தர்ப்பத்தை எமக்குத் தரவில்லை என்ற ஏக்கம் இப்பொழுதும் உள்ளது. அப்படி எங்கள் கண்களில் பட்டவை 'ஞானசவுந்தரி', 'பலிக்களம்' போன்ற சுவரொட்டிகளே. இவ்வாறான பல எண்ணிலடங்கா கலைப்படைப்புகளை மேடையேற்றுவதற்கான தளத்தினை திருமறைக் கலாமன்றமாக உருவாக்கி இயக்கியவர் அருட் கலாநிதி மரிய சவரி அடிகளார்.

'மனிதம்' எனும் வாசகத்தைச் சுமந்து அதனை 'கலை' என்கிற ஊடகத்தினால் செப்பனிடுதலே எமக்கான பணியென தனது கலைச்சேவையில் நிறைவு கொண்டு நித்திய இளைப்பாற்றலுக்கு சென்றுள்ளார் அருட்தந்தையவர்கள். 'இச் சேவை என்னால் மட்டும் சாத்தியமானதொன்றல்ல. பலர் அதற்கு உதவியுள்ளார்கள். நான் ஒரு கருவியாக இருந்து இயங்கியுள்ளேன்' என அவைக்குத் தன்னை அடக்கிக் கொள்ளகிறார். ஆனால் அப்படியல்ல. அவரது கலைப் பணியானது வார்த்தைகளுக்குள் வரையறை செய்துவிட முடியாதது.

தமிழுக்கும் கலைக்கும் அரிய தொண்டாற்றி வந்த ஒருவராக அருட்தந்தை கலாநிதி மரிய சவரி அடிகளார் விளங்கியவர். திருமறைக்கலாமன்றம் எனும்பொழுது இவருடைய பெயரே அடையாளமாக நினைவில் வரும். ஐம்பது வருடத்திற்கு முன்னர் மன்றத்தை ஆரம்பித்து இயக்குனராகப் பணிபுரிந்து இன்று வரை அம்மன்றம் இயங்கிக் கொண்டிருக்கும் நிலைக்கு வரவெனத் தன்னை ஒரு கலைப்பித்தனாக உருக்கிய பெருமகன்.

திருநிலைப்படுத்தலுக்காக ரோம் நகரம் சென்று இறையியல் கல்வி கற்கும் வேளையில் அருட்தந்தை லொம்படி, ஆயர்

போஞுடோன் ஷீன் போன்றவர்களின் சொற்பொழிவுகளினாலும் மற்றும் 'கிறிஸ்டோபர் இயக்கம்' போன்றவற்றினாலும் ஈர்க்கப் பெற்று 'புதியதொரு வாழ்வை' நோக்கிய பயணமாக தனது பொதுவாழ்வை வகுத்துக் கொள்கிறார். 'இருளைப் பழிப்பதனை விடுத்து ஒளியை ஏற்றுவது மேல்' என்கிற தத்துவத்தின் வழிநடக்க தனது கண்களை அகலத்திறந்து புதிய பாதையினை வகுத்துக் கொண்டார்.

சமயம் என்பது முக்கிய பணியாக இருந்தாலும் மொழிமீதும் கலைமீதும் இருந்த காதல் அவரை ஒரு கவின்கலைகளுக்கான உழைப்பாளியாக மாற்றியது. அதனை தன் இயங்கு காலம் வரையும் செய்து வந்தவர். திருத்துவக் கல்விக்காக ரோம் சென்ற அருத்தந்தை இலங்கை திரும்பியதும் புனித சம்பத்தரிசிரியார் கல்லூரியில் மத்திய பிரிவின் உதவிப் பொறுப்பாளராகக் கடமையேற்று சிறிதுகாலம் பணியாற்றினார். அக்காலத்தில் 'அன்ரோனியோ' எனும் இத்தாலிய திரைப்படத்தை மொழிபெயர்ந்து அதனை நாடகமாக்கி மாணவர்களுக்கு பழக்கி உள்ளார். கல்லூரி வாழ்வில் தொடர்ந்து ஈடுபட மனமின்றி மக்களுடன் கலைப் பணியாற்ற தன்னை இணைத்துக் கொண்டார்.

இயல்பிலே விளையாட்டு மீது நாட்டம் கொண்ட இவர் இளைஞர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றதனால் அவர்களைச் சிறு சிறு குழுக்களாக இணைத்து நாடகங்களை மேடையேற்றினார். கலைக்குடும்பத்தில் பிறந்ததனால் சிறுவயது தொட்டே நாடகங்களிலும் கூத்துகளிலும் பங்கேற்று வந்த அடிகளார், ரோமில் இருக்கும் காலப்பகுதியில் பல நாடகங்களை பார்க்கும் வாய்ப்புப் பெற்றதனால் அதன் மூலம் உலக நாடக ஞானத்தை விருத்தி செய்து கொண்டு அதனை தன் மக்களுக்குப் பயன்படச் செய்தவர். அந்த உந்து சக்தியானது 1963ம் ஆண்டு மன்னாரில் பணியாற்றும்பொழுது நாடகங்களை எழுதி மேடையேற்ற வைத்தது. தொடர்ந்து 1964ம் ஆண்டு முதன்முதலாக 'திருப்பாடுகளின் காட்சி'யினை மேடையேற்றம் செய்து தமது பயணத்தை விரிவுபடுத்தினார். 'சிங்ககுல செங்கோல்', 'மூவேந்தர்' போன்ற நாடகங்களை எழுதி மேடையேற்றியவர் அதனைக் காலத்திற்கேற்ப நவீனப்படுத்தி அளிக்கை செய்துமுள்ளார்.

இசைநாடகம், கூத்து, நவீன நாடகம் என அளிக்கைகளின் வடிவங்களை சமாந்தரமாக தொடர்ந்து மேடையேற்றி மக்களிடத்தே பெரும் வரவேற்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்பட வைத்து அதில் வெற்றியும் கண்டார். ஆரம்பத்தில் சமயக்கருத்துக்களைக் கொண்டு செல்ல இந்தக் கலை வடிவங்கள் உதவி இருந்தாலும் பிற்காலங்களில் பொதுக்கருத்துக்களைப் பேசு பொருளாக கொண்ட அளிக்கைகளாகவும் அமைந்தது கண்கூடு. குறிப்பாக யுத்த காலங்களில் சமாதானத்திற்காகவும், இனங்களின் ஒருமைப்பாட்டிற்காகவும், குழந்தைகளின் எதிர்காலம் பற்றியும் வார்த்தைகளற்ற நாடகங்களை நாட்டின் பல பகுதிகளிலும் மேடையேற்றி வரவேற்பைப் பெற்றார். நாட்டோடு மட்டும் நின்று விடாமல் கடல் கடந்தும் திருமறைக் கலாமன்றம் ஊடாக உலகின் பல நாடுகளுக்கும் சென்று தனது கலைப் பணியினை செய்து வந்தவர்.

ஐ.நா. மன்றத்தில் குழந்தைகள் உரிமைகள் பிரகடனம் தொடர்பாக நடந்த கருத்தரங்கில் பங்கு கொண்ட 7 நாடகங்களில் அருட்தந்தையவர்கள் கொண்டு சென்ற நாடகமும் தெரிவு செய்யப்பட்டது என்பது சிறப்பாகப் பார்க்கப்படுகிறது. இதுவும் வார்த்தைகள் அற்று எல்லா மொழியினருக்கும் விளங்கும்படியான நாடகமாக அமைத்திருந்தது. அதே போலவே 'ஒவ்வொரு வருடமும் திருப்பாடுகளின் காட்சி செய்யும் பொழுதும் எங்களுடைய வாழ்வையே அதனுள் பிரதிபலிப்பாக உள்வாங்கி மேடையேற்றுவோம்' எனக் குறிப்பிடுகின்றார்.

அண்மைக்காலமாக மிகப் பெரிய கலைஞர்கள் எம்மை விட்டு பிரிந்தாலும், அதற்கு அடுத்த ஒரு கலைச்சந்ததியினை உருவாக்குவதற்கான அடித்தளமாக 'அழகியற் கல்லூரி' ஒன்றை நிறுவி அதன் மூலமாக தமிழர் கலைகளை கற்பதற்கான வேலைகள் முப்பது வருடங்களுக்கு முன்னரே ஆரம்பிப்பதற்கான முதற்காரணியாக விளங்கியவர். கூத்தின் சுவையினை இளையவர்களுக்குக் கொடுத்து விட்டால் அவர்கள் பின்னர் ஆர்வத்துடன் வந்து கலந்து கொள்வார்கள். அதனால் இளையவர்களுக்கு படிமம் என்பதனை விட கலையின் சுவையை பருக வைத்தலை முதல் பணியாக செய்ய முற்பட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

ஒரு நாடக அரங்காக அகலதிறந்திருந்த எண்ணமும், வாழ்வும், உழைப்பும் ஏப்பிரல் 01, 2021 அன்று தனது திரையை மூடிக் கொண்டது, தமிழிற்கும் கலையுலகிற்கும் பெரும் இழப்பு.



sekar.thambyrajah@thaiveedu.com

இப்பொழுது....

கின்டலில் (Kindle) பெற்றுக்கொள்ளலாம்

kindle









# பன்மொழி அறிஞர் அருட்கலாநிதி மரிய சேவியர் அடிகளார்

- தெளிவத்தை ஜோசப்

நாடகத்தை ஊடகமாகக் கொண்டு ஈழத்தமிழ்ச் சமூகத்தின் கலை, இலக்கிய பாரம்பரியங்களையும் வாழ்வியலையும் போர்க்கால இடர்களையும் இழப்புக்களையும் உலகறியக் கொண்டு சென்ற பெருமகன் நீ. மரிய சேவியர் அடிகளார்.

ஒரு கத்தோலிக்க குருவாக இருந்தும், மத எல்லைகள் கடந்து கலை, இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்தவர் இவர். இலங்கை, தமிழ்நாடு, புலம்பெயர் நாடுகளின் உணர்வாளர்கள், எழுத்தாளர்கள் என அனைவரையும் அரவணைத்தும் அனுசரித்தும் செல்வதுமான பெருமனம் கொண்டவராகவே என்றும் இருந்தவர் இந்த ஆன்மீகர்.

யாழ்ப்பாணத்தின் இளவாலையில் கடப்பாடும், கண்டிப்பும் நிறைந்ததொரு கத்தோலிக்க குடும்பத்தில் 03.12.1939ல் பிறந்தவர் இவர். இறுக்கமான ஒழுக்கத்தினை கட்டிக்காக்கும் குடும்பச்சூழல் என்றாலும், அதுவொரு கலைக்குடும்பம் என்பதால் இவருக்குள்ளும் ஒரு கலைஞனை மெதுமெதுவாக உருவாக்கும் பணி செயற்பட்டுக்கொண்டே இருந்திருக்கிறது. கூத்தும் பாட்டும் கொண்டிருந்த குடும்பம் அது.

கோவில் பூசை, குருவானவருடன் பேசிப்பழகும் வாய்ப்புக்கள், பூசைக்குதவும் சீடர்களில் ஒருவனாயிருத்தல், பூஜைக்கான பாடற் குழுவில் இணைந்து பாட்டுப்பாடுதல், ஆர்மோனியம் வாசித்தல் என்று இவருடைய ஆரம்ப வாழ்வு கோவில் சார்ந்ததாகவே இருந்துள்ளது. கூத்துப் பழக்கப்பட்டு, சிறுவர்கள் சேர்ந்து கோவில் வளவில் மேடையேற்றப்பட்ட கூத்துக்களில் இவரும் நடித்திருக்கி றார்.

கொழும்புத்துறை சிறிய குருமடத்தில் சேர்க்கப்பட்டு கல்வி பயின்றபோது கவிதைகள், கட்டுரைகள் எழுதத் தொடங்கினார். ஆசிரியகலாசாலை மலர் அவைகளை பிரசுரித்த ஊக்குவித்தது. அங்கிருந்து கண்டி, அம்பிட்டிய பெரிய குருமடத்திற்கு பயிலச் சென்ற காலத்தில், நிறைய சிங்கள நண்பர்களுடன் பழகும் வாய்ப்புக்கள் கிட்டியுள்ளார்.

ஆங்கிலம், இலத்தீன், சிங்களம் ஆகிய மும்மொழிகளையும் கசடறக் கற்கும் பணிகள் நடந்தேறின. 'கற்றல் தனக்கு என்றுமே சிரமமானதாக இருந்ததில்லை. பாடசாலைக்காலங்களில் நான்தான் முதல் மாணவனாக இருப்பேன். இரட்டை வகுப்பேற்றங்கள் பெற்று பெரிய குருமடத்தில் சிறியவனாக தேர்வு செய்யப்பெற்று தேர்ந்திருந்தேன். மொழிக்கற்றல் எனது சில இயல்புகளால் கடினமானதாக இருந்ததேயில்லை...' என்று அவரே ஒரு நேர்காணலில் குறிக்கின்றார். (காலம்-50: 2017 ஜனவரி இதழ்)

அம்பிட்டிய பெரிய குருமடத்தில் கல்வி கற்ற போதே தனது முதல் நாடகமான 'மலர் விழி'யை மேடையேற்றினார். வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்ட இந்த நாடகத்தில் அவரும் நடித்தார். குருமடத்தின் அருட் தந்தைகள் பலராலும் பாராட்டப்பட்ட நாடகம் இது.

உரோமோபுரி பல்கலைக்கழகத்தில் குருத்துவ மேற்படிப்புக்காக சென்றிருந்தபோது பல அறிஞர்களை சந்திக்கவும் பேசவும் சந்தர்ப்பம் கிடைத்தது. குறிப்பாக, அங்கு அடிக்கடி திரைப்படங்கள் காட்டுவார்கள். அந்தப்படத்தின் இயக்குநர் படம் முடிந்ததும் உரையாற்றுவார். அது பற்றிய கலந்துரையாடல்கள் விமர்சனங்கள் நடைபெறும். தான் சிறியவனாக இருந்ததால் அதிகம் பேசு



வதில்லை. ஆனால், நிறையவே கற்றுக்கொண்டேன். உலக பொதுமைப்பற்றிய உணர்வையும் அறிவையும் ஆழமும் அகல மும் படுத்திக்கொள்ள என்னால் முடிந்தது என்கிறார்.

யேசு சபை அருட்தந்தையர்கள் 'புதிய உலகம் செய்வோம்' எனும் தொடர் கருத்தரங்கை நடத்தினர். இத்தாலிய மொழியில் நடத்தப்பட்டதால் அந்த மொழியில் ஆர்வமும் அதைப்படிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இவருக்கு ஏற்பட்டது. புனித கிறிஸ்த வசபையினர் 'இருளைப் பழிப்பதை விடவும் ஒளியை ஏற்றுவது மேல்' எனும் முன்மொழிவுடன் இயங்கியவர்கள். செய்தி மடல்கள் துண்டுப்பிரசுரங்கள் தொடர் பிரசங்கங்கள் என்று நடத்தினர். அருட்தந்தை மரியசேவியர் அவர்களின் பிற்கால தொடர் பணிகளுக்கான ஆரம்பப் படிப்பாகவும் இவை அமைந்தன. அவர்கள் திரையிட்டுக்காட்டிய புனித சாவேரியாரின் உரையாடல் அற்ற வாழ்க்கை வரலாறு இவரைப் பெரிதும் ஈர்த்தது. துண்டு துண்டான காட்சிகளை போட்டுப் போட்டுப் பார்த்து அதற்கேற்ற உரையாடல்களை எழுதி, ஒளிப்பதிவு செய்து ஒரு நிகழ்ச்சியில் போட்டுக் காட்டி, பாராட்டுக்கள் பெற்றார். அங்கிருந்த தமிழ்ச்சங்கத்திற்கு இவரை தலைவராகவும் தெரிவுசெய்தனர். உரோம் பல்கலைக் கழகத் தமிழ்சங்கத்தினூடாக வீரமாமுனிவர் விழா செய்தி மடல்

வெளியீடு என்று செய்துக்காட்டிய பெருமைக்குரியவர் இவர்.

1960களில் - இருபதுகளைக் கடக்கும் வயதில் குருவானவராக குருப்பட்டம் பெற்று இலங்கை திரும்பினார் அருட்தந்தை மரியசேவியர் அடிகள்.

தன்னுடைய குருப்பட்டம் பற்றி அவரே குறித்துள்ள ஒரு விடயம் கவனிப்பிற்குறியது. 'அந்த வயதில் யாருக்கும் குரு பட்டம் வழங்கமாட்டார்கள் என்பதால் போப்பாண்டவர் 23ம் அருளப்பரின் சிறப்பு அனுமதி பெற்றபின்பே, குருவாக நான் திருநிலைப்படுத்தப்பட்டேன்' என்று குறிக்கின்றார்.

குருவானவராக யாழ். திரும்பிய இவரை வரவேற்று ஆசீர்வதித்த ஆயர் எமிலியானுல் பிள்ளை அவர்கள், யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆசிரியராக நியமித்தார். ரோமன் கத்தோலிக்க கல்லூரியான சென். பற்றிக்ஸ் கல்லூரி காலத்தில் பாவசங்கீர்த்தன இரகசியம் எனும் இத்தாலிய திரைப்படத்தை தமிழ்ப்படுத்தும் பணியும் கொடுக்கப்பட்டது. இவருக்கு இத்தாலியமொழி தெரியும் என்பதால் வந்து சேர்ந்த பணியிது என்றாலும், கற்பித்தலில் ஆர்வமற்றிருந்த இவருக்கு இந்த திரைப்பட மொழிபெயர்ப்பு பணியே மனமகிழ்வையும் மனநிறைவையும் தந்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை. மொழிபெயர்ப்பு, டப்பிங் போன்ற பணிகளுக்கு கலை ஈடுபாடு கொண்ட மாணவர்கள் இவருக்கு பக்கபலமாக இருந்துள்ளனர்.

சக ஆசிரியர்களாக இருந்த அருட்தந்தைகள் அருள்நேசன், பி.ஜே. ஜீவரட்ணம், டீ.ஏ.ஜே. மதுரநாயகம், தாவீது அடிகள் போன்றவர்கள் இவரது தமிழ் அறிவையும், தமிழ் உணர்வையும் மிகவும் பாராட்டி ஊக்குவித்தனர்.

தாவீது அடிகளை முன்னட்டையிலிட்டு மல்லிகை கௌரவித்த போது (1971-பெப்ரவரி) அட்டைப்படக் கட்டுரையை எழுதியவர் வண. பிதா. நீ.ம. சவரிமுத்து என்பது நினைவுக்கு வருகிறது.

ஒரு வருடத்திற்கு குறைவான காலமே சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றிய அடிகள், மன்னார் பங்கின் உதவித் தந்தையாக அனுப்பப்பட்டார். இளைஞர்களை மதரீதியாகவும் சமூக ரீதியாகவும் பொறுப்புள்ளவர்களாக செயற்பட ஊக்குவிக்கும் அவரது பணிகள் பங்கு தந்தையின் அனுசரணையுடன் ஆரம்பம் கொண்ட இடம் மன்னார்.

நாடகத்தின் மூலமாகவே இதனை நடத்திச் செல்ல முடியும் என்ற முடிவுடன் மேடையேற்றிய முதல் நாடகம் 'உயிர்க்கொடுத்த உத்தமர்கள்'.

மன்னார் பிரதேச வேத சாட்சிகளின் வரலாறே நாடகமாக மேடையேறியது. இந்த நாடகத்துடனும் தொடர்ந்தும் இளைஞர்கள் பட்டாளம் இவரைச் சுற்றிவரத் தொடங்கியது. பாஸ்க்கா எனும் திருப்பாடுகளின் காட்சி மன்னாரில்தான் முதல் தடவையாக மேடையேற்றப்பட்டது.

மன்னாரில் இருந்து நாராந்தன்னை, புங்குடுதீவு, கிளிநொச்சி என பல ஊர்களில் உதவி குருவாக இருந்தவர். 1965ம் ஆண்டு உரும்பிராய் தொகுதியின் பங்கு தந்தையாக நியமிக்கப்பட்டார்.

ஓர் அரைநூற்றாண்டு காலம் நாடகத்தை மையமாகக் கொண்டு இளைஞர் சமூக இயக்கத்துடன் பல்வேறு சமயப்பணிகளுடனும் சமூகப்பணிகளுடனும் செயற்படும் திருமறைக்கலாமன்றம் அங்குதான் உருவாகியது.

கலை, இலக்கிய, அரங்கியல், இதழியல் கலைக்கான கல்வி நடவடிக்கைகள் சமூக செயற்பாடுகள் சமாதான முன்னெடுப்புகள் என என்றும் ஒதுக்கிவிட முடியாத ஒரு பண்பாட்டு நிறுவனமாக உயர்ந்து நிற்கும் திருமறைக்கலாமன்னத்தின் ஸ்தாபகரும் இயக்கவிசையாக இருந்தவரும் அருட் தந்தை மரிய சேவியர் அவர்களே. 1971ல் குருநகர் புனித. யாகப்பர் ஆலய பங்கு தந்தையாக பணியேற்றதன் பின்னர், திருமறைக்கலாமன்றத்தின் செயற்பாடுகள் விரிவுபெறத் தொடங்கின. ஆர்வம் கொண்ட மிகப் பெரிய இளைஞர் சமூகம் அடிகளாருடன் இணைந்திருந்தது, செயலாற்றியது என்பதே இதற்கான காரணம். Passion play எனும் திருப்பாடுகளின் நாடக மரபினை ஒரு தமிழ்ப் பாரம்பரியத்துடன் மேடையேற்றி வெற்றிகண்ட பெருமை திருமறைக்கலாமன்றத்துக்கும் அதன் இயக்குனர் அருட்கலாநிதி மரிய சேவியர் அடிகளாருக்கும் உரியது.

லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதி பட்டப்படிப்புக்காக 74ல் வெளிநாடு சென்றவர், இரண்டு கலாநிதி பட்டங்களுடனும் பரந்த அறிவு ஞானத்துடன் 80களில் இலங்கை திரும்பினார். அவர், இங்கு இல்லாத காலங்களிலும் திருமறைக்கலாமன்றம் சோர்வுற்றுவிடாமல் தனது பணிகளை நிறைவேற்றுவதற்கான இளைஞர்களை உருவாக்கும் ஆளுமை அவருக்கிருந்தது. லண்டன் பல்கலைக்கழக கலாநிதி பட்டத்துக்காக அவர் மேற்கொண்ட ஆய்வு A Catholic - Hindu Encounter என்பதாகும். இந்து கத்தோலிக்க உறவுகள் பற்றிய ஆய்வு இது.

ஜேர்மன் பசாவு பல்கலைக்கழக கலாநிதி பட்டத்துக்காக யாழ்ப்பான திருச்சபையின் வரலாறு எனும் ஆய்வினை மேற்கொண்டிருந்தார். சுகவீனம் காரணமாக அது கைகூடவில்லை. ஆனாலும், உடல் நிலை காரணமாக நீண்டகாலம் ஜேர்மனியில் தங்க நேரிட்டதால் பசாவு பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்தினை ஜேர்மன் மொழியிலேயெ ஆய்வாக செய்து கலாநிதி பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். சைவ சித்தாந்த மெய்யியல்தான் தமிழ்களுக்கான மெய்யியல் என்று கூறும் அடிகளார், எனக்கதில் விருப்பம் இருந்தது மட்டுமல்லாமல், ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களும் அதைச் செய்யும்படி என்னை ஊக்குவித்தார் என்கிறார்.

திருமறைக்கலாமன்றம் தனக்கான ஒரு கலை, இலக்கிய, சமூக இதழான கலைமுகம் எனும் சஞ்சிகையை 1990 (ஜனவரி - மார்ச்)இல் ஒரு காலாண்டிதழாக வெளியிடத் தொடங்கியது. அப்போதைய பொறுப்பாசிரியராக செயற்பட்டவர் மு. புஸ்பராஜன்.

ஈழத்தமிழ் மக்களின் கலை, இலக்கிய, பண்பாட்டு, சமூக வாழ்வியல் சார்ந்த படைப்புக்களை வெளிக்கொணரும் இலக்கைக் கொண்டது கலைமுகம். கலைமுகத்தின் பிரதம ஆசிரியர் நீ.மரிய சேவியர் அடிகளார்.

2021 ஜனவரி - மார்ச் கலைமுகம் 71வது இதழாக தனது 32வது அகவையில் கால் பதிக்கும் இவ்வேளை, அதன் பிரதம ஆசிரியரும், ஸ்தாபகருமான அருட்தந்தை நம்முடன் இல்லை. கலைமுகத்தின் பொறுப்பாசிரியர் செல்மர் எமில் ஆசிரியருரையை சோகத்துடன் இப்படி ஆரம்பிக்கிறார்.

'பிரதம ஆசிரியரின் கருத்துக்களோ வார்த்தைகளோ இன்றி வெளிவருகின்ற முதல் இதழாக இது அமைகின்றது... கலைமுகம் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்ற அவரது விருப்பை தன் வருகைக்கூடாக கலைமுகம் நிலைநிறுத்தும். இன்று நோயோடு போராடிக்கொண்டிருக்கும் அவரது நலத்துக்காக இறைவேண்டல் செய்யவும் வாசகர்களையும் கலையார்வம் மிக்கவர்களையும் வேண்டிநிற்கின்றோம்'. என்று முடிகிறது ஆசிரியர் உரை. 2021 மார்ச் இறுதியில் கலைமுகம் 71வது இதழ் வெளிவருகிறது. 01.04.2021ல் தனது 81வது அகவையில் அருட்தந்தை மரிய சேவியர் நம்மை விட்டு மறைகின்றார்.
அவரது பணிகள் பன்முக பரிமாணம் கொண்டவை. அவை விரிவான ஆய்வுக்குரியவை. திருமறைக்கலாமன்றம் நூறுக்கும் மேலான நாடகங்களை மேடையேற்றி இருப்பதாக கலைமுகம் ஐம்பதாவது சிறப்பிதழ் பட்டியல் இட்டிருக்கின்றது. அரங்கியல் மலர்ச்சிக்காக ஆற்றுகை எனும் சஞ்சிகை அரங்கியல் சஞ்சிகை வெளியீடு, தென்னிலங்கை அரங்கக் கலைஞர்களுடன் இணைந்து நாடக முயற்சிகள், ஐரோப்பிய நாடுகளுக்கான கலைப்பயணம் என எண்ணிலடங்கா செயற்பாடுகளின் மூலவேரவர். அவரின் இழப்பு ஏற்படுத்தியிருக்கும் வெற்றிடம் சுலபத்தில் நிரப்பப்பட முடியாதது.



theliwathai.joseph@thaiveedu.com

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# பேரா. வித்தியானந்தனின் ‘தமிழர் சால்பு’ ஓர் ஆய்வு

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

### பேராசிரியர் வித்தியானந்தன் பற்றி ஒரு சில வார்த்தைகள்:

எனது ஆசான், பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களது படைப்பான ‘தமிழர் சால்பு’ என்னும், நூலை, ஆய்வு செய்வதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

சுப்பிரமணியம் வித்தியானந்தன், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இளமாணிப் பட்டம் பெற்று, அதே பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகவும் தொடர்ந்து தலைவராகவும் பணிபுரிந்தார். பேரா. வித்தியானந்தன் அவர்கள் 1979ம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பொறுப்பேற்று 1988 வரை கடமையிலிருந்தார்.

இவர், தன் வாழ் நாளில் என்னைப் போல பல்லாயிரக் கணக்கான தமிழ் மாணவர்களை உருவாக்கியவர். ஒரு காலத்தில் இலங்கை அரசாங்க சேவையில் அவர் மாணவர்கள் இல்லாத திணைக்களமே இல்லை என்று கூறுமளவுக்கு உயர் பதவித் தமிழ் அலுவலர்களை உருவாக்கிய பெருமை அவரைச் சாரும். தான், தான் என்று தன்னை முன்னிலைப்படுத்தும் அல்லது தான் உண்டு தன் வேலை உண்டு என்று ஒதுங்கிக் கொள்ளும் பிரபலங்கள் மத்தியில், தமிழ் மாணவர்களைக் கல்வியோடு மாத்திரம் அல்லாமல் சிறந்த தமிழ் அன்பர்களாக, நாட்டின் உயர் பிரதிநிதிகளாக ஆக்கியதில் அவரின் பங்கு பெரியது.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பேராசிரியர் வித்தியானந்தனும்:

தமிழருக்கென ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்தவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள். பல்வேறு பேச்சுவார்த்தைகளின் மேல் 1979ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி, யாழ்ப்பாணத்தில் தன்னாதிக்கமுள்ள பல்கலைக்கழகம் உருவாகியது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் தன்னாதிக்கமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக்குவதில் பேராசிரியர் வித்தியானந்தனின் முயற்சி மறக்க முடியாதது. பேராசிரியர்கள் க. கைலாசபதி, ஆ. வேலுப்பிள்ளை, சி. தில்லைநாதன், பூலோகசிங்கம், கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், சி.மௌனகுரு, இ.பாலசுந்தரம், நா. சுப்பிரமணியம் முதலாய சிறந்த தமிழ் அறிஞர்களை உருவாக்கியதில் பேரா. வித்தியானந்தனின் பங்கு மிகப் பெரியது. பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன், கைலாசபதி, வேலுப்பிள்ளை, தனம்செயராஜசிங்கி, தில்லைநாதன், பூலோகசிங்கம், சண்முகதாஸ் முதலிய ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியார்கள் ஒன்றாகத் தமிழ்த் துறையை அலங்கரித்த காலத்தில் அவர்கள் அனைவரிடமும் கல்வி கற்ற பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இத்தனை ஈழத் தமிழ் அறிஞர்களும் ஒன்றாக வீற்றிருந்த தமிழ்த் துறையை நினைத்துப் பார்க்கும் பொழுது மிகவும் பெருமையாக இருக்கிறது.

இலங்கை அரசின் பலத்த எதிர்ப்பின் மத்தியில், 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை, பேரா. வித்தியானந்தன் தலைமையிலான குழு யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு ஜனவரியில் வெகு விமரிசையாக நடத்தி வைத்தது. மாநாடும் கருத்தரங்கும் நிறைவேறிய மறுநாள், சனவரி 10ம் திகதி ஒழுங்கு செய்யப்பட்ட பரிசளிப்பு விழாவில் காவல்துறையினரும் குண்டர்களும் பொது மக்களைத் தாக்கிக் கலவரமூட்டியதில் 11 பேர் கொல்லப்பட்ட சம்பவம் உலகறியும்.

பேரா. வித்தியானந்தன், ஈழத்தில் வழக்கிழந்து கொண்டிருந்த நாட்டுக் கூத்துமரபை உயிர்ப்பித்து நவீன மயப்படுத்தியவர். இவர், ஈழத்தமிழரின் தேசியக் கலைகளான நாட்டார் இலக்கியம், நாட்டுப்புறக் கலைகள் முதலியவற்றை அழிந்து போகாது காப்பதிலும் அவற்றைத் தேடித் தொகுத்து ஆவணப்படுத்தி வரலாற்றில் நிலைபெறச் செய்வதிலும் பெருமுயற்சி எடுத்தவர். 1960 களில், ஆண்டு தோறும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அண்ணாவிமாரை மட்டக்களப்பிலிருந்து தருவித்து மாணவர்களை நாட்டுக் கூத்தில் பயிற்றுவித்து அரங்கேற்றியவர் வித்தியானந்தன் அவர்கள். குறிப்பாக, கர்ணன் போர், நொண்டி நாடகம் முதலிய நாடகங்களைக் குறிப்பிடலாம். அது மட்டுமல்லாமல் இக்கூத்துக்களை வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலும் மேடையேற்றி மக்கள் மத்தியில் இவற்றை எடுத்துச் சென்றவர். இந்நாட்டார் கூத்துக்களில் பங்கு கொண்ட சிறந்த கலைஞர்களில் சிலர் இன்றும் எம்மத்தியில் வாழ்கிறார்கள். மாணவர்கள், நாட்டார் பாடல் துறையில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்வதற்கு உந்து கோலாக இருந்தவர்.

பேராசிரியரின் தமிழ்ப் பணியை, விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொண்டு இன்றைய ஆய்வுக்குள் நுழைகிறேன்.

### தமிழர் சால்பு:

‘சால்பு’ என்றால் என்ன? ‘சான்றாண்மை’ என்னும் அதிகாரத்தில், வள்ளுவர்,

**அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்து சால்பு ஊன்றிய தூண்**

- திருக்குறள்: 993

என்னும் குறட்பாவில் சால்பு என்னும் பதத்தை, ‘சால்தல்’, அதாவது நிறைதல், அதாவது, ‘நற்குணங்கள் அனைத்தும் நிறைந்தது’ என்னும் பொருள்படக் கையாண்டிருக்கிறார். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ளோட்டம், வாய்மை என்னும் ஐம்பெரும் தூண்களால் தாங்கப்பட்டு நிற்பது சான்றாண்மை என்னும் மண்டபம் என்று உருவகிக்கிறார்.

தமிழர் பண்பாட்டைக் குறிப்பதற்கு, நான் அறிந்தவரையில், தனக்கு முன்னோ அன்றிப் பின்னோ யாரும் எடுத்து ஆண்டிராத ஒரு பதத்தை பேரா. வித்தியானந்தன் எடுத்தாண்டிருக்கிறார் என்



றால் அது அவரது ஆழ்ந்த தமிழ் அறிவையும் தனித்துவத்தையும் குறிக்கிறது எனலாம். சங்கச் சான்றோர்கள் வழி நாம் அறியும் சங்க காலப் பண்பாட்டை எடுத்துக் கூறுவதற்கு இதை விடச் சிறந்த பதம் இருக்கமுடியாது.

'தமிழர் சால்பு' என்னும் இந்நூலின் முதல் பதிப்பு 1954ம் ஆண்டும், நான்காம் பதிப்பு 2006ம் ஆண்டும் குமரன் புத்தக நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளன. 2006 ஆண்டின் பின் வெளியிடப்பட்ட பதிப்புக்கள் பற்றிய விபரம் எனக்குக் கிடைக்கவில்லை. 1971ம் ஆண்டு, பாரி புத்தக நிலையமும் பேரா. வித்தியானந்தனின் 'தமிழர் சால்பு' என்னும் இந்நூலை இந்தியாவில் பதிப்பித்து இந்நூலின் பயன்பாட்டை உறுதி செய்துள்ளது. தமிழர் மத்தியில் புத்தகம் கொள்வனவு செய்து படிக்கும் பழக்கம் அருகிக் காணப்பட்ட ஒரு காலத்தில் பேரா. வித்தியானந்தன் அவர்களின் 'தமிழர் சால்பு' இத்தனை பதிப்புக்களைக் கண்டது என்பது அதன் தேவையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

தமிழர் சால்பு என்னும் நூல் பற்றிய என் ஆய்வுக்குள் நுழையும் முன், இந்நூல் எழுந்த காலப் பின்னணி பற்றி, இன்றைய தலைமுறையினருக்குச் சிறிது விளக்கவேண்டியது எனது கடமை.

- இந்நூல் பதிப்பிக்கப்பட்ட 1954ம் ஆண்டுக் காலப்பகுதியில் திறனாய்வு ஒரு தனிக்கலையாக வளர்ந்திருக்கவில்லை. அக்காலத்தில் திறனாய்வு அடிப்படையில் நூல்கள் எழுதும் வழக்கம் இருக்கவில்லை. வரையறுக்கப்பட்ட திறனாய்வு அடிப்படையில் ஆய்வுகள் அமையவில்லையே தவிர, திறன் ஆய்ந்திருக்கிறார்கள், உரையாசிரியர்கள் போல.
- பேரா. வித்தியானந்தனுக்குமுன் சங்ககாலப் பண்பாடு பற்றி ஆராய்ந்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.
- அகழாய்வைச் சான்றாகக் கொள்ளத்தக்க அளவுக்கு அகழ்வாய்வுக் கலை மிக அண்மைக் காலத்திலேயே வளர்ச்சி பெற்றிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அகழாய்வு ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. அகழாய்வுத் துறையில் இன்று முன்னணியில் நிற்கும் புதுச்சேரி வரலாற்றுத் துறைப் பேராசிரியர் க. ராஜனின் கணிப்புப்படி, அகழாய்வு செய்யப்பட வேண்டிய களங்களில் 5 விழுக்காடு மட்டில் தான் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தப் பின்னணியில் பேரா. வித்தியானந்தனின் 'தமிழர் சால்பு' என்னும் நூலினுள் நுழையலாம்.

தமிழர் சால்பு, தமிழர் வரலாற்றில் சங்ககாலம் என்று வழங்கப்பட்ட ஒரு காலப்பகுதியில் வாழ்ந்த தமிழருடைய பண்பாட்டு வரலாறு, சங்க நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இலக்கிய ஆய்வுகள் மிகச் சிறிய அளவில் நடந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் சங்க இலக்கியங்கள் கூறும் தகவல்கள் அனைத்தையும் அறிவியல் வழிநின்று வகுத்தும் தொகுத்தும், தெளிவாகத் தமிழ் மக்கள்முன் எடுத்துத்தந்த பெருமை பேரா. வித்தியானந்தனைச் சாரும்.

ஆய்வியல் அணுகுமுறை வளர்ந்துள்ள இன்றைய நிலையில், இணையவழித் தகவல்கள் சேகரிக்கும் வழிவகைகள் பெருகிக் காணப்படுகின்றன. இருப்பினும், சங்ககாலம் தொடர்பான ஆய்வினை மேற்கொள்பவர்களுக்குத் தமிழர் சால்பே ஆரம்பப் புள்ளியாக அமைகிறது என்றால் அத்துணை தகவல்களை இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதே காரணம்.

## நூல் அமைப்பு:

தமிழர் சால்பு என்னும் இந்நூல், சங்ககால வரலாறு என்னும் முதலாம் இயல் முதலாக 14 இயல்களைக் கொண்டது. காலத்தை வரையறுத்துக்கொண்ட பேராசிரியர், அரசியல் அமைப்பு என்னும் மூன்றாம் இயலில், அரசு தோன்றி வளர்ந்த வரலாறு, அக்காலத்தில் நிலவிய அமைச்சர் குழாம், நகர்க் காவல், சுங்கவரி முதலாய வரிகள் முதலியன உள்ளிட்ட எட்டு உப தலைப்புக்களின் கீழ், அரிய தகவல்களை, மிக விரிவாக, சங்க இலக்கியச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். அவரது அடிக் குறிப்புக்கள், புத்தக வசதி குறைந்த அக்கால மாணவர்களுக்கு உகந்ததாகப் பாடல் அடிகளையும் உள்ளடக்கியதாக உள்ளன. இந்நிலை நூல் முழுமைக்கும் பின்பற்றப்பட்டுள்ளது.

நான்காம் இயல், சங்ககாலப் போர்கள், போருக்கான காரணம், போர் நிகழ்ச்சிகள், சங்கப் புலவர்களும் போரும் என்னும் தலைப்புக்களின் கீழ் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இப்பகுதியில் காட்டப்படும் போர் தொடர்பான தகவல்கள், அண்மைக்கால ஈழத்துப் போரை நினைவூட்டுவதாக உள்ளது.

'தமிழ் நாட்டு மூவேந்தரும் பாரியின் மகளிரை வேண்டிப் பறம்பு மலைக் கோட்டையை முற்றுக்கையிட்டு, அவனைக் கொன்று, பறம்புமலையைப் பாழ்படுத்தி, அப்பெண்மணிகளைத் திருமணமின்றி அரசர் பலரிடம் அலையவிட்டனர்'.

என்று புறநானூற்றுப் பாடல்களைச் சான்றாக்கிக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், புறநானூற்றுப் பாடல் எதுவும் இப்போர் 'பாரி மகளிருக்காக' நடத்தப்பட்டதாக நேரடியாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடவில்லை. இந்தக் கருத்து, வழிவழியாக மக்கள் மத்தியில் கதையாக வழங்கி வந்து நாளடைவில் உண்மை என்று ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இந்நிலைக்கு, மிக அண்மைக்காலம் வரை பலர் பலியாகியிருக்கிறார்கள். பேரா. வித்தியானந்தனும் இப்பொறியில் அகப்பட்டுக்கொண்டார்.

போர் பற்றிக் கூறப்படும் பகுதி தமிழ் வரலாற்று மாணவருக்கு அரிய தகவல் தளமாகும்.

5ம் இயல் முதல் 14ம் இயல் ஈறாக அக்காலச் சமூக அமைப்பின் பல்வேறு பகுதிகளையும் தனித்தனியே ஆராய்ந்து தனது முடிவுகளையும் கொடுத்திருக்கிறார். இவை யாவும் கலைக் களஞ்சியம் என்று கூறுமளவுக்குத் தனிச் சிறப்புப் பெற்றவை. ஏற்கெனவே நான் கூறியது போல, பின்பற்றுவதற்கு எவரது நூலும் வழிகாட்டியாக அமையாத நிலையில் அமைந்த இந்நூல் காலத்தின

தேவையை நிறைவு செய்திருப்பது பெரிய காரியம். இவ்விடத்தில், இன்னும் ஒரு தகவலை நான் கூறாவிட்டால் இவ் ஆய்வு நிறைவு பெறாது.

தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்ற வி. கனகசபைப் பிள்ளை என்னும் ஈழத் தமிழர் 1895 முதல் 1901 வரை ஆங்கில, தமிழ் பத்திரிகைகளில் தமிழர் வரலாறு, தமிழ் இலக்கியம் போன்ற துறைகளில் கட்டுரைகள் எழுதி வந்தார். தமிழின் பெருமையைப் பிற மொழியினரும் அறிந்து கொள்ளும்படி தனது ஆய்வுகளைக் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் ஆங்கிலத்தில் எழுதினார். 'மதராஸ் ரிவியூ' என்னும் ஆங்கில இதழொன்றில் தமிழர் வரலாறு பற்றி தொடர்ச்சியாக இவர் எழுதிய கட்டுரைகள் பின்னர் தொகுக்கப்பட்டு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் (The Tamils 1800 Years Ago) என்னும் தலைப்பில் ஆங்கில நூலாக வெளிவந்தது. இதன் மூலம், தமிழ் வரலாறு குறித்து, முதன் முதலில் முறையான காலவரலாற்று ஆய்வை நிகழ்த்தியவர் என்ற பெருமையைக் கனகசபைப்பிள்ளை பெறுகிறார். கா. அப்பாத்துரை அவர்கள், இந்நூலை 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்' என்னும் பெயரில் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தார்.

பேரா. வித்தியானந்தன் அவர்கள், தனது, இவ்வாக்கத்திற்கு உதவிய நூல்கள் பட்டியலில், Kanagasabai Pillai, V, The Tamils Eighteen Hundred Years Ago, 1904 என்று நன்றியறிதலுடன் இணைத்திருக்கிறார்.

## காலம் பற்றிய பேராசிரியர் நோக்கு:

பேரா. வித்தியானந்தன், சங்ககாலத்தில் தமிழகத்தை ஆண்ட அரசர்களின் காலத்தை, கிரேக்க நாட்டு அறிஞர் எழுதிய, பெரிபுளுஸ் (Periplus of the Erythraean Sea or 'Voyage around the Erythraean Sea') என்னும் பயண நூற் குறிப்பு வழி கணக்கிட முயன்றிருக்கிறார். பெரிபுளுஸ் காலமாகிய கி.பி. 70, தொலமி (Ptolemy) என்னும் மேனாட்டு ஆசிரியர் காலமாகிய கி.பி. 140, ஆகியோர் குறிப்புக்களின் அடிப்படையில் தமிழ் நாட்டு அரசர்களின் காலத்தைக் கணக்கிட்டு, பசும்பூண் பாண்டியன் ஆய் நாட்டைக் கைப்பற்றியது ஏறக்குறைய கி.பி. 70 (பெரிபுளுஸ் காலமாகிய கி.பி. 70)ம் ஆண்டளவில் எனக் கொண்டார். இவ்வரசனுக்கு முன்னும் பின்னும் ஆண்ட அரசர் ஒவ்வொருவரும் 25 ஆண்டுகள் வரை ஆண்டனர் எனக் கொண்டு கணக்கிட்டால் கி.மு. 50 முதல் கி.பி. 200 வரையுள்ள காலப்பகுதியைச் சங்க காலம் எனக் கொண்டு சங்ககாலம் கி.மு முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை எனக் கொள்ளலாம் என்பது அவர் கணிப்பு.

அவர் காலத்தின்பின் ஆய்வு மிகவும் விரிவடைந்து விட்டது.

பேரா. மு. வரதராசன், 1972 ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட அவரது 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலில், சங்ககாலம், கி.மு. 500 முதல் கி.பி. 200 வரையுள்ள காலப்பகுதி என்கிறார்.

கோவிலூர் திருமடமும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் இணைந்து தொல்காப்பியர் கால ஆராய்ச்சிக் கருத்தரங்கை 2010ம் ஆண்டில் நடத்தினர். மூன்று ஆண்டுகளாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நடத்திய முப்பதுக்கும் மேற்பட்ட தொல்காப்பியக் கருத்தரங்கங்களில் தொல்காப்பியரின் காலத்தை கி.மு. 711 என்றும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, தமிழ் மொழியில் இன்று எமக்குக் கிடைத்துள்ள நூல்களில் மிகப் பழமையான தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 711 ஆயின் சங்ககாலத்தை நாம் கி.மு.8ம் நூற்றாண்டிற்கு இட்டுச் செல்லலாம்.

இன்றைய காலகட்டத்தில் தமிழர் வரலாற்றின் காலக் கணிப்பில் அகழ்வாய்வு முக்கிய இடத்தை வகிக்கிறது. திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் தமிழ் நாட்டுச் சமணப் படுக்கைகள், கல்வெட்டுக்களில் காணப்பட்ட தமிழ் பிராமி எழுத்துக்கள் கி.மு 2ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அடையாளம் காண்கிறார்.

பொருந்தல் ஆய்வுக்களத்தில் தாழி ஒன்றில் அடைக்கப்பட்ட 2 கிலோ நெல் கரிமப் பரிசோதனையில் கி.மு. 490 ஆண்டையுடையது என்று உறுதிப்படுத்தப்பட்டது. அந்தப் பானையில் அசோகர் காலத்திற்கு முற்பட்டகாலத் தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புக்கள் காணப்பட்டிருந்தன. பானையிலிருந்த நெல்லின் காலம் கி.மு 490 என்றால் அந்தப் பானையிலிருந்த எழுத்துக்களின் காலமும் அதுவேயாகும்.

நாகரிக வளர்ச்சியின் அரிய சிறப்பம்சங்களைக் கொண்ட கீழடி கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் கி.மு. பத்தாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியைச் சேர்ந்த வாழிடமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

ஆய்வியல், பெருவளர்ச்சி அடையாத காலத்தில் பேரா. வித்தியானந்தனின் காலக் கணிப்பு புரிந்து கொள்ளக் கூடியதே.

## சங்ககால அரசியல் அமைப்பு:

'திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய இரு நூல்களைக் கொண்டே இதுவரை ஆராய்ச்சியாளர் சங்ககால அரசியலைப் பற்றி ஆராய்ந்தனர்.' என்று கூறிய பேரா. வித்தியானந்தன் (1954 வரை), சங்க கால அரசியல், திருக்குறள், சிலப்பதிகார கால அரசியலினும் வேறானது என்பதை விளக்கி ஆராய்ந்துள்ளார்.

அரச உருவாக்கம் பற்றிக் கூறுகிறார். சங்க காலத்தில் முடியுடை மூவேந்தர் பிற்காலம் போலப் பெரு நிலப் பரப்பை ஆளவில்லை என்றும் அவர்களுடன் வேளிர் முதலாய குறுநில மன்னர்கள் தமிழ் நாட்டை ஆண்டனர் என்றும் பதிவு செய்கிறார்.

பாண்டி நாட்டில் பழனி மலையைப் பேகனும் பறம்புமலையைப் பாரியும் கோடை மலையைக் கடியநெடுவேட்டுவனும் பொதிய மலையை ஆயும் ஆண்டு வந்தனர் என்றும், அவ்வாறே சோழ நாட்டுப் பகுதிகளில் கொல்லிமலையை வல்வில் ஓரியும் குதிரை மலையை அதிகமானும் தோட்டிமலையைப் பெருநள்ளியும் ஆண்டனர் என்றும் கூறியிருக்கிறார்.

சங்க கால அரசர்களாக இருந்த சேர, சோழ, பாண்டியர்கள் சங்க காலத் தொடக்க காலத்தில் குழுத் தலைவர்களாக இருந்தே படிப்படியாகத் தம்மை உயர்த்திக் கொண்டு சங்க கால நடுப் பகுதியில் பேரரசர்களாக மாறியிருக்கிறார்கள் என்ற நிலையை ஆராய்ந்திருக்கிறார்.

அரசியல் அமைப்பு தொடர்பாகப் பேரா. வித்தியானந்தனின் கருத்து எனக்கு மிகவும் உகந்ததாக உள்ளது.

ஆதிச்சநல்லூர், கீழடி, கொடுமணல், பொருந்தல், அழகன்குழம் இன்னும் இவை போன்ற பல ஆய்வுக் களங்கள் தமிழர் தொன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. தமிழ் உலகம் அவைகளை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. மேலே கூறப்பட்ட ஆய்விடங்கள் எதிலும் குழுத் தலைவர்கள், மன்னர் போன்றவர்களின் இருப்புப் பற்றிய எவ்வித தகவல்களும் இன்றுவரை கிடைக்கவில்லை.

தொல்காப்பியம், புறத்திணையியல் கூறும் தகவல்களை ஆராயுமிடத்து, தொல்காப்பியம் அரச விரிவாக்க காலத்தில் பாடப்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தொல்காப்பியத்தில் குழுக்களிடையே நடந்த போர்கள் பேசப்படுகின்றன. அரச விரிவாக்கம் பேசப்படுகிறது. மன்னர்களிடையே நடைபெற்ற போர்களில் பெரும்பாலானவை நாடு பிடிப்பதற்காக நடந்த போர்களாகவே காணப்படுகின்றன.

**வெட்சித் திணைப் போர்,**
**வேந்து விடு முனைஞர் வேற்றுப் புலக் களவின்**
**ஆதந்து ஓம்பல் மேவற்றாகும்**

- தொல். புறத்திணையியல் நூ. 2

என்று வேந்தனின் ஆணையைக் குறிப்பிடுகிறார். அவ்வாறே, முல்லை நிலத்து வஞ்சித் திணைப் போர் பற்றிக் கூறும் தொல்காப்பியர்...

**வஞ்சி தானே முல்லையது புறனே**
**எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்**
**அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்து அன்றே**
- தொல். புறம். நூ.6.

என்கிறார். உழிஞைப் போர் பற்றிக் கூறும் தொல்காப்பியர்,

**உழிஞை தானே மருதத்துப் புறனே**
**முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்**
- தொல். புறத்திணையியல் நூ.8

என்கிறார்.

'முதல் அரணம்' என்றதால் 'அரண்' தலையும் இடையும் கடையும் என மூவகைப்படும். இயற்கை அரண் அற்ற மருத நில மன்னர்கள் கோட்டை அமைத்து அரசோச்சினர்.

தொல்காப்பியத்தில் வலுவான அரசுகள் பேசப்பட்ட போதும் மன்னர் பெயர்கள் எதுவும் பேசப்படவில்லை.

தொல்காப்பியத்தில் ஒரே ஒரு இடத்தில் மூவேந்தர்கள் அவரவர் அடையாளப் பூவால் அறியப்படுகிறார்கள்.

**'..... ...... ....... உறுபகை**
**வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்**
**போந்தை வேம்பே ஆர் என வரூஉம்**
**மாபெரும் தானையர் மலைந்த பூவும்'**
- தொல். புறம். நூ.5.

இங்கு சேரன் (போந்தை), பாண்டியன் (வேம்பு), சோழன் (ஆர்)என்னும் மூவேந்தரும் அவரவர் அடையாள மாலையால் அறியப்பட்டார்கள்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே நடுகல் நாட்டும் வழக்கம் இருந்திருப்பதைத் தொல்காப்பியர் பதிவு செய்திருக்கிறார். சங்க இலக்கியங்கள் நடுகற்கள் பற்றித் தரும் தகவல்கள் பொதுவானவை. எந்த ஒரு தனி மன்னனையும் குறிப்பனவாகக் காணப் படவில்லை.

தொல்காப்பியர் காலத்தில் (கி.மு. 711) அரசுக்கள் உருவாகிவிட்டன என்றும் அரச விரிவாக்கம் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் குறித்துக் கொள்ளலாம்.

அத்துடன் காலம் தொடர்பான கீழ்க் காணும் தகவல்களையும் குறித்துக் கொள்ளலாம்:

ஆதிச்சநல்லூர் காலம் கி.மு. 905,
தொல்காப்பியம் காலம் கி.மு. 711,
கீழடி காலம் கி.மு. 6 ம் நூற்றாண்டு,
பொருந்தல் காலம் கி.மு. 490.
சங்க காலம் கி.மு. 3 - 1 ம் நூற்றாண்டு வரை,

என்று கூறப்பட்டு வந்த காலக் கணிப்பை இன்று, கி.மு. 6ம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்லவேண்டியிருக்குமோ என்று ஆய்வாளர்கள் கருதும்படியாகக் கீழடியின் கரிம ஆய்வு முடிவுகள் அமைந்திருக்கின்றன.

பேரா. வித்தியானந்தனின் தமிழர் சால்பு மூன்றாம் இயலில் அரச அமைப்புப் பற்றிக் கூறப்படும் அமைச்சர், நீதி, ஊர் அவைகள், பட்டங்கள், நகர்க் காவலும் ஊர்க்காவலும், தெருக்காவலர், வரிகள் முதலிய உபபிரிவுகள் சங்க கால அரசியல் பற்றி இலக்கியச் சான்றுகளுடன் விளக்குவதாக அமைந்துள்ளன. அடிக்குறிப்பில் வெறுமனே அடிக் குறிப்பு பற்றிய விபரத்தை மட்டும் கொடுக்காமல், பாடல் பகுதிகளையும் இணைத்துக் கொடுத்திருப்பது, நூல் வசதி குறைந்த அக் கால மாணவர்கள் நிலையை உணர்ந்த தன்மையைப் புலப்படுத்துவதாய் அமைந்திருக்கிறது.

சங்ககால அரசியலை ஆயும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் மிகவும் பயனுள்ளது.



## ஆரியக் கலப்பு:

பேரா. வித்தியானந்தன், தொல்காப்பியர் காலத்தைச் சங்க இலக்கியத்தின் பின் என்று கொண்டவர்களின் கருத்தை ஆதாரமாகக் கொண்டது இவரது, பல, திசை மாறல்களுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. சங்க நூல்கள் என்னும் உபபிரிவில் 'தொல்காப்பியம் சங்க நூல்களுக்குப்பின் கி.பி. 5ம் நூற்றாண்டு வரையில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதுகின்றனர்,' என்று பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளையின் கருத்துடன் ஒத்துப்போகிறார். பண்டைய ஆய்வாளர்கள் பலர், இவ்வாறு பின்வந்த ஆய்வாளர்கள் திசை திரும்புவதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தால் தொல்காப்பியம் இவரது ஆய்வில் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

தமிழர் சால்பில் 'சங்ககாலத்தில் பெருவழக்காக இருந்த இவ்வெறியாட்டைச் சங்கமருவிய காலத்தில் இலக்கணம் வகுத்த கவனிக்கத்தக்கது.

'சில ஆரியத் தெய்வங்களும் வேதயாகங்களும் சங்க நூல்களில் குறிக்கப்பட்டமையை ஆதாரமாக்கிக் கொண்டு சங்க காலத்திலேயே தமிழரிடையே ஆரியச் சமயம் வேரூன்றியிருந்ததென அறிஞர் சிலர் கொள்வர். இது தப்பான கொள்கை' என்பதையும் தமிழருக்கே உரிய வழிபாட்டு முறைகள் பல அக்காலத்தில் இருந்தன என்பதையும், 'தமிழ் மக்களுக்குச் சிறப்பான சமயக் கோட்பாடுகளும் வழிபாட்டு முறைகளும்' என்னும் 5ம் இயலில் ஆராய்ந்துள்ளமை சிறப்பாகும். சங்ககாலத்தில் வழக்கிலிருந்த வெறியாட்டு முறை, நடுகல் வழிபாடு முதலியன விரிவாகச் சங்க இலக்கியச் சான்றுகளுடன் பேசப்பட்டிருக்கிறது. பழைய வழிபாட்டு முறைகளில் ஒன்றான நெய்தல் நில மக்கள் முழுநிலா நாளில் கடற்கரையில் சுறாவின் கொம்பை நட்டு, கடற் தெய்வத்திற்கு மீனும் இறைச்சியும் படைத்து வணங்கும் வழக்கத்தை, 'சினைச் சுறாவின் கோடுநட்டு மனைச்சேர்த்திய வல்லணங்கினான்' (பட்டினப்பாலை 86-93) என வரும் பட்டினப்பாலை அடிகளைச் சான்றாக்கி விளக்கியிருப்பது சிறப்பாகும்.

'சங்க காலப் பகுதியில் உருவ வழிபாடு இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் மன்றுகளில் மக்கள் வணக்கத்திற்காகக் கற்கள்

நிறுவப்பட்டன. இத்தகைய கற்கடவுளைப் பற்றிக் குறிப்பிடும் பட்டினப்பாலை அடிகளைச் சான்றாகக் காட்டியுள்ளார்.

**கொண்டி மகளிர் உண் துறை மூழ்கி**
**அந்தி மாட்டிய நந்தா விளக்கின்**
**மலரணி மெழுக்கம் ஏறிப் பலர் தொழ**
**வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்**

- பட்டினப்பாலை 246-249

இத்தருணத்தில், தொல்காப்பியமும் ஆரியமும் பற்றிய அறிஞர் பலரது கருத்து ஆராயத்தக்கது. தொல்காப்பியம், ஆரியர் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்பே இயற்றப்பட்டது என்பர் சிலர். தொல்காப்பியத்தில் ஆரியர் பற்றிய குறிப்புக்களும் அவர்களது வாழ்க்கை முறை பற்றிய செய்திகளும் கூறப்படுவதால் ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்து நெடும் காலத்தின் பின்னரே தொல்காப்பியம் இயற்றப்பட்டது என்று வேறு சிலர் அபிப்பிராயப்படுவர்.

தொல்காப்பியம் முந்தியது என்று வாதிடுபவர்கள், தொல்காப்பியத்திலுள்ள ஆரியர் பற்றிய நூற்பாக்கள் இடைச் செருகல் என்று கொள்வார்கள். பேராசிரியர் ப. மருதநாயகம் அவர்கள் 'தொல்காப்பியம் முதல் முழு மொழிநூல், (இடைச் செருகல்கள் நீக்கப் பெற்ற செம்பதிப்பு)' என்னும் நூலில் பல பெரும் அறிஞர்களின் ஆய்வுகளைச் சான்று காட்டி விளக்கியுள்ளார். இவர் மேற்கோள் காட்டிய அறிஞர்களில் சிலர், சார்ல்ஸ் கோவர் (Charles E. Gover), பாவாணர், வில்லியம் டெய்லர் (William Taylor), பர்னல் (A. C. Burnell), வெள்ளைவாரணர் முதலியோர். தொல்காப்பியத்தில் இடைச் செருகல் உண்டு என்று அவற்றைத் தள்ளிவிடலாம்.

ஆனால், தொல்காப்பியத்திற்குக் காலத்தால் பிற்பட்ட சங்க இலக்கியங்களை ஆராய்பவர்கள், அவற்றில் ஆரியக் கலப்பைக் காணவே செய்வார்கள். வடநாட்டார் பெருக்கமும் அவர்கள் மதங்களும் அவற்றின் தாக்கமும் சங்கத் தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்டதில் வியப்பில்லை.

## 'சங்கம்' என்னும் பெயர் பற்றிய குறிப்பு:

தமிழர் சால்பு எழுந்த காலத்தில் சங்கம் பற்றிய புரிந்துணர்வு மிகக் குறைவாகவே இருந்தது. சங்கம் என்றால் என்ன? இது வடமொழிப் பதமா? சங்ககாலம் என்ற பெயர் எப்போது எப்படி வழக்கில் வந்தது? அது வடமொழிப் பதமானால், சங்கம் என்பதற்கு இணையான தமிழ் பதம் என்ன? என்பன போன்ற மாணவர்களின் எண்ணற்ற வினாக்களுக்கு விடை தரவேண்டிய பொறுப்பு பேரா. வித்தியானந்தனுக்கு இருந்திருக்கிறது. இன்றும் மாணவர்கள் B.A, M.A, வகுப்புக்களில் இவ்வினாக்களுக்கு விடை தேடிக்கொண்டேதான் இருக்கிறார்கள். அவர்கள் வினாக்களுக்கு, பேரா. வித்தியானந்தனின் தமிழர் சால்பு விரிவான விளக்கம் தருகிறது.

## கல்வியும் கலைகளும்:

சங்க காலத்தில் வழக்கிலிருந்த கல்வி அமைப்பைப் பற்றியும் கல்வி முறைகள் பற்றியும் அறிவதற்குப் போதிய சான்றுகள் இல்லை என்று கூறியவர், சங்க காலத்தில் மக்கள் கல்வி அறிவுடையோராக இருந்தனர் என்பதைப் பல சான்றுகள் வழி நிறுவுகிறார். கல்வி அக்காலத்தில் சிறப்புற்று விளங்கியதற்குப் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் சிறப்புப் பற்றிப் பாடிய,

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே**
**பிறப்போர் அன்ன உடன் வயிற்றுள்ளும் ...**

- புறநானூறு: 183

என்னும் புறநானூற்றுப் பாடலைச் சான்று காட்டி விளக்குகிறார்.

பண்டைக் காலத்தில் பல துறைகளிலும் மிக்க கல்வியுடையார் பலர் வாழ்ந்திருந்தனர் என்பதை, உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடிய

**செஞ்ஞா யிற்றுச் செலவும் அஞ் ஞாயிற்றுப் பரிப்பும் ...**

- புறநானூறு: 30

என்னும் சிறந்த புறநானூற்றுப் பாடலைச் சான்றாகக் காட்டி விளக்குகிறார்.

சங்ககாலத்தில் நடைமுறையில் இருந்த வரிவடிவம் பற்றிய கருத்து அன்றே வந்துவிட்டது. தொல்காப்பிய நூற்பாக்கள் சில வற்றை இவ்விடத்தில் சான்றாகக் காட்டுகிறார்.

வானிலை பற்றிச் சங்க இலக்கியப் பாடற் பகுதிகளைச் சான்றாக்கி நீண்ட ஆய்வு செய்திருக்கிறார். இப்பகுதியில் கூறப்படும் தகவல்கள் பல பிற்கால ஆய்வாளருக்குப் பெரும் உதவியாக அமைந்தன.

'சங்க காலத்தில் நடனமும் இசையும் மிக்க வளர்ச்சியடைந்து இருந்தன. நடனத்தைக் குறிக்கப் பெரும்பாலும் 'கூத்து', 'ஆடல்' என்னும் சொற்களையே வழங்கினர். மக்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஆடல் விரவி இருந்தது. சமயச் சடங்குகளில் ஆடல் தனியிடம் பெற்றிருந்தது.'

என்று நடனம் பற்றிப் பொதுப்படக் கூறிய பேரா. வித்தியானந்தன், சங்க கால நடனக் கலை வரலாற்றை நாட்டுக்கூத்து, சமயச் சடங்குகளுக்குரிய ஆடல், பேய் ஆடல், போர்க்கள ஆடல் என நான்காகப் பிரித்திருக்கிறார். இவை ஒவ்வொன்றும் தனித்தனியே சிறப்பாக ஆராயப்பட்டுள்ளது. நடனம் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு இவை சிறந்த ஆரம்பப்படியாக அமையும்.

பண்டைத் தமிழர் வாழ்வில் இசை இரண்டறக் கலந்திருந்த தன்மையைச் சிறப்பாக ஆராய்ந்துள்ளார். பண்டைக் காலத்தில் அரசர்கள் புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் மட்டுமல்லாது நாடும் ஊரும் கொடுத்து ஆதரித்தமை விளக்கப்படுகிறது. பாணர், பொருநர், கூத்தர், வயிரியர், கோடியர், விறலியர் எனப் பலவகை இசைவாணர் சங்ககாலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரது தொழிலும் தனித்தன்மையும் சிறப்பாக ஆராயப்பட்டுள்ளது. சங்க இலக்கியப் பரப்பெங்கணும் காணப்படும் இசை மரபு பற்றிய அனைத்துத் தகவல்களையும் இச்சிறு நூலில் வடித்துக் கொடுத்திருக்கிறார். இசை மரபு பற்றி ஆராய்பவர்களுக்குத் 'தமிழர் சால்பு' கலைக்களஞ்சியமாகும்.

**'துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று**
**இன்நான் கல்லது குடியுமில்லை'**

- புறநானூறு: 335

என்னும் பாடலிலிருந்து பழங்குடியினருள் தலைசிறந்து விளங்கியவர் பாண் மரபினரே என்கிறார் பேராசிரியர்.

அக்காலத்தில் பாணர்கள் பொன்னைப்போல் போற்றிப் பாதுகாத்த இசைக்கருவிகள் பற்றித் தமிழர் சால்பு சிறப்புற விளக்குகிறது. இசைக் கருவிகள், தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக் கருவி என நான்காகப் பிரித்து ஆராயப்பட்டிருக்கிறது. பண்டைய தமிழர், இத்துணை இசைஞானம் படைத்தவர்களா என்று வியக்குமாறு சங்கப்பாடல்களில் இவை எடுத்தாளப் பட்டிருக்கின்றன. பேரா. வித்தியானந்தனுக்கு நாட்டார் இலக்கியத்தில் இத்துணை ஆர்வம் ஏற்படுவதற்கு அவரது 'தமிழர் சால்பு' ஒரு காரணமாக இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றும் அதே சமயம், அதுவே மாறி இருக்குமானால், அதாவது அவருக்கு நாட்டார் இசையில் இருந்த நாட்டம் இவரது தமிழர் சால்பின் இப் பகுதி இத்துணை சிறப்புற அமையக் காரணமாக அமைந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இலக்கியக் கலைகள் பற்றி ஆராயுமிடத்து, சங்க இலக்கியம் வடமொழி இலக்கியத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதென நிறுவப்பட்டுள்ளது. பொருளிலும் அமைப்பிலும் யாப்பமைதியிலும் சங்க இலக்கியம் தனிப் பண்புடன் விளங்கும் என்பதை இவ்வியல் உறுதி செய்கிறது.

> 'அகமும், புறமுமே சங்க இலக்கியத்திற்குப் பொருளாக அமைந்தன. 'பொருள்' தமிழர் இலக்கியத்திற்கே சிறப்பாக உரியது. அதே வேளையில் வடமொழி இலக்கியங்கள் சமயப் பண்பு வாய்ந்தவை, அதுவும் வேத இலக்கியங்கள் முற்றிலும்

சமயப் பண்புள்ளவை. இதிகாசங்களும் சமயச் சார்புடைய வையே. வடமொழிப் புராணங்கள் கடவுள், தேவர் முதலியோ ரது வரலாற்றைக் கூறுவனவாக அமைந்தவை. எனவே பழைய வடமொழி இலக்கியம் சமயம், தத்துவம், பௌராணிகம் ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டவை எனலாம்.'

என்று தமிழ், வடமொழி இலக்கியங்களிடையே காணப்படும் வேறு பாடுகளை எடுத்துக் காட்டுகின்றார். அத்துடன்,

'சங்க இலக்கியம் பண்டைத் தமிழ் மக்களிடையே, அவர் தம் வாழ்க்கையில் இயற்கையாக நிகழ்ந்த ஒழுக்கங்களைப் பாராட் டிச் சென்றன. கவிஞர் தாம் உண்மையில் அனுபவித்தவற் றையே கவிதையில் பொறித்தனர்.'

'சங்க நூற்களில் கையாளப்பட்ட யாப்பு வகைகள் தமிழுக்கே சிறப்பாக உரியன. ஆசிரியமும் வஞ்சியுமே அக்காலத்தில் வழக்கிலிருந்தன. சங்க நூல்களில் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகிய பன்னிரண்டும் ஆசிரியப்பாவால் அமைந்தவை. பொருநராற்றுப் படை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை ஆகிய மூன்றும் ஆசிரி யமும் வஞ்சியும் கலந்தவை.

என்று இவ்வாறு சங்க கால இலக்கியப் பண்பை வடநாட்டு இலக் கியப் பண்புகளுடன் ஒப்பிட்டு இவை இரண்டும் அடிப்படையி- லேயே மாறானவை என்று உறுதிப்படுத்துகிறார்.

அத்துடன், சங்க இலக்கியம் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண் டமையாலேயே, தமிழ் மொழியில் சிறந்த இடத்தை வகிக்கின்றது என்றும், அத்துடன், தமிழ் மொழி உலக மொழிகளுள் தலை சிறந்த ஒரு மொழியாக விளங்குகிறது என்றும், தமிழரும் தொன்மை வாய்ந்த அரிய உயிருள்ள இலக்கியச் செல்வம் படைத்தவராகத் திகழ்கின்றனர் என்றும் தன் கூற்றாகக்கூறி இவ்வியலை முடிக்கிறார்.

## சமணமும் பௌத்தமும் (எட்டாம் இயல்):

சமண மதமும் பௌத்த மதமும் தமிழ் நாட்டில் எந்தக் காலத்தில் கொண்டுவரப்பட்டன, சங்க காலத்தில் சமண, பௌத்தர் நிலை என்ன? சங்க இலக்கியங்களில் இம்மதக் கருத்துக்கள் உண்டா என்பன போன்ற வினாக்கள் இன்றும் கேட்கப்பட்டு வருகின்றன.

பேரா. வித்தியானந்தன் என்ன கூறுகிறார் என்று பார்க்கலாம்.

'கி.மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்பே சமணரும் பௌத்தரும் தமிழ்நாட்டிற்கு வந்து விட்டனர் என்று சாசனங்களால் அறியலாம். ஆனால், பத்துப்பாட்டு எட்டுத் தொகை நூல்களை நோக்குமி டத்து அவர்களின் செல்வாக்குத் தென்னாட்டில் அக்காலத்தில் சிறந்திருக்கவில்லை என்பதையும் அறிய முடிகின்றது'.

என்னும் இவரது வாதத்திற்கு இவர் முன்வைக்கும் சான்றுகள்:

- சங்ககாலத் தமிழர் காதலையும் போரையும் போற்றி வாழ்ந்த னர். இவ்விரு மதங்களும் துறவறம் வழிப்பட்டவை. அதாவது சங்கத் தமிழரும் சமணபௌத்தரும் எதிர் எதிரான வாழ்வியல் கொள்கைகளைக் கொண்டவர்கள்.
- கொல்லாமையைப் போற்றிய இவ்விரு மதங்களும் தமிழ் மக்கள் போரை விரும்பி வாழும் பண்பை அறவே வெறுத்தி ருக்கவேண்டும். எனவே தான் அவர்கள் தொடக்க காலத்தில் மலைகளில் வாழ்ந்திருக்கிறார்கள். இதனை மூத்த ஆய்வாளர், திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.
- வட நாட்டிலிருந்து வாழ்வாதாரம் தேடி வந்தவர்கள் தொடக்க காலத்தில் நகரங்களுக்கு வெளியே அமைதியை நாடி வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தமது நிலையைத் ஸ்திரப்படுத்தி யதன் மேல் மதம் பரப்பும் வேலையைத் தொடங்கியிருக்க வேண்டும்.

மதுரை, காஞ்சி போன்ற தலைசிறந்த நகரங்களில் சமண, பௌத்த துறவிகள் தங்கித் தத்தம் சமய உண்மைகளைப் புகட் டுவதற்குப் பள்ளிகள் இருந்திருக்கின்றன. காஞ்சியில் எல்லாச் சமயத்தவரும் தொழுது விழா அயர்வரென 'பலர் தொழ விழவு மேம் பட்ட பழவிறன் மூதூர்' என்று பெரும்பாணாற்றுப்படை (410-411ம் அடிகள்) வாயில் அறிகிறோம். இவற்றுள் சமண பௌத்த ரும் இருந்திருத்தலும் கூடும். 'பகட்டெருத்தின் பலசாலைத் தவப் பள்ளி' என்று சமண பௌத்த பள்ளிகள் பற்றிப் பட்டினப்பாலை (52-53) கூறுகிறது. மதுரையிலே சோலைகளில் சமணத் துறவிகள் வாழ்ந்து சாவகருக்குக் (விரதம் காப்பவர்கள்) கல்வி கற்றுக் கொடுத்தனர். பத்துப்பாட்டில் சமண, பௌத்த துறவிகளின் வாழ்க் கைப் பண்பு, அவர் குறிக்கோள் என்பவை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன என்று சங்க இலக்கியத்தில் சமண பௌத்தர் பற்றிக் கூறப்படுகின்ற செய்திகளைத் திரட்டித் தந்து அது பற்றிய தனது கருத்தையும் முடிவாகக் கூறியிருக்கிறார்.

சங்க கால மக்களின் சமய வாழ்வில் சமண பௌத்தரின் செல் வாக்கு மிகவும் குறைவாகவே இருந்தது என்பது தெளிவாகிறது. அவர் செல்வாக்கு சிறிது சிறிதாகப் பெருகி, 7ம் நூற்றாண்டின் முற்பகுதியில் உச்ச நிலையை அடைந்திருக்கிறது. ஏழாம் நூற் றாண்டில் மக்கள் மனத்தைக் கவர்ந்திருந்த சமய பௌத்த நெறிக ளைச் சைவ, வைணவத் தலைவர்கள் எதிர்த்துப் போராடவேண் டிய நிலைமை ஏற்பட்டது. இடைப்பட்ட காலத்தில் வாழ்க்கையின் துன்பப் பண்பை உறுத்திக கூறும் இவ்விரு நெறிகளும் மக்கள் மனப்பான்மையை மாற்றியமைத்து விட்டன என்றே கூறலாம் என்கிறார். இந்நிலையிலேயே அறக் கருத்துக்களைக் கூறும் பதி- னெண்கீழ்க்கணக்கு நூல்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தொடர்நிலைச் செய்யுட்களும் எழுந்தன என்று முடித்து வைக்கிறார்.

தற்காலத்தில், சில ஆய்வாளர்கள் பேசுவது போலல்லாது, பேரா. வித்தியானந்தன் 1954ம் ஆண்டளவிலேயே சமண பௌத்த மதங் களின் வருகை, இருப்பு, வீழ்ச்சி பற்றிய தெளிவான சிந்தை உடையவராக இருந்திருக்கிறார். மிக அண்மைக் காலத்தில் நான் கலந்து கொண்டதொரு இணையவழிக் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஒரு ஆய்வாளர் 'சங்க இலக்கியங்களில் காணப்படும் 'அறக் கருத்துக்கள்' சமண பௌத்தர்களால் ஆக்கப்பட்டவை என் னும் பொருள் தரும்படியாகப் பேசியிருந்தது வருத்தம் தருவதாக அமைந்திருந்தது. அனைத்து மதங்களுக்குமே அறக் கருத்துக் களை அடியாகக் கொண்டவையே. அதனால், சங்க இலக்கியத் தில் காணப்படும் அறக் கருத்துக்கள் அனைத்துமே சமண பௌத்தர்களது கருத்துக்கள் என்று கூற விளைவது அறியாமை.

நான், இதுவரை, 'தமிழர் சார்பு' என்னும் நூலின், 14 இயல்களில், பேரா. வித்தியானந்தனால் ஆராயப்பட்ட சங்ககாலப் பண்பாட்டுத் தகவல்களில் சில பகுதிகளை மட்டுமே எடுத்து வந்தேன். ஏனைய பகுதிகள் அனைத்துமே சங்க இலக்கியங்களின் அடிப்படையில் ஆராயப்பட்ட களஞ்சியங்கள். உலகம் உள்ளங்கையில் அடங்கி யுள்ள இன்றைய நிலையிலும் அவை இன்றைய ஆய்வாளர்க ளுக்கு மிகவும் பயனுள்ள தகவல்களைத் தாங்கி நிற்கிறது என் பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

பேரா. வித்தியானந்தனின் 'தமிழர் சால்பு' என்னும் இந்நூல் நூல கத்தினால் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு இணையத்தில் பெயர ளவில் காணப்படுகிறது. நூலின் பயனை பயணிப்பவர் அடைய முடியாத நிலை நீடிக்கிறது. அதாவது நூல் பதிப்பாளரின் அனும தியைப் பெறாத காரணத்தினால் 'இந்நூல் பொதுமக்கள் பாவ னைக்கு இல்லை' என்னும் நிலையில் உள்ளது. பேரா. வித்தியா னந்தனின் வாரிசுக்கள் இந்நூலை மக்கள் இணையத்தில் படித் துப் பயன்பெறும் வழி வகைகளை முன்னேடுப்பதாக உறுதியளித் துள்ளார்கள்.

இன்றுவரை சங்க இலக்கியம் ஆய்பவர்களுக்குத் தமிழர் சால்பு ஒரு கருவூலமாக இருந்து வருகிறது என்பதை யாரும் மறுக்கமுடி யாது.



selvanayaki.s@thaiveedu.com

உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான **RE/MAX** முதல் தடவையாக யாழ் மண்ணில்

# RE/MAX NORTH REALTY

கனடாவிலிருந்து தாயகத்தில் எப்பாகத்திலும் வீடு காணி வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர் உங்களை வழிநடத்த

LKR 15,000,000 CAD $ 109,025



Beach Side Land for sale in Pothuvil
(Sangamam Village, Thirukovil)
Land Size: 01 Acre

LKR 77,500,000 CAD $ 574,582



Famous and spacious Commercial
Building For sale in Prime Location Jaffna
Land Size - 34 Perch • Building Size - 5358sqft

LKR 140,000,000 CAD $ 1,015,257



Famous Palmera Eco Resorts for sale
in Nilaveli, Trincomalee
Land Size :- 143 Perch • Total Sqft :- 38,932

LKR 6,000,000 CAD $ 43,236



House For Sale
in Memorial Lane, Manipay
Land size - 16.05 Perch

LKR 5,000,000 CAD $ 35,449



House For Sale
in Urumpirai West
Land size - 41.9 Perch

LKR 28,000,000 CAD $ 204,219



Brand New 2 Story House
For Sale in Vannarpannai
Land Size - 23.1 Perch

LKR 10,000,000 CAD $ 70,877



Land for sale in Kanagar village,
Pottuvil
Land Size - 732 Perch

LKR 2,800,000 CAD -$ 20,476



Land For Sale
in Muthamil Road, Kottaddy
Land Size - 13.2 Perch

LKR 6,800,000 SOLD



House For Sale in Thinaveli
Land Size - 23.12 Perch

LKR 22,000,000 CAD $ 159,281



Land for sale in Tanankilappu,
Chavakachcheri
Total Land Size - 110 Larchams

LKR 2,000,000 CAD $ 14,450



Land For Sale In Valvettithurai
Land Size - 30 Perch

LKR 2,100,000 SOLD



Land for sale in 3rd Cross St,
Paasaiyoor
Land Size: - 30 Perch

LKR 4,000,000 CAD $ 28,937



Land For Sale In Valvettithurai
Land Size - 60 Perch

LKR 9,000,000 CAD $ 65,480



Land For Sale In Valvettithurai
Land Size - 83.8 Perch

LKR 12,000,000 CAD $ 87,692



House with Land For Sale
in Allarai North
Land Size - 125perch

LKR 600,000,000 CAD $ 4,395,926



Luxurious Business complex For Sale
In Kiramakottu Junction Point Pedro
Land Size - 61 Perch • Total Sqft - 50,771

LKR 27,500,000 SOLD



Two Story Luxury House
For Sale in Nallur
Land Size: - 10 Perch

LKR 36,000,000 CAD $ 262,381



Land For Sale
in Palaly road, Vasavilan
Land Size - 150 Perch

LKR 3,000,000 CAD $ 21,677



Land for Sale In Valvettithurai
Land Size - 45 Perch

LKR SOLD



Land For Sale in Kaithady
Land Size - 38 Perch



Lathan Varatharajah
Broker Owner
+94 76 493 3331
lathan@remaxnorth.lk



Sarmilin Rajeevan
Real Estate Representative
+94 77 227 6498
sarmilin@remaxnorth.lk

வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க
நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான
விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்

**+94 77 566 0000 • +94 21 468 0780**
**www.remaxnorth.lk**
**111C Kannathiddy Road,
Jaffna, Sri Lanka**



Nitharsan Antonrasa
Real Estate Representative
Mobile: +94 77 222 0243
nitharsan@remaxnorth.lk



M.T. Mohamed Ismail
Real Estate Representative
+94 77 221 6916
ismail@remaxnorth.lk

# தமிழகத்தின் சின்னக் கலைவாணர்

- நெல்லை ஜெயசிங்

இந்திய திரைப்பட வரலாற்றில் தமிழக திரைத் துறைக்கென மிக முக்கியமான இடம் ஒன்று உண்டு. மக்களை களிப்பூட்டும் ஒரு பொழுது-போக்கு சாதனம் என்பதையும் தாண்டி அரசியல் சமூக விழிப் புணர்வு கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் திரைத் துறை பிரதான இடத்தை வகித்துவருகிறது. உலக அளவில் திரைத் துறையின் தாக்கம் என்பது இருந்துகொண்டே இருக் கிறது. தமிழகத்திலும் அதன் பாதிப்பு இருந்து வருகிறது. பணம் தேடவும் புகழ் பெறவும் வாய்ப்பான இடம் என்பதால் பலரும் பல கனவுகளோடு திரை துறைக்குவர கடும் முயற்சிகளை மேற் கொள்கின்றனர். ஆனால், அதில் மிகச்சிலரே வெற்றி பெற்று மக் கள் மனங்களில் நீங்கா இடமும் பெறுகின்றனர். அதுவும் நகைச் சுவை வழியில் வெற்றி பெறுவது என்பது சாதாரண விடயமல்ல. கவுண்டமணி, செந்தில், வடிவேல் போன்றவர்கள் இன்று நகைச் சுவை நடிகர்களாக ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். எனினும், அவர்களிலிருந்து வேறுபட்டு, தனக்கென்று தனி வழியொன்றை நகைச்சுவையில் உருவாக்கி, அதில் வெற்றியும் பெற்றவராக இருந்தவர் மறைந்த திரு. விவேக். அண்மையில் தனது இறுதி சுவாசத்தை நிறுத்திக் கொண்ட விவேக்கின் மறைவு தமிழ் திரை உலகிற்கு மட்டுமல்லாமல் இயற்கை ஆர்வலர்களுக்கும் பேரிழப் பாகும்.

தென் தமிழகமான கோவில்பட்டியில் 1961ல் பிறந்து, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பயின்று, பின்னர் சென்னை தலைமைச் செயலகத்தில் சில வருடங்கள் பணிபுரிந்த விவேகானந்தன் என்ற இயற்பெயர் கொண்ட விவேக்கை 'மனதில் உறுதி வேண்டும்' என்ற படத்தின் மூலம் 1987ம் ஆண்டு தமிழ் திரை உலகிற்கு அடையாளம் காட்டினார் இயக்குனர் திலகம் கே. பாலசந்தர். அதன் பின்னர் பல படங்களில் நடித்தபோதும் 'திருநெல்வேலி' என்ற படத்தில் சமூக சீர்கேடுகளை கூறி சமூக சிந்தனையை தூண்டிய போதுதான் விவேக் நகைச்சுவை நடிகராக வெளி உல கிற்கு அடையாளம் காட்டப்பட்டார்.

நாடகக் கலைஞனாக வாழ்க்கையை தொடங்கி பின், தமிழ் சினி-மாவில் நுழைந்து அங்கே தனக்கென நிரந்தரமான இடத்தை நிலை நிறுத்திக் கொண்டவர் விவேக். பழமை வாதத்தையும் மூட நம்பிக்கைகளையும் சிரிக்க சிரிக்க விமர்சிப்பதன் ஊடாக சிந் திக்க வைக்கும் நகைச்சுவை பாணி அவருடையது. நகைச்சுவை கலந்து சமூக சீர்திருத்த கருத்துக்களை பேசி இரசிகர்களை சிரிக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தார். 1989ல் வெளிவந்த 'புதுப் புது அர்த்தங்கள்' என்ற படத்தில் இவர் பேசிய 'இன் னைக்கு செத்தா நாளைக்கு பால்' என்ற வசனம் பட்டி தொட்டி யெல்லாம் பேசப்பட்டு இவரை மிகவும் பிரபலப்படுத்தியது.

இவர் நடித்த திரைப்படங்களில் போக்குவரத்து நெரிசல், கழிவு நீர் தேக்கம், குடிநீர் தட்டுப்பாடு, சாலை பராமரிப்பு, லஞ்சம், ஊழல், மக்கள் தொகை பெருக்கம், எய்ட்ஸ் விழிப்புணர்வு, பெண் கள் பாதுகாப்பு, மூட நம்பிக்கை என்பவற்றை கருப்பொருளாகக் கொண்டு வெளிவந்த நகைச்சுவை காட்சிகள் மக்களிடம் மிகப் பெரிய அளவில் போய்ச்சேர்ந்தன. அவை சமூகப் பொறுப்புடன் கூடிய நகைச்சுவைகளாக இருந்தன. நகைச்சுவை வாயிலாக நல்ல கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் வல்லவ ராக இருந்தார்.

புதுப் புது அர்த்தங்கள், மின்னலே, பெண்ணின் மனதை தொட்டு, ரன், நம்ம வீட்டு கல்யாணம், தூள், ஒரு வீடு இரு வாசல், புது மாப்பிள்ளை, கேளடி கண்மணி, இதய வாசல், புத்தம் புது பய ணம், சிவாஜி, அந்நியன் என 200க்கு மேற்பட்ட படங்களில் நகைச்சுவை நடிகராகவும், நான் தான் பாலா, பாலக் காட்டு மாதவன், வெள்ளைப் பூக்கள் போன்ற படங்களில் கதாநாயகன-ாகவும் நடித்து தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெற்றவராக விவேக் விளங்கினார். இவரது 'எப்படி இருந்த நான் இப்படி



ஆயிட்டேன்', 'கோபால்! கோபால்', 'எனக்கு S.P.யை தெரியும் ஆனால் அவருக்கு என்னை தெரியாது' போன்ற சிரிப்பூட்டும் வச னங்கள் மனதை விட்டு என்றும் நீங்காது.

'நீங்க பட்டையை போடுவீங்களோ? நாமத்தை போடுவீங்களோ? யானை இப்போ விட்டையை போடப் போவுது. அதை யார் அள் ளுறதுன்னு பாருங்கோ' என்று விவேக் பேசிய வசனங்கள் மறக்க முடியாதவை. 'காக்கா பிரியாணி தின்னா காக்கா குரல் வராம உன்னிகிருஷ்ணன் குரலா வரும்' என உணவு கலப்படம் குறித்து கூறும் போது அவரது நகைச்சுவை கலந்த உடல் மொழி அபா ரம் எனலாம். 'ஏண்டா உள்ளுக்குள்ள இருக்கிற 750 ஸ்பெயார் பார்ட்ஸ்ல ஓடாத வண்டி இத்துனூண்டு எலுமிச்சம் பழத்தில ஓடு மாடா' என சாலை விபத்து குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி னார். 'என்னது என் கிட்னியை உருவிட்டாங்களா?' என கோர்ப் பரேட் மருத்துவமனையில் நடைபெறும் கொள்ளைகளையும் அவர் கூறத்தவறவில்லை. இவ்வாறு விவேக் அவர்கள் மனித சமூகம் சந்திக்கும் அனைத்து பிரச்சினைகளையும் தனது திரைப்படங்க



மனிதரே காரணம் என்பதை மிக அழுத்தம் திருத்தமாக மக்களிடம் எடுத்துக்கூறி மரம் நடும் இயக்கத்தை மூலை முடுக்கெல்லாம் எடுத்துச் சென்ற பெருமைக் குரியவர். இவரது பெரு முயற்சியால் 35 இலட்சத்திற்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டுள்ளமை மிகப்பெரும் சாதனையாகும். இவரது மரம் நடுதலின் நாட்டம் காரணமாக இவரது இறுதி ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் மரக்கன்றுகளுடன் மக்கள் வந்து அஞ்சலி செலுத்தினர். அன்றைய தினம் அவர் நினைவாக நாடெங்கும் ஏராளமான மரக் கன்றுகளும் நடப்பட்டன.

மரக்கன்றுகள் நடும் விழிப்புணர்வுடன் நின்று விடாமல் ப்ளாஸ்டிக் பயன்பாட்டிற்கு எதிரான கருத்துக்களையும் மக்களிடம் கூறி வந்தார். டெங்கு, கொரோனா தோடர்பான அரசு விளம்பரங்களிலும் தனது பங்களிப்பை செய்துள்ளார். வாய்ப்பு கிடைக்கும் போது அன்றாட வாழ்வில் சாத்தியப்பட்ட வழிகளில் மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கும் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள தவறவில்லை.

நகைச்சுவை வழியில் மக்களிடம் விழிப்புணர்வு கருத்துக்களை கொண்டு சேர்த்த மிகப் பெரும் கலைஞன் என்பதால் பல்வேறு பரிசுகள், பட்டங்கள் இவரை தேடிவந்தன. தமிழக அரசின் திரைப்பட விருது ஐந்து முறை இவருக்கு வழங்கப்பட்டது. மூன்று முறை தென்னிந்திய திரைப்பட விருதையும் பெற்றுள்ளார். இவரது சிறப்பான நகைச்சுவை நடிப்பிற்காக இந்திய அரசு உயரிய ‘பத்மஸ்ரீ’ விருதை 2009ம் ஆண்டு வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். சென்னை சத்யபாமா பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி பெருமைபடுத்தி இருக்கிறது.

ளில் நகைச்சுவை வாயிலாக வெளிப்படுத்தி மக்களை சிந்திக்கச் செய்த மக்கள் கலைஞர் எனலாம்.

‘சிந்திக்க தெரிந்த மனித குலத்துக்கு சொந்தமானது சிரிப்பு’ என்ற பாடல் மூலம் தமிழ் உலகை நகைச்சுவையால் கட்டிப் போட்டவர் என்.எஸ். கிருஷ்ணன். நகைச்சுவையில் சமூக சீர்திருத்த கருத்துக்களை புகுத்தி சினிமா இரசிகர்களை சிரிக்க வைத்து சிந்திக்கவும் வைத்தவர்களின் முன்னோடி திரு. என்.எஸ். கிருஷ்ணன். உலகப் புகழ்பெற்ற சார்லி சாப்ளின் போன்று சிரிப்புடன் சிந்தனையையும் கலந்து வழங்கி இந்தியாவின் இணையற்ற நகைச்சுவை நடிகராக விளங்கியமையால் அவருக்கு ‘கலைவாணர்’ என்ற பட்டத்தை சூட்டி மக்கள் மகிழ்ந்தனர். கலைவாணரை பின்பற்றி இவரும் தான் நடித்த பெரும்பாலான படங்களில் சமூக சிந்தனை கருத்துக்களை கூறி மக்களை விழிப்படைய வைத்தமையால் விவேக்கை ‘சின்ன கலைவாணர்’ என மக்கள் அன்புடன் அழைத்தனர். என்.எஸ். கிருஷ்ணன், எம்.ஆர். ராதா இருவரின் கலவையின் தொடர்ச்சி என்று கூட விவேக்கை கூறலாம்.

நலிவுற்ற மக்களுக்காக அயராது உழைத்த பெரியாரின் முக்கியத்துவத்தை உணர்த்தியவர்களில் விவேக்கிற்கும் முக்கிய இடமுண்டு. போலிச்சாமியார்களை இவர் அம்பலப்படுத்தும் விதம் மக்களை சிரிப்பலைகளுடன் சிந்திக்கவும் வைத்தது. சமூக கொடுமைகளுக்கு எதிரான இவரது வசனங்கள் சாட்டையடிகளாகும். நகைச்சுவை என்ற ஆயுதத்தை ஏந்திய சிற்பி அவர். சாதிக்கொடுமைக்கு எதிராகவும் தீண்டாமைக்கு எதிராகவும் வசனங்களை சுழற்றியவர் விவேக். பெண் குழந்தைகள் கருவிலேயே கொல்லப்படுவதையும் கள்ளிப்பால் கொடுத்து கொலை செய்யும் வழக்கத்தையும் கடுமையாக சாடியுள்ளார். நகைச்சுவை வழியில் பகுத்தறிவை பரப்பிய சீர்திருத்த கலைஞன். அறிவியல் கருத்துக்கள் நாட்டில் பரவவேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம் கொண்டவராக விவேக் இருந்துள்ளார்.

பெரும்பாலான திரை நட்சத்திரங்கள் தாம் உண்டு, தம் படம் உண்டு என வாழ்ந்து வரும் இன்றைய காலத்தில் விவேக் சமூக நலக் குறிக்கோள்களை கடைப் பிடித்து அதனை இறுதி வரையும் செயற்படுத்திய சமூக செயற்பாட்டாளாராகவும் இருந்துள்ளார். புவி வெப்பமயமாதலை தடுப்பதற்கு மரம் நடுவதை ஊக்குவிக்க வேண்டும் என்று கூறிய காலஞ் சென்ற ஜனாதிபதி திரு. அப்துல் கலாமின் அழைப்பை சிரமேற்கொண்டு தன் வாழ்நாளின் இறுதி வரை மரம் நடுவதில் மிகப்பெரும் பங்களிப்பை செய்த விவேக்கை உலகம் மறவாது. அப்துல் கலாம் மீதான பற்றும் மரம் நடுதலின் அவசியத்தையும் உணர்ந்த விவேக் ‘பசுமை கலாம்’ என்ற இயக்கத்தை ஆரம்பித்து இளைஞர்கள், மாணவர்கள், பெரியவர்கள் என அனைவரையும் மரம் நடச்செய்த மிகப் பெரும் இயற்கை ஆர்வலர் எனலாம். நாட்டில் வறட்சி ஏற்பட

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக ரஜினி, அஜித், விஜய், பிரசாந்த், சூர்யா, அர்ஜுன், விக்ரம், மாதவன், தனுஷ், என பல முன்னணி நடிகர்களுடன் நடித்து சிறந்த நகைச்சுவை கலைஞனாக தன்னுடைய ஆளுமையை திரு. விவேக் நிலைநிறுத்தி வந்துள்ளார். திரைத்துறையை தாண்டி எழுத்து, மேடைப் பேச்சு, கவிதை எழுதுவது என பன்முகத் தன்மை கொண்டவராகவும் விளங்கினார். இசை கற்பதிலும் ஆர்வம் கொண்டவராக திகழ்ந்துள்ளார். தனது நகைச்சுவை கலந்த மேடைப் பேச்சின் மூலம் கல்லூரி மாணவர்கள் இடையே அறிவார்ந்த கருத்துக்களை பரப்பவும் செய்தார். கலைஞர் கருணாநிதியின் மீது பற்று கொண்டிருந்த விவேக், தானே கவிதைகளை இயற்றி கலைஞர் முன் புகழ் மழை பொழிந்து தனது கவிதை ஆற்றலையும் வெளிப்படுத்தி உள்ளார்.

கோவிட் 19 என்ற தொற்று கடுமையாகி இரண்டாம் அலையில் தமிழ்நாடு தள்ளாடிய போது வரப்பிரசாதமாக வந்தது தடுப்பூசி. ஆனால் அதனை பயன் படுத்த மக்கள் சற்று அச்சம் காட்டிய போது அவர்களின் அச்சத்தை போக்கும் வகையில் தானே முன் வந்து அரசு மருத்துவமனையில் தடுப்பூசி செலுத்திக் கொண்டு அதனை விழிப்புணர்வு பிரச்சாரமாக முன்னெடுத்தமை அவருடைய சமூகப்பணியின் முக்கியத்துவத்தை உணர்த்தியது எனலாம்.

ஏப்ரல் 17 அன்று திரு. விவேக் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணித்தமை திரை உலகிற்கும் தமிழக மக்களுக்கும் பேரிழப்பாகும். அவர் திரைத்துறை வாயிலாக தமிழக மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையின் காரணமாக தமிழக காவல்துறையின் மரியாதையுடன் மேட்டுக் குப்பம் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டார். இரசிகர்களும் பொது மக்களும் நீண்ட வரிசையில் நின்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். தமிழ் திரையுலகம் திரண்டு வந்து அவருக்கு மரியாதை செலுத்தியது. இந்திய பிரதமர், தமிழக முதல்வர் என நாட்டின் அரசியல் தலைவர்கள் பலரும் விவேக்கின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தனர். எல்லா நிலைகளிலும் மனித சமூகத்திற்கு பயன் தரும் வகையில் கலைத் துறையையும் வாழ்வையும் அமைத்துக் கொண்ட ஆளுமை மிக்க விவேக் ‘சின்ன கலைவாணராக’ மனித மனங்களில் வாழ்ந்து கொண்டே இருப்பார். மரமும் மண்ணும் இருக்கும் வரை அவரது நினைவு இருந்து கொண்டே இருக்கும்.



jeyasingh@thaiveedu.com

# ஈழத்தமிழ்ச் சிறுவர் சஞ்சிகையின் முன்னோடி மு.க. சுப்பிரமணியம்

- வே. விவேகானந்தன்

ஈழத்திரு நாட்டிலே, சிறுவர் இலக்கியத் துறையில், பாடல்கள், கதைகள் என்ற வரிசையில், சிறுவர்களுக்கான சஞ்சிகை ஒன்றினை, முதன் முதலாக, ஆரம்பித்து, வெளியிட்டு வந்தவர் மு.க. சுப்பிரமணியம் அவர்கள். கல்விச் சான்றோரும், கலை இலக்கிய வாதிகளும், வர்த்தகப் பெருமக்களும் நிறைந்த, குரும்பசிட்டி என்னும் அழகிய கிராமத்தில் வாழ்ந்து வந்த திரு. கந்தவனம் செல்லமுத்து குடும்பத்தில், எட்டுப் பிள்ளைகளுள் ஏழாவது பிள்ளையாக 1919ம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி இவர் பிறந்தார். இவரது முழுப் பெயர், முருகேசு கந்தவனம் சுப்பிரமணியம்.

மு.க.சுப்பிரமணியம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாசாலையில் ஆரம்பித்தார். உயர் கல்வியை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும் தொடர்ந்தார். 1941ம் ஆண்டு போட்டிப் பரீட்சை மூலம், மூன்று ஆண்டு கால ஆசிரியர் பயிற்சிக்காக, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டார். அப்போது அதன் அதிபராகப் பணியாற்றியவர் திரு.ஏ.ஆர். சண்முகரத்தினம். பயிற்சிக் காலத்தின் போது, சுப்பிரமணியம் அவர்களின் தனித்துவமான ஆளுமையை அவதானித்த கலாசாலை அதிபர், விடுதி மாணவர்களுக்கான தலைமைப் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்தார். அத்துடன் கரப்பந்தாட்ட விளையாட்டில் திறமை பெற்றவராக விளங்கியமையால், கரப்பந்தாட்டப் போட்டியின் போது, அதன் குழுத்தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

ஆசிரியர் பயிற்சி நெறியினை சிறப்புச் சித்திகளுடன் நிறைவு செய்த மு.க. சுப்பிரமணியம் அவர்கள், மாத்தளை சஹீராக் கல்லூரி, நாவலப்பிட்டி சென். அன்றுஸ் கல்லூரி, கதிர்ரேசன் தமிழ்ப் பாடசாலை, வெலம்போட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பூண்டுலோயா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, ஓமந்தை தமிழ் மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் - காதலியார் சம்மளங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றி, இறுதியாகத் தனது சொந்த ஊரான குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயத்தில் அதிபராகவும் பணியாற்றி, 1978ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

நாவலப்பிட்டியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் தினகரன், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த குறுக்கெழுத்துப் போட்டிகளில் ஆர்வம் கொண்டவராகவும், விடைகளை விமர்சனம் செய்பவராகவும் விளங்கினார். பத்திரிகைகளை வாசிப்பதில் அவர் கொண்ட ஆர்வமும், மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அவருக்கு ஏற்பட்ட அக்கறையும் சிறுவர்களுக்கான சஞ்சிகை ஒன்றினை ஆரம்பிக்கத் தூண்டுதல்களாக அமைய, 1950ம் ஆண்டு 'வெற்றிமணி' என்னும் சிறுவர் சஞ்சிகையினை ஆரம்பித்தார். சிறுவர்கள் விரும்பி வாசிக்கவும், அவர்கள் மனதில் எழும் சிந்தனைகளை எழுத்தில் வடிக்கவும் களம் ஒன்று அமைந்தது. ஆரம்பத்தில் மாணவர்கள் ஆடு, மாடு, மயில், குயில் என எதனை எழுதி அனுப்பினாலும், அவற்றைப் பிரசுரித்து வந்தார். எழுத்தின் தரம் குறித்துப் பலர் விமர்சனம் செய்த போதிலும், அது பற்றிக் கவலை கொள்ளாது, எழுதுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளை அடிநாதமாகக் கொண்டே செயற்பட்டார். அதன் மூலம் பின்னாளில் பல எழுத்தாளர்களை வெற்றி மணி உருவாக்கியது, பலரும் அறியாத செய்தியாகும்.

மு.க. சுப்பிரமணியம் அவர்கள் ஆசிரியப்பணி நிமித்தம், எங்கெங்கு இடமாற்றம் பெற்றுச் சென்றாரோ, அங்கெல்லாம் சிரமங்



களைப் பொருட்படுத்தாது, வெற்றிமணி சஞ்சிகையினை வெளியிட்டு, விநியோகித்து வந்தார். 1950ம் ஆண்டு, நாவலப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்ட, இச்சஞ்சிகை, 1958ம் ஆண்டு முதல் க.வே. மகேந்திரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, பூண்டுலோயாவில் இருந்தும், 1964ம் ஆண்டு முதல், பொன். இராசரத்தினம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, முல்லைத்தீவு, தண்ணீரூற்றில் இருந்தும் வெளிவந்தது. இடமாற்றம், கடதாசி விலை உயர்வு, அச்சுக்கூட வசதியின்மை போன்ற பல காரணிக-

ளால் சஞ்சிகை அவ்வப்போது தடைப்பட்ட போதிலும், முல்லைத் தீவில் சொந்தமாக, ‘சக்தி அச்சகம்’ எனப்பெயரிட்டு, ஒரு அச்சுக் கூடத்தை நிறுவியதையடுத்து, சஞ்சிகை தங்குதடையின்றி வெளி-வரத் தொடங்கியது.

1968ம் ஆண்டு மு.க.சுப்பிரமணியம் அவர்கள், தனது சொந்த ஊராகிய குரும்பசிட்டியில், பொன் பரமானந்தர் வித்தியாலய அதி பராகப் பதவியேற்றுத் தனது பணியைத் தொடர்ந்தார். சக்தி அச்ச கமும் யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்து, ஸ்ரான்லி வீதியில் அமைந்து, வெற்றிமணிச் சஞ்சிகையும் அங்கிருந்து வெளிவந்தது. பின்னர் குரும்பசிட்டிக்கு அண்மையாக, சுன்னாகம் பேரூந்து நிலையத்துக்கு முன்பாக இடம்பெயர்ந்து, தொடர்ந்தும் செயற் பட்டு வந்தது. வெற்றிமணி சஞ்சிகை வெற்றிகரமாக வெளிவருவ தற்கு சக்தி அச்சகம் பெரும் பக்கபலமாக இருந்தது. அதனைச் சிறப்பாக நடத்தியவர் பொன். இராசரத்தினம் அவர்கள். இவர், மு.க. சுப்பிரமணியத்தின் மருமகனாவார். நல்ல நிர்வாகியாகவும், வல்லமை மிக்க தொழிலாளியாகவும் விளங்கினார். வெற்றிமணி சஞ்சிகையை உரிய காலத்தில் வெளியிடுவதிலும், விநியோகிப்ப திலும் அவரது பங்கு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

வெற்றிமணி சஞ்சிகையில் சிறுவர்கள், மாணவர்கள், கல்விச் சான் றோர்கள் எனப் பலரது ஆக்கங்களும் வெளிவந்தன. குறிப்பாக, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பண்டிதர் இ. நமசிவாயதேசிகர், இரசிகமணி கனக. செந்திநாதன், கவிஞர் வி. கந்தவனம், சிவத்த மிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கவிஞர் இ. நாகராஜன், காரை சுந்தரம்பிள்ளை, திக்குவலைக் கமால், க. மொழிவரதன் எனப் புனைபெயர் கொண்ட மகாலிங்கம், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, வேல் அமுதன், வை.சி. சிவஞானம், நந்தி, பால முனை பாரூக், மூதூர் கலைமேகம், சொக்கன், அரியாலையூர் ஐயாத்துரை, மஹாகவி, அருட்கவி சீ. விநாசித்தம்பி, கோப்பாய் சிவம், பண்டிதர் சோ. இளமுருகனார், நெல்லைதாசன், திமிலைத் துமிலன் எனப் புனைபெயர் கொண்ட எஸ். கிருஸ்ணபிள்ளை, கேணிப்பித்தன் எனப் புனைபெயர் கொண்ட சி. அருளானந்தம், வ.ந. கிரிதரன், டாக்டர் எம்.கே முருகானந்தம் போன்றவர்களும், தமிழகத்திலிருந்து சாலை இளந்திரையன், மதுரை கா. தமிழ்த் தம்பி போன்றவர்களும் அப்போதைய எழுத்தாளர்களாக விளங்கி னர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் இன்றும் வெற்றி மணி சஞ்சிகையில் எழுதி வருவதனை அவதானிக்கலாம். சிறந்த கவி தைகள், கதைகள், பயனுள்ள தகவல்கள் போன்றவற்றை வெளி யிட்டு, வளர்ந்தோரும் விரும்பி வாசிக்கும் தரமான, சிறுவர் சஞ்சி கையாக வெற்றிமணி இன்றும் வலம் வருவது, அதன் தனித்துவ மாகும்.

மு.க. சுப்பிரமணியம் அவர்கள் ஆர்வம் மிக்க பதிப்பாசிரியராக வும் விளங்கினார். இவர் திரு வி. கந்தவனம் அவர்கள் எழுதிய ‘கீரிமலையிலே’ என்னும் நூலை 1970ம் ஆண்டு யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கிலும், பின்னர் இணுவில் கணேசா வித்தியாசா லையிலும் வெற்றிமணி வெளியீடாக வெளியிட்டார். இந்த வெளி யீட்டு வைபவத்தில், இரசிகமணி கனகசெந்திநாதன், சொக்கன், ஏ.ரி பொன்னுத்துரை, கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகி-யோர் ஆற்றிய உரைகளை எழுத்தில் பெற்று, வெற்றிமணிச் சஞ் சிகையில் பிரசுரித்தார். அத்துடன் இரசிகமணி கனகசெந்திநாதன் மூலம் அவற்றைத் தொகுப்பித்து, ‘கீரிமலையினிலே - நூல்நயம்’ என்னும் பெயரில் நூலாகவும் வெளியிட்டார். திரு வி. கந்தவனம் எழுதிய மற்றுமொரு நூலாகிய ‘பரீட்சையில் சித்தியடைவது எப் படி?’, வை.சி. சிவஞானம் அவர்கள் எழுதிய ‘கணக்கியலுக்கோர் அறிமுகம்’, என்னும் கட்டுரைத் தொகுப்பும், நந்தி என்னும் புனை-பெயரில் டாக்டர். சிவஞானசுந்தரம் எழுதிய ‘உங்களைப் பற்றி’ என்னும் கட்டுரைத் தொகுப்பும் வெற்றிமணி வெளியீடாக வெளி வந்த ஏனைய சில நூல்கள் ஆகும்.

மு.க. சுப்பிரமணியம் அவர்கள் திறமைமிக்க ஆசிரிய தொழிற் சங்க வாதியாகவும் பணியாற்றி, ஆசிரியர்கள் மத்தியில் புகழ் பெற்று விளங்கினார். இயல்பாகவே அமைந்த, புன்னகை மலர்ந்த முகமும், எவரையும் அரவணைத்துச் செல்லும் பண்பும், அவர் நினைப்பதை சாதுரியமாக நிறைவேற்றப் பக்கத்துணையாக இருந் தன. அகில இலங்கை தமிழாசிரியர் சங்க உபதலைவராகவும், காங்கேசன்துறை ஆசிரியர் சங்கக் கிளையை ஆரம்பித்தவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். தனது ஆசிரியத் தொழிற்சங்கப் பதவி-களைப் பயன்படுத்தி, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரும் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தார். 1968ம் ஆண்டு, மு.க. சுப்பிரமணியம் அவர்கள் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாசாலையின் அதிபரானதும், பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்ற சங்கீத ஆசிரியர் ஒருவரை நியமித்தார். இதன் மூலம் உள்ளூர்க் கலைஞர் ஒருவர் வேலை வாய்ப்பைப் பெறவும், மாணவர்கள் இசை பயிலவும் முடிந்தது. தொடர்ந்து, பெற்றோர் ஆசிரியர் சங்க நிதியில் பணிபுரியும் ஆசிரியர்களைத் தொழிற்சங்க ரீதியில் ஒன்றிணைத்து, நிரந்தர நியமனம் பெற அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும்.

சமூக ரீதியாக, வலிகாமம் வடக்கு காசநோய்த் தடுப்புச் சபை உறுப்பினராகவும், அரசியலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின், குரும்பசிட்டிக் கிளைத்தலைவராகவும் விளங்கினார். சிறந்த ஆசிரி யராக, அதிபராக, தொழிற்சங்க வாதியாக, கலை ஆர்வலராக, சமூக, அரசியல் செயற்பாட்டாளராக சுறுசுறுப்புடன் காணப்பட்ட மு.க. சுப்பிரமணியம் அவர்கள், 1980ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீத்தார். வெற்றிமணி சஞ்சிகை யும் மூச்சை நிறுத்திக் கொண்டது. போர்ச் சூழல் உக்கிரமடை யவே மக்கள் குரும்பசிட்டியை விட்டுப் படிப்படியாக வெளியேறி னர். களனிப் பல்கலைக்கழகத்தில், ஓவியப் பட்டப்படிப்பை முடித்து, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் ஓவிய ஆசிரிய ராகப் பணியாற்றி வந்த மு.க.சு. சிவகுமாரன், தந்தையின் கன வைச் சுமந்தபடி, ஜேர்மன் நாட்டில் தஞ்சம் புகுந்தார். தன்னை நிலை நிறுத்திக் கொண்ட அவர், நவீன தொழில்நுட்ப வசதிக ளைப் பயன்படுத்திப், புதிய வடிவில் வெற்றிமணி சஞ்சிகையை 1994ம் ஆண்டு வெளியிடத் தொடங்கினார். தந்தையார் ஆற்றிய பணிகளை இன்றுவரை தொடர்கிறார். கனடா, ஜேர்மனி, இலங்கை ஆகிய நாடுகளின் எழுத்தாளர்கள் எழுதிய ஏறக்கு றைய இருபத்தைந்து நூல்கள் வெற்றிமணி வெளியீடாக இது வரை வெளிவந்துள்ளன. ‘சிவத்தமிழ் சஞ்சிகை’ என்ற ஒரு சஞ்சி கையும் 2004ம் ஆண்டிலிருந்து, கடந்த பதினைந்து வருடங்க ளுக்கு மேலாகத் தொடர்ந்து வெளிவருகின்றது. அத்துடன் 2005ம் ஆண்டு முதல் வெற்றிமணிச் சஞ்சிகை மீண்டும் இலங்கையில் வெளிவருகின்றது.

மு.க. சுப்பிரமணியம் அவர்கள் மறைந்து, இருபத்தைந்தாவது, வருட நினைவின் போது, (21-09-2005) அவரது கனடிய அபிமானி கள், கனடிய அஞ்சல் திணைக்களத்தின் அனுசரணையுடன், அவ ரது உருவப்படம் தாங்கிய முத்திரையினை வெளியிட்டு மதிப்ப ளித்தனர். அவரது நூற்றாண்டு ஞாபகார்த்த வைபவம் 2019ம் ஆண்டு ஜேர்மனியில் கலை இலக்கிய நிகழ்வுகளுடன் சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வுகள் மூலம் அமரர் மு.க. சுப்பிரமணியம் அவர்கள் மக்கள் மனதில் இன்றும் வாழ்ந்து வருகிறார், என்பது நிதர்சனமாகிறது.



vivekananthan.v@thaiveedu.com


# கோலங்கள்

அரங்கேற்றம், கலைநிகழ்ச்சி, திருமணம், பூப்புனித நீராட்டு

போன்ற வைபவங்களுக்கு கோலம் போட்டு அலங்கரிக்க,

Floor Decoration for

Arangetram Wedding and other Cultural Functions.

**Bhamini:**

**647 294 0736,**

**416 491 6057.**



கடன் பிரச்சனைகளா?
➤ கடன் அட்டை சிக்கல்கள்
➤ வங்கிக்கடன் சிக்கல்கள்
➤ கலக்சன் கம்பனி போன் தொல்லை
➤ ஊதிய கையகப்படுத்தும் சிக்கல்கள்
➤ இது போன்ற கடன் பிரச்சனைகளால் தினந்தோறும் வீட்டில் சண்டை
நல்ல செய்தி
எம்மிடம் தீர்வு உண்டு
நம்மால் 80% வரை உங்கள் கடன்களை குறைக்க முடியும், உங்களால் முடிந்த குறைந்த மாதக்கட்டணம் மட்டும் செலுத்தலாம். இது ஒரு கடன் ஒருங்கிணைப்பு பெறுவது போல.
இலவச ஆலோசனை பெற
JANNET FINANCIAL SERVICES INC.
Ms. Jennet Sam & Mr. Stalin Dominic
Tel: 647-894-3876
FaX: 905-471-8080
Email: jennet_renni@hotmail.com
உடன் அழையுங்கள் உடனடியாக உங்கள் புதிய வாழ்க்கையை தொடங்க
DEBT




வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
அதிகரிக்கும் வீட்டின் விலைகள்
வீடு வாங்க - விற்க உகந்த தருணம்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
Sell Your House for Highest Price - Here Are Some Recent Proven Results
SOLD OVER ASKING 119%
$131,000 SOLD OVER ASKING
Mornigside & Stains
3 | 3 Town house
SOLD OVER ASKING 118%
$180,000 SOLD OVER ASKING
Rossland & Chrch
5+2 | 7- Detached
SOLD OVER ASKING 106%
$30,000 SOLD OVER ASKING
Middlefield & Finch
2+1 | 2 Condo
SOLD OVER ASKING 103%
$26,000 SOLD OVER ASKING
Rossland & Chrch
3+1 | 3 Town House
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife G1 Realty Inc.
HomeLife/Future
Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977
MLS
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet

# இசைநாடக மேதை நாடகக் கவிமணி எம்.வி. கிருஷ்ணாழ்வார்

- த. சிவபாலு

நாடகக் கவிமணி எம்.வி. கிருஷ்ணாழ்வார் கரவெட்டி மத்தியில் பிறந்து வளர்ந்தவர். நாட்டுக்கூத்துக் கலைத்துறையின் ஆளுமை மிக்க நடிகர், அண்ணாவியார், தயாரிப்பாளர், கவிஞர் எனப் பல முகங்களைக் கொண்ட கலைஞர். ஈழத்து நாட்டுக்கூத்து வரலாற்றில், நாட்டுக்கூத்தில் வல்லவராக அவர் வளர்ந்த வரலாறு ஒரு மைல்கல் எனலாம். பாடலுடன் ஆடலும் சேர்ந்துவரப் பொருளுக்கேற்ப பாடி ஆடுவது கூத்தின் பாங்கு. பாடல்களை இயற்றுவதிலும் அவற்றை இசையமைத்துப் பாடுவதிலும் வல்லவர். பண்டிதர்களும் ஏற்றிப்போற்றும் நிலைக்கு கவிதையார்ப்பதில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கியவர். அரசியல் பிரமுகர்களின் கூட்டங்கள் முதல் அந்தியேட்டிக்கு தான் எழுதிய கல்வெட்டில் உள்ள பாடல்கள் வரை மனமுருகப் பாடுவதிலும் வல்லவர். சமத்துவத்தை வலியுறுத்தி சமதர்ம சமுதாயம் அமையவேண்டும் என விழைந்தவர். ஏழை எளியவர்களின் நண்பனாக, பட்டி தொட்டியெங்கும் சென்று கலைப்பணி ஆற்றியவர்.

ஆழ்வார் வாழ்ந்த காலத்தில் இந்தியாவிலிருந்து தாராளமாக நாடகக் கலைஞர்கள் இறக்குமதி செய்யப்பட்டார்கள். அவர்கள் மாதக்கணக்கில் கூத்துக் கொட்டகைகளில் தங்கியிருந்து கூத்துக்களை மேற்கொண்ட காலம் அது. அவ்வாறு பயிற்றப்பட்ட கலைஞர்களுக்கு மத்தியில் எம்.வி. கிருஷ்ணாழ்வார் கூத்துக்களில் வேடமேற்று நடித்து அனைவரையும் தன் நடிப்பத்திறத்தாலே தன்வசமீர்த்தவர்.

‘இந்தியாவில் இருப்பவர்களை பெரும்பணச் செலவில் இலங்கைக்கு அழைத்து வந்து, அவர்களைப் புகழ்ந்து சிந்தாமணி, அந்தமணி இந்தமணி என்று பெயரிட்டு விளக்குமாறுக்குக் குஞ்சம் கட்டுவது போல நாம் அலைவதை விட, நம் நாட்டிலுள்ள எம்.வி. கிருஷ்ணாழ்வார் போன்ற பெரும் நடிகர்களின் நடிப்பைக் கண்டு நன்றாக மகிழலாம்’ என கல்லடி வேலன் (வேலுப்பிள்ளை) அவர்கள் 1926ம் ஆண்டு சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதியுள்ளார். அதிலிருந்து தமிழகத்துக் கலைஞர்களை விடத் தரம் வாய்ந்த கலைஞர்கள் ஈழத்தில் இருந்துள்ளார்கள் என்பது புலப்படுகின்றது.

இந்தியாவில் இருந்து நாடகக் கம்பனிகளை வரவைத்து நடத்தி வந்தவர்கள், அந்த நடிகர்கள்தான் சிறந்தவர்கள் எனப் போற்றிப் புகழ்ந்தமையால் அந்நடிகர்கள் அகங்காரம் தலைக்கேறியவர்களாக, தம்மை மிஞ்ச நடிகர்கள் இங்கு இல்லை என்ற நிலையில் இசைநாடகங்களில் தங்களின் வித்துவத்தைக் காட்டி பெருமை பேசிக்கொண்டார்கள். அவர்களின் வித்துவச்செருக்கை, கொட்டத்தை அடக்கியவர் எம்.வி. கிருஷ்ணாழ்வார் என்றால் தவறாகாது. ஆயத்தம் இல்லாமலே சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பாடல்களை எதிர்பாராதவிதமாக பாடி, தனக்குச் சக்களத்தியாக வந்தவர்களை ஒரே மடக்கில் திணறவைத்து அவர்களைக் கிலிகொள்ள வைத்தவர். இந்தியாவிலிருந்து வந்து நடிக்கும் நடிகர்களுக்கு எம்.வி. கிருஷ்ணாழ்வருடன் நடிக்க பயம் கொள்ளும் நிலையைத் தோற்றுவித்திருந்தார்.

அண்ணாவியாரது நடிப்புக்குக் கட்டியம் கூறியது அவர் நடித்த முதல் நாடகமான ‘சுபத்திரை’ ஆகும். அதில் அவர் மிக முக்கியமான பெண் பாத்திரத்தில் நடித்தார். இதனால் சுபத்திரை அவரது பெயருக்கு அடைமொழியாகி ‘சுபத்திரை ஆழ்வார்’ என அவருக்கு ஒரு நிரந்தரமான பெயரைப் பெற்றுத் தந்தது. கரவெட்டியில் அவரை அண்ணாவியார் அல்லது சுபத்திரையாழ்வார் என்றுதான் குறிப்பிடுவார்கள்.

டாக்டர் சம்புநாதன் அவர்கள் ‘தென்னிந்தியாவில் சங்கரதாஸ சுவாமிகளால் பயிற்சியளிக்கப்பட்டு இலங்கையின் பல பாகங்களிலும் எண்ணற்ற நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்ற மீனலோசினி பாலசற்குணசபாவினரின் நாடகம் மேடையேற்றப்பட்ட காலத்தில், நம்மூரிலும் ‘சுபத்திரை ஆழ்வார்’ எனப் புகழ் பெற்ற ஒரு நாடகக் கவிமணியும் மிளிர்வதென்றால், அவரின் நடிப்பும் நயமிக்க வசனமும், தேன்மொழுக்கு போன்ற சாரீரமும், பெண்ணைப் போன்ற உடலமைப்பும் இன்னோரன்ன பண்புகளுமே காரணமாகும்’ என அண்ணாவியாரின் நினைவு மலரிலே குறிப்பிட்டமை கருத்திற் கொள்ளற்பாலது. பெண்கள் மேடைகளில் ஏறாத காலமது. நாடகக் கம்பனிகளிலோ, ஊரவர்களால் மேற்கொள்ளப்படும் இசை நாடகங்களிலோ, கூத்துகளிலோ பெண் பாத்திரங்களில் ஆண்களே நடிக்கும் நிலைமைதான் இருந்தது. எம்.வி. கிருஷ்ணாழ்வார் பெண்வேடம் ஏற்றால் உண்மையான பெண் போன்று மிக நளினமாக தான் ஏற்றுக்கொண்ட வேடத்திற்கேற்பவே மாறிவிடுகின்ற உன்னத நடிப்பாற்றல் கொண்டவர். அவரைப் பார்த்து உண்மையான பெண் என்றே நினைந்து மனதைப் பறிகொடுத்த ஆண்கள் அநேகர்.

நடிகமணி வைரமுத்து, ஆழ்வார் மீது மிகவும் உயர்ந்த மதிப்பை வைத்திருந்தார் என்பது அவரது கூற்றுவாயிலாகவே அறியலாம். ‘நான் இளமையாய் இருப்பதற்கு காரணம் ஆழ்வார் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட மருந்துதான்’ என்றாராம். ‘அது என்ன?’ என்று கேட்டதற்கு, ‘ஆழ்வார் எப்பொழுதும் சிரித்துக்கொண்டே இருப்பார், சிரித்துக்கொண்டே கதை சொல்லுவார். சிரிக்கச் சிரிக்கக் கதை சொல்லுவார்’ என்று குறிப்பிட்டுள்ளார். நடிகமணி வைரமுத்து அவர்கள் இளமைப்பருவத்தில் முதன் முதல் நடித்ததைப் பார்த்து ‘நீ ஒரு பெரிய நடிகனாய் வருவாய்’ என வாழ்த்தினாராம் ஆழ்வார். அதன்படி சிவாஜி கணேசனாலேயே பாராட்டப்பட்ட பெருங்கலைஞனாகத் திகழ்ந்தார் நடிகமணி வைரமுத்து. அப்படிப்பட்ட பெருங்கலைஞன் ஆழ்வாரின்மீது மிகுந்த பற்றும் மரியாதையும் கொண்டமைக்கு அவரிடம் இருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் காரணம் என்றால் தவறாகாது. ஆழ்வார் உயிர் நீத்தமை கேட்டு ஓடோடி வந்து கண்ணீர் சொரிந்தார் நடிகமணி.

இவரது நடிப்பாற்றலைக் கண்ணுற்ற நாடக நடிகமேதையான செந்திவேல் தேசிகர், அவரோடு இணைந்து இலங்கையின் பல பாகங்களிலும் நாடகங்களை ஏற்றினார். அதன் பயனாக கிருஷ்ணாழ்வாரை தமிழகத்திற்கு அழைத்துச் சென்று அங்கும் அவரது திறனைக் காட்டவேண்டும் என விரும்பினார். அவரை அழைத்துச் சென்று பல சபாக்களில் நடிக்கவைத்தார்.

1932ல் மீண்டும் இலங்கைக்கு வந்த செந்தில்வேல் தேசிகர் கிருஷ்ணாழ்வாருடன் இணைந்து பல நாடகங்களைப் மேடையேற்றினார். இவரது நாடகங்களில் பெண்வேடம் ஏற்பதில் கிருஷ்ணாழ்வார் முக்கிய பங்குகொண்டார். இவரது புகழ் தமிழர் வாழும் உலகெங்கும் பரவியது. மலேசியாவில் வாழ்ந்த தமிழர்கள் இவரை அங்கு அழைத்து நாடகங்களை மேடையேற்றியதோடு, இவருக்கு 'இலங்கைத் திலகம்' என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவம் செய்தமையும் சிறப்புடையது.

இந்தியாவில் என்.எஸ். கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர் போன்றோர் கோலோச்சிய காலம் அது. அவர்களோடு இணைந்து நடித்தாரா என்பதற்கான ஆதாரங்கள் அல்லது பதிவுகள் ஏதும் கிடைக்கவில்லை.

1931ல் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் அவர் மேடையேற்றிய நாடகத்தில் 'கலப்பொல குமாரசாமி' என்னும் பாத்திரத்தில் நடித்ததைப்பார்த்த ஆங்கிலேயர் ஒருவர், ஆழ்வாரைப் பாராட்டியதோடு பத்திரிகையிலும் அதனைப் பற்றி எழுதியுள்ளார்.

தேவரையாளி பாடசாலை விழாவில் அண்ணாவியாரால் பழக்கி மேடையேற்றப்பட்ட 'ஞானசவுந்தரி' கூத்து எல்லோராலும் பாராட்டப்பட்டது. அக்கூத்தில் இருகைகளும் வெட்டப்பட்ட பெண்ணாக பின்வருமாறு அழுது புலம்புகிறார்.

**தெய்வமே... நான் என்ன செய்வேன்**
**கைகள் நோகலான தே**
**வையத்தில் என்னைக் காக்க**
**வந்தருள் செய் யேசுவே... தெய்வமே**

**பார்க்கப் பயமான காட்டில்**
**காக்கும் துணை இல்லையே**
**ஆர்க்கும் பிரான் நீ யல்லவோ**
**ஆண்டருள் செய் யேசுவே... தெய்வமே.**

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக கோலோச்சிய நாடகக் கவி-மணி எம்.வி. கிருஷ்ணாழ்வாரைப் பற்றிய முழுமையான ஆய்வினை மேற்கொள்ளமுடியாமைக்கு பதிவுகள் இன்மையே காரணமாகும்.

அவரால் எழுதப்படும் இறந்தவரைப் பற்றிய நினைவலைகள், பிள்ளைகள், மனைவி அல்லது கணவன் புலம்புவதாக அமையும் போது அவை உண்மையிலேயே நிகழ்ந்தவற்றைப் பின்னிப் பிணைந்தவையாக யதார்த்தமாக அமைந்திருக்கும். அதற்குக் காரணம் அவர் தான் இருந்த சூழலில் உள்ளவர்கள் அனைவரையும் நன்கு அறிந்திருந்தார். அவர்கள் வாழ்வில் ஒரு பங்காளராக, பார்வையாளராக அவர் மிக நெருக்கமாகப் பழகிவந்தமை அவரின் சமூகக் கண்ணோட்டத்தை எடுத்துக்காட்டுவது. சரமக்கவி-களை இறந்தவர்களுக்கான அந்தியேட்டிக் கிரியையின்போது நூலாக்கிப் பாடுவது மரபு. இந்த மரபில் கரவையில் நீண்டகால அனுபவமும் ஆற்றலும் கைவரப்பெற்றவர் ஆழ்வார். அனைவராலும் அணுகப்பட்டு புலம்பல்கள், நினைவுமீட்டல்கள் ஆக அவரால் பாடப்பட்ட கவிதைகள் அமைந்துள்ளன. பாடும்போது அதன் உட்பொருளை அனைவரும் விளங்கும் வண்ணம் உணர்வுபூர்வமாகப் பாடுவது அவர் வழக்கம்.

கவிமணி கிருஷ்ணாழ்வாரின் நடிப்பாற்றலையும் கவிபுனைந்து பாடும் ஆற்றலையும் தனது இளமைக் காலத்திருந்தே அருகிருந்து கேட்டவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா அவர்கள். அவர் அண்ணாவியாரைப் பற்றிக் 'இயல்பான நடிப்பாற்றலும் அழகான சாரீரமும் கொண்ட அண்ணாவியாரிடம் அற்புதமான கவித்துவ ஆற்றலும் நிரம்பியிருந்தது' என்று குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் 'கவிஞர் கிருஷ்ணாழ்வார் சரமகவிகள், வாழ்த்துப்பாக்கள், வரவேற்புப்பாக்கள், இறைவன் துதிகள் முதலான பலவற்றைப் பாடியுள்ளார். பலவகையான பாக்களை இவர் பாடிய போதிலும் இவரது சரமகவிகள் தனித்துவமும் சிறப்பும் மிக்கவையாக, ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாற்றிலே நின்று நிலைக்கக் கூடியவையாக அமைந்துள்ளன' எனக் கூறுகின்றார். பேராசிரியர் சிவலிங்கராசா கிருஷ்ணாழ்வாரின் சரமகவிகளில் எடுத்துக்காட்டாக பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் தந்தை பண்டிதர் த.பொ. கார்த்திகேசு அவர்களின் கல்வெட்டில் இவர் பாடிய பாடலை குறிப்பிடுகிறார். அது கரவெட்டியின் இயல்பு நிலையை எடுத்துக் காட்டுகின்றது.



**பார்ப்பனர்கள் வேதவொலி பரவுமோர்பால்**
**பகர்புராணக் கதைகள் படிப்பதோர்பால்**
**ஏர்ப்பகடு துரக்குமொலி யெடுவதோர் பால்**
**இளஞ்சிறுவர் நிரைமேய்க்கு மிகையதோர்பால்**
**கார்க்குழலார் காளையர்கள் காதலோர்பால்**
**கணக்காயர் கலைபயிற்றுங் கழக மோர்பால்**
**போர்க்கரிய கண்ணைவளம் பொலிவதோர்பால்**
**பிறங்கிடுபொன் கரவையெனும் பெரியநாடே**

கலாநிதி சிவலிங்கராசா ஆழ்வாரின் ஊரவர். இளமைக் காலந்தொட்டே கிருஷ்ணாழ்வாரை நன்கு தெரிந்தவர் மட்டுமன்றி அவரது பரம ரசிகராகவும் இருந்துள்ளார். அவர் கிருஷ்ணாழ்வாரின் கவிச்சிறப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது 'வெண்பாக்களைத் தொடர்ந்து இடம்பெறும் 'மரபுகிளர்த்தல்' என்னும் பகுதியைப் பெரும்பாலும் கழிநெடிலடி ஆசிரியர் விருத்தத்திலேயே பாடுவார். சிறுபான்மையாக அறுசீர், எண்சீர் விருத்தங்களிலே பாடுவதுமுண்டு. பெயர்ப் பட்டியலாக அமையும் இப்பகுதியிலே கவித்துவ ஆற்றலுக்கு அதிக வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஒரு மரபுவட்டத்தினுள்ளே வாய்ப்பாட்டுரீதியாக அமைவது தவிர்க்க முடியாதது. எனினும் ஆங்காங்கே கவித்துவம் வாய்ந்து சொற்களையும் சொற்றொடர்களையும் இப்பகுதியிலே கூடப் புகுத்திவிடுவார்' என்பதற்கு உதாரணமாக பின்வரும் பாடலை எடுத்க்காட்டுகின்றார்.

**பாவாணர் கவிதனக் கெட்டாத கவினுடைய**
**பார்த்திபன் கந்தைய வேள்**
**பாருலக வாழ்வுமா சாலமென் றுன்னியே**
**பற்றுமுற்றுந் துறந்தே**
**பாதிமதி சோதிநதி யாதிவதி நீதிபதி**
**பதாம்புயம் பற்றினரோ!**

வதிரியைப் பிறப்பிடமாக் கொண்ட பெரியார் சூரனைப் பற்றி

ஆழ்வார் பாடிய சரமகவிகளில் ஒன்று பின்வருமாறு அமைந்துள் ளது அதன் சந்தச்சிறப்பு அவரது கவித்துவத்தின் அழகினுள் இழையோடிக் கிடக்கின்றது. சூரன் வாழ்ந்தகாலத்தில் யாழ் மாவட்டம் சாதிவெறியில் உச்சநிலையைக் கொண்டிருந்தது. அவற்றைத் தன்னடக்கத்தோடு செயற்படுத்தித் தம்மைச் சார்ந்த வர்களுக்கு விடியலைத் தேடிக் கொடுக்க சூரன் எதிர்கொண்ட சவால்களை எல்லாம் நன்கு அறிந்தவர் அண்ணாவியார். சூரன் மீது மிகுந்த மதிப்புக்கொண்டிருந்தார் என்பதற்கு உதாரணமாக இந்தப் பாடல்.

**மிடிநெருக்க வைதீகம் மிகநெருக்க**
**மிஸனரிமார் கழகங்கள் மேல்நெருக்க**
**முடிநெருக்கக் குடிப்பிறந்த முதியோர்தங்கள்**
**முற்றுறாப் பணியென்னும் முறைநெருக்கப்**
**படிநெருக்க இடையறா முயற்சியாலே**
**பணிமுடித்த நெருந்தகையார் சூரனார்க்குக்**
**கொடிசிறக்கப் புகழ்பாடிக் கூடியாடிக்**
**குவலயத்தே விழாவெடுத்துக் குலவுவோமே!**

மனைவி, பிள்ளைகள், கணவன், மகள், மகன், தாய், தந்தை எனப் புலம்பல் அல்லது பிரலாபம் என்னும் நிலையில் அவர் யாத்த பாடல்கள் உயிர்த்துடிப்படையன. மனைவி புலம்புவதாக அவர் 1950களில் எழுதிய ஒரு பாடலை உதாரணமாகக் காட்டு கின்றார்.

**ஒருநாளு உன்னை மறவேன்பிரிந்து**
**ஒருநாளியேனும் மகலேன்**
**திருவாய் மொழிந்த மொழியன்றிவேறு**
**திருவாசகத்தை மதியேன்**
**மருவாருமுனது திருமொழியன்றி**
**மறுமாந்தர்மேனி தழுவேன்**
**குருவாணையென்ற துரையே யின்றென்ன**
**குறைகண்டு மாண்ட தவமே.**

திருமணத்தின் போதும் இணைந்து வாழ்ந்தபோதும் கணவன் மனைவியரிடையே இடம்பெறும் புரிந்துணர்வின் அடிப்படையில் சமுதாயம் வேண்டி நிற்கும் ஒழுக்கநெறியின் பாற்படும் நம்பிக் கையின் அடிப்படையில் அமைந்துவிடுகின்ற வாழ்வின் ஓடம் தொடரும் என நம்பியிருக்க ஒருவர் இடையில் மரணித்துவிட்டால் ஏற்படும் மனவேதனை, துயரம் அடக்கமுடியாதது. அதனைத் தத் ரூபமாக எடுத்துக்காட்டும் பாங்கு எம்.வி. கிருஷ்ணாழ்வார் சமுதா யத்தை எவ்வளவிற்கு அவதானித்துள்ளார் என்பதனை அறிய வைக்கின்றது.

வெளிநாட்டில் உள்ள ஒரு மகன் தாயின் மரணச் சடங்கில் கலந்து கொள்ள முடியாத அவலநிலையை எடுத்து மிக நயமாக எடுத்துக் காட்டுகின்றது பின்வரும் விருத்தம்:

**அந்தியத்தில் அருகிருந்து பணிசெய்யாமல்**
**அணைத் தெடுத்து மடிதாங்கிப் பாலூட்டாமல்**
**சிந்துகனி வாய்மொழியைக் கேட்டிடாமல்**
**திருமுகத்தைக் கண்ணாரப் பார்த்திடாமல்**
**தந்தியெனும் துட்டயெமன் சாற்றி வந்த**
**சாவோலை கண்டுமனம் தத்தளித்தோம்**
**வந்தடையும்மார்க்கமின்றி வாடிநொந்தோம்**
**வையயத்தி லென்செய்வோம் வருந்தினோமே.**

வாலைக் குமரப் பருவத்தில் மகள் இருக்க அவளது திருமணத் திற்கு முன்பே இறந்துவிட்ட தந்தையை நினைத்து மகள் துயரம டைவதனை எடுத்துக்காட்டும் பாங்கு சிறப்பு உடையதாகவே அமைகின்றது.

**வாசமுறும் நீர்மூழ்கி வாகாய லங்கரித்து**
**பாசமுறுந் தோழியர்கள் பாங்காய்ப் புடைசூழ**
**நேசமறும் தாலியுடன் நிற்பதை நீகாணாமல்**
**பூசலுறும் பாடையிலே போனதென்ன பப்பாவே!**

**சோதி பெற நன்றாகச் சோடித்த காரேறி**
**வீதிவரும் பவனிமேதினியிற் காணாமல்**
**காதிற் பறைகேட்கக் கட்டியபூம் பாடையிலே**
**நீதியின்றிப் போய்மறைந்தாய் நெறியோ வென்பப்பாவே!**

என உதாரணம் காட்டும் பேராசிரியர் சிவலிங்கராசா 'யாழ்ப்பா ணத்துக் குடும்ப உறவுச் சூழலை படம் பிடித்துக் காட்டுவது போல அமையும் இவருடைய புலம்பல் கவிதைகளிலே சமூக விழுமியங்களும் பொருந்தி இருப்பதைக் கவனிக்கலாம்.' எனக்கு றிப்பிடுகிறார். அப்பாடலகள் அக்காலத்து குடும்பப் பிணைப்பு, உளவியல் அழுத்தம் என்பனவற்றைப் படம்பிடித்துக் காட்டுவ னவாக உள்ளன.

இறைவணக்கம். நாட்டுவளம், ஊர்ச்சிறப்பு, இறந்தவர் வரலாறு என்பன போக பிரலாபம் அல்லது புலம்பல் இடம்பெற்று அத்து யரத்தை அனுபவித்து கண்ணீர் பெருக்கி நிற்கும் நிலையை நிவர்த்தி செய்யும் பாங்கில் அமையும் தேற்றம் மிகவும் சிறப்புப் பெறுவதனைக் காணலாம்:

அவரது தேற்றங்களில் ஒன்று:

**பட்டமரம் தளிர்விடுத்துப் பூப்பதுண்டோ**
**பகலவனார் திசைமாறி யுதிப்பதுண்டோ**
**விட்டவுடல் தன்னிலுயிர் வருவதுண்டோ**
**விழுந்த மலர் பூங்கொடியிற் சேர்வதுண்டோ**
**மட்டவிழும் மலர்க்கூந்தல் வேசிமாரக்கு**
**மகிழ்ந்தளித்த பொன்மீண்டும் பெறுவதுண்டோ**
**அட்டதிசைபுகழ் திருக்கந்தையா வுக்காய்**
**அழுவதென்னோ துயர்விடுத்திங் காறுவீரே!**

என்பது கருத்தாழம் கொண்டதோடு சமூகநிலையையும் இயற்கை யையும் எடுத்தாண்டு இறப்பு என்பது இயற்கையின் நியதி என ஆற்றித் தேற்றும் சிறப்புடையது.

ஆழ்வாரின் பாடற்சிறப்பு பல்வேறு தனிப்பாடல்களாலும் அறியக் கிடக்கிறது. நவரத்தினசிங்கம் பாக்குநீரிணையைக் கடந்ததை வாழ்த்தி அவர் பாடிய வாழ்த்துப்பாவிலும் இந்தச் சந்தத்தைக் காணலாம். 'வங்கமலி பொங்குகடல் சங்கொலி முழங்கிடும்' என்னும் பாடல் கம்பனை ஒத்த கவிவளத்தை அவர் கொண்டிருந் தார் என்பதனை உணர்த்துகின்றது.

பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் அண்ணாவியாரின் வீட்டிற்கு அண்மையில் பிறந்து வளர்ந்தவர். அவரைப்பற்றி நன்கு அறிந்த வர். அவர் ஊருக்கு வந்தால் அண்ணாவியாரைக் கண்டு குசலம் விசாரிக்காமல் விடுவதில்லை. 1998ல் அவரது நூற்றாண்டுவிழா கொழும்பில் பேராசிரியர் சிவத்தம்பியின் பேராதரவோடு எடுக்கப் பட்டது.

அண்ணாவியாரின் அயலவர் பண்டிதர் மன்னவன் கந்தப்பு. அண் ணாவியாரிடம் கவிதை நயம்பற்றிக் கலந்துரையாடுவதற்காக அவ ரிடம் அடிக்கடி வருவார்.

'ஈழத்து இசை நாடகமேதை' என்னும் அவரது நினைவிதழில் அவுஸ்திரேலியாவிலிருந்து திருமதி சிவகாமி கந்தையா ஆசி ரியை அவர்கள் 'கரவை கண்ட கவிமணி' எம்.வி, கிருஷ்ணாழ்வார் நினைவலைகள் என்னும் தலைப்பிலான கவிதைகளில் முதலாவது கவிதை பின்வருமாறு அமைகின்றது.

**பொன் கொழிக்கும் இலங்கை வள நாட்டினிலே,**
**புகழ்மணக்கும் யாழ்நகரின்வரவையிலே**
**சன்னெறி தினம் வளரும் நாடகத்திலே,**
**நல் லுருப்படிக ளாக்கக்கூயவர் கவிமணியே**
**தென்னிந்தியக் கலைஞருடன் சேர்ந்துறவாடி.**
**திறன்மிக்க நாடகத்தின் உச்சியிலேறி,**
**பன்னுதிரு வேடம்பல் தாங்கிநின்றவ்**
**வெற்றியின்மேல் நாடகத்தில் வெற்றிகண்டவர்.**

எம்.வி. கிருஷ்ணாழ்வாரின் கவிதைகள், நாடகங்களை எல்லாம் கண்டு களித்தவர் சிவகாமி என்பதால் அவரது கவிதையின் ஊற் றுக்கு அவரது பட்டறிவே காரணம் எனலாம்.

கவிஞர் யதார்த்தன் எனப்படும் சிதப்பரப்பிள்ளை ஆசிரியர் கர வையைச் சேர்ந்தவர். அவர் எம்.வி. கிருஷ்ணாழ்வாரை இளமைக் கால முதல் நன்கு அறிந்திருந்தவர், உறவாடியவர், அவரது பெருமை கண்டு பெருமிதம் பூண்டவர். கம்பராழ்வாராக எம்.வி.

கிருஷ்ணாழ்வார் வேடம் போட்டமை பற்றி அவர் குறிப்பிடும் போது 'கம்பரின் வேடம் மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்டது. பாகவதரைப்போன்று தலையை வளர்த்திருந்த கிருஷ்ணாழ்வாரின் முகவமைப்பும் அதற்குப் பொருத்தமானதாக அமைந்திருத்தமை யால் தத்ரூபமாக கம்பராகவே பாத்திரத்தில் தோன்றி இப்படித் தான் கம்பர் இருந்திருக்கின்றார் என்பதனை மக்கள் மனதில் பதிய வைத்தவர்' என்று கூறுகிறார்.

நெல்லண்டையில் பல அண்ணாவிமார் இணைந்து 'பவளக்கொடி' நாடகத்தை மேடையேற்றினர். அதில் ஆழ்வாருக்கு கிருஷ்ணர் வேடம் போடப்பட்டது. தத்ரூபமாக கிருஷ்ணராகவே காட்சியளித்த ஆழ்வாரை மேடையில் பார்த்தவர்கள் தம்மை மறந்து எழுந்து நின்று கோவிந்தா, கிருஷ்ணா, கண்ணா என குரலெழுப்பி வணங் கினார்களாம். அன்றுமுதல் கிருஷ்ணாழ்வார் என அழைக்கப்பட் டார். அதனை யதார்த்தன் பின்வருமாறு கவிதையில் யாத்துள் ளார்.

**வில்லெடுத்த விசயனுக்கு வதுவை செயு மதவனாய்**
**விண்ணவரும் வியப்படைய வியன்வேட மதுதாங்கி**
**நெல்லண்டைப் பதியினிலே நீகாட்சி தருவேளை**
**நெக்குருகி மக்கள் குழாம் நெடுமாலைக் கண்டார்போல்**
**வல்லவனே உனைவணங்கி வேண்டிடுவார் வரங்களெனில்**
**வேறென்ன வேண்டுவதோ விளம்பிடவுன் கலைத்திறனை**
**பல்லவரும் புகழ்ந்துன்னைக் கிருஷ்ணாழ்வார் என்றழைத்துப்**
**பாராட்ட நாமெல்லாம் பார்த்துக் களித்தோமே.**

நகைச்சுவையாகப் பாடுவதிலும் வல்லவர் எம்.வி. கிருஷ்ணாழ் வார். பாடசாலை மாணவர்களுக்காகத் தயாரித்த நாடகங்களில் ஒன்று 'குடியே குடி கேடு' என்பதாகும். அதில் சீவல் தொழிலாளி வேடத்தில் நடித்தவருக்கான பாடலை பின்வருமாறு எழுதிப் பாட வைத்திருந்தார்.

**சோக்கான தென்னங்கள்ளு**
**சொக்க வைக்கும் எந்தன் கள்ளு**
**சோதித்துப் பார்த்துக் குடிக்க வாருங்கோ ஐயா**
**சூறையாட்டி விழுத்தாவிட்டால் கேளுங்கோ ஐயா**

**பாழ்படுவார் சீவும் கள்ளு**
**பாழான கலப்புக் கள்ளு**
**நாள்முழுதும் குடித்தாலும் வெறி**
**நாடிடுமோ ஐயா**
**நான் தருவேன் குடித்துக் காசை**
**தாருங்கோ ஐயா**

**கொப்பாட்டன் பாட்டன் எங்கள்**
**கோந்துறுவும் மாந்துறுவும்**
**தப்பாமற் சீவிப் புகழைத் தாவினோம் ஐயா**
**இப்போதும் எங்கள் கள்ளுக்குப் பெயர்**
**ஏற்றம் தான் ஐயா**

பவளக்கொடி நாடகத்தில் அவர் அக்கால சமுதாயத்தில் நலிந்து காணப்பட்ட சாதி ஒடுக்குமுறையைச் சாடுபவராகவே காணப்பட் டார். பறையறைவோனாக வந்து நடித்துப் பாடிய பாடல் பின்வரு மாறு அமைந்துள்ளது.

**புலையன் புலையன் என்று பேசுறீர் - சும்மா**
**போடா வாடா என்று ஏசுகிறீர் - நீதிக்**
**கலை கற்றவர் போலப் பேசுகிறீர்**
**காலடி கண்டாலும் கூசுகிறீர்**
**வெள்ளிக் கிழமை விரதம் பிடிக்கிறீர்**
**வேண்டு மட்டும் மாட்டைக் கொன்று புசிக்கிறீர்**

**கள்ளுச் சாராயம் கொள்ளக் குடிக்கிறீர்**
**கண்டபடி புலால் உண்டு கொழுக்கிறீர்**
**தீயசெய்கை யெல்லாம் உம்மிடத்திலே**
**வீணிற் கொடுமைகள் எம்மிடத்திலே**
**…**

இப்பாடலின் உண்மையை உணர்ந்து உள்மனம் பொங்கியவர் கள் பலபேர். இவருக்கேன் இவ் வக்காலத்து வாங்கும் எண்ணம் என்று அலுத்துக்கொண்டவர்கள் ஒரு சிலர்.

தனது நடிப்பாற்றலாலும், பாடுந்திறத்தாலும் தன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராக ஆக்கிக்கொண்டவர் அவர். அவரை வீதியில் கண்டால்கூட மதித்து மரியாதை செலுத்தாதவர்கள் யாரும் இல்லை எனலாம். ஏன், சிலர் பயந்தும் இருந்தார்கள். காரணம், நேரடியாக ஏசியே விடுவார். தவறுகளைச் சுட்டியும் காட் டுவார். தனக்கு எது சரியெனப் படுகின்றதோ அதனை யாரும் தடுக்கமுடியாது, செய்தே தீருவார். 'துணிந்தபின் மனமே துயரம் கொள்ளாதே' என்னும் தாரக மந்திரத்தைத் தன் வாழ்நாளில் போற்றியவர்.

இறுதியாக வன்னிக்கு, அதுவும் எனது ஊரான குமுளமுனையில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடந்த வேளை அவரை ஒரு பாராட்டுக் கவிதை வாசிப்பதற்காக அவரின் உறவினர். வி. சின்னத்தம்பி அழைத்து வந்திருந்தார். அவர் தான் எழுதிய பாராட்டுப் பாடலை வாசித்தார். அதனைக்கேட்ட முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பி னர் செல்லத்தம்பு எழுந்துசென்று அவரைக் கட்டித் தழுவி தனது அன்பை வெளிப்படுத்தினார்.

கேள்விஞானத்தினால் அவர் தான் கற்றுக்கொண்டவற்றை மிக நேர்த்தியாகப் பாடும் பண்பை வளர்த்துக் கொள்ளுவதற்கு அவ ருக்கு அவர் நடிப்பிற்காக மேற்கொண்ட கீர்த்தனங்கள் மிகவும் உதவியுள்ளன எனலாம். எடுத்தமாத்திரத்தில் பாட்டிற்கு எதிர்ப் பாட்டு பாடத்தக்க திறமை அவரிடம் குடிகொண்டமைக்கு அவரது ஈடுபாடும் கூத்துக்கலையில் அவர்கொண்டிருந்த பேரார்வமுமே காரணம். தமிழரின் கலைமரபு கேள்விஞானத்தினாலேயே கடத்தப் பட்டு வந்துள்ளமை நாம் அறிந்ததே. கேள்விஞானம் அவரைப் புடம்போட்ட ஒரு கவிஞராக்கியது. ஆசுகவி எனப் போற்றப்ப டத்தக்க கவிதைகளை எடுத்தமாத்திரத்தே பாடத்தக்க ஆற்றலைக் கொண்டிருந்தார். பள்ளிக் கல்வியை தனது 9வது வயதில் நிறுத்தி விட்டு நாடகப் 'பைத்தியமாக' அலைந்த கிருஷ்ணாழ்வார் கற் றுக்கொண்டவை அதிகம்.

தனது தாய்மாமனின் மகளான இலக்குமியைத் திருமணம் செய்து சீதேவி எனும் சற்புத்திரியைப் பெற்றெடுத்தார். அவரைத் தனது சகோதரியின் மகனைத் திருமணம் செய்யவைத்து அவர்பால் யோகேஸ்வரன், புவனேஸ்வரன், யோகம்மா ஆகிய மூவரைப் பேரராகக் கண்டு மகிழ்ந்தார். பேரப்பிள்ளைகள் மீது மிகுந்த பற்றும் பாசமும் வைத்திருந்தார். அவ்விதமே உறவினரின் பிள் ளைகளையும் நன்கு மதித்து அன்பு பாராட்டி வந்தார். பேரன்கள் யோகேஸ்வரன் அவுஸ்திரேலியாவிலும், புவனேஸ்வரன் நெதர் லாந்திலும், பேத்தி யோகம்மா கனடாவிலும் வாழ்ந்து வருகின்றனர்.



sivapalu@thaiveedu.com



# மக்கள் அரங்காளன் பாலசிங்கம்

ஆழத்து முத்துக்கள்

- ப. ஸ்ரீஸ்கந்தன்

மக்களைச் சீர்திருத்தவும் எழுச்சிகொள்ளச் செய்யவும் நாடகங்களை ஆற்றுகைப்படுத்திய கலைஞன். சமூகங்கள் மீது நடத்தப்பட்ட அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடிய சமூகப் போராளி. கவிஞர் செழியனைக் காப்பாற்றிப் பாதுகாத்த தோழன். தேசிய விடுதலைப் போராட்டத்தில் அரங்காடிய தெருவெளிக் கலைஞன் பாலசிங்கம் அவர்களை இம்மாத ஆழத்து முத்துக்களில் பதிவிடுவதில் தாய்வீடு பெருமை கொள்கிறது.

சாதி ஒடுக்குமுறைக்கும், உழைப்பாளிகள் மீதான அடக்குமுறைக்கும் எதிராக சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் தீவிரமாக இயங்கிய காலகட்டத்தில் தனது 16 வயதிலேயே அக்கட்சியில் இணைந்து செயற்பட்டவர் பாலசிங்கம். கோப்பாயைச் சேர்ந்த சரவணை - தங்கம் இணையரின் மகனான இவர் இருபாலை தமிழ் கலவன் பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றவர். தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தில் மேலாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

சமூகங்கள் மீது உயர் சாதியினர், நிலச்சுவாந்தர்கள் போன்றோரால் வன்முறைகள் ஏவிவிடப்பட்ட போதெல்லாம் அப்போது வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகைகள் மௌனம் காத்த நிலையில், மக்களுக்கு அந்தச் செய்திகளைச் சொல்லவும் மக்களை எழுச்சி கொள்ளவும் நாடக இயக்கத்தை இவர் கையிலெடுத்தார். அன்றிலிருந்து, நாடகம் என்பது மகிழ்வுறு கலை என்பதற்கும் அப்பால் மக்களுக்கான ஊடகம் என இன்றுவரை நாடகங்களை நிகழ்த்தி வருகிறார் கலைஞர் பாலசிங்கம்.

1976ல் சென். மேரிஸ் நாடகமன்றத்தினருடன் இணைந்து ‘சமுதாய மாற்றத்தினிலே’ என்ற தனது முதலாவது நாடகத்தை மேடையேற்றினார். இவர் எழுதி, இயக்கிய இந்நாடகம் தினக்கூலி வேலை செய்யும் உழைப்பாளிகள் குடியிருப்பதற்குச் சொந்தமாக காணி இல்லாமல் இருக்கின்ற அவலத்தையும் உற்பத்திக்கான நிலங்கள் இல்லாத பிரச்சினையையும் சொல்லியது. மன்னர் காலத்தில் இருந்து, மன்னரின் வாரிசுகள், அவர்களுக்கு ராஜகாரிய முறைமை செய்தவர்கள். பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் நில பிரபுக்கள், இறுதியாக கள்ள உறுதி எழுதியவர்கள் என காணிகள் கைமாறியபோது, ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு நிலம் மறுக்கப்பட்ட சரித்திரம் இந்நாடகத்தில் சொல்லப்பட்டது. மேலாதிக்க வர்க்கத்தின் பெரும் எதிர்ப்பைச் சம்பாதித்த இந்நாடகத்தை சென். மேரிஸ் நாடக மன்றத்தினூடு தொடர்ந்தும் மேடையேற்ற முடியாது போன சூழ்நிலையில் ‘நவயுக கலாமன்றம்’ என்ற நாடக அமைப்பை இவர் ஆரம்பித்தார்.

‘சமுதாய மாற்றத்தினிலே’ நாடகத்தில் சொல்லப்பட்டதுபோல, ‘கோலிக்கால்களை அடையாளம் கண்டு அரச காணிகளில் பலாத்காரமாகக் குடியேறுங்கள்’ என்ற கோஷத்தின் நீட்சியாக இவரும் இவர்சார்ந்த அமைப்பும் ஊரெழுவில் உள்ள கொக்கனை என்ற பகுதியில் நூறு குடும்பங்களை குடியேற்றி கொக்கனை என்ற கிராமம் உருவாக்கப்பட்டது வரலாறு.

இதன் வெற்றியைத் தொடர்ந்து கிராமங்கள் தோறும் கிராமிய உழைப்பாளர் தொழிற்சங்கத்தை ஆரம்பிக்கும் நோக்கில் அதன் பரப்புரைக்காக ‘சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்’ என்ற நாடகத்தை எழுதி, இயக்கி, மேடையேற்றினார். முதலாளிகள் உழைப்பாளிகளின் பணத்தையும் காணிகளையும் எவ்வாறு சுரண்டுகிறார்கள் என்பதை மையமாகக் கொண்ட இந்நாடகம் 126 தடவைகள் மேடையேற்றப்பட்டது. அரியாலை சுதேசிய விழா நாடகப் போட்டியில் இந்நாடகம் முதற்பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.

நாடக மேடையேற்றங்களுடன் மட்டும் நின்றுவிடாது சமூகநலச் செயற்பாட்டுகளிலும் நேரடியாகப் பங்குகொள்ளும் இவர் 1981ல் புன்னாலைக்கட்டுவனில் நடைபெற்ற சாதிப் பிரச்சினைக்கு எதிராகவும் மத்தலோடை கிராமத்தில் பெண் தொழிலாளர்களின் கூலிப் பிரச்சினை, பாலியல் வன்கொடுமை போன்றவற்றுக்கு எதிராகவும் செயற்பட்டார். 42 நாட்கள் நடைபெற்ற அப் போராட்டத்தில் கவிஞர் செழியனும் 30 நாட்கள் இரவு பகலாகத் தங்களோடு இணைந்து செயற்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். செழியன் எழுதிய ‘ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து’ என்ற நூலில் ‘அவர்கள்’ இயக்கங்களைத் தடைசெய்து ஏனைய இயக்கப் போராளிகளைத் தேடிய போது தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த காலத்தில் நடேசர் என்ற பாத்திரம் பெரியவரை (மதகுரு) சந்தித்துவிட்டு வந்து, செழியனை அந்த இரவில் பெரியவரிடம் அழைத்துச் செல்வதாக ஒரு ஏற்பாடு எழுதப்பட்டிருக்கும். நடேசர் தனது சைக்கிளில் செழியனை பெரியவரிடம் அழைத்தச் செல்லும் போது உரும்பிராய் துண்டி வைரவர் கோயில் பகுதியில் வானில் வந்த ‘அவர்கள்’ செழியனைக் கண்டு துரத்திய சம்பவம் குறிப்பிடப்பட்டிருக்கும். இவ்வாறு செழியனின் பாதுகாப்புக்காக தன் உயிரைத் துச்சமாக மதித்து இயங்கிய தோழர் நடேசர் தான் எமது இம்மாதக் கலைஞன் பாலசிங்கம் அவர்கள்.

1994ல் கலை பண்பாட்டுக் கழகத்தில் இணைந்த பின்னர் இவர் எழுதி மேடையேற்றிய முதலாவது நாடகம் ‘இருள் சூழ்ந்த பொழுதுகள்’. 1994ல் சந்திரிகா ஆட்சிக்கு வந்ததும் நடைபெற்ற பேச்சு வார்த்தை குறித்த பரப்புரையை இந்நாடகம் செய்தது. யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது, தீர்வு கிட்டும் என நம்பிய மக்களுக்கு இனவாத அரசுகள் திணிக்கின்ற ஒப்பந்தங்கள் ஒருபோதும் வெற்றி அளிக்காது என்ற செய்தியை அந்நாடகம் சொல்லியது. இந்நாடகம் நூறுக்கும் மேற்பட்ட மேடையேற்றங்களைக் கண்டது. இவ்வாறு இடப்பெயர்வுக்குமுன் இயக்கப் பரப்புரைக்கான, சமூக மேம்பாட்டுக்கான 40 வரையிலான நாடகங்களை இவர் எழுதி இயக்கியுள்ளார். உறவுப்பூக்கள், சூரியனைச் சுட்டெரிப்போம், அவள் ஒரு மாதிரி, கூடி நாம் வாழ்வோம், ஆவியில் இனியவளே, மெய்ப்பொருள், அதிகாரம் உனக்கேது சொல், நாலு + நாலு = நாற்பது, சிறை, மனிதனைப் படைப்போம், மோகங்கள் என்பன இவ்வாறு மேடையேற்றப்பட்ட நாடகங்களில் சிலவாகும்.

தமிழர் பிரதேசங்களான கொக்குளாய் - நாயாறு பகுதிகளில் களுமாத்தையா என்ற பிரபல கேடி உட்பட 200 சிங்களக் கைதிகளின் குடும்பங்களைக் குடியேற்றி நில அபகரிப்பு செய்ததையும் அவர்கள் கசிப்பை உற்பத்தி செய்து அயல் கிராமங்களிலுள்ள தமிழர்

களுக்கு விற்றது போன்ற சமூக சீர்கேடுகளுக்கு எதிராக இவர் எழுதி இயக்கிய 'சமுத்திரத்தில் ஒரு சரித்திரம்' என்ற நாடகம் 1,500 தடவைகளுக்கு மேல் ஆற்றுகை செய்யப்பட்டது. களு மாத்தையாவாக நடித்தவர்மீது பார்வையாளர்கள் கற்களை எறியும் அளவுக்குத் தத்ரூபமாக நடிக்கப்பெற்ற இந்நாடகம் இனவாதம் எல்லா இனங்களையும் அழிக்கும் என முடிவுறும்.

நவாலித் தேவாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலால் பலியான சிறார்களை மையமாக வைத்து எழுதப்பட்ட இவரது 'உறவுப்பூக்கள்' என்ற நாடகம் பரவலாகப் பேசப்பட்டது. 95ல் இடம்பெற்ற இடப்பெயர்வின் போது உறவுப் பூக்கள் நாடகக் கலைஞர்களின் குடும்பங்களோடு ஒட்டிசுட்டான் பகுதிக்கு குடிபெயர்ந்தார். கலைஞர்களோடு சேர்ந்து கூட்டு வாழ்க்கை வாழ்ந்த இவர் விவசாயம் செய்தும் கயிறு திரித்தும் தமக்கான வாழ்வாதாயங்களைத் தேடிக்கொண்டனர்.

இதன் பின்னர் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் முழுநேர ஊழியர்களாக, தினமும் சராசரி ஐந்து ஆற்றுகைகள் நிகழ்த்தும் தெருவெளிக் கலைஞர்களாகச் செயற்பட்டனர். குடியிருக்க இடம் இல்லாமல், வருமானம் ஏதுமின்றி, வறுமையில் வாடிவதங்கி, மலேரியா நோய்க்குள்ளும், பொருளாதாரம் தடைக்குள்ளும், வெளித் தொடர்பின்றி, கந்தகமணத்துடன் போர்ச்சூழலின் அச்சத்தின் மத்தியிலும் வாழும் மக்களை ஆசுவாசப்படுத்தும், ஆற்றுப்படுத்தும் ஆற்றுகைகளை செய்ததுடன் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் செய்திகளையும் வழிமுறைகளையும் சொல்லவல்ல கலைஞர்களாக விளங்கினர். ஆற்றுகையோடு மட்டும் நின்றுவிடாது, போகிற இடங்களில் காணப்படும் துயர்துடைப்புப் பணிகளிலும் இவர்கள் ஈடுபடுபவர். மழைக்கு ஒழுகும் வீடுகளின் கூரையைத் திருத்துதல், மலசலகூடம் அமைத்துக் கொடுத்தல் போன்ற அத்தியாவசிய தேவைகளை பொருண்மிய நிறுவனத்திடம் உதவிகளைப் பெற்றுச் செய்தனர். சாரீரத்தையும் சரீரத்தையும் வருத்தி மக்களுக்காக உழைத்த இந்தத் தெருவெளிக் கலைஞர்களை நாம் மறந்து போனது தான் மகா சோகம்.

இவரது பிரச்சார நாடகமான 'வாருங்கோ' பிரசித்தமான நாடகமாகும். வெளிநாடுகளின் ஆக்கிரமிப்புகளாலும் அரசியல் சூழ்ச்சிகளாலும் பின்தள்ளப்பட்ட போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அழைப்பு விடுப்பதாக இந்நாடகம் அமையும். வட்டக்களரி அரங்கில் பார்வையாளர்களுக்கும் நடிகர்களுக்கும் இடையே நடைபெறும் உரையாடலாக எழுதப்பட்ட இந்நாடகம், போராட்டத்தின் குறியீடான பல்லக்கைப் பார்வையாளர்கள் சுமந்து செல்வதாக முடிவுறும்.

2001ல் இடம்பெற்ற தேர்தலை மையமாகக் கொண்டு இவர் அரங்கேற்றிய 'அகமும் முகமும்' நாடகம் தடைசெய்யப்படும் அளவுக்குப் பரபரப்பாகப் பேசப்பட்டது. சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் வெளிநாடுகள் பலஸ்தீன மக்களின் குரலை, போராட்ட ஆற்றலை எவ்வாறு நசுக்கியது என்பதை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. ஒருதடவை இந்நாடகத்தைப் பார்த்த நோர்வே நாட்டின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு இந்நாடகம் பங்கம் விளைவிக்கும் என தமிழ்ச்செல்வனிடம் கூற, அவர் அந்நாடகத்தைத் தடைசெய்தார்.

எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கும் நிலையில் காதல், திருமணங்கள் அவசியமா என்பதைக் கருவாக்கிய 'இருட்டை விழுங்கியவர்கள்', தோல்விகளால் துவண்டு போகாமல் விழுந்தாலும் எழுவோம் என உரைத்த 'அக்கினிக் குஞ்சுகள்' பௌத்த நூல்களில் வரும் கோட்பாடுகளை முன்வைத்து எழுதிய 'தர்மத்தின் தீர்ப்பு', விடுதலை அடைந்த பின்னர் சிறுவர், வயோதிபர், உழைப்பாளிகள் போன்றோரின் வாழ்வு எவ்வாறு அமையும் என்பதை விளக்கும் 'பூமழை பொழியும்' என்பன பிரசித்தமான இவரது நாடகங்களில் சிலவாகும்.

சமாதானம் நிலவிய 2005 காலப்பகுதியில் கலைபண்பாட்டுக் கழகம் ஐரோப்பிய நாடுகளுக்கு மேற்கொண்ட கலைப்பயணத்தின் போது இவரும் குழுவினரும் சென்று 'சூரியதேவியின் சோகங்கள்' என்ற நாடகத்தை மேடையேற்றியது குறிப்பிடத்தக்கது.



வன்னித் தெருவெளியரங்கின் ஒவ்வொரு ஆற்றுகைக்கு முன்னும் பின்னும் மக்களுடனான கலந்துரையாடல்கள் இடம்பெறுவது முக்கிய அம்சமாகும். அவர்களின் பிரச்சினைகளை அறிந்து தீர்வு காண்பதும் அவர்களை ஆற்றுப்படுத்துதல் போன்ற பணிகளும் இக்கலந்துரையாடல் மூலம் இடம்பெறும். இவ்வாறு நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி பல்லாயிரம் தடவைகள் ஆற்றுகை செய்தவர் கலைஞர் பாலசிங்கம். வண்ணக் கனவுகள், முற்றத்தில் வெள்ளரசு, நெருப்பைச் சுமக்கும் நெஞ்சங்கள், உனக்குள் நிலவு, மல்லிகை மொட்டுக்கள், செஞ்சோற்றுக் கடன் என்பன நினைவில் வரும் இவரது நாடகங்களில் சில.

இவரைப் போல் செல்வம் (புத்தூர்), செல்லக்குட்டி (வன்னி), அண்ணாவியார் மணி (முல்லைத்தீவு), சங்கரண்ணா (முள்ளியவளை), ரகு(இரத்தினபுரம்), கண்ணதாசன் (முழங்காவில்) போன்ற பல கலைஞர்கள் வன்னித் தெருவெளி அரங்கைச் சுமந்து சென்றுள்ளனர்.

இறுதி யுத்தத்தின் போது காலில் காயப்பட்ட நிலையில் 2009 மே 17 அன்று வவுனியா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

மீண்டும் கோப்பாயில் குடியேறிய இவர் தற்போது பல்வேறு அமைப்புக்களுக்காக நாடகங்களை மேடையேற்றி வருகிறார். கைதடி வளர்மதி வாசிகசாலைக்காக அவனும் அவளும், இன்னுமா இருட்டுக்குள், மட்டுவில் வாசிகசாலைக்காக ஜனநாயகம், மட்டுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்காக குளப்படிக்காரர், பாலியல் சுகாதாரம், கைதடி வடக்கு சனசமூக நிலையத்தினருக்காக தாயவள் சக்தியா, காதலிப்போமா, புன்னாலைக்கட்டுவன் இளைஞர் மன்றத்துக்காக கெட்டிக்காரர், வன்னி கல்லாறு மகா வித்தியாலயத்துக்காக கடவுள் ஒருநாள், ஒளி உதித்தது, உதயதாரகை சனசமூக நிலையத்துக்காக Our Culture ஆகிய நாடகங்களை கலைஞர் மேடையேற்றியுள்ளார்.

இவர் எழுதிய கிராமிய உழைப்பாளர் சங்க வரலாறு, ஒரு கிராமத்தின் பக்திநெறிப் பயணம் ஆகிய நூல்கள் அச்சில் உள்ளன. இவரது வாழ்நாள் அரங்க ஆற்றுகைக்காக ஏழாலை முத்தமிழ் கலாமன்றத்தினரின் 'கலைஞான திலகம்', கைதடி வடக்கு சனசமூக நிலையத்தினரின் 'கலைக்கூத்தன்', நீர்வேலி இளைஞர்களின் 'கலைக்குரிசில்' ஆகிய பட்டங்கள் இவருக்குக் கிடைத்துள்ளன.

மென்மேலும் இவர் கலைப்பணியாற்ற தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

# நீங்கள் இந்தியாவா? இலங்கையா? (11)

- மல்லியப்புசந்தி திலகர்

இலங்கை வாழ் மலையகத் தமிழர்களின் அடையாளம் தொடர்பில் இன்னும் நடந்து கொண்டு இருக்கும் விவாதம் ‘அவர்கள் இந்தியர்களா? இலங்கையர்களா?’ என்பதுதான். இந்த நிலையில், நீங்கள் இந்தியாவா? இலங்கையா? எனும் தலைப்பிலே ஒரு பாட்டுப் புத்தகத்தையே அச்சிட்டு வெளியிட்டவர் கவிஞர் கா.சி. ரெங்கநாதன்.

கண்டி, உடுவளைத் தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளியான கா.சி. ரங்கநாதன் தோட்டங்கள் தோறும் முச்சந்திப் பாடல்களைப் பாடிவந்துள்ளதுடன் அவற்றைத் தொகுத்து பன்னிரண்டு பாட்டுப் புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார். இவற்றுள் மலையகத்தவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டமை தொடர்பில் பல பாடல்கள் அமைந்துள்ளமை சிறப்பு. அத்துடன் சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தம் பிரகாரம் மலையக மக்கள் தாம் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் எனும் தீர்மானத்தை எடுப்பதில் இருந்த குழப்பத்தையே தனது தொகுப்புக்கு ‘நீங்கள் இந்தியாவா? இலங்கையா?’ என தலைப்பு இட்டு வரலாற்றுப் பதிவு ஒன்றைச் செய்துள்ளார்.

நீங்க - இந்தியாவா லங்கையா எந்தவூர் பிரஜையா
எங்கிருந்து வாழப்போறீங்க - என்று
வந்திருக்கும் வாக்குரிமை மனுவை நிரப்புவதற்கு
மறந்து விடாதீங்க நீங்க

நீங்க - எந்தவூர் பதிவு கொடுத்திடினும் - அதுயிந்த
ரெண்டுவருடத்தில் முடித்திடனும் - இதைப்
பிந்தவிட்டு போட்டு சும்மா முந்தி ஏமாந்திட்டதுபோல்
மிதமாயிருந்திடாதீங்க
உங்க சந்ததிக்கு என்ற ஒரு சொந்த இடத்தைப் பிடிக்க
சங்கத்துடன் ஒத்துழையுங்க... சங்கத்துடன் ஒத்துழையுங்க...

சட்டம் - அஞ்சேகா லட்சம்பேர் அங்கிட்டு - மற்ற
மிஞ்ச மூன்றுலட்சம்பேர் இங்கிட்டு - இது
அங்கு சென்றாலுமல்ல திங்கு நின்றாலுமிதில்
அச்சமென்ப தொன்றுமில்லைங்க -
என்றாலுமது
அத்துமீறி நடக்கும் சுத்தப் போக்கிரித்தனத்தை
கர்த்தன் செயல் என்று வையுங்கோ
எக்காலத்திலும் ஒற்றுமை அவசியமுங்க - நீங்க இந்தியாவா..

இந்தியா - போங்க என்று சொல்லுதொரு கூட்டம் - ஏன்
போகணும் என்குது மறு கூட்டம் - இதில்
போவென்று சொல்பவரும் போகவேண்டமென்பவரும்
பாட்டாளி தலைவர்தாங்க - இவுங்க
பாட்டாளிக்கு கூட்டாளியாய்
பக்கபலமாயிருந்தால்
பட்டபலன் கிட்டப் பாருங்க - ரெங்கநாதன்
பைந்தமிழ் பாட்டுக் கேளுங்க - நீங்க இந்தியாவா...

(ஓ... ரசிக்கும் சீமானே எனும் திரை இசைப் பாடல் மெட்டில் மேற்படி இவரது பாடல் அமையப் பெற்றுள்ளது)

ஒரு தோட்டத் தொழிலாளியாக இருந்துள்ள கவிஞர் கா.சி. ரெங்கநாதன் முன்வைக்கும் அரசியல் விமர்சனம் இங்கு முக்கியமானது.




மக்களை நாடுகடத்தும் இந்த ஒப்பந்தத்தை ‘அத்துமீறி நடக்கும் சுத்தப் போக்கிரித் தனம்’ என்கிறார். அதே போல இந்த மக்களின் தலைவர்கள் தெளிவான நிலைப்பாட்டை எடுக்காது தடுமாறும் நிலைமையையும் சுட்டிக் காட்டி உள்ளார். ‘ஐந்தேகால் லட்சம் பேர் அங்கிட்டு... மிச்சம் மூன்றுலட்சம்பேர் இங்கிட்டு’ என தனது பாடல் ஊடாகவே இலங்கை - இந்திய அரசுகள் பண்டங்களைப்

போன்று பங்கிட்டுக்கொண்ட மக்கள் கூட்டத்தினரின் எண்ணிக்கை யையும் விபரிக்கிறார்.

மலையகத் தமிழர் இந்தியா சென்று சேர்வதா அல்லது இலங் கையிலேயே வாழ்வதா எனும் விவாதங்களும் வாதப் பிரதிவாதங் களும் அறுபதுகளில் பரவலாக இருந்து வந்துள்ளது. ஆரம்பத் தில் போகவேண்டாம் என தடுத்த தலைவர்களே பிறகு விண்ணப் பியுங்கள் என அறிவித்தபோது மக்கள் தடுமாறிப் போனார்கள் எனும் பல குற்றச்சாட்டுகள் உண்டு.
மக்களிடையே ஏற்பட்ட இந்த தடுமாற்ற நிலையை கவிஞர் கா.சி. ரெங்கநாதன் தனது பாடல்களில் பதிவு செய்கிறார்.

'உரிமை எடுக்க வேண்டும்' எனும் தலைப்பில் அவர் எழுதியுள்ள பாடல் இவ்வாறு அமைகிறது.

**எடுத்துக்கணும் எடுத்தக்கணும் ரெண்டுல ஒரு பக்கம் - இதை**
**ஏனோ தானோ என்று விட்டுட்டா பின்பு துன்பப் படணும் -**

**ஆளுக்கு அவ்வாறு போட்டோ எடுக்கணும்**
**அதற்குமேல் ரெண்டொன்னும் சேர்த்து எடுக்கணும்**
**ஆள்பதியும் விசா கந்தோருக்கும்**
**அரசாங்கத்துக்கும் நாலைத் தந்திடனும்**

**நாளைக்கே ஊர்போக நேர்ந்தாலும் - போட்டோ**
**நம்ம கையில் இரண்டொன்னு வச்சுக்கணும் - இது**
**நல்லப்பன் கங்காணி காலமில்ல - ஊர்**
**சொல்லாமல் போய்வந்த தேசமில்ல**

ஏதாவது ஒரு நாட்டின் உரிமைக்காக விண்ணப்பம் செய்து வைப் பது முக்கியமான ஒன்றாக கருதிய கவிஞர் அதனை தொழிலாளர் மக்களுக்கு அறிவூட்டும் வகையில் பாடிச் சென்றுள்ளார்.

'கையில் பணமிருந்தால்' எனும் பாடலில் பின்வருமாறு எழுதி உள்ளார்.

**அனுபத்தெட்டாம் வருஷம் சனவரிக்கு - கப்பல்**
**ஆரம்பிக்கப்போகுது ஒப்பந்தப்படிக்கு**
**அதிலிருந்து பதினஞ்சாண்டு வரைக்கும் - இந்த**
**அஞ்சேகா லட்சம்பேரும் அந்த கரைக்கு - கப்பல்**
**அந்தக் கரை போவதற்கு ஏற்பாடு - ஆட்சி**
**அறியாத மக்கள் பெரும்பாடு - சட்டக்**
**கந்தோருக்கு உட்படாத மாறுபாடு - இதில்**
**காசிழந்து நிற்கும் சில கூறுபாடு**

1964ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் அடுத்து வரும் 15 ஆண்டுகளுக்குள் ஐந்தேகால் லட்சம் மக்களை இந்தியா கொண்டு சேர்க்கப் போகிறது. இதனை மக்கள் அறியார். சட்ட முரண் என தனக்கு தெரிந்த மொழிநடையில் எழுதி வைத்துள் ளார் கவிஞர் கா.சி. ரெங்கநாதன்.

முச்சந்திப் பாடல்களாக பாடித் திரிந்தாலும் இவரது பாடல்களில் சமகால அரசியல் அவதானிப்புகளைப் பதிவு செய்து சென்றிருப் பது சிறப்பானது. 'குடும்ப வழிகாட்டி' (1959) எனும் தலைப்பிலும் குடும்பங்களை வழிப்படுத்தும் பாடல்களையும் சாதி எதிர்ப்பு பாடல்களையும் பாடியுள்ள இவர், இலங்கையில் இருந்து இந்தி யாவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட அரசியல் வரலாற்றையே ஆங் காங்கே பரவலாக பதிவு செய்துள்ளார்.

இறுதியில், இதே சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தத்தின் கீழ் கவிஞர் கா.சி. ரெங்கநாதனும் இந்தியா சென்று சேர நேரிட்டதும் பெரும் துயராகும்

(தொடரும்)



thilagar@thaiveedu.com



# தோட்டியின் மகனும் உளவியலும்

- சண்முகம் வெற்றிவேல்

தோட்டியின் மகன் நாவல் 1946ம் ஆண்டு தகழி சிவசங்கரப் பிள்ளை என்பவரால் எழுதப்பட்டது. இவர் ஆலப்புளை என்னும் இடத்தில் வக்கீல் தொழில் புரிந்தவர். அச்சூழலின் வாழ்வியலைத் தனது சமூகப்பார்வையால் ஆவணப்படுத்தி அம்பலமாக்கியவர். நாவல் பிறந்தது மலையாள மொழியில். அதனைத் தமிழில் வார்த்தெடுத்தவர் எழுத்தாளர் சுந்தரராமசாமி. அவர்தம் மொழிபெயர்ப்பு அசலுக்கும் நகலுக்கும் இனந்தெரியாத புரிதலை வாசகர்களுக்கு விட்டுச் சென்றுள்ளது.

தவிர, உளவியலை உன்னிப்பாக அனுமானிக்கலாம், ஆனால் ஊடுருவ இயலாதென்பதே மனவியல் மேதைகளின் முடிபாகும். அதை மறுத்தோடியுள்ளார் தகழி. அவரது இதயக் கனலையும் ஊடுருவியுள்ளார் சுந்தர். இக்கட்டுரையானது படைப்பாளி, பெயர்ப்பாளி, பாத்திரங்கள், வாசகர்கள் என்போரின் மனவியலை மீட்டெடுத்துப் பார்வைக்கு வைக்கும். உளவியல்சார் பலம் பலவீனங்கள் என்பவற்றையும் தொட்டுக்காட்டும். இங்கே, நாவலின் சுருக்கத்தை குறும் பார்வைக்குத் தரவேண்டியது அவசியமாகிறது.

**தோட்டியின் மகன் பாத்திரங்கள்:**
இசக்கிமுத்து, சுடலைமுத்து, வள்ளி, மோகன், ஓவசியர் கேசவபிள்ளை, நகர முதல்வர், பிச்சாண்டி, அலமேலு, சுப்பு, வடிவேலு, பழனி, ஔசேப்பு.

**களம்:**
ஆலப்புளை (கேரளப்பகுதிக் குக்கிராமம்).

**கதைச் சுருக்கம்:**
இசக்கிமுத்து என்பவர் ஆலப்புளை என்னும் கிராமப்பகுதிக்குரிய நகரசபைத் தோட்டித் தொழிலாளி. தோட்டித் தொழில் அனுபவம் கைவரப்பெற்றவர். முப்பது வருடங்கள் அரும்பணியாற்றியபின்பும் ஒருநாள் சுகயீன விடுப்புக்குக்கூட லாயக்கற்றவர். வைசூரியால் வதைபட்டு, காலனின் கவனத்திலிருந்தபோது விடுப்புக்கு விண்ணப்பித்தார். 'வேறு ஆளை அமர்த்துவேன்' என்ற ஓவசியரின் பதில் மகன் சுடலை வழியாக வருகிறது.

முப்பது வருடங்களாக மூக்கைப் பொத்திப் பிடித்துக் காப்பாற்றிய தொழில். மூன்று ஜீவராசிகளுக்குக் கஞ்சி ஊற்றிய தொழில். எனவே, 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற மனவோட்டம் இசக்கியின் இருதயத்தில் ஆழ இடம்பிடித்துவிட்டது. அதனைத் தன் உயிருள்ள போதே சுடலைக்குப் பாராதீனப்படுத்த வேண்டுமென்பதே அவரது வேணவா.

எனினும், சுடலைக்குச் சக்கிலியத் தொழில் செய்யச் சம்மதமில்லை. அப்பனின் அறிவுரையும், அவரது இறுதிக் கஞ்சி நிலையும்(தெளிவு) சுடலையைச் சக்கிலியத் தொழிலுக்கே நிர்ப்பந்தித்துவிட்டது. அப்பன் இசக்கி தந்த சொத்தான மண்வெட்டியும், சட்டியும் இப்போது சுடலையின் கையில். எந்தத் தொழிலைத் தான் செய்யக் கூடாது என நினைத்தானோ அதுவே அவன் தொழிலாக வரித்துக் கொண்டபோது சுடலை சிந்திய கண்ணீர் அவனது இதயத்திலிருந்தே பெருக்கெடுத்தமை கதைவழி கசிகிறது.

தவிர, என்றோ ஒருநாள் இந்தச் சக்கிலியத் தொழிலுக்குச் சாவு மணி அடிக்கச் சபதம் எடுத்துக்கொண்டான், சுடலை. தன்னோடு இந்தப் பரம்பரைத் தொழிலுக்குப் பாடைகட்டிவிட்டு எதிர்கால வம்சத்தைப் பாராளும் பரம்பரைக்குள் கரைத்துக்கொள்வது என்று திடசங்கற்பப்படுத்திக் கொண்டான். மேலும் வாழ்க்கைத் துணையாக வள்ளியும் வந்து வாய்த்துக் கொள்கிறாள்.

இப்போது சுடலை சக்கிலியச் சங்கத்தின் சபாபதியாகப் பதவி வகிக்கிறார். சக்கிலியர்களின் சம்பளத்தில் கிம்பளம் பெறும் ஓவசியர் கேசவபிள்ளைக்கு எதிர்வினையாற்றித் தோட்டிகளின் உரிமையையும் ஊதியத்தையும் உறுதிப்படுத்துவான் என்பது அவர்தம் சமுதாயத்தின் நம்பிக்கை. ஆனால் அடிமைச் சமுதாயத்தின் சராசரித் தலைவர்களின் சுபாவத்தைப்போல ஓவசியருக்குச் சோரம் போவதன் வழியாகச் சுயநலத்தில் சிக்கிவிடுகிறான் சுடலை. உளவியலில் சொல்லப்படும் ஆசைதீர்ப்புக் கனவுக்காக (Wish -fulfillment dream) சேமிப்பும் சிறிதுசிறிதாகச் செய்கிறான்.

வள்ளியுடனான தாம்பத்திய வாழ்விலே தனஞனும் கிடைக்கப்பெற்றான். நாமகரணம் செய்யும்போது எதிர்காலக் கனவின் பூர்வாங்க நடவடிக்கையாக 'மோகன்' என்று உயர்குலத்துக்குரிய பெயரையே வைத்துக் கொண்டான். இத்தொடர்பில் உயர்குலத்தவரின் 'தோட்டி மோகன்' என்ற எள்ளி நகையாடல்களையும் சகித்துக் கொண்டான். இழிகுலத்தோரை எளிதாக இனங்காணக்கூடிய இசக்கி, கந்தன், பூதன் என்ற பெயர்களே உயர்குலத்தோர் விரும்பும் பெயராகும். எப்படியோ சுடலை தன் இலக்கை அடையும் பொருட்டு (வயல்காணியும், வீடும்) சிறிது பணமும் சேமித்துவிட்டான்.

தோட்டிகள் வாழும் பகுதியிலேயே தனக்கென ஒரு அக்கிரகாரப் பகுதியை அமைத்து வாழ்ந்து வருகிறான். வள்ளியையும் தோட்டிப் பெண்களோடு நெருங்கிப் பழகக்கூடாது, என்றும், தன் மகன் மோகனுக்கு அப்பனின் தொழில் தெரியக் கூடாதெனவும் வள்ளியிடம் கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளான். மகன் மோகனைப் பிரபலம்மிக்க பாடசாலைகளில் சேர்ப்பதற்கு பல தடவைகள் முயற்சித்தான். பலன் பூச்சியம். பாடசாலை அதிபர்கள் பலவிதமான நொண்டிச் சாட்டுக்களைக் கூறி அனுமதியை மறுத்துவிட்டனர்.

ஓவசியர் கேசவபிள்ளைக்குக் கையூட்டுக் கொடுத்து ஒரு பாடசாலையில் மகனைச் சேர்த்துவிட்டான். ஆனாலும் ஆசிரியர்களும் மாணாக்கர்களும் மோகனைக் காணும்போது மூக்கைப் பொத்திக் கிண்டலடித்தனர். இந்த ஒழுகலாற்றில் மோகன் தகப்பனின் தொழிலை அறிய விரும்பினான். தாயிடம் அதுபற்றிக் கேட்டவேளைகளில் எல்லாம் வள்ளி இலாவகமாக மறைத்தே வந்தாள்.

முரண்நகை என்னவெனில் சுடலையே தன் மகன் மோகனை அன்புடனும் பல எதிர்பார்ப்புகளுடனும் வளர்த்துவரினும் அணைத்துக் கொஞ்சுவதில்லை. தோட்டியின் தீட்டு தன் மகனுக்குப் படக்கூ

டாது என்பதே சுடலையின் வைராக்கியம். இதனை வள்ளி எதிர்த்தே வந்தாள்.

மேலும் சுடலையின் சேமிப்பையும், எதிர்காலக் கனவையும் வள்ளி நன்கறிவாள். சேமிப்பு எங்கு வைப்புச் செய்யப்பட்டிருக்கிறது என வள்ளி வினவியபோழ்து அது ஓவசியரின் உதவியோடு மாநகர முதல்வரிடம் பாதுகாப்பாக உள்ளதெனவும், உயர்குலத்தோர் வாழும் பகுதியில் மாநகர முதல்வரே தனக்கு வயல்காணியும் வீடும் வாங்கித் தருவாரெனவும் விண்டுரைத்தான். வள்ளிக்குப் புரிந்த வியாகூலம் சுடலையின் சிந்தனைக்கு எட்டியே இருந்தது. ஆதிக்கவாதிகளின் நயவஞ்சகத்தை வள்ளி பவ்வியமாகப் பரிந்துரைத்தாள். எசமான் விசுவாசம் சுடலையின் பாரம்பரியச் சொத்தாச்சே. பாவம் வள்ளி என் செய்வாள்.

இப்போது சுடலைக்கும் தோட்டிகள் சமுதாயத்திற்கும் மத்தியிலே ஒரு இடைவெளி உண்டு. அவர்தம் சமூகத்தில் சுடலை ஒரு துரோகி. இப்போது தோட்டித் தொழிலிலே ஒரு பதவி உயர்வு வெற்றிடம் மாநகரமுதல்வரால் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது. அப்பதவி சுடலைக்கே கிடைக்கும் என்பது தோட்டிகளுக்குத் தெரிந்த பரமரகசியம். வள்ளியின் தூண்டுதலால் சுடலை தன் சேமிப்பை முதல்வரிடம் கேட்கலானான். பதவி உயர்வான மயானம் காத்தல் தொழிலைக் கொடுத்துச் சிலகாலம் சுடலையை ஏய்த்துவிட்டார், மாநகரமுதல்வர்.

ஆலப்புளைக் கிராமத்தில் இப்போது வைசூரி என்ற கொள்ளை நோய் கோரத் தாண்டவம் ஆடத் தொடங்கியுள்ளது. தினசரி தோட்டிகளின் பிணம் மயானத்தை அலங்கரித்தது. பிணவாடையும், பயப்பிராந்தியும் சுடலைமுத்துவைச் சித்தப்பிரமைக்கு இட்டுச் சென்றது. சுடலையும் வள்ளியும் வேறு மாகாணத்திற்குப் புலம்பெயர்வதற்கு ஆயத்தமானார்கள். ஆலப்புளையில் தோட்டிகளின் குடிசனத் தொகை அருகிவிட்டதால் திருநெல்வேலியில் இருந்து தோட்டிகளைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளில் முதல்வரும், ஓவசியரும் முனைந்து செயற்பட்டனர். இந்நிலையில் தனது சேமிப்பைத் தருமாறு மாநகரமுதல்வரிடம் சுடலை கேட்டான்.

கடந்த மாதம் தன்னுடைய அலங்கார வீடு கொள்ளை அடிக்கப் பட்டதாகவும், தன் சொத்துக்களுடன் சுடலையின் சேமிப்பையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுவிட்டதாகவும் கைவிரித்துவிட்டார், மாநகரமுதல்வர்.

இந்நிலையில் பிறிதொரு மாகாணத்திற்குப் பணமின்றிப் புலம்பெயர முடியவில்லை. வைசூரி நோயும், சித்தப்பிரமையும் சுடலையின் வாழ்வைச் சீரழித்துவிட்டது. இறுதிமுச்சையும் விட்டுக்கொண்டான் சுடலை. வள்ளி விதவையானாள்.

'தந்தை போயினன், பாழ்மிடி சூழ்ந்தது, தரணியில் அஞ்சேல் என் பார் யாருமில்லை' என்ற பாரதியின் நிலையை அடைந்தான் மோகன்.

நாட்கள் சில உருண்டன. வைசூரி வள்ளியையும் விழிம்புக் கண்களால் பார்க்கத் தொடங்கியது. ஒரு நாள் பாடசாலையிலிருந்து திரும்பியபோது தனக்காக வாசலிலே காத்திருக்கும் அம்மாவை அன்று காணவில்லை. வீட்டிற்குள் நுளைந்து பார்த்தபோது வள்ளி விறைத்துக் காணப்பட்டாள். ஒருசிலரின் உதவியுடன் அம்மாவும் இறந்துவிட்டதை அறிந்து பதறியே வீழ்ந்தான் மோகன்.

சுடலையின் முன்னைநாள் நண்பனின் உதவியை நாடிச் சிலநாட்கள் உயிர்பிழைத்து வந்தான் மோகன். இப்போது வேறுவழியின்றிப் பரம்பரைத் தொழிலுக்கு மனங்கொள்ளலானான். ஆம், மோகன் இப்போது ஆலப்புளைக் கிராமத்தின் பரம்பரைத் தோட்டியே! இதுவே உயர்குழாத்தின் தணியாத விருப்புறுதியுமாகும்.

### படைப்பாளியின் உளவியல்:

ஆலப்புளையில் தான் கண்ணுற்றதை இசக்கியிலிருந்து மோகன் வரை முருகியல் சுவையோடும், முதலாளி வர்க்கம் தொடக்கம் வாசகன்வரை மூக்கைப் பொத்திப் பிடிக்கக்கூடிய கள யதார்த்தத்தோடும் கதை நகர்த்தியுள்ளார் தகழி. ஆதனைப் பிரிவரிய ஊசி-வழிப் பின்தொடரும் நூலைப்போல மொழிபெயர்த்துள்ளார் சுந்தர-ராமசாமி. சமுதாயச் சமத்துவமின்மையும், முதலாளி வர்க்கத்தின் நயவஞ்சகமும் நியாயதுரந்திரரான தகழியின் நெஞ்சத்தை நெருடியிருப்பது தெளிவு. எனினும் தகழியின் காலத்திலேயே சக்கிலியத் தொழிலாளிகள் பலர் சர்க்கார் நிலைக்கு உயர்ந்த வரலாறுகளும் பாரதத்தில் உண்டு. சுடலைமுத்துவின் ஆழ்மன ஆசையை நிறைவேறா ஆசையாக நெடிது வளர்த்ததன் மனவோட்டம் யாது?

களயதார்த்தத்தோடும் பெரும்பான்மையோடும் ஜனரஞ்சக நெறிப் படுவதா படைப்பாளியின் கடமை? புறநடைகளைப் புறந்தள்ளுவது எங்ஙனம் பொருந்தும்? படைப்பாளிக்குத் தோட்டிகள்மீது களிவிரக்கம் இருந்தமை தெளிவு. ஆனால் அவர் சாகித்திய மற்றும் பத்மபூசண விருதுகளை இழக்கவோ, அன்றித் தோட்டிகளைத் தோள் அளவுக்கு உயர்த்தவோ விரும்பவில்லை என்பது கதையில் வாராத செய்தி எனலாம்.

### மொழிபெயர்ப்பாளி:

சுந்தரராமசாமி மார்க்ஸிய மனவோட்டம் படைத்தவர். கதையின் போக்கில் மாற்றம் ஏற்படுத்தும் அருகதை அவருக்கில்லை. இசக்கியிலிருந்து மோகன்வரை ஒரு வீழ்ச்சியும் படிமுறை வளர்ச்சியும் கதையில் கனிந்து வருகிறது. இசக்கியின் கல்வியும், சிந்தனைப் போக்கும் சுடலையில் மாற்றங்காண்கிறது. மேலும் மோகனின் கல்வி வளர்ச்சி பாரம்பரியத்தை விசாரணைக்குட்படுத்துகிறது. இந்த இடதுசாரி மனப்பாங்கு சுந்தரின் படைப்புகளிலும் துலங்குவதால் அவரை இந்நாவல் கவர்ந்திருக்கலாம்.

### பாத்திரங்கள்:

இசக்கி 'செய்யும் தொழிலைத் தெய்வமாக' மதித்தார். சுயமதிப்பீடு ஒன்றை இறுதிவரை செய்யவில்லை. மானிடவியலாளர் டார்-வின் கூறும் பரிணாமக் கூர்ப்புக் கோட்பாடு என்பது அவருக்குத் துலங்கா விளக்கேயாம். துய்ப்பு மனமோ அன்றிக் கட்டுடைப்போ கனவிலும் வரக்கூடாத பாத்திரம் அது.

### வாசகமனம்:

இக்கதையை ஜீரணிக்கும் சராசரி வாசகமனம் தலித்துகளுக்குத் தகர்ப்பமைப்புத் திறன் இல்லையா என்ற வினாவையே எழுப்பும். தவிர, பின்காலனியப் பெண்ணிய மார்க்ஸியவாதியான காயத்திரி சக்கரவர்த்தியின் 'can the subaltern speak?' (கீழ்ப்பட்டவர் பேசலாமா?) என்ற கட்டுரையின் தரிசனத்தையே தரும். பரம்பரைத் தொழிலையே செய்யவேண்டும் என்னும் பழமைபேண்வாதத்தை சொல்லிலும் செயலிலும் மறுத்தோடும் கல்விவளமும், பூகோளமயமும் புலன்காட்சிவழி வரும்போது வாசகமனம் விலகி ஓடுவது எளிதல்ல.

### நிறைவாக:

ஏறத்தாழ எண்பது வருடங்களுக்கு முன் ஆலப்புளையில் நிகழ்ந்த சம்பவங்களைச் சமகாலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அன்று வைசூரி. இன்று கொரோனா. ஆலப்புளையில் ஆதிக்கவாதிகளின் சாதிய அடாவடித்தனம். சுரண்டல். இன்று உலக வல்லூறுகளின் நவகாலனித்துவம், ஆயுத அடாவடித்தனம், பொருண்மியச் சுரண்டல். ஆலப்புளை ஆதிக்கவாதிகளின் அடாவடித்தனத்தை அடக்கி ஒடுக்க இயற்கை வைசூரியை விதைத்துத் தோட்டிகளுக்கான வெற்றிடத்தையும், வெங்கொடும் பஞ்சத்தையும் தண்டனை வடிவில் கொடுத்தது. இன்று, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை, இரசாயன ஏவுகணை, எரிகுண்டு, அணுக்குண்டு இவற்றால் இறுமாப்படைந்தோருக்குக் கொரோனாவைப் பல்வேறு வடிவங்களில் பூமி பூராவும் பாரபட்சமின்றிப் பகிர்ந்தளிக்கின்றது இயற்கை. கொரோனாவுக்கோ கொண்டாட்டம். மக்களுக்கோ திண்டாட்டம். அன்று தோட்டிகளுக்கு, இன்று நானிலமாந்தருக்கு.


**உசாத்துணை:**

- Psychology in perspective. By Caro; wade. University of California.
- Can the subaltern speak? By gayatri chakravorty Spivak.
- தோட்டியின் மகன், தகழிசிவசங்கரப்பிள்ளை. மணிஆப்செட், சென்னை.
- பாரதியார்பாடல்.
- திருக்குறள்.




vettivelu.s@thaiveedu.com



# வீடு வாங்க விற்க...

10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்

www.vela4homes.com




Condo - 155 Dalhousie. St
1 BR+ 1 WR, 743 Sft- Loft

**$ Cash incentive for referrals**






Condo - 38 Elm St.
1 BR+1 WR, 697 SFT




## Best investment

3+2 Bedrooms, 1+1 Kitchen
4 WR + Walkout Bsmt
Fully Renovated
Separate Entrance
Dual Units (city approved)




## Estate Home

Deer Creek
Over 9,000 Sft,
Fully Renovated
1.45 Acre

Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Chairman's Club Award Winner 2016
HOMELIFE HIGHER STANDARDS

# Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



# மறைக்கப்பட்ட நேசங்களும் மாறுபட்ட மனிதர்களும்

- நிலாந்தி சசிகுமார்

சமூகக் கட்டமைப்பில் பலதரப்பட்ட கற்பிதங்களும் மதம், இனம், மொழி, கலாச்சாரம் சார்ந்த கட்டுப் பாடுகளும் மனிதத்தை பலவிதங்களிலும் ஆட்டிப் படைக்கின்றன. அதே வேளை அவற்றினால் ஏற்படும் இடர்ப் பாடுகள் சட்டதிட்டங்கள் மனிதத்தையும் குழிதோண்டிப் புதைக் கும் நிலைக்கு வரும்போதே கட்டுடைப்புக்களும், முரண்பாடு களும், புரட்சிகளும் ஏற்படுகின்றன. பெண் விடுதலை குறித்தும், மூடநம்பிக்கைகளைச் சாடியும் மக்களின் விழிப்புணர்வைத் தூண்டும் விதமாக பெரியார் போன்றவர்கள் வந்திருந்த போதும் எந்தவித மனமாற்றங்களும் இன்றித் திரியும் மனிதர்கள் இன்னும் இவ்வுலகில் இருக்கத்தானே செய்கின்றனர்.

பால்பேதங்களுக்கும், வயது வித்தியாசங்களுக்கும் இனம், மொழி, மதம் கடந்தும் ஏற்படுகின்ற நேசங்களுக்கும் கட்டுப்பாடுகள் விதித்து, அவற்றை கொச்சைப்படுத்தும் போது அவை தானாகவே அருவருக்கத்தக்கதொன்றாக பார்க்கப்படுகின்றன. நேசங்களும் சமூகத்துக்குப் பயந்து வெளிப்படுமெனில் அவற்றின் அர்த்தப் பாடுகளும் நமத்துப் போய் விடுகின்றன. பெண்களுக்கென்றும் ஆண்களுக்கென்றும் ஒவ்வொரு வித கலாச்சார விதிகளை விதித்தபடி, யார் என்ன தவறுகள் செய்கின்றனர் என்றும், எவரை எதில் குற்றம் பிடிக்கலாம் என்றும் அலைகின்ற சில கலாச்சாரக் காவலர்களும், பிற்போக்கத்தனங்களை விதைத்துக் கொண்டும் நேசங்களுக்கு புதுப்புது அர்த்தங்களை கற்பித்துக் கொண்டு திரி யும் ஆணாதிக்க சமூகமும் இருக்கும் வரையில் மனிதம் என்பது வெறும் வார்த்தையளவிலேயே இருக்கும் என்பது யாரும் மறுக்க முடியாததொன்று.

ஆணுக்கும் பெண்ணுக்குமான நேசங்களில் மறைக்கப்பட்ட, மறுக் கப்பட்ட பக்கங்களும் உண்டு. அவை இனம், மதம், மொழி, பால் பேதம் கடந்தவை. அதனை புரிந்து கொள்ளவும், உணர்ந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் சம்பந்தப்பட்ட இருவரை அன்றி இச்சமூகத்தில் யாரும் இல்லை என்பதே வேதனையானது. சமூகத் திற்குப் பயந்து இயற்கையாக உருவாகும் நேசங்களை மறைத்து வைக்க முற்படுகையில் ஏற்படும் சந்தேகங்கள், அசௌகரியங் கள், சஞ்சலங்கள், வேதனைகள், கவலைகள் அனைத்தையும் ஒவ் வொரு மனிதர்களும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்தும் உணர்ந்தும் இருப்பர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

'அந்திம காலத்தின் இறுதி நேசம்' என்ற சிறுகதைத் தொகுப்பு 2021ல் வெளிவந்த தொகுப்புகளில் மிகவும் உண்மைத்தன்மை யான உணர்வுகளின் வெளிப்பாடு என்றால் அது மிகையல்ல.

சகோதர மொழி எழுத்தாளரான தக்ஷிலா ஸ்வர்ணமாலியினால் சிங்கள மொழியில் எழுதப்பட்டு எம். ரிஷான் ஷெரிப் தமிழில் மொழிபெயர்த்து ஆதிரையின் வெளியீடாக வந்திருக்கும் இத்தொ குப்பு பல எதிர்பார்ப்புக்களை கொண்டிருந்தது. அதற்கு எவ்வித குறையும் இன்றி வேறுபட்ட கோணங்களில் நேசங்களை பிரித்துப் பிரித்து சிறுகதைகளாக எழுதியிருப்பது ஆர்ச்சர்யமளித்த அதே வேளை, யாரும் கூற விரும்பாத அல்லது கூற தடைசெய்யப்பட்ட நேசங்களை எவ்வித உறுத்தலுமின்றி வெளிப்படு தன்மையோடும் சங்கடங்களின்றி வாசிக்கக் கூடிய விதத்திலும் எந்த நேசங்களை யும் கொச்சைப்படுத்தாமல் கூறிய விதங்களும் அதியற்புதம் என லாம்.

ஒரு பெண்ணால் இவ்விதமாக எழுத முடியுமா? அல்லது இவ் விதம் எழுதும் பெண்களை கதையின் கதாபாத்திரங்களோடு ஒப்பு நோக்கும் சமூக கட்டமைப்புகள் என எதையும் பொருட்படுத்தாத தக்ஷிலாவின் தைரியமும் இந்நூல் பேசப்பட்ட தொனியும் மறைக் கப்பட்ட நேசங்களின் வெற்றியாகும்.

இத்தொகுப்பில் உள்ள பத்து சிறுகதைகளும் பல்வேறுபட்ட மாந் தரிடையே மலர்ந்த பலதரப்பட்ட நேசங்களைப் பேசிச் செல்கின் றன.

உண்மையில் எச்சமூகத்தவராலும் குறிப்பாக தமிழ் சமூகத்தால் ஏற்க முடியாத நேசங்களாக இவை இருப்பதே இந்நூலின் பிர- தானம். இந்நூலில் கூறப்படும் நேசங்களை கலாச்சார சீரழிவுகள் என்று பேசவும், அவ்வாறான நேசங்களை குழி தோண்டிப் புதைக்கவும் கலாச்சாரக் காவலர்கள் உள்ள போதும், மறுக்க முடியாத இந்நேசங்கள் எமது சமூகத்தில் தினம் தினம் மலர்ந்த வண்ணமே உள்ளன. இனியும் மலரும்.

கதைகளின் களங்களாக சிங்கள கிராமப்பகுதிகளும் சூழலும் வாசிக்கும் போதே கிராமிய மண்வாசத்தை கொண்டுவருகிறது. கதைக்களத்திற்கே வாசகரை அழைத்துச் செல்லும் யுக்தி ஒரு சில கதை சொல்லிகளுக்கே வாய்க்கும். அது தக்ஷிலாவிற்கு வாய்த்திருக்கிறது. தமிழ் எழுத்தாளராக அதிலும் பெண்ணாகவும் இக்கதைகளை ஒருவர் எழுதியிருந்தால் இவ்வாண்டின் மிகவும் சர்ச்சைக்குரிய நூலாக இதுவே திகழ்ந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தக்ஷிலாவின் எழுத்துக்களில் உள்ள நளி னத்தையும் எதிர்பார்ப்பையும் எவ்விதத்திலும் எள்ளளவும் குறைத்து விடக் கூடாதென்ற நோக்கத்தில் ரிஷான் ஷெரிப் மிக நுணுக்கமாகவும் நேர்மையாகவும் ஒவ்வொரு கதையையும் மொழி- பெயர்த்திருந்தார்.

**முதல் கதை 'தெரு வழியே':**

பாலியல் தொழிலாளி என்றால், பெண் என்பதான எண்ணப்

பாட்டை முதலிலேயே தூக்கியெறியும் கதை. ஆம். அவன் ஒரு பாலியல் தொழிலாளி. அவனிடம் சென்ற ஒரு பெண். அவனை மீண்டும் சந்திக்கவும், அவனை தன்னுடன் வைத்துக்கொள்ளவும், அவனை தன் துணைவனாக்கவுமென அவன் மீது ஏற்பட்ட இனம்புரியாத நேசத்தால் அவனை தேடி தெருவில் தனது மகிழூர்ந்தில் அலைகிறாள் என்பது தான் கதை. இக்கதையை ஆணாதிக்க சமூகத்தால் கிஞ்சித்தும் சீரணிக்க முடியாது. ஆனால், இது நிச்சயமாக கற்பனையல்ல என்பதை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். ஒரு ஆண், பாலியல் தொழிலாளியைத் தேடிச் செல்ல என்ன காரணமோ அதே காரணத்தைத் தான் அந்தப் பெண்ணும் வைத்திருக்கிறாள் என்பது எத்தனை பேரால் ஏற்கவோ, புரிந்து கொள்ளவோ முடியும்.

‘எனக்கு சரியெனப்பட்டதை நான் செய்கிறேன் இதற்குப் பழி சொல்ல எவராலும் முடியாது ஏனெனில், ஜீவிதம் எனது’ என்பது அப்பெண்ணின் எண்ணப்பாடு.

அதேவேளை, ‘மானிட உறவுகள் தனிப்பட்ட நபர்களுக்கிடையிலான செயற்பாடுகள் அல்லாமல் சமூக வெளியீடுகளாக ஆனது ஏன்?’ என்ற அவளது கேள்வியில் உள்ள நியாயம் அவரவருக்கான சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் வரும் வரை புரியப் போவதில்லை.

‘மாங்காய்ப் பருவத்தில், அருண் தனித்திருந்த மேலுமொரு நாள் தொடங்கியது’ என்ற கதை நட்புக்கும் காதலுக்கும் இடையிலான நூலளவிலான நேசத்தைச் சொல்கிறது. கணவன், மகன் என குடும்பம் இருந்தும் அமர்ந்து பேசவும் தன்னை நலன் விசாரிக்கவும் என ஒரு நட்பைத் தேடி வரும் ஒரு பெண்ணைப் பற்றியது. இதை சமூகம் எப்படிப் பார்க்கும் என்பதை அருண் மூலமாக சொல்ல வைத்தார் கதாசிரியர். அதாவது, அவர்களுக்குள் உள்ள உறவுக்கு அவன் பெயர் தேடுகிறான். ஒரு கட்டத்தில் ‘உனக்கு புருஷன் இருக்கிறான், அப்படியென்றால் நான் கள்ளப் புருஷனா?’ எனக் கேட்கிறான். ஆனால், அந்தப் பெண்ணோ எந்தப் பெயரும் வைத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதை யாரும் ஏற்பதில்லை. அவர்களாகவே பெயர் சூட்டி, அவள் எதற்காக அங்கு செல்ல வேண்டும் எனக் கேள்வியும் எழுப்பி, இதற்காகத் தான் இருக்கும் என்று பதிலும் கண்டுபிடித்து விடுவார்கள்.

உண்மையில் அவளுக்குத் தேவை இன்னுமொரு ஆண் உடல் அல்ல. ஆத்மார்த்தமான நேசம் என்பதை உணர்த்திய கதை.

‘இது ஒழுக்கம் கெட்ட தொடர்புன்னா, ஒழுக்கமான தொடர்புன்றது என்னது? கல்யாணப் பதிவுக் காகிதமா?’ என்ற நியாயமான கேள்வியை இக்கதையில் கேட்கிறார்.

நேசங்கள் வருவதற்கும் இல்லாது போவதற்கும் கூட காரணங்கள் இருக்கும் என்பதை ‘அன்றைக்குப் பிறகு அவன், அவளருகே வரவேயில்லை’ என்ற கதையில் காணலாம். எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகும் போது நேசங்களும் இறக்கக் கூடும் என்பதை இக் கதையின் மூலம் தெளிவுபடுத்த விழைகிறார்.

தன்னுடன் வேலை செய்த பெண்மேல் ஏற்பட்ட நேசம் அவளின் வீட்டைத் தேடிச் செல்ல வைக்கிறது. அவ்வாறு செல்லும் போது அவளது வீட்டை அடையும் வரையான பேருந்துப் பயணத்தில் அவனது எதிர்பார்ப்புக்கள் எல்லாம் கற்பனையாய் விரிகிறது. அவ்வெதிர்பார்ப்புகளின் முதல் துடுப்பு உடைந்த அந்த நொடியில் இருந்து அவனுக்குள் கட்டமைக்கப்பட்ட நேசத்தின் ஒவ்வொரு கற்களும் உதிர ஆரம்பிக்கின்றன. இறுதியாக அவளது தாய்க்கு சித்தப்பாதான் ஆதரவு என்றும், அந்த சித்தப்பா மூலம் தாய்க்கு ஒரு குழந்தை உண்டு என்றும் அறிந்த அந்த வினாடி அவன் அவளுக்காகவே வந்தான் என்பதை மறைப்பான். காரணம் சமூகம் ஏற்றுக் கொள்ளாத ஒரு உறவு முறைக்குள் அவளின் தாய் இருக்கிறாள் என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்.

தொகுப்பின் தலைப்புக் கதை மிகவும் உணர்வு ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியது.

‘அந்திம காலத்தின் இறுதி நேசம்’ என்ற இக்கதையில் வயது முதிர்ந்த ஒருவருக்கு இரத்த சொந்தம் இல்லாத ஒரு பெண்ணின் மேல் ஏற்பட்ட நேசம் பற்றியது. அந்திம காலத்தில் வயதானவர்களுக்கு தேவைப்படும் அந்த நேசம் பிள்ளைகளிடம் இருந்தோ அல்லது வேற யாரோ ஒரு அந்நியரிடம் இருந்தோ வந்தால் போதும், அதுவே அவர்களின் நிம்மதியாக இருக்கும். அதே வேளை, அதைக்கூட வேறு விதமாக நோக்கும் மனிதர்களும்




இருக்கத்தான் செய்கிறார்கள். அவளது பாதையில் காணும் ஒரு வயது முதிர்ந்தவர், அவருக்கு இன்பம் ஊட்டுவதாக நினைத்து தனக்கு அண்ணா மட்டுமே உள்ளார் என்பதும், கணவனின் சந்தேகப் புத்தி தெரிந்து அங்கு போவதை மறைக்க நினைப்பதும் என இவை எதற்கும் அர்த்தம் கண்டுபிடிக்க முடியாது. அவளைப் பற்றியே அனுதினமும் நினைத்துக் கொண்டிருக்கும் அவர் ஒரு கட்டத்தில் தங்களுக்கு மகள் இல்லாக் குறையை அவள் மூலம் நிவர்த்திக்க நினைப்பது உருக்கமானது. அதேபோல், அவருடன் பேசும் அந்தப் பொழுதுகளில் ஏற்படும் இலகுத்தன்மைக்காகவே அவள் அவரை நாடினாள் என்பது அவரின் இறப்பின் போதுகூட அவள் அவரில்லாத அந்த வீட்டிற்குள் செல்லாது சென்றதிலிருந்து உணரக் கூடியதாக இருந்தது.

ஒரு மனைவி கணவனின் ஒரு பாதியாக அவனது ஒவ்வொரு செயலிலும் பக்கத்துணையாக இருப்பவள் தான். ஆனால், அவள் அடிமையல்ல இணை என்பதை, தனது மனைவி நோயாளியான பொழுதுகளில் உணரும் ஒரு கணவனின் ஆத்ம பாஷையாக ‘எப்போதும் மேரி நினைவில் வருகிறாள்’ என்ற சிறுகதை அமைந்திருந்தது. ஒரு இடது சாரிப் பெண் இல்லறத்தில் இருந்தாலும் இயக்கத்தையும் தோழர்களையும் குடும்பமாகவே கொள்வார். அதேவேளை சுயநலமற்ற தியாகங்கள் நிறைந்த வாழ்க்கையையே தேர்ந்தெடுப்பார் என்பதற்கு மேரி ஒரு உதாரணம். இருப்பினும் சமூகம் அவ்வாறானவர்களுக்கு அதிலும் பெண்களுக்கு என்ன செய்து விடுகிறது என்பதை அவளது திருமணமாகாத மகள், வறுமையான வாழ்வு, வசதிகள் அற்ற மருத்துவம், இறந்தபின் வந்த ஒட்சிசன் சிலிண்டர் என பலதும் பேசுகிறது.

‘நந்தியாவட்டைப் பூக்கள்’ ஒரு பெண் தனது சந்தோசம், சுதந்திரம், இயல்பான வாழ்க்கை என்பவற்றை இன்னொருவரின் இன்பத்திற்காக, அவரது சந்தேகங்களுக்காக இழந்து நிற்கும் அவலத்தைக் கூறுகிறது. ஆனால் கதையை ஒரு குழந்தையின் பார்வையில் நகர்த்திச் சென்றாலும் ஒரு சில இடங்களில் குழந்தை கூட இவ்விதம் சிந்திக்குமா என எண்ணத் தோன்றியது. இருப்பினும் அங்கே இருந்த கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான நேசம், கணவனுக்கு மனைவியின் அக்கா மேல் இருந்த நேசம்,

அக்காக்கு தங்கையின் கணவன் மேல் இருந்த நேசம், தங்கையின் மகள் மேல் அக்காக்கு இருந்த நேசம் என அத்தனை நேசங்களும் சமூகத்தின் பார்வையில் அசிங்கப்பட்டுவிடக்கூடாது என ஒரு பெண் தனது நேசங்களை பலியிட்டாள் நந்தியாவட்டைப் பூக்கள் குப்பையாகியதைப் போல...

'பொட்டு' ஒரு வித்தியாசமான நேசம். தமிழ் இளைஞன் சிங்களப் பெண்ணின் வீட்டில் வாடகைக்கு இருக்கிறான். அவன் மீது கணவனை இழந்த அந்தப் பெண்ணுக்கு ஏற்படும் நேசம் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே வளர்கிறது. பொட்டு என்பது தமிழ்ப் பெண்ணுக்கு ஒரு அடையாளம். ஆனால், கணவனை இழந்தபின் கனவு. அவள் சிங்களப் பெண் என்பதால் அவன் பொட்டு வைக்கச் சொல்வதும் அதை அவள் இன அடையாளங்களுடன் மட்டும் ஒப்பு நோக்குவதும் சிறப்பு. கணவனை இழத்தல் பொட்டு அழித்தலுடன் தொடர்பு படுத்த வேண்டிய ஒன்றல்ல என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு இக்கதை. பார்த்துப் பார்த்து வளர்த்த நேசம் அவன் கைதான போது வெடித்து அழுகையாக, கண்ணீராக வெளிப்படுகையில் அதை ஏற்றுக்கொள்ள சமூகம் முன்வரவில்லை என்பதை 'மாகரட் அக்கா கூட அன்று எனக்காக ஒரு அடி கூட முன்னே எடுத்து வைக்கத் துணியவில்லை' என்ற வரிகளின் மூலம் காட்டுகிறார். பெண் என்றால், அவளுக்கான விதிகளும் சட்டதிட்டங்களும் இனம், மதம், மொழி வேறுபட்டாலும் மாறுபடாதது போலும்.

விவாகரத்தான ஒரு கணவனும் மனைவியும் சந்தித்துக் கொள்கின்றனர். அவர்களின் வாழ்வியல் மாற்றங்களையும் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கான நியாயங்களையும் அவரவர் பக்கம் நின்று பேசுகிறார்கள். விட்டுக் கொடுப்புகள், எதிர்பார்ப்புகள், விதண்டாவாதங்கள் இவற்றைத் தாண்டி அவர்களுக்குள் உள்ள பிரிக்க முடியாத ஏதோ ஒருவித நேசம் இருவரையும் சந்திக்க வைக்கிறது. தமது அந்தரங்கங்கள் தெரிந்தவர் என்ற வகையிலோ அல்லது எங்கோ ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டு அப்பப்போ எட்டிப் பார்க்கும் காதலோ அவர்களை சந்திக்கத் தூண்டியிருக்கலாம். அவ்வாறான சந்திப்புகளில் காமம் இருக்காது. காதல் அல்லது அக்கறை மட்டுமே விரவிக் கிடக்கும். விவாகரத்து என்பது ஒட்டுமொத்தமாக வழித்துத் துடைத்தெறியும் ஒன்றல்ல. அவ்வாறான கற்பிதங்கள் தவறு என்பதை உரத்துச் சொல்லும் கதை. 'இப்போதும் இருவரும் இடைக்கிடையே சந்தித்துக் கொள்கிறோம்'

'ஒரே திடல்' என்ற கதை அதிகபடியான புனைவு எனத் தோன்றியது. காரணம் நாம் காணும், கேள்விப்படும் யதார்த்தத்துடன் ஒட்ட மறுத்து தள்ளி நின்றதாகத் தோன்றியது. இக்கதையும் ஒரு குழந்தையின் பார்வையிலேயே எழுதப்பட்டிருந்தது. ஒரு பெண்ணை எவ்வளவு சுலபமாக மடை மாற்றி விடுகிறார்கள். அவளுக்கான உணர்வுகள் என்ன என்பதை கொஞ்சம் கூட சிந்திக்காமல், அவளது விருப்பங்களை கேட்காமல், சொல்வதைக் கேட்கும் கிளிப்பிள்ளை போல பெண்ணைப் பார்க்கவே எல்லோரும் விரும்புகின்றார்கள். இரண்டாவது திருமணம் செய்த ஒருவர் முதல் கணவரின் தனிமையைப் போக்க மனைவியை அவரிடம் கொண்டு போய் விடுவது என்பது, பொருளைக் கொண்டுபோய் கொடுப்பதைப்போல சாதாரணமாக நடைபெறுவதைத் தான் ஏற்க முடியவில்லை.

இறுதிக்கதை ஒரு இடதுசாரிப் பெண் காணாமலாக்கப்பட்டாள். அவளைத் தேடும் அண்ணன். அவளுடனான தனது பால்யத்தையும் அதன் போது தான் தவறவிட்ட பொழுதுகளையும் நிராகரித்த அவளது நேசங்களையும் நினைந்து நினைந்து மருகும் ஒரு கதை. நேசங்கள் எப்போதும் காத்திருப்பதில்லை காணாமல் ஆக்கப்படுவதுமில்லை. மறைக்கப்படுவதும் மறுக்கப்படுவதும் மட்டுமே.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இச்சிறுகதைத் தொகுப்பு சமூகத்தின் வக்கிர புத்தியால் சீரழிந்த நேசங்களை சமூகத்தின் பார்வைக்கு கொண்டு சேர்த்துள்ளது.



nilanthy.s@thaiveedu.com

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?
We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

# இலக்கை எட்டியது

## ரொறன்ரோ தமிழ் இருக்கை முயற்சி

ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை ஒன்று அமைய வேண்டும் என்ற நோக்கில் தமிழ் இருக்கைக்கான செயற்பாட்டுக்குழு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பெருமுயற்சிகளை மேற்கொண்டு வந்தமையை உங்களில் பலரும் அறிவீர்கள்.

இருக்கையை உருவாக்கும் நோக்குடன் பல்கலைக்கழகத்தின் வைப்பில் மூன்று மில்லியன் டொலர் இடப்பட வேண்டும் என்ற உடன்பாட்டுக்கமைய, குறித்த நிதியைச் சேகரிக்கும் பணியில் தமிழ் இருக்கைக்கான செயற்பாட்டுக்குழு கடும் முயற்சிகளை மேற்கொண்டது. இக்குழுவின் அயராத உழைப்பினால் மூன்று மில்லியன் டொலர் சேகரிக்கப்பட்டு இலக்கு எட்டப்பட்டிருக்கின்றது.

2018ஆண்டு, யூன் மாதம் 25ம் திகதி ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் இருக்கைக்கான தொடக்கநிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்விலேயே ஏறக்குறைய ஏழு இலட்சத்துக்கு மேற்பட்ட டொலர் சேகரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு முயற்சிக்கு முதல் நாளிலேயே இவ்வளவு தொகை சேகரிக்கப்பட்டிருந்தமை பல்கலைக்கழக வரலாற்றிலேயே முதல்தடவை என்று அங்கு கூறப்பட்டிருந்தது.

தொடர்ந்து எமது சமூகத்தவரிடையே நிதி சேகரிப்பதற்கான முயற்சிகள் பலவாறாக முன்னெடுக்கப்பட்டன. மூதாளர் அமைப் புகள், பழைய மாணவர் சங்கங்கள், ஊர்ச் சங்கங்கள், சில கல்வி நிறுவனங்கள், மக்கள் அமைப்புகள், இன்னும் பல சமூக நலன் விரும்பிகள் எனப் பலரும் தம்மால் இயன்ற பங்கை வழங்கினர். இவர்களுள் பெரும் கொடையாளர்களும் இருந்தனர். பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு புரவலர் ஐந்து இலட்சம் டொலர்களை வழங்கியிருந்தார். தமிழக அரசு, திமுக கட்சி போன்றனவும் தமது பங்களிப்புகளை வழங்கியிருந்தன.




தந்தை செல்வநாயகம் அறக்கட்டளை இரண்டரை இலட்சம் டொலர்களை கடந்த வாரத்தில் நிறைவுத் தொகையாக வழங்கியிருந்தது. இந்த இலக்கை எட்டிய செய்தி பல்கலைக்கழகத்தினாலும், ரொறன்ரோ தமிழ் இருக்கைக் குழுவினாலும் தந்தை செல்வா அவர்களது 44ஆவது நினைவு நாளில் வெளியிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த முயற்சியை முன்னெடுத்த கனடியத் தமிழர் பேரவையும் தமிழ் இருக்கை அமைப்பும், இவ்வாறு மனமுவந்து நற்பணிக்காக நன்கொடை வழங்கிய அனைவருக்கும் தமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.



# படைப்பாளிகளின் அகவுலக சஞ்சாரங்களின் எளிய வடிவம்

## (தொகுப்பு நூல் முன்னுரை)

**- தி. செல்வமனோகரன்**

ஒரு கலைஞன் தான் வாழும் சமூகத்தினுடைய பன்முகச் சூழலுக்கு உட்பட்டு தன்னனுபவத்தை ஆழமாகவும் அதேவேளை கலைத்துவம் நிறைந்த உருவத் திரட்சியாயும் கலாசிருஷ்டியை நிகழ்த்துதல் வேண்டும். கலை என்பது குறித்த கலைஞனுக்கும் சமூகத்திற்குமிடையிலான ஒரு பல்பரிமாண ஊடகமாகும். அந்த வகையில் கலைப்படைப்பு என்பது ஓர் உணர்வுபூர்வமான செயற்பாடு என்பது பெறப்படுகின்றது. சமூகத்தின் - தன் வாழ்வியலின், ஏற்றத்தாழ்வுகளை நுண்ணிய உணர்வுத்தளத்தில், குறிப்பிட்ட நுண்ணோக்கில் பார்க்க - சிந்திக்க, கலைஞன் எம்மைத் தூண்டுகின்றான், விமர்சிக்கின்றான், விமர்சிக்கச் செய்கிறான்.

ஈழத்தின் தேசிய விடுதலைப்போராட்ட தொடக்க காலத்தில் புலம்பெயர்ந்து பல்தேசங்களைக் கண்டும், வாழ்ந்தும், வாசித்தும் உலகளாவிய விரிந்த பார்வைகளைத் தன்னுள் ஏற்படுத்திக் கொண்டவர் தேவகாந்தன். தன் வாழ்வியல் அனுபவங்களைச் சிறந்த புனைவுகளாக - கலாசிருஷ்டிகளாகத் தரத்தெரிந்தவர். எழுத்தாளராக மட்டுமன்றி, சிற்றிதழ், சினிமா என கலையின் பன்முகப் பணிகளில் ஈடுபடுபவர். தேர்ந்த வாசகர். நல்ல கலாரசிகர். அவர் அவ்வப்போது பத்திரிகைகளிலும் இதழ்களிலும் எழுதிவைத்த கட்டுரைகளின் தொகுப்பே 'காற்று மரங்களை அசைக்கின்றது.'

சிறந்த புனைகதையாளராகத் திகழ்ந்து வரும் தேவகாந்தனின் விமரிசன எழுத்துகளை ஒருங்கே படிக்கும் வாய்ப்பு இந்நூலினூடாக எமக்குக் கிடைக்கிறது. கலாசிருஷ்டியாளர் ஒருவரின் கலை பற்றியும் கலைப்படைப்புப் பற்றியும் தன் சிந்தையில் கொண்டிருக்கக் கூடிய கருத்துக்களின் விசாலத்தை இப்புனைவுசாரா எழுத்துக்களின் வழி அறிய முடிகிறது. இவ்வெழுத்துக்கள் மதிப்பீடுகளாக, உரையாடல்களாக, வாசிப்புக்களாக, 'பத்தி' எழுத்துக்களாக தனக்கே உரிய கருத்தியற்றளத்தினின்றும் தேவகாந்தன் எழுதிய விமர்சனங்கள். இவற்றில் அவரின் கருத்தியல் பல்கோணங்களில் திரட்சியுற்று காட்சிக்குரியதாகிறது. அந்தக் காட்சியைக் காண 'ஐயம், திரிபு, விகற்பம் - முற்கற்பிதம் அற்ற மனம்' எமக்குத் தேவைப்படுகிறது.

படைப்பாளிகளின் அகவுலக சஞ்சாரங்களை, கனவுகளை, கற்பனைகளை மெய்மைவாத குறிப்பான்களை இனங்கண்டு - வாசகனுக்கும் இனங்காட்டி தன் கருத்தியலை தெளிவுற, சுருக்கமாக, எளிமையாக தேவகாந்தன் தந்துள்ளார். இவ்வெழுத்துக்கள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு தேவைகளுக்காக எழுதப்பட்டவை. ஆகவே கருத்துநிலைகளிடையே 'வெளி' இருக்கக் கூடும். எனினும் எழுத்துக்கள் தேவகாந்தனுடையவை; அவரது வெளிப்பாடுகள். மிகநீண்ட நாவல்களை எழுதிப் பழகப்பட்டது அவரது கைகள். ஆனால் அவரது உதடுகள் சுருங்க உரைப்பவை. இக்கட்டுரைகளைப் படிக்கும் போது தேவகாந்தன் எம்முன்னே இருந்து உரையாடுவது போலவும் அரங்கில் பேசுவது போன்றதுமான உணர்வே ஏற்படுகிறது.

இவர், கறாராகத் தன் கருத்தியலை உள்மனவெளியில் தன்னுள் தான் நிகழ்த்திய உரையாடலை அதேமொழியில் அளிக்கை செய்துள்ளார். ஒரு கிராமத்து மனிதனின் மனவோட்டத்தில் வெளிப்படும் சொற்களின் எளிமை - விமர்சன உரையாடலை ஒத்த போக்கு இக்கட்டுரைகளில் விரவிக்கிடப்பதைக் காணமுடிகிறது.

படைப்புக்கள் பற்றிய இவரது கருத்துநிலைகள் இவரது உள்மன யாத்திரையின் வெளிப்பாடுகளாகவே கருதமுடிகிறது.

'சிறுகதைக்கான இலக்கணங்கள் மதிக்கப்பட வேண்டும்தான், ஆனாலும் மீறல்களுக்கும் இடமுண்டு என்பது நோக்கப்படவேண்டும்.'

'எழுச்சிமிகும் ஒரு கணத்திலேயே கவிதை பிறக்கிறது. ஒரு காட்சி பற்றி, ஒரு கருத்துப் பற்றி, ஓர் உணர்வு பற்றியெல்லாம் கூட அது இருக்கலாம். கவிஞனுக்கு அதற்கான வரையறுப்பு இல்லை. அப்படி இருக்கக் கூடாது. ஆனால், அது எழுச்சிக் கணத்திலா




னதாய் மட்டும் இருக்க வேண்டுமென்பது வரையறை. என்னால் எதையும் கவிதையில் தான் சொல்லவரும் என்பது மாதிரியெல்லாம் பிடிவாதம் பிடிக்கக்கூடாது. இன்றும்கூட சங்கப்பாடல்களுக்கிருக்கும் மதிப்பு அவை வீரமும் காதலும் பேசின என்பதினாலில்லை. எழுச்சிக் கணங்களில் அவை கவிஞரின் மனச்சாட்சியில் வெளிவந்தன என்பதினாலேயே ஆகும்', (மு. புஷ்பராஜனின் 'மீண்டும்வரும் நாட்கள்' கவிதைநூல் குறித்து). முதலான தேவகாந்தனின் கூற்றுக்கள் சிறுகதை, கவிதை குறித்த அவர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன. சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியில்லா படைப்பாளியாக - விமர்சகனாக அவரை இந்நூல் அடையாளப்படுத்துகிறது.

'நவீன பிரதிகள் குறித்த வாசகரின் புலம்பல்களை' நம் வாசிப்பின் போதாமைகளை பிரதியின் மேலேற்றி கவனமழியவிடல் இலக்கிய நேர்மையானது.' (நிருபாவின் 'சுணைக்கிது' - மதிப்பீடு) எனும் வரிகளினூடாகப் புறந்தள்ளி விடுகிறார். அவரது மொழி அவருக்கேயானது. அதன் வெளிப்பாடு அலாதியானது.

1968ல் ‘ஈழநாடு தேசிய’ நாளிதழின் ஆசிரிய குழுவின் பிரவேசத்துடன் தீவிரம் கொள்ளும் தேவகாந்தனின் படைப்பு முயற்சிகளுக்கு அரை நூற்றாண்டுக்கும் மேலான வரலாறுண்டு. இவற்றில் பல சாதனைகளாகவும் ஆகியுள்ளன. நாவல் குறுநாவல்களாக, சிறுகதைகளாக, கட்டுரைகளாக, விமர்சனங்களாக அவை பல்வேறு வடிவங்களைக் கொண்டுள்ளன. யுத்தத்தின் முதலாம் அதிகாரம்’, ‘கனவுச் சிறை’, ‘கலிங்கு’, ‘கந்தில் பாவை’, ‘கதா காலம்’, ‘நதி மேல் தனித்தலையும் சிறுபுள்’ என இவற்றுக்குப் பெயர்கள். தமிழ்ச் சினிமாவிலும், கனடாத் தொலைக்காட்சியிலு மான அனுபவங்கள் இவரது பிற்கால எழுத்துக்களை மேலும் வளப்படுத்தியிருக்கின்றன.

‘காற்று மரங்களை அசைக்கின்றதென்ற தலைப்பு, காற்றின் விசைக்கேற்ப மரங்களசையுமென்னும் இயல்பான பொருளோடு, நூல்களின் கனதிக்கேற்ப வாசக இதயங்கள் அதிர்வு கொள்கின்றன என்ற அர்த்த வியாப்தியையும் தன்னுள்ளாய்க் கொண்டிருக்கிறது. பாரமுள்ள இடத்தில் பட்சம் வைப்பதால், தான் பாரபட்சமுள்ளவன்தானென்று, இலக்கியப் பிரதிகள் மேலான தன் நிலைப்பாட்டை விளக்க விமர்சகர் க.நா. சுப்பிரமணியம் ஒருமுறை புகன் றிருந்தார். அதன் மெல்லிய சாயல் இந்தத் தலைப்பில் சிறிதேனும் அடிக்கவில்லையா? எனின் அதுவே எம் எதிர்பார்ப்பு.

இது அரங்கக் கலை, இலக்கிய நூல் மதிப்பீடுகளின் ஒரு தொகுப்பு நூல். சற்றொப்ப 1990-2020 வரையான ஊடக வெளியில் காத்திரமாய் உலவியவற்றிலிருந்து, காலத்தின் கவனத்தைக் குவியப் பண்ணுதற்குரிய தேவையான அம்சங்களுள்ளவை, மிக்க அவதானமாய்த் தேர்வுசெய்யப்பட்டு தொகுப்பாகியுள்ளன. கணிப்பீட்டில், ஒப்பீட்டில், வலுவான மொழிப் பிரயோகத்தில் விமர்சனத்தின் எல்லைவரை வியாபகம் கொண்டுள்ள வேளையில், இவையே விமர்சனமும் படைப்பிலக்கியமாகும் பாங்கின் எல்லைக் கோட்டையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

நடப்பு அரசியலை, ‘யாழ்ப்பாணம் அபகரிக்கப்பட்ட போது, அந் தப் பகுதியை பயங்கரவாதத்தில் இருந்து மீட்டுவிட்டதாகவே அரசு அறிவித்தது. அதுபோல் ஏனைய பகுதிகளும் விடுவிக்கப்ப டுமென முன்னறிவிப்புச் செய்தது. திருகோணமலையை அது இழக்கத் தயாராகவே இல்லை. அதைத் திட்டமிட்ட அல்லது திட்டமிடாத வகையிலே சிங்கள நிலமாக மாற்ற அது தீர்மான மெடுத்தது. அதன் வெளிப்படையான நடவடிக்கைதான் அங்கே புத்த கோயில் நிர்மாணம்.’ என வெளிப்படுத்துகிறார். அதே வேளை இவ்வரிகள் எளிமையான தீர்க்கமான சொற்களைப் பெய்து நிற்றல் அவரின் மொழிநடையின் சிறப்பாகிறது.

நாடகங்கள், சினிமா உள்ளிட்ட கலையின் பல்பரிமாணங்களின் பதிவுகளை உள்ளடக்கியது இந்நூல். போகிற போக்கில் பிரமிள், வெங்கட்சாமிநாதன் உள்ளிட்ட பலர் பற்றி அவர் தரும் குறிப்புக்கள் சுவையானவை. எள்ளலும் குசும்பும் வெளிப்படும் மொழிநடை; தன்மையில் எழுதப்பட்ட இவ்வெழுத்துக்கள் ஆழ்ம னப்பதிவுகளாகவே விளங்குகின்றன. அவரின் கலை மனக்கிடங் கில் கொட்டிக்கிடக்கும் கருத்தியல்களின் சிதறல்களாகவே இவ் வெழுத்துக்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான சிலாகிப்புக்கள் பல உள்ளன எனினும் இவரது புனைவுகள் தரும் கலாவின்பத்தை, இவ்வெழுத்துக்கள் மூலம் ஒரு வாசகனாக என்னால் முழுமையாகப் பெற முடியவில்லை என்பது உண்மையாயினும், இரு எழுத்துக்களும் வேறு வேறு தானே. தேவகாந்தனின் விமர்சன மனத்தின் சான்று இந்நூல்.



chelvamanoharan@thaiveedu.com



# ஜீவநதி
# 14வது ஆண்டு மலரும் அடுத்த இதழும்

- தெளிவத்தை ஜோசப்

2021ம் ஆண்டுக்கான புத்தாண்டு வாழ்த்துகளுடன் பதினான்காவது ஆண்டு மலராக வெளிவந்திருக்கிறது ஜீவதியின் 148வது இதழ், '2020ம் ஆண்டு உலக மக்களுக்கெல்லாம் இடர் மிகுந்த காலமாகவும் பேரழிவுகளை சந்தித்த ஆண்டாகவும் காணப்படுகின்றது. பிறந்துள்ள 2021ம் ஆண்டு அனைத்து மக்களுக்கும் நல்லாண்டாக அமையவேண்டும் என ஒரு நம்பிக்கையுடன் ஜீவநதியின் புத்தாண்டு வாழ்த்தை தெரிவிக்கின்றார் பிரதம ஆசிரியர் க. பரணீதரன். சென்ற ஆண்டின் (2020) 12 இதழ்கள் பற்றிய குறிப்புக்களும், இனிவரும் இதழ்களின் எழுத்தாளர்களுக்கான ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் விரவிக்கிடக்கும் ஆசிரியருரை இது.

2021 ஜனவரியில் வெளிவந்துள்ள இந்த ஆண்டு மலர் அதிக பக்கங்களுடனும் (120 பக்கங்கள்) அதிகரித்த விலையுடனும் (250/=) மாத்திரமல்லாது, சமூகத் தேவையும், மனிதகுல மேன்மைக்கானதுமான வாசிப்புப் பண்பாட்டை விரிவடையச் செய்யும் தனது இதழியல் நோக்கிலிருந்து சற்றும் விலகிவிடாத்தன்மையுடனும் வெளிவந்துள்ளமை மிகவும் குறிப்பிடக்கூடியது, மகிழ்வு தருவது. (வழமையான இதழ்கள் 48 பக்கங்களையும் 100 ரூபாய் விலையையும் கொண்டவை).

இந்தப் 14வது ஆண்டு மலரில் இதழியலின் அடிப்படைத் தேவையான சிறுகதைகள் (12), கவிதைகள் (13) போன்ற படைப்புக்களுக்குமப்பால் தீவிரமான ஆழ வாசிப்புக்கான அனேக விடயங்கள் வெளிவந்திருக்கின்றன.

- கலாநிதி ந. ரவீந்திரனுடனான நேர்காணல்.
- கலாநிதி சி. ஜெய்சங்கர்: ஆய்வு முறைமைகளின் பல்வகைமைகளும் காலனித்துவ நீக்கமும் - கட்டுரை.
- கலாநிதி தேவராசா முகுந்தனின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய ஈழத்தமிழ்ச் சிறுகதைகள் இரண்டு - கட்டுரை.
- கலாநிதி சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ் - நாடக ஆசிரியர் விஜய் தெண்டுல்கர் பற்றிய அறிமுகக் குறிப்புகள்.
- பேராசிரியர் செ. யோகராசா - அனுராதபுரப் பிரதேச கவிதை முன்னோடி அன்புதாசன்.
- பாஸ்கரன் சுமனின் காலனிய கால மட்டக்களப்பு மாவட்டக் கையேடு.
- அகமண முறையும் சாதியை அழித்தொழித்தலும் - யதார்த்தன்.
- வரலாறுகள் பல சங்கமிக்கும் இயற்கை எழில் மிகு தொண்டைமானாறு - பா.இ. ரகுவரன்.

போன்றவை கவன ஈர்ப்பு கொள்பவை. சினிமா மற்றும் திரை இசை பற்றிய இ.சு. முரளிதரன் மற்றும் தா. பார்த்தீபனின் கட்டுரைகளும் வாசிப்பனுபவம் தருபவையே.

கலாநிதி ந. இரவீந்திரனின் பரணீதரனுடனான உரையாடல் கனதியானது, முக்கியமானது. தெளிவான இடதுசாரி சிந்தனைகளுடனும் அரசியல் ஞானத்துடனும் இயங்கி வரும் கலாநிதி இரவீந்திரன் ஈழத்தமிழ் எழுத்துலகின் ஒரு முக்கியமான ஆளுமை என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. அவருடன் பேச நமக்கும், நம்முடன் பேச அவருக்கும் நிறைய விடயங்கள் உண்டு. பன்முகத்தன்மை கொண்ட சிந்தனையாளர் அவர். அவரும் லெனின் மதிவாணனும் முன்னின்று வெளியிட்ட மா. பாலசிங்கத்தின் நூல் எஸ்.பொ.விற்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் சுவிசிலிருந்து ஏ.ஜி. யோகராஜா வெளியிட்ட 'எழுவோம்: நிமிர்வோம்: திரள்வோம்' என்னும் சமூக சமத்துவம், அடுத்தகட்ட நகர்வு குறித்த முன் வரைவு பற்றிய நூலுக்கான முன்னுரை அ. மார்க்ஜஸ் பின்னுரை ந. இரவீந்திரன் போன்றவை அவருடைய பன்முகத்தன்மை கொண்ட சிந்தனைகளுக்கானவை.

செ.யோகநாதனின் 'சரணபாலாவின் பூனைக்குட்டி' மற்றும் தி.ஞானசேகரனின் 'அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்' ஆகிய இரண்டு சிறுகதைகள் பற்றி தேவ முகுந்தன் தன்னுடைய தேசிய இனப்பிரச்சினை பற்றிய தமிழ்ச் சிறுகதைகள் என்னும் கட்டுரையில் விரிவாகப் பேசுகின்றார்.

எண்பதுகளில் வெளிவந்த 'திசை' தேசிய இனப்பிரச்சினை பற்றிய சிறுகதைகள் பற்றி நிறையவே பேசியதுடன் இனப்பிரச்சினை கதைகள் என்று தொடராக பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் வெளியிட்டது. திசைக்கு முன்பதாக அ. யேசுராசாவின் 'அலை' இது பற்றிய காத்திரமான கட்டுரைகளை வெளியிட்டது. 'தேசிய இனப்பிரச்சினைகளும் தமிழ்ச் சிறுகதைகளும்' என்னும் யேசுராஜாவின் 'அலை'யில் வெளிவந்த கட்டுரை 'திசை'யில் மீள் பிரசுரம் செய்யப்பட்டது.

இந்த நினைவுத் தீண்டுதல்களுடன் எழுத வரும் புதியவர்களுக்கான படைப்பூக்கத் தூண்டுதலாக தேவமுகுந்தனின் கட்டுரை முக்கியத்துவம் கொள்கிறது.

இந்த ஆய்வுகள், தேடல்கள், அறிவியல் சார்ந்த கட்டுரைகள் போன்றவைகளுடன் புனைவுகளாகவும் பத்துக்கு மேற்பட்ட படைப்புக்களை கொண்டிருக்கிறது இந்த 14வது ஆண்டு மலர்.

'படைப்பாளர்களிமிருந்து புதிய சிந்தனையுடனான ஆக்கங்களை எதிர் பார்க்கின்றோம். ஒரே விடயங்களை மீண்டும் மீண்டும் மாறி மாறி எழுதி அனுப்பாமல் புதிய விடயங்களை தெரிவு செய்து எழுதுங்கள். மீண்டும் மீண்டும் உங்கள் ஆக்கங்களை வாசித்து செப்பனிட்டு அனுப்புங்கள். பல எழுத்தாளர்கள் விடும் எழுத்துப் பிழைகள் அவர்களது தமிழ் அறிவு குறித்த கேள்வியை எழுப்புகிறது... என்பது போன்ற அறிவுரைகள் எதை உணர்த்துகின்றன. லண்டனிலிருந்து வெளிவரும் மாத இதழான 'சிறுகதை மஞ்சரி' கூட தனது 8வது இதழில் (மார்ச் 2021) இதையே தான் குறிப்பிட்டிருக்கிறது.

முப்பதுகளில் மணிக்கொடியின் வரவுடன் உருவாகிய ஒரு தீவிரமான வாசிப்புப் பாரம்பரியம் புனைவுகளால் கட்டமைக்கப்பட்டெழுந்தது. புதுமைப்பித்தன், குமரா, மௌனி, பிச்சமூர்த்தி போன்ற மணிக்கொடிக்கால எழுத்தாளர்களின் படைப்புக்களால் உருவாக்கப்பட்ட இந்த வாசிப்புப் பண்பாடு சுதந்திரத்துக்கு பின்னான பிந்

திய நாற்பதுகளிலிருந்து சிதைவுறத் தொடங்கியது. வாசிப்பது சந்தோஷத்துக்காக, மனமகிழ்வுக்காக என்னும் ஜனரஞ்சக வாசகர் வட்டம் பெருக்கம் கொண்டது. வெகுஜன இலகு வாசிப்புக்கான ஒரு தளத்தை தோற்றுவித்த முதல் சஞ்சிகை ‘ஆனந்தவிகடன்’. அந்த வாசகர் வட்டத்தை அதே நிலையில்வைத்துக் கொண்டது ‘கல்கி’. இவைகளையும் மீறி மேவி அடித்தமுக்கிவிட்டு ஒரு புதிய வாசிப்பு வட்டத்தை மலிவானதொரு வெகுஜன வாசிப்புப் பாரம்பரியத்தை உருவாக்கியது ‘குமுதம்’. குமுதம் தோற்றுவித்த புதிய வாசிப்புப் பழக்கம் தமிழ் வாசகர் அனைவரையும் தனக்குள் ஆழ்த்தி மூழ்கடித்துக் கொண்டது.

ஈழத்து இதழியல் துறையில் இவை போன்ற இதழ்கள் தோன்றவில்லை என்பதுடன் ஒன்றிரண்டு தோன்றியிருந்தாலும் வாசகர்களை ஆட்கொள்ளவோ ஆக்கிரமிக்கவோ முடியவில்லை என்றாலும், நமது வாசகர்கள் மத்தியில் ஆனந்த விகடன், குமுதம் ரக சஞ்சிகைகளின் ஊடுருவல்கள் இல்லாமலும் இல்லை. நமது வாசகர்களை இழுத்தணைத்துக் கொள்ளாமலும் இல்லை. வாசகர்கள் தான் எழுத்தாளர்களாகவும் மாறுகின்றார்கள் என்கையில், சிறுகதை மஞ்சரி, ஜீவநதி போன்றவைகளின் எழுத்தாளர்களுக்கான ஆலோசனைகளும் தேவையானதாகவே படுகிறது.

இராஜினிதேவி சிவலிங்கத்தின் குறுநாவல் - விடை பெறும் கழுகுகள் - கடைசிப்பக்கங்களில் (108 - 113 ஆறுபக்கம்) வெளிவந்திருக்கிறது. இந்த நீள் கதையையும் பாடசாலைக்கு ஒன்றாகச் செல்லும் நான்கு மாணவிகளுடனேயே தொடங்குகின்றார் கதாசிரியை. நாங்கள் நால்வரும் புறப்பட்டு வீதிக்கு வரும் போது சந்தியிலே நிற்கும் நான்கு இளைஞர்கள் தமது சைக்கிள்களில் எம்மைப் பின்தொடர்ந்து வருவது வழமையான நிகழ்வாகிவிட்டது... திரையிலோடும் ஒரு படக்காட்சி போல் மெதுமெதுவாக விரிகிறது இராஜினிதேவியின் கதாமாந்தர்களின் இயக்கம்.

குறுநாவல் என அறிமுகம் பெறும் இதன் கதை வெளிப்படையானது. எளிமையும் இயல்பும் கொண்டது. பாத்திரங்களை அதனதன் போக்கில் நடத்திக் கொண்டுபோய் அவர்கள் தொடர்பான விவரங்களை தெளிவுடன் விபரிக்கின்றார். மேட்டுமைக் குணமும் அதிகாரத்துவமும் கொண்ட இரண்டு குடும்பங்கள், அவர்களது பகையால் ஊர் இரண்டுபடும் விதம், நடக்கும் வெட்டுக் குத்துக்கள், கொலைகள் இவைகளை ஒரு விதமான கோபமோ குரூரமோ இன்றி இயல்பாக எழுதிச் சொல்லும் லாவகம். முழுதாக இரண்டு தடவையும், மூன்றாவது தடவையாக இடைக்கிடையும் என்னை வாசிக்க வைத்த படைப்பு இது.

‘எனது வாசிப்புப்பழக்கமே என்னை எழுதத் தூண்டியது. வாசிப்புப் பயிற்சி தந்த ஈர்ப்பின் காரணமாக எனது அனுபவங்கள் உணர்வுகள் புறநிகழ்வுகளின் தாக்கங்கள் என்னை எழுதத்தூண்டின. ஒரு நிகழ்ச்சியை அல்லது சம்பவத்தை கோர்வைப்படுத்தி, சொல் நயத்துடன், நல்ல மொழி நடையைக் கையாண்டு எழுதவேண்டும் என்பதை நான் நான்கு அறிவேன்’ என்கின்றார் சி. இராஜினிதேவி. அதற்கு சாட்சிபகரும் படைப்பு இந்தக் குறுநாவல்.

அடுத்த இதழ் 149வது ஜீவநதி. 75 வயதை அடைந்திருக்கும் மூத்த முற்போக்கு எழுத்தாளரான கே.ஆர். டேவிட் அவர்களுக்கான சிறப்பு மலர் இது.

ஈழத்துப் படைப்பாளர்களான கே.எஸ். சிவகுமாரன் க. சட்டநாதன், செங்கை அழியான், தெணியான், குழந்தை ம. சண்முகலிங்கம் போன்றவர்கள் 75 வயதை அடைந்தபோது ஜீவநதி சிறப்பிதழ்களை வெளியிட்டு அவர்களை கௌரவித்துள்ளது. அந்த வகையில் ஈழத்து இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவரும் இடதுசாரி சிந்தனை கொண்ட முற்போக்கு இலக்கிய ஆளுமையுமான கே.ஆர். டேவிட் அவர்களுக்கான சிறப்பிதழாக ஜீவநதியின் 2021 பெப்பிரவரிக்கான 149வது இதழ் அமைகிறது.

கே.ஆர். டேவிட் அவர்களுக்கும் ஜீவநதிக்கும் எனது வாழ்த்துகள்.



theliwathai.joseph@thaiveedu.com






# மோட்கேஜ்

புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



# MORTGAGE NESAN
## 416-908-5656

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

## Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099

# கண்டிய நிலமானியம் - ஓர் அறிமுகம்

## (மார்க்சிய சமூகவியலாளர் நியூடன் குணசிங்கவின் நோக்கிலான விளக்கம்)

- க. சண்முகலிங்கம்

இக்கட்டுரையில் மார்க்சிய சமூகவியலாளர் நியூடன் குணசிங்க கண்டிய நிலமானியம் குறித்து கூறியிருக்கும் கருத்துக்களை சுருக்கமாக எடுத்துக் கூறவுள்ளேன். இலங்கையின் சமூக உருவாக்கம் (Social Formation), வெவ்வேறு பகுதிகளில் நிலவும் உற்பத்தி முறைகள் (Modes of Production), மேலாதிக்கம் பெற்றுள்ள உற்பத்தி முறைகள், சமூக உறவுகள் என்பன பற்றி அவர் விரிவானதும் ஆழமானதுமான ஆய்வுரைகளை எழுதினார். அவர் எழுதிய முக்கியமான ஆய்வு நூல் 'கண்டிப் பகுதியின் கிராமப் புறங்களில் மாற்றமுறும் சமூக பொருளாதார உறவுகள் (Changing Socio-Economic Relations in The Kandyan Countryside) என்பதாகும். இது கொழும்பு SSA நிறுவனத்தால் 1990ம் ஆண்டு, அவர் காலமாகி இரு ஆண்டுகள் கழிந்தபின் வெளியிடப்பட்டது. கண்டியின் சமூக பொருளாதார உறவுகளைப் பற்றி அவர் வேறு பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதினார். உலகின் நிலமானிய சமூக முறைமைகள் பல இருந்துள்ளன. அவை ஒவ்வொன்றும் தனித்துவமான இயல்புகளை உடையவை. நிலமானிய உற்பத்தி முறை (Feudal mode of Production) என்பது அருவமான ஒரு எண்ணக்கரு. கண்டிய நிலமானியம், சோழர் கால நிலமானியம், ஐரோப்பிய நிலமானியம், திபெத்திய நிலமானியம் என்று கூறும் போது ஸ்தூலமான நிலையில் (Concrete Level) ஒரு குறிப்பிட்ட சமூக உருவாக்கம் (Social Formation) பற்றிப் பேசத் தொடங்குகிறோம். அத்தோடு சமூக உருவாக்கம் என்ற எண்ணக்கரு குறிப்பிட்டதொரு வரலாற்றுச் சூழமைவில் ஒரு சமூகத்தின் உற்பத்திமுறை, உற்பத்தி உறவுகள், சட்ட அரசியல் கருத்தியல் மேற்கட்டுமானம் என்பன எவ்வாறிருந்தது எவ்வாறு மாற்றமுற்றது என்பதையும் ஆராய்வதற்குத் துணையாக அமைகிறது. இக்கட்டுரையில் நாம் எடுத்துக் கூறவிருக்கும் கண்டிய நிலமானியம் பிரித்தானியரால் 1815ல் கண்டி கைப்பற்றப்படுவதற்கு முந்திய காலத்தில் கண்டியில் காணப்பட்ட நிலமானிய உற்பத்தி முறையையே குறிப்பிடுகிறது என்பதையும் கவனத்திற் கொள்வது அவசியமானது.

கலாநிதி குணசிங்கவின் ஆய்வு ஒரு கோட்பாட்டு ஆய்வாக இருந்தது. அவரின் ஆய்வு நூலைப் புரிந்து கொள்வதற்கு, அவர் அதனை எழுதிய காலத்தின் கோட்பாட்டு விவாதங்கள் பற்றி நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

குணசிங்க தமது கோட்பாட்டுக் கருத்துக்களை (Theoretical Ideas) பெற்றுக் கொண்ட ஆய்வறிவியல் பின்புலம் யாது என்பதைப் பற்றி பேராசிரியர் ஐயதேவ உயன்கொட கூறியிருப்பவற்றை இங்கு மேற்கோளாகத் தருவது பொருத்தமானதாகும்.

1970களில் உலகின் மார்க்கிஸ்ட் புலமையாளர்கள் மத்தியில் பெரும் விவாதம் ஒன்று இடம் பெற்றது. மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சி (Capitalist Development) எத்தகையது, அதன் இயல்புகள் யாவை என்பனவே இவ்விவாதத்தின் விடயப் பொருளாக இருந்தது. அவ்விவாதத்தில் பங்கெடுத்த நவ - மார்க்சிய சிந்தனையாளர்கள் சிலர் மூன்றாம் உலகின் சமூகங்களை சார்பு மண்டல முதலாளித்துவ உருவாக்கம் (Peripehral Capitalist Formations) என்று கூறினர். இச்சொல்லாடலும், இது தொடர்பான விவாதமும் (இரண்டாம்) உலகப் போருக்குப் பிந்திய மார்க்சியம் (Post war marxism) என்பதன் ஓர் அங்கமான சார்பு மண்டலக் கோட்பாட்டுப் பள்ளியினரால் (Dependency School) தொடக்கி வைக்கப்பட்டது. குறிப்பாக குந்தர் பிராங் (Gunder Frank) 1960களின் பிற்பகுதிகளில் எழுதிய எழுத்துக்கள் மூலம் இக்கருத்துகள் வெளிப்பட்டன. (ஸ்பானிய மொழியில்) 'டிபென்டிஸ்டாஸ்' (Dependistas) என அழைக்கப்பட்ட இச்சிந்தனைப் பள்ளியினர் ஏகாதிபத்தியம் உலகளாவிய ரீதியில் முதலாளித்துவ உற்பத்தி முறையைப் புகுத்தியது என்றும், இந்த உற்பத்திமுறையை மூன்றாம் உலக நாடுகளில் புகுத்துவதற்கு குறைவிருத்தி (Under Development), சமத்துவமற்ற பரிவர்த்தனை என்ற இரு செயல்முறைகளை (Mechanisms) கையாண்டது என்றும் கூறினர்! (- உயன்கொட 1988).

மேற்குறித்த நீண்ட மேற்கோளில் உயன்கொட 1970களில் நடைபெற்ற ஒரு பெருவிவாதம் பற்றியும், அவ்விவாதம் சார்பு மண்டலக் கோட்பாட்டுப் பள்ளியினரால் (Dependency School) தொடக்கப்பட்டது பற்றியும் குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். இவ்விவாதம் இன்னொரு முக்கியமான விவாதத்திற்கும் அடிகோலியது. இது பற்றி உயன்கொட தொடர்ந்து கூறுவதை அடுத்துப் பார்ப்போம்.

'ஏர்னஸ்டோ லக்லோ (Ernestro Laclau) என்னும் சிந்தனையாளர் 1972ல் குந்தர் பிராங்கும் ஏனையோரும் முன்வைத்த கருத்துக்கள் அடிப்படையில் தவறானது என்று கூறினார். இந்தவறுக்குரிய பிரதான காரணம் யாது என்பதையும் லக்லோ சுட்டிக் காட்டினார். மூன்றாம் உலகின் முதலாளித்துவத்தை உற்பத்தி (Production) என்ற நிலையில் வைத்து நோக்காமல் பரிவர்த்தனையும், வர்த்தகச் சுழற்சியும் (Exchage and Circulation) என்ற நிலையில் வைத்து குந்தர் பிராங் போன்றோர் ஆராய முற்பட்டனர். இதுவே அவர்கள் செய்த தவறின் அடிப்படை என லக்லோ கூறினார். லக்லோவின் இடையீட்டின் தொடர்ச்சியாக மூன்றாம் உலகின் உற்பத்தி முறைமைகள் பற்றிய விவாதம் (Modes of Production Debate) ஆரம்பமாயிற்று. (- உயன்கொட 1988).

உயன்கொடவின் மேற்கோள்கள் எளிமைப்படுத்திய தமிழாக்கமாகத் தரப்பட்டுள்ளன. குணசிங்கவின் கோட்பாட்டுக் கருத்துக்கள் (Theoretical Ideas) மேற்குறித்த இருவிவாதங்களின் ஊடாகப் பெறப்பட்டவை என்பது தெளிவு.

### கண்டியின் நிலமானியம்:

கண்டியின் நிலமானிய உற்பத்தி முறையிலும் அதன் சமூக உருவாக்கத்திலும் (Social Formation) காணப்பட்ட முக்கிய இயல்புகளை அடுத்துப் பார்ப்போம். கண்டியின் உற்பத்தி முறையில் உழைப்பின் பிரயோகம் நிலம் சார்ந்ததாக இருந்தது. ஆகையால் அங்கு நிலத்தின் உடைமையாளர்களாக யார் இருந்தனர் என்பது முக்கியமானது. கண்டியில்

பின்வருவோர் நில உடைமையாளர்களாக இருந்தனர்.

- அரசன்: அரசனின் காணிகள், அவனது நேரடி உடைமைகளாக

இருந்தன. இவை கபடாகம் என அழைக்கப்படும்.

- பிரபுக்கள்:
  - விகாரைகளின் நிலம் விகாரகம் எனப்பட்டன, கோவில்களின் நிலங்கள் 'தேவாலகம்' எனப்பட்டன. இவையிரண்டும் பிரபுக்குலத்தின் உடைமையாகவே இருந்தன.
  - பிரபுக்களிற்குக் கொடையாக வழங்கப்பட்ட காணிகள் 'நிந்தகம்' எனப்படும்.
  - 'நிந்தகம்' காணிகளில் இருந்து வேறான 'ஹத்தவதில்லி' (Hadavadili) காணிகள் பிரபு ஒருவரின் பதவியோடு தொடர்பு பட்டவை. உதாரணமாக 'ரட்டே மஹாத்தயா' என்ற பதவிக்குரிய 'ஹத்தவதில்லி' காணிகள் குறித்த பதவியில் இருந்து ஒருவர் நீங்கிய பின் அப்பதவிக்கு நியமிக்கப்படும் அடுத்த நபருக்கு சொந்தமாகும்.
- சிற்றுடமையாளர்களாகன குடியான்கள் காணித்துண்டுகளின் உடைமையாளர்களாக இருந்தனர். இக்காணிகள் குடியான்களின் உடைமையாக (Freehold) இருந்தன.

கண்டியில் காணிகள் யாவும் அரசன் உடைமையாக இருந்தன என்ற கூற்றில் உண்மை இல்லை. அங்கு நிலத்தில் தனி உடைமை இருந்தது. கபடாகம், விகாரகம், தேவாலகம், நிந்தகம், ஹத்தவல்லி, சிற்றுடமையாளர்களின் காணிகள் என்கிற வகையில் காணிகள் தனியார் உடைமைகளாக இருந்தன. அரசன் சொத்துடமையாளர்களில் ஒருவனாக இருந்தான். காணிகளைப் பயிரிடுவோரான குத்தகைக்குடிகள் காணிகளில் உழைத்தனர். காணிகள் குத்தகைக்காரரிடம் இருந்தது, உற்பத்திக் கருவிகளையும் அவர்கள் சொந்தமாக வைத்திருந்தனர். அவர்களின் உழைப்பின் விளைவின் ஒரு பகுதி அவர்களின் நுகர்வுக்காகப் பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய உபரி உழைப்பு இரண்டு வகைகளில் உடைமையாளர்களான நிலப்பிரபுவிற்கும் (அரசனிற்கும்) சென்றது அவையாவன.

### ▸ உழைப்பு வாடகை (Labour Rent):

குத்தகைக்கு பயிரிடும் காணிகளில் ஒரு பகுதி 'முத்தெட்டுவ' எனப்படும். மீதிநிலம் 'பங்கு' நிலம் எனப்படும். 'முத்தொட்டுவ' நிலத்தின் விளைவு முழுவதையும் குடியான் பிரபுவின் வீட்டிற்குக் கொண்டுபோய் ஒப்படைக்க வேண்டும். 'நலப்பங்குவ' விக் உற்பத்தியைக் குடியான் தனது நுகர்வுக்கு வைத்துக் கொள்ளலாம்.

### ▸ விளைபொருள் வாடகை (Produce Rent):

காணிகள் குத்தகையாளர்களிடம் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு வழங்கப்பட்ட காணிகள் 'அந்தே' (Ande) எனப்பட்டன. குத்தகைப் பங்குகள் என்பதே 'அந்தே' என்பதன் பொருள். 'அந்தே' குடியான்கள் தமது உற்பத்தியின் ஒரு பகுதியை வாடகையாக நிலப்பிரபுக்களிற்குக் கொடுத்தனர்.

வாடகை, வரிகள், ராஜகாரிய என்னும் இலவச உழைப்பு என்ற வழிகளில் கண்டியின் குடியானவர்களின் உழைப்பு சுரண்டப்பட்டது.

## கண்டியின் நிலமானிய சமூகத்தின் பிரதான வர்க்கங்கள்:

கண்டிய நிலமானிய அமைப்பைச் சுருக்கமாக மேலே எடுத்துச் கூறினோம். அடுத்து கண்டியின் நிலமானிய சமூகத்தின் பிரதான வர்க்கங்கள் எவையென்பதைப் பார்ப்போம். கண்டி இராச்சிய காலத்தில் கண்டியில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பிரதான வர்க்கங்கள் காணப்பட்டன.

- நில உடைமையாளர்களான நிலப்பிரபுக்கள்,
- சிற்றுடமையாளர்களான குடியான்கள்,
- குத்தகைக் குடியான்கள் - குத்தகைக் குடியான்கள் என்ற வகைக்குள் பல பிரிவினர் இருந்தனர்.

இவர்களுள் முதலாம் பிரிவினர் உழைப்பில் ஈடுபடாத உடைமையாளர் வர்க்கமாக இருந்தனர். இரண்டாவது மூன்றாவது பிரிவினர் நிலத்தில் உழைப்போராக இருந்தனர். உழைப்பாளர்களான இவ்விரு பிரிவினரும், சாதியடிப்படையிலான வேலைப் பிரிவினை காரணமாக பல்வேறு வகையினராக பிளவுபட்டிருந்தனர். சிற்றுடமையாளர்களான குடியான்களுக்கும், குத்தகை குடியான்களுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு நிலத்தின் மீதான உரிமை தொடர்பானதாகும். குத்தகைக் குடியான்கள் நிலத்தை தம்பொறுப்பில் வைத்துக் கொண்டு அதில் பயிரிடுபவர்களாக இருப்பினும் அவர்கள் நிலத்தின் உடைமையாளர்கள் அல்லர் சிற்றுடமையாளர்கள் நிலத்தின் உடைமையாளர்களாய் இருந்தனர். ஆயினும் இவ்விரு பிரிவினரும் பொருளாதார நிலையில் ஒரே மட்டத்திலேயே இருந்தனர். இரங்கத்தக்க வறுமை நிலையும், பிரபுக்களினாலும் அரசினாலும் பலவகைப்பட்ட சுரண்டலுக்கு உள்ளாவதும், சமூகத்தின் கீழ்தட்டு மக்களாக இருந்தமையும் பொதுவான அம்சங்களாகும். இவ்விருவகையினரும் பல சாதிகளைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். கொவிகம சாதியைச் சேர்ந்த குடியான்கள் சாதியடிப்படையில் உயர்வான சடங்கு நிலை அந்தஸ்தைப் பெற்றனரேனும், குடியான் வர்க்கம் என்ற நிலையில் தாழ்ந்த அந்தஸ்தையே பெற்றனர்.

## அரசு, சமயம், கருத்தியல்:

கண்டியில் சட்டம், அரசியல், சமயக் கருத்தியல் என்னும் மேற் கட்டுமான அமைப்புகள் சமூக உறவுகளின் மறுஉற்பத்தியை உறுதிசெய்தன. 'கர்மா' கோட்பாடு இவ்வுலக வாழ்வின் நன்மைகளும், துன்பங்களும் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளின் பயன் என்பதை மக்கள் மனதில் ஆழப்பதிந்தன. இவ்வுலகில் தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளை ஆற்றுவதன் மூலம் விவசாயக் குடியான்கள் அடுத்த பிறவியில் நன்மையைப் பெறலாம் என்பதை உணர்ந்து ஒழுக்கசீலர்களாய் வாழ்வதைச் சமயக் கருத்தியல் உறுதிசெய்தது. சமூகத்தின் மேல்நிலையில் இருந்த உயர் குலப் பிரபுக்களின் பரம்பரையினரே விகாரைகளின் தலைமைப் பிக்குகளாகவும் இருந்தனர். இப்பிக்குகள் விகாரைகளின் சொத்துக்களின் ஊடமையாளர்களாகவும் இருந்தனர்.

சகோதரியின் மகனை பிக்குவாக நியமனம் செய்து தாய்வழி முறையில் விகாரைச் சொத்துக்களை தம் உடைமையாகப் பிரபுக் குலம் வைத்திருந்தது. அரசு சமயத்தின் காவலர் என்ற பொறுப்பை ஏற்றிருந்தது. சமயச் சடங்குகளில் அரசன் பங்கு கொண்டு பௌத்தம் அரசமதம் என்பதை உறுதிசெய்தான்.

## கண்டியின் சமூக உருவாக்கம்:

கண்டியில் மேலாதிக்கம் உடைய உற்பத்திமுறையாக நிலமானியம் விளங்கியது. கண்டி நகரைச் சுற்றியிருந்த மையப்பகுதியில் (Corearea) நிலமானிய உற்பத்தி முறை பின்வரும் மூன்று அடிப்படைகளில் நிலை கொண்டிருந்தது.

- நிலத்தில் பயிரிட்ட குடியானவனின் உடைமையில் காணிகள் இருந்தன. குடியான் உற்பத்திக் கருவிகளையும் தனது சொந்த உடைமையாக வைத்திருந்தான்.
- உற்பத்தியின் மேன்மிகை (Surplus) வாடகையாக நிலப்பிரபுவிற்குச் சென்றது, மேன்மிகையின் ஒருபகுதி வரிகள் என்ற வடிவில் அரசனிற்குச் சென்றது.
- பொருளாதாரம் சாராத கட்டுப்பாடுகள் (Non - Economic controls) மூலமும் குடியானிடமிருந்து மேன்மிகையை அபகரித்தல் உறுதி செய்யப்பட்டது.

மூன்றாவதாக குறிப்பிடப்படும் பொருளாதாரம் சாராத கட்டுப்பாடுகள் சட்டம், அரசியல், சமயக் கருத்தியல் என்ற வடிவங்களில் செயல்படுவன. கண்டியின் சட்டப்படி குத்தகைக் குடியான் பிரபுவின் நிலத்தை விட்டு நீங்கி விடலாம். சட்டப்படியான இச்சுதந்திரம் நிலமானிய அமைப்பின் கீழ் செயற்படுவதற்கும் சாத்தியமாவதற்கும் இருநிபந்தனைகள் அவசியமானவை.

- அரசின் கட்டுப்பாடு செயற்படாத நகரங்கள் இருத்தல் வேண்டும். குடியான் அவ்வாறான நகரங்களுக்குத் தப்பிச் சென்று விடலாம். கண்டியில் அவ்வாறான நகரங்கள் இருக்கவில்லை.
- நிலப்பிரபுக்களின் கட்டுப்பாட்டுக்குள் உட்படாத காட்டுநிலம் இருத்தல் வேண்டும். குடியான் நிலத்தில் இருந்து வெளியேறிக்

காட்டை அழிந்து அங்கு குடியிருத்தல் முடியும். கண்டியில் இவ்வாறான காட்டு நிலங்களும் இருக்கவில்லை. இக்காரணங்களால் சட்டப்படி (Dejure) சுதந்திரமானவன் என்ற நிலை நடைமுறையில் (Defacto) குடியானை அடிமைநிலைக்கு உட்படுத்தியது. கண்டியின் மையப்பகுதியில் நிலமானிய முறை நிலவியது. ஆயினும் கண்டியின் மையப்பகுதிக்கு வெளியே அமைந்திருந்த 'நுவரகலாவிய' (இன்றைய அனுராதபுரம், பொலன்நறுவ மாவட்டங்கள்) ஊவா ஆகிய பகுதிகளில் நிலமானியத்தில் இருந்து வேறான இரு உற்பத்தி முறைகள் கண்டி இராச்சிய காலத்தில் காணப்பட்டன.

அவையாவன:

- குடியான் உற்பத்திமுறை (Peasant mode of Production)
- சுயத்துவமுடைய கிராமங்களின் பொதுவுடமை உற்பத்திமுறை (Communal mode of Production)

இவ்விரு உற்பத்தி முறைகளும் மேலாதிக்கமுடைய நிலமானிய உற்பத்தி முறையின் கீழமைந்த (Subordinated) முறைகளாகவும் இருந்தன. இப்பகுதிகளை 'வன்னியனார்' என அமைக்கப்பட்ட




சிற்றரசர்கள் (Petty Rulers) தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். திறை செலுத்துவதன் மூலம் கண்டி அரசனிற்கு 'வன்னியனார்' என்னும் சிற்றரசர்கள் பெயரளவிலான விசுவாசத்தைத் தெரிவித்தனர். கண்டி அரசின் அதிகாரம் இப்பகுதிகளில் ஒப்பீட்டளவில் குறைந்து காணப்பட்டது.

## சர்வாதிகார அரசு:

கண்டி மன்னன் சர்வாதிகாரியாக விளங்கினான். ஐரோப்பிய நிலமானியத்திற்கும் கண்டியின் நிலமானியத்திற்கும் உள்ள முக்கிய வேறுபாடு, கண்டியில் அரசின் இறைமை கூறுபடுத்தப்பட்டதாய் இருக்கவில்லை. நிலமானியப் பிரபுக்கள் தமது எல்லைக்குள் சர்வாதிகாரம் படைத்தவர்களாய் இருப்பதும், மத்தியில் உள்ள அரசு சடங்குநிலை அதிகாரத்தையுடையதாய் இருப்பதுமான நிலை கண்டியில் இருக்கவில்லை. நிலப்பிரபுக்கள் மீது கண்டி மன்னன் முழுமையான இறைமையை உடையவனாக இருந்தான். இதற்கு மூன்று காரணங்கள் துணையாக அமைந்தன என நியூடன் குணசிங்க கூறுகிறார்.

### உழைப்பு வாடகை (Labour Rent):

- குடியான்களின் மேன்மிகையைச் சுரண்டுவதற்குரிய வழிகளில் கண்டியில் உழைப்பு வாடகை பிரதான வழிமுறையாக இருந்தது. இதனால் குடியானின் மேன்மிகை உற்பத்தி அரசுக்கு நேரடியாகப் போய்ச் சேர்ந்தது. இராஜகாரியம் என்ற வடிவில் குடியானின் உழைப்பு அரசுக்குச் சென்றது. இது நிலப்பிரபுக்களைக் கடந்து உபரிஉழைப்பு வெளிப்பரவுவதாகும் ('Over Flow').
- கண்டியின் கிராமங்கள் சுயதேவைப் பூர்த்தியுடையனவாய் பிற கிராமங்களில் இருந்து தனித்து இயங்கவில்லை. அங்கு சாதி அடிப்படையிலான வேலைப் பிரிவினை நிலவியது. இதனால் பண்டங்களும் சேவைகளும் ஒரு வட்டாரத்தின் பல கிராமங்களிற்கும் பரவிச் செறிந்தன.
- கரையோரப் பகுதிகளினை போத்துக்கேயரும் பின்னர் ஒல்லாந்தரும் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இவ் அந்நியக் காலனி அரசுகள் கண்டி மீது தொடர்ச்சியாகப் போர் செய்தவண்ணம் இருந்தன. இதனால் கண்டியின் மீது அந்நிய ஆக்கிரமிப்பு என்ற அச்சுறுத்தல் தொடர்ச்சியாக இருந்தது. தொடர்ச்சியான போருக்கு மக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். இது கண்டியின் நிலமானிய அரசை மேல் நிர்ணயம் (Over Determination) செய்யும் அம்சமாக இருந்தது. கண்டிய அரசு சர்வாதிகார அரசாக அமைந்தமைக்கான மூன்றாவது காரணம் இதுவாகும்.

இம்மூன்று காரணங்களாலும் கண்டியின் நிலமானியத்திலும், அதன் சமூக உருவாக்கத்திலும், அரசியல் நிலை (Political Instance) பிரதான வகிபாகத்தைப் பெற்றதென நியூடன் குணசிங்க குறிப்பிடுகின்றார்.

## கருத்தியல் மேலாதிக்கம்:

கண்டியின் அரசு, நிலப்பிரபுக்கள், உயர்நிலைத் தலைவர்களான பௌத்த பிக்குகள் என்ற மூன்று அங்கங்களுக்கிடையில் பல முரண்பாடுகள் இருந்தன. அரசைப் பிரதிநித்துவப்படுத்திய அரசனிற்கும், நிலப்பிரபுக்களுக்கும் முரண்பாடுகள் இருந்தன. சமயத் தலைவர்களான பிக்குகளும் அரசுடனும், பிரபுக்களுடனும் முரண்பாடுகளைக் கொண்டிருந்தனர். ஆயினும் இம்மூன்று பிரிவினரும் ஒரு விடயத்தில் ஒன்று பட்டிருந்தனர். கண்டியின் குடியான் சமூகத்தின் மீதான கருத்தியல் மேலாதிக்கத்தை இவை கொண்டிருந்தன. இம்மேலாதிக்கம் காரணமாக கண்டியின் விவசாயிகள் சமூகமான குடியான்கள் ஆட்சியாளர்களுக்கு எதிரான கிளர்ச்சிகளில் ஈடுபடவில்லை. பிரபுக்களின் சூழ்ச்சிகள் காரணமாக கண்டியின் அரசனிற்கு எதிரான கிளர்ச்சிகள் அங்கு அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருந்தன. ஆனால் ஆட்சியாளர்களுக்கு எதிரான குடியான் கிளர்ச்சிகள் கண்டியில் இடம் பெறவில்லை.

## சுருக்கம்:

இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

- கண்டியின் சமூக உருவாக்கம் (Social Formation) பற்றிய ஆய்வாக நியூடன் குணசிங்கவின் நூல் அமைந்துள்ளது. கண்டி இராச்சிய காலத்தில் நிலமானிய உற்பத்தி முறை மேலாதிக்கமுடைய உற்பத்தி முறையாக அங்கு இருந்தது.
- பிரித்தானிய காலனிய ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட நிலைமாற்றம் (Transition) பற்றி ஆராயப்புகுந்த நியூடன் குணசிங்க உலக அளவில் 1970களில் மார்க்சியர்களிடையே நடைபெற்ற ஒரு பெரும் விவாதத்தின் பின்புலத்தில் தன் கருத்துக்களை உருவாக்கிக் கொண்டார்.
- இப்பொரும் விவாதம் மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சி (Capitalist Development) எத்தகையது, அதன் இயல்புகள் யாவை என்பன பற்றியதாகும்.
- இவ்விவாதத்தின் தொடர்ச்சியாக உற்பத்தி முறைமைகள் பற்றிய விவாதம் (Mode of Production Debate) அமைந்தது.
- மேற்குறிப்பிட்ட இரு விவாதங்களின் பின்னணியில் நியூடன் குணசிங்க தனது கோட்பாட்டுக் கருத்துக்களை (Theoretical Ideas) பெற்றுக் கொண்டார்.
- கண்டியின் நில உடைமையாளர்களாக:- அ) அரசன், ஆ) பிரபுக்கள், இ) விகாரைகளின் பிக்குகள் ஆகிய மூன்று பிரிவினர் இருந்தனர். கபடாகம், நிந்தகம் விகாரகம், தேவாலகம் என்பன பிரதான நில உடைமை முறைகளாக இருந்தன. சிற்றுடமையாளர்களான குடியான்களிடமும் சிறுதுண்டுக் காணிகள் உடைமையாக இருந்தன. சிற்றுடமைக் குடியான்கள் குத்தகைக் குடியான்கள் ஆகியோர் நிலத்தில் உழைக்கும் உழைப்பாளர்களாக இருந்தனர்.

- கண்டியின் நிலமானிய சமூகத்தில்
  - நில உடைமையாளர்களான நிலப்பிரபுக்கள்,
  - உழைப்பாளர்களான குடியான்கள்

என இருபிரதான வர்க்கங்கள் இருந்தன. உபரி உழைப்பு (Surplus) இருவழிகளில் அரசினாலும் நில உடைமையாளர்களாலும் சுரண்டப்பட்டது. அவையாவன

- உழைப்பு வாடகை (Labour Rent),
- விளைபொருள் வாடகை (Produce Rent).

இவ்விரு வழிகளில் உழைப்பு வாடகையே பிரதானமாக மேன்மிகை அல்லது உபரி உழைப்பைச் சுரண்டும் வழியாக இருந்தது.

- கண்டியின் உழைக்கும் வர்க்கமான குடியான்கள் சாதி அடிப்படையிலான வேலைப் பிரிவினை காரணமாக பல பிரிவினராகப் பிளவுபட்டிருந்தனர்.
- கண்டியின் சட்டம், அரசியல், கருத்தியல் என்னும் மேற்கட்டுமானக் கூறுகள் உற்பத்தி உறவுகளின் மறுஉற்பத்தியை உறுதி-செய்தன.
- நிலமானிய உற்பத்திமுறை (Feudal Mode of Production) கண்டியின் சமூக உருவாக்கத்தில் மேலாதிக்கம் உடைய உற்பத்தி முறையாக இருந்தது. கண்டி நகரத்தை அண்டிய மையப் பகுதிகளில் நிலமானிய முறை பலமுடையதாக இருந்தது. ஊவ, நுவரகலாவிய ஆகிய தூரப்பகுதிகளில்...
  - குடியான் உற்பத்தி முறையும் (Peasant Mode of Production),
  - சுயத்துவமுடைய கிராமங்களின் பொது உடைமை உற்பத்தி முறையும் (Communal Mode of Production) இருந்தன.
  - கரையோரப் பகுதிகளைத் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்த காலனித்துவ அரசுகளின் ஆக்கிரமிப்பு அபாயம் என்னும் அச்சுறுத்தல் கண்டிய அரசின் இயல்பைத் தீர்மானிக்கும் புறக்காரணியாக இருந்தது. இக்காரணத்தினால் கண்டியின் நிலமானிய அரசின் அதிகாரம் மத்தியில் இருந்த அரசிடம் குவிந்திருந்தது. கண்டிய அரசு சர்வாதிகார அரசாக இருந்தது.
- கண்டியின் அரசுக்கும் நிலப்பிரபுக்கள், சமயத் தலைவர்களான பிக்குகள் ஆகியோருக்கும் இடையில் உள்முரண்பாடுகள் இருந்தன. நிலப்பிரபுக்களின் சூழ்ச்சிகளால் அரசனுக்கு எதிரான கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆயினும் ஆளும் குழுக்களுக்கு எதிரான குடியான் கிளர்ச்சிகள் கண்டி இராச்சிய காலத்தில் இருக்கவில்லை. இதற்குரிய பிரதான காரணம் ஆளும் குழுக்களிற்குப் பக்கபலமாக அமைந்த கருத்தியல் மேலாதிக்கமாகும்.

**உசாத்துணை:**


- Gunasinghe Newton Changing Socio-Economic Relations in the Kandyan Countryside 1990, SSA, Colombo.
- சார்பு மண்டல முதலாளித்துவம் - இலங்கையில் கண்டியின் கிராமங்களில் சமூக பொருளாதார மாற்றங்கள் பற்றிய ஆய்வு. 2018, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
- Perera Sasanka (Ed), Newton Gunasingher: Selected Essays. 1996 SSA, Colombo.
- Uyangoda Jayadeva, Newton Gunasinghe Tribute to a Scholar, Lanka Guardian Nov 15, 1988.
- தமிழ் நூலின் மொழி பெயர்ப்பாளர் க. சண்முகலிங்கம்.
- உயன்கொட அவர்களின் கட்டுரை சசங்க பெரரா தொகுத்துப் பதிப்பித்த நூலில் சேர்க்கப்பட்டுள்ளது (பார்க்க. பக்கம்: 23-32).





shanmugalingam@thaiveedu.com





# ‘தமிழும் நிலமும் பேரழகே’ இசைத்தொகுப்பு காலத்தின் தேவை

கனடா, ரொறன்ரோவைத் தளமாகக் கொண்ட ஈழா கலையகம் ஏப்பிரல் 11ம் நாள் தமிழும் நிலமும் பேரழகே என்ற இசைத் தொகுப்பை வெளியீடு செய்தது.

இந்தத் தொற்றுநோய்க்காலத்தில் எவ்வாறு இந்த வெளியீட்டை இணையவழியாக நடத்தப் போகின்றார்கள் என்ற கேள்வி எழுந்திருந்தாலும், அதை ஏற்பாட்டாளர்கள் இணையவழியாகச் செவ்வனவே செய்து முடித்திருந்தார்கள்.

முதலில் ஈழா கலையகம் என்ற இந்த அமைப்பின் பின்னணியைத் தேடியதில், இரவீன் விநாயகமூர்த்தி, சிவாநாகமணி, பொன்னையா விவேகானந்தன் என்ற மூவருமே இந்தக் கலையகம் வாயிலாக இந்த இசைத்தொகுப்பை உருவாக்கினார்கள் என்பது தெரியவந்தது. இந்தநோய்க்காலத்திலும் வருவாய் நோக்கமுமின்றி, இவ்விசைத்தொகுப்பை உருவாக்கிய மூவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

தமிழும் நிலமும் பேரழகே என்ற தலைப்பே ஓரளவுக்கு இசைத் தொகுப்பின் உள்ளடக்கத்தை உணர்த்தியது. ஆவலோடு நானும் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டேன். குறித்த நேரத்தில் இணையவழியாக தொடங்கிய இந்நிகழ்வில், தொடங்கிய பத்து நிமிடத்துக்குள்ளேயே நூறு பேர் இணைந்து கொண்டிருந்தமை ஆச்சரியமாக இருந்தது. 100 பேருக்கு மேல் இணைய வாய்ப்பிருக்கவில்லை என்பது துயரம்தான்.

தொடக்கத்திலேயே இந்த இசைத்தொகுப்பு உருவாக்கப்பட்டதற்கான காரணங்களைத் தொகுத்து வழங்கிய பொன்னையா விவேகானந்தன், ‘இந்தப் பாடல்கள் புலம்பெயர்தோரின் உணர்வுகளாக, அவர்களின் அடையாளப் பேணல்களின் பதிவுகளாக அமைந்திருக்கின்றன எனக் குறிப்பிட்டார். இளையோருக்கான மரபுப்போணல் தொடர்பான விழிப்புட்டும் செயற்பாடுகளில் கலைவடிவங்களே சிறப்பிடம் பெறுகின்றன. அதனாலேயே ஆடல்களுக்குரிய இசைப்பாடல்களை உருவாக்கியிருந்தோம்’ என்றார்.

வழக்கமாக தொடக்கங்களை அடுத்து, கவிஞர் சா.வே. பஞ்சாட்சரம் அவர்கள் நல்லதொரு வாழ்த்துரையை வழங்க, திரு. கந்தசாமி கங்காதரன் இசைத்தொகுப்பில் பங்குபற்றிய கலைஞர்களையும் ஈழா கலையகத்தினரையும் அறிமுகம் செய்தார்.

தொடர்ந்து, பாவலர் அறிவுமதி நல்லதொரு சிறப்புரை வழங்கினார். இசைத்தொகுப்பில் இடம்பெற்ற பாடல்கள் குறித்து நல்ல பின்னூட்டங்களை வழங்கியிருந்தார்.

தொடர்ந்து இரு பாடல்களை ஒளிபரப்பினார்கள். பாடல்களை ஒலியாகத்தான் கேட்கவேண்டியிருக்கும் என எதிர்பார்த்த எமக்கு அதை ஆடலோடு வழங்கியமை ஆச்சரியமாக இருந்தது. பாடல்கள் சிறப்பாகவே இருந்தன.

பின்னர், ஆசிரியர் திருமதி மேரின் இமானுவேல் பாடல்களைப் பற்றிய மதிப்புரையை வழங்கியிருந்தார். எந்தக் குறைகளையும் முன்வைக்காமல் பாடல்களின் சிறப்புகளைத் தொகுத்துக் கூறியிருந்தார்.

தொடர்ந்து, மேலுமிரு பாடல்களை ஒளிபரப்பினார்கள்.

மூத்த கலைஞரான திரு. ஏ.சி. தாசீசியஸ் கருத்துரை வழங்க அழைக்கப்பட்டார். அவர் இந்தப் பாடல்கள் காலத்தின் தேவை எனக் குறிப்பிட்டதுடன், கலைஞர்களையும் வாழ்த்தினார். உண்மையிலேயே பாடல்களை எழுதியவர்களும் பாடியவர்களும் இசையமைத்தவரும் சிறப்பாகவே பங்காற்றியிருந்தனர். அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

‘முத்தமிழே’ என்ற பாடல் தமிழ்மொழி மீதான பற்றை சற்றே வித்தியாசமாக வெளிப்படுத்தியது.

**அறவழிதான் எங்கள் பண்பாட்டு மரபு**
**தமிழ்மொழிதான் எங்கள் செயற்பாட்டு சிறகு**
**புன்னையைத் தமக்கையாய் உறவுக்குள் சேர்த்தோம்**
**செல்லமாய் அவள் தீண்ட அதைச் சொல்லி வியர்த்தோம்**

என்ற வரிகள் பாடலின் சிறப்புக்கு எடுத்துக்காட்டு. இதை பாவலர் அறிவுமதி எழுதியிருக்கின்றார். ஸ்ரீவர்த்தினி இப்பாடலைப் பாடியிருக்கின்றார்.

‘தமிழர் திருநாள் கொண்டாடுவோம்’ என்ற பாடல் பொங்கல் விழாவின் பெருமையையும் தமிழை பேணிக் காக்கவேண்டிய தேவையையும் உணர்த்தியது. பாடலை திரு. வசீகரன் சிவலிங்கம் எழுதியிருக்கின்றார். பாடகர் முகேஷ் பாடியிருக்கின்றார்.

‘தமிழழும் நிலமும் பேரழகே’ என்ற பாடல், தமிழர் தமது மரபுகளையும் இனத்தையும் பேணிச்செல்ல வேண்டிய அவசியத்தை வெளிப்படுத்தவதாக அமைந்தது. இந்தப்பாடலை கவிஞர் பொன்னையா விவேகானந்தன் எழுத, கனடியத் தமிழரான இளம் பாடகி சின்மயி சிவகுமார் பாடியுள்ளார்.

கனடாவில் வாழும் எழுத்தாளரான தமிழ்நதி ‘பொங்குக இனமே பொங்குக சனமே’ என்ற பாடல் தாயக அழகையும் நினைவுகளையும் ஒருங்கிணைத்துச் சிறப்பாக ஒலித்தது. இப்பாடலை பாடகர் வி.எம். மகாலிங்கம் பாடியிருக்கின்றார்.

‘ஓயமாட்டோம் ஓயமாட்டோம்’ என்ற பாடல் தாயக மண்ணின் தேவைகளையும் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புகளையும் உணர்த்துவதாக அமைந்திருந்தது. இப்பாடலைத் திரு.பவன் பாடியிருக்கின்றார்.

இந்த பாடல்களுக்கு இசையமைத்தவர் திரு. விக்டர் உதயா. ஐந்து பாடல்களையும் ஒன்றின் சாயல் மற்மொன்றில் இல்லாதவாறு சிறப்பாக இசையமைத்திருந்தார் என்றே கூற வேண்டும். அனைத்துமே ஆடலுக்குரிய பாடல்களாக அமைந்திருந்தன.

நிறைவில், திரு. ரவீன் விநாயகமூர்த்தி நிறைவுரை ஆற்றினார். கவிஞர் வசிகரன் தன் கருத்துகளையும் பகிர்ந்துகொண்டார். கந்தசாமி சங்காதரன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

ஐந்து பாடல்களில் நான்கு பாடல்களுக்கு ஆடல்களை உருவாக்கியிருந்தார்கள். எல்லாமே வெளிப்புறப் படப்பிடிப்புகளாக இருந்தன. கனடாவில் இயங்கும் கலாசேதிரா நுண்கலைக் கூடம், சுவிற்சலாந்தியல் இயங்கும் கண்ணகை பரதாலயம், பிரித்தானியாவில் இயங்கும் நர்த்தனா கலாலயம் ஆகிய நடனப் பள்ளிகள் இந்த படல்களுக்கான ஆடல்களை வழங்கியிருந்தன.

உண்மைலேயே பாடல்களின் வரிகளும் இசையும் பாடியவர்களின் குரல்களும் சிறப்பாக இருந்தன. இந்தப் பாடல்கள் காலத்தின் தேவை என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

# BUYING OR SELLING

## Residential, Commercial, Land & Investment Properties

**For Sellers:**

- Free Market Evaluation Available
- Competitive Commission Packages Available
- Will pay for Staging & Condition
- Will pay the Professional Photographer
- Virtual Tour
- Color Brochure
- Will do open house until house get sold
- Will market your home with social medias

SATHY & NITHY REAL ESTATE TEAM



**For Buyers:**

- Will find the home in any area within your budget
- Get you the lowest mortgage. rate

**NITHY SATHYAKUMAR**
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com

**SATHY SIVASUBRAMANIAM**
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com

16th Avenue / 9th Line $1,550



FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1

Morningside / Finch $1,200



FOR LEASE BEDROOMS:1+1 WASHROOMS:1

Pharmacy Ave/Lawrence Ave $1,600



FOR LEASE BEDROOMS:3 WASHROOMS:1

Victoria Park / Ellesmere $2,000



FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1

Rossland/Wilson $599,900



FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2

Crowder Blvd / Leslie St $549,900



FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:2

Simcoe/Britannia $509,000



FOR SALE BEDROOMS:4 WASHROOMS:3

Yonge/Front $659,000



FOR SALE BEDROOMS:1+1 WASHROOMS:1

King/Blue Jays $699,000



FOR SALE BEDROOMS:1 WASHROOMS:1

Lawrence Ave E/Orton Park $699,000



FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3

Finch / Victoria Park $759,000



FOR SALE BEDROOMS:3 WASHROOMS:2

Hoover Park/Tenth Line $769,900



FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3

Brock/Hwy 2 $799,000



FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4

Dufferin/Summeridge $889,000



FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4

Markham/Sheppard $799,000



FOR SALE BEDROOMS:4+2 WASHROOMS:3

Pharmacy/N.Eglinton $838,000



FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2

RE/MAX Remax Realtron Realty Inc., Brokerage
Bus: 905 470 9800

Web: realtorsathy.com

# கர்நாடக சங்கீதமும் தமிழிசையும் II

- மைதிலி தயாநிதி

## முன்னுரை:

இக்கட்டுரை 2021 ஏப்பிரல் மாத 'தாய்வீடு' இதழில் வெளிவந்த 'கர்நாடக சங்கீதமும் தமிழிசையும்' என்ற கட்டுரையின் தொடர்ச்சி யாகும். கர்நாடக சங்கீதம் என வழங்கப்படும் தென்னிந்திய சங்கீ தத்திற்கும், சாதிக்குமிடையில் உள்ள தொடர்பினை ஆராயும் Yoshitaka Terada எனும் ஜப்பானிய புலமையாளர் 2008ம் ஆண்டு எழுதிய Tamil Isai as a Challenge to Brahmanical Music Culture in South India (Senri Ethnological Studies 71: 203-226) என்ற தலைப்பிட்ட கட்டுரையின் சில பகுதிகளைத் தமிழில் மொழிபெ யர்ப்பதன் மூலம், அக்கட்டுரை கூறும் முக்கிய விடயங்களை அறிமுகம் செய்வதே எனது நோக்கமாகும் என்று ஏலவே குறிப்பிட் டிருந்தேன்.

சென்ற மாதக் கட்டுரையில் எவ்வாறு பிராமணர்கள் இருபதாம் நூற்றாண்டின் முற்கூற்றில் தென்னிந்திய சங்கீதத்தைத் தமது சுய அடையாளத்தை வரையறுக்கும் வகையில் கட்டமைக்கும் நோக்கு டன், அவ்விசை மரபின் வரலாற்றினை வடமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்டும், ஆற்றுகையினை (performance) வடமொழி, தெலுங்கு வாக்கேயகாரர்களின் (composers) உருப்படி களை (compositions) மையமாகக் கொண்டும் மீளுருவாக்கம் செய் தனர் என்பதைப் பார்த்தோம். இக்காலகட்டத்தில் பிராமணரல்லா தார் மத்தியில் தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு குறித்த பெருமித உணர்வு தலையெடுக்கத் தொடங்கியிருந்தது.

'தமிழ் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த ஆதி மொழி வட மொழியின்றித் தனித்தியங்க வல்லது' என்பவற்றை உணர்த்திய கால்ட்வெல் அவர்களின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூல் 1856ல் வெளிவந்தமையும், பத்தொன்பதாம் நூற்றாண் டின் இறுதியில் சங்கநூல்கள் 'மீள் கண்டுபிடிப்புச்' செய்யப்பட்டு, அச்சுவாகனம் ஏற்றப்பட்டமையும், அந்நூல்களை ஆதாரமாகக் கொண்டு தமிழ்ப் பண்பாட்டின் வரலாறு எழுதப்பட்டமையும் தமி ழின் தொன்மையையும், தனித்துவத்தையும் நிலைநாட்டின. வட மொழி நூல்களையும் வடமொழி, தெலுங்குக் கீர்த்தனைகளையும் மட்டும் மையமாகக் கொண்டு தென்னிந்திய சங்கீதத்தின் வரலாறு புனைதலை எதிர்ப்பதற்கான வலுவான அடிப்படை அம்சங்க ளைப் பிராமணரல்லாதாருக்கு இவை வழங்கின. 'அரசவை இசை யாக' இருந்த தென்னிந்திய சங்கீதம் பின்னர் சென்னைப் பட்டினத் தில் 'சபா சங்கீதமாக' மறு அவதாரம் எடுத்ததில் 1928ம் ஆண்டு தாபிக்கப்பட்ட சங்கீத வித்வத் சபைக்குப் பிரதான பங்குண்டு. சங்கீத வித்வத் சபையினால் வடிவமைக்கப்பட்ட 'கச்சேரி' எனும் இசையாற்றுகையின்போது, தெலுங்கு, வடமொழிக் கீர்த்தனைகள் பிரதான உருப்படிகளாகப் பாடப்பட்டன. இறுதியில் பாடப்பட்ட 'துக்கடா' எனும் வகையறாவில் தமிழ்ப் பாடல்கள் ஏனைய மொழிப் பாடல்களுடன் உள்ளடக்கப்பட்டுப் பாடப்பட்டன. கச்சேரிகளில் தமிழ்க் கீர்த்தனைகளுக்கு உரிய இடம் கொடுக்கப் படாமை குறித்து பிராமணரல்லாதார் ஆட்சேபணை எழுப்பினர். கச்சேரிகளில் பிறமொழிப் பாடல்களுக்குப் பதிலாக, தமிழ்ப் பாடல்களுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த தமிழிசை இயக்கத்திற்கான எதிர்ப்பு சங்கீத வித்வத் சபையிலிருந்தும், அதனுடன் தொடர்புற்றிருந்த பிராமணர்களிடமிருந்தும் எழுந்தது. தமிழிசைக்கு எதிராக சங்கீத வித்வத் சபை முன்வைத்த வாதங்கள், அவற்றுக்கான தமிழிசையா ளர்களின் மறுப்புரைகள் பற்றியும் விரிவாகப் பார்த்தோம். அதே சமயம், பிராமண சமூகத்தைச் சேர்ந்த சில வித்துவான்களும், இர சிகர்களும் கூடத் தமிழிசை ஆதரவாளர்களாக விளங்கினர் என்ப தையும் இங்கு நினைவிற் கொள்ளல் வேண்டும்.

மேலும், தமிழிசை இயக்கத்தின் நோக்கம் நிறைவேறியுள்ளதா எனும் கேள்வியை எழுப்பிய கட்டுரையாளர் Terada 1990களில் மார்கழி மாதம் நடைபெற்ற இசைக் கச்சேரிகளில் தமிழ்க் கீர்த்த னைகள் அதிகம் இசைக்கப்படுகின்றன என்று சொல்லவியலாது என்ற முடிவிற்கு வருகின்றார். இவ்விடயத்தில் அரச இசைக் கல் லூரியின் நிலையும் அதிகம் வேறுபட்டிருக்கவில்லை. திருப்பாம் புரம் சண்முகசுந்தரம் கல்லூரி அதிபராக இருந்த காலகட்டத்தில் பாடவிதானத்தில் தமிழ்க் கீர்த்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது எனினும், அவர் இளைப்பாறியபின்னர் அந் நிலை மாறிவிட்டது. 1990களில் நிகழ்ந்த ஒரே ஒரு சாதகமான விட யம் என்னவெனில், சங்கீத வித்வத் சபையுடன் நெருங்கிய புல மைத்துவத் தொடர்புகளைப் பேணி வந்த சென்னைப் பல்கலைக் கழகம், தமிழிசைக்குப் பிரதான இடம் அளிக்கத் தீர்மானித்து, அந்நோக்கத்திற்கமையச் செயலாற்றத் தொடங்கியமையாகும். எனினும், தமிழிசையின் சமகாலப் போக்குக் குறித்த ஓர் அதி ருப்தியானது, 1980களின் பிற்பகுதியிலே நிலவத் தொடங்கிற்று எனலாம். இதற்கான அரசியல், சமூகவியற் காரணங்களை Terada குறிப்பிடவில்லை. 1990களில் வலுப்பெற்ற தமிழ் தலித்தியத்தின் எழுச்சியின் பின்னணியிற்றான் தமிழிசை குறித்த புதிய சிந்தனை-களைப் பார்த்தல் வேண்டும் என்று எண்ணுகிறேன்.

இனி, பிராமணிய சங்கீத கலாசாரத்திற்கு எதிரான புதிய தீவிர வாதம், வரலாற்றை மீள எழுதுதல், இறுதிக் குறிப்புகள் எனும் மூன்று உப தலைப்புகளில் Terada தனது கட்டுரையில் கூறுவன வற்றைச் சுருக்கமாக நோக்கலாம்.

### பிராமணிய சங்கீத கலாசாரத்திற்கு எதிரான புதிய தீவிரவாதம்:

தனது கட்டுரையில் இத்தலைப்பின் கீழ் Terada 1990களில் பிரா மணிய சங்கீதப் பண்பாட்டிற்கு எதிராகத் தோன்றிய இரு அமைப் புகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். ஒன்று, மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றையது தந்தை பெரியார் இசை மன்றம். இவ்விரண்டு அமைப்புகளுமே தமிழ்நாட்டுச் செவ்வியல் இசைத் துறையில் பிராமணிய ஆதிக்கத்தை எதிர்ப்பவை. கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளுள் ஒருவரான தியாகராஜர் சமாதி அடைந்த நாளை நினைவு கூருமுகமாக 1908ம் ஆண்டு முதல் திருவை யாற்றில் வருடந்தோறும் தியாகராஜ ஆராதனை விழா நடை-பெற்று வருகிறது. இவ்விழாவில் சங்கீத வித்துவான்கள் பங்கேற்று தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகளைப் பாடுவது வழக்கம். 1997ல் நடைபெற்ற 150வது தியாகராஜ ஆராதனை உற்சவத்தின் போது, மக்கள் கலை இலக்கியக் கழகம் 'தமிழில் பாடு' என்ற பதாகையுடன் அங்கு நுழைந்தது. 'தமிழ் நாட்டில் தமிழிற்றான்




இசை பாடப்படல் வேண்டும். தியாகராஜ கீர்த்தனைகள் தமிழில் மொழிபெயர்க்கப்படல் வேண்டும்' என்பவை கழகத்தின் கோரிக்கைகளாக இருந்தன. ஆராதனையைக் குழப்பிய மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் நோக்கம் தியாகராஜரின் இசையை எதிர்ப்பதன்று. அவரது இசையானது தமிழிசையிலிருந்தே பிறந்தது என்பதே கழகத்தின் நிலைப்பாடு. ஆனால், தமிழ் பேசும் பிரதேசங்களில் தமிழல்லாத பிற மொழிகளில் பாடுவதை முழுமையாக ஒழித்தல் வேண்டும் எனும் நோக்கில் கழகம் செயற்பட்டு வருகிறது.

'தியாகராஜரின் இசையானது சாதி, மொழி என்பவற்றுக்கு அப்பாற்பட்டது' என தியாகராஜ ஆராதனைக் குழு அறிவித்திருப்பினும், அவ்விழா நடைமுறைகளான பிராமணருக்கும், பிராமணரல்லாதாருக்கும் வெவ்வேறு இடங்களில் உணவு அளிக்கப்படுகின்றமை, பாடுவதற்கு வெவ்வேறு இடம் அளிக்கப்படுகின்றமை என்பன நெடுங்காலமாகப் பிரச்சினைக்குரிய விடயங்களாகவே பிராமணரல்லாதாரால் பார்க்கப்பட்டு வந்துள்ளன. 1939ற்தான் முதன் முறையாக நாதஸ்வர வித்துவான்களுக்கு மேடையிலிருந்து வாசிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. 1952ல் தமிழிசை ஆதரவாளரான தண்டபாணி தேசிகர் தியாகராஜ ஆராதனையின்போது தியாகராஜரின் கீர்த்தனைகளையே பாடினார் எனினும், தாம் மேற்கொண்ட வழக்கத்திற்கேற்ப கச்சேரியைத் தமிழிற் தொடங்கியதுடன், பின்னர் இறுதியிலும் தமிழிற் பாடிக் கச்சேரியை நிறைவு செய்தார். அதன் பின்னர் 'தமிழிற் பாடியமையால் மேடையின் புனிதம் கெட்டது' என்று அவர் கச்சேரி செய்த மேடை நீரூற்றிக் கழுவிப் புனிதமாக்கப்பட்டது என்று காளியப்பனின் 'தமிழில் பாடுவது தகுதிக் குறைவானதா?' (1999) என்ற கட்டுரையையும், இளங்குமரனின் 'தமிழிசை இயக்கம்' (1993) எனும் நூலையும் ஆதாரங்களாகக் கொண்டு Terada குறிப்பிடுகின்றார்.

இரண்டாவது அமைப்பு, தந்தை பெரியார் கொள்கையினால் ஈர்க்கப்பட்ட என். அருணாசலம் என்பவரால் சென்னையில் தாபிக்கப்பட்ட 'தந்தை பெரியார் இசை மன்றம்' ஆகும். இசைத்துறையில்

பிராமணரின் ஏகபோக உரிமையையும், அவர்கள் பிராமணரல்லாத வித்துவான்களை ஒடுக்குவதையும் பெரியார் கண்டித்ததுடன் மட்டுமன்றி, 1930ல் ஓர் இசை விழாவையும் நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. பிராமணிய பண்பாட்டு மேலாண்மையின் வெளிப்பாடான கர்நாடக இசையில் பிராமணரின் ஏகபோக உரிமையும், தமிழிசைச் சங்கத்தின் பிரதான பதவிகள் பிராமணர் வசம் சென்றமையும் ஈழ விடுதலை இயக்க ஆதரவாளரான அருணாசலத்திற்கு அதிருப்தி அளித்தமை, அவர் 'தந்தை பெரியார் இசை மன்றம்' தாபிப்பதற்கான உந்துசக்தியானது. இம் மன்றத்தின் முதன்மையான செயற்பாடு சென்னையில் நிகழும் அதன் ஆண்டு விழா ஆகும். ஆனால் இங்கு சங்கீத வித்வத் சபையில் அல்லது தமிழிசைச் சங்கத்தில் நடைபெறும் கச்சேரிகளில் பாடப்படும் பாடல்கள் பாடப்படுவதில்லை. ஏனெனில் மொழியில் மட்டுமல்ல, பாடல் உள்ளடக்கத்திலும் கட்டுப்பாடுண்டு. பெரியாரின் பகுத்தறிவுவாதத்தை இவ்வமைப்பு ஆதரிக்கின்ற காரணத்தால் தமிழிசைச் சங்கத்தில் பாடப்படும் தமிழிற் பாடப்படும் பெரும்பாலான பாடல்கள் இங்கு தவிர்க்கப்படுகின்றன. தமிழ் மொழியின் அழகை, தமிழ்ப்பண்பாட்டின் பெருமையைப் பேசும் அல்லது தமிழிற்கு எதிரான செயற்பாடுகளைக் கண்டனம் செய்யும் பாடல்கள்தாம் பாடப்படுகின்றன. இங்கு பாடப்படும் பாடலுக்கு நல்ல உதாரணம் காசி ஆனந்தனின் 'தமிழா நீ பேசுவது தமிழா' என்பதாகும். தந்தை பெரியார் இசை மன்றம் முன்னெடுத்துள்ள 'தமிழிலுள்ள பிற மொழிச் சொற்களை நீக்குதல்' எனும் செயற்பாடானது முக்கியமானது. கர்நாடக சங்கீதத்திலுள்ள பல வடமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ப் பதங்களை அவ்வமைப்பு உருவாக்கியுள்ளது.

## வரலாற்றை மீள எழுதுதல்:

தமிழிசை இயக்கத்தைச் சேர்ந்த பலர் கர்நாடக சங்கீதம் என்பது தமிழிசையே என்றும், அவ்விசையானது பிராமணர்களால் படைக்கப்பட்டு, கடத்தப்பட்ட இசை என்ற தோற்றத்தை உருவாக்கவே கர்நாடக சங்கீதம் எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது என்றும் நம்புகின்றனர். தென்னிந்தியாவில் தோன்றிய உன்னத வாக்கேயகாரர்களில் தியாகராஜர் ஒருவர் என்பதில் தமிழிசை இயக்கத்தினர் ஐயம் கொள்வதில்லை. உண்மையில் தமிழிசை இயக்கத்தின் தாபகரான அண்ணாமலைச் செட்டியார் உட்பட, பிராமணரல்லாத வித்துவான்கள், இரசிகர்கள் அனைவரும் தியாகராஜரின் இசை இரசிகர்களாகவே இருந்துள்ளனர்.

தியாகராஜர் சொண்டி வெங்கட ரமணய்யாவிடம் சங்கீதம் கற்ற விடயம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர் வாழ்க்கைச் சரிதத்தில் இடம்பெற்றுள்ளது. ஆனால் இது குறித்து இசைவேளாளர்கள் ஐயம் தெரிவிக்கின்றனர். இசை வேளாளர் குலத்தைச் சேர்ந்த பல வித்துவான்கள் தமது குல முன்னோரின் இசையே தியாகராஜரிடத்து செல்வாக்குச் செலுத்தியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். திருவையாற்றிலுள்ள நாதஸ்வர வித்துவான்களிடமிருந்தே பெரும்பாலும் தியாகராஜர் இசையறிவினைப் பெற்றுக் கொண்டார் என்று அவர்கள் கூறுகின்றனர். மேலும், முத்துஸ்வாமி தீட்சிதர் பிராமணரல்லாதவர்கட்கு இசை கற்பித்தார். தீட்சிதரிடம் அம்மாணவர்களின் இசைப் பாரம்பரியத்தின் செல்வாக்கு உண்டு என்று பிராமணரல்லாத வித்துவான்கள் நம்புகின்றனர். ஆனால், சங்கீத வித்வத் சபையுடன் தொடர்புடைய ரி.எல். வெங்கட ராமையர், வி.ராகவன் போன்றோரின் கட்டுரைகளில் இவ்விடயம் பேசாப்பொருளாகவே இருக்கின்றது. (அதாவது இராகசங்கீதத்தினைப் பரம்பரை பரம்பரையாகப் பேணிவந்த இசை வேளாளர்களிடம் சங்கீத மும்மூர்த்திகள் எவ்வளவு தூரம் கடன்பட்டுள்ளனர் என்ற விடயம் பிராமணப் புலமையாளர்களினால் பேசப்படவில்லை என்று Terada கூறுகிறார்.)

மேலும், தென்னிந்திய சங்கீதத்தின் சிற்பியர் தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் எனும் மும்மூர்த்திகள் மட்டுமே என்ற கருத்தினைத் தமிழிசை இயக்கம் எதிர்க்கின்றது. இசையில் பிராமண ஆதிக்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திருவாரூர் மூவர் அல்லது சங்கீத மும்மூர்த்திகள் எனும் கருத்தாக்கத்திற்குச் சவால் விடும் வகையில் இவர்களிற்கு முன்னர் 16ம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்த சீர்காழியைச் சேர்ந்த முத்துத்தாண்டவர், மாரிமுத்தா பிள்ளை, அருணாசலக் கவிராயர் எனும் பிராமணரல்லாத மூன்று இசையாளர்களை 'சீர்காழி மூவர்' அல்லது 'தமிழிசை மூவர்' என்று தமிழிசை இயக்கத்தினர் கொண்டாடுகின்றனர். சங்கீதவித்வத் சபையினதும், பிராமணர் கட்டுப்பாட்டில் இருக்கும் ஏனைய சங்கங்களினதும் கேட்போர் கூடத்தை தியாகராஜர் முதலிய திருவாரூர் மும்மூர்த்திகளின் படங்கள் அலங்கரிப்பது போன்று, தமிழிசைச் சங்கத்தின் கேட்போர் கூடத்தினை சீர்காழி மூவரின் படங்கள் அலங்கரிக்கின்றன.

## இறுதிக்குறிப்புகள்:

பிராமணியத்தை மையமாகக் கொண்ட இசைப்பண்பாட்டை சங்கீத வித்வத் சபை பேணுவதையும், அதற்கு எதிராக பிராமணரல்லாதார் அமைப்புகள் வெவ்வேறு செயற்பாடுகள் (வெளியீடுகள், உரைகள், மாநாட்டுத் தீர்மானங்கள், உருவப்படங்கள், திருவிழாக்கள் மற்றும் இசைக் கல்லூரிகளை நிறுவுதல்) மூலமாகத் தங்கள் எதிர்ப்பைக் காட்டியுள்ளமையும் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டது. ஒவ்வொரு அமைப்பும் குறிப்பிட்ட வரலாற்றுணர்வைத் தோற்றுவித்து அதைப் பரப்புவதில் நாட்டம் கொண்டிருந்தது.

பிராமணரைப் பொறுத்தவரையில், தமக்கெனச் சொந்தமான, ஒரு சங்கீதப் பண்பாட்டைப் படைப்பதும், பராமரித்தலும், இருபதாம் நூற்றாண்டில் அவர்களுக்கு எதிராகத் தோன்றிய சமூக அரசியல் இயக்கங்களால் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட பண்பாட்டு அடையாளத்தைப் பேணுவதற்கு முக்கியமானதாகும். அதே சமயம் பிராமணரல்லாத பலருக்கு 'தமிழிசை இயக்கம்' என்பது பிராமணர்களினால் மறுக்கப்பட்டது அல்லது களவாடப்பட்டது என நம்பப்படும் அவர்களுக்கே சொந்தமான இசையின் வரலாற்றினை மீளுரிமை கோரும் விருப்பத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துவது. பிராமண வாக்கேயகாரர்களை ஆதாரமாகக் கொண்டும், பிராமணரல்லாதாரின் பங்களிப்பினை முற்றாக நிராகரித்தும் தென்னிந்திய சங்கீதத்தின் பிம்பத்தினை பிராமணப் புலமையாளர்கள் கட்டமைத்துள்ளனர் என்று பிராமணரல்லாதார் கூறுகின்றனர். மிதமான போக்கை அனுசரிக்கும் தமிழிசைச் சங்கமும், தீவிர போக்கினைக் கடைப்பிடிக்கும் மக்கள் கலை இலக்கியக் கழகம், தந்தை பெரியார் இசை மன்றம் என்பவையும் தமிழிசையைப் பிரபலப்படுத்தும் உத்திகளில் தமக்கிடையே வேறுபடலாம். ஆனால் அந்த அமைப்புகள் அனைத்துமே பிராமணரல்லாதார் படைத்துப் பேணிவளர்த்த இசை, நடன மரபுகளை பிராமணர்கள் தங்களுக்குரியதாக்கிக் கொண்டனர் எனும் உணர்வின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன.

இறுதியாக, தமிழிசை தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வது என்பது, வலுவான, ஆதிக்கம் செலுத்தும் கர்நாடக சங்கீதம் தொடர்பான கருத்துநிலையின் இறுக்கமான பிடிகளிலிருந்து பிறநாட்டாய்வாளர்களான எம்மை விடுவிக்கின்றது என்று Terada கூறுகின்றார். தென்னிந்திய இசையில் ஆர்வம் கொண்ட வெளிநாட்டுப் புலமையாளர், மாணவர் என்பவர்களுக்கு நுழைவாயிலாக, தென்னிந்தியாவிற்கு வெளியே நன்கறியப்பட்ட இசை நிறுவனங்களில் ஒன்றான சங்கீத வித்வத் சபை, மதராஸ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து திகழ்கின்றது. எளிதில் அணுகக்கூடியதாக இருக்கின்றமை, கட்டுரைகளில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றமை என்பன காரணமாக இந்தியரல்லாத ஆய்வாளர்களுக்குப் பிராமணப் புலமையாளர்களும் வித்துவான்களும் நன்கு விரும்பத்தக்க கூட்டுப்பணியாளர்கள் (collaborators) ஆகிவிட்டனர். இதனால் இந்தியரல்லாத ஆய்வாளர்கள் பிராமணியக் கண்ணோட்டங்களை உள்வாங்கியிருக்கும் சாத்தியங்கள் உண்டு ஆதலின், தம்மையறியாமலேயே, அவர்கள் சங்கீத மும்மூர்த்தித் தொன்மத்தினையும் பிராமணிய கருத்தியல் விளக்கத்தினையும் பரப்புதற்குக் கருவிகளாகிவிட்டனர். இதன்மூலம் Terada இந்தியாவிற்கு வெளியே இருக்கும் புலமையாளரையும், மாணவர்களையும் கருத்திற்கொண்டே இவ்வாய்வுக் கட்டுரையை எழுதினார் என்பது புலனாகின்றது.



maithilithayanithy@thaiveedu.com

# இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் சமகாலப் பயன்பாட்டு நிலையும்

6

- கௌசல்யா சுப்பிரமணியன்

தமிழிசை மூவர்களில் ஒருவரான அருணாசலக்கவிராயரின் (கி.பி.1711-1779) கீர்த்தனைகள் பற்றி - குறிப்பாக இராமநாடகக் கீர்த்தனை என்ற நூலாக்கம் பற்றி நோக்கி வருகிறோம். இராமநாடகக் கீர்த்தனைகள் சார்ந்த இசைப்பதிவு முயற்சிகள் பற்றிய பார்வையிலே பாம்பே சகோதரிகளின் பதிவுகள் பற்றி முன்னைய கட்டுரையிலே நோக்கியிருந்தோம். அதனையடுத்து இசைக்கலைஞர் T.N. சேஷகோபாலன் அவர்களின் பதிவு முயற்சிகள் பற்றிய சில தகவல்களும் அங்கு சுட்டப்பட்டன. அவற்றின் ஒலி இணைப்புகளை இங்கு சுட்டுவதுடன் அவரது பதிவுகள் சார்ந்த ஏனைய தகவல்களுடன் இக்கட்டுரை தொடர்கின்றது.

திரு. சேஷகோபாலனவர்களின் தொகுதியாக அமைந்த கீர்த்தனைப்பதிவு ஒலிப்பேழையில் 'முதல் பாடலாக அமைந்த விருத்தம் என்ற பாடற் பகுதியானது மூலநூலாக்கத்தில்'பாயிர'ப்பகுதியில் அமைந்ததாகும். (இராமநாடகக் கீர்த்தனை, ப:25) அப்பாடலின் இணைப்பினைக் கேட்க:

https://www.jiosaavn.com/song/andar-tham-thuyaram/GC4zfUMBfAA

அதனைத் தொடர்ந்தமைந்த 'பாலகாண்ட'ப்பகுதியில் அமைந்த 'அவதாரஞ் செய்திடுவீரே நீங்கள்...' (இராமநாடகக் கீர்த்தனை, பக: 38-39) என்ற கீர்த்தனையின் பாடற் பதிவின் இணைப்பு வருமாறு:

https://www.jiosaavn.com/song/avatharam/ACM4QSdnf3w

இதே கீர்த்தனையினை இசைக்கலைஞர் வேதவல்லியவர்கள் பாடிய பதிவொன்றும் கிடைத்துள்ளது. அப்பதிவு வருமாறு:

https://www.jiosaavn.com/song/avataram/Nl40BRpCe2A

மேற்கூறிய இரு பாடல்களின் விபரங்கள் சென்ற கட்டுரையில் சுட்டப்பட்டுள்ளன.

அடுத்தமைந்த கீர்த்தனையானது 'பரப்பிரம்ம சொருபமே - ஸ்ரீராமன் ஆகப்பாரில் வந்தது பாரும்...' (இராமநாடகக் கீர்த்தனை, பக்: 39-40) என்ற தொடக்கத்தையுடையதாகும். 'பாலகாண்ட'ப் பகுதியில் அமைந்த இதனை சேஷகோபாலன் அவர்கள் நூலிலுள்ளவாறே 'கௌளிபந்து' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் பாடிப் பதிவுசெய்துள்ளார்கள். அதன் ஒலி இணைப்பினைக் கேட்கலாம்:

https://www.jiosaavn.com/song/parabrahma-swaroopame/FgZcezJaGn4

மூன்று சரணங்கள் கொண்ட இக்கீர்த்தனையில் அவர் பாடிய முதற் சரணம் இராமனின் பிறப்பின் நேரம், 'காலம், கிரகநிலை மற்றும் நட்சத்திரம் என்பவற்றினைக் கூறுவதாக அமைந்ததாகும். (இவ்விபரங்கள் 'கம்பராமாயணத்தை அடியொற்றியே அருணாசலக்கவிராயரால் தரப்பட்டுள்ளன.)

மேற்கூறிய கீர்த்தனையின் இரண்டாவது சரணத்தில்பரதன், லட்சுமணன், சத்ருக்கன் போன்றோரின் பிறப்புகள் கூறப்படுகின்றன. மூன்றாவது சரணத்தில் இவர்களின் பிறப்பினால் இராவணன் போன்ற இராட்சதர்களுக்கு வரப்போகும் துன்பங்கள் அவர்களுக்கேற்படும் துர்நிமித்தங்கள் வாயிலாக எடுத்துரைக்கப்படுகின்றன.

அடுத்தமைந்த, 'இராமனைத் தருவாயே ஜகத் ரட்சக ராமனைத் தருவாயே...' என்ற பல்லவித் தொடக்கத்தையுடைய கீர்த்தனையானது கௌசிக முனிவருடைய கூற்றாக அமைந்ததாகும். அவர் தசரத மன்னனிடம் தனது வேள்வியைக் காப்பதற்காக இராமனைத் தன்னோடு அனுப்புமாறு கேட்பதே இதன் உள்ளடக்கமாகும். 'பாலகாண்ட'ப்பகுதியில் அமைந்த இக்கீர்த்தனையானது மோகன இராகத்தில் சாபு தாளத்தில் பாடப்படுவது என்பது இராமநாடகக் கீர்த்தனை நூலில்(பக்: 40-41) இடம் பெறும் தகவலாகும். ஆனால் இதனை 'சிந்துபைரவி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் சேஷகோபாலனவர்கள் பாடியுள்ளார்கள். இக் கீர்த்தனை நான்கு சரணங்கள் கொண்டதாகும். இரு அடிகள் கொண்ட சரணங்கள் நான்கில் இரண்டாவது சரணமும் நான்காவது சரணமுமே பாடப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். இக்கீர்த்தனையின் ஒலிவடிவ இணைப்பினைக் கேட்க:

https://www.jiosaavn.com/song/ramanai-tharuvaye/SSkSBgJBBEo

இக்கீர்த்தனையை நூலில் உள்ளவாறு 'மோகன' இராகத்தில் ஸ்ரீமதி நித்தியஸ்ரீ அவர்கள் பாடியுள்ளார். அதன் ஒலி இணைப்பினையும் இங்கு பதிவு செய்ய விழைகிறேன்.

https://youtu.be/GI-7ofPyCgc

திரு சேஷகோபாலனவர்களின் பதிவிலுள்ளவாறான இராக தாள அமைப்பில் மேற்படி கீர்த்தனையை இசைக்கலைஞர் சந்தான கோபாலன் அவர்களும் பாடியுள்ளார்கள். இதிலே முதற் சரணமும் நான்காவது சரணமும் பாடப்பட்டுள்ளன. (அமுதம் மியூசிக் வீடியோஸ்) அதன் இணைப்பினையும் கேட்க:

https://youtu.be/EXTNWqUhB0c

'ஆரோ இவர் ஆரோ என்ன பேரோ அறியேனே...' என்ற தொடக்கத்தையுடைய அடுத்தமையும் கீர்த்தனை இராமர் கூற்றாக அமைந்ததாகும். மிதிலையில் சீதையை முதல் முதலில் கண்ட பொழுது அவருக்கேற்பட்ட 'உளக்கிளர்ச்சி'யே இப்பாடலில் வெளிப்படுத்தப்படுகிறது. 'பாலகாண்ட'ப்பகுதியில் அமைந்த இக்கீர்த்தனையானது சாவேரி இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்ததாகும். (இராமநாடகக் கீர்த்தனை, 'பக்: 46-47) இக்கீர்த்தனையை பம்பே சகோதரிகள் பைரவி இராகத்தில் பாடியுள்ளதனை முன்னைய கட்டுரையில் நோக்கியுள்ளோம். ஆனால் திரு. சேஷகோபாலனவர்கள் இதனை நூலிலுள்ளவாறே சாவேரி இராகத்தில் ஆதி தாளத்தில் பாடியுள்ளார். இதனை இணைப்பினில் கேட்க:

https://www.jiosaavn.com/song/yaaro-ivar-yaaro/QwQuQBdkcFA

இதன் மூன்று சரணங்களில் 'சந்திரவிம்ப முக மலராலே...' என்ற தொடக்கத்தையுடைய மூன்றாவது சரணமே பாடப்டுவது பொது வழக்காகும். இச்சரணத்திலமைந்த 'அந்தநாளில் சொந்தம் போலே உருகிறார் இந்த நாளில் வந்து சேவை தருகிறார்...' என வரும் இறுதி இரு அடிகள் சீதை இராமனுக்காகவே பிறந்தவள் என்பதான புராணச் செய்தியை நினைவுக்கிட்டு வருவது போல் அமைந்ததாகும்.

திரு சேஷகோபாலனவர்களின் பதிவிலுள்ள ஐந்தாவது கீர்த்தனையானது கௌசிக முனிவர் ஜனகமகாராஜன் சபையில் இராமனை அறிமுகம் செய்யும் வகையில் அமைந்ததாகும். இது 'ஆர் என்றெண்ணாமலே நாளும் இவன் அதிசயங்களைச் சொல்லக்கேளும்...' என்ற தொடகத்தையுடையதாகும். (இராமநாடகக் கீர்த்

தனை, பக்:47-48) 'பாலகாண்ட'ப்பகுதியில் அமைந்த இக்கீர்த்தனையானது நூலிலுள்ளபடியே 'சங்கராபரண' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் பாடப்படுகிறது. மூன்று சரணங்கள் கொண்டமைந்ததாகும், இது. இராமலக்ஷ்மணர்கள் தசரத மன்னருக்குப் புத்திர காமேஷ்டி யாகத்தின் பயனாகப் பிறந்தவர்கள் என்பதும் அரக்கரால் யாகத்திற்கு ஏற்படவிருந்த இடையூறுகளைத் தடுத்துக் காத்தவர்கள் என்பதும் இராமன் அகலிகை சாபத்தை நீக்கியவன் என்பதுமான செய்திகளை இச்சரணப்பகுதி விரிவாக எடுத்துரைக்கிறது. நீண்டமைந்த இம் மூன்று சரணங்களில் மூன்றாவது சரணமே பெரிதும் பாடப்படுகிறது. அதன் ஒலியிணைப்பினைக் கேட்க:

https://www.jiosaavn.com/song/yaar-endrennamale/PwpTUkYHAVA

அடுத்தமையும் ஆறாவது பதிவாக அமைந்த கீர்த்தனை இராமனின் மணக்கோலக் காட்சி பற்றிய வருணனையாக அமைந்ததாகும். இது, 'ராமசாமி கொண்ட கோலம் - என்னாலே சொல்லப் போமா...' என்ற தொடக்கத்தையுடையது. (இராமநாடகக் கீர்த்தனை, பக்: 54-55) 'பாலகாண்ட'ப்பகுதியில் அமைந்த இக்கீர்த்தனையானது 'அசாவேரி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் பாடப்படுவதென்பது மேற்படி நூல்தரும் குறிப்பாகும். ஆனால், திரு சேஷகோபாலன் பதிவில் இது 'காபி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் பாடப்பட்டுள்ளது. மேற்படி மூன்று சரணங்களில் முதற்சரணம் மட்டுமே பாடப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இதன் ஒலிவடிவ இணைப்பினைக் கேட்க:

www.jiosaavn.com/song/ramaswamy-konda-kolam/G1kcAjxhGgM

இதனையடுத்து இடம்பெற்றுள்ள கீர்த்தனையானது 'சோபனம்' என்ற வகைமை சார்ந்ததாகும். சோபனம் என்பது பொதுவாக மங்கல வாழ்த்தாக அமையும் பாடலாகும். நவராத்திரி நாட்களில் 'லலிதாம்பாள் சோபனம்' வாசிப்பது இந்து மக்கள் வாழும் பல இடங்களில் வழக்காக உள்ளதாகும். தேவர்களுக்குத் துன்பம் விளைவித்த பண்டாசுரனை வதைக்கத் தோன்றிய லலிதாம்பாளின் அவதாரமும் பின்னர் அவளுக்கு நடைபெறும் திருமண வைபவமும் நிறைவாக தேவர்கள் சுபமாக வாழ்வதும் நவராத்திரி நாட்களில் 'லலிதா சோபன'மாகப் பாடப்படுவது வழக்கமாகும்.

இங்கே இராமர்-சீதை திருமணத்தின் வாழ்த்தாக இச்சோபனம் பாடப்படுகிறது. 'சோபனம் சோபனம் ராம சுவாமிக்கும் சீதைக்கும்...' எனத் தொடங்கும் இக்கீர்த்தனை 'மத்தியமாவதி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் அமைந்ததாகும். (இராமநாடகக் கீர்த்தனை, பக்: 58-59) 'பாலகாண்ட'ப் பகுதியில் அமைந்த இக்கீர்த்தனையானது மேற்படி நூலிலுள்ளவாறான இராக தாள முறைமை கொண்டு சேஷகோபாலனவர்களால் பாடப்பட்டுள்ளது. இணைப்பினில்க் கேட்க:

www.jiosaavn.com/song/shobhanam-shobhanam/Ly5TAjx TX1s

மேற்படி கீர்த்தனை சோபனப் பாடலாக அமைந்த தோடல்லாமல் 'முத்திரை'ப் பாடலாகவும் அமைந்த சிறப்பினைப் பெறுகிறது. பாடலை இயற்றிப் பாடியவரின் பெயர் கீர்த்தனையில் இடம்பெறும் நிலையில் அக்கீர்த்தனையை முத்திரைக் கீர்த்தனை என்பது வழக்கம். அவ்வாறு இராம நாடகத்தை இயற்றிப் பாடிய அருணாசலக்கவிராயரின் பெயர் இக்கீர்த்தனையில் இடம்பெறுவதைக் காணலாம். இதனைத் தோற்றுவாய் செய்தவர் சமயக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரேயாவர்.

திரு சேஷகோபாலனவர்களின் பதிவில் அடுத்து இடம்பெறும் இரு கீர்த்தனைகள் 'அயோத்தியா காண்ட' கதையம்சம் சார்ந்தவையாகும். இராமநாடகத்தில் 'அயோத்தியாகாண்ட'ப் பகுதி இராமரின் முடிசூட்டு விழாவிற்கு அயோத்தி விழாக்கோலம் பூணுதலுடன் ஆரம்பிப்பதாகும். பின்னர் கூனியின் சதித்திட்டத்தினால் அவ்விழா தடைப்படுதலும் இராமர் காட்டுக்குச் சீதை மற்றும் இலக்ஷ்மணனுடன் செல்தலுமே இக்காண்டத்தின் முக்கிய கதையம்சமாகும். இக்கதையம்சத்தின் சில உணர்ச்சிகரமான தருணங்களைக் காட்சிப்படுத்தும் முறையிலேயே இப்பகுதிக் கீர்த்தனைகள் பாடப்பட்டுள்ளன. இக்கீர்த்தனைகளில் முக்கியமான சில வருமாறு:

அ) 'ராமனுக்கு மன்னன் முடி...' ஆ), 'எப்படி மனம் துணிந்ததோ சாமி...', இ) 'இங்கே இருங்காணும்...'

மேற்படி முதலிரு கீர்த்தனைகளின் விபரங்கள் பம்பே சகோதரிகள் பாடிய பதிவுகள் பற்றிய பகுதியில் ஏற்கெனவே (சென்ற கட்டுரையில்) நோக்கப்பட்டுள்ளன. திரு. சேஷகோபாலனவர்கள் பாடிய இவ்விரு கீர்த்தனைகளினதும் ஒலிவடிவ இணைப்புகளைக் கேட்க:

https://www.jiosaavn.com/song/ramnukku-mannar-mudi/QS89UEJZBGo

https://www.jiosaavn.com/song/eppadi-manam/GS4aUgVUY1o

மேற்குறித்த இரண்டாவது கீர்த்தனையை இசைக்கலைஞர் சிக்கில் குருசரண் அவர்கள் அதற்குரிய விருத்தப்பாடலுடன் தொடங்கிப் பாடிய பதிவினை 'அமுதம் மியூசிக் வீடியோஸ்' மூலம் கேட்கலாம். அதன் ஒலிவடிவ இணைப்பினைக் கேட்க:

https://www.jiosaavn.com/song/avataram/Nl40BRpCe2A

'இங்கே இருங்காணும் தரிசனம் தந்தென்னை ரட்சிக்கவேணும்...' எனத் தொடங்கும் அடுத்தமைந்த 'அயோத்தியாகாண்ட'ப் பகுதி சார்ந்த மூன்றாவது கீர்த்தனையானது கங்கை வேடனான குகனது கூற்றாக அமைந்ததாகும். அயோத்தியை விட்டு நீங்கி வனம் நோக்கிய பயணத்தை மேற்கொண்டவனாகிய இராமரை முதலில் வரவேற்று தன்னுடன் தங்கவைத்து உபசரித்தவன் குகனேயாவான். அவன் இராமரைத் தன்னுடன் நிரந்தரமாகத் தங்கிவிடும்படி இரந்து கேட்கின்ற உணர்ச்சிகரமான கட்டத்தினை மனக்கண்ணிற்கு இட்டுவரும் பாடல் இது. 'கல்யாணி' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் அமைந்த இக்கீர்த்தனையானது (இராமநாடகக் கீர்த்-தனை, ப:92) நூலிலுள்ளவாறான இராக தாளங்களுடன் திரு சேஷகோபாலனவர்களால் பாடப்பட்டுள்ளது. இக் கீர்த்தனை மூன்று சரணங்கள் கொண்டது. இதன் முதற்சரணமும் மூன்றாவது சரணமுமே பாடப்படுகிறது. அதன் ஒலிவடிவ இணைப்பினைக் கேட்க:

https://www.jiosaavn.com/song/inge-irum/KFseYgd8AWM

திரு சேஷகோபாலனவர்களின் பதிவில் அடுத்தமையும் மூன்று கீர்த்தனைகள் 'ஆரணியகாண்டம்' என்ற கதைப்பகுதி சார்ந்தவையாகும். அத்திரி முனிவரிடம் சென்று ஆசி பெறுதலும் அவரின் தாய் அனுசூயையின் உணவினையுண்டு இளைப்பாறிய பின்னர் தண்டகாரணியம் செல்வதில் தொடங்குகிறது. அவற்றில் முதலாவது கீர்த்தனை விராதன் என்ற அரக்கனுடைய துதிப்பாடலாக அமைவதாகும். ஒரு சாபத்தினால் அரக்கனாக மாறிய விராதன் என்பான் இராமனுடன் போர் செய்ய வருகிறான். அந்நிலையில் இராமன் அவனைத் தோற்கடிக்கிறான். இதன் மூலம் சாபம் நீங்கப் பெற்ற விராதன் இராமனின் தெய்வீகப்பண்பை உணர்ந்து 'துதிப்பதான முறையில் இக்கீர்த்தனை அமைந்துள்ளது.

'அறிவார்ஆர் - உன்னை - 'அறிவார் ஆர்...' எனத் தொடங்கும் இக்கீர்த்தனை பைரவி இராகத்தில் ஆதி தாளத்தில் நூலில் அமைந்துள்ளது.(இராமநாடகக் கீர்த்தனை, 'பக்: 109-110) இதனை திரு சேஷகோபாலனவர்கள் முகாரி இராகத்தில் ஆதி தாளத்தில் ஆலாபனையுடன் பாடியுள்ளார். இதன் இணைப்பினைக் கேட்க:

https://www.jiosaavn.com/song/arivaar-aar/ODgKAgJzD3U

இசைக்கலைஞர் சஞ்சய் சுப்ரமணியன் அவர்களும் முகாரி இராகத்திலேயே நீண்ட 'ஆலாபனை'யுடன் இதனைப் பாடியுள்ளார். அதனை இணைப்பில் கீழே கேட்கலாம்:

www.jiosaavn.com/song/arivar-yaar-unnai-mukhari/NQwcaS5ZGnc

மேற்கூறப்பட்ட கீர்த்தனை ஆறு சரணங்கள் கொண்டதாகும். இதன் ஐந்தாவது மற்றும் ஆறாவது சரணங்களை இசைக்கலைஞர் சேஷகோபாலன் அவர்கள் பாடியுள்ளார். இசைக்கலைஞர் சஞ்சய்சுப்ரமணியன் அவர்கள் ஐந்தாவது சரணத்தை மட்டுமே பாடியுள்ளார்.

அடுத்தமைவது 'இருந்தானே ராமச்சந்திரன் பஞ்சவடியில்...' என்ற பல்லவி அடியில் தொடங்கும் கீர்த்தனையாகும். (இராமநாடகக் கீர்த்தனை, ப:113)இது இராமன் இலக்குமணன் சீதை ஆகியோர் வனவாசத்திலே பத்தாண்டுகள் கழித்த நிலையில் இறுதியாகப் பஞ்சவடி என்ற இடத்தில் தங்கிய சந்தர்ப்பம் சார்ந்ததாகும். அடானா இராகத்தில் ஆதி தாளத்தில் நூலில் அமைந்தவாறே

பாடப்பட்டுள்ள இக்கீர்த்தனை இரண்டடிச் சரணங்கள் நான்கினைக் கொண்டமைந்ததாகும். இவ்வாறான இரண்டடிச் சரணங்களைக் 'கண்ணி'கள் என வழங்குவது மரபு. அவ்வகையில் இப்பாடல் கீர்த்தனை வடிவத்தின் ஒரு வளர்ச்சிக் கட்டத்தினை அடையாளம் காட்டி நிற்பதாகும். இவ்வாறமைந்த நான்கு கண்ணிகளில் முதல் மற்றும் இறுதிக் கண்ணிகளை மட்டுமே திரு சேஷகோபாலனவர்கள் சிறு ஆலாபனைத் தொடக்கத்துடன் பாடியுள்ளார். அதன் இணைப்பினைக் கேட்க:

https://www.jiosaavn.com/song/irundhane-ramachandran/ADoOC Sd,YVU

அடுத்து திரு சேஷகோபாலனவர்களின் பதிவில் நிறைவாக அமைந்த கீர்த்தனையானது இராவணனின் தங்கையாகிய சூர்ப்பனகையின் கூற்றாக அமைவது. வனத்திலே சீதையைக் கவர முயன்று தோற்றவளாகிய சூர்ப்பனகை இராவணனிடம் வந்து அவளின் அழகை வர்ணிப்பதாக அமைந்ததாகும். 'காணவேணும் லட்சம் கண்கள் சீதாதேவிதன் காலுக்கு நிகரோ பெண்கள்...' என்ற தொடக்கத்துடன் தொடர்வதாகும். (இராமநாடகக் கீர்த்தனை: ப: 130) இது சென்ற கட்டுரையில் பம்பே சகோதரிகளால் பாடப்பட்ட தொகுதியில் நோக்கப்பட்டதாகும். எனவே அதன் விளக்கங்கள் இங்கு தவிர்க்கப்படுகின்றன. இக் கீர்த்தனையின் திரு சேஷகோபாலனவர்களின் பதிவினை கீழேயுள்ள இணைப்பில் கேட்க:

https://www.jiosaavn.com/song/kaana-vendum/HAlaaBJKA3s

இதே கீர்த்தனை இசைக்கலைஞர் ஸ்ரீமதி சுகுணாவரதாச்சாரி அவர்களும் பாடியுள்ளார்கள். இதனைப் பின்வரும் 'அமுதம் மியூசிக் வீடியோஸ்' பதிவில் கேட்கலாம்.

https://youtu.be/lkusLurFKrw

இராமநாடகக் கீர்த்தனைகள் பற்றிய பார்வையிலே இதுவரை பாம்பே சகோதரிகள் மற்றும் திரு சேஷகோபாலன் ஆகியோருடைய ஒலிப்பதிவுகள் பற்றிய சில விபரங்களை நோக்கினோம். மேற்படி முயற்சிகளைத் தவிர, வேறு சில முயற்சிகளும் கூட மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இம்முயற்சிகள் மேலே சுட்டப்பட்ட பதிவுகளில் இடம்பெறாதவையான ஏனைய பாடல்கள் சிலவற்றைச் சார்ந்தவையாகும். இவ்வகையில் பதினைந்து கீர்த்தனைகள் பற்றிய தகவல்கள் இங்கு தரப்படவுள்ளன. மேற்படி பதிவுகள் கதையம்சங்களின் தொடர்ச்சியை மையப்படுத்தியே இங்கு எடுத்துரைக்கப்படவுள்ளன.

அம்முறைமையில் முதற்கண் பாயிரத்திலமைந்த விநாயகர்துதி மற்றும் பெருமாள் துதி ஆகிய தலைப்புக்களில் அமைந்த இரு கீர்த்தனைகள் இங்கு கவனத்திற்கு வருகின்றன. இவை இரண்டுமே 'சௌராஷ்டிர' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் அமைந்தவை என்பதே நூல் தரும் தகவலாகும். இவற்றில் விநாயகர் துதியாக அமைந்த கீர்த்தனையைக் கேரளாவிலுள்ள குருவாயூர் சங்கீத-கலா பீடப் பாடசாலை மாணவர்கள் 'நாட்டை' இராகத்தில் 'ஆதி' தாளத்தில் பாடக்கேட்கலாம். இக்கீர்த்தனையானது 'நேரிசை வெண்பா'வாக அமைந்த பாடலொன்றுக்குப் பின்னர் அமைந்துள்ளதை நூலில் காண்கிறோம். 'விநாயகாசரணம் - ஜயஜய விநாயகா சரணம்...' (இராமநாடகக் கீர்த்தனை ப:23) என்ற பல்லவி அடியுடன் தொடங்கும் இக்கீர்த்தனையின் ஒலி-ஒளி வடிவ இணைப்பினைக் கேட்க:

https://youtu.be/vDrMXyLb0Ao

அடுத்து அமைவது பெருமாள்துதியாக அமைந்த கீர்த்தனையாகும். இது 'அண்டர்தம் துயரம் தீர அயோத்தி...' எனத்தொடங்கும் விருத்தப்பாடலின் பின் இடம்பெறுவதாகும். 'எனக்குன் இருபதம் நினைக்கவரம் அருள்வாய் - ஸ்ரீராமச்சந்திரா...' என்ற பல்லவி அடியுடன் தொடங்கும் இக்கீர்த்தனை ஒன்பது சரணங்களைக் கொண்டதாகும். முக்கியத்துவம் வாய்ந்த நீண்ட அமைப்புடைய இக்கீர்த்தனை இராமாயணக் கதை அம்சங்கள் முழுவதையும் தொகுத்துச் சுருக்கிக் கூற முற்பட்டுள்ளது. இவ்வாறு நீண்டு அமைந்தமைக்கான காரணம் இதுவேயாகும். (இராமநாடகக் கீர்த்தனை, ப: 25-26) அவ்வகையிலேயே இது முக்கியத்துவமுடையதாகிறது.

இக்கீர்த்தனையை இசைக்கலைஞர்கள் ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களும் டி.கே. ஜெயராமன் அவர்கள் குழுவினரும் இராக மாலிகையாகப் பாடியுள்ளார்கள். ஸ்ரீமதி நித்தியஸ்ரீ அவர்கள் இக்கீர்த்தனையின் முதலிரண்டு மற்றும் நான்காவது சரணங்களை மட்டுமே பாடியுள்ளார். ஆனால் டி.கே. ஜெயராமன் அவர்கள் பதிவில் கீர்த்தனை முழுமையாகவும் 'இராகமாலிகை'யாகவும் இடம்பெற்றுள்ளது. இதனால் இக்கீர்த்தனையூடாக இராமாயணக் கதைச் சுருக்கத்தை முழுமையாகக் கேட்கும் வாய்ப்புச் சுவைஞர்களுக்குக் கிட்டுகிறது. (பல இராகங்கள் கொண்டு பாடுதலே 'இராகமாலிகை'யாகப் பாடுதல் ஆகும்) மேற்படி இருவகை ஒலிப் பதிவுகளின் இணைப்புகள் வருமாறு:

https://youtu.be/joeQYKOqmzE

https://youtu.be/jDxe1Cw_WUE

(மேற்படி கீர்த்தனையின் முன்னமைந்துள்ள விருத்தப்பாடலை மட்டும் ஸ்ரீ சேஷகோபாலனவர்கள் தமது பதிவின் தொடக்கத்தில் பாடியுள்ளார் என்பது இங்கு நினைவில் இருத்தவேண்டிய செய்தியாகும்.)

அடுத்தமையும் கீர்த்தனை 'பெண் இவள் அல்ல ராமா - தாடகை வண்ணம் கொண்ட நமன்(யமன்) இவள் ராமா...' என்ற தொடக்கத்தையுடையதாகும். (இராமநாடகக் கீர்த்தனை பக்:43-44) 'விஸ்வாமித்திரர் கூற்றாக அமையும் இப்பாடல் இராமரைத் தாடகையுடன் போராடுவதற்குத் தூண்டுவதாகும். 'தாடகை ஒரு பெண் என்ற நிலையில் அவளோடு போராடுவது ஆணாகிய தனக்கு அறமன்று' எனத் தயக்கம் காட்டினான் இராமன். அத்தயக்கத்தை நீக்கும் வகையில் அவள் செய்த கொடுமைகளை எடுத்துக் காட்டும் முறையில் அமைந்ததே இக்கீர்த்தனை. இதனை ஸ்ரீமதி நித்தியஸ்ரீ அவர்கள் பாடியுள்ளார். ஒலி இணைப்பினைக் கேட்க:

https://youtu.be/McnF3veC8I0

அடுத்தமையும் கீர்த்தனை தாடகை வதத்தைக் காட்சிப்படுத்துவதாகும். 'கொடிய தாடகைபாவி விழுந்தாள் - பொல்லாக் கொடிய தாடகைபாவி விழுந்தாள்...' என்ற பல்லவி அடிகளில் தொடங்குகிறது இக்கீர்த்தனை. 'நாதநாமக்ரிய' இராகத்தில் 'சாபு' தாளத்தில் நூலில் அமைந்துள்ளது. (இராமநாடகக் கீர்த்தனை பக் 44-45) இதன் அனுபல்லவியானது தாடகையின் வீழ்ச்சியை இராவணனின் வீழ்ச்சிக்கான முன்னோடி நிகழ்வாக அடையாளம் காட்டும் உவமைப் பண்புடன் அமைந்ததாகும். 'செம்பொன் முடியன் ராவணன் வெற்றிக் கொடிவிழுந்தால் போல்' என இவ்வனுபல்லவி அமைகிறது. மூன்று சரணங்கள் கொண்ட இக்கீர்த்தனையின் முதற் சரணமே பாடப்படுகிறது. ஸ்ரீமதி நித்தியஸ்ரீ அவர்கள் 'திலங்' இராகத்தில் 'மிஸ்ரசாபு' தாளத்தில் இதனைப் பாடியுள்ளார். இதன் இணைப்பினைக் கேட்க:

https://youtu.be/npPznGPRmoA

அடுத்தமையும் இரு கீர்த்தனைகள் தாடகை வதத்திற்குப் பிற்பட்ட இரு கதையம்சங்களை சார்ந்தவையாகும். அவற்றுள் ஒன்று 'அகலிகை சாப விமோசனம்' என்ற கதையம்சமாகும். மற்றது மிதிலை நகரில் இராமன் வில் முறித்ததான 'வீர நிகழ்வை'க் காட்சிப்படுத்துவதாகும். அகலிகை சாபவிமோசனம் என்ற கதையம்சம் சார்ந்த கீர்த்தனையானது 'தேவி இவள் ராமா - கௌதமன் - ஆவி இவள் ராமா...' என்ற பல்லவியுடன் தொடங்குவது. (இராமநாடகக் கீர்த்தனை பக்: 45-46) கணவரான கௌதமமுனிவரின் சாபத்தால் கல்லாக மாறிய அகலிகை இராமரது பாதம் பட்ட தெய்வீக நிகழ்வால் மீண்டும் தன்னுருவம் பெறுகிறாள். அந்நிலையில் அவளை இராமருக்கு அறிமுகம் செய்யும் பொருண்மையில் விஸ்வாமித்திரர் கூற்றாக அமைந்த கீர்த்தனை, 'இது. நூலில் இக்கீர்த்தனை

நூலகம்
இணையத்தில் ஒரு நூல் உலகம்
www.noolaham.org

‘அஸாவேரி’ இராகத்தில் ‘சாபு’ தாளத்தில் அமைந்துள்ளதைக் காண்கின்றோம். இதனையும் ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவனவர்கள் ‘கமாஸ்’ இராகத்தில் சாபு தாளத்தில் பாடியுள்ளார்கள்.

மேற்படி கீர்த்தனைக்கு முன்பாக கதையம்சத்தைத் தொடர்புபடுத்தும் வகையில் விருத்தப் பாடலொன்று இடம்பெற்றுள்ளது. ‘தாடகைதான் விழுந்தபின்பு தேவர் சொல்ல...’ என்ற தொடக்கத்தையுடைய இவ்விருத்தத்தையும் மேற்சுட்டிய கமாஸ் இராகத்தில் தாளமற்றுப் பாடிய பின்பே நித்தியஸ்ரீ அவர்கள் இக்கீர்த்தனையை தாளத்துடன் பாடியுள்ளார்கள். இதன் மூன்று சரணங்களுமே பாடப்பட்டு பதிவிடப்பட்டுள்ளன. இதன் இணைப்பினைக் கேட்க:

https://youtu.be/eiG4FjFHX8o

அடுத்தமையும் கீர்த்தனை இராமன் வில்வளைத்த கதையம்சத்தைக் கூறுவது. இது, ‘வில்லானது ரண்டாய் ஒடிந்து விழுந்ததே பாரில்...’ என்ற பல்லவியுடன் தொடங்குவதாகும். (இராமநாடகக் கீர்த்தனை பக்: 48-49) இக்கீர்த்தனைக்கு முன்னர் கதைத் தொடர்புக்கான விருத்தப்பாடலொன்றும் இதில் அமைந்துள்ளது. ‘புங்கவன் ஆம் முனிவனிந்த வாறு சொல்ல...’ என அமைந்த இவ் விருத்தம் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தவகை சார்ந்ததாகும். இவ்விருத்தமும் இதனைத் தொடரும் கீர்த்தனையும் முன்னரமைந்தமை போல் ஸ்ரீமதி நித்தியஸ்ரீ அவர்களால் இணைத்தே இங்கும் பாடப்படுகிறது. இவையிரண்டும் நூலில் அமைந்தவாறு ‘தோடி’ இராகத்திலேயே இவரால் பாடப்பட்டுள்ளன. இவற்றினைக் கேட்க:

https://youtu.be/LbOaOf_luCk

இராமர் வில்லினை ஒடித்ததன் பின் இராமர் - சீதை இருவருக்கும் நடைபெறப் போகும் திருமண நாளினை நிச்சயித்தற்கு அயோத்தியிலிருந்து தசரதன் மகிழ்வுடன் மிதிலைக்கு வருதலும் அதன் பின் அந்நிச்சயிக்கப்பட்ட நன்னாளில் சீதையானவள் ஜனகனின் மணிமண்டபத்திற்கு வருதலில் அமைந்த கீர்த்தனையே அடுத்தமைகிறது. சீதையானவள் ஜனக மன்னனின் மணிமண்டபத்திற்கு வரும் நிகழ்வு இக்கீர்த்தனையின் நான்கு சரணங்களிலும் காட்சிப்படுத்தப்படுகிறது. ‘அன்னைசானகி வந்தாளே - ராசாதிராசர்...’ எனத் தொடங்கும் இக்கீர்த்தனை ‘சாவேரி’ இராகத்தில் ‘ஆதி’ தாளத்தில் நூலில் பதிவாகியுள்ளது. (இராமநாடகக் கீர்த்தனை பக்: 52-53) ‘இக்கீர்த்தனையினை மூவர் பாடியுள்ளார்கள். அவற்றின் பதிவுகளைக் கீழே காண்க:

https://youtu.be/3r0FnlOTFfI

https://youtu.be/rmEKGKnAesY

https://youtu.be/4kbqyRPFEFA

இவற்றில் முதற்பதிவானது ஸ்ரீமதி நித்தியஸ்ரீ மகாதேவனவர்களால் பாடப்பட்டதாகும். இவர் ‘கல்யாணி’ இராகத்தில் ‘ஆதி’ தாளத்தில் பாடியுள்ளார்கள். நீண்ட சீர்கள் கொண்ட நான்கு சரணங்களுடன் அமைந்த இக்கீர்த்தனையின் முதற்சரணமே இவரால் பாடப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அடுத்தமைந்த மேற்படி பதிவில் ஸ்ரீமதி பம்பே ஜெயஸ்ரீ அவர்கள் இதனை ‘சங்கராபரண’ இராகத்தில் ‘ஆதி’ தாளத்தில் பாடியுள்ளார்கள். இவரும் முதற் சரணத்தையே பாடியுள்ளார்கள். நிறைவாக பல்லவியின் அடிக்கு ‘ஸ்வரங்கள்’ பாடி மிருதங்கத்திற்கும் வாய்ப்புக் கொடுத்து நிறைவு செய்துள்ளார்கள். அடுத்தமைந்த மேற்படி பதிவில் ஸ்ரீசஞ்சய் சுப்பிரமணியன் அவர் இக்கீர்த்தனையை நூலில் உள்ளவாறான ‘சாவேரி’ இராகத்திலும் ‘ஆதி’ தாளத்திலும் பாடியுள்ளதனைக் காணலாம். இவர் நீண்ட ஆலாபனையொன்றை தொடக்கத்தில் பாடியதுடன் இராகம் வாசித்தலில் வயலிற்கும் வாய்ப்புக் கொடுத்து கீர்த்தனையைப் பாடியுள்ளார். முதலிருவர் பாடியவாறே முதற் சரணத்தினையே இவரும் பாடிப் பதிவு செய்துள்ளார்கள்.

தொடரும்...



kawsalya.s@thaiveedu.com



# The boy who harnessed the wind

# சிறுவனின் தேடல், ஓர்மம், நம்பிக்கை!

- ரூபன் சிவராஜா

இயற்கைக்கும் மனிதருக்குமிடையிலான உறவையும் அந்த உறவு மனிதரின் இருத்தலியல் போராட்டமாக மாறும் தருணங்களையும் நேர்த்தியாகச் சித்தரிக்கின்ற படம் 'The boy who harnessed the wind'. 2019ல் வெளிவந்த பிரித்தானியத் தயாரிப்பான இந்தத் திரைப்படம், Netflixஇல் பார்க்கக் கிடைக்கிறது. இது உண்மைக் கதையைத் தழுவி உருவாக்கப்பட்டுள்ளது. கதையின் நிஜ நாயகனின் பெயர் William Kamkwamba. 'The boy who harnessed the wind' என்ற இதே தலைப்பில் அவர் எழுதிய தன்வரலாற்றுப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு, திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. 2009ல் இப்புத்தகம் வெளிவந்திருக்கிறது.

மத்திய ஆபிரிக்க நாடான மலாவியின் Wimbe எனப்படும் சிறிய கிராமம் கதையின் களம். மலாவி, வடக்கில் தன்சானியா மேற்கில் சம்பியா, தெற்கு மற்றும் கிழக்கில் மொசாம்பிக் ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டுள்ள நாடு. 18 மில்லியன் மக்கட் தொகையைக் கொண்ட ஆபிரிக்காவின் நெருக்கமான மக்கட்தொகையைக் கொண்டுள்ளது. நாட்டின் முக்கிய உணவு உற்பத்தி சோளம். இதுவே மக்களின் முதன்மையான நாளாந்த உணவும் கூட. மழை பொய்த்துப் போய் காய்ந்து வெடித்த நிலம். விதைகளிருந்தும் விதைக்க முடியாத வரட்சி. பட்டினியை எதிர்கொள்ளும் தேசம். இந்தப் பேரிடரிலிருந்து தன் குடும்பத்தைக் காக்க ஒரு சிறுவன் கண்டடையும் அசாத்திய வழிமுறையின் வெற்றி பற்றிப் பேசுகின்ற காட்சிகள்.

வாகனங்களின் சிதைந்த பாகங்கள் குவிக்கப்பட்டுள்ள குப்பை மேட்டிலிருந்து பொறுக்கிச் சேகரித்த இலத்திரனியல் எச்சங்கள், தகப்பனின் சைக்கிளைக் கொண்டு காற்றாலை அமைத்து மின்சாரம் உருவாக்கி நிலத்தடி நீர் பெறுகிறான். குடும்பத்தினது மட்டுமல்ல நாட்டின் பட்னிக்கும் தீர்வு காண்கிறான். இதுதான் கதையின் மையக்கரு.

உணவுக் களஞ்சியம் ஒன்று அவர்களின் வீட்டில் இருக்கிறது. கதையின் மையப்பாத்திரம் 13-14 வயதுடைய சிறுவன். தாய், தகப்பன், தமக்கை, கைக்குழந்தையான அவனுடைய இளைய தம்பி ஆகிய அனைத்துப் பாத்திரங்களும் கதையில் முக்கியமான திரைப் பிரசன்னத்தைப் பெறும் பாத்திரப் படைப்புகள். குடும்ப உறவு, அதன் பிணைப்பு, முரண்பாடுகள் இயல்பாகச் சித்தரிக்கப் படுகின்றன.

இயற்கையால் நிந்திக்கப்பட்ட வாழ்வு அவர்களுக்குப் புதிதல்ல. மழை பெய்யும் போது பெருமழையாகப் பொழிந்து பயிர்களை நாசமக்குவதும் வெயில் எனில் நிலம் வெடித்துப் பிழக்கும் வரட்சியும் பரவுகின்ற நிலம் அது. மற்றுமொரு பட்டினியும் உணவுத் தட்டுப்பாடும் அவர்களின் கதவை வலிமையாகத் தட்டுகிறது. நாளுக்கு ஒருவேளை உணவை உட்கொள்ளும் பட்சத்தில் களஞ்சியத்திலுள்ள சோளமும் அரிசியும் ஆறு மாதங்களுக்குத் தாக்குப் பிடிக்கும் என்று கணவனும் மனைவியும் நம்பிக்கையைப் பற்றிப் பிடிக்கின்றனர்.

இந்தப் படத்தை இயக்கியிருப்பவர் Chiwetel Ejiofor. பிரித்தானியாவில் பிறந்து வளர்ந்தவர். தாய் தந்தையர் நைஜீரியப் பின்னணியைக் கொண்டவர்கள். தந்தைப் பாத்திரத்தில் அவரே நடித்திருக்கின்றார். 1997ல் இவரது 20வது வயதில் Steven Spielberg இன் Amistad படத்தில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்று திரைப்பட நடிகராக அறிமுகமாகினார். அப்பொழுதிலிருந்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான படங்களில் நடித்துப் புகழ்பெற்றவர். இதுதான் இவர் இயக்கிய முதலாவது படம். இந்தப் படத்தை உருவாக்குகின்ற விருப்பம் தனக்கு நீண்டகாலமாக இருந்ததாகவும், அது தொடர்பாக 2010லேயே William Kamkwamba விடம் உரையாடியதாகவும் 2019ல் நோர்வேஜிய ஆப்தன்போஸ்தன் இதழுக்கு வழங்கிய நேர்காணலில் Chiwetel Ejiofor பகிர்ந்திருந்தார்.

படப்பிடிப்பு முழுவதும் மலாவியின் கிராமத்தில் நடத்தப்பட்டுள்ளது. மலாவியில் சிறுவன் வாழ்ந்த அதே சூழலில் திரைப்படம் காட்சிப்படுத்தப்பட்டமை அந்தக் கலாச்சாரத்திற்கு நெருக்கமாகத் தன்னை அழைத்துச் சென்றது என்கிறார் இயக்குனர். விவசாயம் சார்ந்த காட்சிகளை முடிந்தளவு உண்மைத்தன்மையோடு கொண்டுவர விரும்பியதாகவும் அதில் தான் வெற்றிபெற்றிருப்பதாக நம்புவதாகவும் அதே நேர்காணலில் பகிர்ந்துகொண்டிருந்தார்.

பாடசாலைக் கட்டணம் செலுத்துவதற்குரிய வசதி வில்லியத்தின் பெற்றோரிடம் இல்லை. பாடசாலை நிர்வாகத்தால் திரும்பத்திரும்பக் கட்டணத்திற்காகக் கண்டிக்கப்பட்டு கல்வியைத் தொடரமுடியாதபடி வெளியேற்றப்படுகிறான். கல்வி தடைப்படுகிறது. இருந்தபோதும் கற்பதிலுள்ள ஆர்வம் குறையவில்லை. இலத்திரனியல் இயங்குசக்தி தொடர்பான தேடலும் விருப்பமுமுடைய அவன் நூலகத்திற்குள் உரிய அனுமதி இல்லாமல் சென்று இலத்திரனியல் தொடர்பான புத்தகங்களைத் தேடி வாசிக்கிறான். டைனமோ எப்படி இயங்குகிறது என்பது பற்றி ஆராய்ந்து கண்டறிகிறான். Using Energy என்ற ஒரு பாடப்புத்தகத்தை வாசித்தபோது காற்றாலை அமைத்து மின்சாரம் பிறப்பிக்கும் எண்ணம் அவனுக்குள் தோன்றுகிறது.

முற்றிலும் தன்னார்வத்தால் கற்றுக் கொண்ட வில்லியம், ஒரு வானொலி மோட்டாரைப் பயன்படுத்தி ஒரு காற்றாலை முன்மாதிரி ஒன்றை முதலில் உருவாக்கினான். பின்னர் சைக்கிள், உழவு இயந்திரத்தின் (ரக்ரர்) சுழல்விசிறி (Tractor fan blade,), பழைய shock absorber மற்றும் மரங்களைக் கொண்டு ஐந்து மீட்டர் காற்றாலையை உருவாக்கி வீட்டுக்கான மின்குமிழ்களை ஒளிரச் செய்தான். கைத்தொலைபேசிகளுக்கு சார்ச் ஏற்றினான். அடுத்த கட்டமாக காற்றாலையிலிருந்து ஒரு கார் மின்கலத்திற்கு மின் இணைப்பினை ஏற்படுத்தினான். அதனுள் மின்சாரத்தைச் சேகரித்து நீர்ப்பாசனத்திற்குரிய இயங்திரத்தை இயக்குமளவிற்கு 12 மீற்றர் உயரமான மேலுமொரு காற்றாலையை அவன் அமைத்தான். இதுவே அந்தச் சிறுவனின் விடாமுயற்சியும் கண்டடைவும்.

இதற்காக முதலில் அவன் தகப்பனின் சைக்கிளைத் தருமாறு கேட்கிறான். அது அந்தக் குடும்பத்தின் போக்குவரத்துக்கும் விவ



சாயப் பயணங்களுக்கும் பயன்படுத்தப்படும் ஒரேயொரு சைக்கிள் அது. அவன் தனது விளையாட்டுப்பொருளை இயக்குவதற்காகக் கேட்கிறான் என்ற அளவில் எத்தனை நாட்களுக்குத் தேவை என்று முதலில் தகப்பன் வினவுகிறார். சைக்கிளின் பெடலும் அதன் உந்துதலில் சுழலும் சில்லினையும் கொண்ட பகுதியும் மட்டும் தான் தனது முயற்சிக்குத் தேவை என்கிறான். அதன் அர்த்தம் அந்தச் சைக்கிளை இரு துண்டுகளாக அறுக்க வேண்டும். கோபமும் எரிச்சலுமடையும் தகப்பன், இந்த விளையாட்டுக்கெல்லாம் சைக்கிளை நாசப்படுத்த முடியாது என்று அவன் மீது கடிந்து விழுகிறார். அவனை ஒரு கட்டத்தில் தள்ளியும் விடுகிறார். விளையாட்டுப் புத்தியைக் கைவிட்டு தோட்டத்தில் ஒத்தாசையாக பொறுப்புடன் நடக்கச் சொல்லி எச்சரிக்கிறார். பின்னர் ஒரு கட்டத்தில் மனைவியின் கேள்விகளால் நிலைகுலைந்து, மகனின் விருப்பப்படி சைக்கிளைக் கொடுத்து மகனின் முயற்சிக்கு ஒத்துழைக்கிறார் தகப்பன். அயலவர்களும் காற்றாலை அமைப்பிற்குரிய சரீர வேலைகளில் இணைகின்றனர்.

இயற்கையின் சமநிலையைக் குழப்புகின்ற மனிதச் செயற்பாடுகளுக்கு எதிரான அக்கறை, விளைச்சல் பொய்த்துப் போகின்ற விவசாயியின் மனநிலை, தான் உற்பத்தி செய்யும் உணவுப்பொருளுக்கான விலையைத் தீர்மானிக்கும் உரிமையிழந்த விவசாயி... இவையெல்லாம் சாதாரண பொதுமக்களின் அக்கறைக்கும் விழிப்புணர்வுக்கும் உரிய விடயமாக இன்னும் ஆகிவிடவில்லை என்பது கசப்பான உண்மை. சூழலியல் தாக்கங்கள், உலக வெப்பமயமாதல் இன்று உலகளாவிய முதன்மைப் பிரச்சினை. பெருந்தொற்று மரணங்கள், போர்கள் ஏற்படும் மானிட அழிவுகள் ஒருபக்கம் என்றால் சூழலியல் சார்ந்து எதிர்காலம் எதிர்நோக்கியுள்ள சவால்கள், ஆபத்துகளும் பெரியளவிலானவை. இவை ஆய்வுபூர்வமான தகவல்கள், தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை. இதனைச் சூழலியல் அறிஞர்களும் ஆய்வாளர்களும் செயற்பாட்டாளர்களும் நீண்டகாலமாக எச்சரித்து வந்துள்ளனர்.

படம் கல்வியின் முக்கியத்துவத்தைப் பேசுகின்றது. ஜனநாயகத்தின் போதமையைக் காட்சிபூர்வமாக விமர்சிக்கின்றது. பெருமுதலாளிகளின் முகவர்களுக்கும் விவசாயிகளுக்குமிடையிலான உரையாடற் காட்சியும் தேர்தல் பிரச்சாரக் காட்சியொன்றும் நாட்டின் அரசியல் அதிகார, பொருளாதார உறவுநிலைகளையும் முரண்களையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.

புகையிலைச் செய்கையும் இம்மக்களின் வருமன ஆதாரமாக இருந்துள்ளது. அவ்வுற்பத்தி தெற்கிலுள்ள பெருமுதலாளிகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் கைகளுக்குச் சென்ற நிலையில், சந்தைவாய்ப்புகளை இழந்த அவர்கள் புகையிலை உற்பத்தியைக் கைவிட நேர்கிறது. மக்களின் உள்ளூர் உற்பத்தியைக் கபளீகரம் செய்தது மட்டுமல்லாமல் அவர்களிடமிருந்து அறாவிலைக்கு மரங்களையும் கொள்வனவு செய்கின்றனர். நிலம் மீதான பிடிமானமும் எதிர்காலம் பற்றிய பிரக்ஞையுள்ள விவசாயிகள் பெருமுதலாளிகளுக்கு மரங்களை விற்க மறுக்கின்றனர். ஏனையவர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் வேறுபல நிர்ப்பந்தங்களாலும் சம்மதிக்கின்றனர். அவர்களைச் சம்மதிக்கச் செய்யத் தம்மாலான பிரயத்தனங்களை முகவர்கள் செய்கின்றனர். ஒரு தொன் மரங்களுக்கான விலை 2000-Kwacha. அதன் பெறுமதி கிட்டத்தட்ட 3-4 அமெரிக்க டொலர்கள்.

மரங்களை எதற்காக கொள்வனவு செய்கின்றார்கள் என்றால், புகையிலையை அறுவடைக்குப் பின் காயவைத்துப் பதப்படுத்துவதற்கு எரிப்பதற்கான விறகுகளாகப் பயன்படுத்துவதற்கு. மரங்கள் என்பது மழை பெய்யச் செய்வதற்கு எத்தனை முக்கிமோ, அதேபோல் வெள்ளப்பெருக்கிற்கு எதிரான அணையாகத் தொழிற்படுவன.

‘இம்முறை அதிக மழை பெய்தது என்பதும் காலம் தப்பிப் பெய்தது என்பதும் அவர்களுக்குத் தெரியும். வெள்ளத்தை அணை கட்டித் தடுப்பதற்கான பணம் எம்மிடம் இல்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். வெள்ளத்தைத் தடுக்க மரங்கள் எமக்குத் தேவை என்பதையும் அவர்கள் அறிவார்கள். சாதாரண மக்களை அழுத்தும் அனைத்துப் பிரச்சினைகளையும் அவர்கள் நுணுக்கமாக அவதானிக்கின்றனர். அதற்கேற்றாற்போல் தமது திட்டங்களை வகுத்து எம்மிடமிருந்து அனைத்தையும் பிடுங்க நிற்கின்றார்கள்’ என்கிறார் ஊர்ப்பெரியவர்.

எங்களிடமுள்ள ஒரேயொரு அதிகாரம் ‘இல்லை’ என்று சொல்வதுதான்.

பெருமுதலாளிகளின் சுரண்டல் நோக்கிலான வற்புறுத்தல்களுக்கு ‘மறுப்புத் தெரிவித்தல்’ என்ற அர்த்தத்தில் இந்த உரையாடல் வருகின்றது.

உலகமயமாக்கலின் பொருளாதார விரிவாக்கங்களுக்கும், விரைவான உற்பத்தி முறைகளுக்கும், இலாபங்களுக்கும் அதீத முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒரு பொருள்முதல்வாத உலகில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். காடுகளை அழித்து, காற்றை நஞ்சாக்கி, நிலங்களைப் பாழாக்கி, குளங்களையும் கடல்களையும் தேசமாக்கி, மிருகங்களின் வாழ்விடங்களைக் கபளீகரம் செய்திருக்கிறோம். இயற்கைக்கும் சூழலியலுக்கும் எதிரான மனித செயற்பாடுகள்தான் இன்றைய உலகளாவிய நெருக்கடிகளுக்கான முக்கிய காரணிகளாக உள்ளன. எனவே இனி சூற்றுச்சூழலைத் தவிர்த்துவிட்டு பொருளாதாரத்தைப் பற்றிப் பற்றியும் அரசியலைப்

பற்றியும் பேசமுடியாது என்பது யதார்த்தம். இன்றைய நெருக்கடி அத்தகைய மாற்றம் நோக்கிய சிந்தனைக்கு வழிகோல வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சமூக சிந்தனையாளர்கள், சூழலியல் அறிஞர்கள், செயற்பாட்டாளர்கள், அக்கறையாளர்கள் மத்தியில் உள்ளன. இந்தப்படம் சொல்லுகின்ற கதை சிறுவனின் ஓர்மமும் நம்பிக்கையும் செயல்முனைப்பும் என்பதைத் தாண்டி சூழலியல் சிக்கல்கள், விளைவுகள் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

வில்லியம் காற்றாலை அமைத்து, அதன் மூலம் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்திற்கான மின்சாரத்தைப் பெறுவதோடு கதை முடிகிறது. அதன் பின் அவன் உலகம் முழுதும் அறியப்பட்ட நபராக ஆகியமை, மலாவியின் பல்வேறு பாகங்களில் காற்றாலை அமைத்தமை, தன்-வரலாற்று நூல் எழுதியமை, உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் ஆரம்பநிலை மாணவர்களுக்கான பாடநூல்களில் ஒன்றாக அந்நூல் இணைக்கப்பட்டுள்ளமை என நிஜ வில்லியத்தின் கதை அறியப்பட்டுள்ளது. காற்றாலை அமைக்கும் திட்டம் உலகளாவிய கவனம் அவர் மீது திரும்புவதற்கு காரணமாக அமைந்தமையும் அதன் பின்னான அவருடைய வளர்ச்சி சார்ந்த காட்சிகள் படத்தில் உள்ளடக்கப்படவில்லை. கலைப் படைப்பாக இந்தத் திரைப்படம் தொடங்கிய இடமும் நிறைவுபெற்ற இடமும் முக்கியமானவை. இன்று அந்த இளைஞனுக்கு 32 வயது. New Hampshire பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல் துறையில் இளநிலைக் கல்வியை முடித்திருக்கிறார்.

நிஜத்தில் வில்லியம் தனது குடும்ப உறவுகள் மற்றும் அயலவர்களுக்கான சுத்தமான குடிநீர், மலேரியா தடுப்பு, சூரிய ஒளி, காற்றாலையிலிருந்து மின்சாரம், நீர்ப்பாசனம் போன்ற திட்டங்களில் பங்கேற்றிருக்கிறான். அதுவே TED Talk நிகழ்ச்சியில் அவர் உரையாற்றவும் வழிகோலியது. TED -Technology, Entertainment, Design என்பதன் சுருக்கம். கல்வி, தொழிற்துறை, அறிவியல், கலை, படைப்பாக்கம், தொழில்நுட்பமென அனைத்துத் துறைகளிலும் முன்மாதிரியாக விளங்கும் ஆளுமைகளின் தன்-வரலாற்று உரைகள் இந்நிகழ்வு மூலம் வெளிக்கொணரப்படும்.

இன்றைய நாட்களில் William Kamkwamba, மனித மேம்பாட்டினை மையப்படுத்திய திட்டங்களில் அக்கறை கொண்டவராக செயற்படுவதாக அறிய முடிகிறது. 'அறிதலுக்கும்' 'செயற்பாட்டுக்கும்' இடையேயான இடைவெளியைக் குறைக்கின்ற வகையில் மக்களைச் சிந்திக்கவைக்கக்கூடிய பொருத்தமான தொழில்நுட்ப பாடத்திட்டத்தை உருவாக்கும் பணியில் WiderNet நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறார். மலாவியில் ஒரு கல்வி நிறுவனம் ஒன்றினை நிறுவும் திட்டம் அவரிடம் உள்ளது.

ஒன்றே முக்கால் மணி நேர நீளமுடைய இந்தப் படம், மிக இயல்பாகவும் நெருக்கமாகவும் பார்ப்பவரை தன்வசப்படுத்துகிறது. அதிரடியான காட்சிகளில்லை. கதையின் போக்குக் கோருகின்ற அளவு எதுவோ, அதற்குத் தகுந்த நிதானமான காட்சிகள். நிலத்தோடு பார்வையாளர்களை ஒன்றச்செய்கின்ற காட்சியமைப்புகளைக் கொண்ட திரைப்படங்கள் தருகின்ற அனுபவம் அலாதியானது. அறிமுகமில்லாத, நேரடிப் பரிச்சயமில்லாத நிலமெனினும் அதற்குள் பார்வையாளரை உள்வாங்கி அழைத்துச் செல்கின்ற காட்சியப்படுத்தலும், நிலவியல் அமைப்பினையும், மக்களின் வாழ்வினையும் உணரச்செய்கின்ற கமராச் சட்டகங்களும் கலைத்துவ அழகியலுடன் படமாக்கப்பட்டுள்ளன.

படம் தனிமனித சாகசத்தை முன்வைக்கவில்லை. மாறாக அடித்தட்டு மக்கள் தமது வாழ்வாதார, இருத்தலியல் அச்சுறுத்தலை எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதாக முன்வைக்கப்படுகின்றது. அல்லது சிறுவனின் கதை நம்பிக்கையைப் பற்றியது. குறைந்த வளங்களைக் கொண்ட விவசாயச் சமூகம், தாம் எதிர்கொள்ளும் அனைத்துவகைச் சவால்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில், அரசாங்கத்தினது உதவியின்றித் - தமது சொந்த முயற்சியில் தமக்கான தீர்வுகளைக் கண்டடைகின்றனர்.



rooban.s@thaiveedu.com



# கொடியன்குளத்தில் தெரிவது முள்ளிவாய்க்கால்

- ந. இரவீந்திரன்

இன்று அதிக கவனத்தை ஈர்த்திருக்கும் ஊர் கொடியன்குளம். 'கர்ணன்' என்ற திரைப்படம் வெளியானதைத் தொடர்ந்து அந்தக் கிராமம் நோக்கிய ஊடக யாத்திரையும் மக்களின் ஈர்ப்பும் வலுத்துள்ளது. இத்தனை கவனக்குவிப்பு அந்தத் திரைப்படக் கதைக்களமாக அந்தக் கிராமம் ஆவதற்குக் காரணமாக இருந்த 1995ம் ஆண்டில் இருந்ததில்லை. இப்போது ஊடகத்துறை அடைந்திருக் கும் வளர்ச்சி அப்போது இல்லாதிருந்தது என்பது மட்டுமே அதற் கான காரணம் என்பதற்கில்லை. அந்த ஊரை, ஆட்சி நிர்வாகப் பிரிவுகள் அனைத்தும் இணைந்து நிர்மூலமாக்கியபோது ஆட்சி பீடத்தில் இருந்த கும்பலின் கைகள் அவற்றை இயக்கின என்ப தோடு, எதிர்க்கட்சியும் கண்டுகொள்ள விரும்பவில்லை, அடுத்த தேர்தல் வெற்றி கருதி. ஊடகங்களும் சாதிய ஒடுக்குமுறையைக் கண்டுகொள்ளாமல் விடும் உத்தியைக் கையாண்டன.

அவ்வேளையில் 'நக்கீரன்' மட்டுமே உண்மை அறியும் குழுவுடன் இணைந்து சென்று அந்தக் கிராமத்துக்கு நடந்தது என்ன என் பதை வெளிப்படுத்தி இருந்தது என்று மூத்த பத்திரிகையாளர் நக் கீரன் பிரகாஷ் செவ்வியொன்றில் கூறியுள்ளார். கர்ணன் திரைப்ப டத்தில் காட்டப்பட்டதை விட அக்கிராமம் தாக்கியழிப்புக்கு முன் னர் செழிப்புடன் இருந்ததென அவர் கூறியுள்ளார். பலரும் இவ்வி டயத்தை வலியுறுத்துகின்றனர். தேவேந்திரகுல வேளாளரென அழைக்கப்படும் பள்ளர் சாதியினர் அங்கு ஒரே இடத்தில் பெரும் பான்மையாக உள்ளனர். நாடுகடந்து சென்று தேடிய செல்வத் தைக்கொண்டு வளமாக வாழ்ந்தனர். அப்போதே தொலைக்காட் சிப் பெட்டிகளுட்பட பல சாதனங்களைப் பயன்பாட்டுக்கு வழக் கப்படுத்தி இருந்தனர். கல்வியிலும் அரச பதவிகளிலும் உயர்ந்தி ருந்தனர். இத்தகைய முன்னேற்றங்கள் காரணமாக, தென் மாவட் டங்களில் தமது சாதியினர் சாதி வன்முறைகளில் பாதிக்கப்பட்ட போதெல்லாம் விரைந்து சென்று உதவுகிறவர்களாக இருந்துள் ளனர்.

இந்த அம்சங்கள் காரணமாகவே காவல்துறை ஊரினுள் பிரவே சித்த கணம் முதல் இவர்களைக் கருவறுப்பதன் வாயிலாக ஏனைய இடங்களிலும் அந்த மக்களை அடக்கி ஆள இயலும் என்று கண்டனர். செயல் வடிவங்களையும் கொடுத்தனர். மாவட்டக் கலக்டரும் அதற்கு உறுதுணையாக இருந்தார். அரசாங்கத்தில் முதலமைச்சரது அன்புச்சகோதரியாக இருந்தவருடன் நெருக்கமா னவர்களாக இந்த அழித்தொழிப்பு தலைச்சன்கள் இருந்தார்கள் என்பதும் இவர்கள் முக்குலத்தோரெனும் சாதிப்பிரிவினர் என்பதும் கவனிப்புக்கு உரியது.

இந்தப் பிரச்சினைக்கான அடித்தளம் வேறோர் ஊரில் பேருந்து நடத்துனருடன் தொடங்குகிறது. ஏற்கனவே தென் மாவட்டங்கள் பலவற்றில் தேவேந்திர குல வேளாளருக்கும் முக்குலத்தோருக்கும் இடையே கலவரங்களும் கைகலப்புகளும் அடிக்கடி இடம்பெற்று வந்த காலச்சூழல் அது. முக்குலத்தோரான மாணவர்கள் பஸ் ஓட் டிச்செல்ல இடைஞ்சலாக, பாதையை மறித்து நடந்தது பற்றி தேவேந்திரகுல வேளாளரான சாரதி மாணவர்களுடன் மோத நேர்ந்து, அங்கிருந்து சென்று பேருந்து திரும்பி வந்த பொழுது சாரதி சாதி வன்மத்துடன் சுற்றுவட்ட முக்குலத்தோரால் தாக்கப் பட்டார். இதைத்தொடர்ந்து சுற்று வட்டாரக் கிராமங்களில் தேவேந் திரகுல வேளாளர் தாக்கப்படுவதும் இறுதியில் கொடியன்குளத்தி னுள் அரசுயந்திரம் முழுதாக அழித்தொழிப்பில் ஈடுபடுவதும் (1995ல்) இடம்பெற்றது.

அந்தக் கொடூரத்தைச் சூடாறுமுன் சென்று பார்த்த அனுபவத்தை நக்கீரன் பிரகாஷ் கூறுகிற போது, ஒடுக்கப்பட்டிருந்த அந்தச் சாதிப்பிரிவினர் தலையெடுக்கக்கூடாது என்பதற்காக இடம்பெற்ற தென்ற வகையில், 'ஈழத்தமிழர்கள் தமக்கு ஏற்பட்டதாக கூறுவ தைப் போன்ற இனவழிப்பு இது' என்று கூறியிருந்தார். தமிழ் தேசி யத்துக்கு இழைக்கப்பட்ட கொடூரத்தை ஒரு தலித்தேசியத்துக்கு நடந்த அட்டூழியத்துடன் எப்படிச் சமப்படுத்திப் பேச இயலுமென எம்மவர் கொந்தளிக்க அவசியமில்லை. ஈழத்தமிழருக்கு நேர்ந்த அநீதியின் உச்ச வரம்பு எத்தனை கனதிமிக்கதோ அதைப்போல இதை உணர வேண்டும் என்பதற்காகவே இந்த ஒப்பீட்டை அவர் செய்திருந்தார். குறைமதிப்பீட்டு எண்ணம் அவருக்கு இருந்திருக்க வில்லை.

உண்மையில் இரண்டுமே இனவழிப்பல்ல. ஈழத்தமிழர் போர்க்கு ணத்தைக் கருவழிக்க வேண்டுமென்ற கருத்தோடு பேரினவாத இராணுவம் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தது. அதற்கு வாய்ப்பாக குறுகிய இடமான முள்ளிவாய்க்கால் வரை ஈழத்தமிழ் மக்கள் எடுத்துச் செல்லப்பட்டுக் காவுகொடுக்கப்பட்ட னர். கொடியன்குளத்தில் சாதிவெறிக் காவல்படையினரால் ஏறத் தாழ ஐம்பது பேர்வரை அன்றைய சம்பவத்தின்போது அக்கிரா மத்தில் கொல்லப்பட்டனர், பலரது கை - கால் வெட்டப்பட்டன, பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர் என நக்கீரன் பிரகாஷ் மேற்படி செவ்வியில் கூறியிருந்தார். அக்கிராமத்தின் குடித்தொ கைக்கு இது மிகப்பெரும் அழிவு. அவர்களது பொருளாதார வளம் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டதோடு மீள எழவியலா வகையில் மேற்கொள்ளப்பட்ட வக்கிரமிக்க தாக்குதல் என்ற வகை யில் முள்ளிவாய்க்காலுக்கு ஒப்பீடு செய்வது மிகைப்பட்டதல்ல!

அடிப்படையான வித்தியாசம், முள்ளிவாய்க்கால்வரை மக்களைக் கேடயமாக எடுத்துச் சென்ற போராட்ட சக்தி அங்கே அதனது ஆயுதங்களை மௌனித்துக்கொண்டது. கைகளில் ஆயுதம் இல் லையெனில் மன வைராக்கியத்துடன் அரசியல் யுத்தத்தை மேற் கொள்ள ஏற்ற கல்வி வழங்கப்பட்டில்லாத போராளிகளால் மீண் டெழ இயலவில்லை. பின்வந்த அரசியலாளர்கள் முள்ளிவாய்க்கா லைப் பிச்சைக்காரப் புண்ணாக்கி வாக்குப்பொறுக்க எத்தனிக்கின் றனரே அன்றி விடுதலைத் தேசிய அரசியல் முன்னெடுப்புக்கு ஏற்றதான நடவடிக்கைகள் குறித்த அக்கறை அற்று உள்ளனர்.

கொடியன்குளம் இதற்கு முற்றிலும் வேறுபட்டதாக, வீறுடன் பொங்கியெழுந்து கைகளில் ஆயுதங்களை ஏந்தி எதிர் தாக் குலை மேற்கொண்டது. தம்மைத் தாக்கும் முக்குலத்தோரைத் தேடித்தேடி வாள்களால் வெட்டிச் சாய்த்தனர். அவ்வாறு ஆயுத மேந்திப் போராடியதனால் அதற்குப்பின்னர் அதுபோன்ற அழித் தொழிப்பு அந்த இனத்தவர் மேல் மேற்கொள்ளப்படவில்லை, ஆங்காங்கே சாதி மோதல்கள் மட்டுமே தொடர்ந்தன, கொலைக் குக்கொலை, அடிக்கு அடி என்பதை நிறுத்த இயலவில்லை




என்று நக்கீரன் பிரகாஷ் கூறத்தவறவில்லை. அவற்றை நிறுத்தும் பொருட்டு மாவட்ட கலெக்டர் சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொண்டபோது கொடியன்குளம் 'எங்களால் வேறெதுவும் செய்ய இயலவில்லை, வாளேந்துவதைத் தவிர' என்றபோது சாதி-வெறி ஆணவத்துடன் கலெக்டர் சொன்னார் 'நீங்கள் வாழேந்தினால் நாங்கள் துப்பாக்கியைத் தூக்குவோம்' என்று.

அவ்வாறு அரசுயந்திரத்தால் தொடர்ந்து ஆதிக்க சாதிப் பக்கத்தில் மட்டும் இருக்க இயலவில்லை. அந்தச் சாதிவெறிக் கலெக்டர் கூறியதுபோலத் தொடர்ந்து துப்பாக்கி பேசியிருப்பின் அந்த மக்களும் துப்பாக்கிகளால் பதிலிறுத்திருப்பர் என்பது நிதர்சன உண்மையாக வெளிப்பட்டு இருந்தது. ஏற்கனவே அந்தக் கிராமத்தினுள் உண்மை அறியும் குழு எனச் செல்லும் ஒழுங்கமைவை மேற்கொண்டது கொம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) பிரிவு ஒன்று. அவர்களுக்கான வலுவான அரசியல் முன்னெடுப்புக்கு ஏற்ற அதிக வாய்ப்பை வழங்கிவிடக்கூடாது என்பதில் அரசு யந்திரம் எச்சரிக்கையுடன் இருந்தது.

அந்த உண்மை அறியும் குழுவுடன் சென்றவர் தான் மருத்துவர் கே. கிருஷ்ணசாமி. அவர் அதே தேவேந்திரகுல வேளாளர். அதனூடாக அவர் அச்சாதித் தலைவராக வளர ஆட்சியியலும் ஊடக அரக்கனும் உதவிகள் புரிந்தன. 'புதிய தமிழகம்' என்ற அவரது சாதிக் கட்சி உதயமாகி எழுச்சி கொள்ள கொடியன்குளம் வலுவான அடித்தளமாக்கப்பட்டது.

இன்று அவரிடமும் (புதிய தமிழகம் கிருஷ்ணசாமியிடமும்) நேர்காணல் பெறப்பட்டது. அந்த மக்களது போர்ச் சுவாலையின் உத்வேகத்தினாலேயே தான் தலைவராக்கப்பட்டேன் என்பதைக் கூறுவதற்கு மாறாகத் தலைகீழாக்கி, தனது தலைமையும் புதிய தமிழகம் கட்சியின் எழுச்சியுமே அந்த மக்களுக்கு கேடயமாக அமைந்தது எனகிறார். செவ்வி கண்டவரும் 'உங்களை அந்தக் கிராமத்தில் நிஜ கர்ணன் எனக் கூறி வரவேற்றார்களாமே' என்றபோது அதனை மறுத்து அந்தக் கிராமம் முழுமையும் கர்ணன்களாக ஆயுதமேந்தி இருந்தது' என்று சொல்வதை விடுத்து அதனை அங்கீகரிக்கும் அற்பத்தனமான அரசியலாளராக அவர் நடந்துகொண்டார். சினிமாவும் அந்த மக்கள் எழுச்சியின் முழுமைப் பரிமாணத்தை வெளிக்கொணர இயலாமல் வெறும் தனிமனித வீர சாகசமாக (ஹீரோ இஸமாக) குறுக்கிவிட்டதோ என்ற நெருடலும் எழுந்தது.

தமிழகத்தில் 'கர்ணன்' படத்தைப் பார்த்த தோழர்களது கருத்து இந்த நெருடல் அவசியமற்றது என உணர்த்தி நிற்கிறது. மார்க்சிய நோக்கை வரித்தபடி சமூகச் செயற்பாட்டாளராக இயங்குபவர், மற்றும் சினிமாக் கலையைக் கற்றுத்தரும் விரிவுரையாளர் என வெவ்வேறு பார்வைக்கோணங்கள் வாயிலாக அணுகும் தோழர்கள் அத்திரைப்படத்தைப் பார்த்து விதந்துரைத்து விமரிசனங்களை முன்வைத்திருப்பதனை அறிய இயலுமாக உள்ளது. கதை கூறுவதை விடவும் உணர்வலைக்குள் பாத்திரங்களது வாழ்வியலைக் கடத்தும் கலையாக விளங்குவது சினிமா என்ற வரைவிலக்கணத்துக்குத் தமிழில் சிறந்த எடுத்துக்காட்டாக கர்ணன் திரைப்படம் திகழ்கிறது என்பது அந்த விமர்சகர்களது கருத்து.

அவர்கள் வெளிப்படுத்தும் இன்னொரு கருத்தும் முக்கியத்துவம் உடையது. குறியியல் ஊடாகப் பல விடயங்களைப் பேசும் இத்திரைப்படம், கர்ணன் என்பதைக்கூட குறியீடாகவே முன்வைக்கிறது. போர்க்குணத்துடன் திருப்பி அடிக்கும் மக்கள் எழுச்சிக் குறியீடு கர்ணன். அந்தவகையில் கதாநாயகனான கர்ணன் தனிமனித வீர சாகசக்காரன் என்பதைவிட, வரலாற்றில் தனிநபர் வகிக்கும் முனைப்புமிகு பாத்திரமாக எழுச்சி கொள்கிறான். இதற்கு உதாரணமாக ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அடிமைப் புரட்சியெழுச்சியின் குறியீடாக வெளிப்பட்டுக் கொண்டாடப்படும் ஸ்பார்ட்டகசை அந்த விமரிசகர்கள் ஒப்பீடு செய்கின்றனர்.

ஆக, புரட்சித் தலைவர்களாக மேலெழத்தக்க கர்ணன்கள் தனிமனித வீரசாகச நாயக விம்பங்களினின்றும் வேறுபடுத்திப் பார்க்கப்பட வேண்டியவர்கள் என்பது தெளிவு. பிரச்சினை, புதிய தமிழகத் தலைவரான கிருஷ்ணசாமியால் அத்தகைய புரட்சி நாயகனாகத் தொடர்ந்து இயங்க இயலவில்லை என்பதில்தான் உள்ளது. அவர் மக்களுக்குத் துரோகமிழைத்து மக்கள் விரோதிகளுடன் காட்டிக் கொடுப்பு அரசியலை மேற்கொள்கிற சிதைவுகளுக்கு ஆளாகிவிட்டவர்.

அந்த எழுச்சி 1991ம் ஆண்டின் அம்பேத்கர் நூற்றாண்டுடன் இந்தியா முழுவதும் தலித் விழிப்புணர்வு மேலோங்கி மக்களைச்

செயலுக்கு உந்தியதன் ஒரு உச்சக் குறியீடாக அமைந்த ஒன்று. அனைத்துத் தலித் பிரிவினரையும் இந்த எழுச்சியின் பங்குதார ராக்குவதற்கு மாறாக தேவேந்திரகுல வேளாளரைப் பட்டியல் சாதியினின்றும் நீக்கும் தனிச்சாதி விவகாரமாக்கிக் குறுகிய அரசி யல் ஆதாயம் தேட முனைந்த துரோகத் தலைவராக அவர் வெளிப்பட்டு நிற்கிறார்.

நூறாண்டுக்கு முன்னர் நாடார் சாதியினர் தீண்டாமைக்கு உரிய பட்டியலில் இருந்து வெளியேறிய சமூக அசைவியக்கம் நடந்தது மெய் அன்று அச்சாதிப் பிரிவினர் தனித்துப் போராட நிர்ப்பந் திக்கப்பட்டிருந்த வரலாற்றுச் சூழலினால் அதைக் குற்ற விமர் சனத்துக்கு உட்படுத்துவதைவிடத் தலித் அரசியல் எழுச்சி வர லாற்றரங்கில் மேலோங்கிவிட்ட நிலையில் கிருஷ்ணசாமி ஏற்படுத் தும் பிரிவினை மன்னிக்க இயலாத ஒன்று. ஒடுக்கப்பட்ட சாதிப் பிரிவினர் அனைவரும் ஏனைய அனைத்து மக்களுக்கும் உரிய-தான பூரண குடியுரிமை பெறுவதற்கான போர்க்குரலாக அவர் திகழ்ந்திருந்தால் மட்டுமே நிஜ கர்ணன் எனப் போற்றப்படும் தகுதியைப் பெற்றவர் ஆக இயலும்.

இலங்கையில் கொடியன்குள எழுச்சிக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் (அறுபதாம் ஆண்டுகளின் நடுக்கூறில் இருந்து) சாதி வெறியர்களின் ஆயுதமேந்திய ஒடுக்குதலை ஆயுதமேந்தி முறிய டித்த வரலாறு இடம்பெற்றிருந்தது. அவ்வாறு திருப்பித் தாக்கு வது தமிழகத்தில் இடம்பெற்றதைப் போன்ற 'கொலைக்குக் கொலை' என்ற தொடர் வன்முறை மோதலாக அமைந்ததில்லை. ஆரம்பம் முதலே கொம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலுடன், மார்க்சியப் புரிதல்கொண்ட போராளிகளாக ஒடுக்கப்பட்ட மக்கள் களத்தில் இயங்கினர். சாதிவெறியரில் எந்தவொருவரை அழிப்பது தொடர் தாக்குதலை நிறுத்துமெனக் கூடி முடிவெடுத்து ஆயுதப் பிரயோகம் மேற்கொள்ளப்படுவதாக அந்த வரலாற்று இயக்கம் இருந்தது. கட்சிக் கோட்பாடு, ஸ்தாபனக் கட்டுக்கோப்பு, கூட்டு முடிவு என்ற விடயங்கள் இவ்விவகாரங்களில் இடம்பெற்றிருந்தன என்பதனை தேவகாந்தனின் 'யுத்தத்தின் முதலாம் அதிகாரம்' என்ற நாவலும் எடுத்துக்காட்டி இருந்தது.

அத்தகைய கொலைச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து நிச்சாமக் கிராமம் பொலீசாரால் சுற்றி வளைக்கப்பட்ட பொழுது போராளி கள் வெள்ளாளர் வீடுகளில் கரந்துறையும் அளவுக்கு கொன்றொ ழிக்கப்பட்ட சாதிவெறிச் சண்டியனுக்கான தண்டனையை அந்த மக்களால் அங்கீகரிக்க இயலுமாக ஆக்கப்பட்டு இருந்தது. அது சாதிப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை. 'சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற பதாகை யின் கீழ் முன்னெடுக்கப்பட்ட விடுதலைத் திணை அரசியலாக அது அமைந்திருந்தது.

கொடியன்குளம் மக்கள் போராட்டமும் அவ்வகையில் விடுதலைத் திணை அரசியலாக வளர்க்கப்பட வேண்டிய ஒன்று. அடையாள அரசியல் மேலாண்மையுடன் இயங்கும் இந்தியாவில் உடனடியாக அது சாதிக்கட்சி வலுப்படக் களம் அமைப்பதாகிவிட்டது. இன்று புதிய தமிழகம் பல வகைகளில் அம்பலப்பட்டுள்ள நிலையில் மார்க்சியர்கள் அந்த அனுபவங்களை விடுதலைத் திணை அரசி யலாக மாற்றத்தக்க முயற்சியை முன்னெடுத்தவாறே உள்ளனர்.

இலங்கை அரசியலில் திணை அரசியல் செல்நெறியே மேலாண்மை உடையது என்ற போதிலும் முள்ளிவாய்க்கால் அனுபவங்களைப் போர்க்குணத்துடன் விமரிசனம் - சுயவிமரிசனம் என்ற அரசியல் விழிப்புணர்வுடனான மறுபரிசீலனைக்கு உரிய-தாயாக்க இயலவில்லை. பிச்சைக்காரப் புண் அரசியலாக இயக்கும் சக்தி இன்னமும் இந்தக் களத்தில் வலுப்பட்டு வரக் காண்கிறோம்.

வர்க்க அரசியலை முன்னெடுத்துவந்த மார்க்சியர்கள் அது தீர்மானகரமானதாக அமைந்திருந்த பொழுது மக்கள் இயக்கங்க ளுக்கு தலைமை ஏற்பவர்களாக இருக்க இயலுமாயிற்று. முழுச் சமூக சக்திகளுக்கு உரியதான திணை மோதலாக சாதி, தேசிய இன அரசியல் அமைந்துள்ள இன்றைய நிலையில் அவற்றுக்குத் தலைமை ஏற்பதற்கு முழு அளவில் மார்க்சியர்களால் இன்னமும் இயலாதுள்ளது. மாறிவரும் வரலாற்று இயக்கப்போக்கைப் புரிந்து கொண்டு கோட்பாடுகளை உருவாக்கி மக்கள் போராட்டங்களைத் தலைமை ஏற்று முன்னெடுக்க வழிப்படுத்துவதாக மார்க்சியம் மட்டுமே உள்ளது. மார்க்ஸ், லெனினைக் கடவுளராக்கிய கொம்யூ னிஸ்ட் கட்சித் தலைமைப்பீட மதப் புரோகிதங்கள் அத்தகைய மார்க்சியத்தை மறைபொருளுக்கு உரிய மந்திர உச்சாடனங்க ளாக்கிக் கெடுத்து வைத்தருக்கின்றன. அத்தகைய அதிகாரப் பீடங்களை வீழ்த்தியழித்து முன்னேறும் மார்க்சியம் மட்டுமே கெட்ட போரிடும் இன்றைய உலக நாசங்களை முடிவுக்குக் கொண்டுவர வல்லது.

மார்க்சியம் மட்டுமே மக்கள் விடுதலைக்கு வழிகாட்டும் என்ற வகையில் அதனைக் கையேற்போம் - தெளிவுறக் கற்போம்! அதனை வெறும் மந்திர உச்சாடனங்களாக்கிச் சிதைக்கும் அதி காரப் பீடங்களின் பிடிகளில் இருந்து முன்னுரிமை கொடுத்து மெய்யான மார்க்சியத்தை மீட்டெடுப்போம்! இன்றைய வரலாற்று அரங்குக்கு உரியதாக, மக்கள் விடுதலைக்குப் பிரயோகிக் கப்படும் மார்க்சியம் - லெனினிசமாக
அதனை வளர்த்தெடுப்போம்!



raveendran.n@thaiveedu.com

**JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.**

*"We provide reliable year around Tax and Accounting services."*

**Our Services included:**

* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency's Audit assistance

Starting from
$24.90 Plus tax

Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com

# The Great Indian Kitchen

## சமையற்சுமை பற்றிய படமல்ல!

- கவிதா லட்சுமி

இப்படத்தில் காட்டப்படும் படிமங்கள் காத்திரமானவை. இந்தியச் சமயலறையைச் சுற்றி நகர்கின்ற கதை. எனினும் படம் சமையற் சுமை பற்றியதல்ல. மனவுணர்வுகள், அதன் நுட்பங்கள், அதன் இயங்குவிசைகள், வெளிப்பாடுகள் பற்றியது மட்டுமல்லாது சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டுக் காக்கப்படும் கற்பிதங்கள், ஆண்-பெண் உறவுச் சிக்கல்கள், இயல்புகள், முரண்கள், எதிர்பார்ப்புகள், சலிப்புகள், ஏக்கங்கள், சுயங்கள் என விரிந்த தளத்தில் இயங்குகின்றது இதன் திரைக்கதை.

ஒரு திரைப்படம் பற்றி நான் எழுதுவது என்பது, எனக்கு நானே எழுதிக்கொள்வது போன்றது. திரைக்காட்சிகள் தரும் மெய்யுணர்வை எழுத்துக்களால் நிரப்பிவிட முடியாது. சில படங்களைப் பார்க்கும்போது அதைப் பற்றி யாரிடமாவது பேசவேண்டும் போல தோன்றும். பேசிய பின்னும் மனதில் ஏதோ ஒன்று படிந்துபோய் இருந்தால் எழுதத் தொடங்குவது வழக்கம். அந்தவகையில் பேனா மிகப்பெரும் சுமைதாங்கி.

இந்தப்படத்தின் கதையொன்றும் புதிய கருப்பொருளைப் பேசவில்லை. பலகாலமாக கவிதைகளும் சிறுகதைகளும் கையாண்டு வரும் பேசுபொருள்தான். 'மூலைகள்' என்ற எனது கவிதையும் இதே பேசுபொருள்தான். ஆனாலும் எடுத்துக்கொள்ளப்பட்ட கருவினை திரையில் காட்சிகளாக, ஒளியாக, ஒலியாக, கவித்துவமாக வளர்த்தெடுப்பது சவால்கள் நிறைந்தது. அந்த வகையில் மிக நேர்த்தியாகவும் உணர்வுபூர்வமாகவும் திரைப்படமாக உருவாக்கப்பட்டிருக்கின்றது 'The Great Indian Kitchen' என்ற மலையாளத் திரைப்படம்.

பாட்டி, பாட்டியின் பாட்டி, அம்மம்மா, அம்மா... எனப் பல யுகாந்திரங்களைக் கடந்து வரும் ஒரு சாதாரண பெண்ணின் கதை. எனது அப்பம்மாவோ, அம்மம்மாவோ பற்றிய நினைவுகள் வரும்போதெல்லாம் அவர்கள் கல்லடுப்பின் அருகிற்தான் நின்றுகொண்டிருக்கிறார்கள்.

சரி, இனிப் படத்திற்கு வருவோம். நாயகி நடனம் கற்பவள். எழுத்தோட்டத்தில் காட்சி கடந்து செல்கிறது. அவள் நடன ஒத்திகை செய்யும் காட்சியும் அடுப்பில் வேகும் பல்வேறு உணவுப் பொருட்களின் காட்சிச் சட்டகங்களும் ஒரு சில நிமிடங்களுக்குள் மாறிமாறித் திரையில் பிரசன்னமாகுகின்றன. அடுத்து ஆச்சாரமான (கௌரவமான என்று கருதப்படுகிற) ஒரு குடும்பத்தில் அவளைப் பெண் குடுப்பதோடு கதை தொடங்குகிறது.

எந்தப் பிச்சல் பிடுங்கலும் இல்லாத குடும்பம். தானே எல்லா வேலைகளையும் இழுத்துபோட்டுக்கொண்டு செய்யும் 'நல்ல' மாமியார். வேலையும் வீடுமாக இருக்கும் 'நல்ல' கணவன். குரலை உயர்த்திப் பேசாத 'நல்ல' மாமனார். வேறு என்ன வேண்டும் என்று சமூகம் இலகுவாகக் கடந்து செல்லும் குடும்பச்சூழல். அனைவரும் இந்தியச் சமூகப் பார்வையில் மிக நல்லவர்கள். இவர்களை நாம் எந்த வகையிலும் தனிப்பட்ட ரீதியில் குற்றம் சொல்லிவிட முடியாது. அப்படி நாம் கையை நீட்டுவதென்றால், நீட்டவேண்டியது எம் சமூகத்தை நோக்கித்தான். சமூகம் கட்டமைத்து வைத்திருக்கும் கருத்தியலை நோக்கித்தான். குடும்பம், திருமணம், பெண்கள் பற்றிய கற்பிதங்கள் மீதுதான்.

**கதை:**

மாமியார் தன் மகளுக்குப் பிரசவம் பார்க்கப் போக, நாயகி சமையல் வேலைகளைப் பொறுப்பெடுக்கத் தொடங்குகிறாள்.

படம் முழுவதும் இரைந்து கிடக்கும் சமயலறையும், சாப்பாட்டு மேசையும் கூறியதுகூறலாக காட்சிகளாகிக் கொண்டே இருக்கின்றன. அவள் சமைத்துக் கொண்டே இருக்கிறாள். அவர்கள் சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். நமக்குச் சலிப்பூட்டும் வரை இவைதான் காட்சிகள்.

குடும்பம் என்றால் யாராவது ஒருவர் சமைக்கத்தானே வேண்டும் என்றுதான் இப்போதும் நினைக்கத்தோன்றும். அப்படிச் சிந்திக்கத்தான் நாம் பழக்கப்பட்டிருக்கிறோம்.

சமயலறைகளை, வீட்டின் அனேக பொறுப்புகளைத் தன் தலைமேல் சுமப்பதில் பல தசாப்தங்களைக் கடந்து கொண்டிருக்கிறாள் பெண். இதை ஒரு மிக நுட்பமாக ஒரு காட்சியினூடு சொல்லிவிடும் திறமை இப்படத்தின் இயக்குனரிடம் இருக்கிறது.

இத்திரைப்படத்தோடு ஒப்புநோக்கின், மேலைத்தேய நாடுகளில் அளவீடுகள் மாறுபடலாம். பாத்திரங்கள், வசதிவாய்ப்புகள், பொருளாதார நிலைகள் மாறுபடலாம், ஆனாலும் மனம் என்பது ஒப்பீட்டளவில் அப்படியாகவேதான் இருக்கிறது (விதிவிலக்குகள் இருக்கலாம்). மேலத்தேய நாடுகளிலும் ஒரு குடும்பத்திற்கான நாளாந்தச் சமையல் பொறுப்பினை பெண்களே அதிகம் சுமக்கின்றனர் என்பது மிகையல்ல.

காட்சியொன்றில், நாயகி வீட்டின் ஆண்களிடம் தான் வேலைக்குப் போக அனுமதி கேட்கிறாள். மறுக்கப்படுகிறது. கேட்பதே அநீதிதான். மறுக்கப்பட்டது மட்டுமல்லாமல், ஒரு வீட்டினை நல்லபடியாக வைத்துப் பெருமை சேர்ப்பது கலெக்டெர் வேலையைவிட சிறப்பானது என்ற அறிவுரை, மதஅடிப்படைவாத்தின் பெரும் வஞ்சகம். காலம், தேசம் கடந்து இப்படியான கருத்துப் பிரயோகங்களும் மேலத்தேய நாடுகளுக்கும் அந்நியமானவையல்ல.

பல நுட்பமான, நேரடியான அவமதிப்புகளை, சுயம் சார்ந்த இழப்புகளைக் கடந்து செல்கிறாள் நாயகி. ஆனால் நாயகனுக்கு அப்படியல்ல. அவள் கேட்கும் ஒரே ஒரு கேள்வி அவனின் கர்வத்தை சீண்டக்கூடியதாக இருக்கிறது. அந்தக் கேள்விக்காக அவளைக் குற்றவுணர்வுக்கு உட்படுத்தி, நிர்ப்பந்தித்து மன்னிப்பும் கேட்க வைக்கின்றான்.

அழுக்குகளும், பலநாள் திருத்தப்படாத கழிவுநீர்க் குழாய்க் கசிவின் மணமும் அவளை உறக்கம் வரை துரத்துகிறது. இரவுகள் அனைத்தும் வலி நிறைந்ததாகவே இருக்கிறது. உடலுறவின் போது வலி இருப்பதாகச் சொல்கிறாள். உடலுறவு சார்ந்த அந்தரங்க விடயங்களைப் பெண் பகிர்ந்து கொள்வது அத்தனை இழுக்கானதாகப் பார்க்கும் ஆணின் மனம் அப்பட்டமாக திரையில் காட்டப்படுகிறது. இயக்குனர் மீண்டும் தன்னை நிரூபிக்கும் காட்சி.

சந்தர்ப்பங்களில் 'உனக்கு இது தெரியாதா? என்ற ஆணின் கேள்வியில் மறைபொருளாக இருப்பது உடலுறவு பற்றி மட்டும் தெரிந்திருக்கிறதே என்பதுதான்.

ஆண்-பெண் கூடல் காட்சியாகப்படுவது ஒரு அசௌகரியமான காரியம்தான். அதன் முக்கியத்தும் அறிந்து, அது ஏற்படுத்த வேண்டிய தாக்கத்தினை உணர்ந்து இக்காட்சிகள் அமைக்கப்படுவதே காத்திரமானது. பல திரைப்படங்கள் இக்காட்சிகளை வியாபார உத்தியாகவோ, துணிகரமாகன செயல் என்ற புகழுக்காகவோ காட்சிப்படுத்துவதையும் நாம் பல திரைப்படங்களில் கண்டிருக்கிறோம். உடலுறவுக் காட்சியில் நாயகியின் முகத்திற்கு மட்டும் வைக்கும் close-up மனதை பிழிந்து செல்கிறது.

இப்படத்திற் காட்டப்படும் படிமங்கள் காத்திரமானவை.

வரிசையாகப் பல தலைமுறைகளின் திருமணப் புகைப்படங்கள் சுவரில் மாட்டப்பட்டிருப்பதை நாயகி கவனிப்பது. ஒரு சுமை தாங்கிப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகத் தன்னை அடையாளம் கண்டுகொள்ளும் காட்சி.

கல் அடுப்பு எரிய (அவ்வீட்டு ஆண்களுக்கு கல்அடுப்பு அரிசிச்சோறுதான் வேண்டும்) அதன் முன்பு மடிக்கணினியில் வேலை பார்க்கும் நாயகி. பழமையையும் நவீனத்தையும் ஒரே சமயத்திற் சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்ட பெண்.

மாதவிடாயின் போது உதவிக்கு வரும் உறவுக்காரப் பெண், பெரும்பான்மை சமூகத்தின் குறியீடு. ஆணின் மனநிலைக்கு தன்னையும் தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் ஒப்புக்கொடுக்கத் தயாராக இருக்கும் பெண் அவள். அவர்கள்தான் தம்மை சுற்றியுள்ளவர்களிடம் குற்றஉணர்வை ஏற்படுத்திக்கொண்டே இருக்கும் பக்கத்து வீட்டு அத்தைகள்.

தினமும் பால் கொண்டுவரும் ஒரு குட்டிச்சிறுமி. அப்பாவித்தனம் மாறாது சில மீறல்களைச் செய்ய எத்தனிக்கும் பெண். ஆனாலும் எதிர்காலத்து வேலைகளுக்கான 'பெண்ணாயிருப்பதற்குரிய' வகையில் கச்சிதமாகப் பழக்கப்படுத்தப்படுகிறாள்.

தான் செய்யும் வேலைகளை இரசித்து செய்யப் பழகிவிட்ட வேலைக்காரப் பெண்.

பிரசவத்திற்கு மகள் அழைத்ததும், ஒரு சமையல் அறையையே பெட்டிக்குள் அடுக்கி வைத்துக் கொண்டு புறப்படும் ஒரு தாய்.

இப்படத்தில் எந்த இடத்திலும் பின்னணி இசை கிடையாது. அதுவே ஒரு பெருங்குறியீடுதான்!

வீட்டின் ஆண்களுடைய முகத்தில் கழிவு நீரை விசிவிட்டு வீட்டைவிட்டே கிளம்புகிறாள். அப்போதுதான் கடலும், பரந்தவெளியும், காற்றும் என விரிந்த உலகமொன்று படத்திற் காட்டப்படுகிறது. அந்தக் காட்சி வரும்போதுதான் பார்வையாளர்களான நாமே மூச்சுவிடத் தொடங்குகிறோம்.

நாயகியின் பிறந்த வீட்டில் 'நீ பிரிந்து வந்தது தவறு' என்ற வழக்கமான அறிவுரைகள்.

அவளுடைய தம்பி தாயிடம் தண்ணீர் கேட்கிறான். தாய், சின்ன மகளைத் தண்ணீர் எடுத்துக்கொடுக்கச் சொல்கிறாள். ஒரு பெண்ணிடம் வேலை வாங்கப் பழக்குவது நாயகிக்குச் சீற்றத்தை ஏற்படுத்துகிறது. ஒரு சமூகத்தின் ஆண், பெண் சார்ந்த பாரபட்ச வளர்ப்புமுறைக்கு எதிரான அகச்சீற்றம் அது.

இத்திரைக்கதையில், நாயகி இன்னொரு திருமண பந்தத்தை நாடவில்லை. ஒரு ஆணையும் நாடவில்லை. தனக்கான ஒருவனை அவள் கண்டடையக்கூடும். தற்போதைக்கு தனது கனவுகளை நிறைவேற்ற மிடுக்கோடு புறப்படுகிறாள். ஆனாலும் அத்தோடு படம் நிறைவுறவில்லை.

அவள் போனால் என்ன? எத்தனை பெண்கள் இருக்கிறார்கள். அவள் சமைத்த அதே சமயலறையில் இன்னொரு பெண் அமர்த்



தப்பட்டிருக்கிறாள். கணவனுக்கான தேனீர் குவளையைக் கழுவிக் கொண்டிருந்த புதியவளிடம் அதே மலர்வு, அதே வெட்கம், அதே நெகிழ்வு. அதே போல தன் புது மனைவி அருகில் ஆசையோடு நின்று கொண்டிருக்கிறான் மீண்டும் அவன். 'நீ வேலையைச் செய்துகொண்டிரு, நான் தயாராகி வருகிறேன்' என்ற பல யுகாந்திரங்களாய்ச் சொல்லப்பட்ட வசனத்தை அவனும் சொல்வதோடு படம் முடிகிறது.

காலகாலமாய் இந்த ஆண்களும் பாவம்தான். ஒரு பெண்ணினுடைய மிக நுட்பமான உணர்வுகளைப் புரிந்து கொள்ளவே எத்தனிக்காத ஆண்கள் பாவமானவர்கள்தானே. அவர்கள் தாங்கள் சொல்வது செய்வது எல்லாம் சரி என்றே நம்பப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இருமன வாழ்வின் அழகியல்களை, பேரன்புகளை அனுபவிக்க முடியாதவர்களாவே வாழ்ந்து மடிகிறார்கள்.

குடும்பச்சூழலில் அவதிப்படும் நிறைப் பெண்களை அறிந்திருக்கிறேன். அவர்களிடம் வேலை இருக்கிறது. வசதி இருக்கிறது. சமயல் என்பதும் பெருஞ்சுமை இல்லை. ஆனாலும், அவதி மட்டும் ஒரேபோல இருக்கிறது. சலிப்பூட்டும் வழக்கமான வாழ்வில் இருந்து தப்பித்து விடுவதற்கு கலையோ, தனிப்பட்ட ஒரு விருப்போ இருபாலருக்குமே அவசியமானது. நல்ல வேளையாக படத்தின் நாயகிக்கு ஒரு கலை தெரிந்திருந்தது. கிளம்பிச் செல்வதற்குப் பிறந்த வீடும் ஒன்று இருந்தது. ஒன்றிலும் ஈடுபாடுமின்றி, பிறந்த வீடுமின்றி வாழும் மனிதர்களும் இருக்கிறார்கள்.

பெண்களைப் பற்றித்தான் படம் பேசுகிறது. தம்மைத்தாமே அறிந்து கொள்ளக்கூடிய பெண்களுக்கான படம்தான். இருந்தும், இது ஆண்களுக்கான படம். முக்கியமாக பெண்களின் நுண்ணுணர்வுகளை புரிந்து கொள்ளமுடியாத, புரிந்து கொள்ள விரும்பாத, புரிந்து கொள்வதே இழுக்கென நினைக்கின்ற ஆண்களுக்கான படம். இந்தப் படம் என்ன சொல்லிவிடப் போகிறது, என்ன சொல்லிவிட்டது என்ற கருத்தினைக் கொண்டுள்ள அனைத்து ஆண்களுக்குமான திரைப்படம்.

மலையாளப்படங்கள் தம்மை நிரூபித்துக்கொண்டே இருக்கின்றன. பல காட்சிகள் சமயலறையிலே நகர்ந்தாலும் இது சமயற்சுமை பற்றிய படமே அல்ல. படம் இந்தியச் சமயலறையைப் பற்றி பேசுவதாக இருக்கலாம். ஆனாலும் கதையின் மூலம், சமயலறைச் சுமை மட்டுமேயல்ல.

மனஉணர்கள், அதன் நுட்பங்கள், அதன் இயங்குவிசைகள், வெளிப்பாடுகள் பற்றியது. சமூகத்தினால் கட்டமைக்கப்பட்டுக் காக்கப்படும் கற்பிதங்கள், ஆண்-பெண் உறவுச் சிக்கல்கள், இயல்புகள், முரண்கள் எதிர்பார்ப்புகள், சலிப்புகள், ஏக்கங்கள், சுயங்கள் என விரிந்த தளத்தில் இயங்குகின்ற திரைக்கதை. சமூகத்தின் அகமும் தனிமனிதனின் மனமும் ஒன்றுதானே!

The Great Indian Kitchen திரைப்படத்தைப் பார்ப்பதற்காக OTT தளமொன்றில் தேடியபோது நடிகர் விஜயின் மாஸ்டர் படம் மலையாத்திலும் மொழிமாற்றம் பெற்றிருப்பதைக் கண்டேன். திக்கென்று இருந்தது எனக்கு.



kavitha-laxmi@thaiveedu.com



FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# தமிழ்வலை - 67

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-67 வினா

### இடமிருந்து வலம்

1 சிலப்பதிகாரத்தில் ஒரு பாகம்

6 அண்மையில் இறந்த நடிகர்

7 இலக்கு நிர்ணயி

9 அக்கறை

12 ஏங்கு

13 நேயம்

15 முதுகு வளைவு

16 ஒரு முட்செடி

17 உடல்

19 பாண்டியரின் ஒரு தலைநகர்

### மேலிருந்து கீழ்

2 யாழ் குடாநாட்டில் ஓர் இறங்குதுறை

3 பேர்போன சிலேடைப் புலவர்

4 புகு

5 ஒரு குறளின் துவக்கம்

8 ஏறத்தாழ இலங்கையின் குடித்தொகை கொண்ட கண்டம்

11 ஒரு மாதம்

14 ஒரு திணை

15 ஒருவகை ஆந்தை

16 ஒரு பேர்போன தமிழ்ச் சஞ்சிகை

18 குறிஞ்சி மலர் நாவலாசிரியரின் முதலெழுத்துகள்

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 66க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | 1 ம | ■ | 2 வா | ■ | 3 ம | 4 த | ர | 5 சா |
| 6 க | கு | ணா | ■ | 7 து | ணை | ■ | று | ■ | ண |
| ந் | ■ | ள | ■ | மை | ■ | 8 பா | ■ | ■ | க் |
| த | ■ | ன் | ■ | ■ | 9 அ | ல | ர் | ■ | கி |
| ரோ | ■ | ■ | ■ | 10 யை | ■ | ன் | ■ | ■ | ய |
| ட | ■ | 11 க | ல | ங் | கு | ■ | 12 வெ | ம | ன் |
| ■ | ■ | சை | ■ | தி | ■ | ■ | ■ | ■ | ■ |
| 13 ர | கை | ■ | 14 பா | லி | ■ | 15 கை | த | டி | ■ |
| ■ | ■ | 16 ஏ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 17 சே |
| 18 உ | யி | ர் | த் | த | ஞா | யி | று | ■ | டு |

## தமிழ்வலை-66 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

நாதன் கனகராஜா, ரொறன்ரோ
கணபதி சபாநாதன், ஏஜக்ஸ்
ரூபன் நாதன், ஏஜக்ஸ்
சபாநேசன் கனகு, ஸ்கார்பரே
பிறேமன் சவரிமுத்து, ரொறன்ரோ
த.செ. நடராசா, ஸ்கார்பரே
விவேகானந்தன் சுகுமாரன், மார்க்கம்

### பரிசுபெறும் போட்டியாளர்

## விஜயா கனகலிங்கம்,

**ரொறன்ரோ.**

thamilvalai@thaiveedu.com



# ஓவியங்களின் மூலம் காலக்கண்ணாடியை நமக்கு விட்டுச்சென்ற யான் பிராண்டஸ் (1743-1808)

- என். சரவணன்

இலங்கையின் அரசியல், சமூக, பண்பாட்டு, வரலாற்று விபரங்களை பதிவு செய்தவர்களில் வெளிநாட்டு அறிஞர்களுக்கே அதிக பங்குண்டு என்று நிச்சயம் கூறிவிடலாம். குறிப்பாக காலனித்துவ காலத்தில் இந்த பதிவுகள் அதிகமாகவே நிகழ்ந்தன. ஏறத்தாள சுதந்திரத் திற்கு முற்பட்ட நான்கரை நூற்றாண்டுகளாக இந்த நிலையே நீடித்தன. அவற்றைப் பதிவு செய்யும் போது ஆதார பூர்வமாக வும், தொல்லியல் சான்றுகளுடனும், விஞ்ஞான பூர்வமாகவும், ஆய்வு முறையியலுக்கூடாகவும் அவர்கள் பதிவு செய்தார்கள். இலங்கையர்கள் அதன்பின் அவற்றை தொடர்வதற்கான முன்னோ டிகளாகவும், முன்னுதாரணர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். அதற்கென்று ஒரு மரபையும், ஆய்வுப் பண்பாட்டையும் அறி- முகப்படுத்தி, கற்பித்துச் சென்றார்கள் என்றால் அது மிகையில்லை. அவர்கள் நமக்கான கல்விப் பண்பாட்டை ஜனநாயகப்படுத்தி, நவீனப்படுத்தி, வெகுஜனப்படுத்திச் சென்றதைப் போலவே நம் மையும், நம்நாட்டையும் பற்றிய பதிவுகளையும் நமக்குத் தந்து விட்டுச் சென்றார்கள்.

அச்சுப் பண்பாட்டின் அறிமுகம் அதற்கு ஒரு பெரும் பாய்ச்ச லைக்கொடுத்தது. அந்த வழியில் பல வெளிநாட்டவர்கள் ஓவியங் களின் மூலமும், புகைப்படங்களின் மூலமும் கூட நம்மையும், நம் வாழ்வியலையும், வாழ்விடங்களையும் பதிவு செய்தமை இன்றும் நமக்கும் பெரும் ஆதாரங்களை எடுத்துத் தந்து சென்றிருக்கிறார் கள்.

பெரும்பாலும் ஆரம்பத்தில் இலங்கையைப் பற்றி நூல்கள் எழுதி யவர்கள், அவர்களே ஓவியங்களையும் வரைந்து அவ் ஓவியங்க ளின் மூலம் பதிவுகளை செய்திருக்கிறார்கள். 1672ல் பிலிப்பு பால்டேஸ் (Philippus Baldaeus) ‘Description of East India Coasts of Malabar and Coromandel and Also of the Isle of Ceylon’ என்கிற நூலில் வரைந்திருந்த ஓவியங்கள் இன்றும் வியப்பான கதை- களை சொல்வனவாக இருப்பதைக் காண முடியும். அது போல ரொபர்ட் நொக்ஸ் போன்றோரும் இலங்கையைப் பற்றிய அரிய தகவல்களை பதிவு செய்த அதே வேளை, பல ஓவியங்களின் மூலமும் அவர்களின் நூல்களில் அவற்றை விளக்கிச் சென்றுள்ள னர். இன்னும் பலர் இலங்கை பற்றிய புவியியல் வரைபடங்களை வரைந்திருக்கிறார்கள்.

அந்த வரிசையில் இலங்கையை ஓவியங்களின் மூலம் பதிவு செய்த Charlotte Gudmundsson, James Stephanoff, Cornelis Steiger, Johannes Rach, Johann Wolfgang Heydt, Samuel Daniel, James Cordiner, போன்றோரின் வரிசையில் முக்கியமானவராக நாம் யான் பிராண்டஸ் (Jan Brandes) ஐக் குறிப்பிடலாம்.

**யான் பிராண்டஸ்:**

யான் பிராண்டஸ் நெதர்லாந்தின் போதகிரேவன் (Bodegraven) என்கிற இடத்தில் 1743ல் பிறந்தார். அங்கு தான் அவரது தந்தை ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்தார். அவர் 1770ல் ஒரு போதகராக நியமிக்கப்படுவதற்கு முன்பு லெய்டன், கிரீஃப்ஸ் வால்ட் ஆகிய கல்லூரிகளில் இறையியல் படித்தார். 1778ல் அவர் பதாவியாவில் உள்ள Lutheran parish தேவாலயத்தின் பங் குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். 1778ல் திருமணமானார். 1779 ஜனவரியில் அவருக்கு ஒரு மகன் பிறந்தார். ஆனால், அதே ஆண்டு யூன் மாதம் அவரின் மனைவி அன்னா கிரப்பர் (Anna Geertruyd Krebber) மரணமானார். குறுகிய காலத்திலேயே தனது மனைவியை இழந்து நிம்மதியில்லாது வாழ்க்கையை களித்த அவர், தனது பதவியையும் இராஜினாமா செய்துவிட்டு பயணங்க ளில் ஆர்வம் காட்டினார்.

1785ல் அவர் தனது பயணத்தை தொடங்கினார். இரண்டு ஆண்டு கள் பயணங்கள் மேற்கொண்ட போது தான், 1785ம் ஆண்டு தனது மகனுடன் இலங்கை வந்தடைந்தார். தனது மகனுடன் இலங்கையில் நான்கு மாதங்கள் மட்டுமே வசித்தார். அதாவது ஜனவரி 1786 வரை மாத்திரமே வசித்தார். அங்கிருந்து அவர்கள் கிழக்காசிய நாடுகளுக்கும் பயணித்து விட்டு, 1787ல் நெதர்லாந் திற்கே மீண்டும் வந்தடைந்தனர். அங்கே தனக்கு வாய்ப்புகள் மோசமாக இருப்பதை உணர்ந்துகொண்ட அவர் ஸ்வீடனுக்கு பயணம் செய்தார். 1788ல் அங்கே Skälsebo தோட்டத்தை வாங்கி னார். மரியா சார்லொட்ட (Maria Charlotte) எனும் பெண்ணை அங்கே மணந்து கொண்டார். அவர்களுக்கு இரண்டு பெண் குழந் தைகளும் பிறந்தன. ஆனால் 1792ம் ஆண்டு அவரின் மகன் இறந்து போனது மட்டுமன்றி 1802ல் அவரின் இரண்டாவது மனை வியும் இறந்து போனார். தனது இழப்புகளை மறப்பதற்காகவும் அவருக்கு துணையாக இருந்தது ஓவியம் தான். சுவீடனில் அவர் சுவீடிஷ் மொழியையும் கற்றுக்கொண்டு ஒரு கௌரவமான பிரஜை யாக வாழ்ந்து, 1808ல் அவரின் 65வது வயதில் அங்கேயே இறந்து போனார்.



யான் பிராண்டஸ்

**இலங்கையில்...**

இலங்கையில் அவர் தங்கியிருந்த அந்த ஒரு சில மாதங்கள் Lutheranஜச் சேர்ந்த பிரபல வணிகரான Van Randzouwஇன் விருந்தினராக அவர் இருந்தார். அவரின் துணையுடன் தென்னி லங்கையில் பல இடங்களுக்கு பிரயாணம் செய்தார். அப்படி கொழும்பில் இருந்த போதுதான் ஒரு ஓவியரிடமிருந்து ஓவியத்தை வெகு விரைவில் கற்றுக்கொண்டார் என்று அவரைப் பற்றிய பல கட்டுரைகளில் காணக் கிடைக்கின்றன. ஆனால், அவர் அதற்கு முன்னரே 1784ல் வரைந்த ஓவியங்களையும் நமக்கு காணக் கிடைக்கின்றன. இலங்கையிலும் அவர் ஓவியத்தை மேலதிகமாகக் கற்றுக்கொண்டார். நான்கே மாதங்களில் அவர் பதிவு செய்திருக் கிற ஓவியங்களின் எண்ணிக்கையையும், அதில் உள்ள நுட்பங்க ளையும் பார்க்கும் போது அவர் நிச்சயம் ஏற்கெனவே ஒரு அனுப வமுள்ள ஓவியர் என்று உணர முடிகிறது. அது மட்டுமன்றி இலங்கையில் அவர் கண்டவற்றை பதிவு செய்த ஓவியங்கள் பல வற்றை நகல் ஓவியமாகவும் படி எடுத்துக்கொண்டார்.



கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

அன்றைய கால மிஷனரிகளைப் போலவே யான் பிராண்டசும் பன்மொழித் தேர்ச்சியைக் கொண்டவராக இருந்தார். இறையியல் பற்றிய ஆழ்ந்த தேடல் கொண்டவராக இருந்ததால் அவர் அந்தந்த மதங்கள் பற்றி அறிவதற்காக அம்மதங்கள் சார்ந்த மொழிகளையும் கற்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

பிராண்டஸ் அப்போதைய இலங்கையின் டச்சு ஆளுநரான வில்லெம் ஜேக்கப் டி கிராஃப் (Willem Jacob van de Graaff 1737 - 1804) அவரது அதிகாரப்பூர்வ இல்லத்துக்கு விருந்துக்கு வரவழைக்கப்பட்டு உபசரிக்கப்பட்டார். பிராண்டஸ் இலங்கைக்கு வந்த அதே ஆண்டு தான் ஆளுநர் வில்லம் ஆளுனர் பொறுப்பையும் ஏற்றிருந்தார். வில்லம் ஆளுநர் பதவியில் இருந்து விலகி (1794) இரு ஆண்டுகளில் தான் டச்சு வசம் இருந்து ஆங்கிலேயர்களின் கைகளுக்கு இலங்கை போனது என்பதையும் இங்கே நினைவூட்டுவது இந்தக் காலப்பகுதியை புரிந்துகொள்ள வாசகர்களுக்கு உதவும்.

ஆளுநரின் ஒத்துழைப்புடன் அன்றைய கண்டி அரசர் ராஜாதி ராஜாசிங்கனை வருடாந்தம் சந்திக்கின்ற நிகழ்வைக் காணும் வாய்ப்பையும் பெற்றார் யான் பிராண்டஸ். அந்த சந்திப்பைப் பற்றிய சில ஓவியங்களை அவர் வரைந்தார். இன்றும் ராஜாதி ராஜசிங்கனை காட்சிப்படுத்த பலரும் தமது நூல்களிலும், கட்டுரைகளிலும் பிராண்டஸ் வரைந்த அந்த ஓவியத்தைப் பயன்படுத்தியிருப்பதைக் காண முடிகிறது.

அதுபோல பிராண்டஸுக்கு திசாவ ஒருவரும் கொழும்பில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார். அந்த திசாவவின் மூலம் யானைகளுக்கு பயிற்சியளிக்கும் இடங்களைக் காணும் வாய்ப்பைப் பெற்றார். கொழும்பை அண்டிய ஜாஎல பகுதியில் அவர் வியக்கத்தக்க அளவில் யானைகளின் எண்ணிக்கையையும், அவற்றை காடுகளில் கையாள எடுக்கப்பட்டிருந்த நுட்பங்களையும், காட்டு யானைகளுக்கு பயிற்சியளித்து மனிதத்தேவைகளுக்கு பயன்படுத்த தயார்படுத்தும் விதங்களையும் கண்டு பிரமித்தார்.

இந்த நிகழ்வின் தனித்துவமான ஓவியப் பதிவை பிராண்டஸ் 22 நீர்வண்ண (Watercolor) ஓவியங்களை வரைந்திருக்கிறார். சுமார் ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்னர் யானைகளை இவ்வாறு தயார்படுத்தியமை பற்றி காட்சிகளாக நமக்கு கிடைத்திருக்கும் பதிவுகள் இவை.

காட்டு யானைகளை சிக்க வைத்தல், அவற்றை அடக்குதல், அவற்றைக் காவல் செய்தல், பாதுகாத்து பேணுதல், பயிற்சியளித்தல் என்பவற்றை விளக்கங்களுடன் அந்த ஓவியங்களில் பதிவு செய்திருக்கிறார் பிராண்டஸ். காட்டில் பெரும் நிலப்பரப்பில் மரங்களால் நீள்முக்கோண வடிவில் வேலியமைத்து, அவற்றின் நடுவில் மூன்று கட்டங்களாக யானைகளை வேறுபடுத்தி ஓரிடத்துக்கு வரச்செய்யும் வகையில் மரத்தால் மதில்களையும் அமைத்து, இறுதியில் யானைகள் ஒவ்வொன்றாக வந்து சேரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் வடிவத்தை அவர் வரைந்திருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு நுட்பமான வடிவம் இருந்திருப்பது அந்த ஓவியத்தின் மூலம் தான் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

பிடிக்கப்பட்ட யானைகளுக்கு அவர்கள் இட்ட பெயர்கள், அவற்றின் வகைகள் போன்ற விபரங்களையும் அவர் அந்த ஓவியங்களில் பதிவுசெய்தார். அந்த ஓவியங்கள் மிகவும் உயிர்ப்புள்ளதாக இருப்பதைக் காண்பீர்கள். யானைகளின் இந்த காட்சிகளை அவர் கொழும்புக்கு அருகாமையில் உள்ள ஜாஎல பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பதிவு செய்திருக்கிறார். ஜாஎல பகுதி அன்று இப்பேர்பட்ட யானைகளின் பெரும் பிரதேசமாக இருந்திருக்கிறது என்பது நமக்கு ஆச்சரியம் அளிக்கின்ற விபரம்.

யானைகள் பற்றிய அவரின் ஓவியங்களே என்னை அதிகம் கவர்ந்த ஓவியங்கள். இக்கட்டுரைக்கு என்னை உந்தியதுகூட இலங்கையில் இன்று பெரும் சிக்கலாக உருவெடுத்துள்ள யானைகளின் பிரச்சினை குறித்த ஒரு வரலாற்று கட்டுரைக்காக தகவல்களை தேடிக்கொண்டிருக்கும் கிடைத்த யான் பிராண்டஸ்ஸின் ஓவியங்கள் தான். இந்த இரு விடயங்களையும் ஒரே கட்டுரையில் முடிக்க திட்டமிட்டிருந்தபோதும் அப்படி செய்தால் யான் பிராண்டஸ் என்கிற கலைஞனின் தனித்துவமான பெறுமதியை அது குழப்பிவிடும் என்பதற்காக யானைகள் பற்றிய கட்டுரையை தனியாக பிரித்துவிட்டேன்.

அதுமட்டுமன்றி அவர் அதன் பின்னர் அவர் இலங்கையில் கண்ட தாவரங்கள், மரங்கள். பறவைகள், விலங்குகள், பூச்சிகள் போன்ற



பன்சலைகளுக்கு யானைகளை தயார் படுத்தல்

உயிரினங்களின் தோற்றங்களையும் பெரிய அளவிலான நுணுக்கமான ஓவியங்களாக வரைந்து விளக்கம் எழுதியிருக்கிறார்.

மேலும் அவர் கொழும்பின் சுற்றுப்புறச் சூழல், கடலில் இருந்து கொழும்பு நகரை நோக்கக் கூடிய ஓவியம், வரைபடம் என்பவற்றையும் தனது ஓவியத்தின் மூலம் பதிவு செய்திருக்கிறார்.



நகரம் அதன் சுற்றுப்புறங்களின் காட்சிகள், தெரு, குடும்பங்கள், தனவந்தர்களை பல்லக்கில் சுமந்துசெல்லும் காட்சிகளையும் சில ஓவியங்களில் காணமுடிகிறது. அவர் தங்கியிருந்த காலத்தில் தமிழ் பிரதேசங்களுக்கு செல்லவில்லை எனத் தெரிகிறது. ஆனால் அவர் 'Plankein' என்று அவ்வோவியத்தில் குறிப்பிட்டுள் ளார். 'பல்லக்கு' என்கிற தமிழ்ச் சொல்லுக்கு அது நிகராக இருக் கிறது. ஆங்கிலத்தில் 'Palanquin' என்று குறிப்பிடுவதைத் தான் குறிப்பிடுகிறாரா? அல்லது அன்று அதை பல்லக்கு என்று அழைத்திருந்ததைக் குறிப்பிடுகிறாரா தெரியவில்லை. இலங்கை மீனவர்கள் பயன்படுத்திய சிறிய வள்ளங்களை அவர் தோணி (Toni) என்றே அழைக்கிறார். இந்த இரண்டு சொற்களும் சிங்கள மொழியைச் சார்ந்ததல்ல என்பதை அறிவீர்கள்.

சிதைந்த புராதன விகாரைகள், பார்வையிழந்த யாசக இசைக் கலைஞர், மார்புகளை மறைக்கும் உரிமையற்ற ரொடியோ சாதிப் பெண்கள், அடிமைகள், அன்றைய டச்சுக் காலத்தில் Lascorijns எனப்படுகின்ற வெள்ளை வேட்டி மட்டுமே அணிந்த உள்ளூர் பொலிஸ் என யான் பிராண்டஸ் பதிவு செய்துள்ள முக்கிய வாழ்வியல் பதிவுகள் அன்றைய காலக்கண்ணாடி எனலாம். அந்த ஓவியங்களின் அருகில் அவர் விளக்கமாகத் தந்துள்ள விபரங் களை வாசித்தறிவது கடினமானது. ஆனால் Max de Bruijn, Remco Raben ஆகியோர் எழுதிய யான் பிராண்டசின் உலகம் (The world of jan Brandes, 1743-1808) என்கிற நூலில் இந்த ஓவியங்கள் பற்றிய விபரமான குறிப்புகளைக் காணமுடிகிறது. அந்த விபரங்கள் யான் பிராண்டஸ் எழுதிய குறிப்புகளை அடிப் படை- டயாகக் கொண்டவை.
இப்படிப்பட்ட ஓவியங்கள் தான் இன்று அந்த காலத்தை உருவ கப்படுத்த முனையும் நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், திரைப்படங்கள், ஓவியங்கள் மட்டுமன்றி ஆய்வுகளுக்கும் கூட பேருதவியாக இருக்கின்றன.

திசாவ, முதலி போன்றார் டச்சு அதிகாரிகளைச் சந்திக்கும் காட் சிகள் என்பவற்றின் ஓவியங்களையும் காணமுடிகிறது. அதுபோல ஆண்கள் வெள்ளை வேட்டியை கட்டையாக உடுத்திருக்கும் வெவ்வேறு கோணங்களிலான காட்சிகள், முழுமையாக வெள்ளை ஆடை அணிந்துள்ள பெண்கள், அவர்கள் தலையில் கொண் டையை முடிந்து கட்டி அதனை அப்படியே வைப்பதற்கு பயன்ப டுத்திய நுட்பங்கள் என்பவற்றையும் வெவ்வேறு கோணங்களில் பதிவு செய்கிறார்.

இந்த ஓவியங்களை அவர் தனித்தனியாக பிரேத்தியமாக வரைந்து வைத்திருக்கவில்லை. தடித்த தாள்களைக் கொண்ட பெரிய புத் தகத்தில் இவ் ஓவியங்களை வரைந்திருக்கிறார் என்பதைக் காண முடிகிறது. சில ஓவியங்கள் அடுத்த பக்கத்துக்கு தொடர்கிறது. நடு மடிப்பையும் மீறி அதன் தொடர்ச்சி அடுத்த பக்கத்துக்கு தொடர்கிறது.

பிராண்டஸ் இலங்கை பயணத்தின் பின்னர் இந்தோனேசியாவில் ஜகார்த்தாவுக்கும் பயணித்தார். அங்கும் இலங்கையைப் போலவே பல ஓவியங்களின் மூலம் அங்குள்ள வாழ்வியலைப் பதிவு செய்தார். அவர் நெதர்லாந்துக்கு திரும்பிய பின்னரும் அங்கும் தான் காண்பவற்றை ஓவியங்களாக வரைவதை தீவிர மான பழக்கமாகக் கொண்டிருந்தார். அதனால் தான் அவர் ஒரு





சாதாரண குடியானவர் ஒருவரும் இரு குழந்தைகள் விளையாடுகின்றன, ஆணின் உடையாக கோவணம். மார்புகளை மறைக்கும் உரிமையற்ற இரு ரொடியோ சாதிப் பெண்கள், அன்றைய டச்சுக் காலத்தில் Lascorijns எனப்படுகின்ற வெள்ளை வேட்டி மட்டுமே அணிந்த உள்ளூர் காவலாளிகள் ஆகியோரையும் சித்திரிக்கின்ற ஓவியம்'.

முக்கிய ஓவியராக பலராலும் கவனிக்கப்படுகிறார். ஆராயப்படுகிறார்.

அவரது ஓவியங்கள் முதலில் பென்சிலால் கோட்டோவியமாக வரையப்பட்டு பின்னர் நீர்வண்ணம் தீட்டப்பட்டனவாகக் காண முடிகிறது. அவரது ஓவியத் திரட்டுப் புத்தகத்தில் பல பக்கங்கள் வெறும் வர்ணம் தீட்டப்படாத கோட்டோவியங்களாக மட்டுமே முடிக்கப்படாமல் மிச்சம் வைக்கப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

1785 டிசம்பரில் ஒரு மாத காலம் அவர் காலி நகரத்தில் தங்கிருந்தார். அந்த நினைவுகளின் சிறந்த பரிசாக அவர் தந்திருப்பது காலி கோட்டையின் ஓவியமும், காலியை கடலில் இருந்து பார்வையிட்டால் தெரியக் கூடிய நீளமான ஒரு ஓவியம். அந்த ஓவியத்தை அகலப் பரப்புக் காட்சியாக (Panoramic) குறிப்பிடலாம். கொழும்பையும் இதே அகலப் பரப்புக் காட்சியாக வரைந்திருக்கிறார்.

அவர் ஒரு தொழில்முறை ஓவியராக இராதபோதும் ஒரு பொழுதுபோக்கு ஓவியராக (Amateure) இருந்த போதும் அவரின் ஓவியங்களில் பொதிந்திருக்கிற பண்பாட்டுப் பதிவுகள், மதச் சடங்குகள், தாவரவியல், பூச்சியியல், அண்டவியல் போன்ற துறைகளுக்கு அன்று பயன்படக்கூடிய அளவுக்கு அவரின் கலைநேர்த்தி இருந்திருக்கிறது.

இன்று அவரின் ஓவியங்கள் டச்சு வரலாற்று ஆவணங்களை தொகுத்து வைத்திருக்கும் மியூசியத்தில் (Rijksmuseum) வைக்கப்



ஆண் - பெண்
கொண்டை முடி வடிவங்கள்

பட்டிருக்கிறது. இலங்கை தொடர்பாக அவர் வரைந்த ஓவியங்கள் இரண்டு புத்தகங்களாக அங்கே உண்டு. நீர்வண்ணங்களில் வரையப்பட்ட இலங்கையின் ஐந்துவித நில அமைப்புக் காட்சிகள் காணப்படுகின்றன. கண்டி அரசரை சந்திப்பதற்கு டச்சு இந்தியக் கம்பனியைச் சேர்ந்தவர்கள் சென்றது பற்றிய ஓவியம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புகைப்படமாக கருதப்படுகிறது. அதை பிராண்டஸ் நேரில் பார்த்தவரா அல்லது வேறு ஒரு-வரின் விபரங்களில் இருந்து உருவகப்படுத்தி வரைந்தாரா என்பது தெரியவில்லை. 1778 இலிருந்து அவர் மேற்கொண்ட பயணங்களின் போது வரையப்பட்ட ஓவியங்கள் தொடக்கம் இறுதியில் அவர் சுவீடனில் வாழ்ந்த காலம் வரைக்குமான சுமார் 200 வரையான ஓவியங்கள் அந்த காட்சியகத்தில் உள்ளன. அவரின் ஓவியத்தைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல அதன் பின்னர் வெளியாகியுள்ளன.

1786ல் இலங்கையில் வைத்து அவர் தன்னைத் தானே வரைந்த சுயவரை (Self portrait) ஓவியம் தான் அவரின் உருவத்தை நாம் அறிவதற்கு விட்டுச்செல்லப்பட்டுள்ள ஒரே உருவப்படமாக இருக்கிறது.

யான் பிராண்டஸ் இலங்கை வரும்வழியில் தமிழகத்தில் நாகப்பட்டினத்திலும் தரையிறங்கி ஒரு சில நாட்கள் இருந்திருக்கிறார். அங்கே அவர் கண்ட பெரிய வழிபாட்டுச் சிலையையும் ஓவியமாக வரைந்திருக்கிறார்.

தனது வாழ்நாளில் அவர் வரைந்த எந்த ஓவியத்துக்கும் தனது பெயரை ஓவியத்தின் அடியில் குறித்ததில்லை. அந்தளவுக்கு தேர்ந்த ஒரு ஓவியராக அவர் தன்னைக் கருதியதில்லை. ஆனால், பதினெட்டாம் நூற்றாண்டின் உலக ஓவியர்களை வரிசைப்படுத்தும் போது தவிர்க்க முடியாத ஓர் ஓவியராக யான் பிராண்டஸ் வரலாற்றில் பதிவாகிவிட்டார்.

அவரின் ஓவியங்கள் பற்றி வேறு மொழிகளில் செய்திருப்பதைப் போலவே தமிழிலும் தனித்தனியாக நுணுக்கமான ஆய்வுகளையும், கட்டுடைப்புகளையும் செய்ய முடியும். யான் பிராண்டஸ் நமக்கு ஓவியங்களை விட்டுவிட்டுச் செல்லவில்லை. இழந்தகாலங்களின் காலக்கண்ணாடியை நமக்கு விட்டுச் சென்றுள்ளார்.

**உசாத்துணை:**

- 2004 The world of Jan Brandes 1743-1808 Drawings of a Dutch traveller in Batavia, Ceylon and Southern Africa. Zwolle: Waanders, Amsterdam: Rijksmuseum
- Groot Hans, Van Batavia naar Weltevreden; Het Bataviaasch Genootschap van Kunsten en Wetenschappan, 1778-1867, KITLV Uitgeverij, 2009



sarawanan.n@thaiveedu.com

# நாங்கள் அவர்கள்

- க. பத்திநாதன்

‘நல்லபடி வாழச்சொல்லி இந்த மண்ணக்கொடுத் தானே பூர்வக் குடி’ இந்த பாடல் வரிகள் இன்று உலகெங்கும் ஓயாமல் ஒலித்துக் கொண்டு இருக்கின்றன. ஆனால், அவர்களின் வாழ்வில் ஒளியிழந்து பல நூறு ஆண்டுகள் ஆகிவிட்டமை எத்தனை பேருக்குத் தெரியும். உலகரங்கிலும் நிலமையிதே. இதற்கு இலங்கையும் விதிவிலக் கல்ல. இயற்கையுடன் இணைந்து, அதை தன்வயப்படுத்தி வாழ்ந்து வந்த எம்மை, மனித முன்னேறுகைகளின் படிப்படியான ஈடேற்றங்கள் அனைத்தும் கால வர்த்தமானங்களுக்கு அமைய ஒரு கை பார்த்துக்கொண்டே வந்துள்ளமை தான் வரலாறு.

இன்று இலங்கைக்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம் என பல்லி னத்தவரும் நாம் தான் உரித்துடையவர்கள் என்று கூறிக் கொண்டு இனங்களுக்கிடையே சண்டை பிடித்தாலும் சரி, அதை வைத்து வங்குரோத்து அரசியல் செய்து கொண்டு இருந்தாலும் சரி, இந்த நாடு வேடுவரான எமக்குச் சொந்தமான, எமது உத்தியாக்கள் (முன்னோர்கள்) பாதுகாத்து வளப்படுத்திய நாடு. நாம் சிங்கள வரும் அல்லர் தமிழரும் அல்லர் முஸ்லிமும் அல்லர். நாம் வேடர்கள். இந்நாட்டின் ஆதிக்குடிமக்கள். ஆனால், பருவ காலங் களுக்கு புகுந்து கொண்ட வரத்தினங்கள் நாடு பிடிச்சண்டையில். காலங்காலமாக இடம்பெற்ற பண்பாட்டசைவுகளுக்கு அமைய சிங் களவருடன் அண்டி வாழ்ந்த நாம் சிங்கள மொழியையும், தமிழருடன் அண்டி வாழ்ந்த நாம் தமிழ் மொழியையும் வரிந்து புகுத்திக் கொண்டதுதான் வரலாறு. ஆனால், இது பல நூறு ஆண்டுகளாக படிப்படியாக நடந்தேறிய செயற்பாடு.

இலங்கையின் கிழக்கிலங்கைக் கரையோரங்களில் வாழ்ந்து வந்த, வருகின்ற பூர்வகுடிகளின் நாட்டாரியலுள் ஆழ உட்புகாத ஆய்வாளர்களிலாலும், ஏனைய சமூகங்களினாலும், நாம் கரை-யோர வேடர்கள் அல்லது கடல் வேடுவர்கள் என அடையாளப் படுத்தப்படுகிறோம். ஆனால், இவ்வாறு தொழில் ரீதியாகவோ, புவியியல் ரீதியாகவோ அழைக்கப்படுவதை நாம் விரும்ப வில்லை. இது பற்றி நான் குஞ்சப்பாவிடம் கேட்கும் போதெல் லாம் ‘சூரியன் என்றால் அது பூமிக்கு ஒன்று தான்’ என்பார். அதற்கு அவர் இந்த பாடலையும் அடிக்கடி பாடிக்காட்டுவார்.

**‘கண்டியோ காலியோ கொழும்போ... ஓ...**
**செல்ல பட்டணமோ... ஓ...**
**கதிரமலையோ வேல மலையோ கணவந்தா...**
**உமகிரி... கோபாலபுரி...**
**குஞ்சுமப்பா கணவந்தா......**
**சுல்லித்தீவு... கரடிமல... ஆமபதி...’**

(இது, வேட்டுவ சடங்கு வழிபாடுகளின் போது பாவிக்கப்படும் வேட்டுவ வழிபாட்டுப் பாடல்.)

பின்னர் அவர் இவ்வாறு கூறுவார். “நாம, இலங்கையில இருக்குற வேடர்கள் எல்லாரும் ஒண்டுதான். எங்கள கரையோர வேடர், அந்த வேடர் இந்த வேடர் எண்டு ஆதிக்க சாதிகள் அத்துறு மங்கை (நிலைகுலைதல்) ஆக்கிப்போட்டுதுகள். நாங்க அப்புடி எல்லாம் இல்ல மன. இந்த சனங்கள் தான் நம்மள இப்புடி ஆக்கிப்போட்டுதுகள்”. குஞ்சப்பா இப்படிச் சொல்லக்குள்ள இந்த பாட்டுல இருக்குற மானுடவியல் பார்வைகளை அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு. ஆய்வாளர்கள் கூறுகின்ற படி கடல் வேடுவர்களுக்கு ஏனையவர்களுடன் தொடர்பு இல்லை என்றால், இப்பாடல் எங்ஙனம் இருந்து தோன்றின? மேற்கில், தெற்கில் எங்கையோ இருக்கின்ற இடங்களையும் அதன் உத்தியாக்களை யும் பற்றி கிழக்கின் கரையோரத்தில் ஏதோவொரு குக்கிராமத்தில் இருக்கும் பூர்வ குடிகளுக்கு இப்பாடல்கள் எவ்வாறு கடத்தப்பட் டிருக்கும்? இது சார்ந்தும் நான் அவருடன் வினவியதுண்டு. அதற்கு அவர் இவ்வாறு கூறுவார். “நாங்க தொழிலுக்காகவும், மத்தாக்களுட தொல்லைக்காகவும் தான் மனே இஞ்சால வந்த. வேடர்கள் ஆன நமக்கு இந்த சனங்கள் போல ஆராவது கரச்சல் தந்தா நாம அந்த இடத்துல இருக்க மாட்டம். நம்மட ஆக்க ளுக்கு இந்த சச்சரவுகள் சரிவராது. அப்புடி படிப்படியாதான் நாம இஞ்சால வந்து சேர்ந்த.” என்பார்.

கிழக்கிலங்கையில் வாழ்கின்ற எமக்கு பெரும்பாலான தொல்லை தருபவர்கள் முன்பு தமிழர்களாகவே இருந்தனர். இன்று, அதன் பட்டியலில் ஏனைய இனத்தினரும் சேர்ந்து கொண்டு விட்டனர். ஆரம்பத்தில் எம்மை எமது கலை, பண்பாட்டு ரீதியில் நெருக்கி னர். போர் கால இடப்பெயர்வுகளின் பின்னர் நில ஆக்கிரமிப் பினை படிப்படியாக முன்னெடுத்துக் கொண்டு வந்து, நாம் பூர்வீ கமாக வாழ்ந்துவந்த கிழக்குகரைப் பகுதிகளான மூதூர் பிரதே சத்திற்குட்பட்ட உல்லக்குளம் கிராமத்தை அண்டிய 200 ஏக்கர் வளமான காணிகள் ஆதிக்க சாதிகளினால் அபகரிக்கப்பட்டுள் ளன. வெருகல் உப்பூறல் பிரதேசத்திற்குட்பட்ட எமது அதிமுக் கிய பூர்வீக தளமான ‘மாவடியூற்று’ நிலப்பிரதேசமானது ‘தாகிப் நகர்’ என முஸ்லிம் கிராமமாக்கப்பட்டுள்ளது. கட்டைப்பறிச்சான் பிரதேசத்திற்குட்பட்ட சந்தனவட்டை, இலக்கந்த, பாலைவனக்கு ளம், சாலையூர் ஆதிகிராமங்கள் பலவந்தமாக ஆதிக்கவாதிக-ளால் அதன் இயற்கையை சீர்குலைப்புச் செய்து கொண்டு, பல வந்தமாக தமது ஆதிக்கத்தின் கீழ் சுருட்டி எடுக்கப்பட்டுள்ளது.

இன்னும் சொல்வதற்கு எத்தனையுண்டு.

இன்று நாம் அமைப்பு ரீதியாக ஒன்று சேர்ந்து இவ்வாறான நட வடிக்கைகளுக்கு எதிராக எமது பின்வாங்காத காத்திரமான செயற்பாடுகளில் ஈடுபட்டு கொண்டு இருக்கின்றமை இலைமறை காயாகவே வெளிவராமலுள்ளது. எம்மை அமைப்பாக பதிவு செய்வதற்கே பல வருடமாக இழுத்தடித்தார்கள். இருந்தும், இன் றும் ஆதிக்கத்துக்கு எதிராக பின்வாங்காத தீவிர செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற போதும், இவ்வாறான இக்கட்டான சூழ் நிலைகளைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்காக பேரினவாதம் எமக்கு உதவுவதாகப் பாசாங்கு செய்து கொண்டு எம்மை அவர்களின் கீழான பூர்வகுடிகளாக அடையாளம் காட்ட எத்தனித்துக் கொண்டு இருப்பதும் இங்குதான் ஈடேறிக் கொண்டு இருக்கின்றன.

சில நேரங்களில் நான் குஞ்சப்பாவிடம் வினவுவதுண்டு ‘எமது ஆதி நிலங்கள் எவ்வாறு அவர்களிடம் போனதென்று’. அதற்கவர்

“மன இவனுகள் எல்லாம் அந்த நேரம் நம்மட ஆக்களுட்ட வந்து நிண்டு இந்த பருவத்துக்கு மட்டும் கொஞ்சம் பயிர் செய்யலாமா எண்டு கேட்பானுகள். நம்மட ஆக்களும் பாவத்துக்காக ஒத்துப் போய் குடுத்திருவாங்க. இது கன காலமா நடந்து வந்த. இப்ப கொஞ்சக் காலத்துக்குள்ளதான் வன்செயல் நேரத்துலதான் எல்லாத்தையும் இப்புடி கண்கெட்ட வேல செய்றானுகள்.” இவ்வாறு பதிலளிப்பார். இது முற்றிலும் உண்மை கூட. தமிழ்த்தேசியமும், அதனூடே முகிழ்ந்த வன்செயல் ஈடேற்றங்களில் அறுவடைகளும் இவ்வாறுதான் இன்றும் எம்மை பின் தள்ளியே வைத்துள்ளமையை யாராவது மறுக்க முடியுமா?

குஞ்சப்பா சொல்லுவார் “மனே இந்த பாவிகள் எல்லாம் என்ன வோல்லாம் செய்றானுகள். அதுகள பொறுத்துக் கொண்டாலும், இந்த காடுகள, குளங்கள, கடல் வளத்த படுத்துற பாடுகளத் தாண்டா பாத்தும் கேட்டும் வாழ ஏலுதில்ல. வெள்ளக்காரன் இருக்கக்குள்ள கூட இப்புடி அத்துறுமங்கப் படுத்தல. அந்நேரம் எங்களுக்குள்ள ‘பட்டாங்கட்டி’ பட்டம் எடுத்தவருதான் தலைவர். அவருக்கு வெள்ளக்காரன் சம்பளமும் கொடுத்தவன். அவருட பேச்சுக்குத்தான் எல்லாரும் கட்டுபட்டு நடப்பம். ஒரு நேரத்துக்கு கிழங்கு எடுக்குற பருவம் வந்தா அவருட நடவடிக்கைகள் அப்புடி இரிக்கிம். நாங்க கவலக்கிழங்கு, அல்லக் கிழங்கு, ஒல்லிக் கிழங்கு, பண்டிக்கிழங்கு எண்டு ஏகப்பட்டதுகள் எடுப்பம். கவலக் கிழங்கு எடுக்குறது கொஞ்சம் நூதனமான வேல. என்னனெண்டு கேட்டா கவலக்கிழங்குட கொடி நூலாட்டம் மெல்லிசா ரெண்டு பாகத்துக்கு மேல கிடக்கும். அத தோண்டி எடுக்க அகப்பையில பெரிய கம்ப கட்டி பாவிப்பம். அத நெட்டகப்ப எண்டு சொல்ற. பட்டாங்கட்டி சொல்லுவார் ஆரெண்டாலும் கிழங்கு கல்லப் போகலாம். ஆனா கிழங்க எடுத்த உடனே அதுட கொடிய கல்லின (தோண்டிய) மடுவுக்க போட்டு மூடிப்போட்டு வரனும். அப்புடி யாராவது செய்யாட்டி அவங்க அந்த பருவம் முழுக்க கிழங்கு எடுக்க போக ஏலாது. ஆனா அப்புடி குற்றம் செய்தவங்களுக்கு கிழங்கு எடுக்கப்போற மத்தவங்க ஆளுக்கொரு பங்கு கொடுக்கனும். இது பட்டாங்கட்டியோட கட்டளை.”

“இப்புடித்தான் காட்டுல என்ன பழம் எடுக்குற எண்டாலும் சரி அந்த மரத்துட ஒரு கந்தும் உடைக்காம ஆயனும். ஆனா இப்ப மரத்தோட வெட்டுறானுகள். குளத்துள மீன் புடிக்கிற எண்டாலும் இப்படித்தான்டா மனே. மீன் சரியான பருவத்துக்கு வரும் வரைக்கும் ஆரும் மீன் புடிக்க போகக் கூடாது. சரியான பருவம் வந்ததும் பட்டாங்கட்டி அறிவிப்பார். இனி மீன் புடிக்க போகலாம் எண்டு. போய் ஒரு பாடு வீசினாலே போதும். நாலு ஊட்டுக்கு மீன் வரும். ஒவ்வொரு மீனும் ரெண்டு மூண்டு கிலோ வரும். இப்புடி எத்தனைய மனே சொல்லலாம். காடும் குளமும் தான் நம்மட சொத்து. நாம அதுகள்ட சொத்து. ஆன இப்ப...?”

குஞ்சப்பா இவ்வாறான உரையாடல்களைப் பேசும் போது நான் மெய் மறந்து போயிருப்பபேன். அவரது கருத்துக்களை கேட்ட பின்னர்தான் எனக்குள் பல விடயங்கள் மீழெழும்பிக் கொண்டிருக்கும். தமது வாழ்க்கை நெறிகளிலே தவறிழைப்பவற்களுக்கு தகுந்த தண்டனை கொடுத்தாலும், அவர்களும் மனிதர்கள் நமது உறவுகள் என்னும் சிந்தனையில் எவரையும் பாதிக்காத நீதிக் கையாள்கையை நாம் இன்று எங்காவது காண முடியுமா? இயற்கையுடன் இணைந்து வாழ்தல் என்பது என்னவென்று அவரின் உரையாடல்களின் மூலமே வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். இயற்கையை தன்வயப்படுத்தும் வாழ்க்கை எவ்வளவு இனிமையானது என்பதும், இயற்கையை கட்டுப்படுத்தி வாழும் வாழ்க்கை எவ்வளவு மூர்க்கத் தனமானது என்றும், அதைத் தடுக்க முடியாமலும் எதிர்க்க முடியாமலும் வாழும் காலத்திலேயே அதை உணர்ந்து கொண்டிருக்கும் வக்கற்ற தலைமுறையில் இருக்கின்றோம் என்னும் போது மனம் கனத்துப் போய்விடும்.

இன்று, இலங்கையின் ஆதிக்குடிகளான எம்மை பற்றிய உரையாடல்களும், செயற்பாட்டு முன்னெடுப்புக்களும் ஏதோ எம்மை பரிதாப நோக்குடன் பார்ப்பதாகவும், வேற்று ஜந்துக்கள் போலவே காட்ட முனைவதாகவுமே அமைந்து விடுகின்றமை கண்டனத்துக்கு உரிய விடயமாகும். முதலில் நாம் எம்மை எவ்வாறு அழைக்க விரும்புகிறோம், எவ்வாறு வாழ விரும்புகின்றோம் என்பதை ஆய்வாளர்களோ, வரத்தினங்களோ தம் பாட்டிற்கு எடுத்துக் கூவுவதை நிறுத்திக் கொள்வதே மிகச்சிறப்பாக அமையும்.
காரணம் நாங்களே இந்நாட்டின் வேர்கள்;
நாங்கள் அவர்கள்!.



pathinathan@thaiveedu.com



# Commercial Mortgages
# Business Loans
# Business Line of Credit

***for***

Buying new business

Improve your business

Operating capital

Commercial real estate investments

Residential Mortgages | Commercial Business Loans

1st and 2nd Mortgages | Private Funds Available

Debt Consolidation - Refinance | No Income Confirmation

Call us more details...



KAPITAL CARE
MORTGAGE INC. Lic#12623



**Rambo Tharmalingam**
Mortgage Agent Licence # M08008479
**647-290-3416**

**Kethes Sivasubramaniyam**
Licence # M08006105 Mortgage Agent
**416-873-5780**

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

# வெள்ளாண்மை அன்றும் இன்றும்

- பால. சிவகடாட்சம்

### உழவு:

இற்றைக்கு 10,000 ஆண்டுகளுக்கு முன்னரேயே மனிதர் உழவுத் தொழில் புரிய ஆரம்பித்து விட்டானர் என்பது ஆய்வாளர்களின் முடிவாகும். ஆற்றுவெள்ளம் பாய்ந்து வடிந்த ஈரமான நிலப்பகுதியில் ஆடு, மாடுகளை விரட்டிச் சேறாக்கிய பின் தானியங்களை விசிறிப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்து வைத்தான் ஆதி விவசாயி. நாளடைவில் மிருகங்களின் கொம்பை ஏராக மாட்டிக் கலப்பை தயாரித்து, நிலத்தை உழுது விதைக்கத் தொடங்கினான்.

ஆதியில் இரண்டு பேர் கலப்பையை இழுக்க ஒருவர் ஏரை நிலத்தில் அழுத்த உழவுத்தொழில் நடைபெற்றது. காலஞ்செல்லச் செல்ல கழுதைகளையும், குதிரைகளையும், எருமைகளையும்,



பொ.ஆ.மு. 1200க்கு முற்பட்ட எகிப்திய வெள்ளாண்மை

மாடுகளையும் கலப்பையை இழுக்கப் பழக்கினார்கள். இந்த விலங்கு சக்தியே நெடுங்காலமாக உழவு, நீரிறைத்தல், சூடுமிதித்தல் போன்ற பயிர்ச் செய்கை முறைகளுக்குப் பயன்பட்டு வந்தது. கலப்பையின் வடிவத்திலும் படிப்படியாக விருத்தி செய்யப்பட்டு வந்தன.

இன்று நிலத்தை உழுவதற்கு இயந்திரக் கலப்பைகள் வந்து விட்டன. பெரிய நிலப்பரப்பைக் குறுகிய காலத்தில் திருத்தமாக உழுவதற்கு இவை பேருதவி புரிகின்றன. எனினும் சில நாடுகளிலே உழவு இயந்திரங்களின் சக்கரங்களினால் மண் அழுத்தப்படுவதனால் வேறு சில பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக அறிய முடிகிறது. இதனைத் தவிர்ப்பதற்காக சக்கரங்கள் மிக அகலமான இடைவெளியில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

உழுவதன் பிரதான நோக்கம் களைகளைக் கட்டுப்படுத்துவதாக இருக்கும் போது, குறிப்பிட்ட சில பயிர்களுக்கு நிலத்தை உழுது பண்படுத்தாமலே இரசாயனக் களைகொல்லிகளைப் பயன்படுத்தி, களைகளைக் கட்டுப்படுத்திய பின்னர் பயிர் செய்ய முடியுமே என்று இன்றைய விஞ்ஞானிகள் சிந்தித்தனர். இதன் விளைவாக எழுந்ததே குறைந்த அளவு நிலம் பண்படுத்தல் அல்லது சூன்ய உழவு போன்ற செய்முறைகளாகும்.

### நீர்வளம் பேணுதல்:

'வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும்' என்றார் ஔவையார். நீரின் மட்டத்துக்கு ஏற்ப உயர்ந்து வளர்ந்து வரும் நெல்லினங்களையே ஔவை குறிப்பிடுவதாகக் கருதலாம். நெற்பயிருக்கு நீர்த்தேவை அதிகம் என்பதை அறிந்திருந்தார்கள். பயிருக்கு வேண்டிய நீரைக் கொடுத்து வளர்க்கும் சீரான நீர்ப்பாசனத்தின் அவசியத்தைக் 'கட்டுகிற நீரைக் கணக்காகக் கட்டினால் கரும்பில் தேனொழுகும்' என்ற பழமொழியின் மூலம் எடுத்துரைத்தார்கள்.

நீர் நிர்வாகத்தை விவசாயத்தின் மிக முக்கியமான அங்கமாக எமது முன்னோர்கள் கருதினார்கள் என்பதற்கு விவசாயத்துக்கு அவர்கள் வழங்கிய பெயரே தக்க சான்றாகும். 'வெள்ளாண்மை' என்பதன் கருத்து வெள்ளத்தை ஆளுதல் என்பதேயாகும். நெற்பயிர்ச்செய்கைக்கு ஆதாரமான 'வெள்ளத்தை ஆளுதல்' (water management) என்னும் பொருள் தரும் 'வெள்ளாண்மை' நாளடைவில் 'வேளாண்மை' ஆகிவிட்டது. உண்மையில் வேளாண்மை என்பது ஆதியில் 'வேள்வி செய்தல்' என்ற பொருளிலேயே பயன்பட்டு வந்தது.

**இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

என்கிறது குறள்.

இங்கே 'வேளாண்மை செய்தல்' என்பது 'உபகாரம் செய்தல்' அல்லது ஈதல் என்பதையே குறிக்கின்றது.

### நில வளம் பேணுதல்:

விஞ்ஞான முறையிலான மண் பரிசோதனை வளர்ச்சியடையாத ஒரு கால கட்டத்தில், அம்மண்ணில் இயற்கையாக வளர்ந்திருக்கும் செடி கொடிகளைக் கொண்டு மண் வளத்தை அறிந்தார்கள்.

'நன்னிலங்கரந்தை, நடுநிலங் கொளிஞ்சி' என்றார்கள். கரந்தைச் செடி நின்றால் நல்ல வளமான நிலம் என்றும் கொளிஞ்சி (காவிளை) நின்றால் ஓரளவு வளமான நிலம் என்றும் ஊகித்தார்கள். விஞ்ஞான அடிப்படையிலும் கூட இவ்வாறு மண் வளம் அறியப்படுவதுண்டு. உதாரணமாகப் பொடுதலை நிற்கும் இடத்தில் நைதரசன் வளம் அதிகமாக இருக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்தகைய தாவரங்களைக் 'குறிகாட்டும் தாவரங்கள்' என அழைப்பர்.

'ஏழுழவு உழுதால் எருப்போட வேண்டாம்' என்று நிலத்தை நன்றாக உழுதலின் அவசியத்தை வலியுறுத்தியவர்கள், 'ஏரினும் நன்று எருவிடுதல்' என்றும் கூறிவைத்தார்கள். உழவும் எருவும் பயிர்நிலத்துக்கு இன்றியமையாதவை.

'உழவு மண்ணின் பௌதீகத் தன்மையைப் பேணுகிறது. எரு மண்ணின் இரசாயன வளத்தைப் பேணுகிறது. இரண்டுமே அவசியமாகும்.

பயிர்கள் மண்ணில் இருந்து பசளையை எடுக்கின்றன என்பதையும், சில பயிர்கள் கூடுதலாக மண்வளத்தைச் சுரண்டுகின்றன என்பதையும் முன்னோர் அறிந்திருந்தனர். 'எள்ளும் கரும்பும் எடுக்

கும் பயிராம்' என்பது பழமொழி. பயறும், உழுந்தும் பசளையை (நைதரசன்) மண்ணுக்குக் கொடுப்பதை நாம் அறிவோம். மாறாக எள்ளும், கரும்பும் பசளையைக் கூடுதலாக எடுக்கின்றன. இந்த உண்மையை அன்றைய விவசாயிகள் நன்கு அறிந்திருந்தனர். எனவே தான் முந்தைய பயிரால் மண் இழந்த வலுவை மீண்டும் கொடுக்க வேண்டும் என்பதைத் தவிர்க்க முடியாத ஒன்றாக கருதினர். இதனை மண்ணுக்கு 'உரமேற்றுதல்' (வலுவேற்றுதல்) என்று குறிப்பிட்டனர்.

மண்ணுக்கு உரமேற்ற அவர்கள் பயன்படுத்திய முக்கியமான பொருள் விலங்குகளின் கழிவாகும். ஆட்டெரு, மாட்டெரு, கோழி எரு, வௌவால் எரு என்பன பொதுவாக விளைநிலத்துக்கு உர மேற்றப் பயன்பட்டன.

நெல்வயலுக்கு ஆட்டெரு சேர்க்கும் வழக்கமே பரவலாகக் காணப்



பட்டது. புழுதியுழவு உழுத இடத்தில் ஆட்டெரு வைக்கப்பட்டது. இந்நிலத்தில் ஆட்டுமந்தைகளைப் பட்டிகளில் கட்டி நாள் முழுவதும் அடைத்து வைப்பார்கள். ஆடுகளின் எருவும் சிறுநீரும் வயலில் பசளையாகச் சேரும். இதனைக் 'கிடைவைத்தல்' என்பார்கள். ஆட்டெரு கூடிய விரைவில் பயிருக்குப் பயன்படக் கூடியது என்பது முன்னோரின் நம்பிக்கையாக இருந்தது. 'ஆட்டெரு அவ்வருசம் மாட்டெரு மறுவருசம்' என்ற பழமொழி இதனையே சுட்டுகிறது.

விலங்குகளின் கழிவுகள் மாத்திரமல்லாது காட்டுமரங்களின் இலை, தழைகளும் வயலுக்கு உரமேற்றப்பயன்பட்டன. 'முன்போகத்துக்கு ஆட்டெருவும் பின்போகத்துக்குத் தழை எருவும்' என்ற பழமொழியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 'கொளுஞ்சி, பூவரசு கொழுத்த சாப்பாடு' என்றார்கள். கொளுஞ்சியும் (காவிளை) பூவரசு மட்டுமல்லாது புங்கு, புன்னை, நாவல், வேம்பு, இலுப்பை, பனை போன்ற பெருமரங்களின் தழைகளும் காவோதி, சிவனார் வேம்பு, பாவட்டை போன்ற நைதரசன் நாட்டும் இயல்புடைய சிறு தாவரங்களும் பெருமளவில் தழை உரமாகப் பயன்பட்டன.

ஒரு குறிப்பிட்ட பயிருக்கு குறிப்பிட்ட சில தாவரங்களின் தழையே சிறந்த உரமாகின்றது என்ற கருத்தையும் எமது முன்னோர் கொண்டிருந்தனர். உதாரணமாகப் பூசணிக்குப் புங்கங்குழையும் கோழி எருவும், தென்னைக்குக் கடற்சாதாழையும், வெங்காயத்துக்கு ஆவரசு, எருக்கு, எலியாமணக்கு, பூவரசு, பாவட்டை ஆடாதோடை என்பனவும் மரவள்ளிக்குச் சிவனார்வேம்பும், வெற்றிலைக்குக் கப்பெட்டி (croton laccifer) என்ற செடியும் மாட்டெருவும், மிளகாய்க்கும் கத்தரிக்கும் பனை ஓலையும், புகையிலைக்குக் காவிளை, காவோதி, பன்னை, பாவட்டை, பூவரசு, புகையிலை வேர், வௌவால் எரு என்பனவும் பொருத்தமான பசளைகளாகும் என்பது அவர்களுடைய கணிப்பாக இருந்தது.

தாவரங்களின் நைதரசன் நாட்டும் இயல்பு அறியப்படாது இருந்த காலத்திலேயே நமது முன்னோர் தழை உரமாகப் பயன்படுத்திய தாவரங்களுள் பெரும்பாலானவை நைதரசன் நாட்டும் இயல்புடையனவாக இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்கள் சில பயிர்களுக்கெனக் குறிப்பிட்ட சில தழைகளைத் தேர்ந்தெடுத்தமைக்கு வேறு காரணங்களும் இருந்திருக்கலாம்.

உதாரணமாக: பூசணிக்குடும்பப் பயிர்களுக்குச் சாதாரணமாக ஏற்படும் ஒரு நோய் வேர்களில் வட்டப்புழுக்களால் ஏற்படும் முடிச்சு நோயாகும். பூசணிக்குப் பொருத்தமான பசளைகளாக நமது முன்னோர் தெரிந்தெடுத்த புங்கங்குழையும் கோழி எருவும் மண்ணில் வட்டப்புழுக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி மேற்படி நோய்களை குறைக்க வல்லன என்பதற்கு ஆதரவாக சமீப கால விஞ்ஞான ஆய்வுகள் சிலவற்றின் முடிவுகள் வெளியாகியுள்ளன. புகையிலை, கத்தரி போன்ற பயிர்களில் 'அடிஅழுகல்' நோயை ஏற்படுத்தும் ஒரு பங்கஸைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் காவோதிச் செடிக்கு உண்டு என்பதை எனது ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

நாகராஜா மற்றும் அமரசிறி (1977) ஆகியோரால் செய்யப்பட்ட ஆய்வுகளில் சீமைக்கிழுவைத் தழையுடன் (கெக்டருக்கு 9 தொன் இரசாயன NPK பசளை சிபார்சு செய்யப்பட்ட அளவின் 45-50% மாத்திரம் நிலத்திற்கு இட்டபோது இரசாயனப் பசளையை 100% இட்ட போது பெறப்பட்டதிலும் கூடுதலாக நெல் விளைச்சல் பெறப்பட்டது. எனவே பசுந்தாள் உரங்களைச் சேர்ப்பதன் மூலம் இரசாயனப் பசளைகளின் அளவைக் குறைக்கலாம் என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

பெரும் மரங்களின் தழைகளை உரமாகப் பயன்படுத்துவதில் மற்றுமொரு நன்மை உண்டு. இன்று நாம் மண்ணிற்கு இரசாயன உரமாக நைதரசன், பொட்டாசியம், பொசுபரசு போன்ற மூலகங்களையே சேர்க்கின்றோம். பயிருக்கு மிகச்சிறிய அளவில் தேவைப்படும் நுண் மூலகங்கள் பலவற்றை நாம் மீள மண்ணிற்கு கொடுப்பதில்லை. இதன் விளைவாக தொடர்ச்சியாகப் பயிர் செய்யப்படும் நிலங்களில் மேற்பரப்பில் மேற்படி நுண் மூலங்களின் பற்றாக்குறை ஏற்பட இடமுண்டு. பெரிய மரங்களின் வேர்கள் நிலத்தின் அடியிற் சென்று அங்கு வேண்டியளவிற் கிடைக்கும் நுண் மூலகங்களை உறிஞ்சி இலைகளுக்குக் கொண்டு செல்லுகின்றன. இந்த இலைகளை நாம் பசளையாக மண்ணிற்கு இடும் போது பயிர் செய்யப்படும் மண்ணின் மேற்பகுதியில் இம் மூலகங்களின் செறிவு குன்றாதிருக்க வழியேற்படுகின்றது.

'வேப்பம் பிண்ணாக்கு விலையுள் எருவாம்' என்ற பழமொழியையும் இங்கு நினைவு கூருதல் அவசியம். வேப்பம் பிண்ணாக்கை நைதரசன் பசளையான யூரியாவுடன் சோத்துப் போடுவதை இன்றைய இந்திய விவசாயிகள் பரவலாகக் கையாளுகிறார்கள், வேப்பம் பிண்ணாக்கு நைதரசன் பசளையினை பாதுகாத்து பயிருக்கு கொடுப்பதோடு பீடைகளிலிருந்தும் பயிரைப் பாதுகாக்கின்றது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். எருவும் தழையும் மண்ணின் இரசாயன வளத்தை பேணுவதோடு அதன் பௌதீகத் தன்மையையும் பேணுகின்றன என்பதையும் இன்றைய விவசாய விஞ்ஞானிகள் வலியுறுத்தி வருகின்றார்கள்.

## களையெடுத்தல்:

களையெடுத்தலின் அவசியமும் பண்டைய விவசாயப் பெருமக்களால் நன்குணரப்பட்டிருந்தது. 'களையெடாதவன் விளைவெடான்' என்று அறுதியாகக் கூறிவைத்தார்கள். களைகளுக்குள்ளே கோரைப்புல்லை கட்டுப்படுத்துவது மிகக்கடினம்.

கோரை மடங்க உழுதவனுமில்லை குதிர்நிறைய நெல் போட்டவனுமில்லை' என்ற பழமொழி கோரையை உழுவதன் மூலம் கட்டுப்படுத்துவது கடினம் என்பதைத் தெரிவிக்கின்றது. இன்றைய இரசாயனக் களைகொல்லிகள் கூட இக்களையைப் பூரணமாக கட்டுப்படுத்துவதில்லை. எனினும் கோரையைக் கட்டுப்படுத்தும் வழி ஒன்றை நமது முன்னோர் கூறிவைத்துள்ளனர்.



கிடைவைத்தல்

'கோரையைக் கொல்ல கொள்ளை விதை' என்பது பழமொழி. ஒரு பயிரின் வேர்த்தொகுதியில் இருந்து வரும் சுரப்பிகள் மற்றொரு பயிருக்கு நஞ்சாக அமையலாம் என்பது இன்றைய விஞ்ஞான கண்டுபிடிப்புகளுள் ஒன்றாகும். இதனை 'அலிலோபதி விளைவு' (allelopathic effect) என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவர்.

கொள்ளுப்பயிரின் வேர்த்தொகுதிக்கு கோரையைக் கட்டுப்படுத்தும் தன்மை உள்ளதா என்பது ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயமாகும். எதிர்காலத்தில் நல்லதொரு ஆய்வு முயற்சிக்கு இவ்விடயம் வழிகாட்டுகிறது.

## நாற்று நடுதல்:

பொ.ஆ. 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒல்லாந்துக்காரர் ஒருவர் இலங்கை, இந்திய மக்களுக்கு 'நாற்று நடவு' முறை தெரியாது என்று எழுதிவைத்துள்ளார். இந்த ஐரோப்பியர் யாழ்ப்பாண விவசாயிகளின் பயிர்ச்செய்கை முறையைப் பார்த்து விட்டு எழுதி வைத்துள்ளாரோ என எண்ணத்தோன்றுகிறது. எனினும் தமிழ் மக்கள் நாற்று நடவு முறை பற்றி இற்றைக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே அறிந்து வைத்திருந்தனர். நடைமுறைப்படுத்தியும் வந்துள்ளனர் என்பதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் கம்பர் வாழ்ந்த காலத்துக்கு உரியதாகக் கருதப்படும் பாடல் ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகின்றேன்.

**சேனை தழையாக்கி செங்குருதி நீர்தேக்கி**
**ஆனை மிதித்த அடிச்சேற்றில் மானபவன்**
**மாவேந்தர் வேந்தன் பறித்து நட்டான் ஏகம்பன்**
**மூவேந்தர் தங்கள் முடி.**

நாற்று நடுதல் என்பது ஒரு மென்மையான கலையாகும். ஒழுங்காக, வரிசை தப்பாமல் நெல் நாற்றுக்களை நடுவதற்கு பொறுமையும் மென்மையும் மிக்க பெண்களே ஈடுபடுத்தப்பட்டனர். இன்றுகூடப் பெரும்பாலும் பெண்களே நாற்று நடுகையில் ஈடுபடுவதை அவதானிக்கலாம்.

## பயிரிடும் இனங்கள் (crop varieties):

**காய் காய்க்காத கத்தரிச் செடிக்கும்**
**பூப்பூக்காத புடலஞ் செடிக்கும்**
**எருப்போட்டு என்ன பிரயோசனம்.**

இந்தப் பழமொழி நல்ல இனங்களை தெரிந்து பயிரிடுதலை வற்புறுத்துகிறது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே நீருயரத் தானுமுயர்ந்து வளரும் நெல்லினம், உவர் மண்ணுக்கு ஏற்ற நெல்வினம், சுவையான சோறு தரும் தெல்லினம் எனப் பல்வேறு வகையான நெல்லினங்களைப் பண்டைய விவசாயிகள் தெரிந்து வைத்திருந்தனர். விளைச்சல் குறைவாக இருந்தாலும் சில நெல் வகைகள் மக்களால் விரும்பப்பட்டன. இதனைக் 'கொம்பில் ஒரு நெல் விளைந்தாலும் அம்பாவுக்கு இணையாகாது' என்ற பழமொழி சுட்டுகின்றது. உவர்மண்ணிற்கு ஏற்ற பாரம்பரிய இனமான 'பொக்காளி'க்கு ஈடாக இன்றுவரை ஒரு புதிய நெல்லினமும் பெறப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

1902ம் ஆண்டு கண்டியில் இடம் பெற்ற பயிர்ச்செய்கை மற்றும் கைத்தொழில் கண்காட்சியில் இலங்கை முழுவதிலும் இருந்து திரட்டப்பட்ட முன்னூற்றுக்கும் மேலான பாரம்பரிய நெல்லினங்கள் நுகவெல திசாவையால் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. விவசாயிகளால் தெரிவு செய்யப்பட்டுப் பயிரிடப்பட்ட பாரம்பரிய நெல்லினங்கள் அவ்வப் பிரதேசங்களின் மண்வளம், காலநிலை என்பவற்றுக்கு ஏற்ற இயல்புகளைக் கொண்டிருந்தன. எனினும் அவற்றின் விளைச்சல் இன்றைய இனங்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவாகவே இருந்தது. மேற்படி இனங்கள் ஏக்கருக்கு 40 புசல் (3 புசல் = 1 மூடை) தந்தால் அது பெரும் விளைச்சல் என்று அக்காலத்தில் கருதப்பட்டது.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தரும் தேயிலை, தெங்கு, இறப்பர் என்பவற்றின் செய்கை ஊக்குவிக்கப்பட்ட அதே சமயம் நெற்பயிர்ச்செய்கை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது. சங்ககாலத்தில் ஈழத்து உணவு தமிழகத்துக்கு ஏற்றுமதியாகும் நிலை இருந்தது. அந்நிலை மாறி இன்று வெளிநாட்டிலிருந்து வரும் உணவை எதிர்பார்க்கும் நிலை உருவாகிற்று.

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து முப்பதுகளில் அரசு நெல்லுற்பத்தியை ஊக்குவிப்பதில் ஓரளவு ஊக்கம் காட்டத் தொடங்கியது.

அக்காலத்தில் பிரசித்தி பெற்ற பாரம்பரிய இனங்களுள் முத்துச் சம்பா (5-6 மாதங்கள்), வெள்ளை இளங்கலையன், முருங்கைக் காயன் (4-4½ மாதங்கள்), வெள்ளைப்பெருநெல் (3½ மாதம்), பச்சைப் பெருமாள் (3 மாதம்) என்பன இடம்பெற்றிருந்தன.

நாற்பதுகளில் மேற்கூறப்பட்ட நெல்லினங்களின் தூய தெரிவுகள் விவசாயத் திணைக்களத்தினால் பயிர்ச்செய்கைக்காக விநியோகிக்கப்பட்டன. இவற்றுள் முருங்கைக்காயன் (4-4½ மாதங்கள்), வெள்ளை இளங்கலையன் (4-4½ மாதங்கள்), வெள்ளைப்பெரு நெல் (3½ மாதம்), பச்சைப் பெருமாள் (3 மாதம்) என்பன குறிப்பிடத்தக்கவை.

எனினும், மேற்படி நெல்லினங்கள் நைதரசன் பசளை இடப்பட்ட போது எரிபந்த நோய்க்கு ஆளாகின. இவற்றுள் வெள்ளை இளங்கலையன் இந்நோயை எதிர்த்து நின்றபோதும் நைதரசன் பசளைக்குப் போதிய பலனைத் தரவில்லை.

இலங்கையில் பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட கலப்பின நெல்லினங்களைத் தோற்றுவிக்கும் ஆய்வுகள் மகாஇலுப்பலமையில் ஆரம்பிக்கப்பெற்று 1952ல் பத்தலகொட என்னும் இடத்துக்கு மாற்றப்பட்டன. இலங்கையில் தோற்றுவிக்கப்பட்ட முதலாவது கலப்பின நெல்லினமான H4, 1959ல் பயிர்ச்செய்கைக்கு விடப்பட்டது.

அறுபதுகளில் IR 8 என்னும் பிரசித்தி பெற்ற நெல்லினத்தின் தோற்றத்தை அடுத்து ஆசிய நாடுகளின் நெல் உற்பத்தி துரித கதியில் அபிவிருத்தியடையத் தொடங்கிற்று. இந்த IR 8 நெல் இனத்தின் குட்டைத் தன்மைக்கு பொறுப்பான பாரம்பரிய அலகு பயன்படுத்தப்படாமலேயே BG 11-11 என்ற நெல்லினம் இலங் கையில் தோற்றுவிக்கப்பட்டு பிரசித்தி பெற்றது. பின்னர் IR 8 இன் குட்டைத் தன்மைக்குப் பொறுப்பான பிறப்புரிமை அலகைப் பயன்படுத்தியதன் மூலம் BG 34-8, BG 34-6 போன்ற 3-3½ மாத இனங்கள் உருவாக்கப்பெற்றன. இவை பாரம்பரிய இனங்களுடன் ஒப்பிடுகையில் கூடிய விளைச்சலைத் தரக்கூடியனவாக இருந்தன.

இலங்கையில் தற்பொழுது பயிரிடப்படும் சிறந்த உயர் விளைச் சல் தரும் நெல் இனங்கள் ஆகக்கூடிய அளவில் ஏக்க ருக்கு 128 புசல் விளைச்சல் தரக்கூடியன. எனினும் இலங்கையின் இன்


காவோதி


பாவட்டை


காவிளை

றைய சராசரி நெல்விளைச்சல் ஏக்கருக்கு 60 புசலுக்கும் 90 புச லுக்கும் இடைப்பட்டதாகவே உள்ளது.

புதிய நெல்லினங்களின் வருகையால் இலங்கையின் நெல் உற் பத்தி அதிகரித்த அதேவேளை பாரம்பரிய நெல்லினங்கள் முற்றா கக் கைவிடப்படும் நிலை ஏற்பட்டது. மிகக் குறுகிய பிறப்புரிமை அடிப்படையைக் கொண்ட 5 தொடக்கம் 10 வரையிலான நெல்லி னங்களே இன்றும் பயிரிடப்பெறுகின்றன. பல்வேறு குண இயல்பு களைக் கொண்ட பாரம்பரிய நெல்லினங்கள் மறைந்து வருகின்றன.

1920ம் ஆண்டளவில் ஏக்கருக்கு 16 புசல் என்ற அளவில் இருந்த இலங்கையின் சராசரி நெல் உற்பத்தி 1984ல் ஏக்கருக்கு 60 புசல் ஆக உயர்ந்தது குறிப்பிடத்தக்க அபிவிருத்தியே ஆகும்.
அதே சமயம் 1910ல் ஏக்கருக்கு 20 புசல் என்ற அளவில் நெல் லுற்பத்தி செய்த கொரியா நாடு 1986ல் ஏக்கருக்கு சராசரி 130 புசல் என்ற அளவை எட்டியதை இங்கு நாம் குறிப்பிடவேண்டும். இன்று உலகில் ஆகக்கூடிய சராசரி நெல் விளைச்சலைப் பெறும் நாடுகளுள் ஒன்றாகத் தென்கொரியா உள்ளது.

பொருத்தமான உயர் விளைச்சல் தரும் நெல்லினங்கள், உயர்ந்த பசளைப் பிரயோகம், சிறந்த பயிர் பாதுகாப்பு முறைகள், விரிவு-படுத்தப்பட்ட நீர்ப்பாசன வசதிகள், பலமான அரச ஆதரவு (கூடிய விலையில் அரசு விவசாயிகளிடமிருந்து நெல்லைப் பெற்று குறைந்த விலையில் பாவனையாளர்க்கு விநியோகிப்பது, சிறந்த விரிவாக்கம் மற்றும் விவசாயிகள் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்வது போன்றவை) என்பனவே நெல்லுற்பத்தியில் தென் கொரியா ஈட்டிய சாதனைக்குக் காரணங்களாகக் கூறப்படுகின்றன.

## சூழல் பாதுகாப்பு:

இற்றைக்கு 75 வருடங்களுக்கு முன்பிருந்த நிலையுடன் ஒப்பிடு கையில் உற்பத்தி நோக்கில் விவசாய விஞ்ஞானம் பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அதேசமயம் பல விரும்பத்தகாத பக்க விளைவுகளும் ஏற்பட்டு எதிர்கால சந் ததி பற்றிய அச்சத்தை விளைவித்துள்ளன. எமது எதிர்கால சந்த திக்கு வளமான, உற்பத்தித்திறன் குன்றாத மண்ணை நாம் விட் டுச் செல்ல வேண்டிய கடப்பாடுடையோம்.


புங்கு

விவசாய இரசாயனங்களின் மித மிஞ்சிய பயன்பாடு மண்ணையும் சூழலையும் மாத்திரமல்லாது நமது உணவையும் மாசுபடுத்துகின் றது. பூச்சிமருந்து தேவைப்படாமல் ஓரளவு உற்பத்தியையேனும் தரும் பயிரினங்களைத் தெரிந்து பயிரிடுவதுமேல் என்று ஒரு சில விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். பெருகிவரும் மக்கள் தொகைக்கு உணவு போட ஆய்வுகள் நடத்தும் விஞ்ஞானிகளுக் கும் சூழல் மாசடைவதுபற்றி அங்கலாய்க்கும் விஞ்ஞானிகளுக் கும் இடையில் ஓர் இழுபறிப் போராட்டம் இன்று நடந்துகொண்டி ருக்கின்றது.

இதனிடையே விவசாய இரசாயனங்கள் இல்லாத ஒரு காலகட் டத்தில் எமது முன்னோர்கள் எவ்வாறு உணவு உற்பத்தி செய் தார்கள், எவ்வாறு தமது பயிர்களைப் பாதுகாத்தார்கள் என்பதை அறிந்து கொள்வதில் இன்றைய விஞ்ஞானிகளுள் ஒரு சாரார் ஆர்வம் காட்டி வருகிறார்கள். முன்னோர் அனுபவவாயிலாகக் கண்டறிந்த சில விவசாய நுட்பங்கள் இன்றைய விஞ்ஞானயுகத் தில் புராதனமானவையாகவும், மூடநம்பிக்கையாகவும் தோற்ற மளிப்பினும் அவற்றுள் ஒரு சிலவேனும் இன்றைய பிரச்சினைகள் சிலவற்றுக்கு விடையளிக்க முடியுமா என ஆராய்ந்து வருகிறார் கள். ஒரு சிலர் இது விடயத்தில் வெற்றியும் கண்டுள்ளார்கள். உதாரணத்துக்கு ஒன்றை இங்கு குறிப்பிடலாம்.

'அந்துப்பூச்சிக்கு நொச்சித்தழை' என்பது பழமொழி. தானியச் சேமிப்புக்கிடங்குகளில் பூச்சிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நொச்சித்தழை, வேப்பந்தழை போன்றவற்றை முற்கால விவசா யிகள் பயன்படுத்தினார்கள். பாகிஸ்தானில் தானியங்களைச் சேமித்து வைக்கும் பெரிய மட்பாண்டங்களைச் செய்யும் போது களிமண்ணுடன் வேப்பிலைச் சாற்றையும் சேர்த்துப் பானை செய் யும் வழக்கம் இருந்து வந்தள்ளதாக அறியமுடிகிறது. இன்று பூச்சிகொல்லி மருந்தாக வேப்பம் விதை, வேப்பெண்ணை, வேப் பம் பிண்ணாக்கு, வேப்பிலைகள் என்பவற்றைப் பயன்படுத்த முடி யும் என்பது விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயத்துக்கெனக் காடுகளை அழிப்பதனால் ஏற்படும் சூழல் மாற்றமும் வெள்ளப்பெருக்கும், மண்ணரிப்பும் பாரிய பிரச்சினைக-ளாக உள்ளன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் வளமுள்ள நிலங்கள் காடு அழிப்பினால் பாலைவனங்களாக மாறிவருகின் றன. இலத்தீன் அமெரிக்கக் காட்டுப் பிரதேசத்தில் மூன்றில் இரண்டு பகுதி இன்று அழிந்துவிட்டது. ஆபிரிக்காவின் காட்டுப்ப குதியில் அரைவாசி போய்விட்டது. தாய்லாந்தில் கடந்த 10 வருட காலத்தில் காற்பங்கு காடுகள் அழிந்துவிட்டன. இலங்கையில் வருடந்தோறும் சராசரி 42,000 கெக்டர் பரப்பளவில் காடுகள் அழிந்து வந்துள்ளன. இன்று காடுகளை அழிவிலிருந்து காப்பாற் றவும் பல்பயன்தரு மரங்களை உணவுப் பயிர்ச்செய்கையுடன் இணைத்து வெள்ளாண்காடு(Agroforest)களை உருவாக்கவும் உலகளாவிய ஆய்வுமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காடுகள் இருத்தால் நாடுகள் செழிக்கும். மரங்களை நடுவதன் மூலம் பெறக்கூடிய நன்மைகளை நமது முன்னோர் வலியுறுத்தி வந்துள்ளனர்.

இதனால்தான் 'அண்ணன் பிள்ளையை வளர்ப்பதைவிட தென்னம் பிள்ளையை வளர்ப்பது நல்லது' என்றார்கள்.



*Sivakadadcham@thaiveedu.com*

# இலெமூரியா அல்லது குமரிக்கண்டம் ⑫

- அ. கணபதிப்பிள்ளை

குமரிக்கண்டத்தின் பரப்பளவானது காலத்துக்குக் காலம் வேறுபடுவது காலநிலை மாற்றம் அதன் வழிவந்த வறட்சி வெள்ளப்பெருக்கு என்பவற்றில் தங்கியிருந்தது. கடந்த ஐம்பது ஆயிரம் வருடங்களில் உலகில் ஏற்பட்ட மாற்றங்களைப் போலவே 2.8மில்லியன் (28 இலட்சம்) ஆண்டுகளிலிருந்து அண்மைக்காலம் வரையிலான பிளைஸ்தோசின் காலம் முழுவதும் காலநிலை மாற்றத்துக்கான பெரியதும் சிறியதுமான காலநிலை வட்டங்கள் நிகழ்ந்த வண்ணமிருந்ததனைக் குறிப்பிட முடிகிறது. புவியில் மிகப்பெரிய மாற்றங்கள் 40,000 ஆண்டுகளுக்கு ஒருதடவை நடப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவித்திருந்தமையினை ஏற்கனவே இத் தொடரில் எடுத்துக்காட்டியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த 50,000 வருடங்களில் கடல் மட்டமானது படிப்படியாக உயர்ந்து வந்தது. புவிக் காந்தப்புலத்தின் தலைகீழான மாற்றத்தின் காரணமாகக் கடந்த 35,000 வருடங்களில் ஏற்பட்ட வெப்ப ஆதிகரிப்பானது திடீர் மழைக் காலநிலைக்கும் அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்கும் காரணமாக அமைந்திருந்தது. கடந்த 50,000 ஆண்டுக் காலப்பகுதி மனித நாகரிக காலத்தின் ஒரு பிரதான பகுதியாகக் கொள்ளத்தக்கது. அதற்கு முன்னைய பனிக்காலங்களும், வெப்பகாலங்களும், மனித வரலாற்றிலும் இந்து சமுத்திரத்தில் நிலம் வெளித் தெரிந்தமையிலும், அந்த நிலங்கள் கடலுள் மூழ்கிப் போவதிலும் செல்வாக்குச் செலுத்தியிருந்தமையினையும் இங்கு குறிப்பிட்டுக் காட்டுதல் வேண்டும்.

மோகனா பாசு (Mohana Basu Feb. 21, 2021) என்பவர் புதிய அவுஸ்திரேலிய ஆய்வு புவிவரலாற்றின் திருப்பு முனை என்று குறிப்பிடுகிறார். நியூசிலாந்தில் புவிக்காந்தவலயம் தற்காலிகமாக உடைந்தது. இச்செயற்பாடு கடந்த 42,000 வருடத்தில் நடந்ததால் பூமியில் சூழல்மாறுபாடு உருவானது என்றும், உயிரினப் பேரழிவு ஒன்று (Mass Extinction) ஏற்பட்டதாகவும் குறிப்பிடுகிறார். இதனைப் பனிக்கால உயிரினங்களான பெரிய யானை போன்ற உயிரினங்களின் அழிவாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

தமிழகக் கோவில்களில் காணப்படும் யர்ளி என்ற மிகப்பெரிய வீரமான மிருகத்தின் உருவம் கற்பனையானது என ஒருசாராரும் சிங்கத்தைவிட வலிமையான மிருகம் இருந்ததனை மக்கள் அறிந்திருக்கிறார்களென மறுசாராரும் குறிப்பிட்டு வருவதனைக் காண முடிகிறது. இந்த யாளி வகையான மிருகம் குமரி நிலப்பரப்பில் வாழ்ந்ததனை மக்கள் குறிப்பிட்டுக்காட்டவே கோபுரங்களில் அத்தகைய உருவங்கள் சிலைகளாக வடிக்கப்பட்டிருந்தன என்ற முடிவுக்கு வரமுடிகிறது. யாளியை ஆளி எனக் குறிப்பிட்டதாகச் சங்க இலக்கியக் குறிப்புகள் உள்ளன.

யாளி (வியாழம்) என்ற மிருகத்தின் புதையுயிர்த்தடம் (fossils) இதுவரையிற் கிடைக்காததாலும் அது குமரிக்கண்டத்துக்குரியதும் பனியுகத்துக்குரியதுமான மிருகமாக இருந்ததாலும் மேலைத்தேய ஆய்வாளர்களால் இம்மிருகத்தின் ஆற்றல் பற்றிய குறிப்புகளைக் கொடுக்க முடியவில்லை. இந்திய ஆய்வாளர்களும் தமிழாய்வாளர்களும் இம்மிருகம் கடந்த 50,000 ஆண்டுகளுக்குள் வாழ்ந்த மிருகம் என்ற கருத்துடன் ஆதாரந் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

நேசிகன் கணேசன் என்பவர் 'யாளி தமிழர் வரலாற்றின் அழிந்து போன உயிரினமா - தமிழர் பாரம்பரியமாதம் என்ற 18 ஜனவரி 2020 ல் எழுதிய கட்டுரையில் கற்பனையோ நிஜமோ தமிழருக்குப்




பெருமை தேடித்தரும் ஆளி வகையான மிருகம் இருந்திருக்க முடியாதெனக் கருதுகிறார். அறிவியலுடன் அத்தகைய மிருகங்களின் புவிப்பரம்பலானது ஒத்துப் போகவில்லை என்பதாக அவரது கருத்து காணப்பட்டதனை நோக்கமுடிகிறது. இக்கருத்தினை மறுதலிக்கும் முகமாக உயிரினப் பேரழிவு பற்றிய ஆதாரங்கள் ஆளி பற்றிய தெளிவினைத் தருவதாக இருப்பதனை இங்கு வலியுறுத்துதல் வேண்டும்.

சங்க இலக்கியம் நற்றிணை 205ல் சொல்லப்பட்ட பாடல் வரிகளில் குமரிக்கண்டம் பற்றிய வரைவிலக்கணம் ஒன்றினையும், அதாவது கடந்த 12வது தொடரில் குறிப்பிட்ட அற்லான்ரிஸ் பற்றிப் பிளேட்டோ எடுத்துக் காட்டிய வரைவிலக்கணத்தை ஒத்த விளக்கத்தையும், யாளி பற்றிய குறிப்பினையும் ஒன்றாகப் பதிவிட்டிருந்தமையினைக் காணமுடிகிறது. 'அருவி ஆர்க்கும் பெருவரை அடுக்கத்து' என்பதில் அடுக்கடுக்கான பீடபூமியும் அருவியும் மலையும் பற்றிய குமரிக்கண்டக் குறிபபுகள் அதில் இருப்பத

னைக் காணமுடிகிறது. அத்தகைய நிலப்பரப்பொன்றில் காணப் பட்ட காட்டினை விபரிப்பதாகவும் அப்பாடல் அமைந்திருக்கிறது.

**'அருவி ஆர்க்கும் பெருவரை அடுக்கத்து**
**ஆளி நன் மான் வேட்டு எழுகோள் உகிர்ப்**
**பூம் பொறி உழுவை தொலைச்சிய வைந் நுதி**
**ஏந்து வெண் கோட்டு வயக் களிறு இழுக்கும்**
**துன் அருங் கானம்.**

என்பதில் புலியால் தாக்கப்பட்டிறந்த யானையின் உடலை யாளி தன் நகத்தால் இழுத்துச் செல்லும் பாங்கினைக் கொண்டு யாளி யின் பலமானது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அத்தகைய பெரியதும் வலியதுமான பாலூட்டிகள் பிளைஸ்தோசின் காலத்தில் இருந்தமைக்கான செய்தியினை உயிரின விஞ்ஞானிகள் தெரிவித் திருக்கின்றமை இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது.

இதேபோன்று அகநானூற்றில் 252ல் நக்கண்ணையார் என்ற புலவர்

**'இடம் படுபு அறியா வலம்படு வேட்டத்து**
**வான் வரி நடுங்கப் புகல் வந்து ஆளி**
**உயர் நுதல் யானைப் புகர் முகத்து ஒற்றி**
**வெண் கோடு புய்க்கும்.'**

என யாளியைப் பற்றிச் சிறப்புறச் சொல்லியிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

அவுஸ்திரேலிய ஆய்வாளர்கள் காலநிலையில் சடுதியான மாற் றத்தை அவதானித்திருந்தனர். பரவலான மின் அலைகளாகச் சிவப்புப் பச்சை ஒளி வானில் தோன்றியதென்றும், அத்துடன் பிர பஞ்சக் கதிர்வீச்சும் வந்து சேர்ந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். 41 000 முதல் 42000 ஆண்டுகளில் இந்த மாற்றம் ஏற்பட்டதென்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால் அதன் தாக்கம் பூமியில் உள்ள உயி ரினத்தில் எவ்வாறு ஏற்பட்டது என்பது தெரியாது எனவும் ஆய் வாளர்கள் குறிப்பிடுகின்றனர். பெரிதான காலநிலை மாற்றமானது நியூசிலாந்தில் அவதானிக்கப்பட்டிருந்தது. நியூசிலாந்திலுள்ள 42,000 ஆண்டு பழமையான மரமான கூறி வகை மரத்தின் (Kauri Tree)வளையங்களிலிருந்து இம்மாற்றத்தினை அவதானிக்க முடிந் ததாகக் குறிப்பிடுகிறார்கள். பொதுவாகக் காலநிலை மாற்றங் களை ஆய்வு செய்யும் காலநிலையாளர்கள் மர வளையங்களைக் (Tree Rings) கொண்டு மழை மற்றும் வறட்சிக் காலங்களைக் கணிப்பிடுவார்கள்.

காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வுகள் புவிமேற்பரப்பின் மாற்றங்கள் பலவற்றுக்கான விடையினைக் கொடுத்துக் கொண்டி ருக்கின்றன. காலநிலையினை நீண்டகால வானிலையின் தொகுப் பென எளிய சாதாரண மனிதரின் நோக்கில் சொன்னாலும்கூட 'வளிமண்டல நிகழ்வுகள் பற்றிய நீணடகால அவதானிப்பும் பட்ட றிவும் கலந்த பார்வையே காலநிலையாகும்'.

காலநிலை என்பது கண்ணால் காணமுடியாத உண்மை உணர் வுத் தோற்றப்பாடு. அதுவே அகிலத்தை ஆட்சி செய்து கொண் டிருக்கிறது. இதில் எதிர்வுகூறுதல் என்பது நுண்ணறிவு, தொலை விலுணர்தல் ஆகிய செயற்பாடுகளையும் உள்ளடக்குகிறது. இன்று காலநிலை ஆய்வுகளில் பலவகையான தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு பெறப்படும் தரவுகள் பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணமுடிகிறது.

பழைய காலநிலை (பலியோ கிளைமடோலஜி - Paleo Climatology) என்பது புவியின் பல வளர்ச்சிக் கட்டங்களிலான புவிச்சரித யுகங்களில் பூமியில் காணப்பட்ட காலநிலை பற்றிய படிப்பாகும். அத்தகைய காலநிலையானது எவ்வாறு எதிர்காலத்தை வழிநடத் திச் செல்லும் என்பதனைக் கண்டறிவது பழைய காலநிலையாள- னின் நோக்கமாக இருந்து வருகிறது.

காலநிலை அறிஞரான பேராசிரியர் ஜோர்ஜ் தம்பையாபிள்ளை (George Thambyah Pillay) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் சிறப்பு நெறி பயின்ற மாணவர்களுக்குக் கற்பித்த காலத்தில், பழைய காலநிலை என்ற கற்கைநெறியில் எமக்கு 1972/73ல் விரிவுரையாற்றினார். அவ் விரிவுரைக் குறிப்புகள் அச் சுப் பதிப்பாக வெளிவரவில்லை என்பது இத்துறையில் பெரிய இழப்பாகும். பிளைஸ்தோசின் காலத்தில் காணப்பட்ட காலநிலை தொடர்பான விரிவுரையில் இலங்கையின் வடமேற்குத்திசையில் ஓடிய பெரிய ஆறு குறிப்பாக இன்றைய பருவகால ஆறான அருவியாற்றினை ஒத்ததான ஆறொன்று மன்னார் வளைகுடாவின் நிலப்பகுதி ஊடாக ஓடியதாகக் குறிப்பிட்டதுடன் பெருமழைக் காலமாக அக்காலமிருந்ததால் பெருவெள்ளம் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

செயற்கைக்கோள் கண்டுபிடித்த இலங்கையின் காலிக்கு மேற்காக ஓடிய ஆறொன்றின் வழித்தடத்தை ஆதாரமாக வைத்து இன்றைய இந்தியத் தென்முனையிலிருந்து காலிவரையில் ஆறென்று பாய்ந் ததாகச் சொல்லப்படுகிறது. பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேரா சிரியர்களான சோமசுந்தரம் இராமசாமி, ஜே. சரவணவேல் இருவ ரும் 19 ஜனவரி 2019ல் வெளியியிட்ட ஆய்வு முடிவில் தென்னிந் தியாவில் இன்று ஓடுகின்ற வைகை, தாமிரபரணி ஆகிய கிளை ஆறுகளை இணைத்து ஓடிய பெரிய ஆறொன்று தெற்கே காலி- வரையில் ஓடியதாகக் கருதுகிறார்கள். சேய்மை உணர்வு - றிமோட் சென்சிங் (Remote sensing) முறையில் செய்யப்பட்ட இவ் ஆய்வில் இலங்கைக்கு மேற்காகப் பெரிய நிலப்பரப்பு இருந்த தனை உறுதிசெய்கின்றனர். இந்த நிலப்பரப்பானது 2-3 இலட்சம் சதுரமைல்களைக் கொண்டு இருந்திருக்கலாம் எனக் குறிப்பிட் டிருந்தமை, அவர்களும் பிபிசி ஆய்வாளர்களும் பயன்படுத்திய வரைபடத்திலிருந்து உறுதியாகிறது.

இலங்கையின் நிலவுயரம், மத்திய மலைநாட்டின் தொடர்ச்சி, களனி கங்கை போன்ற என்றுமுள்ள ஆறுகளின் (Perennial Revers) பாய்ச்சலைக் கவனத்திற் கொண்டும் பேராசிரியர் இராமசாமி போன்ற ஆய்வாளர்கள் குறித்த ஆறானது காலிக்கு மேற்காக இருந்த மலைத் தொடரிலிருந்து வடக்காகப் பாய்ந்து அரபிக் கடலுள் (Arabic Sea) சங்கமமாகியிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. அந்தப் பெரிய ஆற்றில் சங்கமித்த கிளையாறுகள் இலங்கையின் மத்தியமலைநாட்டிலிந்து வடக்காகவும் கிழக்காக வும் ஓடிய கிளை ஆறுகளாகத்தான் இருக்கமுடியுமென உறுதிப டக் கூறமுடிகிறது.

அத்துடன் இலங்கையின் வடக்கிலும் வடமேற்கிலும் மேற்கிலும் காணப்படும் பிளைஸ்தோசின் காலப் பரற் படிவுகள், தெற்கில் பெரிய மலைதொடர்கள் இல்லாமற் சாத்தியமாகியிருக்க முடி யாது. ஆகவே, குமரிக்கண்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மேரு என்ற பெரியமலை இலங்கையின் தெற்கிலும் மேற்கிலும் பரந்தி ருக்கவேண்டும். இந்தமலைகள் இன்றய இலங்கையின் மத்திய மலைநாட்டில் காணப்படும் மலைகளைவிட உயரமானவைகளாக இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கும் வரமுடிகிறது. ஆகவே குறிப்பிட்ட பெரிய ஆறானது மேருமலையிலிருந்து வடக்கு நோக்கி ஓடிய பஃறுளி என்ற ஆறு என்பதுவும் உறுதியாகிறது.

தொடரும்.



kanapathipillai.a@thaiveedu.com

**'கற்க கணிதம் கசடற'**

**மாணவர்களின் வீட்டுக்கு வருகைதந்து தனித்தனி வகுப்புகள் எடுக்கப்படும்.**

Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.

Specializing in tutoring Math from Gr. 10 - 12.
Available for home visits and one-on-one sessions.

H: 905-428-1928
C: 416-819-7923

1629 Winville Rd.,
Pickering, ON L1X 0C8


Income Tax
Augustine & Associates
25 Years Canadian Experience
" Rapid,Accurate & Affordable Service."
(Quebec, Ontario & Other Provinces)
Personal
Business
Corporate
GST,HST & QST
Bookkeeping
Payroll
T4 & T4A
Rental Releve 31
EFILE
SUCCESS
Wimal Augustine
ON: 416 617 6735
QC: 514 279 7138
Toll: 1 800 668 9048


YOUR CHOICE IN
REAL ESTATE
Jesmine J Wimalendran
647.871.1921
Wimal Augustine
416.617.6735
www.propertyrealtors.ca
HOMELIFE
HomeLife/Future
Realty Inc., Brokerage. Independently Owned And Operated
Office: 905.201.9977


mia sarees
Timeless Elegance
Unique Collections
M
mia sarees
Latest Trends
Bridal Selections
Pure Silk Sarees
Soft Silks
Casual & Fancy Sarees
25 Karachi Drive, unit 18
Markham, ON
Tel: 647-339-4642
www.miasarees.com
miasarees

# பத்தினித் தெய்வத்தின் வரலாறு உரைப்பதே சிலப்பதிகாரத்தின் பிரதான நோக்கம்

- அஷ்வினி வையந்தி

அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரமென்னும் பெயரால்...

- பதிகம்: 55-59

என இளங்கோவடிகள் சிலப்பதிகார நோக்கங்கள் என மூன்று வகையான நோக்கங்களை முன்வைக்கின்றார். 'அரசியல் பிழைத் தோர்க்கு அறங்கூற்று ஆவது' மதுரையில் பாண்டியன் மாண்ட தால் விளக்கம் பெறுகின்றது. வழக்குரைக் காதையில் கண்ணகி கொண்டு வந்த வழக்கினை விசாரித்து தீர்ப்பளித்து தானும் இறக் கின்றான் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன். இறக்கும் தருவா யில் 'தென்புலம் காவல் என் முதல் பிழைத்தது' என்றும் சொல் லுகிறான். அதாவது 'பாண்டிய அரசர்கள் வழிவழி காத்து வந்த மரபை அழித்த முதல் குற்றவாளி யான்' என்கிறான். இதற்குப் பிறகும் தான் உயிர் வாழ்ந்தால், தன்னை முன் மாதிரியாகக் கொண்டு வழிவழி கொடுங்கோலர்கள் தோன்றி விடுவார்கள் என்று அஞ்சுகின்றது நெடுஞ்செழியனின் உள்ளம். தான் உயிர் விடுவ தன் மூலம் தன் முன்னோரான செங்கோல் முறை காத்த மன்னர்க ளின் மரபு தொடரும் என்று நினைக்கிறான். அதனால், 'மன்பதை காக்கும் தென்புலங் காவல் என் முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்!' என்கிறான். இவ்வாறு கூறி பாண்டிய மன்னன் இறப்பதன் மூலமாக மேற்கூறப்பட்ட நோக்கம் வெளிப்படுத்தப்படுகிறது.

இரண்டாவது நோக்கம் 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத் தல்' ஆகும். இது கண்ணகியைப் பலரும் போற்றுவதாலும் வான வரே வந்து அவளை விண்ணுலகுக்கு அழைத்துச் செல்வதாலும் புலனாகின்றது. கண்ணகி மதுரையை எரித்த பின் அங்கு இருக்க விரும்பாது அங்கிருந்து புறப்பட்டு மதுரைக்கு வெளியே சேரநாட் டெல்லையில் உள்ள முருகன் உறையும் நெடுவேள் குன்றத்தைய டைந்து வேங்கை மரத்தின் கீழ் அழுது கொண்டிருந்தாள். மது ரையை விட்டுப் புறப்பட்டு 14 நாட்கள் முடிந்தபோது இந்திரனால் அனுப்பப்பட்ட தேவர்கள் அங்கு வந்து, பெருமை மிக்க மறக் கற்பினளான கண்ணகியின் பெயரைச் சொல்லி, 'வாழ்க! வாழ்க!' என வாழ்த்தி அவள் மீது மலர்மாரி பொழிந்தனர். அத்தேவர்கள் ஏற்கனவே அமரர் நாடு அடைந்திருந்த கோவலனையும் தம்முடன் அழைத்து வந்தனர். இது கட்டுரைக் காதையில் இடம்பெறும் நிகழ்ச்சியாகும். இவ்வாறு தேவர்களினால் வணங்கப்படுவதன் மூலமாக இளங்கோவடிகளின் இரண்டாவது நோக்கம் வெளிப்ப டுத்தப்படுகிறது.

அத்துடன் வேட்டுவ வரியில் சாலினியின் மீது தெய்வம் ஏறி ஆடும்போது கண்ணகி பிற்காலத்தில் தெய்வம் ஆகப்போகின் றாள் என அவள் கூறுவதும் அடைக்கலக் காதையில் கவுந்தியடி கள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாக ஒப்படைக்கும் போது 'இவளன்றி வேறு தெய்வம் யான் கண்டிலேன்' எனக் கூறுவதன் மூலமாகவும் மதுரை வாழ் மக்கள், தெய்வங்கள், சூரிய பகவான் போன்றோர் கண்ணகியை வணங்குவதாலும் மேற்கூறப் பட்ட நோக்கம் வெளிப்படுத்தப்படுகின்றது.

மூன்றாவதாக 'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' என்பது படைப் புக் காலந்தொட்டு பெருமை குன்றாதிருந்த பாண்டியர் பரம்பரை யில் பிறந்த நெடுஞ்செழியன் நீதி நெறியினின்று தவறியமையும் நல்லவைகளையே நாடிச் செய்து வந்த கோவலன் கொலைப்பட்ட செயலும், வினையின் விளைவுகளே என மதுராபதித் தெய்வங்கள் கூறுவதால் தெளிவாகின்றது. மேலும், ஊழ்வினை என்னும் இவ்வி யற்கைக் கூறு கதையியக்கத்திற்குரிய அடிப்படைக் கருவியாக உள்ளது. கோவலன் மதுரைக்குச் செல்ல கண்ணகியை அழைக் கும் பொழுதும் கானல்வரியில் மாதவியின் பாடலைக்கேட்டு கோவலன் அவளைப் பிரிந்து செல்லுமிடத்திலும் கோவலன் இறந்த செய்தியைக் கூறுமிடத்திலும் ஊழ்வினைப் பயனே இவற் றுக்குக் காரணம் என்பது குறிக்கப் பெற்றுள்ளது.

சிலப்பதிகாரத்திலே நம் அகக்கண்கள் காண வில்லன் பாத்திரம் நடமாடவில்லை. கதையிலே பிரதான திருப்பங்களை ஏற்படுத் தவே வில்லன் பாத்திரம் படைக்கப்படுவது வழக்கம். அப்படிப் பட்ட வில்லன் பாத்திரமாக ஊழ்வினையைப் பயன்படுத்துகிறார் இளங்கோவடிகள். அந்த ஊழ்வினை உருவப் பாத்திரம் அல்ல. அருவப் பாத்திரம். கோவலனுடைய ஊழ்வினையான வில்லன் பாத்திரம் முதன் முதலில் வேலை செய்யத் தொடங்கியது கானல் வரிப் பாடல் காரணமாக அவன் மாதவியை விட்டுப் பிரிந்தபோது தான். இதனை உணர்த்தவே 'யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ் வினை வந்து உருத்தது' என்கிறார் கவிஞர். இதிலே வரும் 'தன்' என்ற சொல் கோவலனைக் குறிக்கும். கதையின் தொடக்கத்தில் மாதவியின் ஆடலையும் பாடலையும் அழகையும் கண்டு மயங்கி, கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து, மாதவியின் மனை புகுந் தானே, அதற்கு ஊழ்வினையைக் காரணமாக்கவில்லை இளங்கோ வடிகள். அது அவன் தனது மதியின்மையால் செய்த பிழை என்றே கூறுகின்றார். மனிதன் தனது மதிபிறழ்ந்து தவறு செய்யும் போது அதன் அடுத்த கட்டமாகத்தான் விதி வேலை செய்யத் தொடங்குகின்றது என்ற உண்மையைக் கோவலனைக் கொண்டு இளங்கோவடிகள் உலகத்தாருக்கு உணர்த்துகிறார்.

கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்தது சிலப்பதிகாரக் கதையில் முதல் திருப்பமாகும். இந்தத் திருப்பத்தை ஏற்படுத்தியது கோவ லனுடைய ஊழ்வினையே என்று மேலே பார்த்தோம். கனாத்திறம் உரைத்த காதையில் கண்ணகியை கைப்பிடித்து புகாரை விட்டு கோவலன் புறப்பட்டது கதையில் இரண்டாவது திருப்பமாகும். இதற்கும் வினையையே காரணமாக்குகின்றார். 'வினைகடைக் கூட்ட வியங்கொண்டான்' என்னும் சொல்லால் கோவலன் மான முள்ளவன். அதனால்தான் தன் பத்தினியோடு நாடு விட்டுப்பெயர் வதனை ஊரிலுள்ளோர் கண்டுவிடாதபடி கதிரவன் அடிவானத்தில் எழுவதற்கு முன் உள்ள இருள் சூழ்ந்த விடியற்காலை நேரத்தில் புறப்பட்டான். கட்டுரைக்காதையில் மதுராபதி தெய்வம் கண்ண கிக்கு, கோவலன் கொலையுண்டதற்கும் நெடுஞ்செழியன் நீதி தவறியமைக்கும் கோவலன் முற்பிறப்பில் சங்கமன், நீலி தம்பதியி

னருக்குச் செய்த குற்றமே காரணமெனக் கூறுகின்றது. இச்சந்தர்ப் பங்களில் இருந்து மூன்றாவது நோக்கம் வெளிப்படுத்தப்படுவதை அறிய முடிகின்றது.

மேலும், புகாரில் மாதவியைப் பிரிந்ததும் கண்ணகியை அடைந்து,

**சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,**
**குலந்தரு வான்பொருள் குன்றந் தொலைந்த**
**இலம்பாடு நாணுத் தரும் எனக்கு...**

- கனாத்திறம் உரைத்த காதை: 9:69-71

என்று கோவலன் கூறியபோது, 'சிலம்பு உள கொள்க!' என்றுதான் கண்ணகி கூறினாள்.

அதாவது, தன் காற்சிலம்புகள் இரண்டையும் கொடுப்பதாகத்தான் கண்ணகி கூறினாள். அப்படியிருந்தும், மாதரி இல்லத்திலே கண் ணகியிடம் விடைபெற்ற கோவலன், ஒற்றைச் சிலம்பைத் தான் விற்றுவரப் புறப்பட்டான் என்பது வியப்பைத் தருவதாக இருக்கி றது. கண்ணகி தந்த இரண்டு சிலம்புகளையும் விற்றுப் பொருள் தேடக் கோவலன் முயன்றிருப்பானானால் கதையின் போக்கே வேறு விதமாக அமைந்திருக்கும். கோவலன் ஒற்றைச் சிலம்பைக் கொண்டு சென்றதற்கு இளங்கோ சொல்லும் காரணம் வினையின் காலம் என்பதுதான். இச்சந்தர்ப்பத்திலிருந்தும் மூன்றாவதாக இளங்கோவடிகள் கூறிய நோக்கம் வெளிப்படுவதனை அறிந்து கொள்ளலாம்.

புகார், மதுரைக் காண்டங்களிலேயே இந்நோக்கங்கள் விளக்கம-டைகின்றன. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டிய வர லாற்றோடு அவள் மாநில மன்னர்களுக்கு வரம் தந்தமையும் வஞ்சிக் காண்டம் கூறுகிறது. இவற்றால் அவள் தெய்வத்தன்மை பெற்றவள் என அறிந்து கொள்கின்றோம். ஆனால் கதைத்தொடக் கத்தில் அவளை அத்தகைய பெருமை படைத்தவளாக அடிகள் கூறவில்லை. எனவே கண்ணகி 'கடவுள் தன்மை' எய்தியதைச் சிறப்பிப்பதே அவர் நூல் எழுதியதன் பிரதான நோக்கமாய் இருத் தல் வேண்டும். ஆனால் இதனை அவர் நேரடியாகக் வெளிப்ப டுத்தாமல் மறைமுகமாகவே வெளிப்படுத்துகின்றார் என்றே கூற வேண்டும். புகார் காண்டத்தில் மக்களுள் சிறந்தவளாய்க் காட்சிய ளித்த கண்ணகி மதுரைக் காண்டத்தில் மனித நிலையைக் கடந்த வளாய் காணப்படுகிறாள். அவளே வஞ்சிக் காண்டத்தில் கடவுள் நிலையைப் பெற்றவளாய் வரம் தருகிறாள். இதிலிருந்து இளங் கோவடிகள் கண்ணகியின் தெய்வத்தன்மையை வெளிப்படுத்து வதை காண முடிகின்றது. இவ்வாறு இளங்கோவடிகள் கூறும் நோக்கங்கள் மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களின் மூலம் வெளிப்ப டுத்தப்படுகின்றன.

தமிழர் வாழ்க்கை களவியலில் தொடங்கிக் கற்பியலிலே கலக்கும் என்கிறார் தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினார்க்கினியர். இந்த விதிக்கு விலக்காக வாழ்க்கை கற்பியலில் தொடங்குவதும் உண்டு. இளங்கோவடிகள் கண்ணகியையும் கோவலனையும் கள வியற் காதலராக அறிமுகப்படுத்தாமல் முதன் முதலில் மணவறை யில் சந்திக்கும் மணமக்களாக அறிமுகப்படுத்துவதற்கான கார ணம் கண்ணகி தன் வாழ்க்கையின் முடிவில் பத்தினித் தெய்வமா கப் போகிறாள். ஆகவே அவளைக் களவியலிலே புகுத்தி திரும ணத்திற்கு முன்பே உளப்புணர்ச்சிக்கும் உடற்புணர்ச்சிக்கும் உட் பட்டுவிட்டவளாகக் காட்ட இளங்கோவடிகள் விரும்பவில்லை. அப் படிக் காட்டுவது பத்தினித் தெய்வமாகப் போகும் பாத்திரத்திற்கு இழுக்கு தேடுவதாகுமென்று அவர் எண்ணியிருக்க வேண்டும். அதனால்தான் கண்ணகியையும், கோவலனையும் முதன் முதலில் களவியலுக்குப் புறம்பான காதலராக மணவறையில் சந்திக்கும் மணமக்களாக அறிமுகப்படுத்துகின்றார்.

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் அரசையும் அரண் மனை வாழ்வையும் துறந்தவர். பெண் இன்பம் உட்பட வாழ்க்கை இன்பங்கள் அனைத்தையும் துறந்தவர். அப்படிப்பட்டவர் கண் ணகி தீ வலம் வரும் காட்சியைக் கண்டு 'அதைக் கண்டவர்கள் முற்பிறப்பில் செய்த தவம்தான் என்னே!' என்று வியப்புடன் வினா எழுப்புவதேன்? அடிகளின் வியப்பிலும் வினாவிலும் இருக்கும் பொருள் இதுதான். கற்பை நெருப்போடு ஒப்பிடுவது உண்டு. கற் பைக் கடைப்பிடித்து வாழும் பத்தினியரும் நெருப்புக்கு ஒப்பா னவரே. அதனால்தான் கண்ணகியை 'கற்புக் கனலி' என்கின்றார். அந்தக் கற்புக்கனலி அந்தணப் புரோகிதர் வளர்த்த சிறு தீயை வலம் வருகின்றாள் என்றால் அது இளங்கோவிற்கு வியப்புக்குரிய நிகழ்ச்சியாகப்படுகிறது. ஒரு தீ இன்னொரு தீயை வலம் வருவது அவருக்கு விந்தையாகப்படுகிறது. நாளை மதுரை மாநகரிலே அக்கினிக் கடவுளே கண்ணகி முன் பயபக்தியுடன் தோன்றி, 'மாபத்தினி! நின்னை மாணப் பிழைத்த நாள் பாயெரி இந்தப் பதியூட்ட, பண்டேயோர் ஏவல் உடையேனால்: யார் பிழைப்பார், ஈங்கு?' என்று ஏவல் கேட்கப்போகின்றது. அப்படிப்பட்ட பத்தினித் தெய்வம் அந்தணர் வளர்த்த சிறு தீயை வலம் வருவது விந்தை தானே. இதை நினைக்கும்போது கண்ணகி தீயை வலம் வந்த காட்சியைக் காணக் கொடுத்து வைத்தவர்களின் பேற்றினை நினைத்து இளங்கோ பெருமூச்சு விடுகிறார்.

கனாத்திறம் உரைத்த காதையில் கண்ணகி சொன்ன கனவைக் கேட்ட தேவந்தி 'கண்ணகி! நீ உன் கணவனுக்குக் கசப்பாகிவிட வில்லை. முற்பிறப்பிலே ஒரு நோன்பினைச் செய்யாது தவறு இழைத்தாய். காவிரி கடலொடு சேருமிடத்திற்கு அருகேயுள்ள நெய்தல் நிலத்துக் கானலிலே சோம குண்டம், சூரிய குண்டம் என இரு பொய்கைகள் உள்ளன. அவற்றின் துறைகளிலே மூழ்கி அங்குள்ள காமவேள் கோயிலைத் தொழுத பெண்கள் பிரிந்த கணவரை திரும்பவும் அடைந்து இவ்வுலகில் இன்பவாழ்வு எய்து வர். மறுமையிலும் போக பூமியிலே கணவனுடன் கூடி இன்புறுவர். நாமும் அங்கு சென்று நீராடுவோம், வா' என்று அழைத்தாள். தேவந்தி கூறியதைக் கேட்ட கண்ணகி 'காமனைத் தொழுவது கற் புடைய மகளிர்க்குப் பெருமை தருவது அன்று' எனக் கூறினாள். இந்நிகழ்ச்சி தெய்வத்தன்மை பொருந்திய கண்ணகியின் பெரு மையை வெளிக்காட்டுகின்றது.

வேட்டுவ வரியில் வேடர்கள் வாழும் பகுதியைக் கண்ணகி, கோவ லன், கவந்தியடிகள் ஆகியோர் கடந்து சென்றபோது வியத்தகு நிகழ்ச்சி ஒன்று ஏற்பட்டது. வேடர்கள் தங்கள் தெய்வமாகிய கொற் றவைக்கு விழாக் கொண்டாடி வழிபாடு செய்யத் தொடங்கினர். வழிபடும் உரிமைகொண்ட சாலினி என்பவளை ஒப்பனை செய்து கொற்றவையின் திரு முன்னர் நிறுத்தினர். அவள் தன்மீது தெய் வம் உற்றதால் ஆவேசம் கொண்டு அடி பெயர்த்து ஆடத் தொடங்கினாள். அந்த நிலை எய்தியது முதல் தெய்வம் நீங்கி விடுபடும் வரையில் அவள் சொல்வன யாவும் தெய்வ வாக்கா கவே கருதப்படும். தெய்வ நிலை எய்திய அவளைச் சுற்றிக் கான வர் பலரும் பயபக்தியோடு பணிந்து நின்றனர். அந்தக்கட்டத்தில் கவுந்தியும், கோவலனும், அருகே கண்ணகியும் நின்றனர்.

தெய்வமேறிய பெண், கண்ணகியைப் பார்த்தாள். பார்த்த மாத்தி ரத்திலேயே அங்குள்ள அனைவர் பார்வையையும் அவள் பக்கம் திருப்பும் வகையில் அவளைத் தன் விரலால் சுட்டிக் காட்டினாள். பின்னர் அவள் கண்ணகி அருகே நின்று பேசத் தொடங்கினாள். 'இவள் கொங்குநாட்டுச் செல்வியாவாள் குடமலைநாட்டின் நன் மகளாவாள் தென்தமிழ் நாட்டின் பாவை ஆவாள் இவள் ஒப்பற்ற மாமணியாக உலகிற்கு வந்த திருமாமணி' இந்த ஆருடப் பாராட் டுரைகள் அவள் வாய் வழியே உதிர்ந்தன. சிலப்பதிகார 'உரை பெறு கட்டுரை' இதை உறுதிப்படுத்தும் சான்றுரையாகும். இதனை இளங்கோவடிகள்...

**இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி**
**தென்தமிழ்ப் பாவை செய் தவக்கொழுந்து**
**ஒருமா மணியாய், உலகிற்கு ஓங்கிய ...**

- வேட்டுவ வரி: 12:47-50

எனக் குறிப்பிட்டுள்ளார்.

தன்னை இவ்வளவு உயர்வாகப் பேசியதைக் கேட்ட கண்ணகி தம் புகழ் கேட்ட சான்றோர் போலத் தலை கவிழ்ந்து அடக்கத்துடன் 'மயக்கத்தால் இந்தத் தெய்வமேறிய பெண் இவ்வாறு பேசுகிறாள்' என்று கூறித் தன் கணவன் கோவலன் முதுகுப்புறத்தே ஒதுங்கி நின்று புதியதொரு முறுவல் பூத்தாள். இவ்வாறு அவள் முறுவல் செய்ததற்கு காரணம் முன்னரே கண்ணகிக்குத் தன்னிடம் ஏதோ ஒரு பெரிய சக்தியிருப்பதாகக் கனவிலே புலப்பட்டது ஆகும்.

இதுவரையில் தன் ஞானத்தாலும், வழிநடையில் ஏற்பட்ட பழக்கத் தாலும் கண்ணகியைப் பற்றி அறிந்து வைத்திருந்த கவுந்தியடிக ளுக்கு இப்போது வேடர் சேரியில் கேட்ட தெய்வ வாக்கு அந்தப் பத்தினியைப் பற்றிய தெளிவான கருத்தைத் தந்திருக்க வேண் டும். அதனால் அவர் கண்ணகியின் தெய்வத் தன்மையை ஐயம் திரிபுற உணர்ந்தார். மூதறிவாட்டியான வேடுவர் குமரியேனும் பேதுறவு மொழிந்தனள் என்று கொண்டாலும் கொள்ளலாம். ஆனால் மாதவத்தாட்டியான கவுந்தியடிகள் தெள்ளத் தெளிந்த சொற்களில் திருத்தமாகவும் உறுதியாகவும் அந்தக் கருத்தைத் தெரிவிப்பதைப் பார்க்கின்றோம்.

இயக்கி என்னும் தெய்வத்தை வழிபட்டுத் திரும்புகின்ற மாதரி என்ற இடைக்குல மடந்தையிடம் கவுந்தி அடிகள் கண்ணகியை அறிமுகப்படுத்துகிறார். அப்போது 'இவளைப் போலப் பொற்பு டைத் தெய்வம் யான் கண்டதே இல்லை' என்று போற்றிப் புகழ்ந்து பேசுகிறார்.

**தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி**
**இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்**
**கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்.**

- அடைக்கலக் காதை: 15:141-144

துன்பமாலை என்னும் பகுதியில் கோவலன் கொலையுண்ட செய் தியைக் கேட்ட கண்ணகி பலவாறு துன்பமடைந்தாள். கண்ணகி யின் துன்பத்தைக் கண்டும் கூட யாரும் அவள் மனதை தேற்ற முன் வராததால் ஆயர்சேரிப் பெண்களை அழைத்தாள். 'நீங்கள் எல்லோரும் கேட்டுக்கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டு வானத் துச் சூரியனை அழைத்தாள். அவனிடம்...

**காணிகா,**
**வாய்வதின் வந்த குரவையின் வந்து ஈண்டும்**
**ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டீமின்**
**ஆய மடமகளிர் எல்லீரும் கேட்டைக்க**
**பாய்திரை வேலிப் படுபொருள் நீஅறிதி**
**காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?**

- துன்பமாலை: 18:46-51

எனக் கேட்டாள். அப்போது வியக்கத்தக்க நிகழ்ச்சி நடந்தது. வெய்துயிர்த்து வெகுண்டு பேசிய கண்ணகியின் கேள்விக்கு விடை கிடைத்தது. இங்கேதான் கண்ணகியின் அமைதியான வாழ்க்கைப் போக்கில் அதிர்ச்சி தரும் மாறுதல் முதன்முதலாக ஏற்படுகிறது. வானொலியாக (அசரீரியாக) எதிரொலி கேட்டது. 'உன் கணவன் கள்வன் அல்லன், இந்த ஊரை எரி உண்ணும்' என்ற பதில் வந் தது.

**கள்வனோ அல்லன் கருங்கயல்கண் மாதராய்**
**ஒள் எரி உண்ணும் இவ்வூர் என்றது ஒருகுரல்.**

- துன்பமாலை: 18:52-53

அப்போது முதல், வெறி பிடித்தவள் போல் மாறிவிட்ட அவளிடம் மறைந்து கிடந்த தெய்வீக ஆற்றல்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெடித்து வெளிக்கிளம்பலாயின.

மதுரை நகரத்து மக்கள் வெட்டுண்டு கிடந்த கோவலனைக் காட் டவே கண்ணகி அவனைக் கண்டாள். தன்னைப் பார்த்த கண்ண கியை கோவலன் பார்க்கவில்லை. மாலை மயங்கும் வேளையில் கணவன் கிடந்த இடத்தில் இருந்து கண்ணகி அரற்றிய ஓலம் ஊரெங்கும் பரவி நிறைந்தது. கண்களைத் திறந்து தன்னைக் காணாத கணவனை நோக்கி கண்ணகி பலவாறு புலம்பி அழு தாள். இவ்வாறு அழுதபின் தனது அன்பன் அகல் மார்பை ஆரத் தழுவிக்கொண்டாள். உடனே உயிர் பெற்றெழுந்தான் கோவலன். 'முழுமதி போன்ற முகம் வாடி விட்டதே' என்று வாய் திறந்து பேசி னான். அவள் கண்ணின் நீரைத் தன் கையால் துடைத்தான். அது கண்டு கண்ணகி அழுதபடியே இருகரம் கொண்டு அவன் இணை யடி பற்றினாள். அவ்வேளை அவன் எழுந்து 'எழுதிய நல்ல மலர் போலும் மையுண்ட கண்களை உடையாய்! இருப்பாயாக' என்று சொல்லி விட்டு வானவரோடு வானகம் சென்றான்.

**என்று இவை சொல்லி அழுவாள் கணவன் தன்**
**பொன் துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக் கொள்ள,**
**நின்றான் எழுந்து நிறைமதி வாள்முகம்**
**கன்றியது என்று அவள் கண்ணீர் கையான் மாற்ற,**
**அழுது ஏங்கி நிலத்தின் வீழ்ந்து ஆயிழையாள், தன் கணவன்**
**தொழுதகைய திருந்தடியைத் துணை வளைக்கையால் பற்றப்**
**பழுதுஒழிந்து எழுந்திருந்தான் பல் அமரர் குழாத்து உளான்**
**எழுது எழில் மலர் உண் கண் இருந்தைக்க எனப் போனான்.**

- ஊர் சூழ்வரி 19:60-67

இவ்வாறு மதுரை மக்களிடம் என் கணவனைக் காண்பேன். கண்ட தும் அவன் வாயில் தீதற்ற சொற் கேட்பேன் என்று சொன்னபடி செய்து காட்டிவிட்டாள்.

மாபெரும் துயரம் தன்னை வந்து அடைகின்ற வரையில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு மிகச் சிலவான சொற்களையே பேசக்கூடிய பெண்ணாகக் கண்ணகியைக் கண்ட நாம் கோவலன் வெட்டுண்ட செய்தி அறிந்தது முதல் அவள், இடைவிடாது பொங் கிப் பொங்கிப் பேசுகின்ற வீர பத்தினியாக மாறி விட்டதைப் பார்க்கிறோம்.

மன்னன் நெடுஞ்செழியன் இறந்ததைக் கண்ட கோப்பெருந்தேவி தானும் அரசன் அடி தொழுது வீழ்கின்றாள். அப்போது தேவியின் முன்னால் சிலம்பின் வென்ற சேயிழையான கண்ணகி, பத்தினிப் பெண்டிர் பிறந்த பட்டினமாம் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்த நானும் அத்தகைய பத்தினி என்பது உண்மையானால் கோவேந் தன் தன்னோடு கோநகர் மதுரையையும் ஒழித்திடுவேன் என்று நெடுமொழி கூறினாள்.

**மட்டுஆர் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்**
**பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே**
**ஆமாகில் ஒட்டேன் அரசொடும் ஒழிப்பேன்**
**மதுரையும் என் பட்டிமையும் காண்குறுவாய் நீ...**

- வஞ்சினமாலை: 21:35-38

சொல்லுதல் யார்க்கும் எளிது. சொல்லிய வண்ணம் செய்தலோ அரிது. செயற்கரிய செய்தாரைப் பெரியர் என்றும் பிரித்துப் பேசு வர். மாதரசி கண்ணகி நல்லாள் சூளுரைத்த வண்ணமே செய்து காட்டினாள். நான்மாடக்கூடலாம் மதுரை நகரத்து மகளிரை அழைத்தாள். மைந்தரை அழைத்தாள். வானத்துக் கடவுளரை அழைத்தாள். மாதவத்தோரையும் அழைத்தாள். அழைத்துச்சொன் னாள். 'கேட்டுக்கொள்ளுங்கள், பேதையேன் காதலன் கோவலனுக் குப் பேரிடரும் பெரும்பழியும் தந்ததால், குற்றமில்லை என் செய லில் என்றெண்ணிக் கோநகரைச் சீறுகின்றேன்' என்று தனது இடது முலையைத் திருகி எடுத்தாள்.

**மட்டார் மறுகின் மணி முலையை வட்டித்து விட்டாள்**
**எறிந்தாள் விளங்கு இழையாள்.**

- வஞ்சினமாலை: 21:45-46

மதுரையில் தீ எழுந்தது.

**பொற்றொடி ஏவப் புகை அழல்**
**மண்டிற்றே நல்தேரான் கூடல் நகர்.**

- வஞ்சினமாலை 21:56-57

மெய் நடுங்கச் செய்யும் இதனோடு அவள் செயல் நின்று விட வில்லை. மேலும் தொடர்கிறது. பத்தினியர் பிறந்த பதியிலே பிறந்த கண்ணகி மணி முலையை வட்டித்து வீதியிலே எறிந்த போது நீலநிற மேனியும், சிவந்த வண்ணச் சடையும் கொண்ட நெருப்புக் கடவுள் அவள் முன்னே தோன்றி மாபத்தினி! உனக் குத் தவறிழைத்த காலத்து இந்த ஊரை எரியூட்ட வேண்டும் என்று முன்னரே எனக்குக் கட்டளை உண்டு. (அதனால் இப்போது எரித்து விடுவேன்) தப்பிப் பிழைக்குமாறு காப்பற்றப்பட வேண்டிய வர்கள் யார் யார் என்று சொல்வாயாக என்று ஏவல் கேட்டு எதிர்நோக்கி நின்றான். அப்போது கண்ணகி:

**பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர்**
**மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டுத்**
**தீத்திறத்தார் பக்கமே சேர்க....**

- வஞ்சினமாலை: 21:53-55

என்றாள்.

அக்கினிக்கடவுள் மட்டுமல்ல, மதுரை மாநகரின் காவல் தெய்வ மாகிய மதுராபதித் தெய்வமும் கண்ணகிக்கு முன்வர அஞ்சிப் பின் பக்கமாக ஒதுங்கி வந்து நின்று இந்த நிலையைக் கண்ணகி அடைவதற்கான முன்வினை நிகழ்ச்சிகளை முறையாக முற்றிலும் விளக்கிக் கூறி 'மதுரை நகரைப் பற்றிய தீ அடங்குமாறு செய்ய வேண்டும்' என்று கேட்டுக்கொள்கிறாள். பத்தினியின் இசைவால் மதுரைக்குத் தீயின் கொடுமையினின்றும் விடுதலை கிடைத்தது. ஆணை கேட்டல் என்பதோடன்றித் தெய்வமும் அஞ்சி வேண்டிக் கொள்ளும் நிலைக்குக் கண்ணகி உயர்ந்து விடுகிறாள்.

ஆய மடமகளிர் முன்னே, அணி மதுரை மக்கள் முன்னே, கோவேந்தன் தேவி முன்னே என்று இவ்வாறு பலர் முன்னே வஞ் சினம் கூறி வாகை சூடிய கண்ணகி உணர்ச்சி வசப்பட்டு 'நாம் எங்கே நிற்கிறோம்? யார் முன்னே பேசுகிறோம்?' என்பதை மறந்து 'என்னுடைய கணவனைக் கண்ட பின் தான் ஓரிடத்தில் இருப்பேன் அல்லது நிற்பேன்' என்று சூளுரைத்துக் கொற்றவை வாயிலில் தன் வளையல்களை உடைக்கின்றாள். மதுரை நகரின் கீழ்த்திசை வாயில் வழியே கணவனோடு புகுந்த கண்ணகி இப்போது மேற் றிசை வாயில் வழியாகத் தனியாளாக வெளியேறுகின்றாள்.

கணவனைக் கண்ட பின்னர் தான் நிற்பேன் என்று பேசிய நங்கை சேர நாட்டுத் திருச்செங்குன்றில் வேங்கை மரம் ஒன்றின் நிழலில் வந்து நின்றாள். பதினான்காம் நாள்தான் வந்து நின்றாள் என்றா லும் பதினான்கு நாட்கள் வரை நிற்கமாட்டேன் என்று சொல்லா மல் காதலனைக் கண்டாலன்றி நிற்க மாட்டேன் என்று சொன் னாள். இப்போது அவள் கோவலனைக் காணவில்லை. என்றாலும் நின்று விட்டாள். சொன்னபடி எல்லாம் செய்துகாட்டி விட்டதால் ஓங்கி நிலைத்த தன்னம்பிக்கை உணர்வு ஆணவமாக அரும் பலமா? தெய்வமாகும் தகுதிகள் அனைத்தும் பெற்ற அவளை அந்நிலை அடையவிடாதபடி தடுத்தது இது ஒன்றே ஆகும். தடை யாக நின்ற அந்த மாயையும் உடைபடும் காலம் வந்துவிட்டது. அதனால் அங்கே நின்றுவிட்டாள். 'நிற்கமாட்டேன் என்று சொன்ன வள் நின்று விட்டாயே' என்று மறைமுகமாகக் கேட்பது போல் அங்கே வந்த குன்றக் குறவர்கள் கேட்கிறார்கள். 'மலை வேங்கை நறு நிழலில் வள்ளி போல்வீர்! மனம் நடுங்க முலை இழந்து வந்து நின்றீர் யாவிரோ...?' - குன்றக்குரவை: 24:3-4

பின் தனக்கு நடந்தவற்றை கூறி கணவனை இழந்து, கருவியாகப் பயன்பட்டேன் என்ற பொருள்பட வேடர்களிடம் ஆன்றவிந்தடங்கிய சான்றோர் போலச் சொல்லுகிறாள். செய்த வினையை நினைத்து நொந்து கொள்கிறாள். வெள்ளைப்பரப்பிலே இருந்த ஒற்றைப் புள்ளி போன்ற முனைப்புணர்வும் அற்றுப் போகவே முற்றிலும் தூய தெய்வத்தன்மை அடைகிறாள். ஒவ்வொரு ஞானியருக்கும் ஒவ்வொரு மரத்தடியில் ஞானஒளி தோன்றியதுபோல் கண்ணகிக்கு வேங்கை மரநிழலிலே ஞானம் பிறந்தது. உடனே வேடர்கள் அவளை வணங்குகிறார்கள்.

அந்த ஒருகுறையும் மறைவதற்காகக் காத்திருந்தவர் போல் வான-வரும் வந்திறங்கி மலர்மாரி பொழிந்து வள்ளிபோல வேங்கை மரத்தடியில் வந்து நின்ற கண்ணகியைச் செவ்வேள் போன்ற கோவலனுடன் கொண்டுசென்றனர்.

**என்றலும் இறைஞ்சி அஞ்சி இணைவளைக்கை எதிர்கூப்பி**
**நின்ற எல்லையுள் வானவரும் நெடுமாரி பொழிந்து**
**குன்றவரும் கண்டு நிற்பக்கொழுநனொடு கொண்டு போயினார்.**
- குன்றக்குரவை: 24:7-9

தங்கள் கட்புலம் காண விட்புலம் போன கண்ணகியைக் கண்ட குன்றக் குறவர்கள் அவள் எந்நாட்டாள் என்றும், யார் மகள் என் றும் அறியார். ஆயினும் அவளையே கண்கண்ட தெய்வமாக எண் ணினர்.

'நம்முடைய குலத்தில் இவளைப்போலச் சிறந்த தெய்வம் இல்லை. ஆதலால் இவளையே தெய்வமாகக் கொள்ளுங்கள். நல்ல மணம் தரும் மலர் நிறைந்த கிளைகள் படர்ந்த இந்த வேங்கை மரத்தின் கீழே ஒப்பற்ற தெய்வமாக நிறுத்துங்கள். தொண்டகப் பறையினை முழக்குங்கள். சிறுபறையைக் கொட்டுங் கள். கொம்பெடுத்து ஊதுங்கள். மணி ஓசை செய்யுங்கள். குறிஞ் சிப் பண்ணிலே பாடல் பாடுங்கள். மணமுள்ள புகையூட்டுங்கள். பலியாக மலரிடுங்கள். சுற்றுச் சுவர் எடுத்து வாயில் அமைத்து வாயாரப் புகழ்ந்து அந்தத் தெய்வத்தின் பெருமை பாடிப் போற்றுங்கள். பல்வேறு மலரெடுத்துத் தூவுங்கள்'. முலையொன்று இழந்தவளாகத் தங்கள் மலை தேடி வந்த தெய்வத்தை வழிபட் டால் நல்ல பலவும் பெருகும் என்று நம்பி இந்த முறையில் வழி பட்டு, மகிழ்ச்சி பொங்கக் கூடிப்பாடி குரவையாடினர். இவ்வண் ணம் திருமாபத்தினி குடமலையாட்டியாக முதன்முதலில் வழிபடு தெய்வமானாள்.

இவ்வாறு வழிபாட்டுத் தெய்வமாக மாறிய கண்ணகியின் கதை யைக் கேட்ட சேரன் செங்குட்டுவனின் மனைவி கண்ணகிக்கு கோயில் கட்டுமாறு கூறவே சேரன் செங்குட்டுவன் இமயத்திலி ருந்து கல் எடுத்து வந்து பத்தினித்தெய்வமான கண்ணகிக்கு கோயில் கட்டினான். உலகாளும் மன்னவனான சேரன் செங்குட்டு வனின் ஆணைக்கிணங்க சிறையிலிருந்து விடுவிக்கப் பெற்ற ஆரிய மன்னரான கனக-விசயர், பெரிய காவற் கூடத்திலிருந்து விடுதலை பெற்ற பிற வேந்தர்கள், குடகு நாட்டுக் கொங்கணர், மாளுவ வேந்தர், கடலால் சூழப்பட்டுள்ள இலங்கையின் வேந்த னான கயவாகு ஆகியோர் கண்ணகி கோயில் திறப்பு விழாவுக்கு வருகை தருகின்றனர். அத்தோடு கண்ணகியின் தோழியான தேவந்தி, செவிலித்தாய், அடித்தோழி, மாதரியின் மகள் ஐயை ஆகிய நால்வரும் தெய்வம் உருவேறப்பெற்று ஆடும்போது கண்ணகியின் புகழைக் கூறி அவளைத் தெய்வம் என்கிறார்கள்.

அதன்பின் கண்ணகித் தெய்வத்தினை தம் நாட்டுக்கும் வருமாறு அரசர்கள் பல அழைக்க அத்தெய்வமும் சேரனின் விருந்தினராக வந்திருந்த அரசர்கள் விடுத்த வேண்டுகளுக்கு இணங்கி வரம் தந்தது,

'தந்தேன் வரம் என்று எழுந்தது ஒருகுரல்'

என்ற வரிகளில் கூறப்பட்டுள்ளது. 'தந்தேன் வரம்' என்பது அசரீரி யாக எழுந்த குரல்தான்.

'ஆங்கு, அதுகேட்ட அரசனும் அரசரும் ஓங்கிருந் தானையும்
உரையோடு ஏத்த வீடுகண் டவர்போல்...'
- வரந்தருகாதை: 30:164-167

பத்தினிக்கோட்டத்திலிருந்து தந்தேன் வரம் என்று அசரீரியாக எழுந்த குரலைக் கேட்ட சேரனும், பிற மன்னரும் வீட்டின் பத் தையே அடைந்து விட்டவர்போல் மகிழ்ந்தனர்.

இவ்வாறு சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தெய்வாம்சம் பொருந் திய தன்மையினை கதையின் தொடக்கம் தொட்டு முடிவு வரை பல இடங்களில் ஆசிரியர் விபரிப்பதிலிருந்து பத்தினி தெய்வத் தின் வரலாறு உரைப்பதே ஆசிரியரின் நேக்கமாக உள்ளதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

**உசாத்துணை:**


- சிவஞானம்.ம.பொ., 1980, 'சிலப்பதிகார ஆய்வுரை', பூங்கொடி பதிப்பகம், சென்னை, பக்: 349-360.
- இராசமாணிக்கனார்.மா., 1994, 'சிலப்பதிகாரக் காட்சிகள்', வெற்றி அச்சகம், சென்னை, பக்: 23-25, 52-54, 66-71.
- மார்க்கபந்து சர்மா, 'சிலப்பதிகாரம்', இலக்கியப் பதிப்பகம், காரைக்குடி, பக்: 1-8.
- சஞ்சீவி.ந., 1956, 'சிலப்பதிகார விருந்து', சாமி நிலையம், திருச்சிராப்பள்ளி, பக்: 161-170.
- இரகுபரன்.க., 2003, 'சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள்', யுனி ஆர்ட்ஸ் (தனியார் நிறுவனம்), கொழும்பு, பக்: 140-144.
- நடராசன்.தி.சு., 2015, 'சிலப்பதிகாரம் மறு வாசிப்பு', பாவை பிரிண்டர்ஸ், சென்னை.




ashwinivaiyanthy@thaiveedu.com

# வேளிர்!

# கபிலரும் இருங்கோவேளும் 6

**- செல்வநாயகி ஸ்ரீதாஸ்**

முடிவாக, கபிலர், 'அறம் காத்த குடியில் பிறந்த பாரி மகளிர் கோழையான உன் வீட்டில் வாழ்க் கைப்பட ஒருப்படார்' என்று கூறி இருங்கோ-வேளிடம் விடைபெற்று மிகுந்த கோபத்துடன் வெளியேறுகிறார். உன்னை நம்பியா என் நண்பன் மக்களைப் பொறுப்பேற்றேன் என்னும் செருக்கு அவரது நடையில் இருந்தது.

விடு விடுவென்று நடக்கிறார். அந்தக் காலத்தில், மோட்டார் வாகனமா அவர்கள் பயணத்திற்குக் காத்து நின்றிருக்கும்?. சங்கப் பாடல்கள் வாயிலாக அக்காலப் போக்குவரத்துச் சாதனங்களாக நாம் அறிபவை யானை, குதிரை, தேர், பல்லக்கு ஆகியவை தான். இவை நான்கும் அரச குடும்பத்தினருக்கும் மேட்டுக்குடி மக்களுக்கும் உரியவையாகக் கூறப்பட்டவை. இவை தவிர மாட்டுவண்டி ஒன்றே பொதுமக்கள் போக்குவரத்துச் சாதனமாக இருந்திருக்கிறது. சாரி சாரியாக மாட்டு வண்டிகளில் உப்பு ஏற்றிச் செல்லப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன.

உப்பு வண்டிகள் செல்லும் ஒழுங்கு பற்றி 'நோன் பகட்டு உமணர் ஒழிகை' என்று இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில் பதிவு செய்திருக்கிறார். ஔவையாரும் அவரொத்த ஏனைய புலவர்களும் பாணர் கூட்டமும் பொது மக்களும் பொடி நடையாகத் தான் பயணித்திருப்பார்கள். காட்டு வழியாகப் பெரும் சுற்றத்துடன் பயணிக்கும் பாணர்களது பாதங்களை வெப்பத்தால் சூடேறிய மணலும் பரற்கற்களும் கிழித்துத் துன்புறுத்துவதாக 'வெயில் உருப்புற்ற வெம்பரல் கிழிப்ப' என்னும் சிறுபாணாற்றுப்படை, அடி, கூறுகிறது.

கபிலரின் வயதுக் கணக்குச் சரியாகக் கூறமுடியாவிட்டாலும் அவர் பாரி மகளிரை அழைத்துக் கொண்டு மன்னர்களிடம் சென்று கொண்டிருந்த காலத்தில் அவர் நடுத்தர வயதைத் தாண்டியவராக இருக்கவேண்டும் என்று அனுமானிக்கலாம். பாரி மகளிருக்கோ பன்னிரண்டு வயது முதல் பதினைந்து வயதுக்குள் தான் மதிக்கமுடியும். அதாவது அவர்கள் திருமண வயதை அடைந்திருந்தார்கள். திருமணமாகும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்க வேண்டிய 10 பொருத்தங்கள் பற்றித் தொல்காப்பியர், சிறப்பாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்.

**பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**
**உருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே அருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.**

- மெய்ப்பாட்டியல், நூ. 25

இந்நூற்பாவில் 'ஆண்டு' என்பது வயதுப் பொருத்தமாகும். 'ஆண்டு' என்பதற்கு உரையாசிரியர் இளம்பூரணர் 'பதினாறு பிராயத்தானும் பன்னிரண்டு பிராயத்தாளும்' என்று உரை செய்கிறார். இந்த அடிப்படையில் தான் பாரி மகளிர் வயது கணிக்கப்பட்டது.

தொல்காப்பியர், தலைவன் தலைவருக்கிடையே இருக்க வேண்டியதாகக் கூறிய ஒத்த பண்பு நலன்களைப் பார்க்குமிடத்து, உலகியலில் இது நடைமுறைச் சாத்தியமா என்று தான் கேட்கத் தோன்றும். உண்மை, இப் பண்புகளெல்லாம் ஒருங்கே அமையப் பெறுவது இலக்கியத்தில் தான் நடைபெறக்கூடியது. ஆனால் அப்படி அமையுமிடத்து இல்லறம் சிறப்புற அமையும் என்பதையே இதனால் தொல்காப்பியர் கூறியிருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இலக்கணகாரர் கூறிய பொருத்தங்கள் பத்தும் தலைவன் தலைவியரிடையே அமையக்கூடிய பொருத்தங்களின் மேலெல்லை என்று கொள்ளலாம். இன்றும் திருமணம் செய்யவிருக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருத்தம் பார்ப்பதை நினைவில் கொள்ளவேண்டும். இதுவும் பத்துப் பொருத்தங்களே. ஆராயின், தொல்காப்பியர் கூறிய பொருத்தங்கள் பத்துடன் இன்றைய சோதிடம் பார்ப்பவர்கள் பார்க்கும் பொருத்தங்கள் பத்தும் ஒத்துப் போகின்றன.

கபிலர், பாரி மகளிர் தன் அடைக்கலம் என்று பாரிக்கு வாக்குறுதி வழங்கியபின், பாரி மகளிரை அழைத்துக் கொண்டு பறம்பு மலையை நீங்கினார். திருமண வயதை அடைந்திருந்த அம்மகளிரைப் பாதுகாப்பான ஒரு இடத்தில் வைத்து விட்டு பாரியோடு ஒத்த குல மன்னருக்கு அவர்களை மணம் முடித்து வைக்க எண்ணம் கொண்டார், கபிலர். பார்ப்பார்க்கும், பார்ப்பாரிடம் அடைக்கலமாக வைத்த பொருளுக்கும் தீங்கு செய்யலாகாது என்பது அக்கால அரச நெறி. அதன்படி, கபிலர், அவர்களை ஒரு பார்ப்பாரிடம் அடைக்கலமாக்கக் கருதினார்.

இதுவரை காலமும் தமக்கு உணவும் உறையுளும் தந்து பராமரித்த பறம்பு மலையைப் பார்க்கிறார். பறம்பு மலையை நீங்கும் பொழுது கபிலர் பாடிய கையறுநிலைப் பாடல் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. பாரியின் இறப்பிற்கு முன்னும் பாரி இறந்த பின்னும் என்று இரு பிரிவுகளாக இப் பாடலைப் பார்க்கலாம். பாரியின் இறப்பிற்கு முன், மது இருந்த சாடியின் வாய் எப்பொழுதும் திறந்தே இருக்கும். விருந்தினருக்கு உணவு கொடுப்பதற்காக, ஆட்டுக்கறியுடன் சமைத்த சோறும் எப்போதும் தயாராக இருக்கும். குறைவறக் கொடுக்கும் பெரும் செல்வமும் இருந்தது. பறம்பு மலையே! நீ எம்மோடு நட்பாக இருந்தாய் என்று புலம்புகிறார் கபிலர்.

**மட்டுவாய் திறப்பவும், மைவிடை வீழ்ப்பவும்,**
**அட்டுஆன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்**
**பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி**
**நட்டனை மன்னோ முன்னே.**

- புறநானூறு 113, அடி 1-4

ஆனால், இப்போ, பாரி இறந்தான். அதனால், கலங்கி, செயலற்று நீர் பொழியும் கண்களுடன் உன்னைத் தொழுது வாழ்த்தி விடை பெறுகிறேன். பறம்பு மலையே! பாரியின் பெயரும் புகழும் உலகு உள்ளளவும் நிலைபெற்று நிற்குமாறு நீ உயர்ந்து நிற்கின்றாய். பாரி மகளிரின் அழகிய கூந்தலுக்கு உரிமையுடைய மணாளனைத் தேடிச் செல்கிறேன். 'ஒரு பெண்ணின் கூந்தல் அவள் கணவனால் அன்றி வேறு எவராலும் தீண்டப்படாதது' என்னும் தமிழ் மரபை இங்கு பதிவு செய்திருக்கிறார், கபிலர்.

**இனியே,**
**பாரி மாய்ந்தெனக், கலங்கிக் கையற்று**
**நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்**
**சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே**
**கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்**
**நாறுஇருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே.**

- புறநானூறு 113, அடி 5-9



என்பது பறம்பு மலையை நீங்கும் போது கபிலர் பாடிய கையறு நிலைப் பாடல்.

கபிலர், நடந்ததை நினைத்தபடி, யோசனையுடன் நடந்து கொண்டேயிருக்கிறார். எத்தனை ஊர்கள், எத்தனை சத்திரம்? ஊருக்கே உணவளித்த பாரியின் மக்களோடு ஊரூராகக் கபிலர் பயணிக்கிறார். கபிலர் பாரிமகளிருடன் தான் கடந்து வந்த பாதையைப் புரட்டிப் பார்க்கிறார். நான் எங்கே தவறு செய்தேன்? எனது கணக்கு எங்கே, எப்படித் தப்பாகியது? புரியவில்லை.

விச்சிக்கோவிடம் சென்றதை நினைவு கூர்கிறார்.

விச்சிக்கோ, பாரியின் சமகால மன்னர்களுள் ஒருவன். விச்சி என்னும் மலையைச் சூழ இருந்த நாடு விச்சி நாடு. விச்சிமலை, தமிழ் நாட்டின் கிழக்குத் தொடர் மலைகளைச் சேர்ந்த மலையாகும். இம்மலை பச்சைமலை என்றும் அழைக்கப்பட்டது. இது கொல்லி மலையை ஒத்த ஒரு மலை. 'பச்சைமா மலைபோல் மேனி' என்று ஆழ்வார்கள் இம் மலையைப் பாடியுள்ளார்கள்.

இம் மலையை, விச்சியர் என்ற அரச குலத்தவர் ஆண்டு வந்தனர். விச்சிக்கோ, விச்சிமலை நாட்டின் அரசன். இவன், விச்சிக்கோ, விச்சிக்கோன், விச்சியர் பெருமகன் என்றெல்லாம் சங்க நூல்களில் குறிப்பிடப்படுகிறான். விச்சியர் பெருமான் என்று அழைக்கப்படும் இவன் பெரும் விற்படை கொண்டவன். இவன் வாட் போரில் வல்லவன். இவன் வாளேந்திக் களம் புகுந்தால் எவர்க்கும் வணங்கா முடி மன்னரும் அவனை வணங்குவர். அவனுக்குத் திறை கொடா மன்னர் எவரும் இலர் என்று அறியப்பட்டவன். வேந்தரை எதிர்த்துப் போரிடும் திறமுள்ளவன் என்பதைப் பரணர், குறுந்தொகைகளில் உவமையாகப் பதிவு செய்திருக்கிறார்.

மன்னர் போர்க்களம் செல்லும் போது, பாணரும் அவர்களுடன் உடன் சென்று, அவர்களது கள வெற்றியைப் பரணியாக, களவழிப்பாவாகப் பாடுவது மரபு. விச்சிக்கோ போர்க்களம் சென்ற போது பாணரும் சென்றிருந்தனர். இந்தப் பாடலில் புலி நோக்கு என்றது சிங்க நோக்கை. போரிடுபவர்கள் எதிரெதிராக நின்று போராடுவர். அவர்கள் போரை, நடுவில் நின்று அவதானிக்கும் பாணன் சிங்க நோக்காக இருபக்கமும் பார்க்கிறான். போர் மிகக் கடுமையாக நடந்தது. இதன் காரணமாக எழுந்த பெரு ஆரவாரம் இப் பாடலில் உவமையாகக் கூறப்பட்டிருக்கிறது. விச்சிக்கோ, குறும்பூரில் செய்த போர் இங்கு பேசப்படுகிறது.

**சிறுவீ ஞாழல் வேரளைப் பள்ளி**
**........**
**வில்கெழு தானை விச்சியர் பெருமகன்**
**வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்**
**புலிநோக்கு உறழ்நிலை கண்ட**
**கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே**

- குறுந்தொகை 328

சங்க காலத்தில் வேளிர், மூவேந்தரை ஒத்த ஆற்றல் மிக்கவர்களாக இருந்தார்கள் என்பது பல போர்க்களங்களால் நிறுவப்பட்டிருக்கிறது.

விச்சிக்கோவின் தம்பியாகக் கருதப்படும் இளவிச்சிக்கோ என்பவன் பற்றியதொரு பாடல் குறிப்பு உண்டு. ஒரு சமயம், கண்டீரக் கோப்பெரு நள்ளியின் இளவல் இளங்கண்டீரக் கோவும் அவன் நண்பனான இளவிச்சிக் கோவும் ஒன்றாக இருந்த சமயம், புலவர் பெருந்தலைச் சாத்தனார் இளங்கண்டீரக் கோவைக் காண வந்தார். இளங்கண்டீரக் கோவைக் கண்டவுடன் அவனைத் தழுவினார். ஆனால், அவர், உடன் இருந்த இளவிச்சிக் கோவைத் தழுவவில்லை. கபடமின்றிக் காரணம் கேட்டான் இளவிச்சிக்கோ. அதற்குப் புலவர் பெருந்தலைச் சாத்தனார், கூறிய பதில் வருமாறு...

**'... ... பொலந்தேர்**
**நன்னன் மருகன் அன்றியும் நீயும்**
**முயங்கற்கு ஒத்தனை மன்னே வயங்குமொழிப்**
**பாடுநர்க்கு அடைத்த கதவின் ஆடுமழை**
**அணங்குசால் அடுக்கம் பொழியும் நும்**
**மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே'**

- புறநானூறு 151, 7-12

மன்னா! நீ பெண்கொலை செய்த நன்னன் வழிவந்தவன். அது மட்டுமல்லாது உன் நாட்டில் பாடி வரும் புலவர்களுப் பரிசளிக்காது கதவை அடைக்கும் இயல்பு உள்ளது. அதனால் என் போன்ற புலவர்கள் உன் மலையைப் பாடுவதில்லை. அதனால் தான் நான் உன்னைத் தழுவவில்லை. என்றார் புலவர்.

விச்சிக்கோ பரம்பரையினருக்கு இப்படி ஒரு இழுக்கு இருப்பதாக அறிகிறோம். 'பெண் கொலை செய்த நன்னன்' பற்றி இருவேறுபட்ட கருத்துக்கள் ஆய்வாளரிடையே நிலவுகின்றன. ஒன்று, நன்னனது 'பெண் கொலையை' நியாயப்படுத்தும் விதமாக அமைந்திருக்கிறது. அதாவது வேந்தர்கள், வேளிரின் வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்டு வேளிரின் நிலங்களை அழித்துப் பாழ் படுத்தினர் என்னும் காரணத்தால் அவர்களை வஞ்சம் தீர்க்கவே, நன்னன், வேந்தருடன் தொடர்புடைய கோசர் குலப் பெண்ணைக் கொலை செய்தான் என்று கூறப்படுகிறது. அரச விரிவாக்க காலத்தில் நிலவிய போர்களைப் பார்க்கும் போது இது ஏற்புடைத்தாகக் காணப்படுகிறது. ஆனால், எதற்கும் உரிய சான்று இல்லை. ஒரு அனுமானமே.

'பெண் கொலை செய்த நன்னன்' பற்றிய செய்தி நிச்சயமாகக் கபிலருக்குத் தெரியாமல் இருந்திராது. ஆனால், இது விச்சிக்கோவின் தரத்தைக் குறைத்து எடைபோடத் தக்கதாகக் கபிலருக்குத் தோன்றவில்லைப் போலும். இவன் ஆற்றலையும் குடிப்பெருமையையும் கபிலர் அறிந்திருந்தார். விச்சிக்கோ, கடையெழு வள்ளல்களுள் ஒருவனான கண்டீரக்கோப்பெருநள்ளியோடு தொடர்புடையவனாகவும் காணப்பட்டதால், விச்சிக்கோவும் அவரைப்போல் இருப்பான் என்று எண்ணினார்.

பாரி. தன் இறப்பின் பின் தன் மக்களைக் கபிலரே பொறுப்பேற்க வேண்டும் என்று எண்ணம் கொண்டவராக இருந்திருப்பார். தனது மரணத்தின் முன்பாகவே தன் புதல்வியரைக் கபிலரிடம் அடைக் கலமாக விட்டிருப்பார் என்று கொள்ளக் கிடக்கிறது. பாரி இறந்த பின் கபிலர், பாரி மகளிரை திருக்கோவலூரில் ஒரு பார்ப்பாரி டத்தில் அடைக்கலப்படுத்தினார் (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, புறநானூறு, பாடல் 200). பாரி மகளிருக்கு அவர்களை ஒத்த அரச குலத்தில் திருமணம் செய்து வைக்கக் கருதினார். இவற்றைச் செய்து முடிப்பதற்கு அவருக்குச் சிறிது கால அவ காசம் தேவைப்பட்டது.

ஒழுக்கத்தை வலியுறுத்தும் தன்மை கபிலரின் பாடல் பரப்பெங் கும் காணக்கிடக்கிறது. சங்க காலப் பரத்தைமை ஒழுக்கத்தைக் கபிலர் வன்மையாகக் கண்டிப்பதை நாம் அவரது பல பாடல்க ளில் காண்கிறோம். கற்பொழுக்கம் மிக்க பெண்களை உயர்வாக மதிக்கும் அவர் உளப்பாங்கு பல பாடல்களில் வெளிப்படையா கவே கூறப்பட்டிருக்கிறது.

**வடமீன் புரையுங் கற்பின் மடமொழி**
**அரிவை தோள்அளவு அல்லதை**
**நினதுஎன இலைநீ பெருமிதத் தையே.**

- புறநானூறு 122

இப் பாடலில், பெண்களின் கற்புப் பேசப்படுகிறது. 'அருந்ததி யைப் போல் கற்புடைய உன் மனைவியின் தோள்கள் மட்டுமே உனக்கு உரியவையாகவும், வெறொன்றும் இல்லாத பெருமிதம் உடையவனே' என்று, மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடிய பாடல் இது.

இத்தகையதொரு ஒழுக்கம் மிக்கவனையே கபிலர், பாரி மகளி ருக்கு மணம் முடித்து வைக்க விரும்பியிருப்பார். குடிப்பிறப்பா லும், கொடையாலும், கொற்றத்தாலும் சிறந்து விளங்கிய விச் சிக்கோ, பாரி மகளிரை மணக்கும் தகுதியுடையவனே என்று கபி லர் கருதினார். பாரி மகளிரை அவனுக்கு மணம் முடித்து வைக் கும் முகமாக விச்சிக்கோவின் அரசவை நாடிச் சென்றார். விச்சிக் கோவும் கபிலரை மரியாதையுடன் வரவேற்றான்.

விச்சிக்கோ அரசவையில் நுழைந்த கபிலர், புலவர் வழக்கப்படி, விச்சிக்கோ மேல் ஒரு பாடல் பாடினார். விச்சிக்கோ மேல் கபிலர் பாடிய முதலும் இறுதியுமான பாடல் இது. இப்பாடல், பாடாண் திணையிலும் பரிசில் கடாயது என்னும் துறையிலும் அமைந்திருந் தது.

பாடாண்திணை என்பது பாடப்படும் ஆண்மகனது வீரம், வெற்றி, கொடை, புகழ், அருள் ஆகிய நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது. பரிசில் கடாநிலை என்பது, புலவன் தனது பரிசில் பெறும் வேட்கையைப் பரிசில் கொடுப்பவனிடம் வெளிப்படுத்து வது. சில சமயங்களில் பரிசில் கொடுப்பவன், பரிசில் வழங்கத் தாமதித்தால், பரிசில் வேண்டுவோன் தனது நிலையைக் கூறிப் பரிசிலைத் தாமதியாது தரும்படி வலியுறுத்துவதும் பரிசில் கடா நிலையாகும்.

கபிலர், முதலில், விச்சிக்கோவின் நாட்டைப் பாடினார். உச்சி இதுவென்று அளந்து அறியமுடியாத, ஆகாயம் வரை உயர்ந்த மலை, மலையின் உச்சியில் இனிய பலா மரங்கள், இப் பலா மரங்கள், வேட்டுவரின் கண்காணிப்பில் இருந்தன. சிவந்த முகத் தையுடைய மந்தியும் கருவிரல்களையுடைய கடுவனும் வேட்டுவர் அறியாது, பலாப்பழத்தைக் களவாடி உண்கின்றன. பலாப்ப ழத்தை உண்ட கடுவன் தன் மந்தியுடன் உண்ட மயக்கம் தீர, மலை உச்சியிலே, மூங்கில் புதரிலே, மகிழ்ச்சியாக அயர்ந்து தூங்கும். அத்தகைய வளம் பொருந்திய மலை நாட்டு மன்னா! என விச்சிக்கோவை விளிக்கிறார்.

**பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்**
**கனிகவர்ந்து உண்ட கருவிரற் கடுவன்**
**செம்முக மந்தியொடு சிறந்து சேண் விளங்கி**
**மழைமிசை அறியா மால்வரை அடுக்கத்துக்**
**கழைமிசைத் துஞ்சுங் கல்லக வெற்ப...**

- புறநானூறு, பாடல் 200, அடி 1-5

போரில், பகைவர் உடலைக் குத்திக் கிழித்ததால் நிணம் தோய்ந்த, நெருப்புச் சுடர் போல அகன்று கூராகிய தலையையு டைய நீண்ட வேலையும், வெற்றியினால் போர்க்களத்தைத் தன தாக்கிக் கொண்டு காயும் தறுக்கண்மையை உடைய யானை-யயும், விளங்கும் மணி ஆபரணங்களை அணிந்தவனுமாகிய விச் சிக் கோனே!

**நிணத்தின்று செருக்கிய நெருப்புத் தலை நெடுவேல்**
**களங்கொண்டு கனலும் கடுங்கண் யானை**
**விளங்கு மணிக் கொடும்புண் விச்சிக் கோனே!**

- புறநானூறு, பாடல் 200, அடி 6-8

ஒரு காலத்தில், பாரி வேள் நகர்வலம் வந்தான். அவன் சென்று கொண்டிருந்த பாதையில் பூத்துக் குலுங்கும் முல்லைக் கொடி ஒன்று படர்வதற்குக் கொழு கொம்பற்ற நிலையில் நிலத்தில் படர்ந்து காணப்பட்டது. அம் முல்லைக் கொடி, தன்னை வாயார வாழ்த்திப் பாடும் இயல்பற்றது என்பதை நன்கு உணர்ந்திருந்தும் தான் ஏறிவந்த அழகிய தேரை 'நீயே ஏற்றுக் கொள்' என்று 'முல் லைக் கொடி படர' வழிசெய்த பரந்த மனப்பான்மை கொண்ட பாரி வேந்தனது மக்கள், இவர்கள்.

**இவரே, பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை**
**நாத்தழும்பு இருப்பப் பாடாஅது ஆயினும்**
**கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த**
**பரந்துஓங்கு சிறப்பிற் பாரி மகளிர்.**

- புறநானூறு, பாடல் 200, அடி 9-12

நானோ, பரிசிலுக்காகப் பாடல் பாடும் புலவன், அத்துடன், பெண் பேசுவதற்கும், பெண் கொடுப்பதற்கும், தூது செல்வதற்கும் இவை போன்ற பிற செயல்களுக்கும் அந்தணனான எனக்கு உரிமை உண்டு என்று பண்டைத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின் றன. நான் எனக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்பவன்.

**யானே, பரிசிலன் மன்னும், அந்தணன்**

- புறநானூறு, பாடல் 200, அடி 13

நீயோ, பகைவருடன் போரிடும் முறை அறிந்து போரில் வாளால் உயர்ந்து நிற்பவன்.

**நீயே,**
**வரிசையில் வணக்கும் வாள்மேம் படுநன்**

- புறநானூறு, பாடல் 200, அடி 14




இவர்களை உனக்கு மணம் முடித்துக் கொடுக்கும் தகுதியுடைய வன் நான். நீ அனைத்து வகையாலும் இவர்களை மணம் முடித் துக் கொள்ளத் தகுதியுடையாய்.

**நினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போர்**
**அடங்கா மன்னரை அடக்கும்**
**மடங்கா விளையுள் நாடு கிழவோயே!**

அடங்காத அரசரை போரில் உன் வாள் வலிமையால் அடக்கும் வல்லவனே! குறையாத வளமான நாட்டிற்கு உரிமை உடைய வனே! இவர்களை மணமகளிராகத் தருகிறேன். நீ இவர்களை ஏற்றுக்கொள்வாயாக, என்று கபிலர் பாடலை முடித்துவைக்கிறார். கபிலரது, இப் பாடல், புறநானூற்றில் 200ம் பாடல். விச்சிக்கோ கபிலரின் வேண்டுகோளுக்கு என்ன பதில் கொடுத்தார் என்பதற்கு எந்தவித சான்றும் கிடையாது. விச்சிக்கோ பற்றிய வேறு பாடல் எதுவும் இல்லை. வேறு அகப்பாடல்களில் பாரி மகளிரை விச் சிக்கோ மறுத்தமைக்கான சான்று எதுவும் இல்லை.

கபிலர், சங்கத் தலைமைப் புலவராகப் பலராலும் மதிக்கப்படுப வர், புலவன் பரிசுக்கு நின்றபோது அப்புலவனின் வேண்டு கோளை ஏற்பதே மன்னன் கடமை. நான் ஒரு புலவன், அந்த ணன், நான் கொண்டுவந்திருக்கும் பாரி மகளிரை நீ மணப்ப தையே நான் பரிசாகக் கேட்டு நிற்கிறேன், அவர்களை மணம் முடித்துத் தரும் அனைத்து உரிமையும் எனக்கு உண்டு என்று கேட்கும் கபிலருக்கு விச்சிக்கோ என்ன பதில் சொல்லியிருக்கக் கூடும் என்பதை நாம் உய்த்து உணரலாமே ஒழிய வேறு சான்று எதுவும் கிடையாது.

புறநானூறு 200ம் பாடல் கபிலர் விச்சிக்கோவைப் பாடாண்தி ணையில் பரிசில் கடாநிலைத் துறையில் பாடியது. புறநானூறு 201-202ம் பாடல்கள், 49 தலைமுறை கண்ட வேளிர் குல மன்னன் இருங்கோவேளைக் கபிலர் அதே தேவைக்காகப் பாடியது. இப் பாடல்களின் பொருளும் ஒன்றாகவே காணப்படுகிறன. இப் பாடல் களின் தொடர்நிலையைக் கொண்டும் பாடல்களின் பொருண்மை யைக் கொண்டும், பாரி மகளிர் விச்சிக்கோவால் மறுக்கப்பட்ட பின்னர் கபிலர், பாரிமகளிரை இருங்கோவேளிடம் அதே நோக் கில் கொண்டு சென்றிருக்கலாம் என்று கூறலாமே ஒழிய, அவ் வாறு கூறுவதற்கு வேறு சான்று கிடையாது.

பாடல் வைப்பு முறையை மட்டும் வைத்து, எந்த நிகழ்வு முதல் நடந்தது? எந்த நிகழ்வு அதன் பின்னாக நடந்தது என்று, வேறு எந்தச் சான்றுமற்ற நிலையில் கூறுவது பல வேளைகளில் மாறான முடிவைக் கொடுக்கலாம். சங்க இலக்கியங்கள், பல்வேறு காலப்பகுதியில் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்று தமிழ் நாட்டின் எல்லை தொல்காப்பியப் பாயிரத்தால் வரையறுக் கப்பட்டுள்ளது. இந்த எல்லைக்குட்பட்ட தமிழ் நாட்டைச் சங்க காலம் என்று கொள்ளப்படுகிற காலப்பகுதியில் 25 சேர மன்னர் களும் 21 சோழ மன்னர்களும் 25 பாண்டிய மன்னர்களும் 9 வள் ளல்களும் இவர்கள் தவிர்ந்த பல குறுநில மன்னர்களும் வேளிர் முதலாய 7 குடிகளும் ஆண்டதாகச் சங்க இலக்கியங்கள் கூறு கின்றன. இவர்கள் அனைவரும் ஒத்த காலத்தில் வாழ்ந்தவர்கள் இல்லை.

கபிலர், தன்காலத்து முடியுடை வேந்தர்களாலும் ஏனைய குறுநில மன்னர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டவர். இறந்தும் வாழும் பாரி யின் மக்களுக்குத் தன்னால் திருமணம் செய்து வைக்க முடிய வில்லையே என்று நினைத்து மிகவும் கவலைப்படுகிறார். இத னைத் தொடர்ந்து தான் அவர் இருங்கோவேளிடம் சென்றதையும் அங்கும் தோல்வியே கிட்டியதையும் ஏற்கெனவே பார்த்தோம். காயம்பட்ட புலியாக இருக்கும் கபிலரின் அடுத்த நடவடிக்கை என்ன?

- தொடரும்



selvanayaki.s@thaiveedu.com









# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 14

- நா. சுப்பிரமணியன்

தமிழியல் ஆய்வு வரலாற்றின் 1960களுக்குப் பின்னரான இயங்குநிலை பற்றி நோக்கி வருகிறோம். கடந்த கட்டுரையிலே அக்கால ஆய்வுச்சூழல்சார் பின்புல அம்சங்கள் மற்றும் கோட்பாட்டுநிலைசார் விவாதங்கள் ஆகியன தொடர்பான சில முக்கிய வரலாற்றுக் குறிப்புகள் பதிவாயின. குறிப்பாக, முன்னைய கட்டுரையின் பிற்பகுதியிலே 1960-70கள் காலகட்டத்தில் திறனாய்வியலில் புதிதாக அறிமுகமான 'யதார்த்தவாதம்' என்ற கோட்பாடுசார் விவாதங்கள் பற்றியும் மார்க்ஸிய நோக்கு தொடர்பான அக்காலப் பகுதியின் புரிதல்கள் பற்றியுமான சில முக்கிய செய்திகள் நோக்கப்பட்டன. அதனை அடுத்தமையும் இக்கட்டுரையானது இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதற்பகுதியானது மேற்படி செய்திகளின் தொடர்ச்சியாக அக்காலப்பகுதியில் புதுவரவுகளாக அறிமுகமான சில முக்கிய கோட்பாடுகள் பற்றிய செய்திகளின் பதிவாக அமையவுள்ளது. இரண்டாவது பகுதியானது 1960களுக்குப் பிற்பட்ட ஆய்வியல் இயங்குநிலைகளை நேரடியாகவே கவனத்திற்கு இட்டுவரவுள்ளது.

## 1960களையடுத்து புதுவரவுகளாக அமைந்த கோட்பாடுகள்:

இவ்வகையில் மு. தளையசிங்கம் அவர்களின் மெய்யுள், பேராசிரியர் தமிழவன் அவர்களால் 1980களில் அறிமுகம்செய்யப்பட்ட அமைப்பியல் மற்றும் பின் அமைப்பியல் ஆகியனவும் அவற்றின் தொடர்ச்சியான பின்னவீனத்துவமும் இங்கு கவனத்துக்கு வரவுள்ளன. அடுத்து, அவற்றின் சமகாலத்தில் தமிழ்ச்சூழலில் முனைப்புப் பெறத் தொடங்கியவையான பெண்ணியம் மற்றும் தலித்தியம் ஆகியன தொடர்பான சிலகுறிப்புகளும் இங்கு பதிவாகவுள்ளன. இவற்றுள் அமைப்பியல் முதல் பெண்ணியம் வரையானவற்றைப் பற்றி ஏற்கெனவே தாய்வீடு இதழிலே எழுதிய 'இலக்கியத்திறனாய்வியலின் இயங்குநிலை' என்ற தொடரிலே 2013 ஒக்ரோபர் முதல் 2014 மார்ச் வரையான வெளியீடுகளில் விரிவாகவே பதிவு செய்துள்ளேன். எனவே மேற்சுட்டியவை பற்றிய முக்கிய குறிப்புகள் இங்கு சுருக்கமாக - இத்தொடரின் தேவைக்கேற்ப பதிவாகவுள்ளன.

மேற்சுட்டியவற்றுள் மெய்யுள் என்பது 1960-70கள் காலப்பகுதியில் - அதாவது அழகியல் நோக்கு மற்றும் யதார்த்தவாதம் ஆகியன ஒன்றோடொன்று விவாதங்கள் நிகழ்த்தி நின்ற சூழலில் மூன்றாவது தரப்பாகத் தன்னை அறிமுகப்படுத்தி நின்றதாகும். இக்கோட்பாட்டை முன்வைத்தவரான திரு. மு. தளையசிங்கமவர்கள் ஈழத்தவர் என்பது பொதுவாக அறியப்பட்ட செய்தியேயாகும். இவர், 1960களிலிருந்தே இலக்கியம் சார்பாக பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். அவை முறையே ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி, போர்ப்பறை ஆகிய தலைப்புகளில் நூலுருப் பெற்றன. இவற்றின் தொடர்ச்சியாக உருவான அவரது சிந்தனைகளே மெய்யுள் என்ற தலைப்பிலான நூலாக வடிவெய்தின. திரு. தளையசிங்கமவர்கள் 1973ல் தமது 38வயதில் அவர் இயற்கை எய்துவதற்கு ஓராண்டு முன்பாகவே(1972ல்) அவருடைய மெய்யுள்சார் சிந்தனைகள் தொகுநிலை எய்திவிட்டன. அவர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மூலம் பெறப்படும் தகவல்கள், இவையே.

மெய்யுள் என்ற கோட்பாடானது 'உலகளாவிய மனித நேயம்' என்ற குறிக்கோளை முன்னிறுத்தியதாகும். இக்குறிக்கோள் அம்சத்தை 'மெய்ம்மை' - அதாவது 'சத்தியம்' - என்று அது சுட்டுகின்றது. மெய்யுள் என இதற்கமைந்த பெயரானது, 'மெய்ம்மையை உள்ளடக்கமாகக் கொண்டது' எனப் பொருள் தருவதாகும். இக்குறிக்கோள் இரு முக்கிய அம்சங்களைக் கொண்டது. முதலாவது அம்சம், 'இப்பிரபஞ்சம் முழுவதையும் நேசித்தல்' என்பதாகும். அதன் தொடர்ச்சியாக அமையும் இரண்டாவதான அம்சம், 'அதன் (பிரபஞ்சத்தின்) முழுமையை நோக்கி இயங்கிநிற்றல்' என்பதாகும். இவற்றைப் 'பிரபஞ்ச யதார்த்தம்' மற்றும் 'சர்வோதயம்' ஆகிய தொடர்களால் தளையசிங்கமவர்கள் அடையாளப்படுத்தியுள்ளார். 'படைப்பில் ஈடுபடுவோர் இத்தகைய மனப்பக்குவத்தை நோக்கித் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்' என்பதும் 'இலக்கியக் கோட்பாடுகள் பற்றிப் பேசுபவர்களும் திறனாய்வு மேற்கொள்பவர்களும் மேற்படி மனப்பக்குவத்தை நோக்கி இலக்கிய உலகை வழிநடத்த வேண்டும்' என்பதுமே மெய்யுள் என்ற இக்கோட்பாட்டின் தெளிபொருளாகும். இக்கோட்பாடானது ஒரு 'தூய மனப்பக்குவநிலை'யை முன்வைத்துள்ளமை தெளிவு.

இக்கோட்பாடானது, இலக்கியத்திற்குரியனவாக மரபாகக் கருதப்பட்டு வருபவையான உள்ளடக்கம், உணர்த்துமுறை மற்றும் உருவம் ஆகிய தனிநிலை அம்சங்களனைத்தையும் மெய்யுள் என்பதான ஒற்றைப் பரிமாணத்திலேயே தரிசிப்பதாகும். அவ்வகையில் இது, கற்பனை, நடை மற்றும் வடிவ வகைமை ஆகிய வேறுபாட்டு அம்சங்களைக் கடந்து செல்வதான ஒரு அணுகுமுறையாகவும் தெரிகிறது. இவ்வகையில் இது ஆன்மிகம் என்ற தளத்தில் ஆழமாகக் காலூன்றி நிற்பதாகும். குறிப்பாக, இந்திய ஆன்மிக மரபில் வேர்கொண்டு வெளிப்பட்ட கருத்தாக்கமாக இது திகழ்கிறது. இந்திய ஆன்மீக மரபிலே குறிப்பாக 'உபநிடத சிந்தனை' களும் அதன் வழித்தொடரும் வேதாந்த மரபுமே மெய்யுளின் அடிப்படைகளாகும்.

மெய்யுள் உருவான 1960-70கள் காலப்பகுதியானது தமிழ்த் திறனாய்வியலின் வரலாற்றிலே அழகியல்வாதிகளுக்கும் யதார்த்தவாதிகளுக்குமிடையில் விவாதங்கள் நிகழ்ந்த வரலாற்றுக்கட்டம் என்பதை முன்னரே நோக்கியுள்ளோம். ஈழத்தில் இந்த மெய்யுள் சிந்தனை முன்வைக்கப்பட்ட காலகட்டத்திலோ அல்லது அதன் பின்னரோ தமிழகச் சூழலில் இவ்வாறானதொரு ஆன்மீகத் தளம் சார் கலை, இலக்கியச் சிந்தனை முன்வைக்கப்படவில்லை என்பதை இங்கு சுட்டுவது அவசியம். 1960-70களில் உருவாக்கம் பெற்ற இச்சிந்தனையானது அண்மைக்கால பின் நவீனத்துவக் கலை இலக்கியச் சிந்தனைகளோடு சமாந்தரமாகச் செல்கின்றது என்பதான ஒரு கருத்து இன்று தமிழ்த்திறனாய்வுலகில் நிலவுகின்றது. இக்கருத்தின் பொருத்தப்பாடு பற்றிப் பின்னர் தேவையேற்படும்பொழுது நோக்கலாம்.

அமைப்பியல் மற்றும் பின் அமைப்பியல் ஆகிய கோட்பாடுகள் ஐரோப்பியச் சூழலிலே கடந்த நூற்றாண்டின் தொடக்கம் முதலே சமூகம் சார்ந்த அறிவியல் துறைகளில் - குறிப்பாக மொழியியல், உளவியல், நாட்டார் வழக்காற்றியல், மானுடவியல் முதலானவற்றில் - நிகழ்ந்து வந்துள்ள சிந்தனைப் பரிமாற்றங்களின் தொடர்ச்சியாக உருவான புதுவகைக் கோட்பாடுகளாகும். தொன்மங்கள் எனப்படும் புராணநிலைசார் கருத்தாக்கங்கள் மற்றும் வாய்மொழி மரபுகள் முதலியன சார்ந்த பண்பாட்டு வரலாற்றுப் பின்புலங்களை மையப்படுத்திய சிந்தனைகளினூடாக முளைவிட்ட கோட்

பாடுகள், இவை.

இவற்றுள் முதலாவதான அமைப்பியலானது ஐந்து வெவ்வேறு அறிவியல் துறைசார்ந்தவர்களின் சிந்தனைகளின் பேறாக உருவாகியதாகும். மொழியியலாளரான பேர்டினனட் டி சசூர் (Ferdinand de Sassure-1857-1913), ஒலியியலாளரான ரோமன் ஒசிபோவிச் யாக்கப்சன் (Roman Osipovich Jacobson-1896-1982), நாட்டார் வழக்காற்றியலாளரான விளாடிமிர் பிராப்(Vladimir Propp 1895-1970), மானுடவியலாளரான லேவி-ஸ்ட்ராஸ் (Levi-Strauss-1908-2009), இலக்கிய அமைப்புவாத சிந்தனையாளரான ரோலன் பார்த் (Rolan Barthes-1915-80) முதலிய அறிஞர்களின் சிந்தனைகளினின்று உருப்பெற்ற கருத்துக்களின் தொகுநிலையாக வெளிப்பட்ட கோட்பாடாகவே இது திகழ்கிறது.

இக்கோட்பாடானது இலக்கிய ஆக்கமொன்றை மொழிசார் கட்டமைப்பாகக் காண்பதாகும். அக்கட்டமைப்புக்கான மூலக்கூறுகளைச் சமூகத்தின் உளவியல், மொழி மற்றும் வழக்காறுகள் முதலியவற்றின் 'கூட்டுப் பண்பாட்டு வடிவங்க'ளாக இது கருதுகிறது. மேற்படி கூட்டுப் பண்பாட்டுத்தளத்தில் உருவான 'சமூக மனம்' (சமூகத்தின் நனவிலிமனம்) என்பதான 'அருவ அம்ச'மே இங்கு 'அமைப்பு' எனச் சுட்டப்படுகிறது. இந்த அமைப்பின் மொழிசார் வெளிப்பாட்டு நிலையாகவே படைப்பாக்கங்களை இக்கோட்பாடு தரிசிக்கிறது.

மேற்சுட்டியவாறாக படைப்புக்கு அடிப்படையானதாகக் கருதப்படும் 'சமூகமனம்' என்பதான உள்கட்டமைப்பை இனங்காணும் முயற்சியே அமைப்பியலடிப்படையிலான திறனாய்வுச் செயற்பாடாகும். மேற்படி கட்டமைப்புக் கூறுகள் ஒன்றுடனொன்று கொண்டுள்ள உறவே இக்கோட்பாடுசார் திறனாய்விற் கவனத்துட் கொள்ளப்படுகிறது. சுருங்கக் கூறுவதாயின் படைப்புக்குள் கட்புலனாகாத நிலையிலுள்ள இலக்கணக்கூறுகள் மற்றும் இலக்கியக் கோட்பாடுசார் கூறுகள் என்பவற்றைக் கண்டறியும் நோக்கிலான செயற்பாடாகவே அமைப்பியல் அணுகுமுறை அமைகிறது. இக் கோட்பாடு ஆங்கிலத்தில் Structuralism என வழங்கப்படுவதாகும். இதனை 1980களில் தமிழுக்கு அறிமுகம் செய்தவர் பேராசிரியர் தமிழவன் அவர்களாவார்.

தமிழகச்சூழலில் 1980களில் நிலவிய அழகியல் சார்பான நவீனத்துவ சிந்தனைகளுக்கும் யதார்த்தவாத சிந்தனைகளுக்கும் இடையில் நிலவிவந்த விவாத நிலையை ஓரளவு முடிவுக்குக் கொணர்ந்தது எனலாம். அல்லது அவ்விவாத நிலைக்கு ஒரு திசைமாற்றத்தை ஏற்படுத்தியது என்றும் கூறமுடியும். குறிப்பாக, மேற்படி அழகியல்சார் சிந்தனைகள் வலியுறுத்தும், 'படைப்பாளியின் தனி-மனித நிலை சார்ந்ததான அநுபவ அம்சம்' மற்றும் உத்திமுறைகள், மொழியாளுமை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அமைப்பியல் புறக்கணித்தது. அதே வேளை யதார்த்தவாதிகள் முன்வைத்த சமூகப்பார்வை என்ற அம்சத்தையும் அது வலுகுன்றச் செய்தது. மேற்படி இருநிலைசார் சிந்தனைகளுக்கும் மாற்றாக அமைப்பியல் நிறுத்திய கருத்தாக்கமே சமூகமனம் (சமூகத்தின் நனவிலிமனம்) என்பதான 'அருவ' அமைப்பாகும். 'படைப்பாளி என்பவர் தனது காலகட்டச் சமூகத்தின் நனவிலிமனம் சார்ந்த பல கூறுகளை ஒரு சீரொழுங்கின்படி பதிவுசெய்யும் தொகுப்பாளராகவே அமைகிறார்' என்பதான கணிப்புக்கே இந்த அமைப்பியல் சார் அணுகுமுறை நம்மை இட்டுவருகின்றது.

அமைப்பியல்சார் பார்வையின் இன்னொரு முக்கிய அம்சம், 'படைப்புச் செயற்பாடு நிறைவு பெற்றபின் அவ்வாக்கம் வாசகருக்கு உரியதாகிவிடுகிறது' என்பதாகும். 'வாசகர்கள் அதனை எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள்?' என்பதன் அடிப்படையிலேயே அந்த ஆக்கம் அடுத்தகட்ட வாழ்வைப் பெறுகிறது என்பதே அமைப்பியல்தரும் செய்தியாகும். இவ்வகையில் அவ்வாக்கம் பல்வேறுபட்ட வாசிப்புகளுக்கான சாத்தியப்பாடுகளையுடையது. இவ்வடிப்படையில் படைப்பாளியிடமிருந்து படைப்பைத் தனிமைப்படுத்தும் கருத்தாக்கமும் முனைப்புற்றது.

மேற்படி கருத்தாக்கத்தை முதன்மைப்படுத்திய முக்கிய சிந்தனையாளராகத் திகழ்ந்தவர் ரோலன் பார்த் அவர்களாவார். இலக்கியப் படைப்பொன்றை வாசகர் சுவைக்கவும் பொருள் கொள்ளவும் முற்படும்போது, 'அப்படைப்பின் ஆசிரியருடைய உள்நோக்கம் யாது?' என்பது பற்றிக் கவனம் செலுத்தத் தேவையில்லை என்பதும் 'படைப்பு மட்டுமே தன் பொருண்மையை முற்றாக இனங்காட்டிக்கொள்ள வல்லது' என்பதுமே அவரது கருத்தின் தெளி-பொருளாகும். அமைப்பியல் நோக்கில் இது 'வாசகர் மையக் கருத்தாக்கம்' எனப்படும்.

பின் அமைப்பியல் (Post Structuralism) என்பது அமைப்பியல் சுட்டிநிற்கும் 'சமூகத்தின் அருவமான நனவிலிமனம்' தொடர்பான விமர்சனமாகவே உருவாக்கம் பெற்றதாகும். 'குறித்த ஒரு படைப்புக்கும் அதற்கு அடித்தளமாக அமையும் சமூகத்துக்கும் (உலகுக்கும்)உள்ள இடைவெளி எத்தகையது?' என்பதே பின் அமைப்பியல் சிந்தனைகளில் விவாத அம்சமாகும். உளப் பகுப்பாய்வு, அறிவமைப்பு, தத்துவம் ஆகிய துறைகள் சார்ந்து வெளிப்பட்ட இவ்வகை விவாதங்கள் இலக்கியத்தை அதன் மொழிசார்ந்த கட்டமைப்பின் எல்லையைத் தாண்டி வெளிக் கொணர்ந்து விடுகின்றன. அவ்வகையில் சமூகநிலைப்பட்ட முழுநிலைப் பகுப்பாய்வுக்கு இலக்கியத்தை அவை உட்படுத்துகின்றன.

உளப்பகுப்பாய்வாளரான ஜாக் லக்கான்(Jaques Marie Emile Lacan-1901-81) என்பார் இலக்கியம் ஒரு கனவு போன்றது என்ற கருத்தை முன்வைத்தார். அதாவது 'நனவுநிலையில் நாம் காணும் - அநுபவிக்கும் - புறநிலையான வாழ்வியலை நமது நனவிலி மனம் பிரதிபலிக்கும் நிலை அது' என்கிறார் அவர். 'அப்பிரதி-பலிப்பானது புறநிலையில் நாம் காண்பது போன்ற ஒரு ஒழுங்கிசைவான அமைப்பில் - அதாவது நேர்கோடான அமைப்பில் - நிகழ்வதில்லை' என்பதும் மாறாக, 'ஒழுங்கின்மை கொண்டதாகவும் அவ்வகையில் மொழி (ஒலி) விளையாட்டாகவும் அமைவது அது' என்பதும் அவரது கருத்தாகும். இவ்வகையில் குழந்தைக-ளின் விளையாட்டுச் செயற்பாடுகளை அவர் உதாரணம் காட்டுவர். இந்த ஒழுங்கின்மை மற்றும் மொழிவிளையாட்டுநிலை என்பவற்றின் பின்புலத்தில் சமூக யதார்த்தத்தை எள்ளி நகையாடுதல், மாற்றுவாழ்வு தேடுதல் ஆகிய உணர்வோட்டங்களும் உள்ளன என்பது அவரது கருத்தாகும்.

அறிவுத்துறைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவரான மிகாயில் பூக்கோ (Michel Foucault - 1926-84) அவர்கள் உண்மை, மனிதநேயம் என்பன தொடர்பான கருத்தாக்கங்களின் மீது ஆழமான எதிர்நிலை வாதங்களையும் மறுப்புக்களையும் முன்வைத்த வகையில் கடந்த நூற்றாண்டின் சமூகச்சிந்தனையில் பெரும் தாக்கத்தை விளைவித்தவராவார். 'அறிவானது அதிகாரச் சார்புடையது' என்ற கருத்தினரான இவர், 'இலக்கியத்தின் சொல்லாடல்களுக்குள் உறைந்திருக்கக்கூடிய அதிகார முறைமை' பற்றி எடுத்துரைத்துள்ளார்.

பின் அமைப்பியலின் மற்றொரு சிந்தனையாளரான ஜாக் தெரிதா (Jacques Derrida- 1930-2004) அவர்கள் Deconstruction எனப்படும் தகர்ப்பமைப்புபற்றிப் பேசியவர். ஓர் இலக்கிய ஆக்கத்தை திறனாய்வு செய்ய முற்படும்போது அதன் உட்கூறுகளைத் தனித்தனி நிலைகளில் முழுமையாகப் பிரித்து மீண்டும் வெவ்வேறு நிலைகளில் பொருட்பொருத்தமுறப் பொருத்திக்காட்டல் வேண்டும் என்பதே தகர்ப்பமைப்பு என்பதன் தெளிபொருளாகும். Deconstruction என்பதைத் தமிழிலே 'கட்டுடைப்பு', 'கட்டவிழ்ப்பு' மற்றும் 'நிர்-நிர்மாணம்' ஆகிய கலைச்சொற்களாலும் சுட்டுவர். மேற்படி சொற்கள் பொதுவாக ஒரு அமைப்பைப் பலகூறுகளாகப் பிரித்தல் அல்லது உடைத்தல் என்ற பொருள் தருவனவாகும். இவ்வாறு பிரித்தல் அல்லது உடைத்தல் ஆகியவற்றோடு மட்டும் நின்றுவிடாது மீண்டும் அக்கூறுகளை வெவ்வேறு வகைகளில் கட்டமைத்துப் பொருள் கொள்வது என்பதும் இச்செயற்பாட்டில் நிகழ்வதால் மேற்படி மூன்று சொற்களையும்விட 'தகர்ப்பமைப்பு' என்பதே சரியான கலைச்சொல் என்பது தமிழ் ஆய்வுலகின் பொதுவான கருத்தாகும்.

இவ்வாறான சிந்தனைகளின் ஊடாக பின்அமைப்பியலாளர்கள் அமைப்பியல் சுட்டும் சமூகத்தின் நனவிலி மனம் என்பதான 'அமைப்புமைய'த்தை விமர்சித்து மறுப்பது தெளிவாகவே தெரிகின்றது. மேற்படி இரண்டு சிந்தனைகளையும் அருகருகே வைத்து ஒப்பு நோக்கிப் புரிந்துகொள்ளத்தக்க வகையில் பல உரைகள் தமிழ்ச் சூழலில் நிகழ்த்தப்பட்டுள்ளன. சில நூல்களும் தமிழில் வெளிவந்துள்ளன. இவ்வகையில், முனைவர் க. பூரணச்சந்திரனின் அமைப்புமைய வாதம் பின் அமைப்புவாதம் (1991) மற்றும் முனைவர். ந. முத்துமோகனின் அமைப்பியல் பின் அமைப்பியல்

(1998) ஆகியன குறிப்பிடத்தக்கன.

பின் நவீனத்துவம் அல்லது பின்னை நவீனத்துவம் (Post Modernism) என்ற சிந்தனைப் போக்குப் பற்றிப் பேசமுற்படும்போது முதலில் நாம் குறிப்பிடவேண்டிய அம்சம் அது, 'திட்டப்பாங்காக நிறுவப்பட்ட ஒரு கோட்பாட்டு வடிவமன்று' என்பதாகும். அது, 'குறித்த ஒரு மனோபாவம் சார்ந்த ஒருபார்வை மற்றும் அணுகு முறை' என்ற அளவிலேயே சிந்திக்கப்பட்டு வருவதாகும். சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றுத் தொடர்ச்சியில் நிகழும் மாற்றங்கள், அத்தொடர்பில் எதிர்கொள்ள நேரும் பிரச்சினைகள் முதலியவற்றைச் சுட்டியுணர்த்தும் ஒரு 'புரிதல்முறைமை'யே அது. குறிப்பாக, சமூகவியல் மற்றும் நுண்கலைசார் அம்சங்களை மையப்படுத்திய உரையாடல்களில் பயின்றுவரும் இப்புரிதல்முறைமையானது கடந்த நூற்றாண்டில் மேலைத்தேயங்களில் உருவாகி வந்ததாகும். இப்'புரிதல் முறைமை'யானது பொதுவாகப் 'பின் நவீனத்துவ நிலை' (Post Modern Condition) என்றே வழங்கப்பட்டு வந்தது. (இப் பொருண்மையில் Post Modernism என்பதான இச்செற்றொடரானது முதன்முதலிலே வரலாற்றறிஞரான ஆர்னோல்ட் டொய்ன்பீ (Arnold Joseph Toynbee- 1889-1975) என்பாரால் அவரது A Study of History என்ற நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுவர். அவரது இந்நூல் 1938ல் எழுதப்பட்டு 1947ல் வெளிவந்ததாகும்.

மேற்கூறியவாறாகப் புதியகோட்பாடுகள் தமிழ்ச்சிந்தனைச்சூழலை அகலப்படுத்தி வந்த காலப்பகுதியிலே குறிப்பாக 1980களின் பிற்பகுதியிலே - அச்சிந்தனைச்சூழலை மேலும் விரிந்த தளத்துக்கு இட்டுச் செல்வதற்கும் வேகப்படுத்துவதற்குமான சில கருத்தாக்கங்களும் அவைசார் சமூக நிகழ்வுகளும் தொடங்கித் தொடரலாயின. அவற்றுளொரு வகையின பெண்ணியம் மற்றும் தலித்தியம் ஆகிய பெயர்களில் வழங்கப்பட்டு வருவனவாகும்.

பெண்ணியம் என்பது சமூகத்தின் பாதிப்பகுதியினரான பெண்பாலார் மற்றொரு பாதிப்பகுதியினரான ஆண்களிடம் தாம் இழந்து விட்டதான உரிமைகளை மீட்பதற்கான பல்வகை முயற்சிகளை ஒருங்கிணைப்பதான சிந்தனைமையத்தைச் சுட்டி நிற்பதாகும். இந்நிலைமைக்கெதிராக ஐரோப்பா - அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள பெண்கள் இணைந்து எழுச்சிபெற்றுவந்த சூழலில் உருவான சிந்தனைகளே பெண்விடுதலை, பெண்நிலை வாதம் முதலிய பெயர்கள் பூண்டு இயக்கங்களாக வடிவுகொண்டன. அந்நாடுகளில் 1960களை அடுத்து முனைப்புற்ற மேற்படி எழுச்சி நிலை இந்திய மண்ணிலும் ஈழத்திலும் ஆழமாகக் கால்பதித்த நிலையிலே 1980களில் தமிழ் கலை இலக்கியச் சூழல்களிலும் அது பிரதிபலிக்கத் தொடங்கியது.

தலித்தியம் என்பது இந்திய மண்ணிலே (இலங்கையிலும்கூட) பல நூறு ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டிருந்த சமூகத்தின் உரிமைக் குரலாகும். விவேகாநந்தர், மகாத்மா காந்தி முதலிய மாமனிதர்களாலும் மார்க்ஸியம் உட்பட்ட சமூக தத்துவங்களாலும் தீர்க்கப்பட முடியாதிருந்த இந்த ஏற்றத் தாழ்வுணர்வுகளை எடுத்துப் பேசமுற்பட்ட மக்களியக்கம் இது. முதலில் மாராஷ்டிர மண்ணிலே முளைவிட்டது. அங்கு பி.ஆர். அம்பேத்கர், மகாத்மா புலே முதலியவர்கள் சிந்தனைகளை அடியொற்றி உருவான இவ்வியக்கம் 1990களின் தமிழக இலக்கியவுலகில் கால் பதித்தது. இதன் வருகையைத் தமிழ்ச்சூழலுக்கு முதலில் அறிமுகம் செய்தது 1990ல் வெளிவந்த மனுசங்க என்ற தமிழக இதழாகும். 1993ல் புதுச்சேரியில் தலித் கலைவிழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கலை இலக்கிய இதழ்கள், நாடக அரங்கியற் செயற்பாடுகள், கருத்தரங்குகள், ஆய்வுநூல் வெளியீடுகள் முதலான பல்வகைச் செயற்பாடுகளின் ஊடாக ஒரு தனியான ஒரு கோட்பாட்டியக்கமாக இது நிறுவிக்கொண்டது.

1960களை அடுத்த காலப்பகுதியின் தமிழியலாய்வு பற்றிய பார்வையிலே இதுவரை அக்காலகட்டத்தின் சிந்தனைச்சூழல்கள் பற்றி நோக்கி வந்தோம். 1960களிலே சமூகவியல், ஒப்பியல் முதலிய புதியசில பார்வைகளும் அணுகுமுறைகளும் அறிமுகமாகி ஆய்வுச்செல்நெறியைத் திசைமாற்றம் செய்தன எனக் கண்டோம். 1990கள் வரையான காலப்பகுதியிலே சில புதிய கோட்பாடுகள் அறிமுகமாகி ஆய்வு மற்றும் திறனாய்வுப் பார்வைகளை அகலமாக்கின என்பதையும் நோக்கினோம். மேற்குறித்தவாறான சிந்தனைகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியன சமகாலத் தமிழியலாய்விலே குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன என்பதாலேயே இவை பற்றிய தகவல்கள் இங்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இவைதொடர்பிலான மேலதிக விவரங்கள் பின்னர் தேவை ஏற்படும்பொழுது எடுத்துரைக்கப் படவுள்ளன. அடுத்து 1960களை அடுத்தமைந்த காலகட்ட ஆய்வியல் இயங்குநிலைகளை நேரடியாகவே நோக்கலாம்.

## 1960களை அடுத்த காலகட்டத்தமிழியல்:

கவனக்குவிப்பைப் பெற்ற முக்கிய பொருட்பரப்புகள்:

மேற்படிகாலகட்ட ஆய்வியல் இயங்குநிலைகள் பற்றி நோக்க முற்படும் பொழுது முதலில் கவனத்துக்குவரும் அம்சம் அக்கால ஆய்வுப் பொருண்மைகளின் பன்முகப் பரிமாணமாகும். இலக்கியங்கள், இலக்கணங்கள், கலைகள் மற்றும் சமய தத்துவங்கள் அறிவியல் தொழில்நுட்பத்துறைகள் முதலிய பல்வேறு பொருண்மைகள் சார்ந்தும் பெருந்தொகையான ஆய்வுகள் நிகழ்ந்துவந்துள்ள - நிகழ்ந்து வருகின்ற காலப்பகுதி இது என்பது தமிழியலாளர் பலரும் அறிந்த செய்தியேயாகும். இதற்கான முக்கிய பின்புலம் 'ஆய்வுக்களங்கள் விரிவுபெற்ற நிலை'யாகும். பல்கலைக்கழகங்கள் முதலிய உயராய்வு நிறுவனங்கள் சார்ந்து ஆய்வேடுகள் மற்றும் நூல்கள் எழுதும் முறைமை மிகவிரிவுபெற்ற காலப்பகுதி இது என்பதையும் ஆய்வரங்கச் செயற்பாடுகள் - குறிப்பாகப் பன்னாட்டு நிலைகளிலான தமிழியலாய்வரங்குகள் - பல்கிப் பெருகிய காலப்பகுதி இது என்பதையும் முன்னரே (10 வது கட்டுரையில் - ஜனவரி 2021) நோக்கியுள்ளோம். 1990களில் கணிப்பொறிப் பயன்பாடு பரவலானபின் இவ்வகை ஆய்வு முயற்சிகள் புதிய வேகம் பெற்றமை வெளிப்படை. இதுபற்றிப் பின்னர் தனியாக நோக்கவுள்ளோம். சமகால 'கொரானா ஊரடங்கு' சூழலிலே 'இணையவெளி ஒன்றுகூடல்கள்' மூலம் தமிழியலாய்வு புதுப்பரிமாணங்கள் எய்தி வருகின்றமையும் இங்கு நினைவிற் கொள்ளப்பட வேண்டியதாகிறது.

இவ்வாறாக கடந்த அரைநூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தில் நிகழ்ந்துவரும் தமிழியல் ஆய்வுகளின் பொருட்பரப்புகளைத் துல்லியமாக தொகை வகை செய்து விளக்கிப் பேசுவதற்குச் சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே இக்கால ஆய்வியல் வரலாற்றின் பொதுவான இயங்குநிலைகளை ஓரளவாவது அடையாளங்காணும் முயற்சியே இங்கு மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறான அடையாளங்காணும் முற்சியிலே முதற் கவனத்துக்கு வரும் அம்சம், 'தமிழரின் சமூக-பண்பாட்டுநிலைகள்சார் ஆய்வுகள்' என்பதான பொதுத்தலைப்புக்குள் இடம்பெறத்தக்க பொருட்பரப்புகள் பெற்றுவந்துள்ள முக்கியத்துவமாகும். தமிழர் பண்பாட்டின் உருவாக்கம் அதன் வளர்ச்சிநிலைகள் ஆகியவற்றை மையப்படுத்திய பொருட்பரப்புகள், இவை. குறிப்பாக, தமிழ் மொழி மற்றும் இலக்கியம் ஆகியவற்றின் உருவாக்க நிலைகள், கல்வி வரலாறு, கலைகளின் வரலாறு, அறிவியல், அறவியல் மற்றும் சமய தத்துவ சிந்தனைகள் ஆகியவற்றின் தோற்றமும் தொடர்ச்சியும், தமிழர் சமூகத்தின் அரசியல், பொருளியல், வணிகம் மற்றும் சாதிமுறைகள் ஆகியவற்றின் உருவாக்கங்கள் முதலியன பல்வேறு கிளைகளாக இவை விரிந்துசெல்வன. இவ்வாறாக பல கிளைகளாக விரிந்த இவ்வாய்வுப்பரப்பானது கடந்த அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலப்பகுதியின் தமிழியலாளர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துளது என்பதே எனது பொது அவதானிப்பாகும்.

குறிப்பாக, 'இந்திய-தென்னாசிய நிலைகளிலும் அனைத்துலக மட்டத்திலும் தமிழர்களின் அடையாளம் எத்தகையது?' என்பதை இனங்கண்டு நிறுவும் ஆர்வத்துடன் மேற்படி காலப்பகுதித் தமிழியலாளர்கள் பலரும் தீவிரமாக இயங்கி வந்துள்ளனர் என்பதே இக்காலகட்டத் தமிழியலின் இயங்குநிலைகள் புலப்படுத்தி நிற்கும் பொதுவான காட்சிப்பரிமாணமாகும். இவ்வாறான இவர்களின் இயங்குநிலைகளுக்குப் பண்டைய இலக்கிய இலக்கணங்கள், தொல்லியற் சான்றுகள், கலை மரபுகள் மற்றும் நாட்டார் வழக்காற்றியல் மரபுகள்சார் பதிவுகள் முதலியன முக்கிய ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டன. இவ்வாறான இவற்றை ஆய்வுக்குட்படுத்தும் செயன்முறைக்கு 1960களில் தமிழியற்சூழலுக்கு அறிமுகமாகித் தொடர்ந்தவையான மொழியியல், ஒப்பியல், சமூகவியல், மானுடவியல், நாட்டாரியல் முதலிய புதிய பார்வைகள் - அணுகுமுறைகள் ஆகியனவும் பின்னர் 1980-90களில் திறனாய்வியற்

கோட்பாடுகள் என்றவகையில் அறிமுகமான அமைப்பியல், பெண்ணியம், தலித்தியம் ஆகியனவும் முக்கிய உந்துசக்திகளாகத் திகழ்ந்துள்ளன. ஆய்வுக்கருவிகளாகவும் கூடப்பயன்பட்டு வந்துளன - பயன்பட்டும் வருகின்றன.

மேற்படி காலகட்டத் தமிழியலாய்வு வரலாறு பற்றிய பார்வையிலே இரண்டாவதாக நமது கவனத்துக்குவரும் முக்கிய அம்சம், 'தமிழின் நவீன இலக்கிய ஆக்கங்கள் சார் ஆய்வுகள்' ஆகும். நவீன இலக்கியம் என்ற பொது அடையாளத்துக்குரியவையான நாவல், சிறுகதை, கவிதை மற்றும் நாடகப்பிரதி ஆகிய வகைகள்சார்ந்த பெருந்தொகையான புனைவுநிலை ஆக்கங்கள் மேற்படி காலப்பகுதியில் ஆய்வு மற்றும் திறனாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவை மட்டுமன்றிப் வாழ்க்கைச் சரிதங்கள், பயண நூல்கள், ஆய்வு நூலாக்கங்கள் முதலான புனைவுசாரா எழுத்தாக்கங்களும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

மேற்சுட்டியவாறான புனைவுசார்ந்த மற்றும் புனைவுசாரா ஆக்கங்கள் தொடர்பான ஆய்வுகள் இவ்வகை ஆய்வுகள் முக்கியமான இரு தளங்களில் நிகழ்ந்து வருவன. ஒரு தளம், பல்கலைக்கழக நிலையிலான உயராய்வுச் சூழலாகும். இன்னொரு தளம் படைப்பாளிகள் மற்றும் இதழாளர்களின் சூழலாகும். இவ்விருதள இயங்குநிலைகள் பற்றிய சில பொது அவதானிப்புகள் வருமாறு.

நவீன இலக்கியங்களைப் பல்கலைக்கழக நிலையில் அணுகும் செயற்பாடானது 1960களின் நடுப்பகுதியிலேயே தொடங்கியது என்பதை முன்னரே (10வது கட்டுரையில் - ஜனவரி 2021) நோக்கியுள்ளோம். தமிழ் நாவலிலக்கியத்தை மையப்படுத்தியதாக சென்னைப் பல்கலைக்கழகத்திலே மேற்கொள்ளப்பட்டதான திரு. இரா. தண்டாயுதம் என்பாரது 'A Study of the Sociological Novels in Tamil' என்ற தலைப்பிலான P.h.D பட்ட ஆய்வுடன் தொடங்கிய இவ்வகைச் செயற்பாடானது அடுத்த 10-20 ஆண்டுகளில் சிறுகதை, கவிதை மற்றும் நாடகப்பிரதி ஆகிய வகைகள் சார்ந்த புனைவுநிலை எழுத்தாக்கங்களை மட்டுமன்றிப் புனைவு சாராதவையான எழுத்தாக்கங்களையும் தழுவியதாக விரிவுபெறலாயிற்று. தமிழகத்தின் முக்கிய நவீன படைப்பாளிகள் பலருடைய ஆக்கங்கள் M.Phil மற்றும் Ph.D பட்டங்கள் நிலையிலான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன. தமிழகத்திலே பல்கலைக்கழக நிலையிலான ஆய்வுத்தளங்கள் விரிவுபெற்றுவந்த நிலையில் - நூற்றுக் கணக்கானவர்கள் மேற்படி ஆய்வுகளில் ஈடுபடத்தொடங்கிய சூழலில் நிகழத் தொடங்கிய ஆய்வுப்பெருக்கம், இது.

எண்பதுகளின் பின்னரான தமிழியலாய்விலே இவ்வாறான நவீன இலக்கிய ஆய்வுகள் எண்ணிக்கையில் பல மடங்காக அதிகரித்தன. தமிழின் நவீன இலக்கியப் படைப்பாளிகளில் பெருந்தொகையானவர்களின் - குறிப்பாகத் தமிழகத்தினரின் -ஆக்கங்களுள் பல இவ்வகை ஆய்வுகளில் கவனத்தைப் பெற்றுள்ளன. மேற்படி முக்கியமான படைப்பாளிகள் பல ஆக்கங்களை எழுதியிருப்பின் அவை ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனியாக ஒன்றுக்கு மேற்பட்ட ஆய்வேடுகள்கூட எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொருவரையும் பற்றி நான்கைந்து ஆய்வேடுகள்கூட எழுதப்பட்டுள்ளன என்பது ஆய்வுலகினர் அறிந்த செய்தியேயாகும். இவற்றுட்பல பின்னர் நூலுருவும் எய்தியுள்ளன. இவ்வாறு பல்கிப்பெருகிய இவ்வாய்வேட்டு முயற்சிகள் பலவற்றின் தகுதிப்பாடுகள் பற்றிய விமர்சனங்களுங்கூட தமிழியலாய்வுலகில் நிலவிவருகின்றன என்பதையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.

படைப்பாளிகள் மற்றும் இதழாளர்களின் சூழல் என்ற வகையில் குறிப்பாக சிற்றிதழ்ச்சூழலின் இயங்குநிலை இங்கு பதிவுபெற வேண்டிய முக்கியத்துவமுடையதாகும். வணிகநிலை எழுத்துச் செயற்பாடுகளுக்கு எதிரான படைப்பியக்கக் குரல்களை வெளிப்படுத்தும் முயற்சிகளாக வெளிப்பட்டவையே சிற்றிதழ்கள் என்பது தமிழகச் சிற்றிதழ்களின் வரலாறு தரும் செய்தி. படைப்பாளிகளுட் பலர் சிற்றிதழ்களைத் தனியாகவும் கூட்டாகவும் வெளியிட்டும் வந்தனர். தமிழக மண்ணில் 1960-90கள் காலப்பகுதியில் பெருந்தொகையாக வெளிவந்த சிற்றிதழ்கள் நவீன இலக்கிய உரையாடல்களுக்கான குறிப்பாக, இலக்கிய மதிப்பீடுகளுக்கும் கோட்பாட்டு நிலை விவாதங்களுக்குமான முக்கிய களங்களாகத் திகழ்ந்தவையாகும். இவ்வாறான சிற்றிதழ்சார் இயங்குநிலையின் தொடர்ச்சி என்றவகையில் நவீன படைப்புகள் சார்ந்த காத்திரமான ஆய்வுக்கட்டுரைகளும் திறனாய்வுக் கட்டுரைகளும் எழுதப்படலாயின.

1990களிலிருந்து சிற்றிதழ்களின் வரலாற்றில் ஒரு திருப்பமேற்பட்டது. அவை மேற்கொண்டுவந்த முயற்சிகளை நடுத்தர இதழ்களும் மேற்கொள்ளத் தொடங்கின. ஆய்வு மற்றும் திறனாய்வுகளுக்கென்றே சில இதழ்களும் வெளிவரத் தொடங்கின. இவற்றின் உருவாக்கத்தில் கணிப்பொறித் தொழில்நுட்பமானது முக்கிய பங்கு வகித்தது. அத்துடன் இணைய இதழ்களும் உருவாயின. இவ்வாறான சூழலில் தமிழின் நவீன இலக்கிய ஆய்வானது உலகளாவிய நிலையில் தன்னை அகலப்படுத்திக்கொண்டுள்ளது. (இவை பற்றிப்பின்னர் விரிவாக நோக்கலாம்.)

மேலே நாம் நோக்கிய 'தமிழரின் சமூக-பண்பாட்டு நிலைகள்சார் ஆய்வுகள்' மற்றும் 'தமிழின் நவீன இலக்கிய ஆக்கங்கள்சார் ஆய்வுகள்' ஆகிய இருவகைகள் சார்ந்த பொருட்பரப்புகளுக்கு அப்பால் நமது கவனத்துக்கு வந்துள்ள மற்றொரு பொருட்பரப்பானது, 'அறிவியல் தமிழ்' என்ற பொது அடையாளத்துக்குள் வருவதாகும். தமிழ்ச் சூழலுக்கு அனைத்துலகப் பண்பாட்டம்சங்களை அறிமுகம் செய்யும் நோக்கிலும் தமிழ் மொழியை அறிவியலுக்கும் தொழில்நுட்பத்துக்குமான ஒரு மொழித்தளமாக வளர்த்தெடுக்கும் குறிக்கோளுடனும் நிகழ்ந்து வந்துள்ள - நிகழ்ந்துவருகின்ற - செயற்பாடுகளே இங்கு அறிவியல் தமிழ் என்பதாக அடையாளப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக மொழிபெயர்ப்பியல், கலைச்சொல்லாக்கம், அகராதியியல், அறிவியல்-தொழில்நுட்ப நூலாக்க முயற்சிகள் முதலியவற்றை உள்ளடக்கிய ஆய்வுப்பொருட்பரப்பு இது. மேற்சுட்டிய முதலிரு பொருண்மைசார் ஆய்வுகளுக்கு நிகராக இந்த அறிவியல்தமிழ் என்ற பொருட்பரப்பும் தனித்துவமான ஒரு வளர்ச்சியை எய்திவந்துளது - எய்திவருகிறது என்பது தமிழியலாளர்கள் பலரும் அறிந்த செய்தியேயாம்.

மேற்சுட்டியவாறாக நாம் நோக்கிய மூவகைப் பொருட்பரப்புகளில் முதலாவதான 'தமிழரின் சமூக - பண்பாட்டுநிலை ஆய்வுகள்' என்ற பொருட்பரப்புசார் ஆய்வுச்செல்நெறிகளே இங்கு நமது முதற் கவனத்துக்கு வருகின்றன. இப்பொருட்பரப்புசார் ஆய்வுச் செந்நெறிகள் கிறித்துவுக்கு முற்பட்ட பலநூறு ஆண்டுகள் முதல் இன்றுவரை நீண்ட காலப்பகுதியைக் கொண்டவை என்பது பொதுவாக நாமனைவரும் அறிந்த செய்தியேயாம். இந்த நீண்டகாலப் பகுதிசார் பொருட்பரப்புகளில் குறிப்பாக 'தமிழர்வரலாற்றின் தொடக்க காலப்பகுதி'யே இங்கு முதற் கவனத்துக்குரியதாகிறது. இது கி.பி மூன்றாம் நூற்றாண்டைப் பின்னெல்லையாகக் கொண்ட ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் வரையான காலகட்டத்தைச் சுட்டி நிற்பது. தமிழின் தொல்லிலக்கியங்களான சங்கப்பாடல்கள் மற்றும் தொல்லிக்கணமான தொல்காப்பியம் ஆகியன காட்டும் சமூக-பண்பாட்டம்சங்கள் மேற்படி காலப்பகுதி சார்ந்தன என்பதே தமிழியலாளர்கள் பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தாகும். இவ்வாறான இலக்கிய - இலக்கண முயற்சிகளைக் குவிமையப் படுத்தி நோக்கித் தமிழர் பண்பாட்டு வரலாற்றை அடையாளங் காண்பதான முயற்சிகள் 1960களை அடுத்த கடந்த அரைநூற்றாண்டுக் காலப்பகுதியிலே மிகப்பெருந்தொகையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை பற்றியே இங்கு முதலில் நோக்கவுள்ளோம்.

## தமிழரின் சமூக - பண்பாட்டு வரலாற்றின் தொடக்க காலம்சார் ஆய்வுச்செயற்பாடுகள்:

மேற்படி காலகட்டம் தொடர்பான ஆய்வுகள் 1960களுக்கு முன்பே தொடங்கிவிட்டன என்பதை - குறிப்பாக, மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை, பேராசிரியர்கள் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார், மா. இராசமாணிக்கனார், சு. வித்தியனந்தன், ஆய்வாளர் மயிலை. சீனி வேங்கடசாமி முதலிய பலரின் எழுத்துகளில் இவ்வாறான ஆய்வுகள் தொடங்கிவிட்டன என்பதை முன்னரே பலமுறை நோக்கியுள்ளோம். இவ்வாறு முன்னரே தொடங்கிவிட்ட பார்வைகளிலிருந்து பலநிலைகளில் வேறுபட்டவையும் அவ்வகையில் 'விரிவு'ம் 'ஆழ'மும் பெற்றவையுமான பார்வைகளே 1960கிலிருந்து தொடங்கித் தொடர்ந்தன. இவ்வாறான வரலாற்றுத் தொடர்ச்சியே இங்கு நமது கவனத்துக்கு வருகிறது. இவ்வாறான வரலாற்றுத் தொடர்ச்சியை நோக்கும் முயற்சியில் முதற்கண் 'விரிவு' என்ற வகையில் இக்காலத்தனவான சங்க இலக்கியங்கள் மற்றும் தொல்காப்பியம் ஆகியன ஆய்வுநிலையில் பெற்றுவந்த கவனக்குவிப்பு தொடர்பான - அதாவது எண்ணிக்கை நிலையிலான விரிநிலை பற்றிய - பொது அவதானிப்பொன்றை இங்கு முதலில் பதிவுசெய்வது

அவசியமாகிறது.

1960வரையான காலப்பகுதியிலே தமிழகத்திலும் அதற்கப்பாலான நாடுகளிலும் சங்க இலக்கியங்கள் பற்றியும் தொல்காப்பியம் பற்றியும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுசார் பல்வகைச் செயற்பாடுகளையும் எண்ணிக்கை நிலையில் ஏறத்தாழ சிலநூறுகள் என்ற எல்லைக்குள் அடக்கிவிட முடியும். ஆனால் அதன் பின்னரான அரைநூற்றாண்டுகால வரலாற்றிலே இவ்வாறான ஆய்வு முயற்சிகளில் தொகை பல ஆயிரங்கள் என்ற எல்லைகள் வரை விரிந்து சென்றுளது - விரிந்து சென்று கொண்டிருக்கிறது. இதனைத் தெளிவுறுத்தும் வகையில் சங்க இலக்கியம் தொடர்பாக நிகழ்ந்துள்ள கணக்கெடுப்பு ஒன்றைமட்டும் இங்கு சான்றாகக்காட்ட விழைகிறேன்.

இக்கணக்கெடுப்பை மேற்கொண்டவர் தமிழகத்தைச் சார்ந்தவரான பேராசிரியர் முனைவர் சு.அமிர்தலிங்கம் அவர்களாவார். அவரால் தொகுத்தளிக்கப்பட்டுள்ள சங்க இலக்கியக் களஞ்சியம் என்ற நூலாக்கம் 2000ம் ஆண்டில் வெளிவந்தது. தமிழகத்தின் மெய்யப்பன் தமிழ் ஆய்வத்தின் வெளியீடான இவ்வாக்கமானது அவ்வாண்டு வரையிலான சங்க இலக்கிய ஆய்வுச் செயற்பாடுகளை முழுநிலையிலே தொகுத்துத்தர முற்பட்டுளது. இக்களஞ்சியம் தரும் தகவல்களின்படி சங்க இலக்கியம் பற்றி எழுதப்பட்ட நூல்களின் தொகை: 789, கட்டுரைகளின் தொகை: 4007, ஆய்வேடுளின் தொகை: 554 ஆகும். இவற்றின் மொத்த தொகை: 5350 ஆகும்.

மேற்சுட்டிய தொகை கி.பி. 2000 வரையிலானவை மட்டுமே என்பதை இங்கு நினைவிற் கொள்ள வேண்டியது முக்கியம். கடந்த இருபத்தொரு ஆண்டுகளில் - அதாவது 2021 வரையான காலப்பகுதியில் கணிப்பொறி நிலையிலான பதிவுகளையும் உள்ளடக்கி நோக்கினால் இத்தொகை இருமடங்காகவும் அதற்கு மேலாகவும் கூட ஆகியிருக்கலாம் என்பது உய்த்துணர முடியும்.

இவ்வாறான சங்க இலக்கிய ஆய்வுகளுட் பலவும் தொல்லிலக்கண நூலான தொல்காப்பியத்துடன் அதனை இணைத்து நோக்கியுள்ளன. தொல்காப்பியத்தை மட்டுமே மையப்படுத்திய தனி நிலை ஆய்வுகளும் இக்காலப்பகுதியில் பெருந்தொகையாக நிகழ்ந்துள்ளன. அது மட்டுமன்றித் தொல்காப்பிய ஆய்வுகளின் வரலாறு வகையிலான ஆய்வுமுயற்சிகளுங்கூட மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இவ்வகையில் நமது பார்வைக்கு வந்துள்ளவற்றுள் முக்கியமான ஒன்று, டாக்டர் கோ. கிருட்டினமூர்த்தி என்பாரின் தொல்காப்பிய ஆய்வின் வரலாறு என்ற நூலாகும். இது, 1990ல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் Ph.D பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் நூல் வடிவமாகும் மூன்று இயல்களைக் கொண்ட இவ்வாக்கத்தின் முதலாவது இயல் தொல்காப்பியப் பதிப்புகள் பற்றிய ஆய்வாகும். இரண்டாம் மூன்றாம் இயல்கள் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியன பற்றிய ஆய்வுகளாகும். (பொருளதிகார ஆய்வுகளை இது உள்ளடக்கவில்லை என்பது இங்கு நமது கவனத்துக்குரியது.)

1960கிலிருந்து தொடங்கித் தொடரும் தமிழியலாய்வு வரலாற்றிலே 'தமிழர் வரலாற்றின் தொடக்க காலப்பகுதி'யில் நிகழ்ந்துள்ள 'விரிவு' என்ற வகையிலே முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு அம்சம் 'கால எல்லை முற்கொண்டு செல்லப்பட்டமை' ஆகும். 1960கள் வரையான காலப்பகுதியிலே தமிழர் பண்பாட்டின் தொடக்க காலம் பற்றிய கணிப்பின் முன்னெல்லையானது ஏறத்தாழ கி.மு. 3ம் நூற்றாண்டு என்ற கருத்தாக்கமே பொதுவாக நிலவி வந்தது. 1960களுக்குப் பிற்பட்ட காலப்பகுதியிலே மேற்படி முன்னெல்லையானது கி.மு. 10ஆம் நூற்றாண்டு வரை முன்னகர்த்தப்பட்டுளது என்பது தொல்லியலாய்வுகள் மூலம் அறியப்படும் செய்தியாகும்.

குறிப்பாக, ஆதிச்சநல்லூர், கீழடி முதலிய தொல்லியலாய்வுக் களங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் காலக்கணிப்புகளே இவ்வாறான முன்னகர்வுகளுக்கான அடிப்படைகளாகும். மேற்படி தொல்லியலாய்வுக் களங்களில் இவற்றுள் கீழடியானது தமிழகத்தின் பண்டைய நகர நாகரிகத்துக்கான முக்கிய சான்றாதாரமாகக் கணிக்கப்படுவதாகும். இதனுடைய காலம் கி.மு 6ம் நூற்றாண்டெனவும் ஆதிச்சநல்லூர் தொல்பொருட்களின் கால முன்னெல்லை கி.மு. 10ம் நூற்றாண்டுவரையானதென்பதும் அறிவியல் பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான தொல்லியற்கள ஆய்வுகள் மூலம் தமிழர்பண்பாட்டின் தொடக்ககாலம் பற்றிய கணிப்பின் முன்னெல்லை முன்னகர்த்தப்பட்டுவரும் நிலையில் சங்க இலக்கியம் மற்றும் தொல்காப்பியம் ஆகியவை தொடர்பான காலக்கணிப்புகளிலும் மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன என்பதும் இங்கு நினைவிலிருத்த வேண்டிய செய்தியாகிறது.

தொடக்ககாலம் சார் ஆய்வுச் செயற்பாடுகள் என்ற பார்வையில் இதுவரை 1960களின் பின்னரான வளர்ச்சியில் 'விரிவு' என்பது பற்றிய பொதுவிபரங்களை நோக்கினோம். அடுத்து மேற்படி நோக்கப்பட வேண்டியது அக்கால ஆய்வுமுயற்சிகள் ஆழம் பெற்று வந்தமை பற்றியதாகும். 1960களில் தமிழியலாய்வை ஆழப்படுத்தியவை என மொழியியல், மார்க்ஸிய சமூகவியல், ஒப்பியல், நாட்டாரியல் மானுடவியல் முதலியவற்றை நோக்கியிருந்தோம். அவையும் அவற்றையடுத்து 1980களிலிருந்து தமிழ்ச் சூழலில் அறிமுகமானவையான அமைப்பியல் முதலியனவும் தமிழியலை ஆழப்படுத்தி வந்துள்ள முறைமைகளே இங்கு நமது கவனத்துக்கு வருகின்றன.

1960கள் வரையான பார்வைகள் பெரிதும் இலக்கிய இலக்கணங்கள் மற்றும் சாசனங்கள் ஆகியவற்றின் தரவுகளைத் தொகுத்து நோக்கிப் பொருட்பொருத்தமுற வரிசைப்படுத்துவதனூடாக ஒரு வரலாற்று வரைபடத்தை உருவாக்க முற்பட்டவையாகும். பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தமிழர்சால்பு முதலிய நூல்களில் இதனையே நாம் தரிசிக்கிறோம். ஆனால் க. கைலாசபதி, நா. வானமாமலை முதலியவர்கள் முன்னிறுத்திய மார்க்ஸிய சமூகவியல், ஒப்பியல் முதலியவை, 'மேற்சுட்டியவாறான தரவுகளை முன்னிறுத்திய தொகுநிலைப் பார்வைகளாக அமையாமல் அத்தரவுகளுக்குப் பின்புலங்களாகத் திகழ்ந்துள்ள சமூக இயங்குநிலைகளை நுனித்து நோக்குவதனூடாக வரலாற்றியக்கத்தைப் புரிந்து கொள்ள முற்படும் முயற்சிகளாக' அமைந்தவையாகும். இவ்வாறான இயங்குநிலைகளே இங்கு ஆழம்பெற்ற நிலைகள் என்ற கணிப்புக்குரியவாகின்றன.

மேற்சுட்டியவாறு 1960களை அடுத்து தமிழர் வரலாற்றின் தொடக்கக்காலப் பகுதிசார் வரலாற்றை ஆழப்படுத்தும் வகையில் எழுந்த பல்வேறு ஆக்கங்களில் முக்கியமான சிலவே இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன. குறிப்பாக, முனைவர் கோ. கேசவன் அவர்களின் மண்ணும் மனித உறவுகளும்(1979,2001), பேராசிரியர் பெ. மாதையன் அவர்களின் சங்ககால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும்(2004), பேராசிரியர் கே. பழனிவேலு எழுதிய சங்க இலக்கியம் - பாட்டு மரபும் எழுத்து மரபும்(2010) ஆகியன இவ்வகையில் நமது பார்வைக்குரியனவாகின்றன.

இவை தவிர, பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்களால் தொகுக்கப்பட்டதான முன் வரலாற்றுக்காலத் தமிழ்நாடு(Early Historic Tamil Nadu) என்ற தலைப்பிலான நூலாக்கமும் இவ்வகையில் முக்கியமானதொன்றாகிறது. மேற்படி ஆங்கிலத் தொடரையே தலைப்பாகக் கொண்டு அவர் 2009ல் தொகுத்தளித்த ஆங்கில நூலின் தமிழாக்கம் இது. அவரே இதனைத் தமிழாக்கியவருமாவார். இத்தமிழாக்க நூல் 2020ல் கொழும்பு குமரன் புத்தக இல்லத்தால் பதிப்பிக்கப் பெற்றுளது. அறிமுகவுரை தவிர எட்டுக் கட்டுரைகளையும் பிற்சேர்க்கை என்றவகையில் மூன்று முக்கிய பதிவுகளையும் கொண்டுள்ள 'வரலாற்றுக் கனதி வாய்ந்த' தொகுப்பு, இது. பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. ராஜன், எ. சுப்பராயலு, ராதா சம்பகலக்ஷ்மி, கேசவன் விழுத்தாட்டு, வி. சிவசாமி ஆகியோரின் வெவ்வேறு தலைப்புகளிலான கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. அறிமுகவுரையை எழுதியவரான பேராசிரியர் இந்திரபாலா அவர்களின் கட்டுரையொன்றும் இக்கட்டுரைத் தொகுப்பில் இடம்பெற்றுளது.

இக்கட்டுரைத் தொகுப்பும் மேலே முனைவர் கேசவன் முதலியவர்களால் எழுதப்பட்ட தனிநூல்களும் தமிழர் வரலாற்றின் தொடக்க காலப் பகுதி பற்றிய தெளிவான சித்திரத்தை நமக்குத் தரக் கூடியவையாகும். இவை பற்றியும் இவை போன்ற ஏனைய முக்கிய ஆக்கங்கள் பற்றியுமான பார்வைகள் அடுத்த கட்டுரையிலிருந்து தொடரவுள்ளன.

தொடரும்...



subramanian.n@thaiveedu.com

# Sky Route Courier Services

**Worldwide & Domestic Courier Service**

◙ Compare ◙ Save ◙ Send

♦LOCAL ♦PROVINCIAL ♦NATIONAL ♦INTERNATIONAL

" Lot Cheaper Than You Think"

upto **70%** **Discount from Major Courier Companies**

**416.297.7368**

www.skyroutecourier.com

Affordable Courier Rates For Individuals and Businesss

285 Milliken Blvd, unit 30
Scarborough, ON
Off: 416-297-7368

EXPRESS DELIVERY

**RESIDENTIAL SECOND MORTGAGES FROM 8.99% QUICKLY AND EFFICIENTLY**

Residential 1st & 2nd Mortgages
Commercial 1st & 2nd Mortgages
Refinance & Home Equity Line of Credit
Renovation and Debt Consolidation Loan

DON'T FORGET, WE CAN CLOSE YOUR RESIDENTIAL MORTGAGE WITHIN 48 HOURS



**PURCHASE AND REFINANCE**

- ✓ Gas Stations, Restaurants and Retail Plazas, Auto Body Shop, Churches, Motels and Cottages
- ✓ Business Loan for Existing and New Business
- ✓ Start up Business and Business Line of Credit
- ✓ Construction Financing for Commercial and Residential
- ✓ Store with Apartment, Duplex, Triplex and Rental Properties
- ✓ Vacant Land & Farm Financing and more...

We can arrange COMMERCIAL MORTGAGES with 10% down (some conditions may apply)

"Every great business is built on friendship"
CALL FOR FREE CONSULTATION OR VISIT MY OFFICE



**T. Antony Ponrajah**
Mortgage Agent License: M08004007
Brokerage License# 10216

**416.457.0651**
Email: antonyres@gmail.com

40 New Delhi Dr. Unit 107A, Markham ON, L3S 0B5
Tel: 416.431.5115

# மலையகத்தில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு




யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நிகழ்ச்சிகள் பலவற்றை ஒளிப்பதிவு செய்துவந்தமை பணிப்பாளர் திருமதி. ஞானம் இரத்தினம் அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியளித்ததோடு, சக மேலதிகாரிகளிடமிருந்து பாராட்டையும் பெற்றுக்கொடுத்தது. அத்துடன் எனக்கும் பொறுப்புகளையேற்க முன்வந்து வெற்றிகரமாகச் செய்துமுடிக்கும் ஒரு தயாரிப்பாளரென்ற நற்பெயரை சகலரிடமும் பெற்றுத்தந்தது. ரூபவாஹினி ஆரம்பித்த நாள்முதல் நான் மேற்கொண்ட கடின உழைப்புக்கான பலன் மிகவிரைவிலேயே எனக்குக் கிடைக்குமென்று நான் நினைத்திருக்கவில்லை. ஆனால் அது நடந்தது.

1984ம் ஆண்டு ஃபெப்ரவரி முதல்வாரத்தில் யாழ்ப்பாண நிகழ்ச்சி ஒளிப்பதிவுகளை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியதும் அந்த நிகழ்ச்சிகளை கலையரங்கம் நிகழ்ச்சியில் தொடர்ந்து ஒளிபரப்பிக்கொண்டிருந்தோம். அதேயாண்டு மே மாதமளவில் திருமதி. இரத்தினம் அவர்கள் இன்னும் மூன்று மாதங்களில் சேவையிலிருந்து ஓய்வுபெறும் வயதையடையப்போகிறாரென்று நான் அறிந்தேன். அவர் அதுபற்றி ரூபவாஹினித் தலைவருடன் ஏற்கனவே பேசியிருக்கிறார். ஆனால் நாம் அறிந்திருக்கவில்லை. எனக்குத் தெரியவந்ததும் அதை ஒரு நல்ல செய்தியாக நான் கருதவில்லை. திருமதி. இரத்தினம் அவர்களது பதவி பொது நிகழ்ச்சிகள் இயக்குனர். Director General Programmes. ஒலி, ஒளிபரப்பு நிலையங்களின் மூன்று பிரதான பிரிவுகளாவன செய்தி, மற்றும் நடப்பு விவகார நிகழ்ச்சிகள் பிரிவு (News and Current Affairs), கல்வி நிகழ்ச்சிகள் பிரிவு (Education Programmes), மற்றும் பொது நிகழ்ச்சிகள் பிரிவு (General Programmes). பொது நிகழ்ச்சிகள் பிரிவென்பது மொழி, கலை, கலாச்சாரம் போன்ற சகல விடயங்களையும் கையாளும் பெரிய பிரிவு. அதன் ஒரு பிரிவு வர்த்தக சேவை.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்திப்பிரிவு இலங்கையின் பிரதான மூன்று மொழிகளான சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வற்றிலும் கல்விப்பிரிவு சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் நிகழ்ச்சிகளைச் செய்துகொண்டிருந்தாலும் அவை நிர்வாகத்தில் மொழிவாரியாகப் பிரிக்கப்படாமல் ஒவ்வொன்றும் தனித்தனியான இயக்குனர்களின் கீழ் இயங்கிக்கொண்டிருந்தன. பொது நிகழ்ச்சிகள் மாத்திரம் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பிரிவுகளாகத் தனித்தனி இயக்குனர்களின்கீழ் இயங்கின.

ஆனால் ரூபவாஹினியில் பொதுநிகழ்ச்சிகள் பிரிவும் மொழிவாரியாகப் பிரிக்கப்படவில்லை. சற்றுவித்தியாசமாகப் பிரதி இயக்குனர் நாயகம் (Deputy Director General) ஒருவரின்கீழ் நிகழ்ச்சிவாரியான சிறுசிறு பிரிவுகளாக (units) பிரிக்கப்பட்டிருந்தது. டிவிஷன், யூனிட் என்ற இரண்டு பதங்களும் தமிழில் பிரிவு என்றே அழைக்கப்படுவதால் சிறிது குழப்பம் ஏற்பட்டாலும் பல சிறு பிரிவுகளை (units) உள்ளடக்கிய ஒரு பெரிய பிரிவை டிவிஷன் என்று கொள்ளலாம். ரூபவாஹினியில் நாடகம், இசை, விளையாட்டு, விவரணம், சிறுவர் என்று வெவ்வெறு வகையான நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கெனப் பிரிவுகள் (units) இருந்தன. இந்த சிறு பிரிவுகள் எல்லாவற்றுக்கும் தலைவராக நிகழ்ச்சிப் பிரிவின் இயக்குனர் இருந்தார். அந்தப் பதவியை திருமதி. இரத்தினம் வகித்தார். இந்தச் சிறு பிரிவுகளின் தலைவர்களை யூனிட் ஹெட்ஸ் என்று ஆங்கிலத்தில் அழைத்தாலும் அது ஒரு இயக்குனரின்கீழ் இருந்தமையால் அந்தப்பதவி உதவி இயக்குனர் (Assistant Director) என்றும் அழைக்கப்பட்டது.

திருமதி. இரத்தினம் அவர்களது இயக்குனர் பதவி மொழிவாரியான பதவியல்ல. அவர் ஒலிபரப்புத்துறை நிர்வாகத்தில் நீண்ட கால அனுபவம் கொண்டவரென்பதால் இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தேசிய தொலைக்காட்சியில் அந்தப் பதவி அவருக்கு வழங்கப்பட்டது. இயக்குனருக்கு மேல் பொதுநிகழ்ச்சிகளுக்கான பிரதிப்பணிப்பாளர் நாயகம் என்ற ஒரு பதவி இருந்தது. அந்தப் பதவியிலும் ஒலிபரப்புத்துறையில் மிகநீண்ட அனுபவம் கொண்ட எச்.எம். குணசேகர அவர்கள் முதல்முதலாக நியமிக்கப்பட்டார். பொதுநிகழ்ச்சிகளின் இயக்குனர் பதவியென்பது மிகமுக்கியமான பதவி. ரூபவாஹினியின் ஆரம்ப காலமாகையால் ஒலிபரப்பு நிர்வாக அனுபவம்கொண்ட திருமதி. இரத்தினம் அவர்கள் தமிழராக இருந்தபோதிலும் அந்தப்பதவி அவருக்கு வழங்கப்பட்டது. அவருக்குப்பின்னர் அந்தப் பதவியில் ஒரு தமிழர் அமர்த்தப்படுவாரென்று எதிர்பார்க்கமுடியாதென்பதை நாம் நன்கு உணர்ந்திருந்தோம். அதனால் தமிழ் நிகழ்ச்சிகளினதும் தமிழ்த் தயாரிப்பாளர்களினதும் நிலை என்னவாகுமென்ற கவலை எனக்கிருந்தது. காரணம், ரூபவாஹினியின் நிர்வாக அமைப்புக்கேற்ப தமிழ்த் தயாரிப்பாளர்கள் வெவ்வேறு நிகழ்ச்சிப் பிரிவுகளைச் (units) சேர்ந்தவர்களாக இருந்தாலும் நடைமுறையில் அப்படி இயங்கவில்லை. உதாரணமாக, நான் நாடகப்பிரிவிலும் விஸ்வநாதன் இசைப்பிரிவிலும் நிர்வாக ரீதியில் பிரிக்கப்பட்டிருந்தோம். அந்தப் பிரிவுகளின் தலைவர்கள் சிங்களவர்கள். அதனால் நாம் தயாரிக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்குமான பிரேரணைகளையும் (Programme Proposal) நிகழ்ச்சிகளில் உள்ளடக்கியுள்ள விடயங்களையும் (content) தமிழரென்ற வகையில் திருமதி. இரத்தினம் அவர்களே பார்வையிட்டு அனுமதித்துக்கொண்டிருந்தார். பிரிவுத் தலைவர்கள் அதிலே தலையிடுவதில்லை. நிகழ்ச்சிகள் சம்மந்தப்பட்ட விடயங்கள் மட்டுமல்ல, தொழில் சம்மந்தமான எமது சொந்தப் பிரச்சினைகளையும் திருமதி. இரத்தினம் மூலமாகவே நாம் மேலிடத்திற்குத் தெரிவித்துக்கொண்டிருந்தோம். இத்தகையதொரு நிலையில் திருமதி. இரத்தினம் ஓய்வுபெற்றுவிட்டால் எமது நிலை என்னாகுமென்ற கரிசனை இயல்பாகவே எம்மிடம் எழுந்தது.

ரூபவாஹினியில் அப்போது ஒளிபரப்பும் மொழிவாரியாக இருக்கவில்லை. மாலை 5.00 மணிமுதல் இரவு 11.00வரை இடம்பெற்ற ஆறுமணிநேர ஒளிபரப்பில் மூன்று மொழி நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அதற்கமையவே ரூபவாஹினி நிர்வாகத்திலும் மொழிவாரியான பிரிவுகள் இருக்கக்கூடாதென்ற ஒரு கோட்பாட்டின் அடிப்படையிலேயே அத்தகைய நிர்வாக அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் சிறிது காலத்திலேயே மொழிவாரியாக இயங்கியே ஆகவேண்டிய ஒலி, ஒளிபரப்புத் துறைகளில் அது சாத்தியமில்லையென்று உணரத்தொடங்கினார்கள். திருமதி. இரத்தினம் அவர்கள் பொதுநிகழ்ச்சிகளுக்கான இயக்குனராக இருந்தபோதும் பிரகடனப்படுத்தப்படாத தமிழ் நிகழ்ச்சிப் பிரிவின் தலைவராகவும் கடமைகளை செய்துகொண்டிருந்தார். அப்படி ஒருவர் இருந்ததால்த்தான் தமிழ் நிகழ்ச்சிகளின் நிர்வாகம் உரியமுறையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அவர் ஓய்வுபெற்று நிகழ்ச்சிப் பணிப்பாளராக சிங்கள அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டால் அதிலும் தமிழ்மொழி, கலை, கலாச்சாரம், தமிழரின் கலைகளின் தரம் எதுவுமே தெரியாத ஒருவராக அதையும்விட தமிழர் விடயங்களைப் பற்றி எந்தவித அக்கறையும் காட்டாத ஒரு சிங்கள அதிகாரியாக அமைந்துவிட்டால் ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளின் நிலை மிகவும் மோசமாகிவிடுமென்பதே எனது கரிசனையாக இருந்தது. அப்படியொரு நிலை ஏற்பட்டால் ரூபவாஹினியில் தொழில்புரியும்

கவர்ச்சியினால் மட்டும் ஈர்க்கப்பட்ட, நிகழ்ச்சித் தயாரிப்புப்பற்றியோ தமிழ்பற்றியோ கலை, கலாச்சாரம்பற்றியோ எந்தவித அறிவுவோ திறமையோ அற்றவர்கள் குறுக்கு வழிகளில் அங்கே நுழைந்து தமிழ் நிகழ்ச்சிகளைச் சீரழிக்கக்கூடிய சந்தர்ப்பம் நிச்சயம் ஏற்படும்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் நிகழ்ச்சிகளின் தரம் மிக நீண்டகாலமாகப் பேணப்பட்டமைக்கு அங்கே தமிழுக்கெனத் தனியான் பிரிவிருந்ததும் தகுதிவாய்ந்த தமிழர்கள் தலைவர்களாக இருந்தமையுமே முழுமுதற் காரணமாகும். ஒலி. ஒளிபரப்பு நிறுவனங்களில் தலைமைத்துவப் பொறுப்பிலிருப்பவர்கள் நிகழ்ச்சித் தயாரிப்பில் மிகுந்த திறமையுடையவர்களாக இல்லாவிட்டாலும் ஒலி, ஒளிபரப்பின் நோக்கம், நெறிமுறை, சமூகத்தின் சகல விடயங்களிலும் ஒலி, ஒலிபரப்புத்துறைகள் கொண்டிருக்கவேண்டிய பொறுப்பு என்பவை பற்றித் தீர்க்கமான அறிவுகொண்ட நாட்டின் சகல மக்களுக்குமான ஒலி, ஒளிபரப்பு (public broadcasting) நிறுவனங்களில் நீண்டகாலம் பணியாற்றிய அனுபவம்பெற்றவர்களாக இருக்கவேண்டும். இவற்றையெல்லாம் நான் நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் ரூபவாஹினியின் தலைவர் எம்.ஜே. பெரேரா அவர்கள், அவர்தான் அப்போதைய நிர்வாக



படப்பிடிப்பின்போது.

முறையை ஏற்படுத்தியிருந்தார் என்ற போதிலும் செயல்முறையிலுள்ள பிரச்சினைகளை உணர்ந்து தமிழுக்கென ஒரு பிரிவை (unit) ஏற்படுத்துவதென்று முடிவெடுத்தார். அப்படித் தமிழ்ப்பிரிவொன்றை ஏற்படுத்தவேண்டுமென்ற கோரிக்கையை இயக்குனர் சபை அங்கத்தவராகவிருந்த திருமதி. ஆர். ஆர். நல்லையா அவர்களும் வலியுறுத்தியதாகக் கேள்விப்பட்டேன். அந்தச் செய்தி சற்று ஆறுதலைத் தந்தது. மொழியை அடிப்படையாகக்கொண்டு செயற்படும் ஊடகத்துறைகளில் மொழியடிப்படையிலான பிரிவுகள் அமைக்கப்பட்டு அவை தகுதியுடையவர்களால் நிர்வகிக்கப்பட வேண்டுமென்பது மிகமிக அவசியமான ஊடக நிர்வாகமுறையாகும்.

அடுத்து, தமிழ்ப்பிரிவு அமைக்கப்பட்டால் யார் அதன் தலைவராக நியமிக்கப்படுவாரென்ற கேள்வி எழுந்தது. வெகுசில தமிழ் உத்தியோகத்தர்களே அப்போது ரூபவாஹினியில் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். நான் நிகழ்ச்சிப்பிரிவில் நிறைவேற்றுத் தயாரிப்பாளர் (Executive Producer) பதவி வகித்துக்கொண்டிருந்த ஒரே தமிழ் உத்தியோகத்தர். அது நிகழ்ச்சிப்பிரிவின் தலைவருக்கு அடுத்தபதவி. விஸ்வநாதன் தயாரிப்பாளர் பதவியிலிருந்தார். கமலா தம்பிராஜா ஒப்பந்த அடிப்படையிலான தயாரிப்பாளர். ஏனையோர் தயாரிப்பு உதவியாளர்கள். நான் தமிழ்ப்பிரிவின் தலைவராக வருவது பற்றிச் சிறிதும் நினைக்கவில்லை. ஏனெனில் எனக்கு அப்போது முப்பத்துநான்கு வயது தொடங்கியிருந்தது. இலங்கையில் ஓர் அரசநிறுவனத்தில் அதுவும் ஊடகத்துறையில் அந்த வயதில் அப்படியொரு பொறுப்புவாய்ந்த பதவியைப் பெறலாமென்று அப்போது யாரும் கனவுகூடக் காணமுடியாது. ஆகக் குறைந்தது நாற்பது வயதுக்குமேல்த்தான் அத்தகைய பதவிகள் கிடைக்கும் சாத்தியம் அப்போது நிலவியது.

மேலும் ஊடகத்துறையில் குறிப்பாக, அதுவரை இலங்கையிலிருந்த பத்திரிகை, வானொலித்துறைகளில் சேவைமூப்பு, அனுபவம் முதலியவற்றின் அடிப்படையிலேயே பதவிகள் வழங்கப்பட்டன. சேவைமூப்பின் அடிப்படையில்ப் பார்த்தால் சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம், அப்போது அவர் ரூபவாஹினியின் செய்திப்பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்தாலும் ஒலிபரப்புத்துறையில் நீண்ட காலம் பணியாற்றியவர். ஆரம்பத்தில் இலங்கை வானொலியின் கல்விச்சேவை நிகழ்ச்சிகளில் பங்குபற்றத்தொடங்கிய சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் பின்னர் தமிழ்ச்சேவையில் பகுதிநேர அறிவிப்பாளராகப் பணியாற்றுவதற்குத் தெரிவானார். 1969ம் ஆண்டு இலங்கை வானொலி கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டபோது, தமிழ்த் தேசியசேவையில் நிகழ்ச்சி வழங்கல் உத்தியோகத்தராக (Presentation Officer) நியமிக்கப்பட்டார். நான் 1970ம் ஆண்டு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிக்குச் சேர்ந்தபோது சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் நிகழ்ச்சி வழங்கல் உத்தியோகத்தராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவருக்கு நிகழ்ச்சிகள் தயாரித்த அனுபவம் இருந்ததாகத் தெரியவில்லை. இருந்தாலும் என்னைவிட அதிககாலம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியவரென்ற வகையில் சேவைமூப்பின் அடிப்படையில் சிலசமயம் சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் தமிழ்ப்பிரிவின் தலைவராக நியமிக்கப்படலாமென்று நான் நினைத்தேன்.

யாரேனும் ஒலிபரப்புத்துறைபற்றித் தெரிந்தவர்கள் குறிப்பாக, தொழில் மீதான எனது ஈடுபாட்டை நேரில் அறிந்தவர்கள் தமிழ்ப்பிரிவின் தலைவராக வந்தால் பரவாயில்லையென்று நான் இருந்தேன். எனது நாட்டமெல்லாம் முழுக்கமுழுக்கத் தமிழ்நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒரு முக்கியமான தமிழ்நிகழ்ச்சிகள் தயாரிப்பா-ளராக குறிப்பாக, நாடகத் தயாரிப்பாளராக சிறந்த படைப்புகளை வழங்கவேண்டுமென்பதாகவேயிருந்தது.

நான் ஒருவாறு தேறி, என்னை நன்கு அறிந்த சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் தமிழ்ப்பிரிவின் தலைவராக வந்தால் பரவாயில்லையென்று இருந்த நேரத்தில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த ஒருவர் ரூபவாஹினிப் பணிப்பாளர்சபை அங்கத்தவராக இருந்த திருமதி. நல்லையா அவர்கள்மூலம் ரூபவாஹினித் தமிழ்ப்பிரிவுத் தலைவராக வருவதற்குப் பெரும் முயற்சிகள் எடுப்பதாக அறிந்தேன். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அவர் அப்போது தயாரிப்பாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அங்கு சேவையில் நான் அவருக்கு மூத்தவராக விளங்கினேன். ஆனால் அவர் செல்வாக்குமிக்கவர்களை அணுகி காரியம் சாதிப்பதில் வல்லவரென்று பேரெடுத்தவரென்று கேள்விப்பட்டிருந்தேன். அவர் உண்மையில் அப்படியானவர்தானா என்பதுபற்றி எனக்கு உறுதியாகத் தெரியாதபோதிலும் அத்தகையவர்கள் உயர்பதவிகளுக்கு வந்தால் திறமையானவர்கள் புறக்கணிக்கப்படுவார்களென்ற ஒரு பொதுவான கருத்து இருந்தமையால் நான் விழித்துக்கொண்டேன்.

தமிழ்ப்பிரிவுத் தலைவருக்கான விண்ணப்பம் கோரப்பட்டது. அதில் ஒலிபரப்புத் துறையில் நிகழ்ச்சிகள் தயாரித்த பத்துவருட அனுபவம் அடிப்படைத்தகைமையாகக் கேட்கப்பட்டிருந்தது. இலங்கையில் அதுவரை ஒளிபரப்புத்துறை இல்லாததால் அத்துறையில் நீண்டகால அனுபவத்தை எதிர்பார்க்கமுடியாது. ஆனால் நிகழ்ச்சி நிர்வாகத்தில் ஒலிபரப்புக்கும் ஒளிபரப்புக்குமிடையே வித்தியாசமில்லையென்பதால் ஒலிபரப்பில் நிகழ்ச்சிகள் தயாரிக்கும் அனுபவம் கேட்கப்பட்டது. நான் ரூபவாஹினியில் பணியாற்றுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டதே எனது ஒலிபரப்பு அனுபவம் காரணமாகத்தான். அந்த அனுபத்ததைக் கொண்டிருந்தமையால்தான் ரூபவாஹினியில் நிறைவேற்றுத் தயாரிப்பாளரென்ற பதவியில் அமர்த்தப்பட்டேன்.

நான் 1971ம் ஆண்டிலிருந்த தமிழ்ச்சேவையில் ஒலிச்சித்திரம் நிகழ்ச்சியைத் தயாரிக்கத்தொடங்கிருந்தாலும் அதற்கான எழுத்துமூல ஆதாரம் என்னிடம் இருக்கவில்லை. ஆனால் 1973ம் ஆண்டு நான் இரசமஞ்சரி என்ற நிகழ்ச்சியை சேவை ஒன்றிற்காகத் தயாரித்தமைக்கான ஆதாரம் இருந்தது. அதைத்தொடர்ந்து பரீட்சார்த்த நாடகங்கள் தயாரித்து, 1976ம் ஆண்டில் வர்த்தகசேவைத் தயாரிப்பாளராக, பின்னர் நாடகத் தயாரிப்பாளராக சேவை ஒன்றில் தொடர்ந்து பணியாற்றியதற்கான சகல ஆதாரங்களும் இருந்தன. அத்தோடு, அப்போது இலங்கையில் நாடகங்கள் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சிக்கென ஏறக்குறைய இரண்டரை வருடங்களாகத் தயாரித்துக்கொண்டிருக்கும் அனுபவம் எனக்கு மேலதிகமாக இருந்தது. பிரிவுத் தலைவர் என்ற பதவிக்கு அடுத்த தரத்தில் நான் அப்போது பணியாற்றிக்கொண்டிருந்தேன். வயதெல்லை கேட்கப்பட்டிருக்கவில்லை. எனவே, நான் வயதில் குறைந்தவன் என்ற எனது எண்ணத்தைக் கைவிட்டு நானும் தமிழ்ப் பிரிவின் தலைவர் பதவிக்கான விண்

ணப்பத்தைச் சமர்ப்பித்தேன்.

நேர்முகப்பரீட்சை நடந்தது. என்னுடன் மேலும் நான்குபேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த நான்குபேருமே ஒலிபரப்பின் வெவ்வேறு துறைகளில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்கள். பொதுநிகழ்ச்சிப்பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப்பணிப்பாளர் நாயகமாகப் பதவிவகித்த ஹென்றி ஜயசேன அவர்களைத் தலைமையாகக்கொண்ட ஒரு சபையினால் அந்த நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது. அதில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர்சபை அங்கத்தவர்களான திருமதி. ஆர்.ஆர். நல்லையா அவர்களும் காமினி பீதிரிஸ் அவர்களும் அங்கம் வகித்தார்கள்.

நேர்முகப்பரீட்சை காலை 11.00 மணியளவில் நடைபெற்றது. மதியம் ஒருமணியளவில் நான் ஞானம் இரத்தினம் அவர்களின் மேசையின் முன்னால் நின்று நேர்முகப்பரீட்சையில் நடந்தவை பற்றி விபரித்துக்கொண்டிருந்தேன். அப்போது ஹென்றி ஜயசேன அவர்கள் தனது கண்ணாடி அறையிலிருந்தபடியே என்னை அழைத்தார். நான் உள்ளே சென்றதும் வலது கையின் நான்கு விரல்களையும் உள்ளே மடித்து, பெருவிரலை உயர்த்திக்காட்டி கொங்றாட்ஜுலேஷன்ஸ் என்று ஆங்கிலத்தில் சொன்னார். அவ்வளவுதான், நான் வானத்தில் சிறகடித்துப் பறப்பதுபோல் உணர்ந்தேன். அவருக்கு நன்றிசொல்லிவிட்டு, திருமதி. இரத்தினம் அவர்களிடம் சென்று செய்தியைச் சொன்னபோது, ஹென்றி ஜயசேன அவர்கள் தனக்கு இதுபற்றி ஏற்கனவே தெரிவித்துவிட்டதாகக் கூறினார். எனக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை.

எனக்கு 1982ம் ஆண்டு ஜனவரி மாதம் ரூபவாஹினியில் பணி-செய்வதற்கான நியமனக்கடிதம் கையில் கிடைத்தபோது, அது நான் சிறுவயதிலிருந்தே கனவுகண்ட காட்சி ஊடகத்தில் பணியாற்றுவதற்கான அதிஉயர் வாய்ப்பென்றுகருதி மகிழ்ச்சியடைந்தேன். அடுத்த இரண்டரை வருடத்தில் தமிழ்ப்பிரிவின் தலைவராவே-னென்று நான் கனவுகூடக் காணவில்லை. அந்தக் காலகட்டத்தில் முப்பத்தினான்கு வயது இளைஞனுக்கு அப்படியொரு பதவி கிடைப்பது நம்பக்கூடிய செய்தியல்ல. இப்போது தனியார் ஊடகத்துறை பெருகிவிட்ட நிலையில் மிகமிக இளையவர்களுக்கெல்லாம் உயர்பதவிகள் வழங்கப்படுகின்றன. எமது காலத்தில் எனக்குத் தெரிந்து அப்படி நடந்ததில்லை. இலங்கை ஊடகத்துறையில் அத்தகைய நியமனங்கள் வழங்கப்படுவதற்கான ஆரம்பம் அதுவென்று நினைக்கிறேன்.

அதற்கு முழுக்க முழுக்கக் காரணமாக இருந்தவர் ரூபவாஹினியின் அப்போதைய தலைவர் எம்.ஜே. பெரேரா என்பதைப் பின்னர் நான் அறிந்துகொண்டேன். ஹென்றி ஜயசேன அவர்களிடம் தமிழ்ப்பிரிவின் தலைவராக என்னைத்தான் தெரிவுசெய்ய வேண்டுமென்று எம்.ஜே. பெரேரா அவர்கள் அறிவுறுத்தியிருந்தார். நான் ரூபவாஹினியின் ஆரம்பத்திலிருந்தே மேற்கொண்ட கடின-உழைப்பை அங்கு பணியாற்றிய அனைவரும் நன்கு அறிந்திருந்தனர். அதுமட்டுமல்ல, எனது அதிர்ஷ்டம் 1984ம் ஆண்டு ஆரம்பத்தில் நான் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட வெற்றிகரமான நிகழ்ச்சித் தயாரிப்பு, நான் தீவிரமாகச் செயற்படக்கூடியவனென்ற அபிப்பிராயத்தை எம்.ஜே. பெரேராவிடம் ஏற்படுத்தியிருந்தது. அவர் என்மீதுகொண்ட நல்ல அபிப்பிராயம், நான் எதிர்பாராத வகையில் எனக்கு நன்மையாக அமைந்தது.

1984ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 1ம் திகதியிலிருந்து என்னைத் தமிழ்ப்பிரிவின் தலைவராக நியமித்திருப்பதாக எனக்கு நியமனக் கடிதம் தரப்பட்டது. நான் ஏற்கனவே கூறியது போலப் பிரிவுத் தலைவரென்பது உதவி இயக்குனர் தரம் என்பதால் எனது பதவிப்பெயர் உதவிப்பணிப்பாளர், தமிழ் நிகழ்ச்சிகள் என்று அமைந்தது. இது பலரின் மனதில் எப்போதுமே ஒரு கேள்வியை எழுப்பியது. உதவிப்பணிப்பாளரென்றால் தமிழ்ப்பிரிவின் பணிப்பாளர் யார் என்பதே அந்தக் கேள்வி. அப்போதைய நிர்வாக அமைப்பின்படி தமிழ்ப்பிரிவின் உயர்பதவி உதவிப்பணிப்பாளர் மட்டத்தி-லேயே இருந்தது. அதற்கு மேலான பதவிகள் தமிழ்ப்பிரிவுக்கு இருக்கவில்லை. முற்றுமுழுதாகத் தமிழ்ப் பொது நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக நானே இருந்தேன்.

நான் தமிழ்ப்பிரிவின் தலைவராகப் பதவியேற்ற அதே ஒகஸ்ட் மாதத்தில் திருமதி. ஞானம் இரத்தினம் பணியிலிருந்து ஓய்வுபெற்றார். ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டபோது பொதுநிகழ்ச்சிகளுக்கான பிரதிப்பணிப்பாளர் நாயகமாகப் பதவியேற்ற பிரபல சிங்கள ஒலிபரப்பாளரான எச்.எம். குணசேகர அவர்கள் 1982ம் ஆண்டு முடிவிலேயே ஓய்வுபெற, பிரபல நாடக எழுத்தாளர், நெறியாளர், நடிகர், மற்றும் சினிமா நடிகராகவும் பெரும்புகழ்பெற்றிருந்த ஹென்றி ஜயசேன அவர்கள் பொதுநிகழ்ச்சிகள் பிரதிப்பணிப்பாளர் நாயகமாகப் பதவியேற்றார். ஒலிபரப்பில் நீண்டகால அனுபவத்தோடு ரூபவாஹினிப் பொதுநிகழ்ச்சிகள் இயக்குனராகப் பதவியேற்ற திருமதி. ஞானம் இரத்தினம் 1984ம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் ஓய்வுபெறுகிறார். அப்போது அவருக்கு 55 வயது. அவர் மேலும் சில ஆண்டுகள் பணியாற்றவேண்டி சேவை நீடிப்புக்கு விண்ணப்பிக்கவில்லை. அதற்கான பிரதான காரணம் 1983ம் ஆண்டு இனக்கலவரம் நடைபெற்றவுடனேயே அவுஸ்திரேலியாவில் வைத்தியராகப் பணியாற்றிக்கொண்டிருந்த திருமதி. இரத்தி



திருமதி. ஞானம் இரத்தினம் அவர்கள் ஓய்வுபெற்றுச்சென்றபோது நடைபெற்ற பிரியாவிடையின்போது ரூபவாஹினித் தலைவர் எம்.ஜே. பெரேரா அவர்களுடன்.

னம் அவர்களின் சகோதரர், திருமதி. இரத்தினம் அவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார். எனவே, அவர் தனது சேவை நீடிப்பில் அக்கறை காட்டவில்லை. என்னைப்பொறுத்தளவில் அவர் அப்படி விண்ணப்பித்திருந்தாலும் சேவை நீடிப்புக் கிடைத்திருக்குமாவென்பது கேள்விக்குறியே. ரூபவாஹினியின் உயர்நிர்வாகம் சேவைநீடிப்பு வழங்க விரும்பினாலும் அதற்கான அனுமதி அமைச்சு மட்டத்திலிருந்து பெறப்படவேண்டும் என்பதால் அங்கு நிச்சயமாக அரச ஆதரவுள்ள பலர் அந்தப்பதவிக்காகத் தமது சகலவிதமான செல்வாக்கையும் பயன்படுத்தியிருப்பார்கள். இவ்வாறான பெரும் பொறுப்புகளில் சிலவேளைகளில் தமிழர்கள் நியமிக்கப்பட்டாலும் அரசியல் அழுத்தங்களால் அந்தப் பதவிகளிலிருந்து அவர்கள் விரைவில் மாற்றப்பட்டுவிடுவார்கள். அப்படியொரு சம்பவம் சில்வெஸ்டர் பாலசுப்ரமணியத்துக்கு 1990ம் ஆண்டு நடந்தது. அதைப் பின்னர் விபரிப்பேன்.

திருமதி. இரத்தினம் அவர்களின் அனுபவம், மற்றும் திறமை காரணமாக அவரை வலிந்து அகற்றியிருக்கமாட்டார்களென்றாலும் அவர் ஓய்வு வயதையெட்டியதைச் சாட்டாக வைத்து சேவை நீடிப்பு வழங்கியிருக்கமாட்டார்களென்று நினைத்திருந்தேன். ஆனால் நல்லவேளையாக அப்படியொரு நிலைக்கு ஆளாகி அதனால் மனம்நோகாமல் அவர் தனக்குரிய கௌரவத்துடன் ஓய்வுபெற்றார்.

அவருக்கு ஒரு பிரியாவிடை திரு. எம்.ஜே. பெரேரா அவர்களின் தலைமையில் ரூபவாஹினியில் நடைபெற்றது. பலரும் திருமதி. இரத்தினம் அவர்களின் திறமையையும் அவர் பிரச்சினைகளை அணுகும் பாங்கையும் பாராட்டிப் பேசினார்கள். எம்.ஜே. பெரேரா அவர்கள் நாட்டுநிலை காரணமாகத்தான் திருமதி. இரத்தினம் நாட்டைவிட்டுச் செல்கிறாரென்று நாட்டின் நிலைமை குறித்து மனம்கலங்கி உரையாற்றியது எனக்கு இன்றும் நினைவில் இருக்கிறது. திருமதி. ஞானம் இரத்தினம் அவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றதும் அவரது இடத்திற்கு பியசிறி குணரத்ன என்பவர் பொது நிகழ்ச்சிகள் இயக்குனராக நியமிக்கப்பட்டார். அவர் ரூமேனியாவில் திரைப்படத்துறைக்கான பட்டப்படிப்பில் கலாநிதிப்பட்டம் பெற்றவர்.

நான் தமிழ்நிகழ்ச்சிகள் பிரிவின் தலைவராகப் பணிகளை ஆரம்பித்தேன். நான் அதுவரை பார்த்துக்கொண்டிருந்த பணியிலிருந்து பெரிதாக மாற்றங்கள் இருக்கவில்லை. நான் ஓரிடத்திலிருந்து

கொண்டு நிர்வாகப்பணிகளை மட்டும் செய்துகொண்டிருக்காமல் தொடர்ந்து நிகழ்ச்சிகளைத் தயாரித்துக்கொண்டிருந்தேன். அது எனக்கு விருப்பமானது மட்டுமல்ல, எனது பலமே அதுதான். நிகழ்ச்சித் தயாரிப்பை நான் தொடர்ந்து செய்ததற்கு மற்றுமொரு காரணம், போதுமான எண்ணிக்கையில் தயாரிப்பாளர்கள் அப் போது இருக்கவில்லை. நான் தமிழ்ப்பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்ற அதேநேரம் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் இயக்குனர் நாயகமாக (Director General) கலாநிதி. அனுரா குணசேகர அவர்கள் பொறுப்பேற்றார். அதுவரை ரூபவாஹினிக்கு இயக்குனர் நாயகமென்ற ஒருவர் தனியாக இருக்கவில்லை. தலைவர் எம்.ஜே. பெரேரா அவர்களே இயக்குனர் நாயகமாகவும் செயற்பட்டார்.

நான் தமிழ்ப்பிரிவின் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றத் தொடங்கிய ஐந்து மாதங்களில் யூ.எல். யாக்கூப், யூனூஸ், ஷியாமா ஆகிய மூன்றுபேரும் தயாரிப்பு உதவியாளர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். திருமதி. இரத்தினம் அவர்கள் பணியிலிருக்கும்போதே அவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் முடிவடைந்திருந்தாலும் 1985ம் ஆண்டு ஜனவரி மாதத்தில்தான் பணி நியமனம் வழங்கப்பட்டது. அதே நேர்முகப்பரீட்சையில் எம். வரதராஜன், ஆர். ரவீந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களென்பதால் அவர்களைப் பணியில் சேர்ப்பதற்குப் பொலீஸ் திணைக்களத்தின் நற்சான்று பெறவேண்டியிருந்தமையால் அவர்களுக்கு மிகத் தாம தமாகவே நியமனம் வழங்கப்பட்டது. வரதராஜன் 1985ம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலும் ரவீந்திரன் 1986ம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலும் தயாரிப்பு உதவியாளர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட் டார்கள். முதலில் பணிக்குச் சேர்ந்த மூன்றுபேரில் யாக்கூப் தமிழ்நிகழ்ச்சிகள் பிரிவிலும் ஷியாமா கல்விச்சேவைப்பிரிவிலும் யூனூஸ் விவரணப்பிரிவிலும் தயாரிப்பு உதவியாளர்களாக நியமிக் கப்பட்டார்கள். அப்போது பாலசிங்கம் பிரபாகரன் எனது தயாரிப் புகளுக்கு உதவியாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். பின்னர்



மலையக நிகழ்ச்சிகள் படப்பிடிப்பின்போது வோக்கிரோக்கியுடன் பாலசிங்கம் பிரபாகரன்

சேர்த்துக்கொள்ளப்பட் எம். வரதராஜன் கல்விநிகழ்ச்சிகள் பிரிவி லும் ஆர். ரவீந்திரன் தமிழ்நிகழ்ச்சிகள் பிரிவிலும் சேர்த்துக்கொள் ளப்பட்டார்கள்.

1985ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒருநாள் இயக்குனர் நாயகம் அனுரா குணசேகர அவர்கள் என்னைத் தனது அறைக்கு வரு மாறு அழைத்தார். அப்போது அவருக்கு வசதியான ஒரு அலுவ லகம் இருக்கவில்லை. பொறியியல் பிரிவில் ஒரு சிறிய இடத்தை ஒதுக்கி அதிலே ஓர் அலுவலகம் அமைத்துக்கொடுத்திருந்தார் கள். அப்போது பின்புறமாக இப்போதிருக்கும் பெரிய கட்டடம் கட்டப்படவில்லை. நான் இயக்குனர் நாயகத்தின் அறைக்குள் சென்றபோது அங்கு ஓர் இளைஞர் இருந்தார். அவரது பெயர் கோபால் என்று எனக்கு அறிமுகம் செய்யப்பட்டார். அவர் மலை யகத்தைச் சேர்ந்தவர். மலையகத்தைச்சேர்ந்த பள்ளிச் சிறுவர்க ளுக்கு அவர்களது கலைத்திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக ரூபவாஹினியில் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையுடன் கோபால் வந்திருந்தார். அதற்கான ஒழுங்க மைப்பு வேலைகளை தான் பொறுப்பேற்றுச் செய்யமுடியுமென்று அவர் கூறியபோது, அனுரா குணசேகர அவர்கள் கோபால் ஏற் கனவே அவரிடம் கொடுத்திருந்த கோப்பொன்றை (file) என்னிடம் தந்து, அதைப் படித்து எனது அபிப்பிராயத்தைக் கூறும்படி சொன்னார்.

நான் அந்தக் கோப்புடன் கோபாலை அழைத்துச்சென்று எனது இருக்கையில் அமர்ந்து அவர் வந்திருக்கும் விடயம் பற்றி விரிவா கப் பேசினேன். அவர் என்னுடன் பேசிக்கொண்டிருக்கும்போதே நான் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை உடனடியாகச் செயற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். மலையகத்திற்கு ரூபவாஹி னித் தயாரிப்புக் குழுவை அழைத்துச்சென்று நிகழ்ச்சிகள் தயா ரிக்கும் திட்டம். யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டதுபோன்ற மற்றொரு திட்டம். நிகழ்ச்சிகளை மலையகத்தில் ஒருங்கிணைக் கும் வேலைகளைத் தான் செய்வதாகக் கூறியது எனக்கு நம்பிக் கையையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியது. கோப்பை முற்றா கப் படித்துவிட்டுச் சொல்வதாகக் கோபாலிடம் சொல்லி அவரை அனுப்பிவிட்டு, அடுத்தநாள் அனுரா குணசேகர அவர்களிடம் சென்று, கோபாலின் திட்டம் மிகநல்ல திட்டம், நாம் அதனை நடைமுறைப்படுத்தலாமென்று கூறி, நாம் ஏற்கனவே யாழ்ப்பா ணத்தில் மேற்கொண்ட ஒளிப்பதிவுபற்றி அவரிடம் கூறினேன். நாம் யாழ்ப்பாணத்தில் ஒளிப்பதிவுகளை மேற்கொண்டபோது அனுரா குணசேகர அவர்கள் ரூபவாஹினியில் இயக்குனர் நாயகமாக நிய மிக்கப்படவில்லை.

ரூபவாஹினி இப்படி மக்களிடமே சென்று நிகழ்ச்சிகளைத் தயா ரிக்கும்போதுதான் அது தமக்கான ஊடகமென்ற எண்ணம் மக்க ளிடம் ஏற்படும். ரூபவாஹினியினுடனான அவர்களது நல்லுறவு வளரும். இல்லையேல் கொழும்பிலிருந்து ரூபவாஹினி ஒளிபரப்பு வதை அவர்கள் தூரத்தில்நின்று தமக்கு அன்னியமானதொன்றைப் பார்ப்பதுபோலத்தான் பார்ப்பார்களென்ற எனது கருத்தைச் சொன் னதும் அவர் அதனை ஆமோதித்து உடனேயே அதற்கான ஒழுங் குகளைச் செய்யுமாறு கூறினார்.

உடனேயே கோபாலை அவரது ஊராகிய பொகவந்தலாவையிலி ருந்து வரவழைத்து அனுரா குணசேகர அவர்களிடம் அழைத்துச் செல்ல அவர் கோபாலிடம் ரூபவாஹினிக்கு எந்தவித பிரச்சி னையோ பாதிப்போ ஏற்படாத வகையில் நிகழ்ச்சிகளை ஒருங்கி ணைக்கும் பணியை மேற்கொள்ளவேண்டுமென்றும் அவரது ஒவ் வொரு செயலும் தமிழ்நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான என்னிடம் கலந்தாலோசித்தபின்னரே மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் அறி வுறுத்தி கோபால் ரூபவாஹினிக்காக மலையகப் பாடசாலைச் சிறுவர் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கி-றாரென்ற ஒரு அத்தாட்சிக்கடிதத்தைக் கொடுத்து அனுப்பினார்.

கோபால் சுறுசுறுப்பாகத் தனது பணிகளை ஆரம்பித்தார். அடிக் கடி தொலைபேசியில் என்னுடன் தொடர்புகொண்டு தனது வேலை யின் முன்னேற்றம் பற்றி எனக்கு அறிவித்தார். அவரது ஒருங்கி ணைப்புப் பணிகள் முடிவடைவதற்கு 1985ம் ஆண்டு ஒக்டோபர் மாதமாகிவிட்டது.

அடுத்து ஒளிப்பதிவுக்கேற்ற தரமான நிகழ்ச்சிகளைத் தெரிவு-செய்யவேண்டும். மலையகம் சென்று அவற்றைத் தெரிவுசெய்யும் பொறுப்பை அனுரா குணசேகர அவர்கள் என்னிடம் வழங்கினார். அந்த நிகழ்ச்சிகள் அனைத்துமே பாடசாலைச் சிறுவர்களின் நிகழ்ச்சிகள் என்பதால் சிறுவர் நிகழ்ச்சிப் பிரிவுக்குப் பொறுப்பான கலாநிதி. சொலமன் ஃபொன்சேகா அவர்களும் அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட் டது. ஒரு வெள்ளிக்கிழமை மாலை கொழும்பிலிருந்து புறப்பட்டு சனி, ஞாயிறு தினங்களில் தெரிவுப் பணிகளை முடித்துக்கொண்டு திங்கட்கிழமை திரும்புவதாகத் திட்டமிடப்பட்டது. இந்தப் பயணம் பற்றி அனுரா குணசேகரவுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர் திடீரென்று எனது மனைவி பிள்ளைகளையும் என்னுடன் அழைத் துச் செல்லலாமென்று சொன்னார். எனக்கு அது நல்ல யோசனை யாகத் தெரிந்தது. எனது மேலதிகாரிகள் எல்லோருமே என்மீது மிகுந்த அக்கறைகொண்டவர்களாக இருந்தது எனது தொழில் வாழ்க்கையில் எனக்குச் சாதகமாக அமைந்த விடயம்.

திட்டமிட்டவாறே ஒரு வெள்ளிக்கிழமை மதியம் ரூபவாஹினி வாக னத்தில் கலாநிதி. சொலமன் ஃபொன்சேகா, நான், எனது மனைவி, மூன்றுவயது பூர்த்தியடையாத எமது மகள் மாதங்கி எல் லோரும் மலையகத்துக்குப் பயணமானோம்.

அந்த வாரஇறுதி நாட்களில் பொகவந்தலாவ, கொட்டகல, நுவரெ லியா, தலவாக்கல என்று பல இடங்களுக்கும் சென்று பல பள்

ளிக் கூடங்களில் சிறுவர் நிகழ்ச்சிகளைப் பார்த்துத் தரமானவற்றைத் தெரிவுசெய்துகொண்டு திரும்பினோம். கோபால் மிகச்சிறப்பாகத் தனது பணியைச் செய்திருந்தார்.

அதன்பின்னர் மேலும் நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்யவும் தெரிவு-செய்த நிகழ்ச்சிகளை மெருகுபடுத்தவும் நிகழ்ச்சி ஒளிப்பதிவு-செய்யும் இடங்களைத் தெரிவுசெய்து அவற்றில் ஒளிப்பதிவுக்கான வசதிகளை உறுதிசெய்யவுமென மலையகத்துக்குப் பல பயணங்களை மேற்கொண்டோம். எமது அடுத்ததடுத்த பயணங்களில் கலாநிதி. சொலமன் ஃபொன்சேகாவோ எனது குடும்பத்தினரோ இடம்பெறவில்லை. சிறுவர் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்த கமலா தம்பிராஜா, தயாரிப்பு உதவியாளர் பாலசிங்கம் பிரபாகரன், மற்றும் தொழில்நுட்வியலாளர்கள் அந்தப் பயணங்களில் இடம்பெற்றார்கள். 1985ம் ஆண்டு இறுதி அல்லது 86ம் ஆண்டு ஆரம்பத்தில் ஒளிப்பதிவுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டோம். இது யாழ்ப்பாண நிகழ்ச்சிகளின் ஒளிப்பதிவுத் திட்டத்தைவிட மிகப்பெரியளவில் அமைந்துவிட்டது. யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டதுபோலவே இரவில் சிறுவர் நிகழ்ச்சிகளையும் பகலிலே மலையகத்தின் எழிலை எடுத்துக்காட்டும்விதமான ஒரு தொலைக்காட்சி நாடகத்தையும் தயாரிப்பதற்குத் திட்டமிட்டேன். யாழ்ப்பாண முன்னனுபவம் இந்தத் திட்டமிடலுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது.

பல நிகழ்ச்சிகளோடு சேர்த்துத் தொலைக்காட்சி நாடகமொன்றையும் செய்வதென்பது மிகக்கடினமான பணியென்பதை நான் அனுபவபூர்வமாக உணர்ந்திருந்ததால், உரையாடல்களுடன் கூடிய ஒளிப்பதிவுக்கு அதிக நேரம் எடுக்கும் நாடகமாகத் தெரிவு செய்யாமல், மிக இலகுவான முறையில் கதைசொல்லும் பாணியில், அதேவேளை அழகான மலையகக் காட்சிகளைக் காட்டும் விதத்தில் அமையத்தக்க நாடகமொன்றை, மக்களைக்கவரக்கூடிய சினி-மாப்பாணியில் எடுப்பதென்று தீர்மானித்தேன். உரையாடல்கள் அதிகமாகவுள்ள நாடகமென்றால், சரியான ஒலியமைப்புடன் படப்பிடிப்பை மேற்கொள்வதற்கு நீண்ட நேரம் செலவாகும்.

அழகான நடிகர்கள், உடை, வனப்பு மிக்க மலையகப்பின்னணி, பாடல்களென்று ஒரு ஜனரஞ்சகமான தயாரிப்பாக அது இருக்க வேண்டும். அந்தக் கதை காதல், துரோகம், பிரிவு, சோகம், செய்த தவறுகளையெண்ணி வருந்துதல் (repentance) போன்ற பார்வையாளர்களின் அடிப்படை உணர்வுகளைத் திருப்திப்படுத்தும் விதத்தில் இருக்கவேண்டுமென்று கருதி, எனது மனதுக்குள் ஒரு கதையை உருவாக்கிக்கொண்டேன். அந்தக் காலத்தில் வானொலியில் மிகப்பிரபலமாக விளங்கிய இசையும் கதையும் போலத் தொலைக்காட்சியில் காட்சியாகக் கதைசொல்வதென்று தீர்மானித்து, அதற்கேற்ற பாடல்களைத் தெரிவுசெய்தேன். அவை முழுக்க முழுக்க சினிமாப் பாடல்களாக இல்லாமல் ஏற்கனவே ரூபவாஹினியில் நான் தயாரித்துக் கொண்டிருந்த உதயகீதம் நிகழ்ச்சியில் இடம்பெற்ற பாடல்கள் சிலவற்றையும் சில சினிமாப் பாடல்களையும் தெரிவுசெய்து எல்லாவற்றையும் எமது கலைஞர்களைக்கொண்டு பாடுவித்தேன். எம். மோகன்ராஜ், ஜெயபாரதிதாசன், டபிள்யூ. அன்ரன், லில்லி மயில்வாகனம், நிலாமதி கருணைரத்தினம் ஆகியோர் அந்தப் பாடல்களைப் பாடினார்கள். மோகன்-ரங்கன் இசையமைத்தார்கள். இவற்றில் உதயகீதத்தில் இடம்பெற்ற பாடல்கள் ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்தன. சினிமாப்பாடல்களை மட்டும் ஒலிப்பதிவுசெய்யவேண்டி இருந்தது.

எனது திட்டத்தின்படி எல்லாப்பாடல்களும் உடனடியாகவே தேவையில்லாவிட்டாலும்கூட மலையகப்படப்பிடிப்பின்போது பாத்திரங்கள் வாயசைத்துப் பாடுவதுபோன்று காட்சியாக்கப்பட வேண்டிய பூஜைக்கு வந்த மலரே வா என்ற திரைப்படப்பாடல் படப்பிடிப்புக்காகக் கொண்டுசெல்லப்படவேண்டியிருந்தது. எனவே, அந்தப்பாடலை உடனடியாக ஒலிப்பதிவுசெய்வதென்று தீர்மானித்தேன். ஆனால் ரூபவாஹினிக் கலையகம் பல நிகழ்ச்சி ஒளிப்பதிவுகளுக்காக ஒதுக்கப்பட்டுவிட்டதால் எனது ஒலிப்பதிவை அங்கு உடனடியாக மேற்கொள்ள முடியவில்லை. அதனால் எஸ். இராமதாஸ் அவர்களின் ஒலிப்பதிவுக் கலையகத்தில் அதை ஒலிப்பதிவு செய்வித்தேன். மோகன்ராஜும் நிலாமதியும் பாடிய அந்தப்பாடலை நண்பர் பி.எச். அப்துல்ஹமீட் ஒலிப்பதிவு செய்தார்.

நடிகர்கள் பாடுவதுபோன்று மலையகத்தில் படம்பிடிக்கவேண்டிய 'பூஜைக்குவந்த மலரே வா' என்ற பாடலை மாத்திரம் எடுத்துக்கொண்டு ஒரு பெரிய தயாரிப்புக்குழுவுடன் மலையத்திற்குப் பயணமானேன். அந்தத் தயாரிப்புக் குழுவில் சிறுவர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் கமலா தம்பிராஜா, தயாரிப்பு உதவியாளர் பாலசிங்கம் பிரபாகரன், மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் இடம்பெற்றிருந்தனர். இம்முறை யாழ்ப்பாணம் போலல்லாது அரங்க அமைப்புக் கலைஞர்களையும் அழைத்துச்சென்றோம்.

நாடகம் ஒரு சினிமாப்படம்போன்று இருக்கவேண்டுமென்பதற்காக சிங்களத் திரையுலகில் அப்போது புதுமுகங்களாக இருந்த பிரியங்ஹர பெரேரா, குமுதுமலி டி. சில்வா, ரமணி சிறிவர்த்தன ஆகியோரை அதில் நடிப்பதற்காகத் தெரிவுசெய்திருந்தேன். நாடகத்தில் அவர்களுக்கு வசனம்பேசவேண்டிய அவசியமில்லாதபடி



என்வாழ்வு உன்னோடுதான் நாடகத்தில் பிரியங்ஹரா பெரேரா, குமுதுமலி டி.சில்வா

யால் மொழிபற்றிய பிரச்சினை இருக்கவில்லை. அவர்களுடன் ஃபிறாங்க் புஷ்பநாயகம், பத்மா குகபாலன், மற்றும் எஸ். பிரபாகர் என்னும் ஒரு மலையக இளைஞரும் நடித்தார்கள். இவர்களுள் பிரதான பாத்திரங்களில் நடித்த பிரியங்ஹர பெரேரா, குமுதுமலி ஆகியோர் மட்டுமே மலையகப் படப்பிடிப்புக்குத் தேவைப்பட்டதால் அவர்கள் இருவரையும் எம்முடன் அழைத்துச் சென்றோம். அவர்களுடன் மலையகத்தைச்சேர்ந்த எஸ். பிரபாகர் ஓரிரு காட்சிகளில் அந்தப் படப்பிடிப்பில் தோன்றினார்.

படப்பிடிப்புக்காக மலையகம்சென்ற நாம், யாழ்ப்பாணப் படப்பிடிப்புப்போலவே ஹற்றனை மையமாகக்கொண்டு அங்குள்ள ஒரு பாடசாலையில் மாலை இரவு வேளைகளில் சிறுவர் நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்தோம்.

ஹற்றனில் வசித்த ஒரு வசதியான குடும்பதினரது வீட்டில் எம்முடன் வந்திருந்த கமலா தம்பிராஜா, குமுதுமலி ஆகியோர் தங்குவதற்கு கோபால் ஒழுங்குசெய்திருந்தார். நானும் பிரபாகரனும் படப்பிடிப்புக் குழுவினருடன் சிறிய விடுதிபோன்ற ஒரு வீட்டில் தங்கினோம். படப்பிடிப்பு தங்குதடையின்றி நடைபெற்றது. மலையகப் பகுதிகளைச் சேர்ந்த பல பாடசாலைகளிலிருந்து சிறுவர்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார்கள். நிகழ்ச்சிகள் பெருமளவில் இருந்தாலும் ரூபவாஹினியின் தொழில்நுட்பப்பிரிவினர் வடிவமைத்து நிரமாணித்த சிறிய வெளிப்புறப்படப்பிடிப்பு வாகனத்தைக் கொண்டுசென்றதால் படப்பிடிப்பு அவ்வளவு சிரமமானதாக இருக்கவில்லை. அத்தோடு யாழ்ப்பாணப்படப்பிடிப்புக்குச் சென்றபோது மிகவும் புதியவராகப் பணிக்குச் சேர்ந்திருந்த பிரபாகரன் கிட்டத்தட்ட இரண்டு வருடங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்தப் படப்பிடிப்பு வேளையில் நிகழ்ச்சித் தயாரிப்பில் ஓரளவு அனுபவம்பெற்றிருந்தார். அவரே சில நிகழ்ச்சிகளின் படப்பிடிப்பை வெளிப்புறப்படப்பிடிப்பு வாகனத்திலிருந்து இயக்கியதால் எனக்கு வேலையின் அழுத்தம் (stress) சற்றுக்குறைவாக இருந்தது.

ஹற்றனில் நாம் நாடகத்திற்கான பாடல்காட்சியை எமது வெளிப்புறப்படப்பிடிப்பு வாகனத்தைப் பாவித்துப் பாடமாக்கிக்கொண்டிருந்த வேளையில் நான் வாகனத்திலிருந்தபடியே வோக்கி ரோக்கியில் தயாரிப்பு உதவியாளரான பிரபாகரனைப் பேர்சொல்லி அடிக்கடி அழைத்து உரையாடியபோது, நுவரெலியாவில் ரூபவாஹினி ஒளிபரப்பு (transmitter) நிலையத்தில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் ஒலிச்சாதனங்களில் அந்த உரையாடல்கள் அவர்களுக்குக் கேட்டதால் பிரபாகரன் என்ற பெயரைக்கேட்டு அவர்கள் பரபரப்படைந்து எமது உரையாடலை இடைமறித்துக் கேள்விகள் தொடுத்தார்கள். நாம் இதனை ரூபவாஹினிக்குத் தெரிவிக்க உடனடியாக ரூபவாஹினியின் கட்டுப்பாட்டறையிலிருந்து இராணுவத்தினருக்கு நாம் அங்கு படப்பிடிப்

பில் ஈடுபட்டிருக்கும் செய்தி தெரிவிக்கப்பட்ட சம்பவமும் இடம் பெற்றது. அது எமக்கு ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது.

மலையக மக்கள் எம்மை மிகுந்த அன்புடன் வரவேற்றார்கள். சென்ற இடமெல்லாம் மாலையணிவித்து மரியாதைசெய்து வரவேற் றமை அவர்களின் அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்தி யது. அப்போது ரூபவாஹினியில் தோன்றி செய்தி வாசித்துக் கொண்டிருந்த நானும் கமலா தம்பிராஜாவும் அவர்கள் மத்தியில் நேரடியாகப்போய் நின்றபோது அவர்களுக்கு நம்பமுடியாமல் இருந்தது. அப்போது அந்தப்பகுதியில் தொண்டமான் அவர்களின் மலையகத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் உப தலைவர்களிலொருவராகப் பதவிவகித்த காலம்சென்ற ராஜு அவர்கள் தனது ஆதரவாளர்கள் சகிதம் படப்பிடிப்பு நடைபெற்ற இடங்களுக்கு வந்து எமக்கு வேண்டிய ஆதரவைத் தந்தார்.

ரூபவாஹினிக் குழுவுக்குத் தலைமைவகித்த எனக்கு அப்போது முப்பத்தைந்து வயது. தயாரிப்பாளர் கமலா தம்பிராஜா மட்டுமே சற்று மூத்தவர். மற்றைய தயாரிப்புக்குழுவினரில் ஏறக்குறைய அனைவருமே இருபதுக்கும் முப்பதுக்குமிடைப்பட்ட வயதினர். எம்மை முதல்முதலாகப் பார்த்த ராஜு அவர்கள் 'என்ன, ரூப வாஹினி உத்தியோகத்தர் அனைவருமே சின்னப்பையன்களாக இருக்கிறார்களே' என்று கேட்டு வியந்தது எனக்கு ஞாபகமிருக்கி



கலாநிதி சோலமன் பொன்சேக, சாரதி தர்மசேன ஆகியோருடன்
நானும் எனது மனைவியும் மகளும் மலையகப் பயணத்தின்போது.

றது. உண்மையில் ரூபவாஹினி அப்போது இலங்கையின் மிக இளைய ஊடகமாக இருந்தது.

மற்றுமொரு வெளிப்புறப்படப்பிடிப்பைத் தமிழர்கள்வாழும் பிரதே சத்தில் வெற்றிகரமாக முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பி- னோம். திரும்பிய உடனேயே அந்த நாடகத்தைப் பூர்த்திசெய்யும் முயற்சியில் இறங்கினேன். மலையகத்தில் பிரதான இரண்டு நடி கர்களையும் இயற்கைக் காட்சிகளின் பின்னணியில் அங்குமிங்கும் உலாவவிட்டுப் படம்பிடித்திருந்தேன். அந்தக் காட்சிகளில் எங் கெங்கு சில உணர்ச்சி மாற்றங்கள் வரலாமென்று ஊகித்து அவற் றுக்கு மாத்திரம் க்ளோஸ்அப் காட்சிகளைவைத்துப் படப்பிடிப்பை முடித்துக்கொண்டு வந்திருந்தேன். போதுமான அளவு காட்சிகளை மனம்போனபோக்கில் படமாக்கியிருந்தோம். கொழும்பு வந்ததும் அந்த நாடகத்துக்குத் தேவையான மிக முக்கியமான காட்சிகள் சிலவற்றைக் கொழும்பில் எடுக்கவேண்டியிருந்தது. அவைதான் அந்த நாடகத்தின் கதையைச் சொல்லும் பிரதான காட்சிகள். அந்தக் காட்சிகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒன்றை அப் போது மெல்லிசை, கர்நாடகஇசை பாடுவதிலும் வானொலி நடிக ராகவும் பிரபலமாகவிருந்த வனஜா சிறீனிவாசனது வீட்டில் பட மாக்கினோம். மற்றொரு பிரிவை வனஜா சிறீனிவாசனது கணவ ருடன் பணியாற்றும் வங்கியதிகாரி ஒருவரது வீட்டில் நுகேகொட யில் படமாக்கினோம். மூன்றாவது பிரிவுக் காட்சிகளை ரூபவா ஹினிக் கலையகத்தில் அரங்கம் அமைத்துப் படமாக்கினோம். கலையத்தில் படமாக்கப்பட்ட காட்சி ஒரு மதுபானச்சாலைக் காட்சி. அதில் நடிப்பதற்குச் சிலர் தேவைப்பட்டார்கள். கொழும் பில் அப்போது கலைத்துறையில் மிகுந்த ஈடுபாடுகொண்டிருந்த சுதாகரைத் தொடர்புகொண்டபோது அவர் தனபாலசிங்கம், எம். முஸ்தபா, உதயகுமார், சி. ஆனந்தசேகரம் ஆகியோரை அழைத்து வந்து அவர்கள் எல்லோரும் அந்தக் காட்சியில் நடித் தார்கள். இந்தக் காட்சிகளைப் படமாக்கியதோடு, நாடகத்தில் இடம்பெறவேண்டிய மற்றைய சினிமாப் பாடல்களையும் எமது பாடகர்களைக்கொண்டு பாடுவித்து ஒலிப்பதிவுசெய்தேன். படமாக் கிய காட்சிகள் அனைத்தையும் வைத்துக்கொண்டு நான் அந்த நாடகத்துக்கான கதையை முழுமையாக எழுதினேன். பிரதான பாத்திரத்தின் மீள்நினைவுகள் அந்தப் பாத்திரத்தின் குரலிலே ஒலிப்பதுபோன்று இசையும் கதையும் வடிவத்திலான கதை. அந் தப்பிரதியை வைத்துக்கொண்டு எனது நாடகத் தொகுப்பைச் செய்யத் தொடங்கினேன்.

ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்த பாடல்களுக்குக் கதைக் கேற்பக்காட்சிகளைப் புகுத்தினேன். கதைசொல்லப்படும் நேரத்திற் கேற்றவாறு காட்சிகளைத் தொகுப்பதற்குத்தான் அவதானம் வேண்டியிருந்தது. அந்த வசனங்கள் எவ்வளவு நேரத்துக்குள் வாசிக்கப்படவேண்டுமென்று நான் தீர்மானித்து, நானே அந்த வசனங்களை வாசித்து, அந்த நேரத்தைச் சரியாகக் கணித்து, அந்த நேரத்துக்களவாகக் காட்சிகளைத் தொகுத்தேன்.

'பூஜைக்கு வந்த மலரே' பாடல் நடிகர்கள் வாயசைப்பதுபோல் எடுத்ததால் அதைத் தொகுப்பதில் சிரமமேற்பட்டது. ஏனெனில், அப்போது எம்மிடம் சினிமா வெளிப்புறப்படப்பிடிப்புகளின்போது உபயோகிக்கும் தொழில்த் தரத்திலான நாகரா(Nagra) ஒலிப்பதி வுக் கருவி இருக்கவில்லை. நாம் அந்தப் பாடலை ஒரு கஸட்டில் பிரதிசெய்து, அதை எடுத்துச்சென்று ரூபவாஹினி வெளிப்புறப்ப டப் பிடிப்பு வாகனத்திலிருந்து அதை ஒலிபரப்பி, அதற்கேற்ப வாயசைத்து நடிகர்கள் நடித்திருந்தார்கள். ஆனால் ரூபவாஹினி எடிட்டிங் கலையகத்தில் அந்தக் காட்சிகளுக்குத் தொழில்முறைத் தரத்திலான ஒலிப்பதிவைச் சேர்த்தபோது நடிகர்களது வாயசைப் புப் பொருந்தவில்லை. ஏனெனில், படப்பிடிப்பின்போது பயன்ப டுத்தப்பட்ட கஸட் எம்மால் கண்டுபிடிக்கமுடியாதளவுக்கு மிகச்சி- றியளவிலான வேகவித்தியாசத்தைக்கொண்டிருந்தது. அதனால் அசல் (original) பாடல் ஒலிப்பதிவைச் சேர்க்கும்போது அது மிகுந்தளவில் வேறுபட்டது. படத்தொகுப்பை மேற்கொண்ட தொழில்நுட்பவியலாளர் இந்திர உக்வத்த மிகுந்த சிரமப்பட்டு அதைச் சரிசெய்தார். ஆனால் உன்னிப்பாகக் கவனித்தால் அந்த வேறுபாடு தெரியும்.

இறுதியாக, முழுமையாகத் தொகுக்கப்பட்ட நாடகத்தை பி.எச். அப்துல் ஹமீடிடம் காட்டி, நான் எழுதிய கதைப்பிரதியையும் அவரிடம் கொடுத்தபோது, இரண்டையும் நன்றாகக் கவனித்து, நான் எதிர்பார்த்த உயிர்ப்புடன் அதை வாசித்தார். அதன் இறுதி வடிவத்தை நாம் டப்பிங் கலையகத்தில் பதிவுசெய்தபோது காட் சியும் அவரது வாசிப்பும் அச்சொட்டாகப் பொருந்தியது. பல இசையும் கதைகளையும் வானொலியில் வாசித்த அவரது அனுப வம், எனது எழுத்துப்பிரதிக்கும் உரிய உணர்ச்சிகளைக் கொடுத்தது.

ஹமீடின் குரலுடன் முழுமையாகத் தொகுக்கப்பட்ட நாடகத்தைப் பார்த்துக்கொண்டே மோகன் அதற்கான பின்னணி இசையைத் தனது கீபோர்டில் அனாயாசமாக வாசித்தார். ஒருசில மணித்தியா லங்களிலேயே அந்தப் பின்னணி இசைச்சேர்க்கை பூர்த்தியானது. 'என்வாழ்வு உன்னோடுதான்' என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட அந்த நாடகம் அல்லது கதை 1986ம் ஆண்டு, மார்ச் மாதம் 16ம் திகதி முதல்முதலாக ரூபவாஹினியில் ஒளிபரப்பானது. தமிழ், சிங்கள மக்கள் அனைவருமே அதைப்பாராட்டினார்கள். அதற்கு வந்த பாராட்டுக் கடிதங்கள் மிகமிக அதிகம். அவற்றில் சில இப் போதும் என்னிடம் இருக்கின்றன.

இந்த மலையக ஒளிப்பதிவு சிறப்பாக நடைபெறுவதற்கு முன் னின்று உழைத்த கோபால் பாராட்டுக்குரியவர். அவரின் கடின உழைப்பு அதைச் சாத்தியமாக்க உதவியது.

எனது தொலைக்காட்சி ஊடகத்துறை வரலாற்றில் யாழ்ப்பாண ஒளிப்பதிவுகள்போலவே மலையக நிகழ்ச்சிகளின் ஒளிப்பதிவும் மிக முக்கிய நிகழ்வாகும். இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் ரூபவாஹினியும் மக்களின் தொலைக்காட்சியென்ற பெரு மையைப்பெற்றது. மலையக நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவுத் திட்டத்திற் கான முழுஆதரவையும் தந்தவர் அப்போதைய ரூபவாஹினி இயக்குனர் நாயகம் கலாநிதி. அனுரா குணசேகர அவர்கள்.

தொடரும்...



*wikneswaran.p@thaiveedu.com*



# மாண்புமிகு முன்னாள் அமைச்சரின் மரணம்

**- நவால் எல். சாதவி**

## அரபியிலிருந்து ஆங்கிலத்திற்கு: அமீரா நொவெய்றா
## தமிழில்: என்.கே. மகாலிங்கம்

‘என்னைப் போன்ற அமைச்சர் விழிப்புடன் இருக்க வேண்டும். உடலாலும் மனதாலும். சரியான பதிலை பிழையான தகவல்களிலிருந்து பெற்றெடுத்துக் கொடுக்க விழிப்புடன் இருக்க வேண்டும்.’

அம்மா, உன்னுடைய கையை என்னுடைய தலையில் வை. நான் சிறுவனாக இருந்தபோது வைப்பது போல. இந்த உலகத்தில் நீ மட்டும் தான் எனக்கு இருக்கிறாய். இந்த நீண்ட இருபது ஆண்டுகள் உன்னை நான் பார்க்க வராததிற்காக நீ என்னை ஒருபோதும் நிந்தித்ததில்லை. ஆனால் உன்னை மட்டுந்தான் நான் பார்க்காமல் தூர இருந்திருக்கிறேன் என்றில்லை. என்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றியோ என்னைப்பற்றியோ கவலைப்படுவதற்கு எனக்கு நேரமிருந்ததில்லை. அந்தளவுக்குப் பரபரப்பாக வேலை செய்துகொண்டிருந்தேன். என்னுடைய மனைவியையும் என் பாலிய கால நண்பர்களையும் பற்றிக் கூட நான் கவலைப்பட்டிருக்கவில்லை. என் மகளைப் பார்க்கக் கூட எனக்கு நேரமிருந்ததில்லை. என்னுடைய முகத்தைப் பார்ப்பதற்குக்கூட எனக்கு அதிக நேரமிருந்ததில்லை. வெளியே போவதற்கு முன் என்னுடைய கழுத்துப் பட்டியை சரிசெய்வதற்காகவும் அது என் சட்டைக்கும் உடைக்கும் நிறப் பொருத்தமாக இருக்கிறதா என்று விரைவாகக் கண்ணாடியில் பார்த்து விட்டுச் செல்வேன்.

அம்மா, நான் இந்த உலகத்தில் வாழ்ந்தேனா என்று கூட நான் உணர்ந்ததில்லை. நான் சாகாமல் இன்னொரு உலகத்தில் வாழ்வேனா என்பது சாத்தியமா? செய்தித்தாள்களில் என்னைப் பற்றிய மரண அறிவித்தல் வராமல் நான் இறப்பது சாத்தியமா? என்னைப் போன்ற புகழ்பெற்ற அமைச்சர்கள் இறக்கும்போது பெரியதொரு மரண அறிவித்தல் செய்தி நாடாளாவிய ரீதியில் நிச்சயமாக எழுதப்படும். வரிசை வரிசையாகத் துக்கப்படுவர்கள் நிச்சயம் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்வார்கள். முதல் வரிசையின் மத்தியில் பெரியவர் நிற்பார், கறுத்த கழுத்துப் பட்டை அணிந்திருப்பார். கண்ணீரை மறைப்பதற்காக கறுத்த கண்ணாடி அணிந்திருப்பார். மக்களின் தோள்களில் சுமக்கப்படும் அந்த சவப்பெட்டியின் உள்ளே நான் இருக்க வேண்டும். அப்படியான காட்சி எனக்கு அவர் மேல் அடிக்கடி பெரும் பயபக்தியையும் மரியாதையையும் ஏற்படுத்தும்.

அம்மா, உன்னுடைய உலகத்திலிருந்து நான் முற்றாக அறுபட்டு விட்டிருந்தேன். அந்தச் சுமை என் உடலுக்கும் மனதிற்கும் மிகவும் பாரமாக இருந்தது. மனம் தொடர்ந்து வேலை செய்யும்போது என் உடல் முழுச் சோர்வால் சிலவேளை நின்று விடும். மறுபக்கத்தில் என் மனம் களைத்துப் போய் அடிக்கடி இயங்காமல் நின்ற போதும் என் உடல் வேலை செய்து கொண்டிருக்கும். இங்குமங்கும் செல்லும், அலுவலகத்திற்குச் செல்லும், கூட்டங்களுக்கோ மாநாடுகளுக்கோ தலைமை வகிக்கும், விமான நிலையங்களில் தூதுக் குழுக்களை வரவேற்கும், விருந்துகளில் கலந்து கொள்ளும், உயர்மட்டக் குழுக்களுடன் வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும்.

என்னுடைய உடல் என் பிரக்ஞையின் குறுக்கீடு இல்லாமல் தன்னியல்பாகவே இயங்குவதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டுப் போவேன். முக்கியமான கூட்டங்கள் நடக்கும்போது என் மனதின் ஒருமுகப்படுத்தலும் முழுக் கவனமும் தேவைப்படும். அப்போது அப்படி அது நடந்தால் நான் மிகவும் கவலைப்படுவேன். முக்கியமான கூட்டங்கள் என்பது பெரியவரே தலைமை தாங்கி நடத்தும் கூட்டங்கள் மட்டும் தான். நான் அரசாங்கத்தில் வேலை பார்க்க தொடங்கிய காலம் தொடக்கம் கீழ்மட்ட நிலையில் இருக்க நான் விரும்பியதில்லை. என் மேலதிகாரிகளின் மேலுள்ள என்



நவால் எல் சாதவி ஒக்ரோபர் 27, 1931 - மார்ச் 21, 2021. புனைவு, அபுனைவு, நினைவுக் குறிப்பு போன்ற பலதுறைகளில் எழுதிய வர். பெண்ணியவாதி, செயற்பாட்டாளர், மருத்துவர், இஸ்லாம் மதத்தில் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை தன் எழுத்துக்களிலும் செயல்களிலும் வெளிக்காட்டியவர். ஆண், பெண் விருத்தசேதனம்-நுனித்தோல் அகற்றுதல்-பற்றி கண்டித்து எழுதியவர். இவருக்கும் ஆறு வயதில் அதைப் பெற்றோர் செய்வித்தனர். மூன்று முறை திருமணம் முடித்து விவாகரத்துப் பண்ணியவர். அவரை அரபு நாட்டின் 'சிமோன் த போவார்' என்றும் 'எகிப்தின் மிகவும் தீவிரமான பெண்' என்றும் அழைப்பார்கள். அவர் 1972இல் எழுதிய 'பெண்களும் பாலியலும்' என்ற நூல், இரண்டாம் அலை பெண்ணியத்திற்கான அடிப்படை நூலாகக் கணிக்கப்படுகிறது. பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்துவது, பெண் உடலில் மேற்கொள்ளும் ஆதிக்கம், விருத்தசேதனம் ஆகியவை பற்றி இதில் எழுதியுள்ளார். அதனாலும் அவருடைய அரசியல் செயற்பாடுகளாலும் தன் அரச பதவியிலிருந்தும், சஞ்சிகையின் முதன்மை ஆசிரியர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார். 1981இல் எதிர்த்துநிற்றல் என்ற பெண்ணிய சஞ்சிகை ஒன்றை உருவாக்கினார். அதனாலும் அவரின் அரசியல் எதிர்க் கருத்துகளாலும் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தால் சிறைப்படுத்தப்பட்டார். சிறையில் இருக்கும்போது அரபுப் பெண்கள் ஒற்றுமை சங்கத்தை உருவாக்கி, அதன் நிறுவனரும் தலைவரும் ஆகினார். சிறையில் பேனையும் தாளும் மறுக்கப்பட்டது. இருந்தும் ரொய்லற் பேப்பரில் கண்மை பென்சிலால் எழுதி அவற்றை வெளியே அனுப்பி பிரசுரித்தார். அத்துடன், அரபு மனித உரிமைச் சங்கத்தின் இணை நிறுவினரும் ஆனார். 1993இல் இஸ்லாமிய தீவிரவாதிகளாலும் அரசியல் துன்புறுத்தல்களாலும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி எகிப்தை விட்டு அமெரிக்கா சென்றார். அங்கே பல பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின் 1996இல் எகிப்து திரும்பினார். 2011 ராகிர் சதுக்கத்தில் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டார். நாற்பது புனைவு நூல்களுக்கு மேல் எழுதிய இவர் பல பரிசுகளும் விருதுகளும் பெற்றிருக்கிறார். கடந்த மார்ச் 21 அன்று காலமானார்.

வெறுப்பை எனக்குள்ளேயே நான் மிகவும் இரகசியமாக வைத்திருப்பேன். என் கோபத்தை எனக்குக் கீழே என் அலுவலகத்தில் வேலை செய்யும் கீழ் மட்டத்தினரிடம், அல்லது வீட்டில் என் மனைவியிடன் தான் காட்டுவேன், என் அப்பா அடிக்கடி உனக்குச் செய்தது போல. என் வேலையில் மேலதிகாரிகளிடம் என் கோபத்தை நான் காட்டுவதில்லை. அவன் நாட்டின் தலைவனாக இல்லாமல் சாதாரணமான அதிகாரியாக இருந்தாலும். நான் என் நாற்காலியில் இருக்கும்போது என் உடலும் மனமும் விழிப்புடன் இருக்க, என் புலன்கள் கவனத்துடன் இருக்கும். அவர் ஏதாவது கேள்வி கேட்க அதற்கு என்னிடம் பதில் இல்லாமல் இருந்து விடுமோ என்று நான் எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பேன். எனக்குப் பதில் தெரிந்திருந்தாலும் கூட நான் கவலைப்பட்டுக் கொண்டு தான் இருப்பேன். சரியான பதிலாக இருந்தாலும் தேவையான பதில் இல்லாமல் இருக்கலாம் என்று பயந்து கொண்டே இருப்பேன்.

சரியான பதில் தேவையான பதிலாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதுதான் எமது அரசியலின் முதல் பாடம். ஆனால் தேவையான பதில் எப்பொழுதும் சரியான பதிலாக இருக்கும். பிழையான தகவல்களிலிருந்து சரியான பதிலை எடுப்பதற்காக என்னைப் போன்ற ஓர் அமைச்சர் உடலாலும் மனதாலும் விழிப்புடன் இருக்க வேண்டும். இது மிகவும் கஷ்டமானது. நான் ஒரு கூட்டத்தில் இருப்பேன். எனது இடது கை என் தொடையில் அசைவற்றுக் கிடக்கும். என் வலது கை எழுதும் தாளுக்கு மேல் பேனையைப் பிடித்துக் கொண்டிருக்கும். அவரின் எல்லாவித உடலசைவைப் பார்ப்பதற்காக நான் தயாராக இருக்க வேண்டும். பார்க்கக் கூடிய வகையில் அவர் தலையை ஆட்டுவதையோ அவர் கைகளின் இரகசியமான அசைவையோ விரல்களின் அசைவையோ கீழ் உதட்டை சுருட்டுவதையோ நீட்டுவதையோ வாயை, மூக்கை, கண்களைச் சுற்றியுள்ள தசைகளைச் சுண்டி இழுப்பதையோ பார்ப்பதற்கு நான் தயராக இருக்க வேண்டும். அப்படியான எந்த உடலசைவுகளையும் என் மனம் வேகமாகக் கண்டறிந்து விடும். நான் சிறப்பாக இயங்கும் நாட்களில் என் கண்கள் வேகமாக இயங்கும், என் செவிகள் அதிலும் பார்க்க இன்னும் வேகமாக இயங்கும். ஏனென்றால் அவரின் குரல் ஒரு சொல்லை ஒலிப்பதற்கு முன்பே அவை அவரின் குரலைக் கேட்டு விடும்.

நான் என் நாற்காலியில் இருந்து கொண்டிருக்கும்போதே என் உடலும் மனமும் ஆன்மாவும் உணர்திறன் உள்ள நரம்புகளின் பெருந்திரளாகி விடும். ஒன்றை ஒன்று சுற்றிக் கொண்டிருக்கும் றேடார் கம்பிகளாகி விடும். என் தலை, கைகள், நெஞ்சம், வயிறு முதலானவை தொடர்ச்சியான மின்னோட்டத்தால் இயக்கப்பட்டு நடுங்குவதைப் போல இருக்கும். அவருக்குப் பக்கத்தில் நான் எப்போதாவது நிற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கும்போது இடது கையால் இறுக்கிப் பிடித்திருந்தாலும் வலது முன்கை நடுங்கும். அதனால் என் முன்னங் கைகளை மார்பில் அல்லது வயிற்றில் குறுக்காகக் கட்டிக் கொண்டிருப்பேன். நிற்கும்போதோ இருக்கும்போதோ தைரியமில்லாத கன்னிப் பெண்ணைப் போல என் கால்களை இறுக்கமாக வைத்திருப்பேன்.

அவருக்குப் பக்கத்தில் நான் நிற்கும் என்னுடைய புகைப்படம் ஒன்று இருக்கிறது. அதன் விளக்கு வட்டம் எங்களில் விழுந்த போது நான் என்னுடைய தோரணையை மாற்ற முயன்றேன். என்னுடைய வலது கையை இடது கையிலிருந்து விடுவிக்கவும் ஒரு காலை மறு காலிலிருந்து எடுக்கவும் முயன்றேன். ஆனால் என் கைகால் உறுப்புக்கள் முடக்குவாதத்தால் விறைத்துப் போய் விட்டன. இந்த புகைப்படம் பிரசுரமானபோது மிகவும் சங்கடப்பட்டேன். அதனால் அந்தப் பத்திரிகையை என் குடும்பத்தாரிடமிருந்து அதை ஒளித்து வைத்து விட்டேன். விசேஷமாக என்னுடைய மகளிடமிருந்து. உயர்பதவியிலுள்ள அரச அதிகாரிகள் நடுவே என் முகத்தைச் விரலால் சுட்டிக் காட்டி தன் தாய்க்கு அவள் இப்படிச் சொன்னாள்: 'அம்மா, இது என் அப்பா இல்லை.'

பெரிய மனிதர் ஒருவரின் மனைவியின் பெருமிதத்துடன் என் மனைவி அதற்குப் பதிலளித்தார்: 'இது உன் அப்பா தான், அன்பே. மேன்மைதங்கிய அமைச்சர், அவர் ஜனாதிபதிக்குப் பக்கத்தில் முன்வரிசையில் நிற்கிறார்.'

என் மகளுக்கு முன்னிலையில் நான் அவமானப்பட்டது போல நான் எக்காலத்திலுமே என்னைப் பொறுத்தளவில் அவமானப்பட்டது கிடையாது. அவளுடைய குழந்தைத்தனமான கண்கள் விரிந்து என்னை யாரென அம்பலப்படுத்தி என் இரகசியத்தை வெளிப்படுத்தின. குழந்தைகள் அமானுஷ்ய சக்திகளுடன் நெருங்கிய தொடர்புள்ளவை என்பதை அவை உறுதிப்படுத்தின. என் மகளின் கண் பார்வையிலிருந்தை அந்தச் சக்தியைக் கண்டு நான் பயந்தேன். நிலையான, மாறாத அந்தப் பார்வை, சாதாரணமான குழந்தைகள் தங்கள் தந்தைமாரில் காட்டும் பார்வையிலும் பார்க்க மிகவும் வித்தியாசமானது. நேர்மையற்றவனாகவோ இழிவானவனாகவோ ஒரு தந்தை இருந்தபோதிலும் அவன் தந்தை தான்.

என்னுடைய அப்பா ஒரு காமுகர், குடிகாரர், சூதாடி. ஆனால் அவர் உன்னுடைய கண்களில் ஒரு கடவுள். அப்படி இல்லையா? நீ உன்னுடைய மகனை ஒரு சிங்கக் குட்டி என்று நினைத்தாய். அவன் சிங்கமாக வளர்ந்து அவனுடைய அப்பாவைப் போல வருவான் என்று நீ நினைக்கவில்லையா? அம்மா, நானும் சிங்கமாகத் தான் வந்தேன். வீட்டிலும் வேலையிலும் நான் ஒரு கொடுங்கோலன். என் கீழ் வேலை செய்பவர்கள் கீழ்ப்பணிந்தவர்களாகவும் அடக்கமானவர்களாகவும் ஆக ஆக அவர்களை நான் மேலும் மேலும் அந்தக் கொடும்கோன்மையை விரும்பினேன், என்னையும் பாராட்டினேன். என் வாழ்க்கை முழுவதும் ஒரு பெண்ணோ ஆணோ என்னை ஒரு காலமும் எதிர்த்தது கிடையாது.

ஒரு இளம் பெண்ணைத் தவிர. புரட்சி ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்திற்கோ இரண்டு மாதத்திற்கோ முன்பு அவள் என்னுடைய

அலுவலகத்திற்கு வந்தாள்.

என் சமநிலையை அவள் முற்றாக நிலைகுலைய வைத்து விட்டாள். அவள் என்னுடன் முரண்பட்டதற்காகவோ வேலையில்லாத ஓர் இருபது வயது இளம் பெண் ஒருத்தி மேன்மை தங்கிய அமைச்சருடன் தன் கருத்தைக் துணிந்து வெளிப்படுத்தியதற்காகவோ அல்ல. ஒரு ஆணுடன் ஒரு பெண் துணிந்து பேசியதற்காகவும் அல்ல. அல்லது அவள் என்னுடைய பதவிப் பெயரை சரியாகச் சொல்லாமல் அலட்சியப்படுத்தி விட்டாள் என்பதற்காகவும் அல்ல. அவள் என் கண்களை நேராகவும் நிலையாகவும் பயமில்லாமலும் பார்த்தாள். அதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டு விட்டேன். பண்புள்ள ஒரு ஆண் நேராக ஒருத்தனை நேராக கூர்ந்து பார்க்கத் துணிய மாட்டான், அது ஆணாகவும் இருக்கலாம் பெண்ணாகவும் இருக்கலாம்.

நான் உண்மையாகவே குழம்பியும் சீற்றமும் கொண்டு விட்டேன். அவளிலும் பார்க்க என்னில். கோபம் என்னை ஆட்கொண்டு விட்டது. அதனால் அடுத்த நாள் வரச்சொல்லி ஓர் அழைப்பாணை விடுத்தேன். அவள் வந்தபோது அவளை என் முன்னால் நிற்க வைத்து, நான் என் நாற்காலியில் சாய்ந்து தொலைபேசியில் சிரித்துப் பேசி கொண்டிருந்தேன்.

அவள் எதற்கும் தகுதியற்றவள் என்பதை அவளை உணர வைக்க அப்படிச் செய்தேன். நான் தொலைபேசியில் பகிடி விட்டு சிரித்து பேசிக் கொண்டிருந்தேன். ஆனால் அவள் எரிச்சல் அடையவில்லை. நான் அங்கில்லாதது போல, தனது சொந்த வீட்டில் எளிதாக இருப்பது போல, அலுவலுகத்துள் சும்மா நடந்து கொண்டிருந்தாள். சுவற்றில் இருந்த ஓவியங்களைப் பார்த்தாள். ஓவியம் ஒன்றின் முன்னால் நின்று 'கசகசா பூ?' என்றாள், எள்ளலாக.

அவள் என்னைப் பார்ப்பதற்கு திரும்புவதற்கு முன்பு, அவளுடைய கூரான பார்வை என் மண்டையைத் துளைத்துப் பார்ப்பதற்கு முன்பு, அவளுடைய அங்க இலட்சணங்களை உற்று நோக்க முயன்றேன். அது நான் அங்கே முற்று முழுதாக நிர்வாணமாக உட்கார்ந்து இருப்பது போல இருந்தது. என்னுடைய படத்தைப் பார்த்து என் மகளின் எதிர்வினையையும் அவளின் உணர்ச்சி வெளிப்பாடுகளையும் நினைத்து என்னுடைய கோபந்தான் கூடியது. நான் என் கனவானுடைய நடத்தை முறைகளை மறந்தேன். என் கையை ஆட்டி சத்தமாக, 'யார் நீ? நீ என்னவாக இருந்தாலும், நீ ஒரு பெண்ணுக்கு மேல் ஒன்றுமே இல்லை. உன்னுடைய இடம் கட்டில்தான். ஒரு ஆணுக்குக் கீழே.' என்றேன்.

சாதாரணமான ஒரு பெண் என்றால் அந்த வார்த்தைகளைக் கேட்டு வெட்கத்தால் செத்திருப்பாள். ஆனால் அவள் முகம் சிவக்கவோ இமைகள் படபடக்கவோ இல்லை.

என் உண்மையான சோகம் அரசில் நான் இழந்த இருக்கை அல்ல. அதை எப்படி இழந்தேன் என்பதுதான்.

அந்த பயங்கரமான காலையில் நான் செய்தித்தாளைத் திறந்தேன். புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சரவையில் நான் என் பெயரைக் காணவில்லை. நான் சடுதியாக நிராகரிக்கப்பட்டு விட்டேன். பதிவேடுகளில் இருந்து அழிக்கப்பட்டது போல, எனக்கொரு பெயரே இருக்கவில்லை போல. பகல் இரவெல்லாம் ஓயாமல் ஒலித்த தொலைபேசி சடுதியாக ஊமையாகி விட்டது. எல்லாராலும் நான் கைவிடப்பட்டு விட்டேன்.

ஓயாமல் அடித்துக் கொண்டிருந்த தொலைபேசி ஒரு காலத்தில் பெரும் தொல்லையாக இருந்தது, உண்மையில் அது என்னைத் தொந்தரவு செய்யவில்லை என்பதை இப்போது உணர்ந்தேன். நான் அதற்கு அடிமையாகி விட்டேன், மதுவுக்கும் பெண்களுக்கும், அதிகாரத்துக்கும், செல்வத்துக்கும் அடிமையானது போல. அவை அனைத்தும் ஆண்களுக்குக் கடவுள் தந்த இன்பங்கள் அல்லவா? நான் கடவுள் தந்த இன்பங்களை எல்லாம் இடைவிடாமல் நாடினேன். அப்படியிருந்தும் அவை போதவில்லை, எனக்கு நாற்பது மாளிகைகளும் நாற்பது பெண்களும் இருந்த போதும்.

ஓம், அம்மா, நான் கடவுளின் கொடைகளை அற்ப காரணத்துக்காக விரயமாக்கினேன். அந்த மோசமான துர்திர்ஷ்டமான நாளில் நான் அமைச்சர் கூட்டத்தில் இருந்தேன். அந்தக் கூட்டத்துக்குப் பெரியவர் தலைமை தாங்கினார். அவர் இருந்த நாற்காலியில் நான் தான் இருப்பதாக உண்மையில் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அதில் இருப்பது நான் இல்லை என்பதும் அதேயளவு எனக்கு நிச்சயம் தெரிந்திருந்தது. என் கவனத்தை அதில் செலுத்த இயலாதிருந்தது. உண்மை வேறாக இருக்கும்போது எப்பொழுதும் இருக்கிற இடத்தில் நான் எப்படி இருந்து கொண்டிருக்க முடியும் என்பதை நான் அறிய விரும்பினேன். அதில் இருப்பது நானா அல்லது வேறொருவரா என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதில் இருக்கும் இருவரில் எவர் உண்மையில் நான் யார்? அந்தக் குழப்பத்திற்கு காரணம் உண்மையில் அந்த இளம் புரட்சிப் பெண் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அவளின் மேல் எப்பொழுது நான் கண் வைத்தேனோ அப்பொழுதிருந்தே அவளை நினைக்காமல் நான் இருந்ததில்லை. அப்படி அவள் அழகானவள் கூட இல்லை. இருந்தும் அவள் அசாதாரணமானவற்றை எல்லாம் செய்திருக்கிறாள். நாங்கள் எங்கள் வாழ்க்கையில் இதுவரை நிலைநிறுத்தி வந்த எல்லா நம்பிக்கைகளையும் அவள் தகர்த்திருக்கிறாள்.

மாண்புமிகுந்தவரின் சமிக்ஞைக்காக அல்லது வார்த்தைக்காக தயாராக என் வலது கை கடமை தவறாது பேனையை தாளின் மேல் வைத்திருந்தது. ஆனால் மாண்புமிகுந்தவர் என் இடது கையின் அசைவைக் கவனித்து விட்டார். அவரின் கண்கள் என்னைப் பார்த்துத் திரும்பின. அவர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். எனக்கு சரியான விடையும் தேவையான விடையும் தெரியும். ஆனால் நான் இரண்டையுமே சொல்வதற்கு மிகவும் பயந்து விட்டேன்.

உண்மையில் யார் விடை சொன்னது என்று எனக்குத் தெரியாது. பெரியவரின் கண்கள் என்னைப் பார்த்துத் திரும்பியபோது நான் மிகவும் நடுங்கி விட்டேன். அது காய்ச்சலா அல்லது அந்த புரட்சிப் பெண்ணின் மேலிருந்த பிடிப்பா என்று எனக்குத் தெரியவில்லை. என் கவனம் முற்றாக திரும்பி விட்டது. நான் ஏறக்குறைய சிலை போல இருந்தேன். முற்றாக அசைவின்றி. அவருடைய கண்கள் மரணத்தைப் போல கனமாக என்னில் விழுந்தன. அவர் என்னை இரண்டாவது கேள்வி கேட்டபோது மறுமொழி எளிதானதும் அத்தோடு அது வெளிப்படையானது.

அம்மா, சரியான பதில் அல்ல தேவையான பதில். அதை எப்படி நான் மறந்தேன்? எப்படி அது என் மரணத்துக்கு என்னைக் கொண்டு சென்றது? அம்மா, நான் துக்கப்படவில்லை. நித்திய அமைதியிலும் விடுதலையிலும் மகிழ்ச்சியடைகிறேன். என் நெஞ்சில் நிறைந்த பாரத்தை இறக்கி விட்டதில் நான் நிம்மதி அடைகிறேன். இந்த உலகத்தை விட்டுச் செல்வதில், நிரந்தரமாக விடை பெறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இந்த உலகத்தை விட்டுச்செல்வதில் நான் அடையும் அமைதியான உணர்ச்சியை நான் பெற்றபோதிலும் பேரழிவு என்னவென்றால் என் தொலைபேசியை எனக்கருகில் வைத்திருக்கிறேன், அது ஒலிக்கும்போது எடுப்பதற்காகக் காத்துக் கொண்டு. நான் இறப்பதற்கு முன்னர் ஒருவனாவது என்னை அழைத்து,
'மாண்புமிக்க அமைச்சரே' என்று
சொல்வதற்காகக் காத்திருக்கிறேன்.



mahalingam.k@thaiveedu.com

**தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.**
**விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான**
**பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 1416-849-0594 Tel: 1416-657-6406***


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474



# வரலாற்றைப் புதைக்கும் வரலாறு

**- நெடுந்தீவு மகேஷ்**

அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பாடசாலையின் பவள விழா மலர் வெளிவந்திருந்தது.

அதன் ஒரு பிரதி அழகான உறையில் இடப்பட்டு ஓய்வுநிலை அதிபர் சங்கரப்பிள்ளையின் கையில் கிடைத்தது.

ஆரோக்கியமான ஒரு தருணத்தில் அந்தப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி இன்று ஓய்வுபெற்றிருப்பவர் சங்கரப்பிள்ளை மாஸ்ரர்! அவரின் மனத்திலே பெருமகிழ்ச்சியின் கோலங்கள்.

அவர் அதிபராகக் கடமையாற்றிய அன்றைய நாள்களில் அவரின் முகாமைத்துவத்தைச் சிறப்பிக்கும் வகையில் அவருடன் கற்பித்த ஆசிரியர்கள் பலரின் முகங்கள் நினைவுக்கு வந்தன. அவை அவருக்கு மகிழ்வைத் தந்தன.

அவரின் தொழில் மகத்துவத்தால் ஈர்க்கப்பட்ட கற்றல் கற்பித்தலால் அவரின் நினைவை நிறைத்த அன்றைய மாணவர்கள் பலரின் மலர்ந்த புன்னகைகள் அவரது மனவெளியை நிரப்பின.

இந்த வயோதிபத்திலும் இன்றைய ஓய்வின் அமைதியிலும் அந்தப் பாடசாலை விழாமலரைத் தனது கைகளிலேந்தியதும் ஓர் உற்சாகம்,

அவரின் உள்ளம் குதூகலிக்க உடலெங்கும் புல்லரிக்க உற்சாகமான ஆரோக்கியம் அவரில் தொற்றிக் கொண்டது.

மிகுந்த ஆசையோடும் ஆவலோடும் மலரின் அட்டையைக் கடந்து பவளவிழா மலரின் பக்கங்களைப் புரட்டினார்.

அவர் இந்தப் பாடசாலையின் அதிபராகி ஐந்து வருடங்களுக்கும் மேலாகப் பணி தொடர்ந்த நாள்களில் இங்கு கற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் கற்பித்த ஆசிரியர்களின் உற்சாகமான கடமை உணர்வுக்கும் தாமும் காரணராய்த் திகழ்ந்ததை எண்ணி உள்ளம் பூரித்தார்

பவளவிழா மலரின் உள்ளே ஜொலித்த இந்தநாள் பாடசாலை அதிபரின் வண்ணப்படம் அவரை மகிழ்வித்தது.

பக்கங்களைப் புரட்டினார். ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு பாடசாலையின் நீண்ட பெரும் பயணத்தில், பௌதிக வளத்தாலும் கல்விச் சாதனைகள் பலவற்றாலும் மறுமலர்ச்சி கண்ட காட்சிகள் தெரிந்தன.

ஏனோ முழுமையாகப் பதிவாகியிருந்தார்.

அதிபர் சங்கரப்பிள்ளையின் முயற்சியால் அன்று முகிழ்த்துப் பலம்பெற்ற கட்டடங்கள் அனைத்தும் இன்று புதிதாக வண்ணப் பூச்சடித்தலால் பொலிவு காட்டி நின்றன.

பவளவிழாக் காணும் பள்ளியின் பௌதிக வளப் பெருமை முழுவதையும் இன்றைய அதிபர் தாமே தமக்காக்கிக் கொண்டார்.

அன்றைய அதிபர் சங்கரப்பிள்ளை பவளவிழா மலரின் பதிவுகளில் ஏனோ காணாமற் போயிருந்தார்.

இன்றைய அதிபரின் கல்விப் பெருமைகளையே புகழ்பாடிப் புனையப்பட்ட இந்தப் பவளவிழாமலர் ஓய்வுநிலை அதிபர் சங்கரப்பிள்ளையின் உள்ளத்தை உறுத்தியது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் என்னதான் மறுமலர்ச்சி தோன்றினாலும் அதன் தோற்றத்திற்கும் அங்கே தொடரும் படிப்படியான வளர்ச்சிக்கும் காரணரானோர் பலரும் இன்று பவளவிழாக் காணும் பாடசாலை நிர்வாகத்தின் பார்வைகளில் தொலைந்து போய்விடுகிறார்கள்.

இன்று, புதிய அதிபர்களின் புகழ்பாடும் பதிவுகளால் ஏனோ வரலாறு புதையுண்டு போகிறது.

ஒரு பள்ளி வரலாற்றின் பெரும் பகுதி மறைக்கப்படுகிறது.

இன்றைய சூழலில் தம்மைப் புகழுவோரும் தமது பெருமை உரைப்போரும் தாமே அனைத்தையும் வென்றெடுத்தோம், எனச் சொல்லி வரலாற்றில் முந்தி விடுகிறார்கள்.

இவ்வகைத் துயர வரலாறுகள் பதிவாகி விடுவதை ஏனோ தடுக்க இயலாமலேயே போய்விடுகிறது.

ஓய்வுநிலை அதிபர் சங்கரப்பிள்ளை அந்த மலரில் தனது பதவிக் காலம் பற்றிய குறிப்புகள் ஏதாவது எங்காவது உள்ளதா? எனத் தேடினார், காணவில்லை!

உள்ளத்தில் இரத்தம் கசியும் வகையில் ஓர் ஆழமான கீறல்.

இவருக்கு முன்னிருந்த அதிபர் குமாரவேலு, இவருக்குப் பின்னரிருந்த அதிபர் கணேசதாசன் அவர்களின் பெயர்களும் அங்கே காணப்படாதபோது தனது பெயர் பாடசாலை வரலாற்றிலிருந்து தொலைந்து போனதில் அவர் ஆச்சரியப்படவில்லை.

பவளவிழா என்றதுமே, அந்தப் பாடசாலை வரலாற்றில் கடந்து போன எழுபத்தைந்து வருடங்களில் எத்தனை மாணவர்களை எத்துணை ஆசிரியர்களை எத்தனை ஏற்றமிகு அதிபர்களைப் பாடசாலைச் சமூகம் சந்தித்திருக்கும், அவர்களைப் பாராட்டி மகிழப் பாடசாலைப் பழைய மாணவர் சமூகமும் அந்தக் கிராமமும் உரிமையோடும் பூரிப்போடும் முந்தியிருக்கும்.

அத்தனை ஆளுமைகளின் செயற்றிறனும் அதனால் பிரகாசித்த பள்ளி மாணவர்களின் கல்விப் பெறுபேற்றுச் சீர்சிறப்புகளும் இன்றைய பள்ளியின் மறுமலர்ச்சிக்கான பசளைகளல்லவா?!

அவைதாமே பள்ளிப் பவளமலர் பூக்கச் செழித்த செடியின் வேர்களும் விழுதுகளுமாக விளைந்தவையல்லவா?

இந்த மலரின் மலர்ச்சியின் அழகில் வாசத்தில் அதில் எழுதப்பட்ட வாசகத்தில் அவை எதனையும் காணாமை அதிபரின் மனத்தை உறுத்தியது.

இந்தப் பவளவிழா மலர், இன்றிருக்கும் அதிபரின் விருப்புக்கும் அவர் சார்ந்தோர் புகழ்பாடும் பொய்மைக்கும் சாட்சி பகரும் கடதாசி மலராகவே அமைந்திருந்தது.

இன்றிருப்பவரின் காலத்திலேதான் முழுமையான பாடசாலையாக இது உருவாகியது போன்றதோர் மாயையை இந்த மலர் ஏற்படுத்தத் துடிப்பதாகவே தோன்றியது.

பாடசாலை சோலையானது. படிப்படியாக!

பாடசாலையை வளர்த்தெடுக்கப் பாடுபட்ட அதிபர் ஆசிரியர்களின் நேர்மையான முயற்சியாலேயே அன்றிருந்து இன்றுவரை மாணவர்களும் ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தலில் மேம்பட்டு நிற்கிறார்கள்.

நவீன கலை கலாசார விளையாட்டு நிகழ்வுகள் இன்றைய அதிபரால் மாத்திரமல்ல, கடந்த வருடங்களில் தொடர்ந்து கடமை புரிந்த அனைத்துப் பள்ளிச் சேவையாளர்களின் முயற்சியாலுமே மேம்பட்டுச் சிறப்புற்றன.

பவளவிழாமலர் பாடசாலைக் கல்வி மேன்மைக்குக் காரணரான பலரையும் புறந்தள்ளி தமக்குத் தாமே புகழ்மாலை சூடும் அதிபரை முன்னிறுத்துவதாகவே முகிழ்த்திருந்தது.

அதற்கு ஏற்றவாறே பதிவிடப்பட்டிருந்த புகைப்படங்கள், வாழ்த்துகள், பாராட்டுகள், கட்டுரைகள், கவிதைகள்! இந்தப் பள்ளியின் பவளவிழா மலரை நிறைத்திருந்தன.

அதிபர் சங்கரப்பிள்ளையை இந்தப் பவளவிழா மலர்ப் பதிவுகள் நிறையவே உறுத்தின. வேதனை அவரின் கண்களில் நீரை வரவழைத்தது.

ஒரு பள்ளியின் வரலாறு எவ்வாறு மழுங்கடிக்கப்படுகின்றது.

சங்கரப்பிள்ளை அவர்களின் மனக்கண் அவரது அன்றையநாள், பள்ளிச் சேவையை நினைந்து மகிழ்ந்து ஒரு சிறுபொழுது மலர்ந்தது.

அவர் பாடசாலையைச் சூழ நாட்டிய அந்த இலுப்பை மரங்களும் மா மரங்களும் மகோக்கனி மரங்களும் பாடசாலையைச் சோலையாக்கி நிழலும் பயனும் தந்து கொண்டிருந்தன.

அவரின் முயற்சியால் விளைந்த சிறுவர் விளையாட்டிடத்தில் பிள்ளைகள் துள்ளிப் பாய்ந்து ஓடி விளையாடிக் கொண்டிருந்தனர்.

பாடசாலை வளர்ச்சியில் தொடர்ந்து பணியாற்றிய அதிபர் ஒவ்வொருவரும் அக்கறையோடு பங்கு கொண்டிருந்தமையாலேயே மாணவர் கல்வியில் அவர் பதித்திருந்த உறுதியான அத்திபாரம் நிலைத்திருந்தது. அதுவே இன்று பாடசாலைக் கல்வி மறுமலர்ச்சிக்கு வழிவகுத்திருந்தது.

இன்று அழகிய விஞ்ஞானகூடமும் உயர்ந்த வகுப்பறைக் கட்டடங்களும் மைதானமும் தோன்றக் காரணமாயின.

அவருக்கு முன்னிருந்த ஒவ்வோர் அதிபரும் பாடசாலை வளர்ச்சியில் பங்காற்றி இட்ட படிக்கற்கள் மீதிலும் அவரது பார்வைகள் தொட்டுப் படர்ந்தன. அவை யாவும் பள்ளியின் உயர்வுக்கான பதிவுகளைப் பேணியே ஒளிர்ந்தன.

பாடசாலையின் ஆரம்பகாலக் கட்டடமும் அதில் பதித்திருந்த கல்லில் பொறித்திருந்த நாட்டின் அன்றைய நாள் கல்வி அமைச்சரின் பெயரும் இன்று எங்கோ புரட்டிப் போடப்பட்டுவிட்டது.

இன்றைய நாட்டின் புதிய தலைவரின் பெயர் பொறித்த வண்ணக் கல் அங்கே பார்வைக்கு மின்னியது.

மொத்தத்தில் பவளவிழா மலர் இன்றைய நாள் அதிபரின் கல்வெட்டோ எனவும் ஒரு பொழுது ஐயுற்றார்

ஒரு பள்ளியின் வரலாறு படிப்படியாக மறைக்கப்பட்டும் மழுங்கடிக்கப்பட்டும் வருவதாக எண்ணியே சங்கரப்பிள்ளை அதிபர் வேதனைப்பட்டார்.

ஒரு நாடு தனது வரலாறுகளைப் பொய்ப்பித்தும் தாம் ஆளும் காலத்தில் புளுகுரைத்தும் பொய்யுரைத்தும் வடிவமைக்கும் ஆட்சியின் தோற்றமாக இந்தப் பவளவிழா மலரும் சங்கரப்பிள்ளை அதிபரைச் சோதனைக்கு உள்ளாக்கியது.

நாட்டின் உண்மையான வரலாற்றைத் தொலைத்துவிட்டு புதிய ஆய்வுகளைத் தொடக்கிப் பொருந்தாத இடமெல்லாம் புதைபொருளை அகழ்ந்தெடுக்க முயற்சிக்கும் செயலாகவே இவை தோன்றின.

இவ்வாறே போனால் போத்துக்கீசர் கட்டிய கோட்டையையும் எம் ஆட்சியாளர் தாமே கல் பதித்துத் தமது கட்டடமாக மாற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எல்லாம் அதிசயமே.

இந்தப் பாடசாலையின் சத்தியம் தோய்ந்த வரலாற்றுப் பதிவுகளை மறைத்துவிட்டு அவற்றை இன்றிருப்போர் தமது பெருமைக்காகவும் புகழுக்காகவும் பொய்யை அவற்றுள்ளே புதைத்து அவற்றையே அகழ்ந்தெடுக்கத் துடிக்கும் நிலை கண்டு சங்கரப்பிள்ளை அதிபர் அங்கலாய்த்தார்.

வரலாறு கற்பிக்கும் பொய்மைக்குள் வரலாறு புதையுண்டு போகுமெனில் அந்த வரலாற்றுக் கல்வியைக் கற்பதால் எமது எதிர்காலம் வளம் பெருக்கும் வரலாற்றைத் தோற்றுவிக்கும் உன்னத வரலாறாகாது என்பதே சத்தியம்.

அதிபர் சங்கரப்பிள்ளை பவளவிழா மலரைப் பக்கத்தில் இருந்த மேசையில் வீசிவிட்டு, அமைதியானார்.

உணர்வுகள் துடித்தன. உள்ளம் அழுதது.



mahesu@thaiveedu.com

# வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்

## Vasantham Tamil Wellness Centre

சமூக உளவளம் பேணும் தொடர் – 16

Join our ZOOM series every 1st & 3rd Monday of the month

## எதற்காக ஆண்கள் தங்கள் உயிர்களை இழக்கின்றார்கள்?

## Why are Men Losing their Lives?

**ZOOM MEETING ID: 918 584 6813 | May 03, 2021 Monday 7PM – 9PM**



இளைஞர்களும் அவச்சாவும

Young Men and Suicide

ஜூட் அத்தநாசியர் - வெள்ளம் வருமுன் அணைகட்டும் திட்டம்

Jude Athanasyar – Early Intervention Program



தமிழ் ஆண்களின் உளநல நெருக்கடிகள்

Mental Health Crisis of Tamil Men

வைத்திய கலாநிதி செந்தூரன் குணரட்ணம்

Dr. Senthuran Gunaratnam MBBS, FRCPC – Psychiatrist



மாணவர்களுடன் மோதும் கோவிட்-19

COVID-19 Attacks on Students

Mary Joe Prakash – Content Manager

Varman's Smile Foundation

VARMAN'S SMILE FOUNDATION

Join by Phone: 647-374-4685

YouTube: Vasantham Wellness

Hosted by Dr. Parvathy Kanthasamy



Contact: 416-847-4172



# பனிவிழும் பனை வனம்

**- செல்வம் அருளானந்தம்**

அந்தக் கட்டடத்தின்ர வேலையள் நடந்து கொண்டிருந்தது. கட்டடத்துக்கு முன்னால நீண்ட வரிசை. எல்லாரும் என்னை மாதிரி இளைஞர்கள்தான். காலையில நேரத்தோட போய் நானும் அந்த வரிசையிலை இணைஞ்சுகொண்டன்.

என்னைக் கூட்டிக் கொண்டு போன சந்திரன் வரிசையில் நிப்பாட்டிப்போட்டு முதலாளி வீரசிங்கத்தைப் பார்த்திட்டு வாறன் எண்டு கட்டடத்திற்குள்ளே போயிட்டார்.

நான் மன்னாருக்கு போக முதலிலேயே எனக்குச் சந்திரனைத் தெரியும். தமிழர் விடுதலைக் கூட்டணியிலை இருந்த சில இடது சாரி நண்பர்களால அறிமுகமானவர். சாதிமறுப்புச் சம்மந்தமான என்னட்ட இருந்த கருத்துகளில அவருக்கும் உடன்பாடு இருந்ததால என்னோட சிநேகிதமானவர்.

அது அவரோட பழகத் தொடங்கிய ஆரம்ப நாட்களாக இருக்க வேணும். சுட்டிபுரத்திலை சீர்காழி கோவிந்தராஜனின்ட கச்சேரிக்கு போறத்துக்கு வெளிக்கிட்டம். யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்டில பஸ் ஏறுறத்துக்கு ஒரே தள்ளுப்பாடு. பஸ்சிலை ஏறேக்கை என்னை ஒருத்தன் கழுத்திலை பிடிச்சு வெளிய தள்ளத் தொடங்க, அங்கால நிண்ட சந்திரன் அதைக் கண்டிட்டார். ஓடிவந்து தள்ளினவனின்ர முகத்திலை ஓங்கி ஒரு குத்துவிட்டு, என்ரை நண்பனை யாடா தள்ளுறாய்? எண்டு கேட்டார். தள்ளினவனும் கை ஓங்க, என்ரை குறிச்சி தெரியுமோ? என்னைப் பற்றித் தெரியுமோ? வாழ்க்கையிலை நீ யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்டுப் பக்கம் வரமாட்டாய் எண்டு சத்தம் போட, அவன் பஸ்சாலை இறங்கி நழுவிட்டான்.

சந்திரன் கிட்டவந்து, என்ரை காதுக்குள்ளை ‘அவன் என்னைப் பார்த்துப் பயந்து போகேல்லை... நான் சொன்ன என்ரை ஊருக்குப் பயந்துதான் போனவன்’ எண்டு சொல்ல, நான் ‘நீங்கள்... என்னைப் பத்தித் தெரியுமோ எண்டு சொன்னனீங்கள்... உங்களப் பத்தினதை நான் தெரிஞ்சுகொள்ளலாமோ’ எண்டு கேட்டன். ‘அது ஒரு விடுகை மச்சான்... என்னைப் பற்றி எனக்கே தெரியாது. அவனுக்காவது தெரியுமா? எண்டு பார்த்தன். உப்பிடியானவங்கள் எங்கையாலும் ஊர்களிலை சேட்டை விடலாம்... யாழ்பாண ரவுணுக்கை தொலைச்சு போடுவம்’ எண்டார். அதோட எங்கட நட்பு இறுக்கமாச்சுது.

‘நான் வெளிநாட்டுக்கு வேலைக்குப் போறதா இருக்கிறன். இதுக்கு ஆட்கள் எடுக்கிறத்துக்கு என்ர முதலாளி வீரசிங்கம்தான் ஏஜென்ட். உனக்கு வெளிநாட்டுக்குப் போற விருப்பம் இருக்கு எண்டு சொன்னனீ. பருத்தித்துறையிலதான் நேர்காணல் நடக்கும். எப்பண்டு உனக்குச் சொல்லுறன்’ எண்டு போன மாதம் என்னை யாழ்ப்பாணத்திலை கண்டு சொல்லியிருந்தார்.

அதுதான் நான் இண்டைக்கு இந்த வரிசையிலை நிக்கிறத்துக்குக் காரணம்.

நான் அறிஞ்சு எங்கட இளைஞர்கள் முன்வரிசைக்கு நிக்கிறது நினைவுக்கு வந்தது. எப்பிடியாவது படிச்சு பலகலைகழகம் போக வேணும் எண்டு ரியூசன் போனா... அங்க முன்வரிசை. மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போய்ப் பிழைக்கிறத்துக்காக ஏஜென்சிய

ளுக்கு முன்வரிசை... பிறகு போராட்டம் செய்து அடிமை விலங்க றுக்கப் போறம் எண்டு இயக்கங்களிலை இணையுறத்துக்கு முன் வரிசை...

நான் இதுக்கு முன்னால பருத்தித்துறைக்கு வந்தது கிடையாது. நாலைஞ்சு வருசங்களுக்கு முதலில வல்வெட்டிதுறைக்குப் போகேக்கை பருத்தித்துறை பஸ்ஸ்ராண்டிற்கு ஒருக்கா வந்திருக் கிறன். அந்த சம்பவம் இப்ப ஞாபகத்துக்கு வந்தது.

எங்கடை ஊருக்குக் கிட்ட இருக்கின்ற சம்பில் கடற்கரையிலை தான் புத்தசமயத்தை இலங்கைக்கு கொண்டு வந்த அசோக சக் கரவர்த்தியின்ர மகள் சங்கமித்திரை வந்திறங்கினதாக ஒரு கதை இருக்கு. அங்க வந்திறங்கி, கொண்டுவந்த ஆலமரக்கிளையோட அனுராதபுரம் போனதாகச் சிங்களவர் நம்புகினம். அந்த நம்பிக் கையின்ரை அடிப்படையில் அந்தக் கடற்கரைக்குப் பக்கத்திலை ஒரு கல் நட்டு வைச்சிருக்கினம். அந்தக் கல்லை அப்பப்ப சில இளைஞர்கள் சேதப்படுத்துவாங்கள். பிறகு அங்கை வரும் மாத கல் ஆமிக்காரர் அந்த இடத்திலை நிக்கிற ஆக்களைத் திருக்கை வாலால் அடிப்பாங்கள். இல்லாட்டில் பெடியளை இழுத்துக்கொண்டுபோய்க் காம்பிலை வைச்சுச் சித்திரவதை செய் வார்கள்.

எங்களுக்கு தெரிஞ்ச ஒருவரை ஆமிக்காறர் திருக்கை வாலால் அடிச்சுப்போட்டாங்கள். அது எங்களுக்குக் கோபத்தை ஏற்ப டுத்த, நாங்கள் சிலபேர் சேர்ந்து ஒரு திட்டத்தைப் போட்டம்.

அந்தக் கல்லை நிரந்தரமாய்ப் பிடுங்கி எடுத்துவிட்டால் பிரச் சினை இல்லை. ஆனா அது சின்ன விசயமாக இருக்கேல்லை. அதைப் வலுவாக கொங்கறீற் போட்டுக் கட்டியிருந்தாரர்கள். டைனமெட் வைச்சுத்தான் பெயர்க்க வேணும். டைனமெட்டுக்கு எங்கு போறது? அப்பிடியே எங்கைவாங்கலாம் எண்டு விசாரிச்சா லும் கதை வெளியிலை போச்சுதெண்டால் பிடிபட்டுப் போவம்.

அப்பத்தான் மணி சொன்னான்... இதை வாங்குறத்துக்கு வல்- வெட்டித்துறைதான் சரியான இடம். அவர்கள் எங்களைவிட தமிழ் பற்றுள்ளவங்கள்... பிடிபட்டாலும் காட்டிக்குடுக்க மாட்டாங்கள். குட்டிமணி, தங்கத்துரை எண்டு, அரசாங்கத்தோட மோதிற ஆக் கள் அங்க இருக்கினம். அவங்களின்ர பெயரைக் கேட்டா பொலி சுக்கே பயம். கட்டாயம் உதவி செய்வாங்கள். வல்லுவெட்டிது றைக்கு போய் விசாரிப்பம் எண்டான்.

அப்படித்தான் வல்லுவெட்டிதுறைக்குப் பருத்தித்துறையால போனம். நானும் மணியும்தான் போனநாங்கள். அங்கைபோய் வல்வெட்டித்துறை சந்தியிலை அவையள விசாரிச்சபோது அடி வேண்டாமல் தப்பினது அருந்தப்பு.

ஆமிக்காறர் அடிக்கிறாங்கள் எண்டு, அங்க சொன்னா, நீங்கள் ஆற்றா? எண்டு அடிக்க வந்தாங்கள். ஆனா முயற்சியைக் கைவிடேல்லை. வேறை இரண்டு பேர் அங்க போனாங்கள். நான் போகேல்லை. எப்பிடியோ வேறு வழியாலை தொடர்பு கொண்டு தங்கத்துரையை நெருங்கிட்டாங்கள்.

டைனமெட் வெடிபொருளைத் தாறது பெரிய பிரச்சினையில்ல... ஆனா அந்த சிறிய கல்லுக்கு வெடிவைச்சுத் தகர்த்தால், பிறகு அரசும் இராணுவமும், பெரிய விகாரையையே அங்கை கட்டிப் போடுவார்கள். அது அப்படியேயிருக்கட்டும். தமிழீழம் வந்ததும் அதைப்பற்றி யோசிப்போம் எண்டார் தங்கத்துரை.

நான் கடந்தமுறை ஊருக்குப் போனபோது பார்த்தேன்... சம்பிலில் பென்னாம்பெரிய அழகிய புத்த கோவில் கட்டப்பட்டிருந்தது. அதைச்சுற்றி பெரிய கூட்டமாய்ச் சிங்களமக்களும் நின்றார்கள். சம்பில் என்ற அந்தத் துறைமுகத்தின் பெயரையும் மாற்றிருந்தார் கள்.

மணியன்தான் என்னை கூட்டிக்கொண்டு போயிருந்தான். புத்தர் சிலையைப் பார்த்து அவன் கும்பிட, நான் கும்பிடாமல் பழைய விசயங்களை நினைச்சுக் கொண்டு, அவனைப் பார்த்து ஒரு நக் கல் சிரிப்புச் சிரிச்சன். அது அவனுக்கு விளங்க, என்னெண்டா லும் இதுவும் ஒரு கோவில்தானே எண்டு அவன் சொன்னது நினை வுக்கு வருகுது.

வரிசை நகருகிறமாதிரி தெரியேல்லை. நேரம் மதியத்துக்குக் கிட்ட வந்திட்டுது. கடற்கரைக் காற்று கொஞ்சம் இதமாய் வீச வரிசை யில நிண்ட இளைஞர்கள் பொறுமையாக நிண்டிச்சினம்.

வரும்போது 5 ஆயிரம் ரூபா காசு கொண்டு வரச்சொல்லி சந்தி ரன் சொல்லியிருந்தார். நான் சேர்து வைச்சிருந்த காசிலை 5 ஆயிரத்துடன் வந்திருந்தேன். ஏஜென்சிக்கு 10 ஆயிரம் கொடுக்க வேணும். இப்ப 5 ஆயிரமும் பிறகு ரிக்கற்றும் விசாவும் தரும் போது மிச்சம் கொடுக்க வேணும்.

வரிசையில் நிண்ட இளைஞர்களைக் கவனிச்சன். பெரும்பாலும் எல்லோரும் வறுமைப்பட்ட குடும்பத்திலை இருந்து வந்த அடை யாளமே தெரிஞ்சுது. பெருங்கனவுகளோட தங்கட காசையோ இல்லை குடும்பங்கள் வட்டிக்கு மாறிக் கொடுத்த காசையோ பொக்கற்றிலை வைச்சுக் கையால பொத்தியபடி காத்து நிண்டாங் கள்.

ரை கட்டின இரண்டு பேர் வரிசையைக் கடந்து உள்ள போச்சி னம். அப்ப இனித்தான் நேர்கால் தொடங்கப் போகுது. நான் நினைச்சமாதிரியே வரிசை மெதுவாக நகரத் தொடங்கிச்சுது. வரிசை இப்படியே நகர்ந்தால் என்ர முறை வரப் பின்னேரம் ஆகும். நான் மன்னாருக்கு வேறை போகவேணும்.

உள்ள போனவை, நேர்காணல் முடிய மகிழ்வான முகத்தோடு திரும்பி வாறதைக் கண்டன். காத்து நிண்டவர்கள் வெளிய வந்த வையிட்ட விபரங்களைக் கேட்டாங்கள். என்ன மாதிரி... உள்ளே என்ன கேட்டார்கள்? எப்ப போகலாம் எண்ட மாதிரி. நானும் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

இன்னும் இரண்டு மாதத்திற்க்குள் அனுப்புவதாகவும் இலங்கைப் பணத்திற்கு 10 ஆயிரம் கிடைக்கும் எண்டும் தங்குமிடம், சாப் பாடு இலவசம் என்றபடியால், அப்படியே அந்தக்காசு மிஞ்சினால் இரண்டு வருசத்திலை எப்படியும் இரண்டு லட்சம் சேர்க்கலாம். பிறகு இலங்கை வந்து ஏதாவது செய்து சந்தோசமாய் வாழலாம் எண்டு கணக்கு மனசிலை ஓடிச்சுது. இப்பிடித்தான் எல்லாருக்கும் ஓடியிருக்கும்.

நேர்காணல் முடிச்சவங்கள், அதை ஒரு கதையைப்போல சொல்லி, தாங்களும் சந்தோசப்பட்டு, காத்து நிண்டவங்களுக்கும் உற்சாகம் கொடுத்தார்கள்.

சந்திரன் வந்தார். திடீரென்று வரிசையில் நிண்ட என்னை வெளியே கூட்டிக்கொண்டு போனார். ‘நான் உன்னைப்பற்றி முத லாளியிட்ட சொல்லிட்டன். நீ மன்னரில் வேலை செய்வதாகவும் குட்டிமணி தங்கத்துரையைத் தெரிஞ்சவர் எண்டும் சொல்லியிருக் கிறன். நீ பின்னேரம் மன்னர் பஸ்சுக்குப் போக இருக்கிறதால கெதியாய் நேர்காணல் செய்தால் நல்லது எண்டு சொன்னபடியால் உன்னை முன்னுக்கு வந்து நிற்கும்படி சொல்லுகிறார்’ எண்டு சொல்லி என்னை முன்னுக்குக் கூட்டிக்கொண்டு போனார்.

இரண்டு பேரும் முதலாளியின்ர அறைக்குள்ள போனம்.

நேர்காணல் செய்பவர்களை சந்திக்க முதல், முதலாளியின்ரை அறைக்கு சந்திரன் என்னை அழைத்து சென்றார். வீரசிங்கம் முத லாளி என்னை மேலும் கீழும் பார்த்தார்.

நானும் அவரைப் பார்த்தன். எம்.ஜி.ஆர். படத்தில் வாற வில்லன் ராமதாஸ் போல இருந்தார். எப்படி குட்டிமணி தங்கத்துரையைத் தெரியும்? எண்டு கேட்டார். இது என்டா வில்லங்கமாய்ப் போச்சு. நான் வெளிநாட்டுக்குப் போறத்துக்குக் காசு கட்டவர, இந்த ஆள் வேறு என்னவோ கதைக்குது? சந்திரன்தான் ஏதோ புளுகியிருக் கிறார் எண்டு நினைச்சுக்கொண்டு, நான் வாழ்க்கையிலை எண் டைக்குமே கண்டிராத அந்தப் போராளிகளை நல்லாய் தெரியும் எண்டும் சங்கமித்தை நினைவுக்கல் விவாகரத்திற்க்காக வல்லு வெட்டித்துறை போய்ப் பார்த்திருக்கிறன் எண்டும் புளுகினன்.

அப்ப அவர், 'தம்பி' யைத் தெரியுமோ? எண்டார். அது ஆர் எண்டுறது விளங்காம தெரியாது எண்டு சொன்னன். 'அவன்தான் ஆள். இவங்கட வழியால வந்தவன் எண்டாலும் பெரிய கெட்டிக்காறன்' என்றார்.

'கடந்த முறை தேர்தலிலை தமிழர் விடுதலைக் கூட்டணி தனக்குத்தான் சீற் தந்திருக்க வேணும். கள்ளர் ஏமாத்திப் போட்டங்கள்' எண்டார். தான் இதைப் பத்தியும் தம்பியிட்ட கதைச்சிருக்கிறன்' எண்டு, நான் ஒரு பெரியாள் எண்ட நினைப்பிலை தன்னைப் பற்றி புளுகினார்.

எனக்குப் பெரிய சிக்கலாய்ப் போச்சுது. ஏங்கையாவது பிழைக்கப் போவம் எண்டு வந்தால், இந்தாள் லூசுக்கதைகள் கதைச்சுக் கொண்டிருக்குது எண்டு என்ர மனசு நினைச்சதை முகம் வெளியிலை காட்டியிருக்கவேணும்.

கதையை மாற்றி, மன்னாரிலை என்ன செய்யுறாய்? எண்டு கேட்டார். நான் சொன்னன்... கேட்டுவிட்டு, 'ஓம்... நீ அவங்கடை ஆட்கள்... உண்மையில் பெருமையாகத்தான் இருக்கு. படிச்சிட்டம் எண்டு அரசாங்க வேலை தேடித்திரியாமல் இப்படியான வேலை செய்யுறதுதான் வீட்டுக்கும் நாட்டுக்கு நல்லது என்று சொல்லிப் போட்டு, நான் சொன்னன் எண்டு, வரிசையில முன்னுக்குப் போய், பாஸ்போட்டையும் மற்ற விபரங்களையும் பதிஞ்சுபோட்டு பணத்தை கட்டிவிட்டுப் போ' என்றார்.

சந்திரனும் தானும் என்னோடை யாழ்பாண பஸ்சுக்கு போகப் போறன் எண்டு சொல்ல, அவருக்கு 50 ரூபா காசு கொடுத்து, அடுத்த கிழமை வந்து தன்னைச் சந்திக்கும்படி சொன்னார்.

அதுக்குப் பிறகு பருத்தித்துறைக்குப் போறது வாடிக்கையாய்ப் போச்சு. இப்ப அதைச் சிரிச்சுக்கொண்டு எழுதினாலும் அப்ப இருந்த கவலை மிகப் பெரிசாய் இருந்தது.

மன்னார் வேலையை விடுறத்துக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மத்தியகிழக்கு நாடொன்றுக்குப் போகவேணும் எண்டுற எண்ணம்தான் முக்கிய காரணமாக இருந்தது.

நான் வீரசிங்கத்தைத் தேடிப்போறபோதெல்லாம் அவர் கொழும்பிலை நிற்கிறார் எண்ட பதில்தான் கிடைக்கும். ஆனால் அவருடைய கட்டடம் வளர்ந்து, கீழுள்ள தளத்தில் கடைகளும் வாடகைக்கு வந்து விட்டிருந்தன.

என்னோடை சேர்ந்து பாஃரைனுக்குப் போறத்துக்குக் காசு கட்டியவர்களில ஒருவரைக் கூட வீரசிங்கம் இன்னும் அனுப்பவில்லை. நான் அங்க அவரைத்தேடிப் போகும்போதெல்லாம் என்னைப் போல காசு கட்டியவர்கள் அங்க காத்திருப்பதைக் கண்டிருக்கிறன்.

அப்படி ஒருநாளிலை அங்க சைக்கிளில வந்த ஒரு இளைஞன் வீரசிங்கம் முதலாளி நிக்கிறாரோ எண்டு கேட்க, அதில் நிண்ட ஒருவர், உள்ளுக்குள்ள போய்க் கேள்... நாங்கள் அவரைக் கண்டதில்லை எண்டு கடுப்பாய்ச் சொல்ல, எங்களிட்டை காசு வேண்டி கடையளோ கட்டுறியள்? எண்டு சொல்லி கையிலை மறைச்சு வைச்சிருந்த கல்லாலை எறிஞ்சு கடைக்கண்ணாடியை உடைச்சுப்போட்டு ஓடி விட்டான்.

அதுக்கு அடுத்த கிழமை போனபோது 'எல்லோருக்கும் கெதியா விசா வந்துவிடும், கொழும்புக்குப் போய் எங்கட செலவில மெடிக்கல் செய்துகொண்டு வாங்கோ எண்டு சொல்லி ஒரு டொக்ரரின்ர விலாசம் தந்தார்கள்.

பயப்பிடாதை. உன்னர காசுக்கு நான் பொறுப்பு. கொழும்புக்குப் போய் மெடிக்கலைச் செய்து கொண்டு வா. முதலாளியுடன் கதைத்து உன்னைக் கெதியாய் அனுப்பி வைக்கிறன் எண்டு சந்திரன் சொன்னார்.

நாளைய சந்தோசத்தை நினைச்சு, இருக்கிற நாட்களில கவலையளைக் கொண்டு திரியுறதுதான் வாழ்க்கை முழுவதும் நடக்குது எண்டு நினைச்சபடி, பஸ்ஸ்ராண்டை நோக்கி நடந்தன்.



selvam.a@thaiveedu.com




# காலுங்காதலும்



## - வல்லிபுரம் சுகந்தன்

இம்முறை நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலையில் நானிருந்தேன். நடக்கவே சிரமப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடுவதென்பது நினைத்தே பார்க்கமுடியாத காரியம். இந்நிலையையிட்டு என்னிலும் அதிகம் வருந்தியது ராசலட்சுமிதான். அவளுடைய இராசி தான் என்னால் இம்முறை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க முடியாமல் போய்விட்டது என்று ஞானவதி பகிடியாக ராசலெட்சுமியிடம் கூறப்போய் அது பெரிய பிரச்சினையில்போய் முடிந்தது.

ராசலட்சுமியைத் தவிர்த்து மேலும் ஐந்து ஜீவன்களும் என்னுடைய நிலையை எண்ணித் துக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவர்கள் வேறுயாரும் அல்ல. அப்புவும் அம்மாவும் என் மூன்று தங்கைகளும் தான். அம்மாவின் வேண்டுதலோ அல்லது ராசலட்சுமியின் வேண்டுதலோ அல்லது ஒட்டகப்புலத்து முறிவு நெறிவு வைத்தியரின் திறமையாலோ தெரியாது அடுத்த சில மாதங்களில் நான் பூரணமாகக் குணமடைந்தேன்.

நான் பூரண குணமடைந்த சில மாதங்களில், துலா மிதித்துக் கொண்டிருந்த அப்பு தவறி விழுந்து தன் கைகளையும் கால்களையும் உடைத்துக் கொண்டார். குடும்ப வண்டிலை இழுக்க வேண்டிய பொறுப்பு என் தோள்களில் வீழ்ந்தது. எஸ்.எஸ்.சி. சோதனை எடுப்பதற்கு மூன்று மாதங்கள் இருப்பதற்குள் என் பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாலும் அது எங்கள் காதலிற்கு வெறும் காற்புள்ளியாக மாத்திரமே அப்போது தெரிந்தது.

வீட்டில் வறுமையும் தன் தலையை விரித்துக் கொண்டு வந்து குடிகொண்டது. இம்முறை வெங்காயச் செய்கையும் பெரிதாய் வாய்க்கவில்லை. அப்பு ஓரளவிற்குத் தேறி நடக்கத் தொடங்கியிருந்தாலும் மண்வெட்டி பிடிக்குமளவிற்குத் தேறியிருக்கவில்லை. வீட்டில் எந்நேரமும் புறுபுறுத்துக் கொண்டேயிருந்தார். இடையிடையே கள்ளுத் தவறணையில் அவரைக் காணக்கிடைப்பதாய் நண்பர்கள் வந்து சொன்னார்கள். இவ்வாறே சில வருடங்கள் உருண்டோடின. வறுமையின் பிடியிலிருந்து எந்த விடியலும் தோன்றுவதாய்த் தெரியவில்லை.

என்ன வாழ்க்கையடா இது என்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில்தான்,

'நீயும் என்னோட வாவன் கிளிநொச்சிக்கு போவம். அங்க திருவையாத்துப் பக்கம் நிறையக் காணிகள் சும்மா கிடக்காம். நாங்க போய் அதுகளை வெட்டித் துப்பரவாக்கித் தோட்டம் செய்யலாம். காணியும் எங்களுக்கே வந்திரும் எண்டுறாங்கள்'

என்று, ஒன்றுவிட்ட மாமா முறையிலான அயலவர் ஒருவர் அழைக்க, நானும் அங்கு போகலாம் என முடிவெடுத்தேன். அதனை ராசலட்சுமியிடம் கூறிய போது அவள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து அடம்பிடித்தாள். அங்கு நான் சென்று விட்டால் தன்னை நான் மறந்து விடுவேன் என்று கூறி அழுதாள். நானும் எனது குடும்ப நிலையினை அவளுக்கு விளங்கும்படி எத்தனையோ தடவைகள் எடுத்துக் கூறி, நிச்சயம் நான் அவளை மறக்க மாட்டேன் என்று அம்மா மேல் சத்தியமும் செய்தேன்.

'உந்தச் சத்தியத்தையெல்லாம் நான் நம்ப மாட்டன்.'

'இதுக்கும் மேல என்னண்டடியப்பா உன்னை நான் நம்ப வைக்கிறது?'

'ம்... ம்... ம்... அபபடியெண்டா உங்கட இந்தக் காலுகள் மேல சத்தியம் செய்யுங்கோ பாப்பம். அப்ப நான் உங்கள நம்பிறன்'

எனக்குச் சிரிப்பாய் வந்தது.

'ஏனடியாத்தை! போயும் போயும் காலில போய்ச் சத்தியம் பண்ணச் சொல்லிக் கேக்கிற?'

'ஆ! ஏனெண்டா நீங்க ஓடேக்குள்ள உங்கட இந்தக் காலுகளைப் பாத்துத் தான் எனக்கு உங்களிலயே ஆசை வந்தது. உங்கட காலுகள் சரியான வடிவு தெரியுமா?'

எனக்கு நம்புவதா விடுவதா என்று தெரியவில்லை. ஆயினும் அவ

ளைச் சமாதானம் செய்வதற்காக என் கால்களின் மேல் சத்தியம் செய்தேன்.
'நான் இன்னும் ஒண்டும் என்ர மனசில நினைச்சிருக்கிறன். அதுக்கு என்ர அப்பு மட்டும் ஓமெண்டிட்டார் எண்டால் நல்லாயி ருக்கும். ஆனா அப்புவிட்ட எப்பிடிக் கதைக்கிறதெண்டுதான் தெரியேல்ல.

என்று கூறிவிட்டு ராசலெட்சுமி சென்றுவிட்டாள். இப்படி என்னதான் வில்லங்கமாக அவள் யோசிக்கிறாளோ என்ற எண்ணத்துடன் நானும் வீட்டுக்குத் திரும்பினேன்.

மறுநாள் மாலை ராசலெட்சுமியின் தாயும் தந்தையும் எம் வீட் டிற்குத் திடீரென வருகை தந்தனர். இதை எங்கள் வீட்டில் யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்களை வரவேற்கக் கூடிய நிலையில் எங்கள் வீடும் இருக்கவில்லை. வீட்டின் முற்றத்தில் கிடந்த கோழிப் பீக்களை காலால் தட்டி மணலால் மூடினேன். முற்றத்தில் சற்றுத் தள்ளிப் படுத்திருந்த மாட்டினை எழுப்பி தள் ளிப் போகச் செய்ய, அது சனியன் வாலைத் தூக்கிச் சாணியைப் போட்டது. எனக்கோ மானம் கப்பல் ஏறிக்கொண்டிருந்தது.

பின்வளவிற்குள் நின்றிருந்த அம்மாவைக் கூப்பிட்டேன். அம்மா வும் எனது காதல் பற்றி அரசல்புரசலாக அறிந்திருந்தார். இவர்க ளைக் கண்டதும் அம்மாவிற்கு காலும் ஓடவில்லை, கையும் ஓட வில்லை. அவர் போய்க், குடித்துவிட்டு வந்து படுத்துக் கிடந்த அப்புவைத் தட்டி எழுப்பினார்.

அதன் பின் நடந்தவை யாருடைய வாழ்க்கையிலுமே நடக்கக் கூடாதவை. விடுப்புப் பார்ப்பதற்காக அயலட்டங்கள் வீதியில் கூடிவிட்டிருந்தனர். அதன் பின்னர் ராசலட்சுமியின் முகத்தில் எப் படி என்னால் விழிக்க முடியும். அவளிடம் சொல்லாமலேயே நான் திருவையாறுக்குப் புறப்பட்டு விட்டேன்.

ஊரினதும் ராசலட்சுமியினதும் ஞாபகங்கள் என்னைப் பாடாய்ப் படுத்தின. ஞாபகங்களின் தொல்லையிலிருந்து என்னை விடுவிப்ப தற்காய் அதிக நேரத்தினைத் தோட்ட வேலைகளில் செலவழித் தேன். காடுகள் வெட்டித் துப்பரவாக்கி எனக்கென்றொரு குடிலும் கட்டி முழு நேரமும் தோட்ட வேலைகளில் மூழ்கியதால் எதிர் பார்த்ததை விட அமோக அறுவடை.

ஏறத்தாழ ஆறு மாதங்களின் பின்னர் ஊருக்குத் திரும்பினேன். ஊரிலிருந்து புறப்படும் முன்னர் நடந்த நிகழ்வுகளால் மனம் சஞ்சலப்பட்டாலும், அதை இப்போது அனேகமானோர் மறந்துவிட் டிருப்பார்கள் என்ற ஒரு நப்பாசை மனதினுள்.

ஆனால், நான் அறிந்த செய்தியோ என் இதயத்தைக் காரை முள்ளால் தேய்த்தது போலிருந்தது. என்ர ராசலட்சுமி என்னை விட்டிட்டு ஏன் இந்தக் கேவலமான உலகை விட்டிட்டே நிரந்தரமா கப் போய்விட்டாள். அரளி விதை அவளுக்குப் புதியதில்லைத் தான். ஆனாலும் என்ரை அல்லிராணியை அரளிராணி கொன்று விட்டாள். தான் போவதாய் இருந்தால் என்னையும் கொன்றுவிட் டுத்தான் போவேன் என்று சொல்லியிருந்தாள். அப்போது தெரிந் திருக்கவில்லை இப்படி என்னை உயிருடன் கொன்றுவிட்டுப் போவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறாள் என்று. என்னை நடைப் பிணமாக்கி விட்டு அவள் போயே போய்விட்டாள்.

என் சோகமெல்லாம் கோபமாய் மாறி என் அப்புவின் மேல் பாய்ந்தது. இதுவரை அப்புவை எதிர்த்து ஒருவார்த்தை பேசியறி யாத நான், கண்டபாட்டுக்கு அவரை ஏசத் தொடங்கினேன். அதைக்கண்டு அம்மா தான் மாரிலடித்துக் கொண்டு அழத் தொடங்கினாள். அதைத் தொடர்ந்து மூன்று தங்கைகளும் அழத் தொடங்க எனக்கு வாழ்க்கை வெறுத்துப் போனது.

அண்டைக்கு மட்டும் அப்பு குடிக்காமலிருந்திருந்தால் வந்திருந்த வர்களையோ அல்லது ராசலட்சுமியைப் பற்றியோ கேவலமாக் கதைத்திருக்க மாட்டார் என்றே இப்போதும் தோன்றுகிறது. அவர் கள் திடீரென்று வந்து திருமணம் பற்றிக் கதைத்ததும், நான் கூடத்தான் திக்குமுக்காடிப் போயிருந்தேன். என் வயதொத்த ஒரு சிலர் அப்போது திருமணம் முடித்திருந்தாலும், மூன்று தங்கை களை அடுக்கடுக்காய் வீட்டினுள் வைத்துக்கொண்டு என் திரும ணத்தைப் பற்றி எண்ணிப் பார்ப்பதென்பது அதிலும் எமது இந்த வறுமை நிலையில் இதுவெல்லாம் கொஞ்சம் கூடச் சாத்தியமே யில்லாத ஒன்று.

எனக்கு வீட்டில் யாருடனும் பேசப்பிடிக்கவில்லை. அம்மாதான் தங்கைகளைக் கரை சேர்க்க வேண்டியது என் பொறுப்பென்றும் அப்புவால் எதுவும் முடியாதென்றும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தார். ஊரிலிருக்கப் பிடிக்காததால் நான் மீண்டும் திருவையாற்றுக்கே சென்று விட்டேன். ஓரளவு நிதிநிலை தேறிய வுடன் மூத்த தங்கையின் திருமணத்தை நிறைவேற்றினேன். அது நடந்து சில வாரங்களிலேயே அப்புவும் போய்ச் சேர்ந்தார்.

இரண்டாவது தங்கையின் திருமணத்திற்காக ஊருக்கு வந்திருந்த போது ஊரில் நிலைமைகள் மாறியிருந்தன. ஊரில் பல இளை ஞர்கள் தலைமறைவாகியிருந்தார்கள். அடிக்கடி இரவுகளில் இரா ணுவத்தினர் வந்து வீடுகளில் சோதனை நடத்திக் கொண்டிருந் தார்கள். அதனால் அம்மாவும் கடைசித் தங்கையும் ஊரில் தனித் திருக்கப் பயப்பட்டனர். எனவே நானும் அவர்களுடனேயே தங்க வேண்டியதாகிப் போனது.

சில மாதங்களில் திருநெல்வேலி தபாற்கட்டைச் சந்தியடியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலை அடுத்து நாடு முழுதும் பீதியில் உறைந்து போயிருந்தது. அப்போதைய ஒரு இரவில் வீட்டிற்கு வந்த இராணுவத்தினர் என்னையும் அடித்து உதைத்துக் கைதுசெய்து தம்மோடு கொண்டு சென்றனர். சில மாதங்களில் நான் விடுவிக்கப்பட்டதும் கடைசித் தங்கையின் திருமணத்தை ஒருமாதிரி ஒப்பேற்றிவிட்டு ஊரிலிருக்கப் பிடிக்காமல் ஏஜென்சிக் காரன் ஒருவனைப் பிடித்து வெளிநாட்டிற்குக் கிளம்பினேன். முத லில் ஜேர்மனியில் தஞ்சமடைந்திருந்தேன். பின் அங்கிருந்து கப்ப லேறிக் கனடாவை வந்தடைந்தேன்.

இப்போது அம்மா எனது திருமணத்தைப் பற்றி அதிகம் வற்புறுத் தத் தொடங்கினார். ராசலட்சுமியின் இடத்தில் வேறு யாரையும் வைத்துப் பார்ப்பதற்கு என்னால் முடியாமலிருந்தது. ஆயினும் வருடங்கள் சில செல்ல இங்கே வந்த ஏனையவர்களின் நடவடிக் கைகளைக் கண்ட பின்னர் எனது மனதிலும் சலனங்கள் ஏற்படலா யின. ஆயினும் திருமண பந்தத்தில் இணைவதைத் தவிர்த்துக் கொண்டேன். உறவு கொண்ட பெண்களின்றில்லை, வேறு எந்தப் பெண்ணுடனும் என்னால் மனதால் நெருங்க முடியாதிருந்தது. இடையில் அம்மாவும் இறந்துபோக எனக்கென்ற உறவுகள் இனி யில்லை என்கின்ற எண்ணம் மனதில் ஆழமாக வேரூன்றியது.

அப்பாவின் குடிபோதையால் ராசலட்சுமியை இழந்த நான், இன்று எனது தனிமையைத் தவிர்ப்பதற்காய் குடிபோதையில் மூழ்கத் தொடங்கினேன். விளைவு தெரிந்தது தான். எனது தனிமையைக் கலைத்து சர்க்கரை வியாதியும் வந்து என்னுடன் ஒட்டிக்கொண்டது.

இன்சுலின் இன்றி வாழ்க்கை இனியில்லை என்கின்ற நிலையில் காலங்கள் உருண்டன.

திடீரென ஒருநாள் எனது வலது உள்ளங்காலில் விறைப்புத் தன்மையை உணர்ந்தேன். அதனுடன் சேர்ந்து ஒருவித இனந்தெரி யாத வலி அல்லது குறுகுறுப்பு என் உள்ளங்கால் முழுதும் பரவி யது. எனது காலைத் தரையிலேயே குத்திக் குத்திப் பார்த்தேன். அந்த உபாதை போவதாய்த் தெரியவில்லை. எமர்ஜென்சிக்கு வந்து காட்டினேன். வைத்தியசாலையில் அனுமதித்தார்கள்.

எனது உள்ளங்காலின் உள்ளே புண்ணொன்று புரையோடிப் போயிருப்பதாய்ச் சொன்னார்கள். இன்னமும் ஏதேதோவெல்லாம் சொன்னார்கள். ஈற்றில் என் காலின் முழங்காலுக்குச் சற்றுக் கீழே உள்ள பகுதியிலிருந்து வெட்டியகற்ற வேண்டுமென்றார்கள்.

அப்போதுதான் ராசலட்சுமிக்குச் செய்துகொடுத்த சத்தியம் நினைவிற்கு வந்தது.

ராசாத்தி, நீ ஆசைப்பட்ட கால்!



suganthan.v@thaiveedu.com

# கண்ணைக் கவர்ந்த கல்லறைப் புதையல்




நிமால் நாகராஜ்

கடவுள்களுக்கு நிகரான பலம் கொண்டவர்கள் என எகிப்திய மக்களால் வணங்கப்பட்ட எகிப்தின் பலம் பொருந்திய சக்கரவர்த்திகளையே கிலி கொள்ள வைத்தவர்களும் அன்றைய எகிப்தில் இருந்தார்கள். அவர்கள் போர்க்களங்களில் புஜபலம் காட்டும் பெருவீரர்கள் கிடையாது, இருட்டின் போர்வையில் புதையல் தோண்டும் கில்லாடிக் கொள் ளையர்கள்.

மன்னர்களின் கல்லறைக்குள், அவர்களது மறுவாழ்வில் பயன்ப டுத்தப்படுவதற்காக விலைமதிப்பற்ற பொருட்களை வைப்பது எகிப்தியர்களின் வழக்கம். எகிப்திய சாம்ராஜ்ஜியம் சற்று பலமி ழக்கும் காலங்களில் இந்தக் கொள்ளையர்களுக்கு ஏக குஷி வந்து விடும். அத்தனை கல்லறைக்குள்ளும் புகுந்து விளையாடி விடுவார்கள். உலகின் மிகப்பெரிய கிஸா பிரமிட்டை கட்டி, அதன் நடுவே நிம்மதியாக நிரந்தர நித்திரை கொண்ட கூஃபு மன்னரின் புதையல்களை கூட மொத்தமாக கூட்டி அள்ளிக் கொண்டு கொள்ளையர்கள் போய்விட, பிற்காலங்களில் அகழ் வாராய்ச்சியாளர்களுக்கு மன்னரின் வெறும் பிரேதப்பேழை மட்டும் தான் கிடைத்தது.

கொள்ளையர்களிடமிருந்து தப்புவதற்காக மலைகளைக் குடைந்து கல்லறைகள் கட்டப்பட்டு அதன் வாசல்கள் கவனமாக மறைக் கப்பட்டன. ஆயினும் கொள்ளையர்களின் கழுகுக்கண்களுக்கு எதுவும் தப்பவில்லை, டூடங் ஆமனின் கல்லறையைத் தவிர.

அகழ்வாராய்ச்சியாளர் கார்ட்டருக்கு, டூடங் ஆமனின் கல்ல றையை கண்டுபிடித்துவிட வேண்டுமென்று பெரும் ஆவல். அவ ருக்கு பண உதவி செய்தது கார்னவொன் பிரபு என்னும் இங்கி லாந்து தேசத்தவர். காலமும், பணமும் கரைந்து போய்க் கொண் டிருக்க, டூடங் ஆமன் மட்டும் மனசு வைப்பதாயில்லை. வெறுத் துப் போன கார்னவொன் பிரபு, கார்ட்டருக்கு கடைசி சந்தர்ப்பம் ஒன்று தர, அடுத்த மூன்றுநாட்களுக்குள் கல்லறை அகப்பட்டு உலகத்தை ஏகத்துக்கும் மலைக்க வைத்தது.

உள்ளே இருந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களில் ஏகப் பட்ட தங்க வேலைப்பாடுகள். டூடங் ஆமனின் முகக்கவசம் மட் டுமே இருபத்தைந்து இறாத்தல் தங்கத்தில் ஜொலித்தது. அற்புத மான கலைப்படைப்புகள், அம்புகள், ரதங்கள், தளபாடங்கள், மன்னன் அடுத்த பிறப்பில் அணிவதற்காக நிறைய ஆடைகள், உண்பதற்காய் உணவு வகைகள், கூடவே கொஞ்சம் வைன், சொர்க்கத்திற்கு போகும் வழி சொல்லும் புத்தகம், இன்னும் ஏகப் பட்ட இத்தியாதி வகைகள்.

உலகம் உண்மையில் மலைத்துத் தான் போனது. கல்லறையை கண்டுபிடித்த கார்ட்டர் ஒரு நாளிலேயே ஹீரோ லெவலுக்கு போய்விட்டார்.

டூடங் ஆமனின் மம்மி இப்போது அவனது ஒரிஜினல் கல்லறையி- லேயே கவனமாக வைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் தாராளமாக ஒரு விசிட் போய், மூவாயிரம் வருடங்களுக்கு முன்பு, கி.மு. 1323 இல் இறந்து போன அந்த மன்னனைப் பார்த்து ஒரு ஹலோ சொல்லி விட்டு வரலாம்.

கொசுறுச் செய்தி ஒன்றையும் இங்கே சொல்லியாக வேண்டும்.

மூவாயிரம் ஆண்டுகள் நிசப்த அமைதியில் ஆழ்ந்திருந்த டூடங் ஆமனின் கல்லறையை திறந்து ஐந்து மாதத்திலேயே, அந்த ஆராய்ச்சிக்கு நிதியுதவி அளித்த கார்னவொன் பிரபு திடீரென இறந்து போனார். அவர் இறந்த அதே நேரம், எகிப்திய தலைநக ரம் கெய்ரோவில் மின்சாரம் திடீரென தடைபட மொத்த நகரும் இருளில் ஆழ்ந்து போனது. இது மட்டுமில்லை, பிரபு இறந்து போய் சில மணி நேரத்தில் அவரது செல்ல நாயும் ஊளையிட்ட படியே செத்துப் போனது.

கல்லறையை தோண்டிய இன்னும் சில நபர்களும் அடுத்தடுத்து இறந்து போகவே, இது டூடங் ஆமனின் சாபம் தான் என பெரும் புரளி கிளம்பியது. சுவாரசியமான வாதப், பிரதிவாதங்கள் உல கெங்கும் நடந்தன. ஆனாலும் டூடங் ஆமனை முதன்முதலாக திறந்து பார்த்த கார்ட்டர் கம்மென்று பலவருடங்கள் வாழ்ந்து இயற்கையாக இறந்து போக, இந்தப் புரளிகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வந்தது.

டூடங் ஆமனுக்கு பிறந்த இரண்டு பெண்குழந்தைகளும் பிறக்கும் போதே இறந்திருந்தார்கள். மன்னனுக்கு பின் ஆள அடுத்த வாரிசு இல்லாதபடியால் ஆட்சி கைமாறி அங்குமிங்கும் அலைந் தது. ஐம்பது வருடங்களுக்குப் பின்னர், பெரும் ஆளுமை கொண்ட இரண்டாவது ராம்ஸிஸ் மன்னன் அரியணைக்கு வந் தான்.

இரண்டாவது ராம்ஸிஸ் மன்னனின் ஆட்சிக்காலத்தில் எகிப்து வீர நடை போட்டு, புகழின் உச்சிக்கு போனது. பெரும் போர்வீரனும், அதீத அரசியல் சாணக்கியம் கொண்டவனுமான ராம்ஸிஸ் மன் னன், அண்டை நாட்டு அரசனுடன் செய்து கொண்ட ஒரிஜினல் ஒப்பந்தம் ஒன்று, ‘கானாக்’ எனும் கோயில் வளாகத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இதுவே உலக சரித்திரத்தில் எழுத்து வடிவில் கிடைத்த முதல் அமைதி ஒப்பந்தம். இதன் நகல் ஒன்று இப் போதும் ஐ.நா சபையில் வைக்கப்பட்டிருக்கிறது.

ராம்ஸிஸ் மன்னனின் கதை பைபிளில்கூட சொல்லப்பட்டிருக்கிறது. செங்கடல் இரண்டாக பிரிந்து வழி விட, எகிப்தில் இருந்த யூத

அடிமைகளை மோசஸ் அழைத்துப் போன நிகழ்வு இவனது ஆட் சிக்காலத்தில் தான் நடந்தது என அதில் எழுதப்பட்டிருக்கிறது.

தனது நாட்டை பெரும் செழிப்பாக மாற்றிய ராம்ஸிஸ் மன்னன், அரண்மனையை மட்டும் அலங்கரிக்காமல் விட்டு வைப்பானா என்ன? எகிப்திய மன்னர்களிலேயே அதிக பெண்களை அந்தப் புரத்தில் வைத்திருந்தது ராம்ஸிஸ் தான். இதில் சகோதரிகளும், சொந்த மகள்களும் அடக்கம். இருநூறுக்கு மேற்பட்ட அழகிகளு டன் கும்மாளம் போட்ட மன்னருக்கு நூறுக்கும் அதிகமான குழந் தைகளும் உண்டு.

பிரமாண்டமான கோயில்களையும், தூபிகளையும், சிலைகளையும் கட்டுவதில் மன்னனுக்கு அலாதிப் பிரியம். மலை ஒன்றைக் குடைந்து, தனக்காகவும், மனைவிக்காகவும் அவன் கட்டிய அபு ஸிம்பெல் ஆலயத்தின் வாசலில் அறுபத்தாறு அடி உயரத்தில் மன்னனின் நாலு பெரும் சிலைகள் அமைக்கப்பட்டன. பிற்கா லத்தில் மொத்தக் கோயிலும் மண்ணுக்கடியில் போய் விட, கடந்த நூற்றாண்டில் அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உல கத்தை பிரமிக்க வைத்தார்கள்.

அறுபது வருடங்களுக்கு முன்பு, எகிப்திய அரசு அஸ்வான் அணைக்கட்டுத் திட்டத்தை தொடங்கிய போது அபு ஸிம்பெல் ஆலயம் மொத்தமாக அப்படியே நீருக்குள் மூழ்கிப் போய்விடும் ஆபத்து வந்தது. இந்த அற்புத வரலாற்றுச் சின்னத்தைக் காப் பாற்ற உலக நாடுகள் எகிப்தைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டன. எகிப்தோ கையை விரித்து விட, யுனெஸ்கோ நிறைய முயற்சி எடுத்து, பல நாடுகளின் உதவியுடன், அந்த பிரமாண்ட கற்கோ யிலை ஆயிரத்திற்கு மேற்பட்ட பகுதிகளாக வெட்டியெடுத்து, உயரமான ஓரிடத்தில் மீண்டும் பழைய மாதிரியே பொருத்தி முடித்தது. பிரமிட்டுகளை போலவே பிரபல்யம் கொண்ட இந்த ஆலயம் காலத்தைக் கடந்தும் இப்போதும் கம்பீரமாக காட்சிய ளிக்கிறது.

அறுபத்தாறு வருடங்கள் நீண்ட ஆட்சி செய்த இரண்டாவது ராம் ஸிஸ், கி.மு1213ல் இறந்த போது அவனுக்கு வயசு தொண் ணூற்று இரண்டு. நம்மூர் அரசியல்வாதிகள் போலவே, மன்னன் அடம்பிடித்தபடி ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருக்க, அவனது முதல் பன்னிரண்டு மகன்களும், அடுத்த ஆட்சிக்காக 'ஆ'வென்று வாய்பார்த்திருந்து, மன்னனுக்கு முதலே பரலோகம் போய்ச் சேர்ந்தது பெரும் பரிதாபம்.

எகிப்திய வரலாற்றின் இணையற்ற மன்னர்களில் ஒருவனான இரண்டாம் ராம்ஸிஸ் மன்னன் மம்மி வடிவில் இப்போதும் கெய்ரோ அருங்காட்சியகத்தில் காட்சியளிக்கிறான்.

இரண்டாவது ராம்ஸிஸின் இறப்புக்குப் பின்னால் எகிப்திய சாம் ராஜ்ஜியம் விரைவாகவே தன் வீழ்ச்சியை நோக்கி நடைபோட்டது. அடுத்த நூற்றைம்பது ஆண்டுகளில் எகிப்து தன் பொலிவை இழந்து சாதாரண தேசமாக போய் விட்டது.

எகிப்தியர்கள் ஏகப்பட்ட சரித்திரத்தை எழுதி விட்டுப் போயிருந் தாலும், பிற்காலத்தில் அவர்களது எழுத்துமுறை வழக்கொழிந்து போனதால், அவற்றை வாசிப்பது சரித்திரவியலாளர்களுக்கு சாத் தியமில்லாமல் போய்விட்டது. பெரும் வரலாற்றுப் பொக்கிசத்தை கண்முன்னே வைத்துக் கொண்டு, அதன் கருத்தறிய முடியாமல் கைபிசைந்து கொண்டிருந்த ஆய்வாளர்களுக்கு பெரும் அதிஸ் டம் வந்தது, நெப்போலியனின் வடிவில்.

1798ம் ஆண்டில் நெப்போலியன் எகிப்து மீது படையெடுத்தான். எகிப்தை வெற்றி கொண்ட பின்னர், மைசூர் அரசன் திப்பு சுல் தானுடன் இணைந்து இந்தியாவில் இருந்து பிரிட்டிஷாரை விரட்டி யடிப்பதும் நெப்போலியனின் திட்டமாக இருந்தது. எகிப்தில் பிரெஞ்சுப்படை போரிடும் போது ரொசேட்டா என்னுமிடத்தில் ஒரு கல்லை தற்செயலாக கண்டுபிடித்தார்கள். வரலாற்றில் 'ரொசேட்டா கல்' என பெரும் புகழ் பெற்ற அந்தக் கல்லில், அழிந்து போன பழைய கால எகிப்திய எழுத்துக்களும், அதன் கிரேக்க மொழிபெயர்ப்பும் பொறிக்கப்பட்டிருந்தன. பிறகென்ன, கிரேக்க மொழியை வைத்துக் கொண்டு அத்தனை எகிப்திய எழுத்துக்களையும் ஆய்வாளர்கள் விளங்கிக் கொள்ள, சகல



எகிப்திய சரித்திரங்களும் நமக்கு கிடைத்தன.

எகிப்திய சாம்ராஜ்ஜியம் சரிந்து விழ, இன்னொரு பேரரசு விதை கொண்டது. சரித்திரம் மறக்கவே முடியாத மகாவீரர்களில் ஒருவ-னான சைரஸ் மன்னனின் வாள்வீச்சில் பெரும் பாரசீக சாம்ராஜ்ஜி யம் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியது.



nimal.nagaraj@thaiveedu.com

# நீங்கள் ஒரு பிறைவேட் மோட்கேஜ் கொடுப்பவரா?

# உங்கள் முதலீட்டை மீள பெற சிக்கலாக உள்ளதா?

அப்படியானால் இப்படிப்பட்ட சில சிக்கல்களை எதிர்கொள்கிறீர்களா?

அடமானம் எடுத்தவர்கள் மாதாந்த கட்டுப்பணம் செலுத்த தவறுதல்.

மற்றைய மோட்கேஜ்களுக்கு ஒழுங்காக பணம் செலுத்த தவறுதல்.

வீட்டுக் காப்புறுதி கட்டணம் ஒழுங்காக செலுத்த தவறுதல்.

கொண்டோ காசு, புறப்பட்டி ரக்ஸ் செலுத்த தவறுதல்.

வேறு மோட்கேஜ் கொடுத்தவர்கள் பவர் ஒப் சேல் நோட்டீஸ் அனுப்பி இருப்பது.

அடமானம் பெற்றவர்கள் மீளத்தர முடியாமல் மறுக்கும் நிலைமை.

## வருமுன் காப்பதே சிறந்தது



COURT FILE NO.:

ONTARIO
SUPERIOR COURT OF JUSTICE

BETWEEN:

[redacted] Plaintiff

- AND -

[redacted] Defendant

STATEMENT OF CLAIM (MORTGAGE ACTION - FORECLOSURE)

TO THE DEFENDANTS

A LEGAL PROCEEDING HAS BEEN COMMENCED AGAINST YOU by the Plaintiff. The claim made against you is set out in the following pages.

IF YOU WISH TO DEFEND THIS PROCEEDING, you or an Ontario lawyer acting for you must prepare a statement of defence in Form 18A prescribed by the Rules of Civil Procedure, serve it on the Plaintiff's lawyer or, where the Plaintiff does not have a lawyer, serve it on the Plaintiff, and file it, with proof of service in this court office, WITHIN TWENTY (20) DAYS after this Statement of Claim is served on you, if you are served in Ontario.

SPECIMEN

NOTICE OF SALE UNDER CHARGE

TO: THE PARTIES SHOWN ON SCHEDULE "A" ATTACHED HERETO

TAKE NOTICE that default has been made respecting payments and other covenants under a certain charge of land made between [redacted] as chargor and [redacted] as chargee, on the security of:

[redacted], METROPOLITAN TORONTO CONDOMINIUM [redacted] AS DESCRIBED IN SCHEDULE "A" OF DECLARATION
SCARBOROUGH, CITY OF TORONTO

PIN [redacted]

Municipally known as: [redacted], Toronto, Ontario

and registered in the Land Registry Office for the Land Titles Division of Toronto on the 20th day of December, 2017 as Instrument No. [redacted] (the "Charge").

AND [redacted] hereby gives you notice that the amounts now due on the Charge for principal, interest and costs, are as follows:

| | |
|---|---|
| Principal Balance | $70,000.00 |
| Interest to October 22, 2019 | $6,928.00 |
| Pre-Payment Interest Penalty | $2,598.00 |
| NSF Fee | $1,200.00 |
| Administration Fee | $1,500.00 |
| Statement Preparation | $475.00 |
| Legal Fees and Disbursements | $2,500.00 |
| TOTAL | $85,201.00 |

SPECIMEN

AND UNLESS the said sums are paid on or before June 20, 2019, the undersigned shall sell the property covered by the said Charge under the provisions contained in it.

THIS NOTICE is given to you as you appear to have an interest in the charged property and may be entitled to redeem the same.

DATED at Toronto, Ontario on May 14, 2019.

[redacted]
By its solicitors

[redacted]
Barrister & Solicitor

[redacted]

## தயா PK கந்தையா BAS, LLB (Hons)

வழக்கறிஞர்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

## 416-333-1001

(மெசேஜ்சிலை விடுங்கோ, கட்டாயம் திரும்பி உங்களுக்கு போன் அடிப்பேன்)

# KANDIAH LAW

PROFESSIONAL CORPORATION

T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002

Credit Recovery - Mortgage Enforcement - Real Estate Law - Family Law

Legal Advise - Legal Research - Legal Analysis - Legal Referrals - Document Review - Document Drafting



Thaya PK Kandiah BAS, LLB (Hons)
Barrister, Solicitor & Notary Public


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT
Member of Million Dollar Round Table
Life100
INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
La Capitale
iA Financial Group
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Call Me First and Say "YES"
to Get Your Dream Home at a
Dream Rate!
For all your Mortgage needs
Peter Sober
Dir: 416-275-3571
Your Smile Is My Best Return!
TD


ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
647-290-3416
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajan BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP
www.pyramidgroup.com

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
Download Free MyLIFEPLAN App
App Store
Google Play

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
Homelife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8
*Independently owned and Operated

GAJAN MAHAKANAPATHY
416.999.2777
RE/MAX COMMUNITY
Realtorgajan.com
905.239.9223 info@realtorgajan.com

Sri Vallipuranathar
CSC Credit Solution Centre
Tel: 416.439.0224
Cell: 416.450.5011

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave. Suite 210,Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
INFORCE LIFE Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6
WWW.YASMILES.CA

RE/MAX NORTH REALTY
077 566 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 330 7007